[illegible]

[illegible]

[illegible]

DIGITIZED

DIGITIZED

DIGITIZED

Qb
N12
119990

981/1-193

HUVAL HAWTHEE

# கிறிஸ்துமத தீபிகை.

இது

மஹமூதுபந்தர் பறங்கிப்பேட்டை

மகா-ா-ா-ஸ்ரீ

முஹம்மது மகுதூம்

கவுசுமிய்யாசாஹிபு

அவர்கள் குமாரர்

காதிரசஹுமரைக்காயர்

அவர்களால்

எழுதப்பெற்று

சென்னை:

கலாரத்நாகரம் என்னும்

அச்சேந்திரசாலையிற்

பதிப்பிக்கலாயிற்று.

ஹிஜிரி-1330. ஈசவீ-1912.

பரிதாபி

முதல்பதிப்பு காப்பி-1000.

Copyright Registered.

[விலை ரூ 1—4—0. வி. பி. அணா—4.]

323

230

# "சிறப்புப்பாயிரம்."

இஃது

இந்நூலாசிரியரின் குமாரராகிய

கா. சுல்தான் அப்துல்காதிர் மரைக்காயரவர்களா

லியற்றப்பெற்றது.

## நேரிசையாசிரியப்பா.

தேனமிழ்பொழில்பலஸ் தீனெனவுயரிய
பான்மதிமுகத்தினள் வான்படுகார்முகில்
தருங்கவினிலவிய கருங்கடற்குழலினள்
பைத்துல்முகத்திசு பைத்துல்ஹறமெனு
மஹத்துவம்படைத்து வகுக்கரும்விழியினள்
திகழ்மஸிடோனியா புகழ்திமஸ்கெனுநவ
மொளிரியகுழையினள் துளிரியவலீவ
மலையெனச்சிறந்த விலைதருமூக்கினள்
நான்மறைபழுத்தகு தேன்படுமெதினா
வென்னவுலகுயரிய பனுவலின்வாயினள்
இறையின்மகிமை நிறைஹிருதாய
சீறவெனுமிரு காணுர்முலையினள்
செம்மையங்கடலைவிம்மியவல்குலள்
மணியுமிழ்கடற்றுயில் இணையறவணிந்தவள்
வளமென்றோங்கிய வளமெலாமலிந்தவள்
இத்தகைசெறிந்த நற்றகையினளே.

Q6 N12
119790

OFFICE OF THE ... MADRAS

அல்ஹம்து லில்லாஹி வஹுதஹு

# முகவுரை.

நாம்வாழ்கின்ற இருபத்துநாலாயிரத்து எண்ணூற்
றறுபதிற்றொன்பது மயில்சுற்றளவும் ஏழாயிரத்துத் தொ
ளாயிரத்துப்பதினாறு மயில்குறுக்களவும்வாய்ந்த இப்பெரிய
பூவுலகத்தினும் பன்னிரண்டரை லக்கந்தரம் பெரிதாகிய
சூரியனை இவ்வுலகத்தினின்று ஒன்பதுகோடியே ஐம்பது
லக்கமயிலுக்குப்புறம்பே அல்லது நான்காவது வானமண்ட
லத்திலே நிறீஇயதேயுமன்றிப் பலநூற்றுக்கணக்கான பெரி
யசிறிய கிரகங்களை யொன்றையொன்று சருவாதும் நிலைவு
றாதும் இடம்பெயர்ந்து அந்தரத்திலே இளைப்பாறுதலின்
றிச் சுற்றிவருமாறு தனது ஆணையின் வரம்பியற்றி மேலும்
பலவானங்களையும் ஆங்காங்கு மத்தகைய பல சூரியாதி
களையும் அமைத்து அவைகளும் அங்ஙனமே அணுத்து
ணையும் விகாரமின்றிச்செவ்வே நடந்துபடுமாறு அமைத்து
அவ்வரம்பின்றியகன்ற கோளங்க ளத்தனையும் அணுவே
யெனும்படியாக விரித்துயர்த்திய (எண்சாண் அளவினரா
கிய நம்மனோரின் அந்தரக்கிரணங்களி னொன்றாகிய) மனங்
களிலே நிரம்பிவிளங்குதற்கு "இஸ்லாம் என்னு மார்க்கமே
யன்றி வேறில்லை" என்றோதிய சுலோகங்களையும் பிறவெல்
லாமும் உடைய அரும்பெரும் வேதத்தை நபிகள்பிரான்
முகம்மது சல்லல்லாஹு அலைகிவஸல்லம் ஆண்டவரவர்
கள் மூலமாய் நம்மனோர்க்கு உரியதாக்கிய அல்லா ஜல்ல.

ஷான ஹ‍ஸவத ஆலாவே புகழனைத்திற்கு முரியவனென்று
அவ்வொருவனையே புகழுகின்றேம். *

---

* பலாசுபாக்களின் சாத்திரமுறைமையின்வாருக ஏறக்குறைய
இருபத்துநாலாயிரத்து எண்ணூற்றறுபதிற்றென்பதுமயில் சுற்றளவு
ள்ள இப்பெரிய பூவுலகத்திலும் அநேகலக்கந்தரம் பெரிதாயும் அநேக
கோடி மயில்தலையாயுமுள்ள சூரியன் பிரகாசிக்கின்ற மண்டலத்
திலே அதாவது நான்காவது வானத்திலே இப்பூலோக அளவிற்கு
ஏறக்குறைய பெரிதும் சிறிதுமான பல்லாயிரக்கிரகங்கள் ஒன்றுக்
கொன்று அநந்தகோடி மயில்களிடையிட்டு சுற்றிக்கொண்டிருக்கின்
றன வென்றால் அந்த நான்காம்வானத்தின் எல்லை விசாலத்தைத்
இத்தகையதென்று அகத்தின்கண்ணே நிறீஇ, பின்னர் நமது பார்
வைக்குப்புலப்படுகிற ஒவ்வொரு பெரியசிறிய நக்ஷத்திரங்களும்
சூரியன்களாய் அவ்வொவ்வொரு சூரியற்குமுரிய மண்டலங்களிலும்
அநேகாயிரங்களான கிரகங்கள் ஒன்றுக்கொன்று பல்லாயிரக்கோடி
மயில்களிடையிட்டு நிற்பச்சுற்றித் திரிகின்றன வென்று சில வான
சாஸ்திரிகள் நிதானிக்கு மாறுவைத்துக்கொண்டு நோக்குவேமாயின்
வானமண்டலத்தின் எல்லைக்கோர் அளவில்லை என்பது பரிஷ்காரப்
படுமன்றே? ஆகவே, அப்பெரியவானமண்டலங்களின் மேலருக்
கும், தனது உட்புறத்தினருக்கும் எண்ணிறந்த கோடிமயில்
களிடையாக அவ்வானமண்டலங்களைச்சூழ்ந்து சுற்றிவ்ராநிற்கும்
"குருசி" என்கிற மண்டலத்தின் பருமனையென்னென்று நிதா
னிப்பேம்.

இம்மட்டாக மாத்திரமா? இதோ! இப்பெரியகுருசி என்ற
சிருட்டிப்பொருளின் மேலருக்கும் தனது உட்புறத்தருக்கும்,
இடையே வரம்பின்றிய கோடிகணக்கான மயில்தூரம் இடைநிற்ப
அநேககோடி அளவைப்பிரமாண கனதியும், ஒன்றுக் கொன்று
கணக்கற்றகோடிமயில் அளவைப்பிரமாண இடைவெளியுமான பல
பருதாக்கள் இடைகிடந்து மறைத்துநிற்ப அகன்று பிரகாசிக்கின்ற
"அர்ஷு" என்ற ஒப்பற்ற சிருட்டிப்பொருளின் அளவைப்பிரமா
ணத்துக்கு எல்லைகாண்பேமா? அத்தகைய அறுஷுக்கு மேலருகின்
மேலாகவே "அறுவாஹ" என்ற சிருட்டிப்பொருள்களின் பதவி
களிருக்கின்றன வென்பாருமுளர். அங்ஙனமாயின் அம்மேல்பாகத்
தின் அளவையின்பருமனது நிலைமைக்கு எல்லையுளதோ? வென்று
விடுவாம் - நேயன்மீர்! ஊன்றிநோக்குவோருளரேல் அல்லாஜல்ல



இன்னும் ஒரு இர்வையின் காலத்தினேர் அற்ப
பாகத்திலே, தமது வீட்டினின்று புறப்பட்டு இப்பூலோக
முதல் மற்றுமுள்ள அளப்பரிய எல்லா சராசரங்களையும்
ஒருங்கேசூழ்ந்து தனது அசைவினாலே காலங்களைப் பிற
ப்பிக்கின்ற மேற்கூறிய மேன்மைபொருந்திய "அறுஷு"

---

ஷானஹுவத ஆலாவினது சிருட்டியின் தன்மையைக்கண்டு அதி
ஜயிக்காமலிருக்க மாட்டாரென்று நம்பமாட்டுவேம். ஆகலின்,
எண்சாண் உடம்பினராகிய நம்மனோரின் புறக்கருவிகளிலொன்
றாகிய பார்வையினாலே ஏறக்குறைய 882,000 மயில் குறுக்களவும்,
27, 72, 000 மயில் சுற்றளவுமுள்ள அந்தச் சூரியனை
எல்லையற்ற ஒரு வஸ்துவாக புலப்படுகின்ற ஆகாசத்திலே ஒரு
சிறிய அதாவது ஒருசாண் பருமனுள்ள பொருளாகவன்றோ காண்
கின்றோம்! இதனால் நேயன்மீர்! நமதுபார்வைக்கு அகன்று
தோற்றுகிற இந்த ஆகாயத்தில் மேல்கூறிய, சூரியனைப்போல் எத்
தனைக்கோடி சூரியர்களை அமைத்து நோக்கலாமென்பதையும் அங்
ஙனம் அமைத்துநோக்குதற்கு அகன்ற இடம்பெறும் இப்பெரிய
ஆகாயமானது நமது சிறியகண்ணினகத்தே அமைந்து ஒருகிரண
மாகத் தோன்றுதலினாலே இக்கண்ணின் விசாலத்தை வரம்புபடுத்
தற்கு பாஷையில்லை என்பதையும் எமது நேயர்கள் கண்கூடாய
நோக்கியபின்னர் நமது எண்சாண்உடம்பி னிடத்துள்ள, எத்த
னையோகருவிகளில் ஒருபுறக்கருவியாகிய கண்ணின் விசாலத்திற்கு
இவ்வானமண்டலம் ஒருசிறிதும் நிகராதென்பது வெள்ளிதிற்கூறு
வார்களன்றே? இங்ஙனமாக நமது புறக்கருவியாகிய பார்வையின்
தன்மை யிருக்க நமது அகக்கருவிகளிலொன்றாகிய மனக்கருவியி
னிடத்திலே மேல்கூறப்பட்டுள்ள எல்லாவகை சிருட்டிப்பொருள்
களும் அமைந்து அம்மனத்தின் அகன்றவெளியினோர் கோணத்
திலே, ஒரு அணுகிடந்தாலன்ன கிடந்துபடுதலினாலே அம்மனத்தின்
விசாலத்தை என்னென்று சொல்வேம்! எனவே எண்சாணினரா
கிய நம்பாலாரிடத்திலே, அவ்வகன்ற மனத்தினையமைத்த நமது
அகம்புறமாகிய கருவிகளிலும் அடங்காது புறம்பாய் விளங்குதலி
னாலே, அந்த ஒப்பற்ற ஜல்லஷானஹுவத ஆலாவே பெரியவன்.
ஆகலின், அத்தகையானை வணங்குமிடத்து முதலில் அவனே பெரிய
வன் என்றுகூறுதலை நம்மனோர்மீது இன்றியமையாத கட்மையாக்கி
யுள்ளமார்க்கத்தை நம்மனோர்க்கு மார்க்கமாக்கிக் கொடுத்தானெ
ன்று அவனைப்புகழ்ந்தா மென்றுணர்க.

ஈருகமாத்திரமன்று காலங்களும் தலங்களுமின்றிச் (சரா
சரங்களெனப்பட்டாத) சொல்லற்கரிய அந்தரபாகத்திலும்
சென்று வேறுசிருட்டிகளி லெவற்றாலுங் காணற்கியலாத
(ஆங்காங்குள்ள) ஆச்சரிய காட்சிகளேயுமன்றி அவைகளேச்
சிருட்டித்த ஒப்பற்ற ஜல்லஷானஹுவத ஆலாவையும்
தெரிசித்துத் தமக்குவேண்டிய எல்லா சுதந்திரங்களேயும்
ஒருங்கே பெற்றுக்கொண்டு தமது வீட்டிற்குத் தமது படுக்
கையின்மீதுற்ற தமது திரேகச்சூடு ஆறுதற்கு முன்னே
வந்துற்ற வல்லாராகிய சொல்லற்கரிய புகழின் நபிகள்
பிரான் முகம்மது ஸல்லல்லாஹு அலேகிவ ஸல்லம் ஆண்
டவ ரவர்கள்மீதும் அவர்களின் * சஹாபாக்கள், ஆண்
மக்கள், பெண்மக்கள், கோத்திரத்தாராகியோர்கள்மீதும்
சலவாத்தும் சலாமும் சொல்லியபின்னர் :—

கல்விகேள்வியில் நிரம்பியபாண்டித்தியந் பயின்றே
மல்லே மாயினும் பெரிதும் இரக்கமுள்ள சர்வதயாபரக்
† கருத்தாவே! தனது சிருட்டிகளில் ஆச்சரியப்படத்தக்க
தாஉம், மேன்மையுடையதாஉம், ஒப்பற்றதாஉமாக, தனது
சேனேயெனும்படி மனுஷராகிய நம்பாலாரைச்சிருட்டித்து
நமதுகியாபகத்திற்கு வாராத மிதமிஞ்சிய சங்கரியங்களே

* சஹாபாக்களோவெனின் :— நபிகள்பிரான் அவர்களோடு
மனத்தாலும் சடத்தாலும் சம்பந்தராயிருந்தாரேயுமன்றி நபிகள்
பிரான் அவர்களாலே மாத்திரம் உவக்கப்பட்டுச் சரீரசம்பந்தராய்,
தீனை உவக்கும் நிரமற்றிருந்த சிறுவர்களும் சஹாபாக்க ளெனப்படு
வார்கள் என நம் வேதவித்துவான்கள் இருமனப்பட்டாரா யிருத்த
லினாலே ; பொதுவகையானே சஹாபாக்கள் என்னும்.

† கருத்தாவென்பது ஜல்லாஷானஹுவத ஆலாவுக்கு பொரு
ந்தாபெயர் என்பதாஉம் "ஹிந்துமததீபிகை" யில் விவஹாரக்கிரம
மாய்க்கூறியிருக்கின்றேம். ஆயினும் இத்தேசவழக்கப்படி அவ்வொரு
முதலேக் கருத்தா அல்லது கடவுளென்று யாமும் கூறினே மது
பற்றி எம்மை இகழற்க.



யும், சாதகங்களேயும், தனது அன்பினாலே நமக்குக்கொ
டுத்திருப்பதேயுமன்றி, நம்பாலார் சீர்படுவான் வேண்டிக்
காலம் தேசமாதியவைகளின் இயற்கை சம்பவத்தினாலே
பேதப்பட்டுள்ள நம்மவர்க்குத் தக்கவாறுள்ள ஆக்கினேக
ளேத்தனது தீர்க்கதரிசிகள் மூலமாய்க்கற்பித்துக் கடைசி
யாய்த் தனதுசேனேகளாகிய நம்மவர் எல்லாரும் ஒரேகற்
பனேயைக் கைக்கொண்டொழுகும் வல்லாராயினுரெனக்
கண்டு உலக எல்லேப்பரியந்தம் ஒரேகற்பனேயை நிறீஇ
அன்புகாட்டினமையினுனே, அத்தகைய பூரண இரக்க
முள்ள கருத்தாவுக்குச் செலுத்தவேண்டிய வந்தனேபசார
மத்தனேயுமன்று ; ஒருசிறிதும் செலுத்தினேமல்லேமே,
அந்தோ! ஆத்தகைய வந்தனேபசாரம் செலுத்துங்கட
மையினரென்று நினேத்தேமல்லேமே எனத்திகைத்தே
ங்கி வாணுளே வீணுளாகச் செலவுசெய்தேமே கொடியபாப
மூட்டைகளேத் தலேமீதுசுமந்தேமே அதனேத் தலேயினி
ன்று இறக்குந்திரம் எங்ஙனம் படைப்பேமோவென்று திகி
லடைந்திருக்குங் காலத்திலே, எமது கிறிஸ்துவநேயர்க
ளில் அறிவென்பதையே இழவுண்ட சிலபேதையர் "நாமும்
ஒரு நூலெழுதினேமென்றபெயர் ஒன்றேயிருந்தால்போதும்"
என்ற மனத்தினரொப்ப முன்பின்னேக்காது உண்மைக்
கு முற்றுமுரணுகவும் ஆபாசகுதர்க்க ஹேதுவானவுமான
அநாதார விபரீதப்பதர்வாக்கியங்களே யெமது மெய்ம்மார்
க்கத்தின்மீது வீணேசுமத்தி எம்மனேர் இரத்தங்கொதிக்
குமாறு மதக்கண்டனஞ்செய்து வயிறுவளர்ப்பதே தமக்
குத் தொழிலாய்க்கொண்டு நிற்பதாயுள்ள சில பலபோலி
கிரந்தங்கள் எம்பார்வைக்குவந்தன. அவைகளே நோக்கும்
பொழுது எமதுகிறிஸ்துவநேயர்கள் மதவிஷயத்தில் பெரி
தும் வழுக்குண்டிருப்பதைச் சற்றுநோக்காது பிறர்மதக்
கண்டனஞ் செய்யப்புகுவது பழிப்பாகுமேயென்று அவர்
களேநோக்கிப் பரிதாபநோவே ; இதோ! தன்னேக்கொண்
டேயன்றிப் பிறவற்றைக்கொண்டு ஒரு அணுத்துணேயும்

தேவையற்ற எல்லாம்வல்ல ஒருதானுன் கருத்தாவோ
தனது சேனைகளுக்குக் கொடுத்துள்ள சர்வபாக்கியங்களி
லும் நித்தியஜீவபரலோக இராச்சிய வாழ்க்கையே மீப்
பேரயத்தாகலின் அதற்குவேண்டிய வொழுக்க முறைமை
களை அவர்களுக்குத் தனது பரிசுத்ததீர்க்கதரிசிகள் மூல
மாய் விஷூறித்துக்காண்பிக்க இரக்கமுடையோனு யிரு
ந்தமையினுலே, மனிதன் செய்யத்தக்கவைகளில் அத்த
கைய மார்க்கமுறைமைகளை யெடுத்துக்காண்பித்து "மறப்
பெனும் பகைவன் வீரிக்கொண்டனன்" என்றற் கிலக்
காய் மறந்துபட்டுள்ள நேயர்களை நியாபகப்படுத்துவான்
வேண்டி நேயர்களின் சித்தங்களுக்கு நன்குபுலப்படுமாறு
அவர்களது வேதகுலோக மேற்கோள்காட்டித் தர்க்கசாத்
திர முறைவழாது ஒருமெய்நூலெழுதிக் கொடுப்பேமா
யின் அதனை நடுநிலைமையினுலே நோக்கும் ஒருபாக்கிய
வானுளனேல் எல்லைகடந்த பெரும்பேற்றிற்கும் சுமக்க
லாற்ருது யாம்சுமந்துள்ள பாபமூட்டைகளத்தனையும் எம்
தலையினின்றிறங்கி விடுதற்கும் ஹேதுவாய்ச் சிறக்குமெ
ன்று எம்முழுஹிருதயத்தினுலே நம்பி நம்பலார் ஒழுகு
வன ஒழுகற்கு ஆகாரமாய்க் கொள்ளப்படவேண்டு நூல்
வேதமேயாகலின், அது இத்தன்மையினதா யிருத்தல்வே
ண்டுமென்று அதனிலக்கணங்கோட லின்றியமையாமை
பற்றி, அதனைக்கூறும் படலத்திற்கு "வேதம்" என்றும்
வேதங்கொண்டு வருவார் சிறந்தகோத்திரத்தினராயிருத்
தல் வேதவுடன் பாடுபற்றி வேதத்திலே இயேசுநாதர்வர்க
ளின் வம்சம் கூறுகின்ருர். அதனைவிரித்தல் அவசியமே
யாதலின் அதனைக்கூறும்படலத்திற்கு "வம்சம்" என்றும்
இயேசுநாத ரவர்களின் தோன்றுகைக்கு ஒரு பிரதான
ஹேது வேதங்கூறுதலினுலே அதனை யெடுத்துக் காட்டல்
வேண்டப்படுவதே; அதுபற்றி அதனைக்கூறும் படலத்
திற்குக் "காரணம்" என்றும், இயேசுநாதரின் அவதாரம்
இனைத்து வகையாய் நிகழ்ந்ததென்பதூஉம், வேதம்; அது



பற்றி அதனைக்கூறுதல் முக்கியமே யாதலின் அதனைக்
கூறும் படலத்திற்கு "அவதாரம்" என்றும், இயேசுநாத
ரவர்கள் இளமைப்பருவத்தில் இத்தகையினரா யிருந்தா
ரென்றுணர்த்தல் விரும்பற்பாலதே யதுபற்றி அதனைக்
கூறும் படலத்திற்கு "இளமை" என்றும், இயேசுநாத
ரவர்களின் ஞானஸ்நானம் உணரற்பாலதாகலின் அதனைக்
கூறும் படலத்திற்கு "ஞானஸ்நானம்" என்றும், இயே
சுவைக்குறித்து யோவான் ஸ்நானன்செய்த பிரசங்கம்கேட்
கற்பாலதாகலின், அதனைக்கூறும் படலத்திற்கு "யோவா
ன்பிரசங்கம்" என்றும், யோவான்ஸ்நானன் எப்படி
பட்டவர்? என அவர் அறியப்படற்பாலரே யாகலின்,
அதனைக்கூறும் படலத்திற்கு "யோவான் தீர்க்கதரிசனம்"
என்றும், இயேசுநாதரவர்களின் தகுதி இம்மட்டதென்
பது நோக்கற்பாலதே யாதலின் அதனைக்கூறும் படலத்
திற்கு "இயேசு" என்றும், அவர்களின் அதிகாரவரம்பு
எம்மட்டதென்பது அறியவேண்டாதமையாதாகலின் அத
னைக்கூறும் படலத்திற்கு, "தத்துவம்" என்றும், இஸ்ர
வேலர் மோசேயின் பிரமாணங்களை வழுவினுரதுபற்றி
அன்னுர்க்கு அக்கட்டளைகளையே கட்டளைக ளாக்கும்படி
இயேசுநாதர் அனுப்பப்பட்டார்களென்பது வேதமாதலின்
அதனைக்கூறும் படலத்திற்கு "வேதப்பிரமாணம்" என்
றும், சுன்னத்துச்செய்தல் மனுஜாதியை விட்டகலாதமு
றையென்பது வேதமாகலின், அதனைக்கூறும் படலத்திற்
குச் "சுன்னத்து" என்றும், படலமுறைகளில் அமையாது
நின்று படும் முக்கியவைகளை யொருங்கேதிரட்டி வரை
பட நிறாஉவல் யுக்திமுறையாதலின் அதனைக்கூறும்பட
லத்திற்கு "விகற்பம்" என்றும், உலக இரட்சகராயிருப்
பவர்யாவர்? என்றுணர லின்றியமையாதாகலின் அதனைக்
கூறும் படலத்திற்கு "உலக இரட்சகர்" என்றும், வேத
த்திலே பிரபலம்படைத்த ஆப்ரஹாம் சந்ததியாரின் வர
லாற்று முறைமையறியவேண்டுவதத்தி யாவசியமாகலின்

அதனைக் கூறும் படலத்திற்கு "வித்து" என்றும், ஒதப்படும் பதினைந்து அவயவங்களினாலே, உருப்படுத்தி யெல்லாம்வல்ல ஒப்பற்ற ஜல்லஷானஹூவத ஆலாவினது ஒப்பறுந்தன்மையை யுணருந்தகைமையினாலே மனிதனென்று சிறப்புயர்ந்த சிருட்டியானேம். அதுபற்றி அவ்வொப்பறுந் தலைமைப்பொருளை யுணர்த்துதலே அவ்வுருவத்திற்கு ஒருயிராய்ச் சிறக்குமென்பது எதிர்வாத மற்ற உண்மையேயா மாதலின், அதனையுணர்த்தும் படலத்திற்கு "முதற்பொருள்" என்றுகூறிக் கடைக்கண்ணேநிறீஇ, சமைந்துள்ள பிண்டத்திற்கு * "கிறிஸ்துமததீபிகை" என்று பெயர்க்கொடுத்து முடித்தேம்.

ஆகவே, எமதுநேயன்மீர்! இக்கிரந்தமோ, கிறிஸ்து வேதபுத்தகமாகிய "பைபிலை"க் கசடற மனனஞ்செய்தபின்னர் மாத்திரமா? அந்தவேத சுலோகங்கள் தனிமையிற்கொடுக்கும் பொருட்கோளினாலும், அப்பொருளுக்காதாரத்தினாலே பயவும் பொருட்கோளினாலும் குறிப்பினாலே பயக்கும் பொருட்கோளினாலும் வேதசுலோகங்கள் ஒன்றோடொன்று தழீஇநிற்கு முறைமையினாலே பயக்கும் பொருட்கோளினாலும், விவஹாரநோக்கி † மனத்தினாலும் மூளையினாலுமேயன்றி வேறு ஆதாரம் வேண்டாது, பெரும் பிரயாசையினாலே பயந்துள்ள நூலிதுவெனக் கொள்ளற்பாலதே; ஆதலின் இக்கிரந்தத்தை, கேவலம் ஒரு சரிதையை நோக்கிச் செய்துள்ள புராணமென்றாவது, ஒரு புராணத்தை நோக்கிச் செய்துள்ள வசனகாவியமென்றாவது, ஒரு பாஷையினின்று மற்றொரு பாஷையில்

* கிறிஸ்துமார்க்கத்தை விளக்கும் தீபம் என்றுவிரிக்க.

† இவ்விவஹாரத்திற்கு வேதபாடையார் "இபாறதுன்னஸ்," "தலாலதுன்னஸ்," "இஷாரதுன்னஸ்," "இ உதிதாவுன்னஸ்" என்பர். இவற்றின்விரி சிறப்பிற்றீர்ந்த வேதாந்திகளின் கிரந்தங்களில் பரந்துள்ள தாண்டுக்காண்க.



மொழி பெயர்த்ததென்றாவது கொள்ளற்க. அந்தோ! அங்ஙனம் நூல்செய்யும் ஆசிரியர்களுமோ, அதனைச் செய்து முடித்தற்கு எவ்வளவோ பிரயாசைப் படுகிறார்களென்றால் இக்கிரந்தம் எழுதிமுடித்து அச்சிடுவதற்காக எவ்வளவுகாலமும், எவ்வளவு பிரயாசையும், எவ்வளவு கவலையும், எவ்வளவு பணச்செலவும் எமது தலைமீது சுமத்தப் பட்டிருந்தனவோ அவ்வளவாக வல்லவே, மிகவும் சொற்ப நேரமும் அற்பகவலையும் புத்தகக் கிரயமுமேயன்றி, வேறு அதிகம் நீவிர் தலைமீது எடுத்துக் கொள்ள வேண்டுவதில்லை. அங்ஙனம் சொற்ப பிரயாசை எடுத்துக் கொள்ள பட்சமாயிருந்தால் உலகத்திலேயுள்ள சேனைகளில் ஏறக்குறைய அரைபாகத்திற்கு சமமாயிருக்கிற ஐம்பதுகோடி முஸ்லீம்களைச் சகோதரராகக் கொள்வதேயுமன்றி நித்திய பரலோக வாழ்க்கையைச் சுதந்திரங்கொண்டு நீடூழி வாழ்வீர்களென்பது எதிர்வாதமில்லாத உண்மையேயாகும். அதனாலேயாமும் உய்வேமென்று நம்புகிறேம்.

நேயர்காள்! எதிரிக்குச் சகுனத்தடை படுத்துமாறு தமதுமூக்கை அறிந்து கொண்டானொப்ப, பகைத்தெழுந்த அரசர்களாகிய மதங்கொண்டயானைக் கூட்டங்களுக்கு அடலேறுகளையொத்த பூர்வ முகம்மதிய சக்கரவர்த்திகளை மாத்திரமா? * தீர்க்கதரிசிகளையும் சற்றும் கைகூசாது மரியாதை ஹீனமாய் எழுதியும், மற்றைய

* தீர்க்கதரிசி என்பது சந்தேகமற்ற பார்வையையுடையார் என்பது. அதுஜல்லஷானஹூவத ஆலாவினாலே அறிவிக்கப்பட்ட கற்பனைகளை அச்சரசப்தபேதமின்றி அங்ஙனமே அவனதுசேனைக்கு அறிவிக்கும் ஒரு உண்மைத்தூதுவரென்னும் பொருட்படும் நபியென்பதற்குப் பொருந்தாதாயினும் பைபிலை தமிழினாலே மொழிபெயர்த்து எழுதிய கிறிஸ்தவபண்டிதரொருவரினாலே அங்ஙனங்கூறப்பட்டு இந்தத் தமிழ்நாட்டிலே வழங்கப்படுவதினாலேயாமும் அவ்வாறாகவே கூறுவாராயினும் உய்த்துணர்க.

அரசர்களை மாத்திரமா? அவர்களிடத்து ஊழியஞ் செய்து சொற்ப சம்பளம்பெற்று மானம் அபிமானமின்றித் தந்திரோபாயங்களைக் கையாடிய ஒரு சிறுவனையுங்கூட பெருமரியாதையாக "வந்தார்கள், செய்தார்கள், சொன்னார்கள்," என மரியாதைச் சொற்களை அடுக்கடுக்காக எழுதியும் உண்மையும் மனசாட்சியுமற்ற அழுக்காறுருக் கொண்டெழுந்த போலிகளின் நூலெங்ஙனஞ் சிறக்கும்? அது உண்மைக்கும் நம்பிக்கைக்கும் அருகமாகுமா? ஆசியா, யூரோப், முதலியதேச சரித்திரங்களும், பூமிசாத்திரமும், பைபில் புத்தகங்களும், தமிழில் எழுதியகிறிஸ்துவ ஆசிரியர்களும் அவர்களைத் தழுவி வயிறுவளர்க்கும் ஹிந்து நேயர்களும், அத்தகையினரென்பது அவர்களெழுதிய கிரந்தங்களினாலே நன்கு புலப்படுத்துகின்றார்களென்பது எதிர்வாதமின்றிய வுண்மை. ஆகவே, எமது நண்பர்காள்! நடுநிலையோடு எழுதப்படும் நூல்கள் சிறந்த மேலோர் நோக்கங்களுக் குரியனவாய் விளங்குமென்னும் உண்மைக்கு இலக்காய் இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றதா? என்பதை தீர்க்க ஆலோசித்து, இந்நூலுட் புகுந்து, அங்கு கூறப்பட்டுள்ள நல்லவைகளைக் கைக்கொண்டு தீயவைகளைக் கண்ணுற்றால் அவைகளையறவே தள்ளி நன்னியதியில் செல்லுமாறு பிரார்த்திக்கின்றேம்.

மேலும் நேயன்மீர்! எமது ஹிந்து நேயர்களை நோக்கி அவர்களுக்காகவும், "ஹிந்து மததீபிகை" என்றொரு நூலெழுதி முடித்திருக்கின்றோம். தேவசகாயம் கிடைத்தாலதுவும் சீக்கிரத்தில் அச்சிட்டு வெளியிடுவோமாக. ஆமீன்.

இங்ஙனம்
கவு, கா.
நூலாசிரியர்.

# கிறிஸ்துமத தீபிகை.

## "வேதம்"

இது, வேதமென்பது இன்னின்ன சுபாவமுள்ளதாயிருக்கவேணுமென்பதை யுணர்த்துகின்றது.

ஐயன்மீர்! எமது கிறிஸ்துவநேயர்கள், வேதம் (பைபில்) என்று எதைச் சொல்லுகிறார்களென்றால்:—

கிறிஸ்து நாதரின் தலைமுறையும், அவர் பிறந்தவிதமும், வளர்க்கப்பட்ட நிலைமையும், ஞானஸ்நானம்பெற்ற தன்மையும், பிறகு அவர் சென்ற தேசங்களின் விவரமும், பசாசுகளினாலே சோதிக்கப்பட்ட வரலாறும், பல பிணியாளிகளை, சொஸ்தப்படுத்தினனென்ற புதுமையும், சிஷியர்கள் இன்னாரென்பதுவும், சிஷியர்களுக்கு அவர் போதித்த சில வசனங்களும், சிஷியர்களின் அயோக்கியத்துவமும், இயேசு கொலையுண்டு இறந்தாரென்ற பரிதாபமும், கொலையுண்ட மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தாரென்ற விநோதமும், அப்படி எழுந்தகாலத்திலே தமது, அயோக்கிய சிஷியருக்கும், வேறு சில பாமரப் பெண்களுக்கும் காணப்பட்டு, வானத்திலே உயர்த்தப்பட்டாரென்ற விநோதமும் ஆகிய இன்னோரன்னவைகளை முன்னொடு பின்மாறுபாடாக எழுதப்பட்ட சரித்திர சம்பந்தமான புத்தகங்களையே (வேதமென்று) சொல்கிறார்களென்பது பரிஷ்காரமாயேற்படுகின்றது.

எமது நேயர்களே! இவ்வாறான ஆகமங்கள், சாதாரணமான ஒரு மனுஷனைப்பற்றியும், ஒரு நீதிமானைப் பற்றியும், அரசர்களைப்பற்றியும், இக்காலத்திலேயும், சில பலரால், எழுதப்பட்டுமிருக்கின்றன. அங்ஙனமாக எழுதப் படுபவைகளுக்கு ஜீவிய சரித்திர மென்பார்களேயன்றி, வேத

மென்று சொல்ல ஒருவரும் முன்வாரரென்பது எதிர் வாதமின்றி எல்லாராலும் ஒப்புக் கொள்ளப்படு மென்ப தில் யாதுதடை?

இதுவேயுமன்றி, கிறிஸ்துவநேயர்கள், ஒப்புக்கொள்கிற அவ் வேதமோ வெனின்; கிறிஸ்துநாதர் காலத்திலேயல்ல, அவர் ஜன சமூகத்தை மறைந்து, ஏறக்குறைய முப்பது வருடங்களுக்குப்பிறகு சுங்கம்பிடிக்கு மட்த்தினர், மீன்பிடி தொழிலினர் ஆகிய மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், எனும் நான்கு சாமானிய மனிதர்க ளாலே நான்கு புத்தகங்களாக எழுதப்பட் டிருப்பதேயுமன்றி; முக் கிய விஷயங்களில் அந்நால்வரும் பெரும்பாலும், தத்தமக்கிடை வேறுபட்டவர்க ளாகின்றார்க ளென்பதூஉம் பிரத்தியக்ஷ பிரமா ணமா யிருக்கின்றது.

ஐயோ! விஷயங்கள் உண்மையாயின் ஒரு புத்தகம் போதா தா? அசத்தியமாயின் எத்தனை புத்தகமாயினுந் தானென்னை?

இங்ஙன மெல்லாம் உணர்ந்து நோக்காது, எழுதப்பட்டவை களை யெல்லாம், சிரமேல் கொண்டு திகழும் காரணத்தினாலே, எமது கிறிஸ்துவ நேயர்கள் வலியோர் முதல் எளியோரீறாக எல் லோரும் ஒருங்கே அப்புத்தகங்களை "வேதம்" "வேதம்" என்று வழங்குவா ருயினுரேயன்றி, வேதம் எப்படிப்பட்டதா யிருக்க வேண்டும்? என்பதைச் சற்றும் நோக்கினாரலர், என்பது நன்கு விளங்குகின்றதன்றோ? ஆகவே எமது கிறிஸ்துவநேயர்கள், வேதம் எனப்படுவது இத்தன்மையினது, என்று உணருவான் வேண்டி, வேதத்தின் இலட்சணங்களை ஒருவாறு சிறுகக் கூறுவேம், தயை கூர்ந்து சற்றுச்செவிகொடுப்பார்களாக: எங்ஙனை எனின்:—

"ஞானம், திரிகாலாகமம், அதிர்ப்பு, கற்பனை, சுவிசேஷம்", ஆகிய இன்னோரன்னவாம் பொருளின் தன்மையினதாய், மனுஷரா திகளின் வாக்கியங்களில் ஒரு சிறிய அக்ஷரமேனுமின்றி, முற்றிலும், ஒரு பொருளாகிய கர்த்தாவினது வாக்கியங்களாலே முடிந்த மான் மியத்தினதாய், அசத்தியவானென்று ஒரு வார்த்தையும் ஆசங்கித் தற்கு இடம் போதாது, பிரத்தியக்ஷ பிரமாணமாய் கிரகிக் தற்கு ஹேதுவாய சத்தியவாக்கிலே பிரசன்ன மாகுவதாய் அது பிரசன்னமானகாலம், இடைகாலம், கடைகாலம் ஆகிய மூன்று காலங்களினும் "இவ்வசனம் நாம் கேட்டதில்லையே" எனும் விவ



ஹாரம் நிகழாது, பொய்ப்படாத நாவினரெல்லாராலும் ஒருங்கே, எடுத்தல், படுத்தல், வலித்தல், மெலித்தல், நிறுத்தல், தொடரல் ஆகிய சந்தமுதலிய பேதமின்றிச் சூரியனினும் பிரபலமுள்ளதாய், தேவ வசனமென்று ஓதப்பட்டுவரும் பல வசனங்களாலாகியதே "வேதம்" எனப்படும். எனவே, நமது நேயர்களாகிய அறிவின் மிக்க கிறிஸ்துவ மதாபிமானிகள், இவ்விடத்தில் அசமாதானமாக மாட்டார்களென்று, யாம் முற்றிலும் நம்பமாட்டுவேம்: ஏனெனில்;

(1) மெய்யறிவினிலே கண்டுணர்ந்த ஞானிகளேயாயினும், மயிர் சிலிர்த்து உடல் பூரித்து, உளம்வியற்கற்பாலதாய சிறப் பிற்றீர்ந்த எவ்வகைப்பட்ட வியானங்களும் அமைந்திருந்த லாலே, மெய்யாகவே இது பூரண அறிவினாலேயே யன்றி யோ துதற்கு அரிது, எனச்சிரஞ்சாய்த்து, ஒப்புக்கொள்ளப் படுதற்கு ஹேதுவாய்ச் சிறந்ததலோடு "அறிவு" மனுஷலக் கணமெனப்படுமாதலின், "ஞானம்" வேதத்திற்கு வேண்டு மென்பதூஉம்,

(2) மேன்மை பொருந்திய தொன்மையோர்களாகிய தீர்க்கதரிசி (நபி) மார்களின், வரலாற்று முறைமைகளினது உண்மைக்கு மாறாக, (நீண்டகால சம்பவசாரணம் பற்றிய) மறவியினு லும் சிலபல சரித்திராசிரியர்களின் சுபாவபேதத்தினாலும் நேரிடும் பேதாபேதங்கள் இணைத்தென கல்லுணர்வினர் கண்டு, ஒழுகுவன வொழுகிச்செல்லத்தகுவதேயுமன்றி, இத் தகைய ஆராய்ச்சி மறவியற்ற ஒரு மெய்ப்பொருளினாலேயே ஓதப்பட்டதெனச் சிரஞ்சாய்த்து ஒப்புக்கொள்ளப்படுதற்கு ஹேதுவாய்ச் சிறக்குமாதலின், செல்காலாகமமும், வேத வழிப்பாட்டிற்கும் தீர்க்கதரிசிகளினோக்கங்களுக்கும் மாற வழிப்பாட்டிற்கும் தீர்க்கதரிசிகளினோக்கங்களுக்கும் மாறு ஞாக, மனம்வேறு வாக்குவேறு பட்டாராலும், முற்றும் ஞாக, மனம்வேறு வாக்குவேறு பட்டாராலும், இரகசியத்திலேசெய்தும், செய் விரோதிகளாகுவாராலும், இரகசியத்திலேசெய்தும், செய் யத்தக்கனயோசித்தும் வருகிற்கும் கிரியைகளை விவரமாய் (இன்னின்னார் இன்னின்னவகையினராயிருக்கின்றனர்) என பிரசுரிக்கப்படுதலினாலே, இதென்ன ஆச்சரியம்! மனக் கிடக்கையையும் அதுபோலொத்த இரகசியங்களையும் அறி யும் ஒருபொருள் இருப்பதினாலேயே, அத்தகைய காரியங் கள் வெள்ளிதாய் ஓதப்படுகின்றனவென்று, வெறுவி, அக் கிரியைகளைவிட்டு ஒழிதற்கு ஹேதுவாவதேயுமன்றி, நல்லோ

மூக்கத்திற்குங் காரணமாய்ச் சிறக்குமாகலின், நிகழ்காலா கமமும்; பிற்காலத்திற்கு உறுதி பயப்பித்தற்கேதுவாய்ச் சிறத்தற்கா+, எதிர்காலாகமமும், ஆகிய மூன்று காலாகமமும், வேதத்திற்கு வேண்டுமென்பதூஉம்,

(3) கருத்தாவின் வல்லமையாகிய தன்மைகளும், நரகவேதனையின் வன்மைகளும் விவரிக்கப்படுதலினாலே நல்வழிப்பாட்டிற்கு ஹேதுவாய்ச் சிறக்கு மாகலின்; அதிர்ப்பு, வேதத்திற்கு வேண்டுமென்பதூஉம்.

(4) வணக்கநெறியையும், உண்பன, உண்ணாதன, செய்வன செய்யாதன இனைத்தெனும் ஒழுக்கமும், விவாகமுறைமையும் சுதந்திரத்தி னுண்மையும், கடன்கோடலாதிய விவகாரத் தன்மையும், கொலை, களவு, அடாபிடி, கட்குடி, விவசாரமாகிய துர்க்கிரியைக்குரிய சரீராவஸ்தையின் கொள்கையுமாகிய இன்னோரன்னவாம், அதிகார வரம்பிலக்கணங்கள் மனுஷராதிகளுக்கு இன்றி யமையாதனவேயுமன்றி, நோக்கு மிதிமான்கள், மெய்யாகவே, இவ்வாறான ஆராய்ச்சி மெய்யறிவினையுடைய ஒப்பற்ற ஒருபொருளினாலேயேயன்றி ஓதப்படாதென நன்குமதித்தற்கு ஹேதுவாய்ச் சிறக்குமாகலின், "தப்பனை" வேதத்திற்கு வேண்டுமென்பதூஉம்.

(5) வேதநெறி நின்றோர் அடையும் பொருட்டாக நிறுவிய எதிரிடல்லாத சுகானுகூலத் தன்மையினதாய் நித்திய ஜீவபரலோக இராச்சியத்தைக் குறித்த மஹாமகிமையான சுலோகங்களினாலே, கொடையாலும், சகஜீவியத்தாலும், சிறந்த யோகபுருடர்களேயாயினும், வியந்து, அப்பரலோக இராச்சியத்திலேயே போாகத முறுதற்கு ஹேதுவாய் நன்னியதி, பயப்பிக்குமாதலின்,

"சுவிசேஷம்" வேதத்திற்கு வேண்டு மென்பதூஉம் ஆகிய இன்னோரன்னவாம் பொருளிலக்கணத் தன்மையோ டிருத்தலேயுமன்றி; அலங்காரம், யொருமை, காமமாகிய மலங்களோடு சிருட்டிக்கப்பட்டாராகுவார் எவராயினும் வேதவசனங்களில், கலந்திருந்தால் அன்னாரின் சுபாவத்திற்கிணங்காய் தவறுதல் எனஉம் சேர்ந்துவிடுமாகலின்; அவ்வேதம் முற்றும் தேவவசனமென்று நம்புதற்கு



அருகமில்லாதாய் வீணேகிடக்கு படுமென்றோ? ஆகவே அவ்வாறாக ஆசங்கை நிகழாது ஒப்புறுதற்கு ஹேதுவாய்ச் சிறக்குமாறு மனுஷராதிய படைப்பினர்களின், வாக்கியங்களினின்று ஒரு சிறிய அக்ஷரமேனும் வேதத்தில் கலவாதிருத்தலும், அவ்வாறு கலவாமல் ஞாயிற் காக்கப்பட்டிருந்த தென்றற்குச் சான்றாக அவ்வேதம் ஓதுபவர் உண்மையான தீர்க்கத் தரிசியாய் நன்கு மதிக்கப்பட் டிருத்தலும், பொய்யான ஒருவிஷயத்தை, அது உண்டானகாலம், இடைக்கடையாகிய மூன்று காலங்களிலும் உள்ள, பொய்ச்சொல்லாத நாவினையுடைய மஹான்களனைவரும் ஒருங்கே பேதமின்றி ஒப்புக் கொள்வார்களென்பது சூனியமேயா மாகலின், உண்மையாகவே வேதசுலோக மென்றற்கு அது உதயம் செய்தகாலம் இடைக்காலம், கடைக்காலமாகிய மூன்று காலங்களிலுமுள்ள பொய்ப்படாத நாவினர்களாகிய பெரியோர்களெல்லாராலும் ஒருங்கே பேதமின்றி யோதப்படுதல் வேண்டுமென்பதூஉம் அதற்கு நியந்தனைகளாயின. எனவே, வேதத்திற்கு வேண்டுமென்று யாம் கூறிய இலக்கணங்களை, நிராட்சேபனையாய்த் தலைசாய்த்து ஒப்புக்கொள்வார்களென யாம் நம்பமாட்டுவேம்.

இங்ஙனமாக எமது கிறிஸ்துவ பண்டித சிகாமணிகள் ஊடன் படுவார்களாயின், மேலே கூறப்பட்ட வேதலக்கணங்கள் ஏதாவது அவர்கள் வேதமென்று வழங்கிவருகிறதாய, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், என்பவர்களா லெழுதப்பட்ட புத்தகங்களில், காண்பார்களென்று யாம் அணுத்துணையும் நம்பமாட்டேம். மேலும் கிறிஸ்துநாத ரவர்களுக்கு வரப்பட்ட உண்மையான வேதவசனங்கள், எமது நேயர்களுக்குக் கிடைத்திராதென்பது மறுக்கப்படாத உண்மையென்று காணுவார்கள். எப்படி எனின்? எமது நண்பர்களே! கிறிஸ்துநாதர் ஞானஸ்நானம்பெற்று சுவிசேஷம் பிரசங்கிக்க ஆரம்பிக்கும்போது, ஏறக்குறைய முப்பதுவயதுள்ளவரா யிருந்தா ரென்பதூஉம், சிலுவையில் அறையுண்ணும்போது முப்பத்துமூன்று வயதுள்ளவரா யிருந்தா ரென்பதூஉம், வேதமேயாகலின், ஆனை வேண்டாது நம்மனோர், எல்லாராலும் உடன்படம் பாலதே! எனவே, அப்பெருமானார் சுவிசேஷம் பிரசங்கித்ததெல்லாம் ஏறக்குறைய மூன்றே வருஷம், என்பது வெளியாயிற்று. மேலும் அவ்வற்பகாலத்திலே பெருமானாரின் சுவிசேஷப் பிரசங்கத்திற்குச் சில பாமரப்பெண்களும் பன்னிரு சீஷியர்களுமேயன்றி

வெவ்வொருவரும் செவிகொடுத்தாரிலர் என்பதூஉம் கிறிஸ்துவ வேதப் பிரமாணமே யாகின்றது.

ஐயோ! சிஷ்யர்களெனும் அப்போஸ்தலரோ வென்றால், கிறிஸ்துபெருமானார் சிலுவையில் அறையும்படி பகைவர்களுக்கு ஒப்புவித்த ஒருதுரோகியும், ஒரு இரவிலே மூன்றுதரம் பெருமானாரை மறுத்துக் கூறியதேயுமன்றி தூஷணித்துப்பேசிய மாறுபாட்டாளும், பெருமானார் சிலுவையில் அறையப்படும்போது அந்நாயகரைவிட்டு, ஓடி ஒளித்த அவிசுவாசிகளுமேயாம். ஆ! சிஷ்யர்களின் இலக்கணம் இவ்வாறாயின், பாமரப்பெண்களாகிய அற்ப விசுவாசிகளின் குணங்களைப்பற்றி விவஹாரம் வேண்டிற்றிலையன்றோ?

ஐயோ! அவ்வாறான பரிதாப நிலைமையிலே 'கிறிஸ்து பெருமானார் விடப்பட்ட காரணத்தினாலே, அந்நாயகரால் பிரசங்கிக்கப்பட்டதேவ வசனங்கள், ஒருவராலும் நன்குமதிக்கப்படாது வீணேகைவிடக்கப்பட்டன வென்பது பிரத்தியக்ஷப் பிரமாண மாகின்றதே; அல்லாமலும் கிறிஸ்து நாதரவர்கள் சிலுவை மரத்தில் அறையுண்டிருக்கும் வேளையில் 39 "அவ்வழிநடந்து போகிறவர்கள் தங்கள் தங் "கள தலைகளை யசைத்து 40 ஆ! தேவாலயத்தையிடித்து மூன்று "நாளுக்குள்ளே கட்டுகிறவனே, நீதானே உன்னை இரட்சித்துக் "கொள்; நீபராபரனுடைய குமாரனானால் சிலுவைமரத்திலிருந்து "இறங்கிவா என்று அவரைத்தூஷணித்தார்கள். 42. இவன் மற்ற "வர்களை இரட்சித்தான் தன்னைத்தானே இரட்சிக்கத் திராணி "யில்லை; இவன் இஸ்ரவேல்களின் இராஜாவானால் இப்பொழுதே "சிலுவையில் இருந்து இறங்கிவரட்டும்; அப்பொழுது இவனை "விசுவாசிப்போம், 43 இவன் தன்னை பராபரனுடைய குமார "னென்று சொல்லி பராபரன்மேல் நம்பிக்கையா யிருந்தானே, "அவர் இவன்மேல் பிரியமாயிருந்தால் இப்பொழுது இவனை மீட்டு "விடட்டும் என்று அவரை, பரியாசம் பண்ணினார்கள்" என்று மத்தேயு 27-ம் அதிகாரம் பரிஷ்காரமாய்க் கூறுகிறதினாலே, இயேசுநாதர் தீர்க்கதரிசி யென்றாவது தேவகுமார ரென்றாவது அல்லது ஒரு கனமான மனிதரென்றாவது அக்காலத்தாரால் மதிக்கப்படாது வீணே விடப்பட்டிருந்தா ரென்பது தெளிவாகின்றது. ஆகவே கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்பட்ட சிலகாலங்களுக்குப் பிறகு, மேற்கூறப்பட்ட அவிசுவாசிகளாகிய சிஷ்யரென்னும் அப்போஸ்தலர்கள், ஒருங்குசேர்ந்து, தமது செய்கையைத்தாமே குற்றங்கூறி அக்



குற்றத்தை ஒருவாறு நிவாரணம் செய்யும் பொருட்டாக கிறிஸ்துநாதர் உயிர்த்தெழுந்து தங்கண்மாட்டுவந்ததாக ஒருபலமானபொய்க்கற்பனையைக் கற்பித்து இரகசியமாய்ச் சிலபோதிப்பான் வேண்டி தமது போதனைக்குத்தக்க விதமாய்ப்பிதற்றுவாராயினர். அதுபற்றி அன்னாரது பிரசங்கம் ஒருங்கே சேருண்டு நம்புதற்கு அருகமில்லதாய் முன்னொடு பின்மாறுபாடுற, நினைத்தார் நினைத்தவாறு எழுதுவாராயினர் என்றற்கு, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்பவர்களால் எழுதப்பட்ட புத்தகங்களே சான்றாகின்றன. அப்புத்தகங்களே பைபிள் எனப்படும். அவைகள் தத்தமக்கிடையுறும் பேதங்களை ஆங்காங்கு ஒருவாறு எடுத்துக் காட்டுவாம், உய்த்துணர்க.

எமது கிறிஸ்துவநேயர்களே! சற்று தயைசெய்து கவனிப்பீர்களாக. எமது மார்க்கத்திற்கு, வேதம் எனப்படும் "குறுஆன்" எத்தகையினதா யிருக்கின்றதென, ஆராய்வோமாயின், அவ்வேதத்தில் காணப்படும் வாக்கியங்களின், ஒவ்வொரு அக்ஷரங்களும், ஒரு மெய்ப்பொருளாகிய கருத்தாவினாலேயே யன்றி, வேறில்லதாய், மேலே கூறியபடி வேத இலக்கணங்கள்யாவும் பொதிந்ததாயிருப்பதுடன்; அவ்வேத வாக்கியங்கள் பராபரனாலே, ஒன்றுக்குப்பின் ஒன்றாக எவ்வாறு வந்தனவோ, அம்முறையாக ஒரு அக்ஷரபேதமுமின்றி எடுத்தல், படுத்தல், நலித்தல், மெலித்தல், நிறுத்தலாதிய சந்தமுறைமைகளும் ஒருங்கமைதர மனனம்செய்த "ஹாபில்" எனப்படுவோர், எமது நபிகள் பெருமானார் காலத்திலேயே, பதினாயிரக் கணக்கானவர்களிருந்ததேயுமன்றி, அப்பெருமானார் காலம் செய்த காலத்திலே, அன்னாரது உபதேசத்திற்குச் செவிசாய்ந்தார் எத்தனையோ இலக்ஷக் கணக்கானவர்களாக இருந்தார்கள், அவர்கள் எல்லாரும் குறுஆன் என்னும் அரும்பொருளாகிய தெய்வவாக்கியங்களை, மனனம்செய்தவராயும் அங்ஙனம்செய்யாத சிலர் அவ்வேத வசனங்களை உயிரேயன்ன போற்றி, ஓதுபவராயும், எழுதிகொள்பவராயும் இருந்தார்கள். ஆயினும் அக்காலத்தினோ ரெல்லாரும், ஒருங்கே சேர்ந்து, தேவ வசனமாகிய குறுஆனை, மனனம்செய்வதொன்றுபற்றி மாத்திரம் விட்டிருப்பது, நிரம்பாது. அவசியம், குறுஆனின், வசனங்களெல்லாம் ஒன்றுசேர மேல்கூறிய விலக்கணங்களோடும் எழுதப்படவேண்டுமென்று வற்புறுத்துவாராயினர் நபிகள் பிரான் அவர்களின் சிஷியர்கள். அவ்விவாதமோ வென்றால்;

களுக்கெல்லாம், உடன்பாடாயினமையின், துறு ஆனை, எவற்றானும் நிரம்ப மனனம், செய்தாராகிய சிஷியர்களுமோவெனின்; தம்மோடு மாத்திரம், அமையாது, துறு ஆனை மனனம் செய்தாராய் அக்காலத்திலேயிருந்த மற்றுமுள்ள பதினாயிரக்கணக்கான * அஸ்ஹாபிகள் எனும், தகுதிவான்களனைவரையும் ஒருங்கே திரட்டி அவர்களெல்லாராலும், துறு ஆனை, எவ்வாற்றானும் ஒரு அக்ஷரபேதமின்றியொன்றுபட்டிருப்பக்கேட்டு பேரானந்தமுற்று அவ்வண்ணமே, துறு ஆன் பல எழுதப்பட்டன. இவ்வாறாக எழுதப்பட்ட காலமோவெனின், நபிகள் பிரான் காலஞ்செய்து, அவர்களின் முதலாவது சிஷியரும் மஹா உண்மைவானெனப் பிரபலம் படைத்தோருமாகிய, அமீருல் முஉமினீன் செய்யதினா, அபூபக்ர் ஸஷித்தீக் என்னும் பெருமானார் காலத்திலேயே.

இதுவேயுமன்றி, நபிகள், பெருமானவர்களின் மூன்றாம் சிஷியராகிய, அமீருல்முஉமினீன் செய்யதினா, உஸ்மானிப்னு அப்பான் அவர்களின் காலத்திலோவெனின், துறு ஆனாகிய தேவவசனங்களில், எந்த காலத்திலும் ஒருவாற்றானும், பேதங்கள் நேரிடாதிருக்கும்பொருட்டாக, மேலும் பலப்படுத்துவான்வேண்டி வேதவசனங்களெல்லாம்கூடியது இத்தனை என்றும், அக்ஷரங்கள் இம்மட்டென்றும், அதில் ஓசை யுள்ளது, இல்லது இவ்வளவென்றும், இன்னின்ன எழுத்துகளுக்குப்பின் இன்னின்ன எழுத்துக்கள் இன்னின்னவிதமாகப் புணர்ந்துக் கிடக்கின்றனவென்றும் பிறவுமாகிய முறையோடு கூடிய அத்தியாயங்கள் இத்தனை என்றும், இன்னின்ன அத்தியாயங்களுக்கு இன்னின்ன வகையாக அட்சரவருக்கங்களித்தனையென்றும் முறைபட நிறீஇ, முப்பது ஐட்டங்களாகப் பிரித்தும் நபிகள் பிரான், அவர்கள் ஓதிய சந்தம் சிதையாது ஓதல் வேண்டுமாகலின் அது இன்னின்ன சந்தம் பட்டிருத்தல் வேண்டுமென்று அதற்குரிய கற்பனைகளோடும், இப்பொழுது அது எழுதப்பட்டிருக்கிற விதமாக எழுதப்பட்டு அதுமுதல் இதுகாறும் ஓதப்பட்டும், மனனம் செய்யப்பட்டும், தனதுமுதல் தன்மைக்கு, ஒருவிதத்தாலாவது, ஒரு சிறிய அக்ஷரபேதமுமின்றி, பூமியின் எல்லை பரியந்தம், துறு ஆன், ஒரேதன்மையினதாய்க் காணப்படுகின்றதென்பது, வெள்ளிமலைபோல விளங்கு விஷயமே. எமது கிறிஸ்

* அஸ்ஹாபிகள் என்பது நபிகள் பிரான் அவர்களின் சந்நிதானத்திலே பலதரமாகச் சேரவிருந்தாரென்னும் பொருட்டது.



துவ நேயர்காள்! எமது வேதமாகிய துறு ஆன், இம்மட்டாகவா? இன்னும் கேட்பீர்களாக.

அமரர், மனுஷர், ஜின், ஆகிய எல்லாப் படைப்பினர்களும், ஒருங்கே சேர்ந்தாராயினும் அதிலுள்ள ஒரு சிறிய வாக்கியத்தைப் போலாயினும் கொண்டுவர அதாவது எழுதிமுடிக்க ஒருவாற்றானும் முடியாதென்றதற்குச் சான்றாக, "இந்த துறு ஆனின் வாக்கியங்களில் காணப்படும் ஒரு சிறிய வாக்கியத்தைப்போலாயினும் நீவிர்களெல்லாரும் சேர்ந்து கொண்டுவருவீர்களாக?" என்று சம்பிரதானமாக அதில் பலவிடத்தும் பராபரனாலே விளுவப்படுகின்றன. ஆகவே எமது நேயர்களே! இந்த துறு ஆனைப் பராபரனாலே நபிகள் பெருமானாருக்கு அனுப்பப்பட்ட அக்காலத்திலே வேதபாஷையில் தேர்ந்த நிபுணர்கள், கணக்கற்றுப்போவிருந்தார்களாயினும் அவர்கள் எல்லோரும் ஒருங்குகூடி பலமுறையாக பதக்கட்டுகளான வாக்கியங்களை துறு ஆனின் வாக்கியங்களுக்கு ஒப்பிடும் பொருட்டாகச் செய்யத் தலைப்பட்டார்கள், ஆயினும், சற்றும் பிரயோசனப்படாது வெட்கித்துப்போய்க் கடைசியாக இந்த துறு ஆன் மனுஷர்களாதியோர்களாலே ஒருபோதும் சொல்லப்பட்டதன்று எனத் தலைசாய்த்து விட்டார்கள்; மேலும் அத்தநாள் முதல் இதுகாறும், அறபி பாஷையில் தேர்ந்த நிபுணர்களாகுவாரெவரும் துறு ஆனைக் கண்டு, "இதுவே எமது மார்க்கம்; உண்மையானதென்றதற்குச் சான்றாகின்றதெனக் கூறி வேறு சாட்சியம் வேண்டாது, உடன்படுகிறார்கள்" என்பது பிறர்வாய்க் கேட்கவேண்டியதில்லை. ஆகவே ஏறக்குறைய ஆறு அல்லது ஏழுவருடகாலம் அறபி பாஷையில் பிரயாசை எடுத்தால் அப்பாஷையில், பூரண பாண்டித்துவம் பெறலாம் அப்படிப்பெற்று நோக்கி யாம் இதுவரையிலும் கூறிவந்தனவெல்லாம் உண்மையாவென்று ஆராய்தல் ஒரு மனுஷனுக்கு முடியாத காரியமன்று; அப்படி நோக்குவாரெவரும், எமது வேதமாகிய துறு ஆன் மனுஷராதிகளின் வாக்கியங்களினின்று ஒரு அக்ஷரமேனும், சேராததென்றும், அது போல படைப்பினர்களால் செய்ய முடியாதென்றும், அதில் சொல்லப்பட்டனவெல்லாம் ஒருமுதலாகிய பராபரனாலேயே சொல்லப்பட்டனவென்றும் இலகுவிலுணர்ந்து பரலோக இரகசியத்தின் பதவிகளைப்பெறுவார்களென்பதில் யாது தடை?

ஆகவே, எமது நேயர்காள்! எமது வேதமாகிய நூறு ஆனே உலகமுடிவு பரியந்தம் நீங்காத ஒருபெரிய அற்புதகோடி சூரிய னுக நிறுவப்பட்ட தென்பது மலைமேலிட்ட தீபமே போலக்கா ணுவீர்களென்று நம்புகிறேம்.

எமது நேயர்களே! வேதங்களில் சம்பிரதாய வார்த்தைகளை வேதகருத்தாவினுலே சொல்லப்படுவது இயற்கை யென்பது நீவிர் களும் அறிந்த ஒன்றே; இதோ, ஏசாயா தீர்க்கதரிசிமூலமாய் இஸ்ரவேலர்களை நோக்கி "நித்தியசனத்தை நாம் தாபித்ததுமுதல் "கொண்டு, நம்மைப்போல எதையாகிலும் வரவழைத்து, இன் "னின்னதைமுன் அறிவித்து நமக்கு முன்னே வரிசையாக நிறுத் "தத்தக்கவன் யாவன்? பின்னடி செய்திகளையும், வருங்காரியங் "களையும், தங்களுக்கு அவர்கள் அறிவிக்கக்கூடுமோ?" என்று பராபரனுகிய கடவுள் கடாவுகின்றதைக் காணுவதிருந்தே, எமது சொல்லையும் நம்பமாட்டுவீர்கள், இதனுலே பின்னடிசெய்திகளையும் வருங்காரியங்களையும் பராபரனுலேயே யன்றி அவரல்லாத மற்ற வர்களால் சொல்ல முடியாதென்பது நன்கு உணருவீர்களாக. இதோ மாற்கு 13-ம் அதிகாரம் 31, "வானமும் பூமியும் ஒழி "ந்துபோம், என் வசனங்களோ ஒழியாமலிருக்கும், 32 அவை "கள் சம்பவிக்கும் நாளையும், நாழிகையையும், பிதாவானவரேயன்றி "மற்றொருவனும் அறியமாட்டான், பரமண்டலங்களிலுள்ள தூத "ரும், குமாரனும் அதை அறியார்கள்." என்று இயேசுநாதர் கூறினதாகவும் சப்திக்கின்றது. இவ் வசனங்களாலும், எமது கிறி ஸ்தவ நேயர்கள், பின்னடி செய்திகளையும் வரும் காரியங்களையும் பராபரனேயன்றி அறியா ரென்கிற சம்பிரதாய வேதவசனங்களை உண்மையென்று காணும்போது, யாம் எமது வேதத்தில் கூறப்பட் டுள்ளதாகச் சொன்ன அதாவது இந்த நூறு ஆறுடைய வசனங்க ளில் ஒரு சிறிய வசனத்தைப்போல கற்பனை யலங்கார இலக்கண விலக்கியங்கள் பொதிந்ததாக இடனுமானுல் கொண்டுவாருங்க ளென்று கூறப்பட்ட வேதவாக்கியங்களும் உண்மையாகுமென்று ஏன் நம்பமாட்டார்கள்? அவசியம் நம்புவார்களென யாம் நம்ப மாட்டுவேம். ஆகவே எமது கிறிஸ்தவ நேயர்கள் எமது நூறு ஆனி லுள்ள வசனங்களெல்லாம் தேவ வசனமென்றும் மனுஷர்கள் தேவராதிய படைப்பினராயினுர்களின் வாக்கியங்களிலிருந்து ஒரு சிறிய வாக்கியமாவது அதில் சேர்க்கப்பட் டிராதென்றும், நம்



பிக்கை செய்தற்கு அதுவே முழுதும் சுதந்திர முடையதென்றும் எவ்வாற்றுலும் நம்புதற்கு என்ன ஆசங்கை யிருக்கும்? ஒரு ஆசங் கையு மிராதென்று பரிஷ்காரமாய் காணுவார்கள். அப்படி காணு வார்களாயின்; எமது நண்பர்கள் அநுஷ்டித்து வருகின்ற வேத மாகிய, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், எனும் பெயரிய மனுஷர்களாலே எழுதப்பட்டு, முன்னெடு பின்மாறு பட்டதாய்க் காணப்படும், சாமானிய சரித்திர புத்தகங்களை, ஒருபோதும், வேதம் என ஒப்புக்கொள்ள மாட்டார்களன்றே? நிற்க; வேத இலக்கணமென்று நல்லுணர்வார்க்குப் போதுமாறு சிறுகக் கூறி னும்; ஆதலின் உய்த்துணர்ந்து மனப்பொருமையை யொழித்து உண்மையைக் கடைப்பிடித்து அற்ப ஜீவிய காலத்தைப் பெரிதெ னக் கொள்ளாது, நீடிய பரலோக இராச்சிய சம்பந்தமான காரியத் தில், நோக்கமாய் விழித்தவனுய்த் தன் வாணுளைச் செலவிடுபவனே மனுஷன் எனப்படுவான், என முடிக்கின்றேம்.

## "வம்சம்"

இது இயேசுநாதரின் வம்சத்தை குறிக்கின்றது. எமது, கிறிஸ் துவ நேயர்களே! இயேசு நாதரின் விலையேறப்பெற்ற வம்சத் தைக்குறித்து நாம் விசாரிக்க வேண்டுவதில்லை, மெய்யாகவே அவர் சிறப்புயர்ந்த பரிசுத்தமான வம்சத்திரு ரென்பது, எம்மனேர்க ளாலே மதிக்கப் படுகின்றது. ஆனுல் பெருமானுரின் வம்சம் இன் னதென் பைபிலில் எழுதப்பட் டிருக்கின்றதன்றே? அப்படி எழு தப்பட்டிருப்பது பராபரனுலேயோ? அல்லது வேதம் வரைந்த மத்தேயு வகையராக்க ளாலேயோ? என்பதைப்பற்றி மாத்திரம் விசாரிக்க வேண்டியது, அவசியமான காரியமென்று யாம் நினைக் கின்றேம். அது எமது கிறிஸ்தவ நேயர்களுக்கும் உடன்பாடா யிருக்கு மென்பதில் எமக்குச் சந்தேகமில்லை. ஆகவே எமது நேயர் களே! பெருமானுரின் வம்சத்தைப்பற்றி உங்கள் வேதத்தில் கூறி யவர் யாவர்? வேதம் இறைவனுலன்றே விளக்கப்பட வேண்டும்? அப்படி விளக்கப்படுமாயின் அதில் வித்தியாசம் அதாவது பேதம் வரவேண்டிய தில்லையன்றே? அப்படி வித்தியாசப் படுமாயின் அது இறைவனுலே விளக்கப்பட்டதென்று நீவிர்கள்சொல்ல முன்

வருவீர்களா? ஒருபோதும் அப்படிச்சொல்ல முன் வரமாட்டீர்கள் என்று யாமே உறுதியாகச் சொல்லா நிற்போம், அங்ஙனமாக வேதத்தில் வித்தியாசங்கள் காணப்பட்டால் அது மனுஷர்களே அந்த வம்சத்தைப்பற்றி எழுதினவரென்று உறுதிகொள்வீர்கள். மனுஷர்களின் கைகள் கலந்துள்ளனவாலே, வேதமென்றும் சொல்ல முன் வரமாட்டீர்கள்.

இதோ! வேதம் எழுதிய நால்வர்களில் மத்தேயு, லூக்கா, என்பவர்களின் வேதங்களில் மாத்திரமே அப்பெருமானின் வம்சத்தைக்குறித்து பேசப்படுகின்றது. அவற்றில் மத்தேயு வேதம், ஆபிரகாமிலிருந்தும், லூக்கா வேதமோவெனின் ஆதாமிலிருந்தும் கூறுவானுயின வென்பது பரிஷ்காரமாகின்றது. இந்த காரணத்தினாலே நாயகரது தலைமுறை அட்டவணை; மத்தேயு என்பவராலும், லூக்கா என்பவராலும், எழுதப்பட்டதென்பது எதிர்வாதமின்றி, ஒப்புக்கொள்வீர்கள். அப்படியாயின், அந்தத் தலைமுறை அட்டவணை நம்புதற்கு அருகமானதாகுமா? ஆபிரகாமிலிருந்தும், ஆதாமிலிருந்தும் எடுக்கப்பட்ட தலைமுறைகள், மேற்படி, மத்தேயு, லூக்கா என்பவர்களுக்கு யாரால் அறிவிக்கப்பட்டது? [illegible]தும் எழுதிவைக்கப்பட்டச் சரித்திரங்களில் கண்டு எழுதினார்களென்றால், அப்படி எழுதப்பட்டவைகளில், வித்தியாசம் காணப்படுவதன்றோ? சரித்திராசிரியர்களின் பேதகமென்றால் அப்படி பேதகப்படுபவை வேதமாகுமா? மனுஷனெழுதிய புத்தகம் வேதமாகுமா? அப்படிப்பட்ட புத்தகங்களில் எதை நம்பவேண்டும் எது நம்பவேண்டாதது? நம்பப்படாதது, இல்லையென்று எதைச் சொல்லுவீர்கள்? லூக்கா வேதமென்றால், என்ன அத்தாட்சி? மத்தேயை நம்புதற்கு என்ன காரணம்? என்புனவாக எத்தனையோ கேடாதல் வேதத்தின்மேல் நிகழ ஹேதுவாகுமென்பது, நேயர்கள் அறியாத விசயங்களாமா? அன்று; எங்ஙனம் பேதகப்படுகின்றதோ வென்பீர்களாயின்; கூறுகின்றேம் நன்று கவனிப்பீர்களாக.

“ஆப்ராகாம் இசாக்கைப்பெற்றான், இசாக்குயாக்கோபை, அவன்
“யூதாவை, அவன் தாமார் என்பவளைச்சேர்ந்து பாரேசை,
“அவன் எசுரோமை, அவன், ஆராமை, அவன் அமினதாபை,
“அவன் நகசோனை, அவன் சல்மோனை, அவன் ராகாப் என்



“பவளைச்சேர்ந்து, போவோசை, அவன் ரூத் என்பவளைச்சேர்
“ந்து, ஓபேத்தை அவன் ஈசேயை, அவன் இராஜனாகிய தாவீ
“தை, அவன் ஊரியாவுக்கு மனைவியாயிருந்தவளைச் சேர்ந்துசா
“லோமோனை அவன் உரோபோவாமை, அவன் அபியாவை,
“அவன் அசாவை, அவன் யோசபாத்தை, அவன் யோராமை,
“அவன் ஓசியாவை, அவன் யோத்தோமை, அவன் எசேகியாவை,
“அவன் மனாசேயை, அவன் அமோனை, அவன் யோசியாவை,
“அவன் எகோனியாவை, அவன் சலாத்தியேலை, அவன் சோரோ
“பாபேலை, அவன் அபியூதை, அவன் எலியாக்கீமை, அவன் அசோ
“ரை, அவன் சாத்தோக்கை, அவன் ஆகீமை, அவன் எலியூதை,
“அவன் எலேயாசாரை, அவன் மத்தானை, அவன் யாக்கோபை,
“அவன் மரியாளுக்குப் புருசனாகிய யோசேப்பைப் பெற்றான், அந்த
“மரியாளிடத்திலே கிறிஸ்து எனப்பட்டிருக்கிற இயேசு, பிறந்
“தார்.” என்றீ மத்தேயு 1-ம் அதிகாரம் 2-முதல், 16-வரை
யிலுள்ள வசனங்களாலே அறியப்படுகின்றது. ஆனால் லூக்காவோ
வென்றால் ஆப்ராகாமிலிருந்து, தாவீது வரையிலும், ஒருவாறு ஒற்
றுமைபட்டதாகக் காணப்பட்ட போதிலும், தாவீதிலிருந்து, மரி
யாளுடைய புருசனான யோசேபு வரையிலும், முற்றும் மாறுபா
டுள்ளதாய்க் கூறுகின்றது. எங்ஙனமோ வென்றால்; “தாவீதுநாத்
“த்தானைப்பெற்றான், அவன் மாத்தாத்தாவை, அவன் மயினானை,
“அவன்மெலேயாவை, அவன் எலியாக்கீமை, அவன்யோனானை,
“அவன் யோசேப்பை, அவன் யூதாவை, அவன் சீமையோனை,
“அவன் லேவியை, அவன் மாத்தாதுவை, அவன் யோரீமை,
“அவன் எலியாசரை, அவன் யோசேயை, அவன் ஏரை, அவன்
“எல்மோத்தாமை, அவன் கோசாமை, அவன் அத்தியை, அவன்
“மெல்கியை, அவன் நேரியை, அவன் சலாத்தியேலை, அவன்
“சோரோபாபேலை, அவன் இரேசாவை, அவன் யோவன்னாவை,
“அவன் யூதாவை, அவன் யோசேபை, அவன் சேமேயை அவன்
“மத்தத்தியாவை, அவன் மாக்காத்துவை, அவன் நங்காவை,
“அவன் எசிலியை, அவன் நாகூமை, அவன் ஆமோசை, அவன்
“மத்தத்தியாவை, அவன் யோசேபை, அவன்இயன்னாவை, அவன்
“மெல்கியை, அவன் இலேவியை, அவன் மாத்தாத்துவை, அவன்
“ஏலியை, அவன் யோசேபுவை, இந்தயோசேபுவுக்கு, மனைவி
“யாகிய மரியாளிடத்தில் இயேசுபிறந்தார்,” எனமேற்கூறிய லூக்

கா 3 - ம் அதிகாரம் 25 - முதல், 34 - வசனங்கள் வரையில் கூறப்
படுகின்றன.

இவைகளினாலே நாம் கூறியபடி இயேசுநாதரின் தலைமுறை
யில் நிரம்பிய பேதாபேதங்கள் வேதபுஸ்தகத்தில் காணப்படுகின்ற
னவென்பதை யுணர்வீர்கள். அப்படி உணர்ந்தபிறகோவென்றால்
நீவிர்கள் வேதமென்று நம்பியிருந்த அந்தப் புஸ்தகத்தை இனித்
திரும்பிப் பார்க்க மாட்டீர்களன்றோ? இதுமாத்திரமா? எமது கிறிஸ்
துவ நேயர்களே! பெருமானுடைய விலையுயர்ந்த தலைமுறையில் விப
சாரமும், சேர்ந்திருக்கிறதாக, உங்கள் வேதமே சான்றுகின்றது,
எங்ஙனமென்றால்; "யாகூபு யூதாவைப்பெற்றான், யூதாவோ வேன்
"றல், தாமார் என்பவளைச்சேர்ந்து பாரேசைப் பெற்றான்" என்
றும் மேற்கூறிய பாரேஸ் என்பவனின் 6 - வது பேரனான, "சலு
மோன் என்பவன், ராக்காய் என்பவளைச்சேர்ந்து போவோசைப்
பெற்றான்," என்றும், "அவன் ரூத்து என்பவளைச்சேர்ந்து ஓபேத்
தைப்பெற்றான்." என்றும், மத்தேயுவேதம் கூறுகின்றபடியினாலே
விவசாரங்கள் பலநேர்ந்திருப்பதாகக் காணப்படுகின்றது. எப்படி
என்றால்; தலைமுறை வரிசைகளைக் கூறிவரும்போது சில விடத்தில்
சிலரைமாத்திரம் குறித்து இன்னான் இன்னாளைச்சேர்ந்து இன்னா
னைப்பெற்றான் என்று விஷேசித்து எடுத்துக் காட்டுகிறபடியினாலே,
விவாகமின்றி விவசாரத்தில், பெற்றானென்பதே பரீஷ்காரமாகக்
காணப்படுகின்றது, இல்லையென்றால் ஆபிரகாம் இசாக்கைப் பெற்
றான் என்றபடி சொல்லாது, ஆப்ரகாம், மரியாளைச்சேர்ந்து என்ற
விசேஷம் வேண்டுவதில்லையே? கலியாணம் முறைப்படிச் செய்
திருந்தால் "சேர்ந்து பெற்றான்" என்று கூறுவது முறையாகுமா?
அது முறையென்றால் ஏன் ஒவ்வொருவனுக்கும் அப்படியாகச்
"சேர்ந்து" என்கிற விசேஷவார்த்தையை உபயோகிக்கவில்லை?
சிலருக்கு மாத்திரம் இன்னாளைச்சேர்ந்து, இன்னானைப் பெற்றான்,
என்று எடுத்துக்காட்டப்பட்டதினாலேயே அந்த மனுஷன் விவசாரத்தி
லேயே பெறப்பட்டான் என்பதற்கே எடுத்துக்காட்டப்படவேண்டு
மென்பது நன்கு புலப்படுகின்றது. ஆகவே நாயகரது வம்சத்தில்
விவசாரம் கலந்து போயிற்றென்பது மறுக்கப்படாதாயிற்று. அய்
யோ எமது நேயர்களே! எம்மினோர்கள் நாயகரது வம்சத்திலே
விபசாரம் கலந்ததாக ஒருபோது நம்பமாட்டார்கள். ஆனால் உங்
கள் வேதம்வரைந்த மனுசர்களை அறிவிலி என்று அறிந்து இகழ்



ந்து அவர்களால் அப்படி எழுதப்பட்டவாக்கியங்களை அநாகரீக
வாக்கியங்களென்றும் எழுதப்பட்ட ஏடுகளைக் கிழித்தெறிந்தும்
விடுவார்கள், நேயர்களே! நீவீர் வேதமென்று கொண்டாடுகிறவை
யில் புத்தகமானது நாயகரைப் பெருமைப்படுத்துகிற ஒரு புத்தக
மென்று எண்ணுவதற்குச்சற்றும், அருகமானதன்று, நாயகரைப்
பழிப்பதற்கு மாத்திரம் நியமிக்கப்பட்டதென்று நன்றாய்ச்சொல்ல
லாம். இன்னும் பாருங்கள் "இராஜாவாகிய தாவீது ஊரியாவுக்கு
"மனைவியாயிருந்தவளைச்சேர்ந்து, சோலோமோனைப் பெற்றான்"
என்று மத்தேயு 1-ம் அதிகாரம் 6-ம் வசனம் கூறுகின்றது. ஐயோ!
பங்கமே, மேலே, கூறியதெல்லாம், இன்னானுக்கு மனைவியாயிருந்த
வளைச்சேர்ந்து இன்னானைப்பெற்றான் என்று சொல்லாமல் மறை
வாகவே, இன்னான், இன்னாளைச்சேர்ந்து இன்னானைப்பெற்றான் என்று
மாத்திரம் கூறப்பட்டிருந்தது. அந்த 6 - ம் வசனமோ வென்றால்,
வெள்ளிதாய், "ஊரியாவுக்கு மனைவியாயிருந்தவளைச் சேர்ந்து"
என்று பட்டம்பகலைப்போலத் தெளிவாய்ச்சொல்லிவிட்டதே இத
ற்கு என்ன சொல்லுவீர்கள்? நேயர்காள்! ஒருவனுடைய பெண்
சாதியாயிருந்தவளை எப்படி ஒருவன் சேர்ந்து ஒருகுமாரனைப்பெற
லாம்? அப்படிப் பெறப்பட்ட வம்சத்தில் வருகிற மனிதனுக்கு வம்
சச்சிறப்பு எங்ஙனமிருக்கும்? அப்படிச் சிறப்பில்லாத வாக்கியங்
களை எழுதிவைத்துக்கொண்ட ஒரு புத்தகத்தை வேதமென்று எங்
ஙனம் சொல்லலாம்? நண்பர்காள்! ஒருவேளை ஊரியாவுக்கு மனைவி
யாயிருந்தவளைச்சேர்ந்து என்றால், ஊரியா இறந்த பின்னிட்டுச்
சேர்ந்திருப்பார் என்பீர்களா? அப்படியாயினும் விவாகம்செய்து
என்று சொல்லாமல் சேர்ந்து என்கிறவார்த்தையை உபயோகித்
திருப்பதினாலே,"விவசாரம் செய்தாரென்று தானேமுடியும்? அல்
லது தாவீது பிரபலம் பொருந்திய அரசராயும் ஒரு தீர்க்கதரிசியாயு
மிருந்தார், ஆதலால் அவர் விவசாரம் செய்தாரென்று சொல்லுவது
பெரும்பாபமா யிருக்குமாதலின், "சேர்ந்துபெற்றார்" என்று எழு
தப்பட்ட வசனங்களெல்லாம் தெரியாமையினாலே என்று சொல்
வீர்கள் போலும்? அப்படியாயின் நன்று சொன்னீர்கள், இப்ப
டியே எம்மனோரின் உள்ளக்கிடக்கை. ஆனால் உங்கள் வேதபுத்த
கங்களிலே தீர்க்கதரிசிகள் விவசாரம் செய்ததாகக் கூறப்படுகின்
றதே! அப்படியிருக்க "தாவீது தீர்க்க தரிசியாதலின் விவசா
ரம் செய்யார்" என்று எப்படி சொல்லுவீர்கள்? என்று கடா

யினால் யாது சொல்லுவீர்களோ? ஒருபோதும் தீர்க்கதரிசிகள்
விவசாரம் செய்யார்கள் என்பீர்களாயின் இதோ! 1-ம் மோசே
19-ம் அதிகாரம் 31-ம் வசனத்திலே, தீர்க்கதரிசியாகியலோத்
தென்பவன் மதுபான வெறியினாலே தமது பெண்மக்கள் இருவ
ரோடு விவசாரம் செய்து அப்பெண்களுக்குப் பிறந்தபிள்ளைகளின்
வம்சங்கள், அம்மோனியர் என்றும் மோவாபியர் என்றும் வழங்
கப்பட்டு நாளது வரையிலும் இருப்பதாகக் கூறுகின்றதே. அதைப்
பார்ப்பீர்களானால், "தாவீது விவசாரம் செய்ய மாட்டாரென்று
சொல்ல உங்கள் வேதமேதடி எடுத்துக்கொள்ளு எதிர்நிற்குதே
ன்று புலப்படுமே; அதற்குயாது செய்வீர்கள்? ஒருக்கால்லோ
த்து மதுபான வெறியினாலே அப்படி செய்தார் என்பீர்களோ?
தாவீது மதுபானம் அருந்துபவ ரென்பதற்கு லோத்தே சான்றாகு
வாரன்றோ? ஏனென்றால்! லோத்து தீர்க்கதரிசியா யிருந்து மது
பானம் அருந்தி தமது பெண்மக்களோடு விவசாரம் செய்தாரென்
றால் தாவீது ஏன் மதுபான மருந்தி ஊரியாவுக்கு மனைவியாயி
ருந்த ஒரு அன்னிய ஸ்திரீயை புணர்ந்திருக்க மாட்டாரென்று
சொல்ல தடையாகும்? அந்தோ தீர்க்கதரிசிகளுக்கு ஒருவாற்றாலும்
பொருந்தாத அநாதாரமான அவேஷ வார்த்தைகளைக்கொண்டு
அவர்களைப்படிறுசொல்லி நினைத்தார் நினைத்தவாறு எழுதிவைத்த
ஒரு போலி புத்தகத்தையா வேதமென்று நம்புயீர்கள்? எம்
அன்பர்களே சற்று ஊன்றி கவனிப்பீர்களாக. இவ்வாறான பொல்
லாங்காகிய வார்த்தைகளைத் தீர்க்கதரிசிகள் விஷயத்தில் சொல்
லுவதையும், நினைப்பதையும் விட்டு எங்களை எங்கள் வேதமாகிய
து ஆன்முற்றும் கண்டிப்பாய் விலக்குகின்றதே. நேய ; நேயர்
கள்! யாம் கூறியுள்ள சாட்சியங்களாலே நீவிர்கள் வேதமென்று
அநுசரித்து வருகின்ற பைபிள் புத்தகத்தினாலே கிறிஸ்துநாதர
வர்களின் விலையுயர்ந்த வம்சத்தில் பேதாபே தங்களிருப்பதேயு
மன்றி விவசாரமும் கலந்து போயிருக்கின்றதென ஏற்படுகின்ற
தென்பது, நமது, நன்னறிவிற்கு புலப்பட்டிருக்கு மாகையின்
அப்படியாக அநாகரீகமான பேதைகளால் எழுதப்பட்ட புத்தகத்தை
வேதமென்றும் அதில் எழுதப்பட்ட வம்சவரிசைகள் முற்றும் உண்
மையென்றும் இனிவாயிலெடுப்பதை விட்டுவிடுவீர்களென்று நம்பு
கின்றேம்.



## "காரணம்"

இது இயேசுநாதர் தோன்றுதற்குக் காரணம் இனைத்தென்
பதைக் கூறுகின்றது. மஹா உந்தமான இயேசுநாதரின் உற்பத்
தியைக்குறித்து, நன்றாய்க் கவனிக்கப்புகின் அந்நாயகர், உலகத்
திற்கு ஒரு அற்புத சூரியனாகும் பொருட்டாய்ப் புருஷ சம்பந்த
மின்றி உலக இயற்கைக்கு முற்றும் மாறாகக் கன்னியாகிய மரியாள்
என்கிற ஒரு பெண்கன்னிகையின் வயிற்றிலே கருப்பமாய்ப் பிறப்
பிக்கப்பட்டா ரென்பது நன்கு விளங்குகின்றது.

விஷயம் இவ்வாறாயிருக்க, சற்றும் ஆராய்வின்றிப் புருஷ சம்
பந்தமில்லாது பிறந்த காரணத்தினாலே அந்நாயகரைத் தேவகுமார
னென்று எமது கிறிஸ்துவநேயர்கள், சொல்லத் துணிந்தார்கள்
போலும். அப்படி சொல்வது முதிர்ந்த பேதமையேயன்றி அறி
வின் தன்மை என்று புத்தி சாதுரியமுள்ள ஒரு விவஹாரியும்
சொல்லமாட்டா னென்பது, நுண்ணறி வுணர்வார்க்கு மறையாது.
எமது கிறிஸ்துவ நேயர்களே! சற்று தயைகூர்ந்து கவனிப்பீர்க
ளாயின் நல்ல கதியடைவீர்கள்; இதோ, உலகத்திலே வலியோர்
முதல் எளியோர் ஈறாக எல்லாராலும் அநுசரிக்கப்படும் வழக்கப்
படி ஒரு மனுஷன் அல்லது ஏனைய பிராணி தோன்றுவதற்கு,
ஆண், பெண், எனப்படும் இருசாதிகள் இன்றியமையாதென்பது
பிரத்தியக்ஷப் பிரமாணமாயிருக்கிற காரணத்தினாலே ஒரு மனு
ஷன் ஜனனம் செய்தற்கு மனுஷர்களே காரணமன்றித் தேவ
காரணம் அன்று என ஒரு காலத்திலே சில பலரால் அஞ்ஞான
விவாதம் பரீக்ஷாரமாய்ப் பரவாநின்றது; கடைசியாய், அவ்விவ
ஹாரமோ வென்றால், அதிகபலமாய் நாளுக்குநாள் விருத்தியடைந்
தமையினாலே, அது ஒருவாறு நிவாரண மாகும்படி, குலத்தாலும்,
குணத்தாலும், ஒழுக்கத்தாலும், மரியாதையாலும், நாகரீகத்தா
லும், தேவபக்தியாலும், யாவரும் நன்குமதிக்கத்தக்க பெரிய குடும்
பத்திலேயுள்ள கன்னியாகிய மரியாளென்னும் மஹா விசுவாச
முள்ளபெண், புருஷசம்பந்தமின்றிக் கருப்பமாய் ஒரு குமாரனைப்
பெறும்படியாகத் தனது ஒப்பற்ற மகிமையினாலே ஒரு பொருளா
கிய பராபரன் செய்தான். அப்படி செய்துமென்ன? ஞானமில்
லாத பிடிவாதக்காரர்களாகிய (புருஷசம்பந்தமின்றிப் பிள்ளைப்பி
றத்தல் இல்லை என்கிற) கட்சிக்காரர்கள் தேவ அருளினாலே பிறந்

தமரியாளுடைய குமாரனாகிய மவுீற என்கிற இயேசு நாதரை விவ
சாரத்தில் பிறந்த பிள்ளையே என்று வாதாடிவா ஞயினர்கள். அன்
னுருக்கு எதிரிகளாகிய (புருஷசம்பந்தமின்றிப் பிள்ளைபிறக்கச்செய்
யவும் பராபரவல்லமை உண்டு என்கிற) ஞானவான்கள், தமது எதி
ரிகளுக்கு, ஓ அஞ்ஞானிகளே! மஹாபதிவிரதையும் தேவப்பக்தி
யும் உள்ளமேன்மை பொருந்திய மரியாள் விவசாரம் செய்வா
ளென்று நீவிர்கள் எப்படி சொல்லுவீர்கள்? அவளின் குடும்பத்
தையும் அக்கன்னிகையின் கற்பின் உண்மையும் தெரிந்தவர்களா
கிய நீவிர்கள் சொல்லுவது பிடிவாதமேயன்றி வேறில்லை என்று
மறுத்து, மரியாளின் பிள்ளை உண்மையாகவே தேவ அடையாள
மானதே யன்றி விவசாரத்தில் பிறந்ததன்று. தேவவிசுவாச மில்
லாத உங்களது வார்த்தைகளை, கிவர்த்திக்கும்படி தேவனுனவர்,
இக்குழந்தையைப் புருசசம்பந்தமின்றி, உற்பத்திச் செய்தாரென,
எவ்வளவோ சமாதானம் சொல்லியும், வோத எதிரிகள், அதற்கு
மாறுத்தாரமாக, "யானைக்கும் அடிசறுக்கும்" என்கிற பழமைக்
தையின்படியே எவ்வகைப் பட்டாரிடத்திலும் ஒருவழு கேரிடுதற்கு
இடமேயாகலின் மஹாபதிவிரதையாகிய மரியாளிடத்தும் அவ்வா
றான ஒருதவறு கேரிடற்கு இடமேயாம் என, தமது பிடிவாதத்
தைச் சாதிக்கும்படியாய், மரியாள், விவசாரத்திலேயே இயேசு
வைப்பெற்றுள், என்று வாய்க்கூசாது சொல்லுவாரானுயினர். பிறகு
இயேசுநாதர் பிராயம் எய்தியபோது அவர் மகிமையுள்ள தீர்க்
கதரிசியாய் மஹா அருமையாகிய காரியங்களை யெல்லாம் செய்
துமுடிக்கின்ற சாட்சியைக் கண்டபோது புருஷசம்பந்த மின்றித்
தெய்வ வல்லமையினுலே பிள்ளை பிறக்கக்கூடுமென்கிற கட்சிக்கா
ரர்கள் ஒருங்கே திரண்டு, இதோ! இயேசு வானவர் விவசாரத்
தில் பிறந்தவரா யிருந்தால் அவர் எப்படி தீர்க்கதரிசனம் சொல்
லுவார்? அவர் உண்மையாகத் தீர்க்கதரிசியா யிருக்கிறார். ஆகை
யால் அவர் விவசாரத்தில் பிறந்தவரன்று, என தமது கட்சியைப்
பலப்படுத்துவா ஞயினர்; இதுவே மஹா உன்னதமான கிறிஸ்து
நாதரவர்களின் வரலாற்று முறைமை என்பது பிரத்தியக்ஷமாகின்
றது. இதனுலே இயேசுநாதர் உலகத்திலே புருசசம்பந்தமின்றிப்
பிறத்தல் இல்லை எனும் விவஹார நிவாரணமாகும் அடையாள
மாகவும், தீர்க்கதரிசியாகவும், தோன்றினுரென்பது சத்தியமே.
விஷயம் இவ்வாருக புருஷனின்றிப் பிள்ளைபெறுதல் ஒருவாற்று
லும் கூடாதெனும் தமது விவஹாரத்தைக் கைவிடாது ஒரேபிடி



யாய்க் கொண்டு நிற்கும் ஏழைமதி யுள்ளார் மரியாளை விவசா
ரம் செய்தாளென்றும் மனம் துணிந்து சொல்லி விட்டாலும்
விடலாம் என்று நினைத்தும், அந்தபிள்ளையின் மகிமையினுலே அப்
படி விவசாரத்தில் பிறந்தபிள்ளை என்று சொல்லக்கூடாதவர்களா
யிருந்தபோதிலும் தமது விவஹாரத்தை விடப்படாது என்கிறசா
தனையின் பொருட்டாய்; மரியாள் தேவசம்பந்தத்தினுலே கருப்
பமாய் இயேசுவைப்பெற்றிருக்கவேண்டும். அப்படியாயினும் அவர்,
தேவகுமாரன் என்று சொல்லுவோம் என்றும் தமது கட்சியைச்
சற்றும் நழுவவிடாது தமது பிடிவாதமே பொருளென்று சாதிப்
பாருய் அவரைத் தேவகுமாரன் என்று முடிவாய்ச்சொல்லி புரு
ஷசம்பந்த மின்றிப் பிள்ளைபிறக்குதல் ஒருபோதும் இல்லை என்று
தமது கட்சியை சாதிப்பாருயினுர். அந்தோ! மரியாள் விவசா
ரம் செய்தா ளென்று சொல்ல நாவெழாத மதியுள்ளார் பராப
ரனை விவசாரம் செய்தாரென்று சொல்ல நாக்கூசா தவராய்ப்பி
தற்றுவாருயினரே. ஆச்சரியமே, ஆ! பேதைகாள் யோசேபு என்
னும் ஒருவனுக்கு பெண்ணுக நியமிக்கப்பட்டிருந்த மரியாளைக் கட
வுள் புணர்ந்தா ரென்றால்; அக்கடவுள் விவசாரம் செய்தாரென்
றன்றோ முடியும்? ஆ! பேதைகாள்! உங்கள் கடவுளை நமக்கடுத்த.
சிநேகிதர்களாகிய மற்றொரு கூட்டத்தாரின் கடவுள் மார்களைப்
போல விவசார புருஷர்களாகவா ஆக்குகிறீர்கள்? மரியாளுடைய
வயிற்றில் கருப்பமாகி பத்துமாச மிருந்து வெளிவந்த இயேசுவைக்
கடவுளின் குமாரன் என்று சொல்லுவீர்களாயின், தாய் தந்தை
யில்லாது வெளிவந்த ஆதாமை என்னென்று சொல்லுவீர்கள்? கட
வுள் என்பீர்களா? அவரே எல்லா மனுஷர்களுக்கும் தந்தை என்
றும், அவர் ஒருமனுஷராலும் பெறப்பட வில்லை என்றும், உங்
கள்வேதமே சாட்சிக்கூறுகின்றதே, பேதைகாள்! கடவுளானவர்
மனுஷரைத் தாய் தந்தை யில்லாமலும், தாயில்லாமலும் தந்தை
யில்லாமலும் படைத்திருக்கின்றார் என்பதை ஆதாம் என்பவரா
லும்; ஏவாள் என்பவளாலும், இயேசு என்பவராலும் முறையே
காண்பீர்களாக. ஓ! பிடிவாத கட்சிக்காரர்களே! பேதைகளே!
இயேசு தந்தையின்றி வெளிவந்த காரணம் பற்றி, அவரைத்தே
வகுமாரன் என்பீர்களேல், மேல்கூறிய ஆதாமையும், ஏவாளையும்
என்னென்று சொல்லுவீர்கள்? என்று கடாயினுல் விடை எங்ங
னம் தேடுவீர்கள்? உங்கள் பிடிவாதத்தினுலே ஒரு பெரிய கூட்
டத்தாரை வீணே கெடுத்துப் போட்டீர்கள். ஓ! எமது கிறிஸ்

துவ நேயர்காள்! கடவுளினது சக்தியைப்பற்றி உங்கள் வேதபுத்தகங்களில் காணவில்லையா? இதோ மத்தேயு 3-ம் அதிகாரம் 9-ம் வசனமோ, வென்றால்:—

"ஆப்ரகாம் எங்களுடைய பிதாவென்று சொல்ல உங்களு "டைய உள்ளத்திலே நினைத்துக்கொள்ளாதிருங்கள், ஆப்ரகா "முக்குப் பராபரன் இந்தக்கல்லுகளில் பிள்ளைகளை உண்டுபண் "ணவல்லவரா யிருக்கிறர்" என்று இயேசுநாதர் கூறினதாகக் கூறுகின்றதே. ஐயோ! பேதைகாள், ஆப்ரகாமுடைய காலம் ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னே சென்று போயிருக்க அப்படி சென்றுபோன ஆபரகாமுக்கே குறித்துக்காட்டப்பட்ட ஒரு கல்லிலிருந்து சந்ததிகளை உண்டுபண்ண பராபரனுக்கு இப்போது வல்லமை யிருக்கிற தென்று இயேசுநாதர் திட்டமாய்ச் சொல்லியிருக்கிறபடியினாலே எவரும் எளிதில் நம்பக்கூடுமாகப் பிரசன்னமாயிருக்கிற மரியாளுடைய கருப்பத்திலிருந்து புருஷ சம்பந்தமின்றி ஒரு குமாரனை உண்டுபண்ணுவது முடியாதென்று நினைப்பீர்களா? அப்படி நினைத்து அவரை நீவிர்கள் தேவகுமாரன் என்பது நியாயமா? புத்தி சாதுரியமுள்ள உங்கள் மனங்கள் அப்படிச் சொல்ல முன்வருமா? மத்தேயு 3-ம் அதிகாரத்தில் மேற்கூறிய வசனம் உங்களால் நம்பப்படுமாயின் அந்தப்படி இயேசுவை தேவகுமாரன் என்று சொல்லுவதை விட்டு விடுவீர்களோ? நாம் உண்மையாக நம்புவோம். கல்லுகளிலிருந்து பிள்ளைகளை உண்டு பண்ணினால் அப்பிள்ளைகளை என்னென்று சொல்லுவீர்கள்? கல்லுகளிலிருந்து பிள்ளைகளை உண்டுபண்ணுவதாகச் சொன்னதெல்லாம்; ஒரு உதாரணம் பற்றியே யன்றி மற்றபடி அது உண்மையன்று. கல்லுகளிலிருந்து பிள்ளை எப்படி உண்டாகும் என்பீர்களோ? நேயர்காள்! ஆதாமை மண்ணிலிருந்து உண்டுபண்ண வில்லையா? அப்படி மண்ணிலிருந்து உண்டாக்கினதாகச் சொல்லும் உங்கள் வேதவசனங்களைப் பாருங்கள்;—

"நீ பூமிக்குள் திரும்பட்டும் உன்முகத்தின் வேர்வையால் "அப்பம் புசிக்கக் கடவாய்; அதேனெனில் அதில் எடுக்கப்பட் "டாய் ஏனென்றல் நீ மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்பு "வாய் என்றார்", என்று 1-ம் மோசே 3-ம் அதிகாரம் 19-வாக்கியத்தினால் காண்பீர்கள். அப்பொழுது ஆதாம் மண்ணிலிருந்து எடுக்கப்பட்டவர் என்று பரிஷ்காரப்படும். ஆகவே கல்லுகளிலிரு



ந்து மனுஷர் எடுக்கப்படுவது பராபரனுக்கு அரிதான காரியமல்ல
வென்று சொல்லமாட்டீர்கள். ஒருவேளை கல்லுகளிலிருந்து ஆப்
ரகாமுக்குப் பிள்ளை உண்டு பண்ணை பராபரனுக்கு ஆப்ரகாமின்
காலத்திலேயே யன்றிக்கூடாது. ஆப்ரகாம் காலம் செய்த கால
த்திலிருந்து எத்தனை ஆயிரமோ சென்றபிறகு கல்லுகளிலிருந்து
வரப்படும் பிள்ளைகள் கல்பிள்ளைகள், அல்லது பராபரப் பிள்ளை
கள் என்று கூறப்படுமே யன்றி ஆப்ரகாமின் பிள்ளைகள் என்று
எங்ஙனம் கூறப்படும்? ஆகவே! ஆப்ரகாமுக்குக் கல்லுகளிலிரு
ந்து பிள்ளைகளை உண்டாக்குவோம் என்று வந்த வேதவாக்கியம்
அவ்வளவாக நம்பப்படமாட்டாது, என்று மறுப்பீர்களோ? அப்
படி மறுப்பீர்களாயின் அவ்வேதத்தை விட்டுவிடுங்கள்; அவ்வேத
வசனங்களை நம்புவோமென்றால் இயேசுவானவர் தகப்பனின்றிப்
பிறந்தகாரணம் பற்றி அவரைத் தேவகுமாரன் என்பதை விட்டுவிடு
ங்கள்; மாட்டோமென்றால், தந்தைத்தா யில்லாது பிறந்த ஆதா
மை தேவரென்று சொல்லுங்கள். அவர் மண்ணிலிருந்து உண்
டானார், அது பற்றி அவரை மண்பிள்ளை என்போமென்றால் மரி
யாளிடத்திலிருந்து வந்த இயேசுவை மரியாளின் குமாரன் என்று
கூறுங்கள். எதை ஒப்புவீர்கள்? ஆகவே நேயர்களே! இயேசுநா
தர் அடையாளமாக உலகசுபாபங்களுக்கு மாறாகத் தகப்பனின்றி
யும் பிள்ளைகள் பெறப்படும்; என்பதற்கு சான்றாகப்பிறந்த மனி
தகுமாரன் என நம்புவீர்களென்று உறுதியாக யாமும் நம்புகின்
றேம். நேயர்காள், நீவிர்கள்; கேட்பீர்களோ? இயேசுநாதர் அடை
யாளமாகப் பிறந்தாரென்பதற்கு வேதசாட்சியம் எங்கிருக்கின்ற
தென்று? அப்படிக் கேட்பீர்களாயின், நன்று வினவினீர், இதோ
பாருங்கள், "உன் பராபரனாகிய கர்த்தரிடத்தில் ஒரு அடையா
"ளத்தை உனக்குக்கேள் அதை பாதாளத்திலே யாகிலும் உயா
"உன்னதத்திலே யாகிலும் இருந்து உண்டாகக்கேள் என்று சொன்
"ஞர் 12 ஆகாசோ வென்றல்; அதை நான் கேளேன் நான் கர்த்
"தரைப் பரீட்சை பாராதிருப்பேன் என்றன் 13-அப்போது
"ஏசாயா சொன்னதாவது இப்போதும் தாவீதின் வீட்டாரே
"கேளுங்கள், மனுஷரை விதனப்படுத்துகிறது. உங்களுக்குக்கொ
"ஞ்சகாரியமாய்க் காணுகிறதென்று என், பராபரனையும் வித
"னப்படுத்துகிறீர்களோ?; 14-ஆனது கொண்டு ஆண்டவர்தா
"மாயீ உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார். இதோ
"ஒரு கன்னியா ஸ்திரீ கருப்பவதியாகி ஒரு குமாரனைப்பெறு

“வார். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார் 16-
“இந்த இளைஞனே வெளில் தீமையை வெறுக்கவும், நன்மையை
“த்தெரிந்து கொள்ளவும் அறிகிறதற்கு முன்னே நீர் அருவருக்
“கிற தேசம் அதின் இரண்டு இராசாக்களால் விடப்பட்டதாயி
“ருக்கும்” என்று ஏசாயா 7-ம் அதிகாரம் பரீஷ்காரமாய்க் கூறு
வதாகக் காணுவீர்கள். அதிலே ஆக்காசென்ற ஒருமனைவராக்
கிய முள்ளவனின் மூர்க்க குணமானது மாறி தேவ விசுவா
சம் அடையும் படியான காரணம்பற்றி அடையாள மென்கிற, அற்
புதப் பொருட்டாக ஒருகன்னி, சுபாபத்திற்கு மாறுக (அதாவது
புருஷசம்பந்தமின்றிப் பிள்ளைபெறுதல் கூடாதென்கிற உலக இயற்
கைக்கு மாறுக) புருஷனின்றிக்குமாரனைப் பெறுவாள் என்பது நன்
ருய் விளங்குகின்றதன்றோ? எமது கிறிஸ்துவநேயர்காள்! அந்த
கன்னியே மரியாள், என்றும் அந்தக்குமாரனே இயேசுநாதர் என்
றும் நீவிர்கள் நிராக்ஷேபனையாய் நம்புகின்றீர்கள்.” ஆகவே இயேசு
நாதர் சில அஞ்ஞானிகள் தேவவல்லமையை அறியாதவாயில் வந்த
தெல்லாம் வார்த்தையே என்று நினைத்த பொல்லாங்குகளை மறுக்
கும்படியான அடையாளமாகப் பிறந்தாரென்பது மறுக்கப்படாத
உண்மையாயிற்று. இதுவேயுமன்றி மேற்கூறிய ஏசாயாதீர்க்கதரிசி
யின் வேதத்தினாலே, எமது புத்தி சதுரியமுள்ள நேயர்களுக்கு
ஒரு திருஷ்டாந்தம் காண்பிக்கச் சந்தோஷிக்கிறேம். நேயர்காள்!
“ஒருகன்னி குமாரனைப்பெறுவாள்” என்றபடியினாலே, அப்படிப்
பெறப்பட்ட அந்த குமாரன் கன்னியினது குமாரன் என்று சொல்லு
வீர்களா? தேவனது குமாரன் என்பீர்களா? கன்னியினது குமார
னென்றே சொல்லுவீர்கள்.

“ஒருகன்னி தேவகுமாரனை பெறுவாள்.” என்று சொல்லப்
படாத காரணம்பற்றி அப்படி பெறப்படும் குமாரன் தேவகுமார
னென்று சொல்லமாட்டீர்கள். மேலும் அத்தீர்க்கதரிசியின் வேத
வாக்கியத்தினாலே, “தீமையை வெறுக்கவும் நன்மையைத்தெரிந்து
“கொள்ளவும் அறிகிறதற்கு முன்னே” என்று இயேசுநாதரைப்
பற்றிக் கூறினதாகத் தெரிகிறது; ஆகவே இயேசு சாதாரணமான
மனுஷத்தன்மையினராய்ச் சிலகாலம் அறிவில்லாதவராகவும், பிறகு
வயது எத்தியபோது அறிவுள்ளவராகவும் இருந்தாரென்பது பரீஷ்
காரப்படுகிறது. இதுபற்றி இயேசுதேவனது குமாரன் என்று
சொல்லும்படி தேவத்தன்மையுள்ளவராயிருந்தாரென்பது காணப்



படவில்லை. ஆனால் மனிதகுமாரன் எனும்படி மனுசத்தன்மையுள்ள
வராகவே யிருந்தாரென்பது தெளியக்கிடக்கின்றது. நேயர்காள்!
இந்த காரணங்களினாலேயும் இயேசுதேவ குமாரன் அன்றென்பது
வெளியாகின்ற தென்பதையும், ஞாபகத்தில் வையுங்கள். நிற்க;

எமது நேயர்கள் எம்மை வினவுவார்களோ?

“ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்திலேயுள்ள ஒரு மூர்க்க
“னாகிய ஆகாசென்பவன் கருத்தருடைய வல்லமைத்தச் சேவி
“க்காது வன்னெஞ்சனாயிருந்த காரணம்பற்றி அந்த மூர்க்கனின்
“மனம் திரும்புவதற்காகவேண்டி அத்தாட்சிகளைப் பராபரனிடத்
“திலே கேட்கும்படி அவன் பராபரனாலே உத்திரவிடப்படும்”
அந்த மஹாசண்டியாகிய ஆகாசென்பவன் “அப்படியாக ஒரு அத்
“தாட்சியையும் பராபரனிடத்தில் கேட்கமாட்டேன்.” என்று ஏசா
யாதீர்க்கத் தரிசியின் மனம் வெதும்பும்படியாக மறுத்துக்கூறின
படியினாலே, கருத்தர்தாமே அந்த மூடனாகிய ஆகாசினாலாகிய
பொல்லாங்குகளை ஒழிக்குமாறு அல்லது இரக்கக்காரணம்பற்றி ஒரு
அடையாளம் காண்பிப்பதாக. “இதோ ஒரு கன்னிகருப்பவதியாகி
“ஒரு குமாரனைப் பெறுவாள்.” என்று கூறினதாக ஏற்படுகின்ற
தன்றோ? அப்படியாக அந்த அடையாளம் ஆகாசின் கண்கள்
காணவும், அவனாலே கேடுற்றவர்கள் கண்கள் காணவும், ஏசாயா
வின்மனம் மகிழ்வுமாக அப்பொழுதே செய்து முடித்தல் வேண்டும்.
அப்படி செய்தாலன்றோ! அந்த மஹாபாபிகள் கருத்தருடைய
வல்லமையைக் கண்டு பயமடைந்து பொல்லாங்குகளைவிட்டு விலகு
வார்கள். அதற்கு சான்றாகவே; “இதோ ஒரு கன்னி கருப்பவதி
“யாகி ஒரு குமாரனைப் பெறுவாள்.” என்று அந்த வேதவசனத்தின்
தலையிலுள்ள “இதோ”, என்கிற சுட்டுக்குறிப்பானது ஆகாசின்
கண்ணுகளுக்கு எதிரேயுள்ள ஒரு காலத்திலேயே அந்த அடையா
ளம் உண்டாகவேண்டியதென நன்கு விளங்குகின்றது. “ஆகவே
“அந்த கன்னியும் அவள்பெற்ற அந்த குமாரனும் ஏசாயா தீர்க்
“கதரிசியின் காலத்திலே யுள்ள ஆகாசின் கண்ணுகளுக்கு
“எதிரே உண்டாயிருக்க வேண்டு மன்றோ?” அப்படி யில்லாது,
ஏசாயா தீர்க்கதரிசிக்குப்பிறகு எழுநூற்று எழுபது வருஷங்க
ளுக்குப்பின் வந்த மரியாளையும் அவள்பெற்ற இயேசு வென்னும்
குமாரனையும் பற்றியே அந்த வேதவசனம், அறிவிக்கின்ற தென்

றும் அதுபற்றி அவர் அடையாளமாகப் பிறந்தவரென்றும்சொல்லுவது நியாயமன்று என எம்மை வினவுவார்களோ? எமது நேயர்கள் எம்மை அவ்வாறாக வினவுவார்களானால் அந்த தேவவாக்கியம், மரியாளையும் இயேசுவையும் பற்றி அறிவிக்கின்றதென்பது எமது கருத்தன்று. அது எமது நேயர்களின் வேதம் வரைந்த வேதபாரகர்களின் கருத்தே அது பற்றி அவரது கேள்விக்கு நாம் உத்திரவாதியாகோம்; ஆனால் எமது நேயர்கள் வினவியவினாக்களுக்கு அவர்களின் வேதம் வரைந்த வேதபாரகரே விடையளிக்கக்கடமைப் பட்டவர்களாகுவார்கள். எமது நேயர்கள் வினவியது, நியாயமானவைகளே யன்றி மறுக்கற்பாலதன்று; எமது நேயர்காள்! உங்கள் வினாக்களை, உண்மையான வினாக்களாகயாம் வைத்துக் கொள்வோமாயின் ஏசாயா தீர்க்கதரிசியின் காலத்திலேயே ஒரு கன்னி புருஷசம்பந்தமின்றி ஒரு குமாரனைப் பெற்றிருக்கவேண்டும். அப்படியே அந்த காலத்தில் ஒரு கன்னி ஒருகுமாரனைப் புருஷசம்பந்த மின்றிப் பெற்றாளென்று, நீவிர்கள்சொல்லுகிறபடி வைத்துக்கொள்வோம் என்றால் ஏசாயாத் தீர்க்கதரிசியின் காலத்தில் புருஷசம்பந்த மின்றி பெறப்பட்ட அந்த குமாரனை என்னென்று சொல்லுவீர்கள்? அவரைத் தேவகுமாரனென்றுசொல்லுவீர்களா? அவரை தேவகுமார னென்று சொல்லமாட்டோமென்பீர்களாயின் உங்கள் இயேசுவையே போல புருஷசம்பந்தமில்லாத ஒரு கன்னியால், பெறப்பட்டவரை ஏன்தேவக்குமார னென்று சொல்லமாட்டீர்கள். அப்படி யானால் புருஷசம்பந்தமின்றிப் பெறப்பட்ட இயேசுவையும், தேவகுமாரன் என்று சொல்லமாட்டீர்கள். நிற்க; உங்கள் வேதபாரகர்களாகிய வேதகருத்தாக்கள் ஏசாயா காலத்திலே பராபரனாலே சொல்லப்பட்ட கன்னியே மரியாளென்றும் அவள் குமாரனே இயேசுவென்றும் எழுதி யிருப்பதையும் நீங்கள் மறுதலிப்பீர்களானால், அப்படி எழுதிய வேதபாரகர்களை அறிவிலிகள் என்று நீங்கள் நாகூசாமல் சொல்லி விடுங்கள் அப்படி சொல்வீர்களாயின் அவர்களால் எழுதப்பட்ட வேதத்தில் எம்நேயர்களாகிய உங்களுக்கு எப்படி நம்பிக்கை உண்டாகும்? ஆகாதன்றோ? அப்படியானால் நீவிர்கள் என்னசெய்வீர்கள். ஆகவே எமது நேயர்களான நீவிர்கள் நன்றாய்ப் பலதரமாகப் பொருமையின்றி நடுமனதினராய் ஆராய்ந்து உண்மையைக் கடைபிடித்து; நடப்பீர்களாயின் நாம் சொன்னபடியே, இயேசுநாதர் அடையாளமாகப் பிறக்கப்பட்ட ஒரு தீர்க்கதரிசி



என்று நம்புவதேயுமன்றி அவர் தேவகுமாரனன்று என்பதையும் ஞாபகத்தில் வைப்பீர்களென்று நம்புகிறேம்.

## “அவதாரம்”

இது கிறிஸ்துநாதரின் ஜனனாகமம் கூறுகின்றது. எமது கிறிஸ்துவநேயர்களே! உங்கள் வேதத்திலே இயேசுநாதரவர்களின் அவதார விவரம் கூறப்படுகின்றது. அது கருத்தரால் சொல்லப்பட்டதாகக் காணப்படவில்லை; அப்படி கருத்தரால் சொல்லப்பட்டவிவரமா யிருப்பின் பேதகப்படாது ஒன்றுபட விளங்குமன்றோ? அங்ஙன மின்மையால் நாயகரது அவதார விவரத்தை உங்கள் வேதம் எழுதியவராகிய மத்தேயு, லூக்கா எனும் புத்திசாலிகளால் மாத்திரமே எழுதப்பட்டதாகக் காணப்படுகின்றது. அவர்களுமோவெனின்; அந்தச் சரித்திரத்தை விசாரித்து எழுதினவர்களாகவும் காணப்படவில்லை. தத்தமக்கு எவ்வளவு கிடைத்ததோ அவ்வளவே எழுதிப் புத்தகம் முடிதலொன்று போதுமெனக்கருதினவர்களாக மாத்திரம் காணப்படுகின்றார்களே யன்றிக் கூடியவரையில் உண்மையைத்தேடி எழுதலாமெனும் கருத்துள்ளவர்களாக இருந்ததாய்க் காணப்படவில்லை. இவ்வாறாக அவசரப்பட்டு நினைத்தார் நினைத்தபடி எழுதிமுடித்த ஒரு அசாத்தியமான புத்தகத்தையன்றோ வேதமென்று சொல்லுகின்றீர்கள்? ஐயோ! இதென்ன பேதமை.

எமது நேயர்காள்! நாயகரது அவதார விஷயத்தில் என்ன பேதகங்கள் இருக்கின்றன வென்பீர்களாயின்! தயை செய்து சற்று கவனியுங்கள். இதோ, மத்தேயு 1-ம் அதிகாரம் “18-இந்த இயேசு
“கிறிஸ்துவினுடைய உற்பத்தியின் விவரமாவது, அவருடையதாயா
“கிய மரியாள் யோசேபுக்கு (மனைவியாக) நியமிக்கப்பட்ட பின்பு
“அவர்கள் கூடி வாழுகிறதற்கு முன்னமே அவள் பரிசுத்த ஆவி
“யினாலே கருப்பவதியானாள் 19-அவளுடைய புருஷனாகிய யோ
“சேபு நீதிமானாகையால் அவளை அவதூறு பண்ண மனதில்லா
“மல் இரகசியமாய் அவளை ஒழித்து விடும்படியாய்ச் சிந்தித்
“தான். 20-அவன் அப்படி நினைத்திருக்கையில், பராபரனு
“டைய தூதன் சொப்பனத்திலே அவனுக்குக் காணப்பட்டு தா
“வீதின் சந்ததியாகிய யோசேபே நீ உன்மனைவியாகிய மரியா

"ளைச் சேர்த்துக்கொள், ஐயப்படவேண்டாம். என்னத்தினுல் என்
"றல் அவளிடத்தில் உண்டாயிருக்கிறது பரிசுத்த ஆவியினுல்
"உண்டானது. 21 - அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவர்
"தம்முடைய சனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்
"பார். ஆகையால் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக."
என்று கூறுவதாகக் காணுவீர்கள். இதனுலே நீவிர்கள் ஏசாயா
தீர்க்கதரிசியின் காலத்திலே "இதோ ஒரு கன்னி கருப்பந்தரித்து
"ஒரு குமாரனைப் பெறுவாள்" என்று பராபரன் கூறிய கன்னி
யானவள் மரியாளா? அல்லது வேறு கன்னியா என்பதைக்கு
றித்து உங்கள் வேதத்தையே கடாவுங்கள்? ஆனுல் அந்த ஏசா
யாதீர்க்கதரிசி காலத்திலே சொல்லப்பட்ட கன்னியானவளால்
பெறப்பட்ட பிள்ளைக்கு இம்மானுவேல் என்று நாமமிடுவாள் எனக்
கூறப்படுகின்றது. இப்போது யோசேபின் கனவிலே தேவதூத
னுல் சொல்லப்பட்ட பிள்ளைக்கு இயேசு வென்று பெயரிடுவா
யாக என்று சொல்லப்படுகின்றது. இந்த பேதங்களிருலேயும்,
அந்தக் கன்னிவேறு இந்த மரியாளென்கிற கன்னி வேறு எனத்
தோன்றுகின்றது என்பீர்களோ? அது எப்படியாவது உங்கள்
வேதபாரகர்களைக் கேட்டுத்தெளிந்து ஒழிக எனவிடுவோம்; நிற்க.

எமது அன்பர்களே, நன்றாய்க் கவனியுங்கள், மரியாள் கருப்
பவதியா யிருக்கிறுள், என்பதை அவள் புருஷன் யோசேபுகண்டு,
நாம் இந்த கன்னியுடன் ஒருபோதும் தேகசம்பந்தம் செய்தேனி
லேயே; அப்படியிருக்க இந்தக் கன்னியானவள் எப்படி கருப்பவ
தியாக இருப்பாள்? என்று தன்னில் தானே ஆசங்கித்தாலும்
அவன் நீதிமானுகையால் தன்பெண்சாதிக்கு சேர்ந்த இப்படிப்பட்ட
மான குறைவை வெளியிடாது, அடக்கிக்கொண்டு அவளை இரக
சியமாய் ஒழித்து விடக்கடவான் என்பதில் யாதுதடை? மரியா
ளாவது, யோசேபாவது மரியாளிடத்துத் தேவ அருளினுலே, புரு
ஷசம்பந்தமின்றி ஒரு குமாரன் ஜெனனம் செய்வான் என்றமுன்
அறிக்கை செய்யப்பட்டிருந்தால், அந்த யோசேபு மரியாளை ஒழித்
துவிட ஒருபோதும் சிந்திக்கானல்லவா? மேலும் அவன் நீதிமா
ஞயிருந்தபடியினுலே மரியாளை யாதொரு அவமானும் செய்யமன
தில்லாதவனு யிருக்கின்றுன், என்பது வேதத்தினுலேயே தெரி
கின்றதன்றே? அப்படி யோசேபு நீதிமானுயிராவிட்டால், மரி
யாளைத் தெருச்சிறிக்க இழுத்து விடுவான் என்பதின், சந்தேக



மில்லை என்பதும் உம் வேதத்தினுலேயே தெரிகிறது. ஆகையினுலே
தான், எம் அன்பர்களே யோசேபின் கனவிலே, தேவதூதர்கள்
போய் யோசேபே, நீநினைத்தபடி மரியாள் தவறுதல் செய்தவ
ளல்ல. ஆனுல் பரிசுத்த ஆவியினுலேயே அவள் கருப்பந்தரித்தி
ருக்கிறுள். நீ அவளை ஒன்றும் செய்யவேண்டாம் என்பனவாக அறி
வித்தார். இப்படி யோசேபு அறிவிக்கப்பட்டபின் சந்தோச
மாக அவளை ஆதரித்து வருவதில் என்ன பங்கம் வரும்? ஒன்
றும் வராதென்பது வெளி, இதனுலே எமது கிறிஸ்தவ நேயர்
கள் அவள் கருப்பவதியாவதற்கு முன், அவள் கருப்பம் தரிப்பாள்
என்று, அவளாவது, அவள் புருஷனுவது அறிவிக்கப் பட்டவர்
களா யிருப்பதில்லை என்பது பரீஷ்காரப்படுமன்றே? அப்படி அறி
விக்கப்பட்டிருந்தால், யோசேபு அவளை ஒழித்துவிட இரகசியத்
தில் சிந்திக்க வேண்டுவதில்லை என்பது நன்று புலப்படும். யோ
சேபுக்கு மரியாளை கருப்பவதியாவாள் என்ற விஷயம் அறிவிக்கா
விட்டாலும் மரியாள் அறிவிக்கப்பட்டிருந்தால் அப்படி தான் அறி
ந்தவிஷயத்தை மரியாள் புருஷனுக்கு அறிவித்திருப்பாள், அப்ப
டியு மிருந்ததாக மத்தேயு வேதத்தினுலே காணப்படவில்லை என்
பது எமது நண்பர்கள் அறிவார்கள். இப்படியாக மத்தேயுவேத
விஷயம் இருக்க; லூக்கா வேதமோ வெனில் இதற்கு முற்றும்
முரணுகக் கூறுகின்றதை எமது நண்பர்கள் பார்த்தால் எந்தவே
தத்தை நம்பி, எதை நம்பமாட்டார்களோ நாமறியோம்; இதோபா
ருங்கள்; லூக்கா 1-ம் அதிகாரம் "26 ஆறும் மாதத்திலே காபிரி
"யேல் என்னும் தூதன் கலிலேயா நாட்டிலுள்ள நாசரேத்தென்
"னும் பட்டணத்திலே, 27 - தாவீதின் குடும்பத்தானுகியயோசேப்
"பென்னும் நாமமுள்ள புருஷனுக்கு நியமிக்கப்பட்டிருந்த கன்னி
"யாகிய மரியாள் என்பவள் இடத்திற்குப் பராபரனு லனுப்பப்
"பட்டு 28 - அவள் இருக்கிற வீட்டுக்குள் பிரவேசித்துக் கிருபை
"பெற்றவளே நீவாழ்க - பராபரன் உன்னுடனே இருக்கிறர்.
"பெண்களுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றன் 29 -
"அவள் அவனைக்கண்டு அவனுடைய வார்த்தையைக்கேட்டுக் கல
"ங்கி இந்த வாழ்த்துதல் எப்படிப்பட்டதோ வென்று சிந்தித்தாள்,
"30 - தூதன் அவளுடனே சொன்னது, மரியாளே நீ தேவனி
"டத்தில் கிருபைபெற்ற படியினுலே நீ பயப்படவேண்டாம். 31 -
"நீ கருப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய், அவருக்கு இயே
"சுவென்று பெயரிடுவாயாக. 32 - அவர் பெரியவராய் உன்ன

" தமானவருடைய குமாரன் எனப்படுவார். அல்லாமலும் தேவ
" னாகிய பராபரன் அவருக்கு அவருடைய பிதாவாகிய தாவீதின்
" இராசா சனத்தைக் கொடுப்பார் 33 - அவர் யாக்கோபினுடைய
" குடும்பத்திற்கு என்றென்றைக்கும் இராசரா யிருப்பார். அவரு
" டைய ஆளுகைக்கு முடிவுவராது என்றான். 34 - அதற்கு மரியாள்
" தூதனை நோக்கி இது எப்படி யாகும்? ஒரு புருஷனையு மறி
" யேனே என்றாள். 35 - தூதன் அவளுக்கு மாறுத்தாரமாகச்
" சொன்னது. பரிசுத்த ஆவி உன்மேல்வரும். உன்னதமானவரு
" டைய பலம் உன்மேல் நிழலிடும். ஆகையால் உன்னிடத்தில்
" பிறக்கும் பரிசுத்தமானது, தேவனுடைய குமாரன் எனப்படும்.
" 36 - அல்லாமலும் பராபரனால் கூடாத காரியம் ஒன்று மில்
" லாதபடியினாலே 37 - உனக்கு இனமாயிருக்கிற எலிசபேத்தும்
" தனது முதுமையான வயதிலே ஒரு புத்திரனைக் கருப்பந்தரித்
" தாள். மலடி எனப்பட்ட அவளுக்கு இது ஆறம் மாதமே என்
" றான். 38 - அதற்கு மரியாள், இதோ நான் ஆண்டவருக்கு அடி
" மையா யிருக்கிறேன். உம்முடைய வார்த்தையின்படி எனக்கு
" ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளைவிட்
" டுப்போனான். 39 - அந்த நாள்களில் மரியாள் எழுந்து மலை
" தேசத்திலே யூதாவினுடைய பட்டணத்திற்குத் தீவிரமாய்ப்
" போய் 40 - சகரியாவின் வீட்டில் பிரவேசித்து எலிசபேத்தை
" வாழ்த்துதல் செய்தாள் 41 - எலிசபேத்து மரியாளுடைய வாழ்
" த்து தலைக் கேட்டபோது அவளுடைய வயிற்றிலிருந்த பிள்ளை
" துள்ளிற்று. அல்லாமலும் எலிசபேத்து பரிசுத்த ஆவியினாலே
" நிரப்பப்பட்டு 42 - மிகுந்த சத்தத்துடனே சொன்னதாவது,
" பெண்களுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், உன்கருப்பத்தின்
" கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. 43 - என் ஆண்டவருடையதா
" யார் என்னிடத்திற்கு வருகிறது. எனக்கு எதுனாலேகிடைத்தது?
" 44 - நீ வாழ்த்துதல் சொல்லிய சத்தம் என்காதுகளில் விழுந்த
" உடனே என்வயிற்றில் பிள்ளைகளிப் பாய்த்துள்ளிற்று. 45 -
" விசுவாசித்தவளுக்கு பராபரனாலே சொல்லப்பட்டவைகள் நிறை
" வேறுவதால் அவள் பாக்கிய முள்ளவளே என்றாள். 46 - அப்
" பொழுது மரியாள் சொன்னதாவது என் ஆத்துமா பராபர
" னைப் புகழ்கின்றது. 47 - என் ஆவி என் இரட்சகராகிய தேவ
" னில் களிகூறுகின்றது. 48 - என்னத்தினாலென்ன அவர் தம்முடைய
" அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார். வல்லமை யுடை



" யவர் எனக்குப் பெரிய காரியங்களைச் செய்தபடியினாலே 49 -
" இது முதல்வம்சத்தா ரெல்லாரும் என்னைப் பாக்கியவதி என்பார்
" கள். 54 - அவர் நம்முடைய பிதாக்களோடே சொன்னபடியே அப
" ரகாமுக்கும் அவனுடைய சந்ததிகளுக்கும், என்றென்றைக்கும் இர
" க்கம் செய்ய நினைத்து 55 - தம்முடைய தாசராகிய இஸ்ரவே
" லரை ஆதரித்தார் என்றாள். 56 - பின்பு மரியாள் ஏறக்குறைய
" மூன்று மாதம் அவளுடனே இருந்து தன்வீட்டுக்குத் திரும்பினாள்.
" 57 - எலிசபேத்துக்குப் பேறுகாலம் உண்டானபோழுது அவள்
" ஒரு குமாரனைப் பெற்றாள், 80 - பின்பு அந்தப்பிள்ளை வளர்ந்து
" ஆவியாலே பலம் கொண்டு இஸ்ரவேலருக்குத் தன்னைக்காண்
" பிக்கும் நாள்வரைக்கும் வனாந்தரங்களில் இருந்தான்" என்றும்.

லூக்கா 2 - ம் அதிகாரம் "அந்நாட்களில் குடிகள் எல்லா
" ருக்கும் உண்டான பேர் முதலானவைகளையும் எழுதவேண்டு
" மென்று அகுஸ்து இராயனுடைய கட்டளை வந்தது, 3 - அந்
" தப்படி எல்லாருக்கும் எழுதப்படும் படிக்கு, தங்கள் தங்கள்
" ஊர்களுக்கு போனார்கள், 4 - அப்பொழுது யோசேப்பும் தாவீ
" தின் குடும்பத்தானுமாய், வம்சத்தானுமாயும், இருந்தபடியினாலே
" தனக்கு நியமிக்கப்பட்ட கருப்பவதியாகிய மனைவி மரியாளுட
" னேகூட எழுதப்படும் படிக்குக் கலிலேயா நாட்டிலுள்ள நாச
" ரேத் தூரைவிட்டு 5 - யூதேயா நாட்டிலுள்ள பெத்தலேகேம்
" எனப்பட்ட தாவீதின் ஊருக்குப்போனான். 6 - அவ்விடத்தில்
" அவர்கள் இருக்குங்காலத்தில் அவள் பிள்ளை பெறுதற்கு காலம்
" சம்பவித்து 7 - அப்பொழுது அவள் தன் முதற்பேறான குமா
" ரனைப்பெற்று அவரைப் புடவைகளில் சுற்றிச் சத்திரத்திலே
" வேறு இடம் இல்லாதபடியினாலே அவரைப் பசுத்தொட்டியிலே
" வைத்தாள்." என்றும் நன்றாய் விளக்கக் கூறுகின்றன.

ஆகவே எமது கிறிஸ்தவ நேயர்காள்! மரியாள் புருஷசம்பந்தமின்றி கருப்பவதி யாவாள் என்றும், அப்படி கர்ப்பந்தரிக்கும் குழந்தை பரிசுத்த ஆவியினாலே உண்டாக்கப்பட்டதென்றும் கன்றாய் மரியாளும் அவள் புருஷன் யோசேப்பும் அறிந்த விஷயமென்பதேயு மன்றி எலிசபேத்து என்பவள் மரியாளைக் கண்டவுடனே பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு, மரியாள் விஷயமாய் மிகுந்தசத்தத்தினால் சொன்ன வசனங்களினாலே உலக பிரசித்தமாக எல்லாரும் மரியாள் பரிசுத்த ஆவியினாலே ஒரு குமாரனைப்பெ

றுவா ளென்று அறிந்த விஷயமென்றும் தெளிவாய்ப் புலப்படு
கின்றதன்றோ? அப்படியாக லூக்காவேதம் மத்தேயு வேதத்துடன்
இயேசுநாதரவர்கள், பிறக்கும் விஷயத்தில் முற்றிலும் மாறுபடு
கின்றதென்பது வெளியாய்க் கிடக்கின்றதென நன்கு உணர்
வீர்கள். ஆதலின் நீவிர்கள் மத்தேயு வேதத்தை இதுவிஷயத்தில்
நம்புவீர்களா? லூக்காவை நம்புவீர்களா? நாம் மேல் கூறிய இரண்
டுவேத வாக்கியங்களையும் எழுதிக் காண்பித்தோமே. அவைகளில்
எதாவது தேவவசனமா? லூக்கா, மத்தேயு இவர்களின் வசனங்கள்
தானே? தயைகூர்ந்து கவனியுங்கள், இவ்வாறான மாறுபாடுள்ள
சரித்திரத்தை வேதமெனலாமா? இதுகிடக்க லூக்கா வேதங்கூறுகிற
படி; காபிரியேல் என்னும் தேவதூதன் மரியாளிடத்தில் வந்து
"மரியாளே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றபடியினாலே நீ பயப்
"படவேண்டாம். நீ கருப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்"
எனக் காணப்படுகின்றதே யன்றி, "நீ ஒரு குமாரனைக் கருப்பமா
"யிருக்கின்றாய்," என்று சொன்னதாகக் காணப்படவில்லை. இப்
படிப்பட்ட சந்தர்ப்பத்தில் மரியாள் காபிரியேல் என்னும் தூத
னுக்கு மாறுத்தரமாக; "இது எப்படியாகும் ஒரு புருஷனையு
"மறியேனே" என்று சொல்லுதல் முறையாகுமா? "நீ கருப்பந்
"தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்," என்று உறுதிசொல்லப்
படாமல், அவள் ஒரு புருஷ சம்பந்தமின்றிக் கருப்பந்தரித்துப்
பிள்ளையைப் பெறுவாள் என்று சொன்னதாக அருத்தம் செய்வா
ளா? செய்யாளென்றால் தேவதூதனுக்கு மரியாள் சொன்னமாறுத்
தாரம் விபரீதமன்றோ? ஒருவேளை எமது நேயர்கள், மரியாளானை
வள் விவகாரம் அறியாத ஒரு சிறுமியாகலின் அவ்வளவாகக் கவ
னித்துப் பதில் கொடுக்கவில்லை என்பார்களோ? அதுபொருந்தாது
காபிரியேல் எனும் தூதன் விளங்காதவிதமாய் மரியாளோடு ஒன்
றும் பேசவில்லை. மேலும் விவகாரம் அறியாத ஒருபேதை சிறுமி
யிடத்திற்கு, மகா உன்னதமானவரால், விசேச சம்பவங்களை காபிரி
யேலெனும் ஒரு தேவதூதன் கொண்டுவரல் முறையாகுமா? உன்
னதமான கருத்தரிடத்திலிருந்து சமாசாரம்பெறும்பதவி, யாருக்
குடையதென்பது அறியாத பேதைகளென்று எமது நேயர்கள்
சொல்லப்பட பொருந்துவீர்களா? ஓ. ஓ!! மரியாளோவெனின்;
மகா மகிமையுள்ள காபிரியேலெனும் தூதனது மதித்தற்கரிய வச
னங்களைக்கேட்டு, எவ்வளவு மகிழ்வடைய வேண்டுமோ அவ்வளவு
மகிழ்ந்து தூதனது மொழிகளுக்குத் தக்க விடைகளும் கொடுத்



திருக்கிறதாக நீங்கள் காணவில்லையா? "இதோ நான் ஆண்டவ
"ருக்கு அடிமையாயிருக்கிறேன், உம்முடைய வார்த்தையின்படி
"ஆகக்கடவது" என்று மரியாள் கூறினது, பேதத்தன்மையா?
விசேசத்தன்மையா? நன்று கவனியுங்கள். அல்லாமலும் எலிச
பேத்தினுடைய வாழ்த்துதலுக்கு மறுமொழியாக "அவர் நம்மு
"டைய பிதாக்களோடே சொன்னபடியே ஆபிரகாமுக்கும் அவனு
"டைய சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கம் செய்ய நினைத்
"துத் தம்முடைய தாசராகிய இஸ்ரவேலரை ஆதரித்தார்," என்று
மரியாள் கூறினதாக வருகின்றதே. அப்படிச் சொன்ன மறு
மொழியானது பேதத்தன்மையினதா? மரியாள் பராபரனுடைய
அருளை நிரம்பப்பெற்றிருந்தபடியினாலே; காபிரியேலெனும் தூத
னுடைய வார்த்தையில் புதைந்துகிடந்த அருத்தம் இன்னதெனத்
தெரிந்து புருசனின்றி எப்படி பிள்ளைபிறக்கும்? என்ற வினாவை
வினாவினாள் என்று எமது நேயர் ஒருக்கால் எமக்கு விடைகூறுவார்
களோ? அப்படி யாயின் அது எமக்கும் உடன்பாடே என்பேம்.
ஆனால், அப்படியாக பராபரனுடைய கிருபையை நிரம்பப்பெற்றவ
ளென்பது, தேவதூதனை காபிரியேலாலும் சொல்லப்பட்ட விச
யமே. அப்படி கிருபை நிறைந்த அந்த மகிமையுள்ள மரியாள்,
"நீ ஒரு குமாரனைப் புருஷசம்பந்தமின்றிப் பெறுவாய்" என்ற
கருத்துள்ளதாக "நீ கருப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்."
என்ற தேவதூதனது வார்த்தையைக் கேட்டாளாயின் அது ஆண்
டவரால் முடியாத காரியமல்லவென்று சொல்லவேண்டுமேயன்றி
"நான் ஒரு புருஷனையும் அறிந்ததில்லையே, அது எப்படியாகும்"
என்ற வினாவொருந்துமா? இதனாலே அந்த மரியாள் தேவதூதனது
கருத்தை யறிந்ததாகக் காணப்படாதன்றோ? மரியாளுடைய மறு
மொழியினாலே காபிரியேல், ஒரு குமாரனைக் கருப்பமாயிருக்கிறாள்
என்று சொன்னதாகத்தான் நன்று புலப்படுகின்றது. அப்படி
இல்லாதவரையில் மரியாளுடைய மறுமொழி எவ்விதத்தால் பார்த்
தாலும், விபரீதமே என்பதில் சந்தேகமே யில்லை; வேதங்களில்
அருத்தமில்லாத விபரீத வார்த்தைகள் காணப்படுவது ஆச்சரிய
மன்றோ? வேதங்களோவெனின் புத்திசாதுரியமுள்ள ஞானவான்
களாலே, மயிர் சிலிர்த்து உடல் பூரிக்கும்படி ஆழிய கருத்துக்
களுள்ள அரிய மொழிகள் நிரம்பினதாக இருத்தல் வேண்டுமென்
பது யாரால்தான் மறுக்கற்பாலது? எமது கிறிஸ்தவநேயர்கள்
வேதமென்று நம்புகிற சரித்திர புத்தகமானது மேல்கூறியவா

றுள்ள எத்தனையோ, அருத்த மில்லாத விபரீதவார்த்தைகள் நிரம்ப தம்மில் அமைத்துக்கொண் டிருக்கின்றதென்பதை எல்லாம் விவரிக்க இச்சிறிய புத்தகம் இடந்தராதாகலின் விடுகின்றோம். இதுவேயுமன்றி மேற்கூறிய லூக்கா வேதத்தினால் மரியாளும், அவள் புருசன் யோசேபும், மரியாள் புருசசம்பந்தமின்றி இயேசு எனும் குமாரனைப் பெறுவாள் என்று தேவதூதனாலே அறிந்தவர்களாயிருப்பது மாத்திரமன்று எலிசபேத்து பரிசுத்த ஆவியினாலே நிரம்பிச் சொன்னதினாலும் மற்ற எல்லாரும், அறிந்த விசயமென்பது எமது கிறிஸ்தவநேயர்கள் நன்கு அறிந்தவர்களாயிருக்கின்றார்களன்றோ? விசயம் இப்படி இருக்க; மரியாள் தன்புருசன் யோசேபோடே தங்களுக்குச் சொந்த ஊராகிய பெத்தலேகேமிலே இருக்கும்போது மரியாள் இயேசுவைப்பெற்று ஒருவருக்கும் தெரியாமல் பிடவையிலே சுருட்டிப் பசுத்தொட்டியிலே போட்டுவிட்டதாக வேதம் அலறுகின்றதே? ஐயோ, தேவ அருளாலே, நிறைந்த மரியாள் ஒரு குமாரனைப் புருசசம்பந்தமின்றிப் பெறுவாள் என்று நன்றாய் அறிந்தபடியினாலே, தான் பெண்களுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளென்றும் தான் பெறப்போகிற குழந்தை உன்னதமானவருடைய குமாரன் எனப்படுமென்றும், பிறவுமாகிய கியானங்களும் நிரப்பப்பட்டிருந்தமரியாள்; ஏன் பசுத்தொட்டியில் போட்டாளோ? இதனாலே ஒரு குமாரனைப் புருசசம்பந்தமின்றிப் பெறுவாள் என்பனவாதிய மேல்கூறிய விசயங்கள் ஒன்றும் அவள் அறியாதவளாக இருந்த காரணம் பற்றித் தனக்கு நேர்ந்த மானகேடான கருப்பந்தரிக்கவும், பிள்ளைபெறவும் நேர்ந்ததை நினைத்து அந்தப் பிள்ளையை மறைத்துப்போட்டால், தன்னைப் பிடித்த விவசாரி என்னும் அவமானம் நீங்கிவிடுமென்கிற கருத்தினாலே அப்படிச் செய்ததாக நன்றாய்ப் புலப்படுகின்றது, மேலும் மரியாளுடைய இந்த நடவடிக்கையானது, மத்தேயு வேதத்திற்கு ஒருவாறு ஒத்துக்கிடக்கின்றது; எமது கிறிஸ்தவ நேயர்கள், ஒருவேளை மரியாளின் புருசன் யோசேப்பு மரியாளுக்கு தேவதூதனாலே சொல்லப்பட்டவிசயம் அறிவிக்கப்படாதிருந்ததினாலே அவனுக்கு தெரியாமல் பிள்ளையை ஒழித்துவிட மரியாள் நினைத்து அப்படி செய்திருப்பாள் என்று சொல்வீர்களோ? அப்படியானால் "யோசேப்பு தனக்கு நியமிக்கப்பட்ட "கருப்பவதியாகிய மரியாளோடே கூடபெத்தலகேம் எனப்பட்ட தாவீதின் ஊருக்குப்போனான்" என்று லூக்காவேதம் கூறியதைக் காணவில்லை என்று அவர்கள் நினைக்கப்படுவார்கள். அப்படிநினைக்கப்படமாட்டோ மென்பார்களாயின், அப்படிப்பட்ட வினவை, அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும்- அல்லது எமது நேயர்கள் மரியாளும் அவள் புருஷன் யோசேப்பும் மேற்கூறிய கருப்பவிஷயமாக எல்லாம் அறிந்தவர்களே. ஆயினும் உலக பிரசித்தமாய்த்தேவனாலே எல்லாரும் அறியும்படி இன்னொருதரம் அந்தக்குமாரனைக் குறித்து அறிவிக்க வேணுமென்கிற கருத்தினாலே அப்படி செய்தார்கள் என்பார்களோ? அப்படி நினைத்தார்களென்று வேதத்தில் கூறப்படவில்லை. மரியாள் தேவஅருள் நிறைந்தவளானதினாலே, அவள் தனது தேவனைப் பரீட்சைப்பாராள். அப்படிபார்ப்பாளேயானால், அவள் தன்னுடைய தேவனை நன்கு மதிக்கவில்லை என்னும் குற்றம், அவளைச்சேர்ந்து அவள் பாபியாவாள்; "உன்னுடைய தேவனைப் பரீட்சைப் பாராயாக," என்ற தேவகட்டளையை மீறினவளாக முடிவாள், ஆகையால் எமது நேயர்களின் விடையானது, பொருந்தாதென்று அவர்தாமே, நன்கு உணர்வார்களென நம்புகின்றோம். எமது நேயர்கள் இவ்விடத்திலும் முன்னே சொன்னதைப்போல மரியாள் எப்படியா யிருந்தாலும் சிறுவயதாயுள்ள ஒரு பேதையாகலின் இங்ஙனம் செய்வாளாயினள். ஆகையால் இங்ஙனமெல்லாம் கோட்டமிடுதல் கூடாதகாரியம் என்பார்களோ? நாம் அதைப் பொருந்தமாட்டேம் முன்னைச்சொன்னதைப்போல இவ்விடத்தும் சொல்லுவேம். பேதைகள் பக்தி குறைவினாலே தேவதூசணம் செய்து வீணாப் போவர், அவ்வாறான அவிசுவாசிகள் ஒருபோதும் தேவ அன்பிற்குத் தகுதியாகார்கள். கிருபை பெற்றவளே நீ வாழ்க பராபரன் உன்னுடன் இருக்கிறார் பெண்களுக்குள் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள், நீ தேவனிடத்தில் கிருபை பெற்றபடியினாலே நீ பயப்படவேண்டாம். நீ கருப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய் என்பனவாக, காபிரியேல் எனும் தூதனாலே நன்மாராயம் சொல்லப்பட்ட மரியாள் பேதையென்றும், அறியாதவளென்றும் சொல்லுவது புத்தியீனப்படு மென்பதில் யாதுதடை? மேலும் காபிரியேல் எனும் தூதனால் மரியாளுக்குச் சொல்லப்பட்டதென்று எழுதப்பட்டிருக்கிறது மதிகேடு, நான் காபிரியேல் என்று அவன் மரியாளுக்குச் சொன்னதாக வேதத்தில் காணப்படவில்லை. அப்படியிருக்க மரியாள் அந்த தேவதூதனைக் காபிரியேல் என்று எப்படி அறிவாள்? அன்றியும் லூக்கா வேதம் "2 - ம் அதிகாரம்"

"8. அன்றியும் அந்திசையிலே மேய்ப்பர் வெளியிலே தங்கி
"இராத்திரியிலே தங்கள் ஆட்டுக்கூட்டத்தைக் காத்துக்கொண்

"டிருந்தார்கள். 9-அப்பொழுது பராபரனுடைய தூதன் அவர்களி
"டத்தில்வந்து நிற்க பராபரனுடைய மகிமை அவர்களைச்சுற்றிப்பி
"ரகாசித்தது. அவர்கள் மிகவும் பயந்தார்கள், 10 - உடனே தேவ
"தூதன் அவர்களை நோக்கி பயப்படாதிருங்கள். எல்லா சனங்க
"ளுக்கும் உண்டாகும் மிகுந்த சந்தோஷத்தை உங்களுக்குச் சுவி
"சேஷமாக அறிவிக்கிறேன். 11 - என்னவென்றால், இன்று
"கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரக்ஷகர் தாவீதின் ஊரில் உங்
"களுக்காகப் பிறந்தார். 12 - பிள்ளையைப் பிடவைகளிலேசுற்
"றிப் பசுத்தொட்டியிலே வைத்திருக்கக் காண்பீர்கள். அதுவே
"உங்களுக்கு அடையாளம் என்றான். 15 - பின்பு தேவதூதர்கள்
"அவர்களைவிட்டுப் பரமண்டலத்திற்குப் போனபோது, மேய்ப்
"பர் ஒருவரை ஒருவர் நோக்கி நாம் பெத்லகேம் ஊருக்குப்போய்,
"கர்த்தரால் நமக்கு அறிவிக்கப்பட்டு நடந்த இந்த சங்கதியைப்
"பார்ப்போம் வாருங்க ளென்று சொல்லிக்கொண்டு 16 - தீவிர
"மாய்ப்போய் மரியாளையும் யோசேப்பையும் பசுத்தொட்டியிலே
"கிடக்கிற பிள்ளையையும் கண்டார்கள்" என்று கூறுகின்றது.
இவைகளிலுங்கூட ஒரு சிறிய அக்சரமேனும் மத்தே வேதத்தில்
காணப்படவில்லை. மாற்கு, யோவான், வேதங்களோவெனில் மத்தே,
லூக்கா வேதத்தில் கூறப்பட்ட மாறுபாடான விஷயங்களில் ஒன்
றுமேனும் கூறாது ஒழிந்துவிட்டிருக்கின்றன. வேதங்கள் ஒன்றுக்கொ
ன்று இவ்வாறாக மாறுபடுகின்றதேயுமன்றி மூன்றுக்குப் பின்வி
ரோதமும் தேவதூதனாலே தேவவசனங்களைப் பெறுபவர்களுக்கு
அஞ்ஞான சம்பந்தமும், தேவவுத்திரவுக்கு விரோதமான செயல்
களும் நிரம்பியிருக்கிறதாக யாம் சொல்லிவந்த காரணங்களினாலே
எமது கிறிஸ்துவ நேயர்களுக்குப் புலப்படாதிராதென்று யாம்
நம்புகிறோம். இதுவேயுமன்றி எமது நேயர்கள், காபிரியேல் என்னும்
தூதன் மரியாளிடத்தில், இயேசுவை அவள் கர்ப்பந்தரிப்பாள்
என்று நன்மாராயம் சொன்ன காலத்திலே தேவதூதனானவன்
அவருக்கு அவருடைய பிதாவாகிய தாவீதின் இராசாசனத்தைக்
கொடுப்பார், அவர் யாக்கோபின் குடும்பத்திற்கு இராசனாயிருப்
பார் என்றும் சொன்னதாக லூக்காவேதம் வெளியாய்க் கூறு
கின்றது. இதனாலே இயேசுவுக்கு தாவீது பிதாவென்று காணப்
படுகின்றது. ஆகவே இயேசு 'தேவகுமாரன்' என்று சொன்னால்
இயேசுவின் தந்தையாகிய தேவனுக்கு தாவீது முன் பிதாவென்று
ஏற்படுமென்பதையும் ஞாபகத்தில் வைப்பீர்களாக. மேலும் தேவ



தூதர் சொல்லியபடி இயேசு யாகூபின் குடும்பத்திற்கு இராஜனாக
வாவது இராசா சனத்தைப்பெற்றாவது வாழாமல் சிலுவையில்
அறையுண்டிறந்தாரென்பதை யுணரும்போது தேவவசனம் எவ்
வளவு உண்மையென்பதையு முணர்வார்கள்: ஆகவே கிறிஸ்துநாத
ரவர்களின் ஜனனாகமத்திலே நிரம்பிய பேத மிருக்கின்றதை எமது
நேயர்கள் காண்பார்கள். அங்ஙனமாகக் கண்டால் அவ் வேதங்கள்
மத்தே லூக்கா என்பவர்களுக்கு எப்படி சங்கதிகள் கிடைத்தனவோ
அப்படியே ஆராய்வின்றி எழுதிப் போட்டார்கள் என்று நம்பு
வார்களேயன்றி அவைகள் தேவ வசனமென்று நம்பமாட்டார்கள்;
அப்படியானால் தேவவசனமல்லாதது வேதமென்றும் சொல்லார்க
ளன்றோ?

"இளமை"

இது இயேசுநாதர் இளமை யின்காலத்தைக் கூறுகின்றது.
எமது கிறிஸ்துவநேயர்கள், இயேசுநாத ரவர்களின் இளமையிலே
நடந்ததாகச் சொல்லும் ஆகமத்திலே உங்கள் வேதம் வரைந்த
அறிவின்மிக்க வேதாசிரியர்கள் முற்றிலும் தத்தமக்கிடையே விரா
தாரமாக மாறுபடுகின்றார்க ளென்பதையும் காணுவீர்களாயின்
அந்த வேதாசிரியரின் பேதமையைக்குறித்து எவ்வளவாகத்தான்
யாம் வகைசொல்லித் தீருவேமோ? என்று உங்களுக்கு நிரம்பிய
மனக்கவலையுண்டாகி வெளியாக வாய்விட்டுச் சொல்லிவிடினும் விடு
வீர்களென்று நம்புகிறோம். ஆனால் மனசாட்சி யுடையாராகிய
எமது நேயர்கள் உடனே அந்த வேதம் அஞ்ஞானிகளாலேயே
யன்றி எழுதப்படவில்லை என்று சொல்லிவிட்டு தாம் உய்யும்படி
யான வழியைத் தேடுவார்கள்.

இதோ பாருங்கள், நேயர்களே! மத்தே 2 - ம் அதிகாரமோ
வெனில்; 1 - "எரோது என்னும் இராஜனுடைய காலத்திலே
"யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேம் ஊரில் இயேசுவான
"வர் பிறந்தபின்பு கிழக்குத்திசையிலிருந்து, சாஸ்திரிகள் எருச
"லேம் நகரத்துக்குவந்து 2 - (இக்காலத்திலே பிறந்திருக்கிற யூத
"ருடைய இராஜாவைக் குறித்துத் தோன்றிய நட்சத்திரத்தைக்
"கிழக்கிலே நாங்கள் கண்டு அவரைப் பணிந்துகொள்ள வந்
"தோம். அவர் எங்கே என்றார்கள் 3 - ஏரோது இராஜா அதைக்

“கேட்டபொழுது அவனும் அவனுடனே கூட எருசலேம் நகரத்
“தார் அனைவரும் கலங்கினார்கள் 7 - அப்பொழுது ஏரோது அந்த
“சாஸ்திரிகளை இரகசியமாய் அழைத்து அந்த நட்சத்திரம் காணப்
“பட்ட காலத்தைக்குறித்து அவர்களிடத்திலே திட்டமாய் அந்த
“பிள்ளையைக்குறித்து நன்றாய் ஆராய்ந்து பாருங்கள். மேலும்
“அதைக் கண்டபின்பு நானும் அதைப்போய் பணிந்து கொள்
“ளும்படிக்கு எனக்கு அறிவியுங்கள் என்று சொல்லி அவர்க
“ளைப் பெத்லலேகேமுக்கு அனுப்பிவிட்டான்.) அந்த சாஸ்
“திரிகள் பின்பு அந்தவீட்டில் பிரவேசித்துப் பிள்ளையையும்
“அதினுடைய தாயாகிய மரியாளையுங்கண்டு வணக்கமாய் விழு
“ந்து அதைப் பணிந்துகொண்டு தங்கள் பொக்கிஷப் பெட்டி
“களை திறந்து பொன்னையும், தூபவர்க்கத்தையும், வெள்ளை
“போளத்தையும், அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள். 13-
“அவர்கள் புறப்பட்டுப் போனபின்பு கருத்தருடைய தூதன்
“சொப்பனத்திலே யோசேபுக்குக் காணப்பட்டு ஏரோது இந்
“தப் பிள்ளையைக் கொலைசெய்ய தேடுவான். ஆகையால் நீ
“எழுந்து பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொ
“ண்டு எகிப்து தேசத்திற்கு ஓடிப்போய் நான் உனக்குச்சொல்
“லும் வரைக்கும் அவ்விடத்தில் இரு என்றான் 19 - ஏரோது இறந்
“தபின்பு சொப்பனத்திலே கருத்தருடைய தூதன் எகிப்திலே
“யோசேபுக்குக் காணப்பட்டு 20 - பிள்ளையினுடைய பிராணனை
“வாங்கத் தேடினவர்கள் இறந்துபோனார்கள். ஆகையால் நீ
“எழுந்து பிள்ளையையும் அதினுடைய தாயையும் கூட்டிக்கொ
“ண்டு இஸ்ரவேல் தேசத்துக்குப் போவென்றான். 21 - அந்தப்
“படியே அவன் எழுந்திருந்து பிள்ளையையும் அதினுடைய தாயை
“யும் கூட்டிக்கொண்டு இஸ்ரவேல் தேசத்திற்குப் புறப்பட்ட
“பொழுது 22 - அருகே லாவு ஏரோது என்பவன் தன் தகப்பனாகிய
“ஏரோதினுடைய பட்டத்துக்குவந்து யூதேயாவை ஆளுகிறனெ
“ன்று கேள்விப்பட்டு அங்கே போகப்பயந்தான். அப்பொழுது
“சொப்பனத்திலே அவன் தேவவுத்தரவு பெற்றுக் கலிலேயா
“நாட்டினுடைய திசைகளோரேகிப் புறப்பட்டுப்போய் 23 - நாச
“ரேயனென்றும் அழைக்கப்படுவார் என்கிறதாய்த் தீர்க்கதரிசி
“யால் சொல்லப்பட்டது நிறைவேறும்படிக்கு நாசரேத்தூரில்
“வாசம்பண்ணினான்.” என்றும் 3 - ம் அதிகாரம். 1 அக்காலத்
“திலே யோவான் ஸ்நானன்வந்து 2 - பரலோக இராச்சியம்



“சமீபமா யிருக்கின்றது. ஆகையால் மனம் திரும்புங்கள் என்று
“யூதேயாவின் வனாந்திரத்திலே பிரசங்கம் பண்ணினான் 5 - அக்
“காலத்திலே எருசலேம் நகரத்தாரும் யூதேயா தேசத்தாரனைவ
“ரும் யோர்தான் நதிக்கடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனி
“டத்திற்குப் புறப்பட்டுப்போய் 6 - தங்கள் பாவங்களை அறிக்
“கையிட்டு யோர்தான்நதியில் அவனாலே ஞானஸ்நானம் பெற்
“றார்கள். 13-அப்பொழுது இயேசுவானவர் யோவானாலே ஞான
“ஸ்நானம் பெறுவதற்குக் கலிலேயா நாட்டைவிட்டு யோர்தான்
“அருகே அவனிடத்திற்குப் போனார்.” என்றும் கூறுகின்றது.
ஆகவே, எமது கிறிஸ்துவநேயர்கள், இயேசுவானவர், பிறந்தார்
என்பதைச், சோதிட சாத்திரத்திலே தேர்ந்த வித்துவான்கள் நட்
சேத்திரத்தினாலே நன்குணர்ந்து அவரைத் தேடிப்பணிந்து அவ
ருக்குச் செய்யவேண்டிய கடமைகளைச்செய்து (யாவரும் அறியும்
படி) ப்போனார்கள். என்பதூஉம் அக்காலத்திலே யூதேயாவை
அரசாண்ட ஏரோது இராசன் அவரை (கிறிஸ்து நாதரை) க்கொலை
செய்ய எத்தனித்தபடியால், தேவ வுத்திரவின்படி இயேசுவை
அவர் பிறந்த பெத்தலகேம் ஊரைவிட்டு எகிப்துக்குக் கொண்டு
போகப்பட்டு, அந்த ஏரோது இராசன் இறந்து ஒழிந்தபிறகு எகி
ப்த்திலேயே இருந்து இயேசு கலிலேயாநாட்டிற்குக் கொண்டுவரப்
பட்டார், என்பதூஉம், அந்தக் காலத்திலே யோவான் இஸ்நானன்
பிரசங்கத்தினாலே எருசலேம் முதலான ஊரார்களெல்லாம் அந்த
யோவானிடத்திலே ஞானஸ்நானம் பெற்றார்கள் என்பதூஉம், அப்
பொழுது, இயேசுநாதரும் அவனிடத்தில் ஞானஸ்நானம்பெற
அங்கு விஜயம்செய்தார் என்பதூஉம் பரீஷ்காரப்படக் கிடக்கின்
றன, என்று நன்குணர்வார்களாயின், லூக்கா வேதம் அவைகளு
க்கு முற்றும் மாறுபடுகின்ற விதங்களை எம் நேயர்கள் கண்ணாரக்
கண்டும் காதாரக்கேட்டும் மனங்கவிந்து தாம் நம்பியிருக்கிற வேத
ங்களை வேதமென்று சொல்லுவதை மறந்தே விடுவார்களென்று
நம்புகிறோம்;

இதோ லூக்கா வேதம் 2 - ம் அதிகாரம், “21 - பிள்ளைக்கு
“விருத்த சேதனம் செய்கிறதற்குரிய எட்டாம் நாளிலே அதுக்குப்
“பமாகிறதற்கு முன்னே தேவதூதனால் சொல்லப்பட்ட இயேசு
“என்னும் நாமம் அதற்குக் கொடுக்கப்பட்டது. 23 - முதற்பே
“றான எந்த ஆண்பிள்ளையும் பாராபரனுக்குப் பிரதிஷ்டை யா

"க்கப்பட வேண்டும். என்று பராபரன் அருளிச்செய்த நியா
"யப்பிரமாணத்தில் எழுதியிருக்கிறபடி 24 - அவர்கள் அதைப்ப
"ராபரனுக்கு ஒப்புக்கொடுக்கும் படிக்கும், பராபரனுடைய நியா
"யப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி ஒருஜோடு காட்டுப்பு
"றவை அல்லது இரண்டு புறாக்குஞ்சுகளைப் பலியிடும் படிக்
"கும் பிள்ளையை எருசலேம் பட்டணத்திற்குக் கொண்டுபோனார்
"கள். 39 - பராபரனுடைய நியாயப் பிரமாணத்தின்படி சக
"லத்தையும் அவர்கள் செய்து முடித்தபின்பு கலிலேயாதேசத்
"திலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்தூருக்குத் திரும்பினார்கள்.
"41 - அவருடைய தாயும் தகப்பன்மாரும் பஸ்காபண்டிகைக்குவரு
"சந்தோறும் எருசலேம் பட்டணத்திற்குப் போவார்கள்; 42 -
"அந்தப்படிக்கு அவர் பன்னிரண்டு வயதுள்ளவரான போழ்து
"அவர்கள் பண்டிகை முறைமையின்படி எருசலேமுக்குப்போய்
"வேண்டிய நாள், அங்கேயிருந்து பின்பு திரும்பிவருகிறபோ
"ழது, பிள்ளையாகிய இயேசு தம்முடைய தாயிக்கும், யோசேப்
"புக்கும் தெரியாமல் எருசலேமிலே, தங்கி இருந்தார். 51 -
"பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய் நாசரேத்தூரில்சேர்
"ந்து அவர்களுக்குக்கீழ் அடங்கினார்; 52 - இயேசு ஞானவளர்
"ச்சியையும், வயதையும், பராபரனிடத்திலும், மனிதரிடத்திலும்
"தயையையும் அதிகம் அதிகமாய் அடைந்து கொண்டார்." என்றும்
3 - ம் அதிகாரம் "1. திபேரியு இராயன் இராச்சியம் பரிபால
"னம் பண்ணின பதினைந்தாம் வருஷத்திலே பொந்தியு பிலாத்
"என்பவன் யூதேயா நாட்டுக்குத் துரையாயும், ஏரோது என்
"பவன் கால் பங்காகிய கலிலேயா நாட்டுக்கு அதிபதியாயும்
"அவனுடைய சகோதரனாகிய பிலிப்பு என்பவன் கால்பங்கா
"கிய இத்துரேயா நாட்டுக்கும் திராகோனித்தி நாட்டுக்கும் அதி
"பதியாயும் லிசானி என்பவன் கால்பங்காகிய அபிலேனே
"நாட்டுக்கு அதிபதியாயும் 2 - அன்னா - காய்பா என்பவர்கள்
"பிரதான ஆசாரியராயும் இருந்தகாலத்திலே வனாந்தரத்தில் சகரி
"யாவின் குமாரனாகிய யோவானுக்குத் தேவவசனம் உண்டாயிற்று.
"3 - அதனபடியால் அவன் யோர்தான் நதிக்கு அருகான தேசமெங்
"கும் நடந்து பாவமன்னிப்புக்காக மனந்திரும்பும்படிக்கு ஏற்ற
"ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கித்தான் 21 - சனங்களெல்
"லாரும் ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட காலத்தில் ஏசுவான
"வரும் ஞானஸ்நானம் பெற்றார் 19 - அப்படி இருக்குங்காலத்



"திலே காற்பங்கு தேசாதிபதியாகிய ஏரோது என்பவன் தன்
"சகோதரனாகிய பிலிப்பினுடைய மனைவியாகிய ஏரோதியாளின்
"நிமித்தமாகவும் மற்றப் பொல்லாங்குகளைச் செய்ததின் நிமித்த
"மாகவும் யோவானால் கடிந்து கொள்ளப்பட்ட போழது 20 -
"தான் செய்துவந்த பொல்லாங்குகள் யாவுமன்றி யோவா
"னையும் காவலில் அடைத்தான்," என்றும் கூறுகின்றது. ஆக
வேயெமது நேயர்களாகிய கிறிஸ்தவ பண்டிதர்களே! மத்தேவே
தம் கூறியபடி கிறிஸ்து நாதர் பிறந்த விஷயத்தைச் சாத்திரிக
ளால் ஏரோது இராசன் அறிந்து கலக்கமுற்று அவரைக்கொலை
செய்ய நாடினபடியினாலே தேவதூதன் அந்தச் சமாசாரத்தையோ
சேப்புக்கு அறிவித்துப் பிள்ளையையும் அதினுடைய தாயையும் பெத்
தலேகேம் ஊரைவிட்டு எகிப்துக்குக் கொண்டுபோகப்பட்டாரெனும்
விசேஷத்தைக்கு முற்றும்மாறாக; இயேசுவானவர், பிறந்தது முதல்
கொண்டு பராயமெத்துகிற வரையிலும் பிரதிவருஷங்கள் தோ
றும் பஸ்காபண்டிகைகளுக்கு எருசலேம் பட்டணத்துக்கு வந்து
கொண்டிருந்தாராய், நாசரேத்தூரில் தங்கியிருப்பதாகப் பரிஷ்கார
மாய் லூக்காக் கூறுகின்றாரென்பது நீங்கள் காணுகிறீர்களன்றோ?
இன்றும் இஸ்ரவேல் தேசத்தை ஆண்டுவந்த அந்த ஏரோது இரா
சன் இறந்தபின்பு அவன் இறந்தானென்ற சமாசாரத்தைத் தேவ
தூதனால் யோசேபு தெரிந்துகொண்ட பின்பு இயேசுவையும் அதி
னுடைய தாயையும் எகிப்திலிருந்து இட்டுக்கொண்டு யெத்தேலே
கேம் ஊருக்கு வரும்போது ஏரோதின் குமாரன் யூதேயாவை
ஆளுகின்றான் என்று கேள்விப்பட்டு இயேசுவை அங்குகொண்டுவர
பயந்தபடியினாலே, தேவதூதன் மறுபடியும் அப்பிள்ளையை நாச
ரேத்தூருக்குக் கொண்டுபோகும்படி சொன்ன நிமித்தமாக நாச
ரேத்துக்குக் கொண்டுபோகப்பட்டாரென்ற மத்தேயோடு முற்று
மாறாக, இயேசுவானவர் பிறந்த எட்டாம்நாளிலே பெயரிடப்பட்டு
வேதபிரமாணத்தில் கூறியபடி சகலமும் செய்து முடித்தற்காக,
பெத்தலகேம் ஊரிலிருந்து எருசலேமுக்குக் கொண்டு வரப்பட்டு
அவ்விடத்தில் செய்யவேண்டியவை எல்லாம் செய்து பிறகு நாச
ரேத்துக்குக் கொண்டுவரப்பட்டார் என்று பரிஷ்காரமாய் லூக்
காகூறுவான் முரண்வருகின்றதென்பதை எமது நேயர்கள் காணு
கின்றார்கள். இம்மட்டாகவா? ஏரோது இராயன் இறந்து அவன்
குமாரன் பட்டம் பெற்றபிறகு இயேசுவானவர் எகிப்திலிருந்து
கொண்டுவரப்பட்டு நாசரேத்தில் வாசம் செய்து வருகையில் யோ

வான் ஸ்நானன் பாவ மன்னிப்புக்காக மனம் திரும்பும்படி ஞானஸ்நானம் கொடுப்பதை இயேசு கிறிஸ்து அறிந்து ஞானஸ்நானம் பெறயோவா னிடத்தில் வந்து அப்படியே ஞானஸ்நானம் பெற்றாரென்று மத்தேயு கூறுகிற சரிதைக்கு முற்றும் எதிரிடையாக; இயேசுவானவர் யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற்றபிறகு, அந்த யோவானை ஏரோது இராயன், தன் சகோதரன் பிலிப்பின் பெண்சாதியாகிய ஏரோதாளின் நிமித்தமாகவும் வேறுதான் செய்துவந்த பொல்லாங்கு விசயமாயும் யோவானைச் சிறைப்படுத்தினானென்று லூக்கா, சரித்திரம் கூறுவான் முன்னிற்கிறார். எமது நேயர்காள்! இந்த விதமாக ஒன்றுக்கொன்று நேர்விரோதமாகக் கூறுவாரால் வெளிவந்த மத்தேயை நம்புவீர்களா? லூக்காவை நம்புவீர்களா? எதை நம்புவீர்கள்? எதை நம்பமாட்டீர்கள்? இரண்டையும் நம்புவீர்களா? இரண்டையும் நம்பமாட்டீர்களா? எமது நேயர்காள்! உண்மையைச் சொல்லுங்கள்? வேதத்திலே ஒருவிஷயத்தைக் குறித்து இவ்வாறான பேதா பேதங்கள் நேருவது நியாயமாகுமா? நியாயமாகா தென்றால், அப்படிப் பேதப்படுவது, வேதமாகுமா? மாற்கும், யோவானும், இவ்விஷயங்களை எழுதமறந்தார்களா? இவ்வாறான விஷயங்கள் அவர்களுக்குக் கிடைக்கவில்லையா? அல்லது கைவலிக்கு மென்று எழுத சோம்பல்பட்டவர்களாய் விட்டுவிட்டார்களா? என்ன சொல்லுவீர்கள்? உங்கள் வேதலட்சணத்தை, புகழத்தான் வருவீர்களா? ஒப்பற்ற கர்த்தரே எமது நேயர்களுக்கு நல்லுணர்வைக்கொடுத்து அவர்களை இரட்சிப்பாரென்று வாழ்த்தி விடுகின்றோம்.

நேயர்காள்! பரலோக இராச்சியத்தைக்குறித்து மனம் திரும்பும்படியாகப் பிரசங்கித்து ஞானஸ்நானம் கொடுக்கும்படி தேவ கட்டளைபெற்ற, மனித குமாரனை யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற்ற இயேசுவானவர் தேவகுமார ரானவரா என்பதையும் கவனத்தில் வைப்பீர்களாக. அதோடுகூட "முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் பராபரனுக்குப் பிரதிஷ்டை யாக்கப்படவேண்டுமென்று பராபரன் அருளிச்செய்த நியாய பிரமாணத்தில் "எழுதியிருக்கிறபடி" என்ற வசனங்களிலே யுள்ள "எந்த ஆண்பிள்ளையும் பராபரனுக்குப் பிரதிஷ்டையாக்கப் படவேண்டும்" என்ற வசனத்தை எடுத்துக்கொண்டால் ஒரு விக்கையான் அரும் தம் ஏற்படுகின்றது; அதுயோ வென்றால்; மனிதர்களுக்கும் பிறக்



கிற ஆண்பிள்ளைகளுமே யன்றிப் பராபரனுக்குப் பிறக்கிற ஆண்பிள்ளைகளும் உள்பட பராபரனுக்குப் பிரதிஷ்டை செய்யவேண்டும், என்னும் அருத்தப்படுவான் வேண்டி; "எந்த ஆண்பிள்ளை "யானாலும்" என்று லூக்கா கூறுவானாயினார் என நன்றாய் விளங்குகின்றது; ஆகவே எமது நேயர்கள் மோசேயின் நியாயப் பிரமாணத்தில் அப்படிப்பட்ட வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கின்றதா? என்பதை நன்கு கவனிக்க வேண்டியது, அவசியமாகுமன்றோ? அப்படியே இருக்கிறதென்று வைத்துக்கொண்டால் இயேசு அல்லாமல் வேறுபல தேவகுமாரர்களும் இருக்கவேண்டுமல்லவா? அப்படி யாராவது இருக்கின்றார்களா? தேவக்குமாரனும் தேவனுக்குப் பிரதிஷ்டையாக வேண்டுமென்று மோசேயின் நியாயப் பிரமாணத்தில் நாம் கண்டதேயில்லை; ஆனால் இயேசுதேவகுமாரனாயிருந்தால் அவர் ஏன் பிரதிஷ்டை செய்யப்படவேண்டும்! எனும் கேள்வி உண்டாகு மாகையால் "எந்த ஆண்பிள்ளையானாலும்" என்ற வார்த்தை மோசேயின் நியாயப்பிரமாணத்திலுள்ள வார்த்தையைப்போல் கற்பனைசெய்து வெகு சாமர்த்தியமாய் எழுதிவைத்து விட்டார். அதுபற்றி இந்த இடத்தில் லூக்காவானவர் சற்று, முன்ஜாக்கிரதை யுள்ளவரென்றே சொல்லலாம். ஆயினும் நன்றாய்க் கவனிப்பவர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டு தானும் திருடனுதவதேயுமன்றித் தன்னைச்சார்ந்தவர்களையும் திருடனாகும்படிச்செய்து விட்டாரென்பதே அவர்களின் சாமர்த்தியமான பெருமை யென்று விடுகின்றோம். அனதுபற்றி எமது கிறிஸ்தவ நேயர்கள் லூக்காவை நன்கு மதிக்கிறார்களென்றும் அத்தகையார் வரைந்தவே தம் நம்புதற்கு அருகமான தென்றும்சொல்லுவார்களென்று விடுகிறோம். ஒருவேளை எமது நேயர்கள் கேட்பார்களோ, மோசே எப்படி நியாய பிரமாணத்தில் சொல்லியிருக்கிறார் என்று; அப்படியானால்; இதோ 2-ம் மோசே 13-ம் அதிகாரம் "2-இஸ்ரவேல் புத்திரரில் எந்தம் மனிதரிலும் மிருக "சீவன்களிலும் கர்ப்பந்திறந்து பிறக்கிற முதற்பேற்றை எல்லாம் "நமக்குப்பரிசுத்தமாக்கு அது நம்முடைய தென்றார்., 11-பின்னை "யும் செய்யப்பட வேண்டியதே தென்ன, கர்த்தர் உனக்கும், "உன் பிதாக்களுக்கும் ஆணையிட்டபடியே உன்னைக் கானானியரின் "தேசத்திலே வரப்பண்ணி அதை உனக்குக் கொடுத்தபொழுது "12-கர்ப்பந்திறந்து பிறக்கிறவை அத்தனையும் உனக்கிருக்கும் "மிருக சீவன்களின் தலை யீற்றனைத்தையும், கர்த்தருக்கு நேர்ந்து

"கொடுப்பாயாக, அவைகளி லிருக்கிற ஆண்கள் கர்த்தருடைய
"வைகள் 13 - உன்பிள்ளைகளில் முதல்பேறன சகல நாசிவனை
"யோவென்றல் ; மீட்டுக்கொள்ள வாராயாக 15 - அதே தேனில்
"எங்களை விடாதபடிக்கு பார்வோன் கடினமனதா யிருக்கிற
"பொழுது கர்த்தர் எகிப்து தேசத்தில் மனிதரின் தலைச்சன்பிள்
"ளைகள் துவங்கி மிருகசீவன்களின், தலை யீற்றுகள்மட்டும் உண்
"டாயிருந்த முதல் பேறுகளை எல்லாம் கொன்று போட்டார் ;
"ஆனபடியினலே கர்ப்பந்திறந்துபிறக்கிற ஆணை எல்லாம் நான்
"கருத்தருக்குப் பலியிட்டு என் பிள்ளைகளில் முதற்பேறனவர்களை
"எல்லாம் மீட்டுக்கொள்கிறேன்" என்று கூறுகின்றது. இதுவே
தான் மோசேயின் நியாயப் பிரமாணம். இப்படி இருக்க லூக்கா
வானவர் "எந்த ஆண்பிள்ளை யாறையும்" என்று தாமாகவே ஒரு
கற்பனையைக் கற்பித்தா ரென்பது காணுவீர்கள். எமது நேயர்கள்
இந்தக் காரணங்களினுலும் இயேசு தேவகுமாரனே அன்று, மனிதக்
குமாரனே என்பதை நன்கு மதிப்பார்களாக. நிற்க, நேயர்களே!
இயேசுவின் இளமையைக்குறித்து வேதம் வரைந்தவர்கள் பகும்
மாறுபாடுகள் இவை என்று நன்றாய்த் தெரிந்து கொண்டீர்களன்றே?
ஆகவே கவனியுங்கள்.

## "ஞானஸ்நானம்."

இது "இயேசுநாதர் ஞானஸ்நானம் பெற்ற விவரங்கூறு
கின்றது."

எமது அருமைசான்ற வேதபண்டித கிறோமணிகளாகிய
நேயர்களே!

இயேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றுர் என்ற விஷயம் மிக
விசேஷமான சரித்திரங்களில் ஒன்றென்பதை மறுப்பீர்களா? மறுக்
கமாட்டீர்கள் ; அப்படிப்பட்ட முக்கியமான விஷயத்தில் உங்கள்
வேதம் வரைந்த நாதாக்கள் படும் மாறுகளை நீவீர்கள் சற்றுக்க
வனிப்பீர்களாயின் மிகவும் ஆச்சரியப்பட்டு ; சிச்சி இதுவேதமா?
என்று கடாய் விடுவீர்கள், என்பதில் எனக்கொன்றும் ஐயமில்லை ;

ஓ! எமது நண்பர்களாகிய நேயன்மீர்! மத்தேயு வேதம் 3 - ம்
அதிகாரமோ வெனின், "13 - அப்பொழுது இயேசுவானவர்கலி



"வானலே ஞானஸ்நானம் பெறுவதற்கு கலிலேயா நாட்டைவிட்டு
"யோர்தான் அருகே அவனிடத்திற்குப்போனுர். 14 - யோவான்
"அவருக்குத் தடைபண்ணி உம்மாலே நான் ஞானஸ்நானம்பெற
"வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்திற்கு வரலாமா? என்றன்
"15 - அதற்கு இயேசுவானவர் அவனை நோக்கி இவ்விதமாய்ச்
"சகல நீதியையும் நிறைவேற்றுகிறது நமக்கேற்றதா யிருக்கிறது,
"ஆகையால் சம்மதிப்பாயாக என்றர், அப்பொழுது அவன் சம்
"மதித்தான். 16 - இயேசுவானவர் ஞானஸ்நானம் பெற்று ஜலத்
"தைவிட்டு யேறினவுடனே இதோவானம் அவருக்குத் திறக்
"கப்பட்டது அல்லாமலும் பராபரனுடைய ஆவிபுறவைப்போல்
"இறங்கி அவர்மேல் வருகிறதைக்கண்டான் 17 - மேலும் இவர்
"எனக்கு அன்பாயிருக்கிற என்னுடைய குமாரன், இவரில் பிரிய
"மாயிருக்கிறேன் என்று வானத்தி லிருந்து சத்தம் உண்டாயிற்று"
என்று கூறுகின்றது ; இதனுலே இயேசுவானவர் யோவானிடத்
தில் ஞானஸ்நானம் பெறுவதற்காகக் கலிலேயா நாட்டை விட்டு
யோர் தானுக்குப்போய் யோவானுலே ஞானஸ்நானம் பெறுவ
தற்கு இயேசு அருகரல்லவென்று அவனுலே மறுக்கப்பட்டும் கேளா
து, ஞானஸ்நானம் பெற்றுர் என்பதும் அப்படி ஞானஸ்நானம்
பெற்று நதியிலிருந்து கரை ஏறியவுடனே வானம் திறக்கப்பட்டு
பராபரனுடைய ஆவி இயேசுவின்மேல் இறங்கிய தென்றும் அப்
படி யிறங்கியதை யோவான் கண்டானென்றும் அதோடு இயேசு
தேவக் குமாரன் என்று வானத்தி லிருந்து சத்தம் வந்ததென்
றும், அதை யோவான் கேட்டானென்றும் தெளிவாய்க் காணலாம்.
ஆகவே இயேசு ஞானஸ்நானம்பெற அருகமில்லாத யோவான்
ஜலத்தினுலே 'கொடுத்த' ஞானஸ்நானத்தினுலே தான் இயேசு
பராபரனுடைய ஆவியானவரை சுமக்கலாயக் காணவாராயினுரென்
பன, பிறவும் பெறுதற்கு ஹேதுவாயின ரென்பதூஉம் விளங்கு
கின்றதன்றே? இங்ஙனமெல்லாம் ஞாபகத்தில் வைத்துப்பிறகு,
மார்க்கு வேதம் 1-ம் அதிகாரத்தை நோக்குகையின், அதுவோவென்
றால் ; "9 - அந்நாள்களில் இயேசுவானவர் கலிலேயா நாட்டி
லுள்ள நாசரேத்தூரிலிருந்து வந்து யோர்தான் நதியிலேயோ
"வானலே ஞானஸ்நானம் பெற்று 10 - சலத்தினின்று ஏறினவு
"டனே வானம் பிரிந்ததையும் ஆவியானவர் புறவைப்போல் தம்
"மேல் இறங்கினதையும் கண்டார் 11 - அப்பொழுது நீர் எனக்கு
"அன்பாயிருக்கிற என் குமாரன் உம்மில் பிரியமாயிருக்கிறேன்

"என்று பரமண்டலங்களிலிருந்து சத்தம் உண்டாயிற்று." என்கின்
றது. இதனாலே இயேசுவானவர் யோவானிடத்து ஞானஸ்நானம்
பெற்றுக் கரையேறின வுடனே, ஆவியானவர் புறாவைப்போல்
இயேசுமேல் இறங்கினதையும் இயேசுதாமே கண்டாரென்றும்
வானத்திலிருந்து வந்த சப்தத்தை இயேசுவே கேட்டாரென்றும்
வற்படுகின்றன. ஆனால் மத்தேய வேதத்தில் கூறிய வேறுவிசேஷ
ங்கள் மாற்குவேதத்தில் காணப்படவில்லை. ஆயினும், இவ்விரண்டு
வேதங்களுக்கிடையானத்திலிருக்கும் இறங்கிவந்த ஆவியானவரை
யோவான் கண்டாரென்பதிலும் இயேசுகண்டார் என்பதிலும் பே
தம் கிடக்கின்றது; எது உண்மையோ? பின்பு. லூக்காவேதம்,
3-ம் அதிகாரமானது "21 சனங்கள் எல்லாரும் ஞானஸ்நானம்
"பெற்றுக்கொண்ட காலத்தில் இயேசுவானவரும் ஞானஸ்நானம்
"பெற்றார். அப்பொழுது அவர் ஜெபம் பண்ணுகையில் வானம்
"திறக்கப்பட்டதுமல்லாமல் 22 கண்ணுக்குத் தோன்றிய வருவாய்
"ஒரு புறாவைப்போல் பரிசுத்த ஆவியானவர் அவர்மேல் இறங்கி
"னார். அன்றியும் நீர் எனக்கு அன்பான குமாரனாயிருக்கின்றீர்
"உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று சத்தம் உண்டாயிற்று"
என்று கூறுகின்றது; இதனாலே எமது நேயர், மத்தேயு வேதம்,
மாற்கு வேதம், என்பன ஞானஸ்நானம்பெற்றுக் கரையேறியவுடன்
ஆவியானவர் புறாவைப்போல் இறங்கினாரென்று கூறியதற்கு முற்
றம் மாறாக; ஞானஸ்நானம்பெற்று அவர் ஜெபம் பண்ணுகையில்
ஆவியானவர், இறங்கினாரென்று காணப்படுகின்றது. இவைகளில்
எது நம்பப்படவேண்டுமோ? ஆனால் மத்தேயு வேதம் ஆவியானவர்
இறங்கினதையோவான் கண்டாரென்று கூறியதன்றோ? அதற்கு
மாறாக மாற்கு வேதம், அப்படி இறங்கின ஆவியானவரை இயேசு
வே கண்டாரென கூறுகின்றதென்பதை நேயர்கள் அறிந்த விஷ
யமே. லூக்காவோ வெனின், மத்தேயு மாற்கு, எனும் இரண்டி
லொன்றையும் போலாகாது அவர் தாமே கண்டபூர்வமாயாக
கூறுவாராயினார். இவர் கூற்று மறுமாவிசதையே பின்பு. யோவான்
வேத மெவ்வாறென்று கவனித்தால், யோவான். 1-ம் அதிகாரம்
"29 மறுநாளில் யோவான் இயேசுவை தன்னிடத்தில் வரக்
"கண்டு சனங்களுடனே சொன்னதாவது, அவரே உலகத்தில்
"பாவத்தைச்சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி 30 எனக்குப்பின்
"ஒரு புருஷன் வருகிறார் என்றும், அவர் எனக்கு முன் இருந்தபடி
"யால் என்னிலும் மேன்மையாயிருக்கிறார் என்றும் நான் சொன்



"னேனே அவர் இவரே 31 நானும் இவரை அறியாதிருந்தேன்.
"இப்பொழுது இவர் இஸ்ரவேலருக்கு வெளியாக்கப்படும் பொருட்
"டாய் நான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கவந்தேன் என்
"றன். 32 பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது புறாவைப்
"போல் ஆவியானவர் வானத்திலிருந்து இறங்கி அவர்மேல் தங்கி
"னதைக்கண்டேன். நான் அவரை அறியவில்லை. 33 அப்போ
"ழுது சலத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கும்படிக்கு என்னை
"அனுப்பினவர் என்னுடனே சொன்னது; நீ காணத்தக்கதாக
"ஆவியானவர் இறங்கித் தங்கப்படுபவர்யாரோ அவரே பரிசுத்த
"ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்றார் 34 அந்தப்
"படியே நான் கண்டு இவரே பராபரனுடைய குமாரனென்று
"சாட்சிக் கொடுத்தேன் என்றான்." என்று கூறுவதாகக் காணுவீர்
கள்; நண்பர்களே! இந்த யோவான் வேதத்திலே இஸ்ரவேலருக்கு
இயேசு வெளியாக்கப்படும் பொருட்டாகவே யோவான் சலத்தினா
லே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கவந்தான், என்பதாகவும்,
புறாவைப்போல ஆவியானவர் இயேசுவின்பேரில் இறங்கித் தங்கு
தற்கு யோவான் கண்டுமென்ன அவரை இயேசு வென்று யோவான்
அறியாதிருந்தா னென்றும் அப்படி இருந்தகாரணம்பற்றி யோ
வான் ஜலத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கும்படி யோவானுக்கு
உத்தரவு கொடுத்தவராலேயே நீ பார்க்கும்படியாக யார்பேரில்
புறாவைப்போல் ஆவியானவர் தங்கினாரோ அவரே பரிசுத்த ஆவியி
னாலே ஞானஸ்நானம் கொடுப்பவரென்று யோவான் அறிவிக்கப்பட்
டதாகவும் அதனாலே இயேசுவைப் பராபரனுடைய குமாரனென்று
யோவான் தானே சாட்சி பகர்ந்ததாகவுமே காணுவீர்களன்றோ?
அதுபற்றி மத்தேயு, மாற்கு, லூக்கா, எனப்படும் வேதங்களெல்லாம்,
கிறிஸ்து நாதர் யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற்றாரென்ப
தாகவும், அப்படி ஞானஸ்நானம் பெற்ற பிறகு வானம் திறக்கப்
பட்டுப் பரிசுத்த ஆவியானவர் இயேசுவின்பேரில் இறங்கினாரென்ப
தாகவும் இயேசுவைக்குறித்து இவர் எனக்கு அன்பான என் குமார
னாயிருக்கிறாரென்று வானத்திலிருந்து சத்தம் வந்ததென்பதாக
வும், கூறியவைகளெல்லாம் ஒருங்கே கெட்டு ஒழிந்ததாக காணமாட்
டீர்களா? ஐயோ! இந்த யோவான் வேதங்கூறுகிறபடி சகரியா
வுடைய மகனாகிய யோவான் ஞானஸ்நானம் கொடுத்ததெல்லாம்,
இயேசு வெளியாகும்படியான ஞானஸ்நானமென்பது வெளிபடு
கின்றது, அப்படியிருக்க, அந்த ஞானஸ்நானத்தை இயேசுபெற்றுக்

கொண்டால் அவருக்கு எந்த இயேசு வெளியாக்கப்படுவாரோ? அப்படி ஒன்றுமில்லை என்றும் அவ்வாறான ஞானஸ்நானத்தை இயேசு ஏன்பெறவேண்டும்? ஆகவே யோவான் ஞானஸ்நானம் எந்த காரணம்பற்றிக் கொடுத்தாரென்பது, மத்தே, மாற்கு, லூக்கா இவர்கள் உணராது, யோவானிடத்தில் ஞானஸ்நானம் இயேசும் பெற்றாரென்று வரைந்து விட்டார்களோ? அந்த மூன்று பாரவான்களான மீன் பிடிக்காரர்கள் வேதம் வரைவதற்கு முன்னே, யோவான் எது காரணம்பற்றி, ஞானஸ்நானம் செய்பவனாயிருந்தானென்று ஆராய வில்லையோ? அல்லது அவருக்குச் சேதி தெரிவித்தவர்கள் விவரமாகச் சொல்லவில்லையோ? ஐயோ நேயர்களே! வானத்திலிருந்து சத்தம் வந்ததாக யோவான் ஒன்றும் கூறவில்லையே. ஆனால் தன்னை அனுப்பினவர் தனக்கு அறிவித்தாரென்று யோவான் கூறினதாகக் கூறுகின்றதே அப்படி அறிவித்ததுங்கூட; "நீ பார்க்கும் "படி ஆவியானவர், யார்பேரில் இறங்கிறரோ? அவரே பரி "சுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பவர்" என்று தானே அறிவிக்கப்பட்டதென்று, யோவான் வேதம் கூறுகிறது? அப்படியாக யோவான் அறிவிக்கப்பட்டதினாலே அவன் தானே இயேசுவைப் பராபரனுடைய குமாரன் என்று சொல்லிவிட்டான், இப்படி விஷயம் இருக்க என்னெனவோ மற்ற மத்தே, மாற்கு, லூக்கா வேதங்கள் புலம்புதற்கு ஆரம்பித்து விட்டனவே இவ்வாறாகவே ஒன்றுக்கொன்று, ஒரே விஷயத்தில் மாறுப்படக் கூறுவதாகக் காணுவதாயிருந்தால் அதை "வேதவிரோதம்" என்று சொல்லமாட்டீர்களா? ஐயோ! எனது நண்பர்களே! இன்னும் வேதவேடிக்கை பாருங்கள்; லூக்கா வேதம் 3-ம் அதிகாரம் "3-ஆனபடியால் அவன் (யோவான்) யோர்தான் நதி "க்கு அருகான தேசமெங்கும் நடந்து பாவமன்னிப்புக்காக மனம் "திரும்பும்படிக்கு ஏற்ற ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங் "கித்தான்" என்றும் மாற்கு 1-ம் அதிகாரம் "4-யோவான் என் "பவன் வனாந்திரத்திலே ஞானஸ்நானம் கொடுத்து பாவமன்னிப் "புஅடையும்படிக்கு மனந் திரும்புகிறதற்கு ஏற்ற ஞானஸ்நானத் "தைப் பிரசங்கம் பண்ணிக்கொண்டு வந்தான்" என்றும், மத்தே 3-ம் அதிகாரம் "11-நீங்கள் மனம் திரும்பும்படிக்கு நான் ஜலத் "தினாலே ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறேன் எனக்குப் பின்வரு "கிறவர் என்னிலும் அதிக வல்லமையுடையவர்", என்றும் கூறுகின்றன. அவைகளினாலே எல்லாம் யோவான் பாவமன்னிப்புக்காக



மனம் திரும்பும்படிக்கேற்ற ஞானஸ்நானம் கொடுத்துவந்ததாகத் தானே புலப்படுகின்றது? அப்படியிருக்க அந்தமத்தே, மாற்கு, லூக்கா, என்ற மூன்று வேதகருத்தர்களும் இயேசுவானவர், யோவானிடத்திலே ஞானஸ்நானம் பெற்றாரென்று கூறுவது நம்பத்தகுமா? ஐயோ வேதம் வரைந்த பாபிகாள்? இயேசு ஏதுபாவம் செய்தார்! எந்த பாபம் நிவர்த்தியாகும்படியான மனம் திரும்பு தற்கு யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெறப்போகிறார்? நண்பர்களே, இயேசுநாதர் ஞானஸ்நானம் பெற்றாரா? என்பதை ஆராயப்புகுந்தால் வேதங்களில் இவ்வாறான சங்கடங்கள் இருப்பதினாலே எந்த வேதத்தை ஒப்புக்கொண்டு மண்ணைவாரி தலையில்போட்டுக்கொள்வீர்கள்? ஐயோ! எந்தவிதத்தில் பார்த்தாலும், இயேசுநாதர் யோவானிடத்திலே ஞானஸ்நானம் பெற்றாரென்பது மறுக்கப்பட்டதாகவே காணுவீர்கள்; ஆகவே எமது அறிவின்மிக்க கிறிஸ்துவ நேயர்களே! உங்கள் வேதங்கள் நம்புதற்கு அருகமானவைகளல்லவென்று நீங்கள் நம்புதற்கு இங்ஙனங்கூறியசாட்சியங்கள் போதாவா? இன்னும் வேண்டுமோ? இதுவுமன்றி இயேசு தேவகுமாரன் என்று யோவான்தானே சொன்னதாக மாத்திரந்தானே யேற்படுகின்றது? வானத்தால் அவரைத் தேவகுமாரனென்று சப்தம் வந்ததாகக் கூறுவதுதான் பொய்த்து விட்டதே. இதனாலும், இயேசு தேவக்குமாரன் அன்று என்பதைக் கவனத்தில் வையுங்கள்.

---

## "யோவான் பிரசங்கம்"

---

இது இயேசுவைக்குறித்து யோவான்ஸ்நானன்செய்த பிரசங்கத்தைக் கூறுகின்றது.

எமது கிறிஸ்துவ நேயர்களே! யோவான் என்பவர், யாரென்று கவனித்தால் தீர்க்கதரிசிகளில் ஒருவரான சகரியாவின் குமாரனென்றும் ஏசாயா தீர்க்கதரிசியினாலே, "பராபரனது மார்க்கத் "தை செம்மையாக்கும்படி வனாந்தரத்திலே ஓதுவனால் கூப்பிடப் "படும்" என்று சொல்லப்பட்டிருந்த ஒரு மகாத்தான மனிதனென்றும் உங்கள் வேதத்தினாலே தெரிகின்றது. ஆகையால் அந்த யோவானானவர் கிறிஸ்து நாதரைக்குறித்துச் சவ்சேஷம் அறி

வித்து அவருக்காக மனம் திரும்பும்படி இஸ்ரவேலருக்கு ஞானஸ்
நானம் கொடுத்து, இயேசுவின் பிரபல மகத்துவங்களை முன்னறிக்
கையாய் விளம்பரம் செய்வானென பராபரனாலே அருள்பெற்று
விளங்கினாரென்று உங்கள் எல்லாராலும் நன்கு மதிக்கப்படுமன்றோ?
அப்படிப்பட்ட மான்மிய முள்ள யோவான் இயேசுவைப்பற்றி என்ன
சொன்னாரோ அதுவே மிகவும் நம்பக்கூடியதான, வேதத்தின் அடி
பீடமெனப்படுமென்பதில் எமது நேயர்களுக்கு ஆட்சேபமிருக்க
மாட்டாதென்று நம்புகின்றோம். ஆகவே எமது நேயர்கள் நன்றாயக்
கவனித்து இயேசுவைக்குறித்து யோவான் என்ன சொன்னா
ரென்று மிகக் கவலையோடு கவனிக்கக்கடவராவர். இதோ மத்தேயு
3-ம் அதிகாரம் "11 நீங்கள் மனம் திரும்பும்படிக்கு நான்
"சலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்
"குப்பின் வருகிறவர் என்னிலும் அதிக வல்லமை யுடையவர்.
"அவருடைய பாதரட்சைகளை சுமக்கிறதற்கு நான் பாத்திரவா
"னல்ல அவரே பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்க
"ளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பவர்" என்று யோவான் கூறின
தாகக் கூறுகின்றது. இதனாலே கிறிஸ்து நாதர் தன்னிலும் (அதா
வது யோவானிலும்) அதிக வல்லமையுடையவரென்றும் அவர் பரி
சுத்த ஆவியினாலும், அக்கினியினாலும், ஞானஸ்நானம் கொடுப்பவ
ரென்றும் யோவான் தெளிவாய் விளக்கியதாய் மாத்திரம் எழுதப்
பட்டதேயன்றி இயேசுவைத் தேவகுமாரனென்றும் தன்னைப்போல
(அதாவது யோவானைப்போல) மனிதக்குமாரனல்ல, வென்றும்
சொன்னதாகக் காணப்படவில்லையே; எமது நேயர்களே! உங்கள்
வேதத்தின் அடிபீடமாகிய யோவானின் விளம்பரத்தில் காணப்
படாத (தேவகுமாரன்) என்ற வார்த்தையை நீங்கள் எங்கிருந்து
கண்டு பிடித்தீர்களோ? நேயர்காள் நீவீர்கள் ஆட்சேபிப்பீர்களோ?
யோவான் இயேசுவின் பாதரட்சையைச் சுமக்கச் சக்தியில்லாதவ
னென்றும் அவனே தானே சொல்லியிருக்கிற படியிருக்க அவர்
(இயேசு) தேவகுமாரராகத் தானே இருக்கவேண்டும்? என்று
ஆட்சேபிப்பீர்களோ? யோவான் தீர்க்கதரிசியன்றோ. ஆகை
யால் அவன் தீர்க்கதரிசியாகிய இயேசுவின் பாதரட்சையை எங்
ஙனம் சுமப்பான்? சுமக்கமாட்டான். ஆகையால் யோவான் அப்
படிகூறியது, நியாயமேயன்றி நீங்கள் நினைக்கிறபடிப்போல, இயேசு
தேவகுமாரனென்கிற கருத்து யோவானுக்கு இருந்ததில்லை;
அப்படி இருந்தால் அந்த யோவான் தெளிவாய் அவரைக் குறித்துச்



சொல்லவேண்டியதான, வேத அடிபீடமான வார்த்தையைவிட்டு
விடுவானா? அப்படி விடுவதற்காகவா முன்னறிக்கை செய்யவந்
தான். இயேசுவைத் தெளிவாய் வெளிப்படுத்தவந்த யோவான் வெளி
படுத்த வேண்டிய சுவிசேஷத்தை மறைப்பானா? அப்படி மறைப்
பவனாகிய யோவானைக்குறித்தா ஏசாயா தீர்க்கதரிசி 740-வரு
ஷங்களுக்கு முன் அறிவிக்கவந்தார்? ஐயோ! அப்படி இயேசு
வின் முக்கிய பெருமையை ஒருபோதும், அந்த யோவான் மறை
த்தவனென்று நீவிர்கள் சொல்லமாட்டீர்களென நம்புகிறேம்.
இதோ நேயர்காள்! மாற்குவேதம் 1-ம் அதிகாரமோ வெனில்,
"7 - அக்காலத்திலே, அவன் (யோவான்) பிரசங்கம் பண்ணின
"தாவது என்னிலும் அதிகவல்லமையுடையவர் எனக்குப் பின்
"வருகிறார். அவருடைய பாதரட்சையின்வாரை குனிந்து அவிழ்க்கிற
"தற்கு நான் பாத்திரவானல்ல 8 - நான் சலத்தினாலே உங்களுக்கு
"ஞானஸ்நானம் கொடுத்தேன், அவர் பரிசுத்த ஆவியினாலே உங்
"களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று யோவான் கூறின
தாகக் கூறுகின்றது. இதனாலே இயேசுவின் பாதரட்சையின் வாரு
களைக் குனிந்து அவிழ்க்கத் தன்னால் முடியாதென்றும் அவர் பரி
சுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பாரென்றும், பிரசங்கித்
ததாக மாத்திரமே யன்றி, இயேசு தேவகுமாரனென்று கூறின
தாகக் காணப்படவில்லை. ஆனால் நண்பர்களே! உங்கள் வேதவழக்
கப்படி மத்தேயுடன் மாற்கு வேதவசனங்களில் வித்தியாசப்பட்
டதாக மாத்திரம் காணுவீர்கள். என்றாலும் அந்தவேத கருத்தாக்
களுக்கிடையில் தேவகுமாரனென்று இயேசுவைச் சொல்லவில்லை
என்ற விஷயத்தில் பேதமில்லா திருப்பதை மாத்திரம் ஞாபகத்
தில் வைக்கவேண்டியது. இதோ லூக்கா வேதம் 3-ம் அதிகா
ரத்தைப் பாருங்கள்.

"16 - யோவான் எல்லாருடனேயும் சொன்னது; நான்
"சலத்தினாலே உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன்.
"என்னிலும் அதிக பலத்தவர் வருகிறார் அவரின் பாத
"ரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கு நான் பாத்திர
"னல்ல, அவர் அக்கினியினாலும் பரிசுத்த ஆவியினாலும்
"உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார்" என்று யோவான்
கூறினதாகக் கூறுகின்றதே யன்றி அவரைத் தேவகுமாரனென்று
கூறினதாகக் காணப்படவில்லையே. நேயர்காள்! மத்தேயு, மாற்கு

லாக்கா இந்த வேதங்களை, யோவான் கூறினதாகக்கூறும், விஷ
யத்தில் ஒன்றோடொன்று வசனத்தில் ஒற்றுமை பட்டிருப்பதா
கக் காணமாட்டீர்கள். அதனாலே யோவானின் வாக்கியத்தைக்
கேட்டபடி வெளியிட்டவன் ஒருவனும் இல்லை என்றும் யோவான்
பிரசங்கித்த வசனங்களின் கருத்தைப்பற்றி, மாத்திரம் வசனபே
தங்களுடன் எழுதப்பட்டன வென்றும் நன்னெறி நூலோர்க்கு
ஒருபோதும் மறையாது. ஒருவனுடைய வாக்கியங்களை, அவனுரை
கேட்டபடி சொல்ல இயலாதவனாகிறவன், சாட்சியம், எவ்வளவு
நம்பப்படு மென்பது இப்போதைய சட்டதாரிப் பரியங்களாலும் நன்
குவிளங்குமன்றோ? அப்படியிருக்க, வேதமென்று நம்புதற்கு அரு
கமான நூலானது ஒரு அட்சரபேதமும் இன்றிக் காதினால் கேட்
கப்பட்ட விதமாகவே எழுதப்பட்டிருத்தல் வேண்டு மென்பது
முன்னும் கூறினும். ஒருவன் அதாவது ஒரு வித்துவான் அல்லது
தேவ அருள் பெற்ற பெரியோன் அல்லது வேதகருத்தா முதலா
கிய வல்லமை பொருந்தியவன் பேசினனே யாயின் அப்படிபே
சும் அவனது வார்த்தைகள் அப்படியே காணப்பட்டால் அந்த
வார்த்தைக்கு இலக்கணார்த்தம், இலக்கியார்த்தம், யுத்தியார்த்தம்,
அனுபவார்த்தம், சந்தர்ப்பார்த்தம் காரணார்த்தம், அருத்தாபத்தி
யார்த்தம், எடுத்தலோசையார்த்தம், படுத்தலோசை யார்த்தம்,
குறிப்பார்த்தம் முதலிய அருத்தவகைகளால் பெறக்கூடிய அரு
த்தங்களின் ஆராய்ச்சி அளவை யாலே யாற்றலினாலே அந்த
வாக்கியங்களின் நிர்ணயார்த்தம் இன்னதெனக்கண்டு அதனாலே
பொருள் விளங்கி அதன்பயன் இன்னதென்று துணியவேண்டி
மென்பது மெய்யுணர்ந்தார் கொள்கை; விஷயம் இவ்வாறி
ருக்க, உங்கள் வேதம் வரைந்தவர்கள் வேதார்த்த வாக்கியங்
களில் ஒற்றுமையின்றிப் பல வேறுபாடாகக் கூறுவதினாலே, வேதம்
வரைந்த உங்கள் பெரியோர்கள் வேதவாக்கியங்கள் வந்தபடி எழு
தாதும் அதினாலே பெறக்கூடிய பயனை இன்னதென்று வரையா
தும் பொடுபோக்காய் விட்டுவிட்டகாரணத்தினாலோ அல்லது
வேதவாக்கியங்கள் எவ்வாறு வந்ததென ஆராயாது விட்டுவிட்ட
காரணத்தினாலோ அல்லது தந்தமக்குக் கிடைத்தபடியே யன்றி
உண்மை எது? என ஆராயாது பேதைமையினாலே விட்டுவிட்ட
காரணத்தினாலோ பலவாறு பேதப்பட வேதம் வரைந்து பாழா
யினார்கள்? யாமறியேம். எம்நேயர்காள்! வேதார்த்தம் சார்பும்
இலக்கண வகைகளைப்பற்றி இங்கு விரிப்போமாயின் அஃதொரு



நூலாக விரியுமென் றஞ்சி விடுத்தேம். விரிவேண்டினோர் எம்வே
தாகமங்களில் காணலாம். ஐயோ! உங்கள் வேதங்களோ வென்
றால், அட்சரபேதமா? வாக்கியக்கணக்காக அளவிறந்த பேதங்க
ளுக்குரியனவாய் அஞ்ஞானிகளாலே எழுதப்பட்டதாகக் காணப்
படுகின்றனவே நிற்க; யோவான் பிரசங்கித்தபடி இயேசுவானவர்.
பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும், யாருக்காவது ஞானஸ்
நானம் கொடுத்ததாக, உங்கள் வேதத்தில் எவ்விடத்திலாவது,
காணக்கூடுமோ? அப்படி இல்லாதிருந்தால், யோவான் அவ்வாறு
கப் பிரசங்கித்தது முழுதும் பொய்யாகுமன்றோ? அந்தோ! அங்
தப்படி இயேசுவானவர், பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்
கொடுத்திருந்தால், அவரின் சீஷர்களே அதற்கு முக்கிய பாத்தி
யஸ்தர்களா யிருந்தாரென்பது எமது நேயர்கள், எதிர்வாதமின்றி
ஒப்புக்கொள்வார்கள். பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறு
பவர்கள் யோவானாலே சலத்தினால் ஞானஸ்நானம் பெற்றவர்க
ளைப் பார்க்கிலும், அதிகசிரேட்டமும் மறுபடி பாவத்தில் முகம்
திரும்பாது பரலோக இராச்சியத்தைக் கிரயம் பெற்றவர்களாகவே
இருப்பார்களன்றோ? அப்படி யில்லாதிருக்குமாயின் பரிசுத்த ஆவி
யினாலே ஞானஸ்நானம் பெறுவதில் என்னபயன்? ஒன்றுமில்லை
என்றல்லவோ முடியும்? ஆகவே ஞானஸ்நானம் பரிசுத்த ஆவியி
னாலே பெறுபவர்கள் மிகச்சிரேட்டமான பெரியபதவியை அடைந்து
சகலபாவங்களை விட்டும் தூய்மையாயிருக்க வேண்டித்தானே இயே
சுக்கு அப்படிப்பட்ட வல்லமை இருப்பதாக யோவான் முன்ன
றிக்கையிட்டார்? அப்படியே உண்மைதான் என்று எமது நேயர்
கள் ஒப்புவார்களாயின் இயேசுவின் சீஷர்கள், இயேசுவைகாட்
டிக்கொடுக்கவும், அவரை விட்டு ஓடவும் அவர் ஜெபம் செய்யும்
படிச் சொன்னதைக்கேளாது நித்திரைசெய்யவுமாகிய பெரியபா
வங்களை ஏன் செய்தார்கள்? அவர்கள் பரிசுத்த ஆவியினாலே ஞான
ஸ்நானம் செய்யப்படவில்லையோ? அல்லது பேதமையோ? பரி
சுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெற்றவன் என்ன பேதையா
யிருந்தாலும் தீர்ந்த நிலைமையை எத்திக்கொள்வதில் யாதுதடை?
ஆகையால் இயேசு பரிசுத்த ஆவியினாலாவது அக்கினியினாலாவது
ஒருவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை என்பது பரிஷ்கார
மாயிருக்கின்றது. ஆகவே யோவானின் பிரசங்கமும் பொய்யே
யாயிற்று. நிற்க;- யோவானின் பிரசங்க விஷயமாய் யோவான்
வேதம்கூறுவதைப் பார்த்தால் முழுதும் மோசமாகக் காணலாம்

ஐயோ! மத்தே, மாற்கு, லூக்கா, இந்த மூன்று வேதகருத்தாக்க
ளாகிய மனுஷர்களின் வேதத்திலுள்ளவைகள் ஒன்றுமே அதில்
இல்லையே. எப்படியென்றால் இதோ பாருங்கள்; யோவான் 1-ம்
அதிகாரம் "29-மறு நாளிலே யோவான் இயேசுவைத்
"தன்னிடத்திலே வரக்கண்டு சனங்களுடனே சொன்ன
"தாவது; அவரே உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்
"க்குந் தேவ ஆட்டுக்குட்டி. 30-எனக்குப்பின் ஒரு புரு
"ஷர் வருகிறார். என்றும் அவர் எனக்கு முன் இருந்த
"படியால் என்னிலும் மேன்மையாயிருக்கிறார் என்றும்
"சொன்னேனே அவர் இவரே, 31-நானும் இவரை அறி
"யாதிருந்தேன். இப்பொழுது இவர் இஸ்ரவேலருக்கு
"வெளியாக்கப்படும் பொருட்டாய் நான் சலத்தினாலே
"ஞானஸ்நானம் கொடுக்க வந்தேன் என்றான், 32-பின்
"னும் யோவான் சாட்சியாகச் சொன்னதாவது; புறு
"வைப்போல் ஆவியானவர் வானத்திலிருந்து இறங்கி அவர்
"மேலே தங்கினதைக் கண்டேன், நான் அவரை அறிய
"வில்லை 33-அப்பொழுது சலத்தினாலே ஞானஸ்நானம்
"கொடுக்கும்படி என்னை அனுப்பினவர் என்னுடனே சொ
"ன்னது, நீ காணத்தக்கதாக ஆவியானவர் இறங்கித்தங்
"கப்படுபவர்யாரோ? அவரே பரிசுத்த ஆவியினாலே
"ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்றார்; 34-அந்தப்ப
"டியே நான் கண்டு இவரே பராபரனுடைய குமாரனென்று
"சாட்சிக் கொடுத்தேன் என்றார்" என்று பரிஷ்காரமாய்க்
கூறுகிறபடியினாலே இயேசுவைப் பராபரனுடைய குமாரனென்று
வானத்திலிருந்து சத்தம் வந்ததாகச் சொல்லுகிற வேதங்களுக்
குக்கு மாறாக, யோவான் வேதம் அந்த யோவான் ஸ்நானன்
தானே, இயேசுவைப் பராபரனுடைய குமாரனென்று சாட்சிச்
சொன்னதாகக் கூறுகின்றதென்பது எமது நேயர்களுக்குப் பரி
ஷ்காரப்படு மன்றோ? சகரியாவினுடைய மகனாகிய யோவான்,
இயேசுவைக்குறித்து முன்னறிவிக்கவந்து பிரசங்கித்ததாகச் சொல்
லும், மிகப்பிரபலமான விஷயத்தில், வேதங்களின் பேதமே
தங்களை எமது நேயர்கள் காண்பாராயின் அவ்வாறுகப் பேதப்



டும் வேதங்களில் எதைநம்பி எதை நம்பமாட்டோ மென்பர்களோ?
யாம் அறியேம். இதுவேயுமன்றி அந்த சகரியாவுடைய மகனாகிய
யோவான் கிறிஸ்து நாதரை இன்னாரென்று அறியா தவராகக்
கண்டபடியினாலே அவரை இன்னாரென்று, அதாவது பரிசுத்த ஆவி
யினாலே ஞானஸ்நானம் கொடுப்பவர் அவரே என்று யோவானுக்கு
அறிவிக்கப்பட்டதே யொழிய, அவர் தேவக்குமாரனாயிருக்கிறார்
என்று அறிவிக்கப்படவில்லை என்பதுவும் பரிஷ்காரப் படுகின்
றதே. மேலும் இயேசுவானவர் யோவானிடத்திலே ஞானஸ்நானம்
பெற்றதாக யோவான் வேதத்தால் கொஞ்சமும் காணப்படவில்லை.
மத்தே, மாற்கு, லூக்கா இவ்வேதங்களோ இயேசு யோவானிடத்
தில் ஞானஸ்நானம் பெற்றதாகக் கூறுகின்றனவே. இந்த வேதங்
களில் எந்த வேதம் நம்பப்படுமோ, இயேசுநாதர் தகப்பனின்றிப்
பிறந்த காரணத்தினாலே அவர் தேவக்குமாரனென்று அநேகர்வா
திக்கிறார்கள், இந்தயோவான் வேதத்தினாலேயோ வெனின் ஆவி
யானவர் இறங்கி இயேசுவின்மேல் தங்கின காரணத்தினாலே இயே
சுவைத் தேவகுமாரனென்று யோவான் சாட்சி சொன்னதாக மீன்
பிடி யோவான் வேதம் கூறுகின்றது; எமது நேயர்கள் எதை
நம்பி இயேசுவைத் தேவகுமாரன் என்பார்களோ? தெரியவில்லை.
சகரியாவுடைய மகனாகிய யோவான் இயேசுவைத் தேவகுமாரன் என்று சொன்னதாகக் காணப்பட
தாவின்படி, தேவக்குமாரன் என்று சொன்னதாகக் காணப்பட
வில்லை. அவன்தானே இயேசுவைத் தேவகுமாரன் என்று சாட்
சிசொன்னதாகத்தான் தெரிகிறது. யோவான் ஏன் தன்னுடைய
இஷ்டப்படி இயேசுவைத் தேவகுமாரன் என்று சொன்னார்? அப்
படி அவர் சொன்னதாகச் சொல்லுவதனால் இப்படிப்பட்ட கடா
க்ஷமு மென்றுதான் மத்தே, மாற்கு, லூக்கா இவர்கள் வானத்தி
லிருந்து சத்தம் வந்ததென்று புழுகினார்கள் போலும்; "சாபாஷ்"
நன்றாயிருக்கின்றதே எமது நேயர்காள்! சகரியா உடைய மகன்
(இயேசுவைக்குறித்து முன்னறிவிக்க தேவவல்லமை பெற்று வரு
வாரென்று, இயேசு பிறக்க 740-வருஷங்களுக்கு முன்னேயே
ஏசாயா தீர்க்கதரிசியினாலே வெளியிடப்பட்ட) மான்மியம் உடை
யவ ராகையால்; அப்படிப்பட்ட யோவான் இயேசுவைக்குறித்து
தேவக்குமாரன் என்று சொன்ன சாட்சியும், ஏன் நம்பப்படமாட்
டாது என்பீர்களோ? அப்படி நம்புவீர்களானால் அந்த யோவான்
இயேசுவைத் தேவ ஆட்டுக்குட்டி என்றும் சாட்சி கொடுத்திருக்
கிறபடி அவரைத் தேவ ஆட்டுக்குட்டி என்றும் அவ்வாட்டுக்குட்டி

யின் தந்தையாகிய உங்கள் தேவனை, ஒரு ஆட்டுக்கடா வென்
றும் பெயரிட்டு வழங்குவீர்களா? அப்படி வழங்கமாட்டோமென்
பீர்களேல்; இயேசுவைத் தேவகுமார னென்றும் தேவனேப்பிதா
வென்றும் சொல்லமாட்டீர்களன்றே? ஐயோ! இயேசுவானவர்;
பாவங்களைச் சுமந்து தீர்த்த தேவ ஆட்டுக்குட்டி என்று யோவான்
சாட்சி சொன்னபடி உண்மையா யிருப்பினும் அவர் இஸ்ரவேலர்
எல்லாருடைய பாவங்களையும் சுமந்து தீர்த்தாரொழிய அவர் உல
கத்திலிருந்து போகப்படாதன்றே? ஆம் அப்படியே சனங்களின்
பாவங்களைச்சுமந்து தீர்த்தா ரென்றால், உலகத்துப் பாவங்களெல்
லாம் இயேசுவின்மேல் பொதிந்து எல்லாசனங்களும் நிர்தோஷிக
ளாக இருத்தல் வேண்டும். ஆகவே பெரும்பாவ மூட்டையைச்சுமந்த
காரணத்தினுலேயே, அவர் சிலுவையில் அறையப்பட்டு உயிரிழந்
தாரென்று சொல்லப்படுவார். அவர் அப்படிச் சொல்லப்படுவது
எமது நேயர்களுக்கு பொருந்துமா? அய்யோ! அது பற்றித்தான்
யோவான் அவரை ஆட்டுக்குட்டி என்றாரோ? ஆட்டுக்குட்டியா
னது அடிக்கப்படும் வஸ்துக்களில் ஒன்று என்றும், கருத்தைப்
பற்றியோ அப்படிச்சொன்னார்? அந்தோ! ஆட்டுக்குட்டியானது
அடிக்கப்படும் சுபாவமுள்ளது. தாயினும் மூட்டைகள் சுமக்கும் சுபா
வமுள்ள தல்லவே? அதிகம் பாபமூட்டையாகையால் அதற்குறி
யகழுதைக்குட்டி வேண்டு மென்பது யாவர்தான் மறுக்கற்பாலது?
அய்யோ! மஹாகனம் தங்கிய இயேசு நாதரைப் பாபம் சுமப்பவ
ரென்றும் ஆட்டுக்குட்டி என்றும் இகழ்ந்துள்ள புத்தகத்தை வேத
மென்று ஒப்புபவர்களின் புத்தி நுட்சண்ணியத்திற்கு யாம் என்ன
செய்யலாம்; நாம் இயேசுவை மஹத்தாகிய நபிகளில் ஒருவரெ
ன்று ஒப்புக் கொள்வதினாலே அவர்கள் விஷயமாய் ஒன்றும்
குறைவுபட எழுத எம்மனம் பொருந்திலது எமது நேயர்களில்
ஒரு சாதாரண மிர்துக்களோ வெனின்; இந்த இடத்தில் கிறிஸ்
தவ நேயர்கள் மிக வெட்கிக்கும்படி கைகூசாது எழுதிவிடுவார்
களா என்பதில் யாதுதடை? நிற்க; இயேசுவானவர் சனங்களின்
பாவங்களைச் சுமந்து விட்டா ரென்றால் இஸ்ரவேலரில் ஒரு பாபி
களும் இருக்கவே மாட்டார்களன்றே? அவர்களில் பாபிகள் இருக்
கிறார்களென்றால், இயேசுவானவர் அவர்களின் பாவங்களைச் சுமக்க
வில்லை என்று தானே ஏற்படும்? யோவான் சொன்னபடி இயேசு
வானவர் பாவங்களைச் சுமந்து தீர்ப்பவராயிருந்தால், அப்படி ஏன்
சுமந்து தீராது பாபிகளை மீதிவைத்து விட்டார்? என்றும் கடா

THE REGISTRAR OF ... 2 AUG 1913 ... MADRAS



கிறதுமன்றே? எமது நேயர்களே இயேசுவானவர் பாவங்களைமுற்
றும் சுமக்கும் தன்மையுள்ளவராயின் அந்தக் காலத்தில், ஒருபா
பிகளும் இல்லாது எல்லாரும் அவர்களின் முதுகில் பாவங்களை
போட்டு விட்டு அவரின் சுவிசேஷத்திற்குச் செவிசாய்த்து விடு
வார்களன்றே? நேயர்காள்! இயேசுவின் பிரசங்கத்திற்கு செவி
சாய்ந்தார் இயேசுவைச் சிலுவையில் அறைகின்ற காலத்தில் 10 -
அல்லது 12 - பேர்களுக்கு அதிகம் ஒருவரும் இல்லையே அந்தப்
பத்து பன்னிரண்டு பேர்களின் பாபத்தைச் சுமந்த காரணத்தினுலே
தான் இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டாரோ? என்னவோ?
நீங்கள் என்ன சொல்வீர்களோ? ஆச்சரியம்; யோவானின் பிர
சங்கத்திற்கும், ஞானஸ்நானத்திற்கும் செவிகொடுத்தவர்களின்தொ
கையில் பதினுயிரத்திலொரு பாகஸ்தர்கூட இயேசுநாதருக்கு அந்தக்
காலத்தில் செவிகொடுக்க வில்லையே. இப்படிபட்ட எல்லாவிஷ
யங்களையும் கவனிக்கப் புகுந்தால் இதைப்பற்றி வேதங்களில் கூறு
பவைகளெல்லாம். முழுதும் கற்பனையே யொழிய நடந்த விஷய
மாகக் காணப்பட மாட்டாது. மேலும் அந்தயோவான் பிரசங்கித்
தாரென்றும் ஞானஸ்நானம் கொடுத்த சனங்களை மனம் திரும்
பும்படிச் செய்தா னென்றும் அப்படி சனங்கள் இயேசுவைக்கு
றித்து மனம் திரும்பும்படி ஞானஸ்நானம் கொடுத்தான் என்றும்,
பிறவுமாகச் சொல்லப்படும் அனைத்தும் ஒரு பெருங்கற்பனையே
என்று புத்தி சாதுரியமுள்ள எவன்தான் ஒப்புக்கொள்ளானே?
அந்தப்படி இஸ்ரவேலர்கள் மனம் திரும்பினதாகக் காணப்பட
வில்லையே; ஆகவே எமது நேயர்காள்! இயேசுவைப்பற்றி முன்
னறிவிக்குமாறு வெளிவந்த யோவானின் பிரசங்கமாகிய வேத
அஸ்திவாரமாகும் விஷயத்தில் இவ்வாறான பொய்யும் பேதாபே
தங்களும் வேதம் வரைந்த கருத்தர்களாகிய மத்தேயு, மாற்கு,
லூக்கா, யோவான், இவர்களுக்கிடையில் உண்டாயிருந்தால், அந்த
வேதங்களைப்பற்றி இனிச் சொல்ல வேண்டுவது என்ன இருக்கி
றது? எமது நேயர்களே! இந்த விடத்தில் நாம் எடுத்துக்கூறிய
தேயு மன்றிக் கூறுதனவும் பல இருக்கின்றன. நீவீர் இவ்வழியே
மற்ற பேதாபேதங்களையும் நோக்கிக் கவனிப்பீர்களாயின் மறுமுறை
உங்கள் வேதத்தையும் மார்க்கத்தையும் ஒருபொருள் பண்ணவே
மாட்டீர்களென்று விடுகின்றேம்.

# "யோவான் தீர்க்கதரிசனம்."

இது யோவானின் தன்மையைக்குறித்துக் கூறுகின்றது.

எமது கிறிஸ்தவ நேயர்களே! சகரியாவுடைய மகனாகிய யோவான் இஸ்நானகன் தீர்க்கதரிசி என்று நீவிர்கள் நம்புவீர்களா? அல்லது சாதாரணமான ஒரு மனிதனென்று நம்புவீர்களா? எதை நம்புவீர்கள்? ஏனென்றால்; ஒரு தீர்க்கதரிசியைத் தீர்க்கதரிசி அல்லவென்றாலும், ஒரு தீர்க்கதரிசி அல்லாதவனைத் தீர்க்கதரிசி என்றாலும் மன்னிக்கப்படாத பெரும் பாபமாயிருக்கும்; ஆதலால் அவ்வவர் தகைமைபடி அவ்வவர்களை நாம் மதிக்க வேண்டுமென்பது நன்கு விளங்கும்பாலதே. ஆகவே யோவானை எத்தன்மையுள்ளவரென்று நிதானிப்பீர்கள்? அவரைத் தீர்க்கதரிசி என்றே நிதானிப்போமென்பீர்கள். ஏனென்றால், லூக்கா வேதம் 1-ம் அதிகாரம் "67 - அன்றியும் அவனுடைய தகப்பனாகிய சகரியா பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டுத் தீர்க்கதரிசனமாகப் பகர்ந்ததாவது; 79 - இவ்விதமாக அவருக்காக மார்க்கத்தைச் செம்மையாக்கும் பொருட்டாக அவருக்கு முன்னே நடப்பாய் ஆகையால் நீ எல்லாரிலும் மேன்மையானவருடைய தீர்க்கதரிசி எனப்படுவாய்" என்று சொல்லியிருக்கிறதே. ஆதலின் (யோவானைத் தீர்க்கதரிசி) என்பீர்கள் போலும், அப்படியானால் யோவான் வேதம் 1-ம் அதிகாரம் "21 - அப்பொழுது அவர்கள் அவனை (யோவானை) நோக்கி அப்படியானால் நீர் யார்? எலியாவா? என்று கேட்டார்கள். அதற்கு அவன் நான் அவன் அல்ல என்றான், அவர்கள், நீர் தீர்க்கதரிசியானவரா? என்று கேட்டதற்கு அவன் அல்லவென்று சொன்னான்" என்று கூறுகின்றதே. இதனாலே யோவான் தானே தீர்க்கதரிசி அல்லவென்று சொல்விட்டதாக நன்கு புலப்படுகின்றது. ஆகையால் எம் நேயர்கள் யோவானைத் தீர்க்கதரிசி என்பீர்களா? அல்லவென்பீர்களா? அந்தோ! ஒருவரைத் தீர்க்கதரிசி என்றும் அல்லவென்றும் மயங்குகிற வேதங்களை என்னென்று நம்புகிறதோ? அப்படிப்பட்ட வேதங்களும் வேதந்தானோ? அந்தோ சகரியாவானவ



வர் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டுயோவானை எல்லாரிலும் பெரியவராகிய தேவனது தீர்க்கதரிசி என்று சொல்லி யிருக் கிறதாக லூக்காவும், யோவான் தானே தன்னைத் தீர்க்கதரிசி யல்லவென்று விண்ணப்பம் செய்ததாக யோவானும் (எதிரிடை யாக வழியின்பாய் நின்றால்) எந்தவழியை நம்புகிறதோ. சகரி யாவை நம்புவோமென்றால், யோவான் பொய்சொன்னதாகக் காணப்பட்டு, யோவானால் சொல்லப்பட்ட அத்தனையும் இழவு படக் கிடக்குமே. எந்த இழவைக்காணுவீர்கள்? நேயர்களே உங் கள் வேதங்கள் அடிக்கடி முக்கியமான விஷயங்களில் பேதகப் பட்டது ஒன்று படக்காணவே மாட்டீர்களாயின் என்ன செய்வீர் களோ? லௌகிக விஷயத்தில் மஹாபுத்தி சாதுரிய முள்ளவர்க ளென்று பெயர் கூறப்பட்ட நீவிர்கள் வேத விஷயத்தில் மாத் திரம் இவ்வாறாக அநாகரீகப் பட்டிருப்பதற்கு நீவிர்கள் வேத ஆராய்ச்சி செய்யாமல் பாதிரிமார்கள் தலையிலேயே விட்டு அத விஷயத்தில் அகலநிற்பதுவே காரணமென்பாம், அந்தோ! லௌகி க விஷயத்தில் எவ்வளவு ஆராய்ச்சிசெய்து, குபேரனாகவாவது உலக த்தை யெல்லாம் வாரி தலையில் சுமக்கும் சக்கரவர்த்தியாக வாவது ஆயினும் ஒரு சிறு பொழுதிலே அவ்வளவும் இழந்து வெள்ளைத் துணியோடு செல்லும் நேரம் அவனைத்தொட்டுவிடும். ஆகவே அந் நேரத்தில் அவன் நம்புதற்கு அருகமான தல்லா தவைகளை நம்பி காலத்தை வீணே கழித்ததினாலுண்டான நட்டத்தைக் காணுவன். அப்போது லௌகிக ஆராய்ச்சியினா லடைந்திருந்த பிரயோசனங் கள் ஒன்றும் உதவாமல்போய் கை சேதவாளனாகுவன் என்பது உண்மை; ஆகவே உங்களை இவ்வுலக காரியங்களைவிட்டு நீங்கும்படி பிடித்துக்கொள்ளுகிற ஒரு காலம், உங்கள் உயிர் நரம்பைவிடசமீ பமாயிருக்கின்றதென், நினைத்து வேத ஆராய்ச்சிசெய்து செல்லும் வழிக்கு வேண்டிய, பிரயாண முஸ்திபுடனே யிருப்பீர்களாக வென்றுயாம் சொல்ல பின்னிடோம். இதோ நேயர்கள் இன் னும் பாருங்கள், யோவான் 1-ம் அதிகாரம் "24 - அப்பொ "ழுது அனுப்பப்பட்டவர்களாகிய பரிசேயர், பின்னும் "அவனை நோக்கி 25 - நீர் கிறிஸ்துவும் அல்ல எலியா "வும் அல்ல தீர்க்கதரிசியும் அல்ல என்றால் நீர் ஞான "ஸ்நானத்தை எப்படி கொடுக்கலாம் என்றார்கள். 26 - "அதற்கு யோவான் சொன்னது நான் ஜலத்தினாலே ஞான

"ஸ்நானம் கொடுக்கிறேன்" என்று யோவான் கூறினதாக நன்றாய் வெளியாகின்றது. இதனாலே ஞானஸ்நானம் சலத்தினாலே கொடுப்பவர்கள் தீர்க்கதரிசி அல்லவென்றும் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பவர்களே தீர்க்கதரிசி என்றும் புலவிளங்குவதுமன்றிப் பரிசுத்த ஆவியானவர் தங்கப்படுபவரே பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுப்பவரென்றும் நன்கு உணருங்கள்; நேயர்காள்! இந்த யோவானின் வாக்கியத்தினாலே, இரண்டு ஆழமாகிய கருத்துக்கள் வெளியாகின்றன. ஒன்று யோவான் தீர்க்கதரிசியன்று என்பதூஉம், இரண்டாவது பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பவர்களே தீர்க்கதரிசிகளென்பதுமே. ஆகையால் சலத்தினாலே தீர்க்கதரிசிகள் ஞானஸ்நானம் கொடார்களே பரிசுத்த ஆவியினாலேதானே ஞானஸ்நானம் கொடுப்பார்கள். அப்படி இருக்க பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பவர் என்று இயேசுவைக்குறித்து யோவானுக்கு பராபரனால் அறிவிக்கப்பட்டால் அந்தக்காரணம் பற்றி இயேசுவைக் கடவுளின் குமாரனென்று யோவான் எப்படி சாட்சி பகருவாரோ? புத்தியுள்ள எமது கிறிஸ்துவ பண்டிதர்களே! சற்று கவனியுங்கள்! எல்லா தீர்க்கதரிசிகளும் அதாவது பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுப்பவர்களாகிய தீர்க்கதரிசிகளெல்லாம் கடவுளின் குமாரர்களன்றோ இருக்கவேண்டும்? எமது நேயர்காள்! இங்ஙனம் சற்று கவனிப்பீர்களாயின் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் கொடுக்கும் காரணம் பற்றி இயேசுவானவர் தேவக்குமாரராகமாட்டாரென்பதையும் ஞாபகத்தில் வைப்பீர்கள். கடைசியாய் யோவான் இஸ்நானன் எமது கிறிஸ்துவ நேயர்களாலே தீர்க்கதரிசி என்றாவது சாதாரண ஒரு நீதிமானென்றாவது சொல்லுதற்கு அவர்களின் வேதம் இடங்கொடுக்காமல் அவர்களைப் பங்கம் செய்திருக்கிறதென்றும், ஒரே விஷயத்தில் வேதங்கள் இத்தலைவிபரீதப்படுகிற வேதமுறை அல்லவென்றும் எமது நேயர்கள் நம்பி அப்படிப்பட்ட புத்தகங்களை வேதமென்று ஒப்பமாட்டார்களென யாம் நம்புகிறோம்.

# "இயேசு"

"இது, இயேசு எனப்படுபவர் எப்படிப்பட்டவர் என்பதைக் கூறுகின்றது."

எமது நேயர்களாகிய கிறிஸ்து வேதபண்டிதர்களே! எம்மனோர் எல்லாராலும் ஒருங்கே மதிக்கப்படுகின்ற "மஸீஹ்" எனப்படும் இயேசுவானவர் மஹா உன்னதமான ஒப்பற்ற கருத்தாவினது ஊழியக்காரரான "நபி" கள் என்னும் தீர்க்கதரிசிகளினின்றும் ஒருவர் என்பது சாட்சி வேண்டாது வெள்ளிடையாய் விளங்கிக் கிடக்கின்றது. தீர்க்கதரிசி என்பது, நிரம்பக் காண்பவர் என்னும் பொருளது; ஆகவே "நபி" என்பதற்குத் தீர்க்கதரிசி என்பது பொருளாகாது. சிறிய பெரிய பாவங்களை விட்டு காருமானமும் மனுஷர்களின் நன்மையின் பொருட்டு தேவனாலே பெறப்படும் உத்திரவுகளில், ஒரு சிறிய அட்சரபேதமுமின்றித்தாம் அறிவிக்கப்பட்ட விதமாகவே அறிவிக்கும், பூரணயோக்கியமும் உடைய தூதவர் என்னும் பொருட்டதென்பர் எம் வேதபாடையார். இவ்வாறிருக்கும் உண்மையை நோக்காது, கிறிஸ்துவேதமாகிய பைபிளுக்குத் தமிழில் மொழிபெயர்த்தவர்களால், நபி என்பதற்குத் தீர்க்கதரிசி என மொழிபெயர்க்கப்பட்டுத் தமிழ்தேசப்பிரசித்தமாய் விட்டபடியால், யாமும், அவ்வாறே வழங்குவனாயினேம். அதுபற்றி எம்மனோர் எம்மை இகழற்க. நிற்க; எமது நேயர்களே! நீவீர் கிறிஸ்து நாதரவர்களை, நபியென்று சொல்லுவதைப் பார்க்கிலும், அதிக சிரேட்டமுடையவராயிருக்கின்றாரென்று சொல்லுவதற்காகவா அவரைத் தேவகுமாரன் என்கின்றீர்கள்? இதோ பாருங்கள்; நபி என்பது ஒரு சாதாரணமான தத்துவமன்று; அத்தத்துவமோவெனின்; சர்வாதிகாரக் கருத்தாவாகிய ஒப்பற்ற ஜல்லஷானுஹுதஆலாவினாலே தனது அடிமைகளில் நின்றும், தானுடைய ஒருவருக்கு யாதொரு காரணமின்றிக் கொடுக்குந் தத்துவங்களில் மிகச்சிறப்பிற்றிருந்த ஒன்றென்பதை மறுக்கப்படாதென்பது வேதப்பிரமாணம் என்றதற்கு நமதுவேதங்களே சான்றாயிருக்கின்றன. அப்படியாக உயரிய நபி எனும் தத்துவமுடையாரில் சிலர் "[illegible]ல்", என்றும் "உலுல் அஜம்" [illegible]கின்றார்கள். ஆகவே "நபி" என்றும் இருதரமாக உயர்த்[illegible] கூற்றுரில் உலுல் அஜம் றசூல் உலுல் அஜம் என்னும் மூன்று

என்பாரே முதன்மைத் தத்துவமுடையாரெனவும் றசூல் எனப்படுவார் இரண்டாந்தத்துவம் உடையாரெனவும் படுவார்கள். ஆயினும் றசூல் என்றும் உலுல் அஜம் என்றும் சொல்லப்படுபவர் நபி என்றும் சொல்லப்படுவார். உலுல் அஜம் என்பவர்கள் றசூலென்றும். சொல்லப்படுவார்கள் ஆகவே எமது நேயர்கள்; நபிகள் எனப்படும் எல்லாரும் றசூல்களாகார்களென்றும், றசூல்களாகுவா ரெல்லாரும் உலுல் அஜம்களாகார்களென்றும் கவனிப்பார்களாக. இங்ஙனமாக "நபி" றசூல், உலுல் அஜம் எனப்படும் உயரிய பட்டத்தார்களுக்கிடையில், அவ்வவர்களுக்கு கொடுக்கப்படும் தத்துவத்திலும், பதவியிலும் முதல்தரம் இரண்டாந்தரம், மூன்றாந்தரம் என்னும் பிரிவுகளிருக்கின்றன. அவ்வாறான பிரிவுகளின் முறைமைப்படி இங்ஙனம் விவரித்துக் காட்டுவது அவசியமென்று எமக்குத் தோன்றவில்லை. ஆனால் மனுஷஜாதியிலேனும், மலக்குகளெனும் தேவர் ஜாதியிலேனும் அதாவது கடவுள் நீங்கலாக பிறவற்றாகிய சிருட்டிகளின்மேல் கூறிய தத்துவம் பெற்றவர்களைப் பார்க்கிலும் சிரேட்ட முடையார் இல்லை என்று சொல்லுவ தொன்று மாத்திரம் இவ்விடத்தில் விரித்துக்கூற வேண்டியதென நினைக்கிறேம். விஷயம் இவ்வாறாக; எமது கிறிஸ்துவ நேயர்கள் இயேசுநாதர், மேல் கூறிய மூன்று தத்துவமுடையாரில் எத்தரத்தினரென்று அறியநாடுவார்களாயின் நாம் இயேசுவை முதன்மை தத்துவ முடைய உலுல் அஜம்களில் ஒருவர் என்றும் அவருடைய உயர்தர நிலைமையில் மற்ற றசூல்களாவது நபிகளாவது செல்லமாட்டார்களென்றும் பரிஷ்காரமாய்ச் சொல்லுவேம். இங்ஙனமாக, இயேசுநாதரை உயர்த்திக் கூறும் தன்மை புணராத மூடர்களே! அவரைக் கடைசியாய்ச் சொல்லும் பட்சத்தில் தேவக்குமாரன் என்பதே நன்றென்றும், புகழென்றும், பெருமை பாடென்றும் நினைத்து, அப்படி கூறவாறாய்க் கடைப்பட்டீர்களா? அல்லது, புருஷ சம்பந்தமின்றி பிள்ளைபிறத்தல் கூடாதென்று நினைத்து அப்படிசொல்ல முன்வந்தீர்களா? அல்லவெனின் யோவான் இஸ்நாநன், இயேசுமேல் பரிசுத்த ஆவியானவர் இறங்கினதைக்கண்டு அவரைத் தேவகுமாரனென்று சாட்சி கொடுத்திருக்கிலையா? பேதமை காரணமா? அவரைத் தேவகுமாரனென்று சொல்ல முன்வந்தீர்கள்? ஐயோ! கிறிஸ்துநாதருக்கு ஒப்பற்ற கர்த்தாவினாலே கொடுக்கப்பட்டிருக்கிற உன்னதமான பெருமைக்கு ஓரெல்லை இல்லாது அகன்று கிடப்ப அதை



நீவீர் அறியாது நீவிர்தாமே, அவரைப் பெருமை படுத்துவான்க ருதினீர்களாயினும் பெருமை படுத்தும் முறைமை தெரியாதுமன் னிப்பில்லாதப் பயங்கரமானவும் முடிவில்லாதவுமான தண்டனைக்கு ...ர்கள்தாமே காரணமாக அவரைத் தேவகுமாரன் என்று தேவ னுக்கு அவரைச் சாயலாக்கி தேவனை அவருக்குச் சாயலாக்கிமுன் பின்னோக்காது ஒரே மூச்சாய்ச் சொல்லுவானேயினீர்கள்? ஐயோ! நேயர்களே! இயேசுநாதருக்கும், அவரைப் போன்றவர்களுக்கும், கர்த்தரால் கொடுக்கப்பட்ட பதவியினாலே கர்த்தர் ஒழிய ஏனைய சிருட்டிகளெல்லாம் அந்நாயகருக்குக் கரங்குவித்துச் சேவிக்குமாயின், பின் என்னதான் அவர் பெருமைக்குக் குறைவுவருமென்று எண்ணினீர்களோ? நேயர்காள்! ஊழியக்காரராகிய "நபி" மார்களது பதவியைக்குறித்துக் கொஞ்சம் விவரிக்க நாடினோமாயினும் அதற்கு இச்சிறிய கிரந்தம் இடம் போதாதென்று நிறுத்துகின்றேம். தேவசகாயம் பெறுவேமாயின் அந்நபிமார்களைக்குறித்து ஒரு கிரந்தம் எழுதுவேம். நிற்க.

எமது கிறிஸ்துவநேயர்காள்! இயேசுநாதர்; ஊழியக்காரர்களெனும், நபிகளில் நின்றும் ஒருவரேயன்றி நீவீர்கள் நினைக்கிறபடி தேவகுமாரன் [எனப்படாரென்பதை, உங்கள் வேத பிரமாணங்க ளாலேயே எடுத்துக் கூறுவான்முன் வருகின்றேம், தயைகூர்ந்து ச...மனதினராய் நின்று, ஆராய்ந்து உண்மையைக் கடைபிடித்து உய்வீர்களாக; நாம் உண்மையைநோக்கி ஒழுகுவதே வணக்கமாகையால் அவ்விசயத்தில் மன வைராக்கியத்தையும், நாம் பிடித்ததையே சாதிக்கவேணுமென்கிற அகங்காரத்தையும் புறம்பே போக்கிவிடுவது அத்தியாவசயமென்று நீவிர்களும் அறிந்த விஷயமே, ஆகையால் சற்றுச் செவிசாய்த்துக் கேட்பீர்களாக;—ஆமன்.

இதோ; நேயர்காள்! 5 மோசே 18-ம் அதிகாரமோ வென்னின்;—"15 என்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை உன்
"பரம்பரனாகிய கர்த்தர் உனக்கு உன்னடுவே உன்சகோ
"தரரிலிருந்து எழும்பப் பண்ணுவர். அவரைக் கேட்பீர்க
"ளாக 18 நாம் உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை அவர்
"களுக்கு அவர்களின் சகோதரரின் நடுவிலே இருந்து
"எழும்பப்பண்ணி நம்முடைய வார்த்தைகளை அவருடைய
"வாயிலே கொடுப்போம், நாம் அவருக்குக் கற்பிப்பதை

"யெல்லாம் அவர்களோடே சொல்லுவார்" என்று கூறுகின்
றது. எம்து நேயர்களே இந்த 15-18 வது வசனங்களில் கூறப்
பட்ட தீர்க்கதரிசியானவர் இயேசுவென்றே நீவிர்கள் நம்புகின்றீர்
களன்றோ? ஆகவே நீங்கள் நம்புகிறபடி இயேசுவானவர் இஸ்ர
வேலர்களின் சகோதரரென்றும், அவர் மோசேயேபோன்ற ஒரு
தீர்க்கதரிசியென்றும் அவ்வேத வசனங்களாலே நன்கு புலப்படு
கின்றன வென்பது மறுக்கற்பாலதா? இஸ்ரவேலரின் சகோதரர்
என்று கருத்தால் சொல்லப்பட்ட ஒருவரைத் தேவகுமாரன் என்று
சொல்லுவீர்களாகுல் அவரின் மற்ற சகோதரர்களையும், தேவக்
குமாரன் என்று ஏன் சொல்லமாட்டீர்கள்? அப்படி சொல்லுவீர்
களா? பரிஷ்காரமாக இயேசுவை மோசேயைப்போன்ற ஒரு தீர்க்
கத் தரிசியென்று வேதம் அலறுகையை மறந்து அவரைத் தேவ
குமாரனென்றீர்கள்? ஆ! வேதத்தோடு மாறுபடக்கூறல் மதிக்கே
டென்று நீவிர்கள் தான் ஏன் சொல்லமாட்டீர்களோ? ஐயோ!
நன்குய்க் கவனிப்பீர்களாக; நேயர்காள்! இதோ ஏசாயா 52-ம்
அதிகாரத்தைப் பாருங்கள் "13 இதோ நம்முடைய ஊழியக்
"காரன் ஞானமாய் நடந்துகொண்டு உயர்த்தப்பட்டு மேன்
"மையும் மகா உன்னதமுமாய் இருப்பார்" என்று கூறுகின்
றது; இவ்வசனத்தை நீவிர்கள் இயேசுநாதருக்குச் சொந்தப்படுத்து
கின்றீர்கள். ஆகவே இயேசுவானவர் ஊழியக்காரனென்றே நன்று
புலப்படுகின்ற தன்றித் தேவகுமாரனென்று புலப்படாதென்பது
உங்களுக்கு மறையவேண்டாம். இதோ இன்னும் ஏசாயா 42-ம்
அதிகாரமோ வெனின்; "1 இதோ நாம் தெரிந்துகொண்ட
"வரும் நம்முடைய ஆத்துமா பிரியமாயிருக்கிறவரும் நாம்
"ஆதரிக்கிறவருமாகிய நம்முடைய பணிவிடைக்காரன் நம்
"முடைய ஆவியை அவன்மேலே வைக்கிறோம்" என்று
கூறுகின்றதே; இதனுலேயும் கருத்தால் இயேசுவானவர் பணி
விடைக்காரனென்று சொல்லப்பட்டிருக்கிறாரே யன்றித் தேவகுமா
ரன் என்று சொல்லப்படவில்லை, என்பதை நன்று நோக்குவீர்களாக.
மேலும் மத்தேயு வேதம் 13-ம் அதிகாரம் "57 அவரைக் குறி
"த்து இடறல் பட்டார்கள்; அப்பொழுது இயேசுவானவர்
"அவர்களைநோக்கித் தீர்க்கதரிசி ஒருவன்தன் ஊரிலே
"யும் தன் குடும்பத்திலேயுமன்றி மற்ற இடங்களிலே கன



"யீனப்பட்டான் என்றார்" "58 மேலும் அந்த சனங்களு
"டைய அவிசுவாசத்தினுலே அவர் அவ்விடத்திலே அநேக
"அற்புதங்களைச் செய்யவில்லை" என்று கூறுகின்றது. இத
னுலே இயேசுநாதரைக் குறித்து அவரது குடும்பத்தார்களும் அவர்
ஊராரும் கனஹீனப்படுத்தினதைக்குறித்து இயேசுநாதர் மேல்
கூறிய வசனங்களைச்சொல்லி தமது குடும்பத்தையும், ஊரையும்,
விட்டு நீங்கினுரென்று நீங்கள் வாசிக்கவில்லையா? அல்லது மறந்து
விட்டீர்களா? அந்த வசனங்களினுலே, இயேசுவானவர் தீர்க்கத்
தரிசி என்றும் மனிதக்குடும்ப புத்திரரென்றும் நீங்கள் அறிய அசக்
தர்களாக மாட்டீர்களென்று யாம் நன்ருக நம்பமாட்டுவோம். இவ்
வசனங்களை (அதாவது மத்தே 13-ம் அதிகாரம் 57-58 வசனங்
களை) மாற்கு 6-ம் அதிகாரம் 2-ம் வசனமும் லூக்கா 4-ம் அதி
காரம் 24-ம் வசனமும் யோவான் 4-அதிகாரம் 44-ம் வசன
மும் ஒத்துக்கொள்ளுகின்றன; ஆகையால் இயேசுவைத் தீர்க்கத்
தரிசியேயன்றித் தேவகுமாரன் என்று இனி சொல்லமாட்டீர்களாக.

எமது நேயர்காள்! ஒருவேளை யோவான் 14-ம் அதிகாரத்திலே
"2 என்பிதாவின் வீட்டிலே அநேக வாசஸ்தலங்கள் உண்டு
"7 நீங்கள் என்னை அறிந்தால் என்பிதாவை அறிந்திருப்
"பீர்கள் மேலும் இப்பொழுது நீங்கள் அவரை அறிந்தும்
"அவரைக் கண்டும் இருக்கிறீர்கள் என்றார் 10 நான் பிதா
"விலேயும் பிதா என்னிலேயும் இருக்கிறதை நீ விசுவாசி
"யாமலிருக்கலாமா? நான் உங்களுடனே சொல்லுகிற வச
"னங்களை என்னுலே சொல்லவில்லை (என்) கிரியைகளை
"யும் எனக்குள் வாசமாயிருக்கிற பிதாவானவரே செய்து
"வருகிறார். 13 அதுஉடம் அல்லாமல் நீங்கள் என் நாமத்தி
"னுலே கேட்டுக்கொள்வது எதுவோ அதைப்பிதா குமார
"னுலே புகழப்படும்பொருட்டு நான் செய்வேன்" என்று
கூறுகிறபடியினுலேயும், இவ்வாருக இன்னும் சில இடங்களில் கூறப்
படுகிறபடியினுலேயும், கடவுள் பிதாவென்றும், இயேசுகுமாரனே
ன்றும் சொல்லுகின்றோம், என்பீர்களோ? அப்படியாயினும் கட
வுள் இயேசுவிற்குப் பிதாவென்றும், இயேசுவை, கடவுளின் குமார
னென்றும் சொல்லுவதற்கு சாத்தியப்படாது. "எனக்குள் வாச

"மாயிருக்கிற என்பிதாவே செய்து வருகிறர்" என்ற வசனத்திலே கடவுளாகிய பிதாவுக்கு, இயேசுவாகிய குமாரனே வாசஸ்தலமாக நின்றாய் ஏற்படுகின்றதே. நேயர்காள்! அது உண்மையாயின், குமாரனுக்குப் பிதா முந்தினவராக இருக்கவேண்டுமென்பது எதிர்வாதமின்றி நீவீர்கள் ஒப்புக்கொள்ளற்பாலதே. ஆகவே குமாரனுக்கு முன்னிருக்க வேண்டிய பிதாவுக்கு வாசஸ்தலமாக குமாரன் எப்படி ஆகுவார்? ஒருவேளை குமாரன் வருமுன்னிருந்தான், கடவுளாகிய பிதாவுக்கு வாசஸ்தலம் ஏற்பட்டதென்பீர்களோ? அப்படியானால் வாசஸ்தலம் வேண்டியிருந்த கடவுள் பலகாலம் தெருத் தெருவாய்த் திண்டாடினார் போலும்; ஐயோ! எமது கிறிஸ்துவ நேயர்களே! வாசஸ்தலமென்பதை உண்மையில் குடியிருக்கும் வீடென்று நினைக்க வேண்டாம். இயேசு நாதருடைய மனதினின்று ஒரு இமைக்கும் நேரமாவது கடவுள் மறக்கப்படாதவராக இருக்கும் காரணம்பற்றி கடவுளைத் தம்மில் வாசமாயிருப்பவரென்று இயேசுநாதர் சொன்னாரென்றே பொருள் படுத்தவேண்டும். அவ்வாறாகவே "என்னை அறிந்திருந்தால் என்பிதாவை அறிந்திருப்பீர்கள்" என்று இயேசுநாதர் கூறியதாகச் சொல்லப்பட்ட வசனத்திற்கும் பொருளமைத்தல் வேண்டும். அது;—நான் உண்மையாக உங்கள் கண்ணுகளுக்கு எதிரே ஒரு மனுஷியால் பெறப்பட்டும், உங்கள் கண்ணுகளுக்கு எதிரேயே வளர்ந்தும், உங்களுடனே கலந்திருந்த மனுசனாகிய என்றாலும்; என் சகோதரர்களாகிய உங்களாலே செய்யக்கூடாத கிரியைகளை யெல்லாம் நான் உங்கள் கண்ணுகளுக்கெதிரே செய்து முடிக்கும் சக்திவைத் திருப்பதினாலே என்னைக் கொண்டு நீவீர்கள், என்னை அனுப்பிய ஒரு தானாகிய கடவுளை அறியும் வல்லமையைப் பெறுவீர்கள் என்று இயேசுநாதர் கூறியதாக நன்குணரலாம். அங்ஙனமின்றி அவ்வாக்கியங்களினாலே வெளிப்படையாய் என்ன அருத்தம் காணப்படுமோ அவ்வருத்தமே யல்லாது இவ்வாறான அருத்தங்கள் அமைக்கக்கூடாதெனில் "பரலோகில் வாசமாயிருக்கிற என்பிதா" என்ற வசனத்திற்கும் வெளிப்படையான அருத்தம் வாங்கிக்கொளல் வேண்டும்; அப்படியாயின் இயேசு பிறத்தற்கு முன் எந்த வாசஸ்தலத்தில் கடவுள் வாசஞ்செய்தார்? இயேசுவாசஸ்தலமான பிறகு பழைய வாசஸ்தலம் பாழாயினதென்பீர்களா? இயேசு சிலுவையில் அறையுண்டு உயிரிழந்திருந்தாரே அப்பொழுது கடவுளின் வாசஸ்தலம் எது? என்பனவாக பல்வாறு கடாவப்படுவீர்கள். அது பற்றி அங்ஙனமெல்லாம் வெளிப்படை-



யான பொருட்கூறல் பொருந்தாது. மேலும் இயேசுநாதர் ஒருபோதாவது உவமையாக வல்லாது பேசினதேயில்லை என்பதற்கு உங்கள் வேதமே சாட்சி கூறுகின்றது. இதோ மத்தேயு 13-ம் அதிகாரம் "9 - கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்"றார் 10 - அப்பொழுது சீஷர்கள் அவரிடத்தில் வந்து "என்னத்தினாலே உவமைகளால் அவர்களோடே பேசுகி"றீர் என்றார்கள் 11 - அதற்கு அவர் சொன்னது பர"லோக இராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு "உங்களுக்கு அருள் அளிக்கப்பட்டது, அவர்களுக்கு அப்"படி அளிக்கப்படவில்லை" என்று கூறியிருக்கிறபடியினாலே இயேசுநாதரவர்களின் வாக்கியங்களை வெளியான பொருளின் பேரில் சுமத்தக்கூடாதென்பதை யுணர்வீர்களாக. ஆகவே பிதாவென்றும் குமாரனென்றும் சொல்லப்படும் வாக்கியங்களையும் வெளியரங்கமான பொருளின் பேரில் பொருள்கூறல் முறையன்றென்பதும் ஆராய்வின்றி யறியற்பாலதே. நேயர்காள்! ஒரு தானாய வல்ல பராபரன், எல்லாம் சிருட்டித்த காரணத்தினாலே அம்மெய்ப்பொருளை (இலாஹூ) வணக்கத்துக்குரிய பொருள் என்றும் (இலாஹூ என்றதற்குச் சரியான தமிழ்ப் பதமில்லாமையால் விரிபொருள் கூறினும்.) நம்மை யெல்லாம் ஆளுகிற காரணத்தினாலே இறை யென்றும் நம்மை யெல்லாம் வளர்க்கிற காரணத்தினாலே பிதாவென்று மாகக்கூறுவது உலக இயற்கையாகலின் அப்பொருள் காரணமாக இயேசுநாதர் தன்னைக் குமாரனென்றும் கடவுளைப் பிதாவென்றும் கூறுவனாயினரென்று கொண்டுபோதல் வேண்டும். இதுவேயுமன்றி வேறுகாரணங்களும் கூறுவாம் ஆய்ந்தாய்ந்து அடங்குக. கிற்க.*

நேயர்காள் மேல்கூறிய யோவான் 14-அதிகாரம் 2-முதலிய வசனங்கள், இயேசு நாதரால் சொல்லப்பட்டனவா? என்று ஆராயப் புகுந்தால் மனஞ்சோர்ந்தில் கல்லாராயப் புகுந்தவன் கதையாயிருக்குமன்றி உண்மையாய் முடியாதென்று புலப்படுகின்றது. அது;— யோவான் வேதத்தில் கூறிய அவ்வசனங்களில் ஒரு சிறு அட்சரங்கூட லூக்கா, மத்தேயு, மார்க்கு வேதங்களில் காணப்படவில்லை; அப்படி ஒன்றேடொன்று மாறுவதுங்கள் வேதசங்கமென்று விட்டுவிடவேணு மென்பீர்களாயின், நாமும் அதற்கு உடன்பட்டு விட்டு விடுகின்றேம். எமது கிறிஸ்

துவ நேயர்களே இயேசுவை மாத்திரம் குமாரனென்று சொ
ன்னதாக நீங்கள் நினைக்கவேண்டாம். எல்லா மனுஷர்களும் நாம்
முன்னேர்க்கூறிய உதாரணப்படியே குமாரர்களாகின்றோம். இதோ
1-ம் மோசே 6-ம் அதிகாரம் "2 - பராபரனுடைய குமா
"ரர் மனிதருடைய குமாரத்திகளை அவர்கள் சவுந்தரிய
"முள்ளவர்களென்று பார்த்துத் தாங்கள் தெரிந்துகொ
"ண்ட அனைவரிலும் பெண்களைக் கொண்டார்கள். 4-அந்
"நாட்களில் இராட்சதர் பூமியிலே யிருந்தார்கள். பிற்பாடு
"பராபரனுடைய குமாரர் மனிதருடைய குமாரத்திக
"ளோடே கூடுகிறதினால் இவர்கள் அவர்களுக்குப் பிள்
"ளைகளைப் பெற்றபோது இவர்களும் பூர்வத்தில் பேர்
"போன மனிதராகிய பலவான்களானார்கள்" என்று கூறு
கின்றது. இதனாலே மனிதருடைய குமாரர்களைத்தானே பராபரக்
குமாரர்களென்று சொல்லப்படுகிறதெனக் காணுவீர்கள்? அல்ல
வென்றால் அந்தத் தேவகுமாரர்கள்யாவர்? இதுவுமன்றி 5-மோசே
14-ம் அதிகாரமோவெனின் "1-நீங்கள் உங்கள் பராபரனாகி
"ய கர்த்தருடைய பிள்ளைகள் செத்தவனுக்காகக் கீறிக்
"கொள்ளாமலும், உங்களின் கண்களுக்கு நடுவே மொட்
"டையிடாமலும் இருப்பீர்களாக" என்று ஓதுகின்றது. இத
னாலே இஸ்ரவேலரைக் கர்த்தர் தம்முடைய பிள்ளைகள் என்று
பரிஷ்காரமாய்க் கூறினதாகக் காணுவீர்கள். அந்தோ இஸ்ரவேலர்
கள் எல்லாரும் கர்த்தருடைய குமாரர்களென்று சொல்லப்படும்
போது இயேசுவை மாத்திரம் கடவுளின் குமாரனென்று சொல்ல
ஏன் தலைப்பட்டிருக்கிறீர்களோ? நேயர்காள்! கடவுள் தமது
சிருஷ்டியில் இறந்த மனுஷர்களில் மனிதப்பண்புடையவர்களை மற்
றவர்களினின்று உயர்த்தும் பொருட்டு அன்பின் காரணம் பற்றிக்
குமாரர் என்று சொல்லுவதாகக் காணப்படுகின்றதேயன்றி நீவிர்
கள் சொல்லுகிறபடி தந்தை முறைமையும், மகமுறைமையும், பற்
றிய உலகவழக்கு நோக்கிக்கூறியதன்றென்பதை யுணர்தற்கு இவ்
வனமெல்லாம் கூறியது நம்மனோர்க்குப் போதாவா? இதோ,
யேசாயா 64-ம் அதிகாரம் "8 - இப்போதும் கர்த்தாவே;
"தேவரீர் எங்களுடைய பிதா நாங்கள் களிமண், தேவரீர்
"எங்களை உருவாக்கிறவர். நாங்கள் அனைவரும் உமது கரத்



"தின் கிரியைதானே" என்று சப்திக்கின்றதே. இதனாலே கட
வுளின் கிரியை எனப்படும் நாமெல்லாம் அந்தக் காரணத்தினாலே
கடவுளைப் பிதாவெனவும் நாமெல்லாரும் குமாரன் குமாரத்திக
ளெனவும் சொல்லல் வேண்டு மன்றோ? ஆகவே, இயேசுவை
மாத்திரம் குமாரர் என்று ஏன் வாதாடுகின்றீர்கள்? இனி அவ்
வார்த்தையை விட்டொழிவீர்களாக. ஓசேயா 11 - அதிகாரம்,
"1 - இஸ்ரவேல் இளைஞனா யிருக்கிறபோது அவனை நாம்
"நேசித்தோம், எகிப்திலிருந்து நம்முடைய குமாரனை வர
"வழைத்தோம் 2 - அவர்கள் தங்களை அழைக்கிறவர்க
"ளின் முகத்தை விலக்கிப்போய் விட்டார்கள். பாகால்க
"ளுக்கு பலி இட்டு சுரூபங்களுக்குத் தூபங்காட்டினார்கள்."
என்று கூறுகின்றது. இதனாலும் கர்த்தர் இஸ்ரவேலரைக் குமா
ரர் என்று கூறினதாக நன்கு விளங்குகின்றது. ஆகவே இயே
சுவை மாத்திரம் கர்த்தருக்குக் குமாரரென்று ஏன் வாதாடுகின்
றீர்கள்? ஐயோ எமது கிறிஸ்தவ நேயர்களே, சற்று கவனியுங்
கள் உங்கள் வேதம் வரைந்த நால்வரில் முதல்வராகிய மத்தேயு
என்பவர், இயேசு சிறுவராயிருந்த காலத்தில் அவரை எகிப்துக்
குக் கொண்டுபோகும்படி கர்த்தர் உத்திரவிட்டதாகவும், அத
னாலே அவருடைய தாய்தந்தையர்கள் அவரை எகிப்துக்குக் கொண்டு
போனதாகவும், பிறகு தேவவுத்திரவின்படி எகிப்தி லிருந்துகொ
ண்டு வரப்பட்டதாகவும் எழுதிய கற்பனைக்குச் சான்றாக; ஓசேயா
11-ம் அதிகாரம் 1-2 - வசனங்களாகிய மேல்கூறிய வசனங்க
ளைக் காண்பிக்க முன்வந்திருக்கின்றார் என்பதை நீங்கள் வாசித்
திருப்பீர்க ளன்றோ? அதில் எகிப்திலிருந்து நம்முடைய குமா
ரனை வரவழைத்தோம் என்ற வசனத்தில் சொல்லப்பட்ட குமார
னென்பது இயேசுவென்று பரிஷ்காரமாய் மத்தேயு என்பவர் சொ
ல்லுகிறார் என்பது நன்கு புலப்படும். ஐயோ! அ . . . இயேசு
வானால் அவர் எப்பொழுது பாகால்களுக்குப் பலியிட்டு விக்கிர
கங்களுக்குத் தூபங்காட்டி அவரை அழைத்தவர்களின் முகத்தை
விலக்கிவிட்டுப் போயினார்? என்னும் கடாவுதலுக்குவிடை என்ன
சொல்லுவார். பழைய ஏற்பாடாகிய வேதமெழுதினவர் அந்த வச
னத்தைக் கிறிஸ்து நாதருக்குச் சம்பந்தப்படுத்தவில்லை என்பதை
யும் அவர் உணர்ந்திலர்போலும், ஆ! இப்படிப்பட்ட அறிவிலிகள்
கூட வேதம் வரைவான் வெளிவருவது வெட்கமன்றோ? அப்படி

பட்டவர்கள் எழுதிவைத்தவைகளை வேதமென்று எண்ணித் துணி
கின்ற எமது கிறிஸ்துவ பண்டிதர்கள் இனி ஒருதரமும் அவ்
வேத புத்தகத்தைக் கைகளி லெடுக்கா ரென்று நம்புகின்றோம்.
எமது நேயர்காள் மேல்கூறிய ஓசேயா 11-ம் அதிகாரத்தின்
தலையில் எழுதப்பட்டிருப்பதை நீங்கள் நோக்குவீர்களானால் இஸ்
ரவேலர் எகிப்தில் சிறைபட்டு ஊழியக்காரர்களாயிருந்த கால
த்திலே அவர்கள் கருத்தர் வெகு அன்பாக, கொடுமையான அவ்
வூழியத்திலிருந்து காப்பாற்றிக்கொண்டு வந்திருக்க அந்த நன்
றியை இஸ்ரவேலர் சற்றும் நினைக்காமல் கருத்தரை மறந்து விக்
கிரகங்களுக்கும்; பாகால்களுக்கும், பசாசுகளுக்கும், ஆராதனை
செய்து வந்தபடியினாலே அவர்களைப்பழித்து ஓசேயா தீர்க்கதரி
சியினாலே அக்காலத்திய இஸ்ரவேலர்களுக்கு அறிவிக்கப்பட்ட
வசனங்களென்று காணுவீர்கள். இவ்வுண்மையை மறைத்து தாக்கா
வுடன் மாறுபடக்கூறிய தமது கூற்றுக்குச் சாக்ஷியாக அவ்வசனத்
தைச் சாட்சிகூறிய மத்தேயு என்பவனை என்னென்று நம்புவீர்
கள்? இதுக. ஏசாயா 63-அதிகாரம் "16 - தேவரீர் எங்கள்
"பிதாவாமே. ஏனெனில் ஆபிரகாம் எங்களை அறியான்
"இஸ்ரவேலுக்குக்கூட நாங்கள் அறியப் பட்டவர்களு
"மல்ல கர்த்தாவே தேவரீர் எங்கள் பிதாவும் எங்கள்
"மீட்பாருந் தானே இது பூர்வகாலமுதல் உம்முடைய
"நாமம்" என்று கூறுவதினாலே, இஸ்ரவேலர்கள் கர்த்தர் தங்க
ளுக்குப் பிதாவா யிருக்கிறார் என்று காரணங்களோடே கூறினா
ரென்பதைக் கர்த்தர்தாமே எடுத்துக்கூறுவதாகக் காணப்படுகின்ற
தன்றோ? இதனாலும் இயேசுவுக்கு மாத்திரம் கர்த்தர் பிதாவாக
மாட்டா ரென்பது பரிஷ்காரப்படுகின்றதே. இதுவுமல்லாமன்றி
வேறு திருட்டாந்தங்களும் எமது நேயர்களுக்கு வேண்டுமோ?
இதோ 2-மோசே 7-ம் அதிகாரம் "1-பராபரன் மோசே
"யோடு சொன்னதாவது; பார் உன்னை நாம் பார்வோ
"னுக்குத் தேவனாக்கினோம். உன்சகோதரனாகிய ஆரோ
"னென்பவன் உன் தீர்க்கதரிசியா யிருப்பான்" என்று
சப்திக்கின்றதே. இதனாலே மோசேயானவர் கர்த்தருடைய உத்த
ரவின்படியே தேவனாகக் காணப்படுகின்றார். ஆகவே மோசேயை
இயேசுவைப்போல் தேவக்குமாரனென்றோ? அல்ல; தேவனென்றே
சொல்லவேண்டும்; அப்படி எமது நேயர்கள் சொல்ல முன்வரு



வீர்களா? ஏன் அவரைத் தேவனென்று சொல்லப் பின்போவீர்
கள்? இதனாலே இயேசுவை மோசேயின் குமாரனென்றும் சொல்
லலாமன்றோ? இதுவேயுமன்றி 2-ம் மோசே 4-ம் அதிகாரம்
"22 - அப்பொழுது நீ பார்வோனோடே சொல்ல வேண்
"டியதாவது கர்த்தர் உரைக்கிற தென்னவெனில் இஸ்ர
"வேல் நம்முடைய முதல் பேறான குமாரன் 23 - நம்
"முடைய குமாரனை நமக்கு ஆராதனை செய்யும்படிக்கு
"விடுவென்று நாம் உன்னோடே சொல்லியும் நீ அவனை
"விடமாட்டோ மென்றாய்; இதோ நாம் உன் முதல்
"பேறான உன் குமாரனைக்கொன்று போடுவோ மென்று
"உரைத்தா ரென்று சொல்லுவாயாக என்றார்" என்று
கூறுகின்றது. ஓ! எமது நேயர்காள்! பாருங்கள் இஸ்ரவேல் கர்
த்தரின் முதல் பேறான குமாரன் என்று கருத்தராலேயே சொல்
லப்படுகின்றார். ஆகவே இயேசுவானவர் முதல் பேறான குமா
ரன் அல்லவென்பது பரிஷ்காரப் படுகின்றதே. அந்தோ! முதல்
பேறான குமாரனைவிட பிறபேறான குமாரன் உன்னதப்படுநாய
மில்லை என்பது உங்களுக்கு மறையுமா? நேயர்காள்! ஈசாக்கு
என்பவருக்கு, யாக்கோபு இரண்டாம் பேறாகிய குமாரனாயிருந்தும்
அவரைப் பராபரன் தமக்கு முதல்பேறான குமாரன் என்று உயர
த்தப்படுத்துகின்றார்; என்பது நன்கு புலப்படுகின்றது. விஷயம்
இவ்வாறிருக்க, நீவிர்கள் இயேசுவை மாத்திரம் தேவக்குமாரன்
என்று வீணே வாதாடி, சனங்களை மயக்குகின்றீர்கள்; இங்ஙனம்
விரிப்பின் மிகப் பல்குமாகலின், விரித்திலம். உய்த்துணர்க. இது
வெல்லாமுமன்றி; இதோ மத்தேயு 5-ம் அதிகாரம் "9 - சமா
"தானத்தை நடப்பிக்கிறவர் பராபரனுடைய புத்திரர்
"எனப்படுவார்கள். ஆகையால் அவர்கள் பாக்கியவான்கள்
"45 - அப்படியே நீங்கள் அவருக்குப் புத்திரரா யிருக்
"கும்படிக்கு உங்கள் சத்துருக்களில் அன்புகூர்ந்து உங்க
"ளைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதித்து உங்களைப் பகைக்கிற
"வர்களுக்கு நன்மைசெய்து உங்களை நிந்திக்கிறவர்களுக்
"காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும
"ஜெபம் பண்ணுங்கள். 48 - ஆகையால் பரமண்டலங்களி
"லிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணரா யிருக்கிறது

"போல் நீங்களும் பூரண சற்குணரா யிருக்கக் கடவீர்கள்" என்று உங்கள் கிறிஸ்துநாதர் அவர்களே கூறுவதாகக் கூறுகின்றதே. அதனாலே நீங்கள் கடவுளுக்குக் குமாரர் என்றும் கடவுள் உங்களுக்குப் பிதாவென்றும் நன்கு விளங்குகின்றதன்றோ? ஆகவே கிறிஸ்துநாதர் மாத்திரம் தேவக்குமாரரென்று எங்ஙனம் துலங்குகின்றார்? இம்மட்டாகவா? மத்தே 6-ம் அதிகாரம் "1 - நீங்கள் மனிதர்களாலே காணப்படும் பொருட்டாய் உங்கள் தருமத்தை அவர்களுக்கு முன்பாகச் செய்யாதபடிக்கு எச்சரிக்கையா யிருங்கள் செய்தால் பரமண்டலங்களி லிருக்கிற உங்கள் பிதாவினிடத்திலே பலன் பெறாதிருப்பீர்கள். 4 - அப்பொழுது அந்தரங்கமா யிருக்கிறதை நோக்குகிற உன்பிதா தாமே வெளியரங்கமாய் உனக்குப் பலனை அளிப்பார். 9 - ஆகையால் நீங்கள் ஜெபம் பண்ண வேண்டுவது. எப்படி யெனில் பரமண்டலங்களி லிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தமாக வணங்கப்படுவதாக" என்று இயேசு நாதர்தாமே கூறினதாக ஓதுகின்றதன்றோ? இதனாலேயும் கர்த்தர் உங்கள்பிதாவென்றும் அவரை நீவிர்கள் பிதாவென்றே செபம் செய்யவேண்டுமென்றும் நன்கு புலப்படுகின்றது. ஆகையால் கிறிஸ்துநாதர் மாத்திரம் எங்ஙனம் குமாரன் எனப்படுவார்? இதோ மத்தே 10-ம் அதிகாரம் "20 - பேசுகிறவர் நீங்களல்ல உங்கள் பிதாவின் ஆவியானவர் உங்களிலிருந்து பேசுகிறவர்" என்று உங்கள் இயேசுவே சொல்லுகிறதாகக் கூறுகின்றது. லூக்கா 11-ம் அதிகாரம் "2 - அதற்கு அவர் சொன்னதாவது நீங்கள் ஜெபம் பண்ணும் பொழுது பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே உம்முடைய நாமம் பரிசுத்தமாக வணங்கப்படுவதாக" என்று மத்தேயோடு ஒத்துக் கூறுகின்றது. யோவான் 20-ம் அதிகாரமோ வெனின் "17 - இயேசுவானவர் சொன்னது; நீ என்னைத் தொடாதிரு இன்னும் என் பிதாவினிடத்திற்கு நான் எழுந்து போகவில்லை. இப்பொழுது நீ என்சகோதரரிடத்திற்குப்போய் என்பிதாவினிடத்திற்கும், உங்கள் பிதாவினிடத்திற்கும் என்தேவ



னிடத்திற்கும் உங்கள்தேவனிடத்திற்கும் எழுந்துபோகிறேன் என்று அவர்களுடனே சொல் என்றார்" என்று கூறுகின்றது. எமது நேயர்களே! இந்த வசனங்களாலே இயேசுவானவர் உங்களை போன்ற ஒரு மனிதரே என்பது புலப்படவில்லையா? உங்களுக்கு யார்பிதாவோ அவரே, தமக்கும் பிதாவென்றும், உங்களுக்குயார், தேவனோ அவரே, தமக்கும் தேவனென்றும், உங்களுக்கும் தமக்கும், தேவனிலும், பிதாவிலும், வேற்றுமையில்லை என்பதை, இயேசுநாதர் விளக்கினாரென்றும், தோன்ற வில்லையா? நன்றாய்த் தோன்றுகின்றதே. ஆகையால் எமது கிறிஸ்து வேதபண்டிதர்களே! கிறிஸ்து வேதாபிமானிகளே! இவ்வசனங்களை நன்றாய்க் கவனிப்பீர்களானால் கடவுள் மனுஷரைக் குமாரர் என்றது உம், மனுஷர் கடவுளைப் பிதாவென்றது உம், கடவுள் மனுஷரைத் தனது குமாரர் என்றது உம், மனுஷர் தம்மைக் கடவுளின் புத்திரர் என்றது உம், ஒரு காரணம் பற்றியே யன்றி உண்மைத்தன்மையான முறைமைபற்றிய தன்றென்பது பாலகரும் உணரும் பாலதே என்று காணாது போகமாட்டீர்கள். அப்படியில்லை என்றற்கு ஒரு விதத்தாலும் உங்களுக்குச் சாத்தியப்படாது; கிறிஸ்துவை மாத்திரம் தேவக்குமாரன் என்போமென்பீர்களாயின் அதற்கு ஆதாரம் பெறமாட்டீர்கள். மோசேயைத் தேவனென்றும், கட்டாயம் ஒத்துக்கொள்ள வேண்டிவரும். ஆகையால் நன்றாய்க் கவனித்து அநாதாரமான வார்த்தைகளை எல்லாம் புறம்பே தள்ளி நியதியைக் கடைபிடித்து உய்யும் வழியைத் தெரிந்துகொள்ளக்கடவீர்களாக.

இதோ பாருங்கள் 5-ம் மோசே 5-ம் அதிகாரம் "8 - உயரவானத்திலும் கீழே பூமியிலும், பூமியின்கீழ் தண்ணீரிலும் உண்டானவைகளுக்கு ஒத்திருக்கிற ஒரு சுரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் 11 - உன் பராபரனாகிய கருத்தருடைய நாமத்தை வீணிலே வழங்காயாக. ஏனென்றால், கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்கினவனைத் தண்டியாமல் விடார்" என்று மிகத் தெளிவாய்க் கூறுகின்றது. இந்த வசனங்களிலே அமைந்திருக்கிற மிக அருமையான நுண்ணிய கருத்தை எமது நேயர்கள் உணர்

வார்களே யாயின் ஒருபோதும், அந்த ஒப்பற்ற கருத்தாவினுமத் தைஅவர் அல்லாதவைகளுக்கு உபயோகிக்க மாட்டார்கள்; அந்தோ! கிறிஸ்து எனப்படும் ஒருவரை உயரவானத்திலும் கீழே பூமியிலும், பூமியின்கீழ் தண்ணீரிலும் உள்ள வஸ்துக்களில் ஒன்றைப் போல யாவது காணவில்லையா? கர்னுயீர்களே யாயின்; ஒன்றையும் போலாத கடவுளின் நாமத்தைப் பலதைப்போலவுமாகிய இயேசுவுக்குக் கொடுத்து வழங்குவது நியதியாகுமா? உங்கள் யோவான் "என்னைப்பார்த்தவன் என் பிதாவைப்பார்த்தான்" என்று இயேசு சொன்னதாகக் கூறினது, உண்மையாகுமா? அப்படிகூறியது உண்மை யென்றாலும், அந்தவாக்கியத்தின் வெளியரங்கமான பொருள், பொருந்துமா? அந்தோ! அந்தோ!! சமய நேயர்களே! உங்கள் விஷயத்தில் யாம் இரக்கப்படவேண்டியதே யன்றி என்ன செய்வேம். ஓ நேயர்காள், உம்முடைய நாமத்தை, அந்த நாமத்திற்குத் தகுதியில்லாத ஹீனவஸ்துவிற்குக் கொடுக்க நீவீர்கள் பொருந்துவீர்களா? பொருந்தமாட்டீர்கள். இந்தியன் பினல்கோர்டு 500 வது செக்சன்படி குற்றஞ் சாட்டுவீர்களன்றோ? நேயர்காள்! கடவுளின் சக்திக்கு எந்த வஸ்துதான் சமமாகும்? ஆகாதென்றால், அவரது நாமத்தை, அவரல்லாத வேறுவஸ்துவிற்கு வழங்குவது குற்றமன்றோ?

ஆகவே மேல்கூறிய 5ம் மோசே 5ம் அதிகாரம் 8,11 வசனங்களின் தாத்பரியம் உங்களுக்குப் போதுமானமட்டில் விளக்கத்திற்கு வந்திருக்குமென்று அம்மட்டோடு விடுகின்றேம். இதோ 5ம் மோசே 6ம் அதிகாரம் "4 இஸ்ரவேலே கேள்; நம்முடைய "பராபரனாகிய கர்த்தர் ஒரே கர்த்தரானவர்" என்று கூறுகின்றது; இதனாலே கர்த்தருக்கு இணையாக வேறு கருத்தாவது, குமாரராவது, வேறு வஸ்துவாவது இல்லை; அவர் ஒப்பற்றவர், தனித்தவர் என்பன நன்கு விளங்குகின்றன. 2ம் மோசே 9ம் அதிகாரம் "14 பூமியெங்கும் நம்மைப்போல வேறு ஒருவரும் இல்லை என்பதை நீ அறியும்படிக்கு இந்த முறை "நாம் நம்முடைய வாதைகளையெல்லாம் உன் இருதயத்தி "லும் உன் ஊழியக்காரரிலும், உன் ஜனத்திலும் போக "விடுவேம்." என்று கூறுகின்றது, இதனாலும் கடவுளைப்போல யாவது அவரது நாமத்தினாலே கூறப்படக்கூடியவராவது இல்லை என்று பரிஷ்காரமாய்க் காணப்படுகின்றதன்றோ? இதோ ஏசா



யா 42 அதிகாரம் "8 நாம் கர்த்தர் இது நமது நாமம் நாம் நமது "மகிமையை வேறு ஒருவருக்கும் நமது துதியை விக்கிரங்களுக் "கும் கொடோம்" என்கிறது. இதனாலே அவரது நாமத்தையாவது துதியையாவது அவரல்லாத மற்றவர்களுக்குக்கொடுக்கக் கூடா தென்பது பரிஷ்காரமாய்க் காணலாம், இதோ பாருங்கள் ஏசாயா 40 அதிகாரம் "18 இப்படி யிருக்கையில் பராபரனையாருக் "குச் சாயலாக்குவீர்கள் அல்லது, எந்தசாயலை அவருக்கு "ஒப்பிடுவீர்கள் 21 நீங்கள் அறிந்ததில்லையோ? நீங்கள் "கேட்டதில்லையோ? உங்களுக்கு ஆதிமுதல் அறிவிக்கப் "பட்டதில்லையோ? பூமி அஸ்திவாரப்பட்டதை உணரா "திருக்கிறீர்களோ. 25 பின்னை நம்மையாருக்கு ஒப்பான "சாயலாக்குவீர்கள்? என்று பரிசுத்தர் சொல்லுகிறார்" என்று சப்திக்கின்றதே. இப்படி இருக்க, இயேசுவைத் தேவகுமாரனென்றும், கடவுளே அவர் என்றும், அவரே கடவுள் என்றும், அவ ரைக் கண்டவன் தேவனைக் கண்டானென்றும் கூறுவது நியாயமா குமா? கடவுளுடைய நாமத்தை அவரல்லாத இயேசுவுக்குக் கொடுக் கலாமா? அவர் தேவனின் குமாரனாயிருந்தால், குமாரன் தந்தையின் வம்சத்தானாகி தந்தையின் பூரண பாத்தியத்திற்கும் உரியவனாகிறபடியினாலே; தந்தையின் நாமத்தைத்தானும் அநுபவிக்கப் பாத்தியஸ்தனாகுவானன்றோ? ஆகவே இயேசுதேவனின் குமாரனா யிருந்தால் ஏன் கடவுள் சம்பிரதாயமாக "பராபரனை யாருக்குச் "சாயலாக்குவீர்கள்! என்றும் எந்தசாயலை அவருக்கு ஒப் "பிடுவீர்கள்" என்றும் கடாவுவார்? இதனாலே இயேசு நீங்கள் நினைக்கிறபடியான, குமாரனென்று சொல்லுவதற்கு கொஞ்சமும் இடமாக மாட்டாது என்பது பாமரர்களும் உணர்தற்குத் தகுந்த வெளியரங்கமே. இதனாலும் "என்னைக் கண்டவன். என் பிதாவை கண்டான்" என்று இயேசு கூறினதாக யோவான் வேதம் கூறுவது சம்பத்தக்கதன்றென நீங்கள் உணர்வீர்கள். அது உண்மையாயிருந்தால் அவ்வாறான, விசேஷ வார்த்தையை மத்தேயு, லூக்கா, மாற்கு என்பவர்கள் விடுவார்களா? விடமாட்டார்கள்; என்பது உங்களுக்கு மறையாது. இன்னும் பாருங்கள். ஏசாயாயா 46-ம் அதிகாரம், "5-யாருக்கு நம்மை சாயலும் சமா "னமும் ஆக்கியாருக்கு நாம் சாயலாகும் படிக்கு நம்மை ஒப்பு "விடுவீர்கள்" என்று கூறுகின்றது. ஆகையால் கர்த்தருக்கு

ஒருவரும் இல்லர். அவரைப்போல ஒருவஸ்துவும் இல்லை. அவர்
ஒருவரே தனித்தவர், அவருக்குப் பிள்ளையுமில்லை; பிள்ளை யிருந்
தால் அது தந்தையைப்போ லிருக்கு மென்பதில் சந்தேக மிராது.
அப்படி பிள்ளையிருந்தால் பராபரனுகிய பரிசுத்த உண்மையுடை
யார், மேல்கூறிய சம்பிரதாயமான வார்த்தைகளை கம்பீரமாய்ச்
சொல்லமாட்டார், என்று ஏன் எனது நேயர்கள் நம்பமாட்டீர்
கள்! அப்படி நம்புவாரே யானால், இயேசுவை அவர்கள் நினைக்கி
றபடி தேவகுமாரன் என்று சொல்லமாட்டார்கள். ஆனால் பரா
பரன் மற்றவர்களைக் குமாரனென்றும், மற்றவர்கள் அவரைப்
பிதாவென்றும், சொல்லியபடிக்கே, இயேசு விஷயத்திலும் சொ
ல்லுவார்க ளென்று நம்புகிறோம். நேயர்காள் நோக்குவீர்களாக,
ஏசாயா 44-ம் அதிகாரம் “6-நாமே முந்தினவரும் நாம்
“பிந்தியவருந்தானே. நம்மைத்தவிர தேவனில்லை என்று
“இஸ்ரவேலின் இராஜாவாகிய கர்த்தரும் சேனைகளின்
“கர்த்தராகிய அவனுடைய மீட்பரும் சொல்லுகிறார்கள்”
என்கின்றது; இதனாலும் கர்த்தர் ஒருவரே என்றும் அவரைப்
போல ஒருவருமில்லை என்றும் நன்கு புலப்படுகின்றது. எமது
கிறிஸ்தவ நேயர்களே! உங்களைப்போல உங்களுக்கு முன்னிரு
ப்பவர்களில் அநேகர். கர்த்தருக்குப் பலவாறு மனிதர்களையும்,
இதர வஸ்துக்களையும் ஒப்பிட்ட காரணத்தினாலேயும், பின்னிட்
டவர்களில் அப்படியே மனிதர்களையும், மற்ற வஸ்துக்களையும்,
ஒப்பிடுவோர்கள் என்ற முன்னறிவினாலேயும் ஒப்பற்ற கருத்தர்,
ஞர். நீவீர்கள் அதை வெல்லாமறந்து ஒரு மனுஷனைக் கருத்த
ருக்கு ஒப்பாக்கி அம்மனிதனுக்கும், கருத்தருக்கும் பேதமில்லை,
என்றும் அவ்விருவரும் ஒருவரே என்றும் ஒருமார்க்கம் செய்ய
லாயினீர்கள். அய்யோ கடவுளுக்குச் சமானமாக ஒருவஸ்துவுமில்லை
என்று பல தரமாகக் கடவுள் கூறுவதை எல்லாம்மறந்து அவ
ருக்குச் சமானமாக வேறு வஸ்துவைக்கொண்டுவந்து அவருடன்
ஒன்று சேர்த்து, அவ்விரண்டும், ஒன்றே என்று கூறும், உங்கள்
பேதமைக்கு யாம் என்ன செய்வோம்; நீங்கள் ஏன் கடவுளுக்
குச் சமானமாக, வேறுவஸ்துவைக் கொண்டுவந்து அவருடன் பதி
த்தி இரண்டும் அல்லது மூன்றும், ஒன்றே என்கிறீர்களோ?
அப்படி சொல்வது கடவுள் மேல் கூறிய சம்பிரதாயமான அதாவது



நாம் ஒருவரே, நம்மைத்தவிர வேறு கருத்தரில்லை, நம்மைப்போல
ஒருவஸ்துவுமில்லை என்பனவாகக்கூறிய வார்த்தைகளுக்கு முரணு
காதோ? நேயர்காள்! நீவீர்கள் அதிவிசேஷமான இடத்தில் தவ
றிப்போகின்றீர்கள், ஆகையால் தயவுசெய்து அந்த இடத்தில் நன்று
நோக்குங்கள். அசட்டை செய்யாதீர்கள். பிடிவாதத்தைவிட்டு நடு
நிலையைக் கடைபிடியுங்கள். அப்பொழுது நீங்கள் பாக்கியவான்களா
வீர்கள். இதோ நேயர்காள்! ஏசாயா 50-ம் அதிகாரம் “10-
“உங்களில் எவன் கருத்தருக்குப் பயந்து அவருடைய
“ஊழியக்காரனுடைய சொல்லைக்கேட்டுத் தனக்கு வெளிச்
“சமில்லாததனால் இருட்டிலே நடக்கிறானோ அவன் கருத்
“தருடைய நாமத்தை நம்பித் தன் பராபரனைச் சார்ந்து
“கொள்ளக்கடவன்” என்று கூறுகின்றது. இந்த வசனத்தில்
சொல்லப்பட்ட ஊழியக்காரன் இயேசுவே என்று உங்கள் வேதமே
சாட்சிகூறுகின்றது. இந்த வேதவசனமானது இயேசுபிறக்க எழு
நூற்றிருபது வருஷங்களுக்கு முன்னே சொல்லப்பட்டிருப்பதா
கக் காணுவீர்கள். ஆகவே அந்த வேதவாக்கியமானது சொல்லப்
பட்ட காலத்திலே இருந்த மனிதர்களும், மற்றவர்களும், இதற்குப்
பிறகு இயேசுபிறக்குந்தனையு மிருந்தவர்களும் இயேசுவை ஊழி
யக்காரனென்று நம்பி இருந்திருப்பார்களா, அல்லது நீங்கள் சொல்
லுகிறபடி அவரைத் தேவகுமாரனென்றும் கடவுளும் அவரும்
சமானமானவர் என்றும் நம்பி இருந்திருப்பார்களா? நீவீர்கள்
என்னென்று நினைக்கிறீர்கள்? தயவுசெய்து விடையருளும் தத்
துவ மிருந்தால் கூறுங்கள் பார்ப்போம்? ஓ! நேயர்காள் அந்தவேத
வசனத்தினாலே இயேசுவானவர் தம்மை ஊழியக்காரனென்றும்,
கடவுளே பராபரனென்றும் சத்தியமாய்க் கூறுகின்றவர் என்று
அறி
பராபரன் உங்களுக்கும் எங்களுக்கும் வேதபிரமாணத்தினாலே.
விக்கின்றார். ஆகவே அவர் ஒருபோதும் தம்மைத் தேவகுமார
னென்றுவது, தம்மைக்கடவுள் தேவனைக்கண்டவ னென்றுவது
நீங்கள் நினைக்கிறபடி சொல்லமாட்டார் என்பது பிரமாணப்பட்
டது என்று நம்புங்கள். இதோ அதற்குச் சான்றாகக்கூறும் உங்
கள் வேதத்தைக் காணுவீர்களாக; மத்தேயு 7-ம் அதிகாரம்
“21- என்னைக் கர்த்தாவே கர்த்தாவே என்று சொல்
“லுகிற எவனும் பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்ப
“தில்லை. பரமண்டலங்களிலிருக்கிற என்பிதாவினுடைய

“சித்தத்தின்படி செய்கிறவனே அதில் பிரவேசிப்பான்,
“22 - அந்த நாளிலே அநேகர் என்னைநோக்கி ஆ! கர்த்
“தாவே கர்த்தாவே உமது நாமத்தினாலே நாங்கள் தீர்க்
“கதரிசனம் உரைத்தோ மல்லவோ? உமது நாமத்தி
“னாலே பசாசுகளை துரத்தினோ மல்லவோ? உமதுநாமத்
“தினாலே அநேக அற்புதங்களை செய்தோமல்லவோ? என்
“பார்கள் 23 - அப்பொழுது நான் அவர்களை நோக்கிநான்
“ஒருக்காலும் உங்களை அறியவில்லை அக்கிரமக்காரரே
“நீங்கள் என்னை விட்டுப் போங்கள் என்று அவர்களுக்கு
“அறிவிப்பேன்” என்று இயேசு நாதர் சொல்லுவதாகப்
பரிஷ்காரமாய்க் கூறுகின்றதே. இதைத்தவிர வேறு என்னசாட்
சியம் உங்களுக்கு வேண்டும்? எமது நேயர்கள்தானே இயேசு
வைக்கர்த்தர் என்கிறீர்கள். உங்களைத்தானே அவர், அக்கிரமக்கா
ரரே என்னை விட்டும் போங்கள் என்பார்? அல்லவென்று சொன்
னால் வேறுயாரை இயேசு அப்படி சொல்லுவார் என்று நம்பிஇருக்
கின்றீர்கள்? ஐயோ நன்றாக, வெளிப்படையாகத் தம்மைக்கர்த்த
ரென்று சொல்லவேண்டா மென இயேசு பெருமானார் கண்டிப்
பாய் விலக்கிஇருக்க அந்த என்ன காரணத்தினாலே புறம்பே தள்ளி
வைத்து அவரைக்கர்த்த ரென்று சொல்லத் துணிந்தீர்கள்? விதிவ
சமோ? ஐயோமுன்னைய வேதங்களுக்கு ஒற்றுமையாக இயேசு
கூறிய இந்தவாக்கியம் காணப்படவில்லையோ? எமது நேயர்காள்!
கிறிஸ்துநாதர், தம்மைக் கர்த்தரென்று, சொல்லவேண்டா மென
மறுத்திருப்பதாக மத்தேயு கூறுகின்றான். யோவானோ வெனின்,
இயேசு நாதர், தம்மைக் கண்டவன் கடவுளைக் கண்டானென்றும்
தம்மில் கடவுளும், கடவுளில் தாமுமிருப்பதாகக் கூறினாரென்றும்,
கூறுகின்றதே. இவ்விரண்டில் எது சரி? உங்கள் வேதம் வரை
யப்பட்ட காலத்திலே திராட்சப் பழச்சாராயம் குடிப்பது விலக்
கப்படாதிருந்த காரணம்பற்றி, அந்த வேதகர்த்தாக்கள் அம்மது
வெறியினாலே வாயில் வந்ததெல்லாம் ஒன்றோடொன்று மாறு
பட எழுதிவிட்டார்களென்று சொல்லுவீர்களோ? இயேசு நாதர்
கூட இலாகிரிவஸ்து பிரியமாகுகிறவர் என்று நீங்கள் சொல்லு வீர்க
ளன்றோ? நாங்கள் ஒரு போதும் அவரை அப்படி சொல்லவே
மாட்டோம். நோவாவானவர் இலாகிரி வெறியினாலே பிடவை
சோர்ந்து கிடந்தாரென்றும், லோத்து என்பவர் இலாகிரி வெறியி



னாலே அவர் தமது குமாரத்திகளை விவசாரம் செய்தா ரென்
றும் வெகு துணிவாய்ச் சொல்லுகிறீர் களாகையால் இயேசும்
லாகிரி வெறியினாலே வந்ததெல்லாம் பிதற்றினாரென்றும் சொல்
லுவீர்கள். நாங்களோ வெனின் மேல் கூறிய மேன்மை பொருந்தி
யவர்களைப்பற்றி அப்படிப்பட்ட ஒரு சிறிய வாக்கியத் தைக்கூட
அவர்கள்பேரில் உபயோகிப்பதைப் பெரும் பாபம் என்று உண்மை
யாய் நம்புகின்றோம். ஆனால் உங்கள் வேதம் வரைந்த வராகிய
மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்கிறபேதைகளை நபிகளாக
வாவது தீர்க்கத்தரிசிகளாக வாவது, ஊழியக் காரராகவாவது
சொல்லப்படாமையினாலே, அவர் லாகிரி வெறியினாலே வாயில்வந்
தபடி பிதற்றி, வேதம் எழுதியிருப் பார்களென்று நாங்களும் சொல்
லலாம். ஒருவேளைஎமது நேயர்கள், ஒன்றுக் கொன்று மாறுபட்டு
வருகிற வேதவாக்கியங்களை எமது ஹிந்து மார்க்க நேயர்களைப்
போல, ஞானகாண்டமென்றும், கரும காண்டமென்றும் பிரித்து
ஞாயம் கூற முன் வருவார்களோ? அல்லது மேல் கூறிய வேத
வசனத்திலே “என்பிதாவினுடைய சித்தத்தின்படி செய்கிறவனே
அதில் பிரவேசிப்பவன்” என்று இயேசு நாதர் சொன்னதாகச்
சொல்லப் பட்டிருக்கின்றதே. அதுபற்றி இயேசுவைத் தேவ
குமாரனென்கிறோம் என்பார்களோ? அப்படியானால் இதோ
மத்தேயு 23-ம் அதிகாரம் “8 நீங்களோ இரபீ என்று அழை
“க்கப்படக் கூடாது என்னத்தினாலெனின் கிறஸ்து வென்
“பவர் ஒருவரே உங்கள் குருவாயிருக்கிறார். நீங்கள்
“எல்லாரும் சகோதரர்களா யிருக்கின்றீர்கள். மேலும் பர
“மண்டலங்களிலிருக்கிறவர் ஒருவரே உங்களுக்குப் பிதா
“வாயிருக்கிறார். ஆகையால் நீங்கள் பூமியிலே ஒருவரையும்
“உங்கள் பிதாவென்று அழைக்கக்கூடாது” என்று பரிஷ்
காரமாய்க் கூறுகின்றது. இதனாலே நீங்களும், தேவக் குமாரர்க
ளாகவே யிருக்கிறதாக இயேசு தாமே சொல்லுகிறதாய்க் காணுவீர்
கள். ஆகவே, இயேசு மாத்திரம் எப்படி தேவகுமாரனா வார்?
நேயர்காள்! அந்த வேதவாக்கியத்தினாலே, இயேசுநாதர் தேவ
க்குமாரனல்ல என்னும் பொருட்டாய் உங்களுக்கு இயேசு குரு
வென்றும் மற்றவர்கள் தம்மில் சிறிது பெரிதென்கிற வித்தியாச
மின்றி எல்லோரும் சமமானவர்கள் எனப்படும் பொருட்டாய்
“நீங்களெல்லாரும் சகோதரர்” என்றும் பரமண்டலங்களில் கடவு

ளுக்குச் சமானமாக ஒருவரும் இல்லை என்னும் பொருட்டாய் "ஒருவரே கடவுள்." என்றும் கூறுகின்றதாக நீங்கள் காணவேண் டியது. அப்படி காணுதபட்சத்தில் நீங்களெல்லோரும் தேவக்குமார ரெனப் படவேண்டியதே நியாயமாகும். எமது நேயர்களே!

"நீங்கள் எல்லாரும் சகோதரர்கள்." என்று கிறிஸ்து நாதர் சொல்லிய அவ்வார்த்தைக்கு என்ன பொருள் படுத்துவீர்கள்? எல்லாரும் ஒரு தகப்பன் பிள்ளைகளென்று சொல்லுவீர்கள். கிறி ஸ்து நாதர் எத்தனையோ தரமாகத் தம்மை மனிதக்குமாரன் என் றும் ஊழியக்காரன் என்றும் சொல்லுகின்றாரே. அவைகளுக் கெல்லாம் என்ன சொல்லுவீர்கள்? இதோ மத்தே 20 அதிகாரம் "28 மனிதனுடைய குமாரனும், ஊழியங்கொள்ளும்படி வராமல் "ஊழியம் செய்யும்படிக்கும், அநேகரை மீட்கும் பொருளாகத் "தமது சீவனைத் தரும்படிக்கும் வந்தானே என்றார்" என்கின்றது இதனாலே இயேசுவானவர், நீங்கள் நினைக்கிறபடி தேவகுமாரன் அல்லர் மனிதனுடைய குமாரனே என்றும், அதற்குச் சான்றாகவே "ஊழியம் கொள்ளவரவில்லை. ஊழியம் செய்யவேவந்தார்" என்றும் அவர் மனித சுபாபமுடையவரேயன்றித் தேவ சுபாபம் உடையவரல்லர், என்பதற்குச் சான்றாக "சீவனை தரும்படிக்கு வந் "தான்" என்றும் கூறுவாராயினர். அந்தோ! அவருடன் நம் மைப்போலவே பராபரனாலே பயன் அடையும்பொருட்டு ஊழியம் செய்பவராயிருக்க, அவரை எப்படி தேவனென்று சொல்லுவீர்கள்? இதுவுமன்றி; மத்தே 19 அதிகாரம் "16 அப்பொழுது ஒரு "வன்வந்து அவரை நோக்கி நல்ல போதகரே நித்திய "ஜீவனை அடையும்படிக்கு நான் எந்த நன்மையைச் செய்ய "வேண்டும் என்றான் 17 அவனுடனே அவர் சொன்னது, "நீ என்னை நல்லவன் என்று ஏன் சொல்லுகிறாய்? பராபர "னாகிய ஒருவரேதவிர நல்லவன் ஒருவனும் இல்லையே, நீ "ஜீவனில் பிரவேசிக்க விரும்பினால் கற்பனைகளைக் கைக் "கொள் என்றார்" என பரிஷ்காரமாய்க் கூறுகின்றது. ஐயோ நேயர்காள்! மகா பரிசுத்தராகிய கிறிஸ்து நாதர் தம்மை நல்லவர் என்று சொல்லவே பொருந்தாத பக்திமானாயிருக்க அவர் தம்மைத் தேவனென்றும், தேவக்குமாரனென்றும் சொல்ல எங்ஙனம் பொ ருந்துவாரோ? பராபரனாகிய ஒருவரே தவிர நல்லவன் ஒருவனும்



இல்லையே என்ற இயேசுநாதரின் வசனத்தினாலே, பராபரன் ஒரு வரே என்றும் தாம் அவருடன் ஒரு விசயத்திலும் சமமானவரல்லர் என்றும் காணவில்லையோ? நீவிர்கள் இயேசுநாதரை வீணாக அவ ரில் இல்லாத விசயங்களை அவர்மீது சுமத்தி அவரை அவதூறு செய் வான் தலைப்பட்டீர்களேயன்றி, அவரை நியதியான புகழாகப்புகழ வில்லை என்று நன்றாய்த் துலங்குகின்றது. மத்தே 19ம் அதிகா ரத்துடன் மாற்கு 10 ம் அதிகாரமும் ஒத்துக் கிடக்கின்றதைக் காணுங்கள் "17 பின்பு அவர் புறப்பட்டு வழியிலே நடக் "கையில் ஒருவன் அவரிடத்திற்கு ஓடிவந்து முழங்கால் "படியிட்டு நல்லபோதகரே நித்தியசீவனைச் சுதந்தரித்துக் "கொள்ளும்படி நான் செய்யவேண்டியது என்னவென்று "கேட்டான், 18 அவனுடனே அவர் சொன்னது, நீ "என்னை நல்லவனென்று ஏன் சொல்லுகிறாய் பராபரனாகிய "ஒருவரேயன்றி மற்றொருவனும் நல்லவன் அல்லவே" என்று கூறினதாகக் கூறுகின்றது லூக்காவேதம் 18-ம் அதிகார மோ வெனில், "18-அப்பொழுது தலைவன் ஒருவன் அவரை "நோக்கி நல்லபோதகரே நித்தியஜீவனை சுதந்தரித்துக் "கொள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டும் என்று "கேட்டான் 19 அதற்கு இயேசுவானவர் சொன்னது, "நீர் என்னை நல்லவர் என்று என் சொல்லுகிறீர்? பரா "பரன் ஒருவரே யல்லாமல் மற்றொருவனும் நல்லவன் அல் லவே." என்று கூறினதாகக் கூறுகின்றது. அந்தோ! இயேசு நாதர் தம்மை நல்லவர் என்று சொல்லுவதைக்கூட பொருந்தாதவ ரானால் வேறு எந்த வார்த்தையைத்தான் பொருந்துவார்? அவர் தமது பராபரனது ஒப்பறுந் தன்மையையும் தமது அடிமைத் தன் மையின் தாழ்ந்த நிலைமையையும் காண்பிக்குமாறு பராபரன் ஒரு வரேதவிர நல்லவன் ஒருவனும் இல்லை என்று கூறுவாராயினரென் பது உங்களுக்கு ஏன் விளங்கவில்லையோ? யாம் அறியேம். நேயர் காள்! பராபரன் ஒருவரே என்ற வசனத்தினாலே பராபர வஸ்து விற்கு சமத்துவம் உடைய வஸ்து ஒன்றும் இல்லை என்பதை நன்கு விளக்கினாரென்பதை யுணர்வீர்களாயின், இயேசுவை ஒரு போதும் பராபர னென்றாவது பராபரப்பிள்ளை என்றாவது சொல் லமுன் வரமாட்டீர்கள். இங்ஙனமெல்லாம் உணராத போவான்

பிதாவைக்கண்டவன் என்னைக்கண்டானென்றும், நான் பிதாவிலேயும், பிதா என்னிலேயும், இருக்கிறதை நீ விசுவாசியாமல் இருக்கலாமா? என்றும், இயேசுவானவர் சொன்னாரென்று சொல்லுவதை எப்படி நம்புவீர்கள்? அப்படிசொல்ல சக்தியிருக்குமாயின் நல்லவர் என்று தம்மைச் சொன்னவர்களை ஏன் இயேசு கண்டிப்பார்? இயேசுநாதர் தம்மை நல்லபோதகர் என்று சொல்லவொருந்த வில்லை என்கிற விஷயத்தை ஒருங்கே மத்தேயு, மாற்கு, லூக்கா இம்மூன்று வேதகருத்தாக்களும், ஒப்புகின்றதாகவும், என்னைக்கண்டவன் என்பிதாவைக் கண்டானென்றும், நான் பிதாவிலேயும் பிதா என்னிலேயும் இருப்பதை நீங்கள் உணரவில்லையா? என்றும் இயேசுகூறினதாகக் கூறுவதை யோவான் மாத்திரம் கூறுவதாகவும் காணப்படுகின்றன. ஆகவே நேயர்கள், எந்தவார்த்தையைநம்புவார்களோ? தெரியவில்லை. முக்கியமான இவ்விஷயங்களில் வேதகருத்தாக்கள் இவ்வாறு மயங்கினால் மற்றவைகள் கதி எப்படி முடியுமோ? ஏதை நம்புவார்களோ? எதை நம்பமாட்டார்களோ? நாம் அறியேம். இதோ நேயர்காள் பாருங்கள் மத்தேயு 16-ம் அதிகாரம் "13-பின்பு இயேசுவானவர் பிலிப்பு கேசாரியாவின் திசைகளில் வந்தபொழுது அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி மனிதனுடைய குமாரனாகிய என்னை சனங்கள் ஆரென்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார் 14-அதற்கு அவர்கள் சொன்னது சிலர் உம்மையோவான் ஸ்நானன் என்றும் சிலர் எலியா என்றும் சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். 15 அதற்கு அவர் நீங்கள் என்னை ஆரென்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டபொழுது 16 அதற்கு சீமோன் பேதுரு சொன்னது; நீர் ஜீவனுள்ள பராபரனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான். 17 அவனுடனே, இயேசுவானவர், சொன்னது; யோனாவின் குமாரனாகிய சீமோனே மாம்ச இரத்தமல்ல பரமண்டலங்களிலிருக்கிற என்பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். ஆதலால் நீ பாக்கியமுள்ளவன் 18 மேலும் நீ பேதுருவாயிருக்கிறாய்; இந்த கல்மலையின்மேல் நான் என்னுடைய



சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்களும் அதைச் செயிப்பதில்லை என்று உனக்குச் சொல்லுகிறேன் 19 - அல்லாமலும் பரலோக இராச்சியத்தின் திறவுகோல்களை உனக்குக்கொடுப்பேன். பூமியில் நீ கட்டுவது எதோ அது பரலோகத்திலே கட்டப்பட்டிருக்கும். நீ பூமியிலே கட்டவிழ்ப்பது எதோ அது பரலோகத்திலே கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் என்று சொல்லி 20 - பின்பு தாம் கிறிஸ்து என்று ஒருவருக்கும் சொல்லப்படாத படிக்குத் தம்முடைய சீஷர்களுக்குக் கட்டளை யிட்டார்" என்று கூறுகின்றது.

எமது புத்தி சாதுரியமுள்ள கிறிஸ்துவ பண்டிதர்களே இந்த வசனங்களிலே இயேசு வானவர், தேவக்குமாரனென்றாவது கிறிஸ்து என்றாவது எலியா என்றாவது, தீர்க்கதரிசி என்றாவது, தம்மைக் குறித்து சீஷர்களிடத்திலாவது வேறுசனங்களிடத்திலாவது வெளிப்படுத்தவில்லை என்பது பரிஷ்காரமாய்க் காணப்படுகின்றதன்றோ? தம்மை அவர் ஏதாவது ஒருபெயரிலே வெளிப்படுத்தியிருந்தால் "என்னை சனங்கள் ஆரென்று சொல்லுகிறார்கள்" என்றாவது, நீங்கள் என்னை ஆரென்று சொல்லுகிறீர்கள் என்றாவது சீஷர்களை நோக்கி இயேசு நாதர் வினவவேண்டுவது நியாயமாகுமா? அல்லாமல் தம்மைக்கிறிஸ்து வென்று வெளியிட வேண்டாமென சீஷர்களுக்கு இயேசு வானவர் கட்டளையிட்டாரென்றபடியினாலே, இயேசு தம்மைக் கிறிஸ்து என்றாவது, தேவக்குமாரனென்றாவது விசுவாசிக்கும்படி, ஒருபோதாவது சீஷர்களிடத்திலாவது, வேறு சனங்களிடத்திலாவது பிரஸ்தாபிக்கவில்லை என்று நன்றாய்த் தோற்றுதேயுமன்றி, தம்மைத் தேவகுமாரனென்றாவது கிறிஸ்து என்றாவது சொல்லக் கூடாதென்றும் கண்டிப்பாய் சீஷர்களை மறுத்திருக்கின்றாரென்று நன்றாய்த் தோன்றுகின்றதல்லவா? உண்மையில் இயேசு வானவர் தேவக்குமாரனாகிய கிறிஸ்துவாயிருந்தால் தம்மை அப்படி வெளியிடவேண்டாமென்று ஏன் அவர் சீஷர்களுக்குக் கட்டளையிடவேண்டும்? உண்மையை மறைப்பது பாபமன்றோ? இயேசுநாதர், தேவக் குமாரனாகிய கிறிஸ்து என்று மற்றவர்களால் விசுவாசிக்கப்படவேண்டி

யிருந்தால் அப்படி விசுவாசிக்கப் படவேண்டிய தம்முடைய நாம
த்தைத் தாமே மறைத்து வைக்கும்படி உத்திர விடவேண்டிய
நியாய மென்ன? விளக்கை ஏற்றி மரக்காலால் மறைத்து வைக்க
லாமா? என்றுவினவிய இயேசு வானவர் தாமே அப்படி விளக்கை
ஏற்றிமறைத்து வைப்பாரா? ஓபண்டிதர்களே! இயேசு தம்மை
இன்னாரென்று வெளியிட வேண்டாமென மறைத்து வைக்கும்
படி உத்திரவிட்ட தானது இயேசுவானவர் பிரசங்கிக்க ஆரம்
பித்த காலத்திலாயிருக்கு மென்று ஒரு வேளைச் சொல்ல முன் வரு
வீர்களோ? அவ்வாறு மல்லவே இயேசு வானவர் தாம் சிலுவையில்
அறையப்படபோவதைக் குறித்துப் பிரசங்கித்த கடைசி காலத்தி
லன்றோ? அப்படிதம்மை இன்னாரென்று வெளியிட வேண்டாமென
வுத்திரவிட்டதாகக் காணப்படு கின்றது. அல்லாமலும் இயேசுவா
னவர் தம்மை இன்னாரென்று வெளிப்படுத்தாமல், பரலோக இரா
ச்சியத்தைக் குறித்து சுவிசேஷம் பிரசங்கிக்கவும்; ஞானஸ்நானம்
கொடுக்கவும் எவ்வாறுமுடியுமோ? தாம் இன்னார், இத்தன்மை
யினையுடையார் என முன்னமே தெரிவிக்கப்பட்டப் பிறகன்றோ
சுவிசேஷ முதலியன பிரசங்கிக்கப்பட வேண்டியது நியாயமாகும்?
நேயர்கள்! மத்தேயு, ஏதோ அவ்வசனங்களைத் தவறுதலாக எழுதி
யிருப்பாரென்று நீங்கள் அவர்மேல் குற்றஞ்சுமத்திக் தப்பித்துக்கொ
ள்ள நினைப்பீர்களோ? இதோ, மாற்கு 8-ம் அதிகாரம், "என்
"னைக்குறித்து மனிதர்கள் என்னசொல்லுகிறார்கள் என்று
"கேட்டார் 28 - அவர்கள் சொன்னது சிலர் உம்மை
"இஸ்நானனாகிய யோவான் என்றும், சிலர் எலியாவென்
"றும், சிலர் உம்மைத் தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்
"றும் சொல்லுகிறார்கள், என்றார்கள். 29 - அப்போது
"அவர் நீங்கள் என்னைக்குறித்து என்ன சொல்லுகிறீர்
"கள் என்றார். அதற்கு பேதுரு நீர் கிறிஸ்துவே என்
"றான். 30 - அப்பொழுது தம்மைக்குறித்து அப்படி
"ஒருவருக்கும் சொல்லாதபடிக் கெட்டியாய் அவர்களுக்
"குக் கட்டளை யிட்டார்" என்றும், லூக்கா 9-ம் அதிகாரம்
"சனங்கள் என்னைக்குறித்து என்ன சொல்லுகிறார்கள்
"என்று கேட்டார் 19 - அவர்கள் மாறுத்தரமாகச் சொன்
"னது சிலர் உம்மை யோவான் இஸ்நானன் என்றும்,



"சிலர் எலியாவென்றும் சிலர் பழைய தீர்க்கதரிசிக
"ளில் ஒருவன் உயிரடைந்து எழுந்தானென்றும் சொல்
"லுகிறார்கள் என்றார்கள். 20 - அவர் சொன்னது நீங்
"கள் என்னைக்குறித்து என்ன சொல்லுகிறீர்கள் என்றார்
"அதற்கு பேதுரு நீர் பராபரனுடைய கிறிஸ்து என்
"றான். 21 - அப்பொழுது அவர் அதை ஒருவருக்கும்
"சொல்லாதபடிக்கு அவர்களுக்குக் கெட்டியாய்க் கட்டளை
"செய்தார்" என்றும் கூறுகின்றனவே; ஆகவே மத்தேவேதம்
மாற்கு, லூக்கா இவர்களோடு எதுவரைக்கும் ஒத்துக்கிடக்கின்
றதோ அதுவரைக்கும் மறுக்கப்படா தென்பது நீங்கள்காணவேண்
டியதே. ஆனால் மாற்கு, லூக்கா, இவ்விருவர்களும் பேதுரு இயே
சுவைப்பற்றி நீர் கிறிஸ்து என்று சொன்னதாக மாத்திரம் காணப்
படுகின்றதேயன்றி நீர் தேவக்குமாரனாகிய கிறிஸ்து என்றுபேதுரு
சொன்னதாக, மத்தேயு சொன்னபடி காணப்படவில்லை. என்ற
லும் மத்தேயு மாற்கு, லூக்கா இம்மூவர்களும் இயேசுவானவர் தம்
மைக்குறித்துக் கிறிஸ்து வென்று வெளியிட வேண்டா மென்று
சீஷர்களைக் கண்டிப்பாய் மறுத்தார் என்பதில் பிசகறக்கூறுகின்
றதாய் நீங்கள் நம்பவேண்டியது அவசியமே; மற்ற வித்தியாசங்
களைப்பற்றி நீங்கள் ஆராய்ந்தால் அது உங்கள் வேதவழக்கென்று
முகங் குப்புறச்செய்யும். ஆகவே எமது நேயர்கள், இயேசுவான
வர் தம்மைப்பற்றி எவ்வாறு பிரசங்கித்தார்? தம்மை எவ்வாறு
விசுவாசிக்கும்படி சொன்னார்? என்பனவாக ஆராய்வோமேயா
னால் "27 - அழிந்துபோகிற போசனத்திற்காக அல்ல நித்
"திய சீவன் உள்ளவரைக்கும் நிலைநிற்கிற போசனத்திற்
"காகவே பிரயாசை படுங்கள் அதை மனிதனுடையகுமா
"ரன் உங்களுக்குக் கொடுப்பான் பராபரன் என்னும்
"பிதா அதற்காக் அவனை முத்திரைப்படுத்தினாரே என்
"றார் 28 - அதற்கு அவர்கள் சொன்னது பராபரனுக்கு
"ஏற்ற கிரியைகளை நடத்தும்படிக்கு நாங்கள் என்ன
"செய்யலாம் என்றார்கள் 29 - இயேசுவானவர் சொன்
"னது; பராபரன் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிக்
"கிறதே அவருக்கு ஏற்றகிரியையா யிருக்கின்றது என்
"றார்" என்று யோவான் 6-ம் அதிகாரம் கூறுகிறபடி இயே

சுவானவர் தம்மைக்குறித்து மனிதர்களுக்குப் பராபரனாலே அனுப்பப்பட்டவர் என்று சொல்லும்படிக்கும் விசுவாசிக்கும் படிக்கும் பிரசங்கித்தாரென்று நன்றாய்ப் புலப்படுகின்றதல்லவா? மிக்க; இயேசுவானவர் மனிதர்கள் அதாவது, இஸ்ரவேலர் கைக்கொள்ளவேண்டிய முக்கிய கற்பனைகளைக்குறித்துப் பிரசங்கித்ததெல்லாம், "தேவனாகிய பராபரனிடத்தில் முழு இருதயத்தோடும் "முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்பு கூறு "வதே முதலாம் கற்பனை என்றும் பிறனிடத்தில் உன் "னைப்போல அன்பு கூறுவதே இரண்டாம் கற்பனை" என்றுமே காணப்படுகின்றதென்பது மத்தேயு 22-ம் அதிகாரம் 37-38-வசனங்களிலேயே நன்கு புலப்படும். மாற்கு 12-ம் அதிகாரமோ வெனில் "கற்பனைகளில் எது பிரதானமானதென்று "கேட்டான் 29-அதற்கு அவர் சொன்னது கற்பனைகளில் "பிரதானமான கற்பனையென்னவென்றால் இஸ்ரவேலே "கேள். உன்தேவனாகிய பராபரன் ஒருவரே பராபரன். "30-உன்தேவனாகிய பராபரனிடத்தில் நீ உன் முழு இரு "தயத்தோடும், உன்முழு ஆத்துமாவோடும், உன் முழு "மனதோடும், உன்பலங்கள் எல்லாவற்றோடும், அன்பு "கூறுவாயாக என்பதே பிரதானமான கற்பனை 31-இரண் "டாம் கற்பனை அதற்கு ஒப்பாயிருக்கின்றது. என்னவெ "னின் உன்னிடத்தில் அன்பு கூறுகிறதுபோலப் பிறனி "டத்தில் அன்புகூறுவாயாக' வென்பதே, இவைகளிலும் "வேறொரு பிரதானமான கற்பனை இல்லை" என்று இயேசுநாதர் கூறினதாகக் கூறுகின்றதே. இதனாலே பராபரன் ஒருவரே என்றும், அவரையே முழுபலன்களோடு விசுவாசிக்கவேண்டுமென்றும் பிறனைத் தன்னைப்போல எண்ணவேண்டு மென்றுமே இயேசுநாதர் கட்டளையிட்டதாக மாத்திரம் நன்றாய் ஏற்படுகின்றதேயன்றி இயேசுவானவர் தேவக்குமாரன் என்றாவது, தேவனென்றாவது விசுவாசிக்க வேண்டு மென்று கற்பனைசெய்ததாகக் காணப்படவில்லையே. ஆதலால் இயேசுவைத் தேவக்குமாரன் என்று விசுவாசிக்காதவர்களுக்குப் பரலோக இராச்சியம் சித்திக்காது என்று நீங்கள் பிரசங்கிக்கும் உங்கள் சாதனை என்ன? அநாதாரமான பிரசங்கம் நிலைநிற்குமா? அப்படிச் சொல்லுவதில் உங்களுக்கு என்

119170



னலாபம் கிடைக்குமோ? நேயர்காள் நாம் எடுத்துக்காட்டின உங்கள்வேத மேற்கோள்களை நீவிர்கள் நல்ல மனதோடு உற்றுநோக்கினீர்களாயின், இயேசுநாதரை ஒருக்காலும் நீங்கள் சொல்லுகிறபடி தேவக்குமாரன் என்றும் அவர் அப்படி விசுவாசிக்கப்படாவிட்டால் பரலோக இராஜ்யம் சித்திக்காதென்றுமாகச் சொல்லமுன்வரமாட்டீர்களென்று உண்மையாய்ச் சொல்லுகின்றோம்.

ஆகையால் நண்பர்களே, கிறிஸ்துநாதர் பராபரனது ஊழியக்காரனென்றும் (நபிகள்) தீர்க்கதரிசியென்றும் சில இடங்களில் தேவகுமாரன் என்றும் சொல்லப்படுவதெல்லாம், தேவனது அடிமையெனும், பொருள் பற்றியதேயன்றி மற்றபடி உண்மையில் குமாரன் எனும் முறைமை பற்றிய தன்றே யென்றும், நம்பி பரிசுத்தவானாகிய பராபரனைத் தூய்மையாகிய ஒப்பற்றவர் என்று அவரை வணங்கவேண்டிய முறைப்படி வணங்கிக் கடைத்தேறுவீர்களாக. ஆமென்.

## "தத்துவம்."

"இது இயேசுநாதரின் தத்துவம் இம்மட்டதென்பதைக் கூறுகின்றது."

கிறிஸ்து மார்க்கவழி காட்டிகளே, எமது நண்பர்களே! இயேசுநாதர் உலகத்திலுள்ள மனிதர்களுக்கெல்லாம் இரட்சகர் என்று நீங்கள் நம்புவதும், சொல்லுவதும், பிரசங்கிப்பதும் வாதாடுவதும், எவ்வளவுதூரம் உண்மை என்பதைக் கொஞ்சநேரம் ஆராய்வோமாயின், அவை அவ்வளவும் அநாதாரமானவை என்றே காணலாம்; ஆனால் இயேசுநாதர் இஸ்ரவேல் வம்சத்தார்க்கு மாத்திரம் இரட்சகரென்றும் நபியென்றும் பராபரனது [illegible]யக்காரரென்றும் குருவென்றும் வெள்ளி தாய்த்தோற்றுகின்[illegible] என்பது உண்மையே, ஆகலின், எமது கிறிஸ்து நேயர்களிலுள்ள காருணியர், ஹிந்துக்களாகிய ஏனையோர்கள் தாம் கிறிஸ்துவர் என்று சொல்லும், நினைப்பதும், வீணேயன்றிப் பிரயோசனமென்பது கிஞ்சித்தேனும் இல்லை எனல் கிறிஸ்து வேதப்பிரமாணமென்பதை உற்றுநோக்குவீர்களாக.

இதோ! வேதபண்டித சிகாமணிகளே! இயேசுவானவர், இரட்சிப்பாரென்று வாளாமயக்கித் தேசந் தேசமாகச் சுற்றித்திரிந்து, அநியாயமாய்ச் சனங்களை நரகத்திற்கு ஆளாக்குவதேயு மன்றி நீவீர்களும் நரகம்புக எத்தனிக்கின்றவர்க ளாகுகின்றீர்க ளென்பதில் யாது தடை? அந்தோ நீங்கள் விபரீதமான வேலையில் வாழுநாளை வீணே செலவுசெய்து பாவமூட்டைகளைக் குவியல் குவியல்களாகக் குவித்துக்கொண்டு தானுங்கெட்டுப் பிறரையும் கெடுக்கும் பேதைகளைப்போல பரலோக இராச்சியத்தை இழந்து நரகலோகத்தில் ஊழிகாலமும், கிடந்துழலும்படி. முன்வருகின்றீர்க ளென்று சொல்லவிசனிக்கின்றேம். ஐயோ அரசாட்சியார் மதவிஷயத்தில் தலையிட்டு மதவிசாரணை செய்யாத காரணம் பற்றியன்றோ பாமரசனங்கள் வீணே நரகத்துக்கு ஆளாகின்றார்கள்? என்னென்று சொல்லுவேம்; எமது கிறிஸ்துவநேயர்களே! இதோ பாருங்கள்; 5 - மோசே 18 - ம் அதிகாரம் "18 - நாம்உன்னைப்போல ஒரு "தீர்க்கதரிசியை அவர்களுக்கு அவர்கள் சகோதரரின் "நடுவிலே யிருந்து எழும்பப்பண்ணி நம்முடைய வார் "த்தைகளை அவர்வாயிலே கொடுப்போம். நாம் அவருக் "குக் கற்பிப்பதை எல்லாம் அவர்களோடே சொல்லு "வார்" என்று கூறுகின்றது; இதனாலே, இயேசுநாதர் தமது சகோதரர்களான, இஸ்ரவேலர்களுக்கு ஒருதீர்க்கதரிசியாய் எழும்பி தம் சகோதரர்களுக்குக் கர்த்தரால் தரப்படும் வார்த்தைகளை அவர்களுக்குச்சொல்லி அவர்களை இரட்சிப்பார் என்று பரிஷ்காரப்படுகின்றதே யன்றி, மற்றசாதியார்களுக்கு அவரால் பிரயோசன மென்பது தோற்றப்பட்டவில்லை. இதோ சகரியா 9 - ம் அதிகாரமோ வெனின் "9 - சீயோன் குமாரத்தியே மிகவும் களிகூரு, எருசலேம் குமாரத்தியே கெம்பீரி இதோ உன் இராசா "உனக்கு வருவார்" என்று கூறுகின்றது. இதனாலே சீமோனெனப்படும் எருசலேமின் இராசா வென்று கிறிஸ்துநாதர் சொல்லப்படு கின்றாரன்றோ? ஆகவே அவர் இஸ்ரவேலருக்கு இராசாவேயன்றி மற்ற காருணிய ராதியோருக்கு இராசாவன் றென்பது பெறப்படு கின்றதே., மத்தே 19 - ம் அதிகாரம் "28 - இயேசு "வானவர் சொன்னது (சகலமும்) புதிதாக்கப்படுங் காலத் "திலே மனிதனுடைய குமாரன் தனது மகிமை யுள்ள "பத்திராசனத்தில் வீற்றிருக்கும் பொழுது என்னைப்



"பின்பற்றிவந்த நீங்களும் இஸ்ரவேலராகிய பன்னிரெ "ண்டு கோத்திரங்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறவர் "களாக பன்னிரண்டு பத்திராசனங்களில் இருப்பீர்க "ளென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகின்றேம்" என்று இயேசுநாதர் கூறினதாகக் கூறுகின்றது. நேயர்களே! இவ்வுலகங்களெல்லாம் அழிந்து ஞாயத்தீர்ப்புக்காக மறுபடியும் இவ்வுலகம் புதிதாக்கப்படும் காலமாகிய ஒருநாளிலே இஸ்ரவேலரெனப்படும் பன்னிரண்டு கோத்திரத்தாருக்கு மாத்திரம் தமது சீஷர்களாகிய பன்னிருவரும் ஞாயந்தீர்க்கும்படி பன்னிரு பத்திராசனத்தில் இருப்பாரென்று இயேசுநாதர் சொல்லியிருக்கிற படியினாலே, அவர் இஸ்ரவேலர்களுக்கு மாத்திரமே இரட்சகர் என்று காணப்படுகின்றார். ஆகவே இஸ்ரவேலரல்லாத காருணியர், இந்தியராதிய மற்றையோர்களின்கதி என்ன? யாரைப் பின்பற்றி எங்ஙனம் தயங்குவார்கள், நீங்கள் இயேசுநாதரை நோக்கி அந்தக்காலத்திலே, இயேசுவே, உம்மை நம்பினோமே உம்முடைய நாமத்தினாலே அநேக காரியங்களைச் செய்தோமே, எங்குபார்த்தாலும் உமது நாமத்தினாலே சிலுவைகளை நிறுத்திக் கோவில்களைக் கட்டுவித்து அநேகர் உம்மைத் தேவக்குமாரனென்றும் தேவனே என்றும் சொல்லும்படி செய்தோமே நாங்களும் உம்மைத் தேவனென்று தெள்ளத்தெளிய சொன்னோமே. ஐயோ எங்களை ஏன் கைவிட்டுவிட்டீரோ? என்று நீங்கள் கேட்பீர்களாயின்; அப்பொழுது இயேசுவானவர் உங்களைநோக்கி; ஆ! பாபிகாள்! நாம் உங்களை அப்படியெல்லாம் ஒருபோதும் செய்யச் சொல்லவில்லையே ஏன் அப்படிப்பட்ட பாவமான வேலைகளைச் செய்தீர்களோ? நாம் உலகத்தார்களுக்குத் தெளிவாய்த் தெரியும்படிக்காக; இஸ்ரவேலருக்கு மாத்திரம் நாம் இரட்சகர் என்றும் பிறசாதியார்களுக்கு நாம்போதிக்கவரவில்லை என்றும் அந்நியர் ஊர்களுக்கு எம் சீஷர்களைப் போகக்கூடாதென்றும் ஒருவனை யூதனாக்கும்படி ஒரு கடலைக்கடந்து மறுகடலளவும் ஏன் போகிறீர்களென்றும் உங்களைப் பழித்திருக்கின்றேன். அப்படியிருக்க நீவீர்கள் ஏன் ஒருகடலைக்கடந்து மறு கடலளவும் உலக எல்லைவரையிலும் சுற்றித்திரிந்து அந்நியக் குடும்பங்களை வீணேகெடுத்து நீவீர்களும் கெடுவானேன்! என்னைக் கருத்தாவே என்று கூப்பிடுகிற எவனும் பரலோக இராச்சியத்தில் பிரவேசிப்பதில்லை என்றும் எம்மை நல்லவரென்று கூட

சொல்ல வேண்டாமென்றும் நாம் பரிஷ்காரமாய் உங்களை மறுத்
திருக்க எம்மை எப்படி தேவக்குமாரன் என்பீர்களென்றும், உங்
களைக் கண்டிப்பாய்க் கடாவி எம் முன்னால் நிற்கவேண்டாம் நீங்
கள் என்று உங்களை வெருட்டுவாரே. அப்பொழுது நீவிர்கள் என்
னசெய்வீர்களோ? நீங்கள் அப்பொழுது படும்பாடு சொல்லமுடியா
ததே. ஆகவே எமது நேயர்காள்! இவ்வுலகின்கண்ணே, எவர்,
மனுஷர்கள், நின்னுடைய எனப்படும் இருசாதிகளையும் இரட்சிப்ப
தற்காக வந்தவர்? என்று நன்கு ஆராய்ந்து அப்படிப்பட்டவரைப்
பற்றி பரலோக இராச்சியத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். அப்
பொழுது நீவிர்கள் பாக்கியவான்களே. இதோபாருங்கள் மத்தேயு
1-ம் அதிகாரம் "21 - அவள் ஒரு குமாரனைப் பெறுவாள்
"அவர் தம்முடைய சனங்களின் பாவங்களை நீக்கி அவர்
"களை இரட்சிப்பார். ஆகையால் அவருக்கு இயேசுவெ
"ன்று பெயரிடு வாயாக என்றார்" என்று கூறுகின்றது.
இதனாலே இயேசுவானவர் தம்முடைய சனங்களாகிய இஸ்ரவே
லரை மாத்திரம் இரட்சிப்பார் என்றும் அது பற்றியே அவருக்கு
இயேசு என்று பெயரிடப் பட்டதென்றும் காணப்படுகின்றது.
(இயேசுநாதர் பாவங்களை நீக்கி இரட்சிக்கிற வராயிருந்தால் இஸ்ர
வேலர்களுக்குப் பாபமில்லாதிருக்க வேண்டும். அப்படியிருந்தால்
அவர்கள், இயேசுவைப் பலவாறு துன்பப்படுத்தி அவரைச் சிலுவை
யிலும் அறைவார்களா? இதுவும் பிசகே. ஆனால் இயேசுவானவர்
பாவங்களை நீக்குகிற வரலர் பாவம் நீங்கும் வழியை அவரது சனமா
கியஇஸ்ர வேலர்களுக்குமாத்திரம் காண்பிக்கிறவர் என்று நம்ப
வேண்டிய தேயன்றி வேறில்லை) அன்றியும் இதோமத்தேயு 2-ம்
அதிகார மோவெனின் "6 அவர்கள் அவனை நோக்கி யூதாவின்
"ஊராராகிய பெத்லேகேமிலே அவர் பிறப்பார் என்
"னத்தினாலென்றால் யூதேயா தேசத்திலுள்ள பெத்லே
"கேம் ஊரே என்னுடைய சனங்களாகிய இஸ்ரவேலை
"ஆளும் பிரபு உன்னிடத்திலே தோன்றுவார். ஆகை
"யால் யூதாவிலுள்ள பிரபுக் களில் நீசிறிய தல்லவெ
"ன்று தீர்க்கதரிசிகளினாலே எழுதப் பட்டிருக்கிறது
"என்றார்கள்" என்று கூறுகின்றதே. இதனாலாவது, இயேசு
வானவர் இஸ்ரவேலருக்கு மாத்திரம் இரட்சகரென்று உங்களுக்



குத் தோன்றவில்லையா? இதுவேயுமன்றி மத்தேயு 10-ம் அதிகாரம்
"6-சாமாரியருடைய பட்டணங்களில், பிரவேசியாமலும்,
"காணாமல் போன ஆடு களாயிருக்கிற இஸ்ரவேலர் குடும்
"பத்திற்குப் பிறப்பட்டுப்போய்ப் பரலோக இராச்சியம்
"சமீபமாய் வந்ததென்று கூறி 16-வியாதிப் பட்டவர்களை
"க்குணமாக்கிச், குஷ்டரோகிகளைச் சுத்தம் பண்ணிமரித்
"தோரை எழுப்பிப் பசாசுகளைத் துரத்துங்கள். நீங்கள்
"இலவசமாய்ப் பெற்றுக் கொண்டீர்கள். இலவசமாய்க்
"கொடுங்கள்" என்று இயேசு நாதர் தமது சீசர்களுக்கு உத்திர
விட்டதாக நன்கு விளங்கு கின்றதே. ஐயோ இயேசுவானவர்
இஸ்ர வேலர்களுக்கு மாத்திரம் நபியாக அநுப்பப்பட்டவ ராகை
யாலன்றோ? தமது சீசர்களை இஸ்ரவேலர் தேசமல்லாது அதை
அடுத்து இருக்கும் படியான சாமாரியர் களது தேசங்களுக்குக்
கூடப் போக வேண்டாமென்று மறுத்தார்கள்? அந்த இயேசு
வேதேவவுத்திரவை, அவ்வளவாகப் பேணி நடந்திருக்க நீவீர்கள்
எப்படி தேவவுத்திரவையும் அவரது ஊழியக் காரரான, அல்லது
நீங்கள் சொல்லு கிறபடித் தேவக் குமாரனெனும் இயேசுவின்
உத்திரவையும் மீறி நினைத்தபடி எங்குந்திரிந்து வீண்காலத்தைப்
போக்குகிறீர்கள், இயேசு நாதர், எல்லாசனங்களுக்கும் தீர்க்கத்
தரிசியாயிருந்தால் தமதுசீசர்களை, ஏன் சாமாரியர் களுடைய
ஊருக்குப்போக வேண்டா மெனமறுப்பார்? அப்படி அவர் எல்லா
மனுசர்களுக்கும் தீர்க்க தரிசியாக வாவது, இரட்சகராகவாவது
இருப்பாராயின் சாமாரியருடைய தேசங்களுக்குப் போகவேண்டா
மென்று சீஷர்களை மறுத்தது குற்றமாகா வன்றோ? இதோ
இன்னும் பாருங்கள். மத்தேயு 15-ம் அதிகாரம் "22 - அப்
"பொழுது அவ்விடங்களின் எல்லைகளிலிருந்து வந்த
"கானான் தேசத்தாளாகிய ஒருஇஸ்திரி அவரைநோக்கி
"ஆண்டவரே தாவீதின் குமாரனே என் மகள் பசாசினா
"லே கடினமாய் வாதிக்கப் படுகிறாள். எனக்கு இரங்
"கவேண்டு மென்று சொல்லிக் கூப்பிட்டாள். 23-அவரோ
"அவளுக்கு மாறுத் தாரமாக ஒருவார்த்தையும் சொல்ல
"வில்லை. அப்பொழுது அவருடைய சீசர் வந்துஅவரை
"நோக்கி, இவள் நம்மைப் பின்தொடர்ந்து கூப்பிடுகிறா

" ளே, ஆதலால் இவளை அனுப்பிவிடும் என்றுவேண்டிக்
" கொண்டார்கள் 24 - அதற்கு அவர் காணமல் போன
" ஆடுகளாகிய இஸ்ரவேல்குடும்பத்தாரிடத்துக்கே
" அன்றி (மற்றவர்களிடத்தில்) நான் அனுப்பப்படவில்லை
" யே என்றார். 25 - அவளோ வந்து ஆண்டவரே எனக்
" குச் சகாயஞ்செய்யவேண்டுமென்று அவரை நமஸ்காரம்
" பண்ணினாள் 26 - அவர் சொன்னது பிள்ளைகளுடைய அப்
" பத்தை எடுத்து நாய்களுக்குப் போடுவது நல்லதல்லவே
" என்றார் 27 - அதற்கு அவள் ஆண்டவரே மெய்தான்.
" ஆகிலும் நாய்கள் தங்கள் எசமான்கள் போசனம் செய்
" கிற பலகையிலிருந்து விழுகிற உச்சிட்டங்களைத் தின்
" னுமே என்றாள் 28 அப்பொழுது இயேசு வானவர்
" அவளை நோக்கி ஆ! ஸ்திரியே உன்விசுவாசம் பெரிதா
" யிருக்கிறது. நீ விரும்பியபடி உனக்கு ஆகக் கடவது
" என்றார்" என்று தெளிவாய்க் கூறுகின்றது.

ஆகவே நேயர்காள்! இயேசு வானவர் தாமே நன்றாக, தான்
இஸ்ரவேல் குடும்பத்தாருக்கேயல்லாமல் வேறு ஒருவருக்கும் அனு
ப்பப்பட்டவரல்ல என்று சந்தேகமறச் சொல்லியிருக்க வேறுசாட்
சியம் உங்களுக்கு வேண்டுவ தில்லையே, அவ்வாறிருக்க, கிறிஸ்தவ
பண்டிதர்கள் வீணே தேசந்தேசமாகவும் தெருத் தெருவாகவும்
அலைந்து பாமரசனங்களை வஞ்சித்து அவர்களை நரகக்குழிக்கு ஆளாக்
கியும் தாமும் நரகக்குழிக்கு ஆளாகு கிறார்களே. தலை விதியோ,
ஞானக்கேடோ? அதிந்தேமில்லையே ஒருவேளை இயேசு நாதர் கனு
ணிய பெண் பிள்ளைக்கு உதவியபடி நமக்கும் உதவியருள் புரிவார்
என்று எமது நேயர்கள் சொல்லுவார்கள்போலும், ஐயோ இயேசு
நாதர் சமுகத்திலே அந்தப் பெண்பிள்ளை கெஞ்சாடியது உங்களுக்கு
மறைந்ததோ? பசாசை ஓட்டுவதற்கு எவ்வளவோ முன்பின்பார்த்
தார். அப்படிப்பட்ட இயேசு வானவர் அவளுக்குப் பரலோக இராச்
சியத்தை (அதாவது) நித்திய ஜீவனை எப்படி கொடுப்பார்? பரலோக
இராச்சியம் கர்த்தராலன்றோ கொடுக்கப்பட வேண்டியது. உங்க
ளுக்குப் புத்தி சுவாதீனம் இருக்குமாயின் இயேசுநாதரின் சமுகத்
திலே இருந்த ஒரு கனுணிய பெண்பிள்ளை பசாசை ஓட்டும்படி
யன்றிப் பரலோக இராச்சியம் பெறவேண்டுமென்று கேட்டு மன்



றாடவில்லையே. அப்படிப்பட்ட பெண்பிள்ளையின் வேண்டுதலைச்
செவியில் போடாதிருந்து விட்டதேயுமன்றி சீஷர்கள் அந்தப்பெண்
பிள்ளை விஷயத்தில் இரங்கி, இயேசுவைத் தூண்டியும், இயேசு
நாதர் இரங்காமல், அந்தப்பெண்பிள்ளையின், பிசாசை ஓட்டவே
ணுமென்கிற கோரிக்கைக்கு இடங்கொடாமல் எவ்வளவோ சமா
தானம் சொல்லியும் கடைசியாய் அவளுடைய வார்த்தை இயேசு
வின் சமாதானத்தை மிகைத்தபடியினாலே அவள் பசாசி ஓடு
மென்று ஒருவார்த்தை சொன்ன விஷயத்தை நினைத்தா உங்க
ளுக்கும் பரலோக இராச்சியம் கிடைக்கு மென்கிறீர்கள்? ஆ!
இதென்ன விபரீதம்!! உத்திரவில்லாத விஷயத்தில் இயேசுவை
நடக்கும்படி நாம் அவரை வம்பிப்பது நியாயமல்லவே. பொதுவாக
எல்லாரையும் காக்கும்படி வந்தவரையன்றோ நாம் கடைபிடிக்க
வேண்டும். இஸ்ரவேலரல்லாத மற்றவர்கள் இயேசுவைக் கடை
பிடிக்க வேண்டுவது அவசிய மென்று காணுர்கள்; உண்மையா
கவே; இஸ்ரவேலர் கூட இயேசுவானவர் பிரசங்கித்த வசனங்க
ளுக்குக், காதுசாய்க்காதுபோய் அதனால் அவரது பிரசங்கத்தின்
உண்மைகள் சிதையுண்ட காரணத்தினால் எல்லாருக்கும் அதாவது
இஸ்ரவேலராகிய ரெல்லாருக்கும் பொதுவாக, காத்து இரட்சிக்
கும்படி வந்திருக்கிற ஒருவரைச்சார்ந்து நடக்கவேண்டியது அவ
சியமென்பேம்; நிற்க இதோமாற்கு 7 - ம் அதிகாரம், " 26 -
" அந்த இஸ்திரி அவரைக்குறித்துக் கேள்விப்பட்ட பொ
" ழுது அவள்வந்து வணக்கமாய் அவர் பாதங்களின்
" அருகே விழுந்து தன்னுடைய மகளிலிருந்து பசாசை
" துரத்தவேண்டு மென்று அவரை வேண்டிக் கொண்
" டாள் 27 - இயேசுவானவர் அவளைநோக்கிப் பிள்ளைக
" ளுடைய ஆகாரத்தை எடுத்து நாய்களுக்குக் கொடுக்
" கிறது நியாயமல்ல முதலாவது பிள்ளைகளே திருப்தி
" அடையட்டும் என்றார்" என்று கூறுகின்றது. ஆ! இத
னாலே பிள்ளைகளாகிய இஸ்ரவேலரே திருப்தியடையாமல் அவ
ரைப்பிடித்து எவ்வளவோ இம்சித்துச் சித்திராவஸ்தை செய்து
விட்டார்களே, காணுனியர்களாதியோர்கள் ஹிந்துக்கள், எங்ஙன
னம் திருப்தியடையப் போகிறார்கள்? அல்லாமலும் "பிள்ளைக
ளெனப்படும் இஸ்ரவேலர்களே முதலாவது திருப்தி
" யடையட்டும்!" என்ற வாக்கியத்தினாலே இயேசுவானவர், இஸ்

ரவேலரல்லாதவர்களை நாய்களென்றபடியினாலே மற்றவர்களை வெகு இலேசாகக் காண்கிறவர் என்றும் உங்களுக்குப் புலப்படவில்லையா? இயேசு பொதுவாக எல்லா மனுஷர்களுக்கும் இரட்சகராய் அனுப்பப்பட்டவராயிருந்தால் மனிதர்களில் சிலரைப் பிள்ளை என்றும் சில்லரை நாய்களென்றும் சொல்லுவாரா? அவர் யாரிடத்திற்கு அனுப்பப்பட்டவரோ? அவர்களை அவர் பிள்ளை என்று ரென்பது சொல்லவேண்டுமோ.? ஆகவே அவர் மற்றவர்களாகிய நம்மவர்களைப் போஷிப்பவரல்லர் என்று நம்புங்கள். இதோ லூக்கா 1-ம் அதிகாரம், "31 - நீகர்ப்பந் தரித்து ஒரு குமாரனைப்பெறு "வாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக. 33 - " அவர் யாக்கோபினுடைய குடும்பத்திற்கு என்றென் "றைக்கும் இராசனாயிருப்பார். அவருடைய ஆளுகைக்கு "முடிவு வராதென்றார்" என்கின்றது. இதனாலும் இயேசு இஸ்ரவேலர்களுக்கு மாத்திரம் இராசாவானவர் என்று விளங்குகின்றது; இதுவுமன்றி மார்கு 4 - ம் அதிகாரமோ வென்றால் "10 - பின்பு அவர் தனித்திருக்கையில் பன்னிருவரோடுங் "கூட அவரைச்சூழ இருந்தார்கள். அந்த உவமையைக் "குறித்து அவரிடத்தில் விசாரித்தார்கள். 11 - அவர்களுட "னே அவர்சொன்னது, பராபரனுடைய இராச்சியத்தின் "இரகசியத்தை அறியும்படி உங்களுக்கு அருள் அளிக்கப் "பட்டது 12-புறம்பே இருக்கிறவர்கள் மனந்திரும்பாம "லும், தங்கள் பாவ மன்னிப்பை அடையாமலும் இருக் "கத்தக்கதாக உற்றுப்பார்த்தும் அறியாமலும் உற்றுக் "கேட்டும் சிந்தியாமலும் இருக்கும்படிக்கு அவை எல் "லாம் உவமைகளாக அவர்களுக்குச் சொல்லப்பட்டு வரு "கின்றன" என்று பரிஷ்காரமாய்க் கூறுகின்றது. இதனாலே இஸ்ரவேலர்கள், மாத்திரம் பராபரனுடைய இராச்சியத்தின் இரகசியங்களை அறியும்படி அருள் பெற்றிருக்கிறார்களென்றும் அவர்கள் தவிர இதரக்குடும்பத்தாராகிய காஞ்ஜனியர் சாமாரியர் இந்துக்கள் முதலானோர் அதை உற்றுக்கேட்டாலும், உணராமலும், உற்று நோக்கினாலும், காணாமலும் இருக்கும்படியாய் இயேசுவானவர் உவமைகளாலே பேசினாரென்றும், இஸ்ரவேலர் தவிர மற்றவர்கள் பாவமன்னிப்பையடையவும், மனந்திரும்பவும் இயேசு



நாதருக்கு மனமிருந்ததில்லை என்றும் தெளிவாய்க் கிறிஸ்துவ நேயர்களுக்கு விளங்கவில்லையா? அப்படியிருக்க, "இயேசுவானவர் உலகத்தாருடைய பாவங்களை எல்லாம் மன்னித்தருளினவர் என்று அவரை விசுவாசிக்காதவர்களுக்குப் பாவமன்னிப்புக் கிடைக்கமாட்டாதென்று நமது கிறிஸ்துவ பண்டிதநேயர்கள் நாக்கூசாது தெருத்தெருவாகப் புலம்பி மாரடைக்கக் கூவுகின்றார்களே. அது மதிக்கேடா? அல்லது சித்தசுவயமின்மையா? என்னென்று சொல்லலாம்? ஐயோ கிறிஸ்துவ பண்டிதர்களே, இயேசுநாதர் இஸ்ரவேலர் எனப்படும் பிள்ளைகளுக்கென்று வெகு பத்திரமாக மறைத்து வைத்திருந்த அப்பங்களை நீவீர்கள் அநியாயமாய்ப் பறை, பள்ளி, முதலிய இந்துக்களுக்கும், மற்றும் இதரவம்சங்களுக்குமாகப் பாதீனப் படுத்துகின்றவர்களாகக் காணப்படுகின்றீர்கள் என்பது உங்களுக்கு இன்னும் தெரியவில்லையா? உற்றுக் கேட்டாலும், உற்றுப்பார்த்தாலும், மற்றவர் உணராவண்ணம் வெகு கஷ்டமாக உவமைகளைத்தேடி மறைவாக இயேசுநாதர் பேசிய இரகசியங்களை ஐயோ தெருத்தெருவாகத் துண்டுக் கடிதங்களில் எழுதிக்கொண்டு விவரப்படுத்தும், லோபிகளுக்கு என்னதான் தண்டம் கிடைக்குமோ நாமறியேம். பாவமூட்டைகளைச் சுமந்துகொண்டு இயேசு மீனவெறுக்கும்படி அவரைச் சந்திப்பதில் என்ன லாபம் [?]? இதோ லூக்கா 8 - ம் அதிகாரம் "4 - பட்டணங் "களிலிருந்து மிகுந்த சனங்கள்வந்து அவரிடத்தில் கூடி "யிருந்தபொழுது அவர் உவமையாய்ச் சொன்னது 5 - "விதைக்கிறவன் தன் விதையை விதைக்கப் புறப்பட் "டான். அவன் விதைக்கையில் சில விதை வழியருகே "விழுந்து பின்பு மிதிக்கப்பட்டது ஆகாசத்துப் பறவை "களும்வந்து அதைப் பட்சித்தன. சில விதை கற்பா "றையின்மேல் விழுந்து அது முளைத்தபின் ஈரமில் "லாததினாலே உலர்ந்து போயிற்று, 7 - சில விதை "முட்செடிகளுள்ள இடத்திலே விழுந்தது முட்செடிகள் "கூட வளர்ந்து அதை நெருக்கிப்போட்டன. 8 - சில "விதை நல்ல நிலத்தில் விழுந்து முளைத்து நூறு மடங் "காய்ப்பலன் தந்த தென்று சொல்லிப் பின்பு கேட்கிற "தற்குக்காதுள்ளவன் கேழ்க்கக்கடவன் என்று கூப்பிட்

"டார். 9 - அப்பொழுது அவருடைய சீஷர் அவரை "நோக்கி இந்த உவமையின் கருத்தென்ன வென்று கேட் "டார்கள் 10 - அவர் சொன்னது பராபரனுடைய இராச் "சியத்தின் இரகசியங்களை அறியும்படிக்கு நீங்கள் அருள் "பெற்றவர்கள். மற்றவர்கள் கண்டுங் காணாமலும் கேட் "டும் உணராமலும், இருக்கத்தக்கதாக (அவைகள்) உவ "மைகளாய் அவர்களுக்குச் சொல்லப்படுகின்றன" என்று கூறுகின்றது.

கிறிஸ்தவ நேயர்களே, மிகவும் அற்பமான இவ்வசனத்தைக்கூட இயேசுவானவர் இஸ்ரவேலரல்லாத மற்றவர்களுக்குத்தெரியக்கூடாதெனும் கருத்தினரா யிருக்கும்போது நீவிர்கள் எப்படி பரமரகசியங்களைத் தெருத்தெருவாய்ப் புலம்பத் தலைப்பட்டீர்கள்? இப்படிப்பட்ட அக்கிரமமான செயலை இயேசுநாதர் ஒருபோதும் பொருந்தவே மாட்டார் என்பதற்கு யாது தடை? இன்னும் பாருங்கள் மத்தே 23-ம் அதிகாரம் "15 - வஞ்சகராகிய வேதபாரகரே பரிசேயரே ஐயோ உங்களுக்கு வேதனைவரும் என்னத்தினாலெனின் ஒருவனை (யூத) மார்க்கத்தான் ஆகும்படி நீங்கள் சமுத்திரத்தையும், பூமியையும் கடந்து திரிகிறீர்கள். அவன் அப்படிப்பட்டவனான பொழுது நீங்கள் உங்களைப்பார்க்கிலும் அவனை, "இரட்டிப்பாய் நரகத்துக்குரியவனுக்கு கிறீர்கள்" என்று இயேசுநாதர் பழித்திருக்கிறதாக் கூறுகின்றது. இதனாலே யூதர்கள் அவரது சுபி என்றும் தீர்க்கதரிசியாகிய மோசே கட்டளை செய்யாத (இஸ்ரவேலரைத்தவிர) அன்னியரை யூதமார்க்கத்தானுக்கும்படி கடற்கடந்தும் பூமியைக்கடந்தும் திரிந்த யூதபாதிரிகளை இயேசுவானவர் பழித்துத் தமது சீஷர்களுக்குக்கூறி அவர் தாமும் தமது சீஷர்களை இஸ்ரவேலரல்லாத, அன்னிய குடும்பத்தில் பிரவேசிக்க வேண்டாமென்று கண்டிப்பாய் உத்திரவு செய்திருக்கிறார்கள் அர்த்தப்பழிப்பையும் கட்டளையையும் உடனே மறந்து இயேசுநாதர் பழித்து விலக்கிய காரியத்தைச் செய்வதுவே உங்கள் தலை சுமையென்று கொண்டுவாளா மயங்குகிறீர்கள்; இதனாலும் இயேசுவானவர் இஸ்ரவேலர்களுக்கு மாத்திரம் மோசேயைப் போல ஒருவர் என்பது உங்களுக்கு விளங்கவில்லையா? நண்பர்களே!



மத்தே 28-ம் அதிகாரத்திலே "18-அப்பொழுது இயேசு "வானவர் சேர்ந்து அவர்களுடனே திருவுளம் பற்றினதா "வது பரமண்டலத்திற்கும், பூமண்டலத்திற்கும் சகல "அதிகாரமும் எனக்குக் கொடுக்கப் பட்டிருக் கின்றது. "ஆகையால் நீங்கள் புறப்பட்டு உலகத்தார் எல்லாரையும் "சேர்க்கிப் பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தி "னாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்துநான் உங் "களுக்குக் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்கள் கைக் "கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்று கூறப்பட் டிருப்பதினாலே, இயேசுநாதர் உலகத்தார் எல்லாருக்குமே இரட்சகரென்றும் அதுபற்றி நாங்கள் ஊருராய் அலைந்து படுகின்றோ மென்றும் காரணங் கூறுவீர்கள் போலும்; ஐயோ மத்தேயின் இவ்வசன மஹா விந்தையே என்று சொல்லவேண்டும். இயேசுவானவர் எல்லாரும் காணத்தக்கதாகவும், எல்லாரும் கேட்கத் தக்கதாகவுமாக அதிகாரத்துடன் சுவிசேஷப் பிரசங்கம் செய்யும்படி அன்புள்ள பராபரனாலே அனுப்பப்பட்டு அவர் தமது பிரசங்கத்தையும், அதிகாரத்தையும், இஸ்ரவேலர் குடும்பத்திற்கே என்று இஸ்தாபித்து வெளிதாய்ப் பிரசங்கித்திருக்க; அவர் சிலுவையில் அறையுண்டு எல்லாரும் காணும்படி உயிர்துறந்து சமாதியில் மறைந்த பின்னிட்டு, மறைவாக உயிர்த்தெழுந்து, சீஷர்களுக்கு மாத்திரம் காணப்பட்டுத் தாம் பூமண்டலத்திற்கும் பரமண்டலத்திற்கும் சகல அதிகாரமும் பெற்றிருப்பதால் உலகத்தாரெல்லாரையும் சீஷர்க ளாக்குங்களென்று இயேசு சொன்னாரென்று சொல்லுகிற வசனமோ, வெனில்; மஹா பரமயோக்கியர்களாகிய சீஷர்களின் வார்த்தையென்றே நன்கு புலப்படுகின்றது; மத்தேயும் அதை இயேசுநாதரின் வார்த்தையென்று சொல்லவில்லை. ஆகவே எமது கிறிஸ்தவ நண்பர்களே! மத்தே 28-ம் அதிகாரம் 18-முதல் 19-வரையில் கூறப்பட்ட மேல் கூறிய வசனங்கள் எவ்வளவு ஆரம் நம்பலாமென்று சற்றுக் கவனிப்போம். நேயர்காள்! பாருங்கள்; மஹா இரக்கமுள்ள கர்த்தராகிய பராபரன் தமது சனமாகிய இஸ்ரவேலரை ஆதரிக்கும் பொருட்டாக அவர்களுக்கு எத்தனையோ தீர்க்கதரிசிகளை அனுப்பியும் அவர்கள் மனந்திரும்பாமல் அடிக்கடி மாறுபட்டும் அவர்களைப் பலவாறு காப்பாற்றிய பராபரனையும் அவரால் அனுப்பப் பட்டவர்களையும்,

மதிக்காமல் பராபரனையே கல்லா லெறிகிறவர்களாயும், கொலை
செய்கிறவர்களாயு மிருந்தார்களென்று சொல்லத்தக்கதாகத் தீர்க்
கதரிசிகளின் உபதேசங்களுக்குச் செவி கொடாதவர்களாய் அவர்
களைக் கல்லாலெறிந்தும் கொலை செய்தும் வந்தார்களன்றோ? அது
பற்றிப் பரமபிதாவாகிய கர்த்தர் அநேக தீர்க்க தரிசிகளாலே
இயேசு நாதரின் மகிமையைக் குறித்து; அவர்களுக்குத் தெரிவித்து
வந்து கடைசியாய், அவரை இஸ்ரவேலர் களிடத்தில் வெளிபடுத்தித்
தமது பரலோக இராச்[illegible]க்குறித்து அந்த இஸ்ரவேலர் களு
குச் சுவிசேசம் பிரசங்கிக்கும் படிஇயேசு நாதருக்கு உத்திரவிட்
டார். இயேசு நாதரோவெனில்; இஸ்ரவேலரின் மனம் திரும்பும்
படி எவ்வளவோ அற்புதங்களை விளக்கியும் அவர்கள் மனம் திரும்
பாமல் அவர்களின்முன்னோர்கள் செய்து வந்த விதமாக அக்காலத்
திய இஸ்ரவேலர்களும் இயேசு நாதரையும் செய்ய ஆரம்பித்தார்கள்
அது பற்றி இயேசுநாதர் இஸ்ரவேலர்களைச் சபித்து விட்டுத்தமது
பராபரனாகிய பிதாவிடத்திற்குப் போய்விட்டார்; அப்படி சபித்து
விட்டபிறகு அவர்களுக்கு அருள் எப்படி கிடைக்கும்? எப்படி மறு
படியும் மற்றவர்கள் இரட்சிப்படையும்படி ஞானஸ்நானம் கொடு
க்க மற்ற அயோக்கியர் களாகிய சபிக்கப்பட்ட அந்த சீஷர்களுக்கு
உத்திரவு கொடுப்பார்? சீஷர்களுக்குச் சாத்தான் புகுந்து விட்டா
னென்று பிரசித்தமாய்ச் சொல்லிவிட்டாரே? சாத்தான் புகுந்த
சீஷர்களுக்கு அருளெப்படி உண்டாகும்? அப்படிப்பட்டவர்களுக்கு
இயேசுமறித்தபின் எப்படிவெளியாகு வார்? சாத்தான் புகுந்த
சீசர்கள் சொல்வது தேவவசன மென்று சொல்லலாமா? அவர்
கள் சொல்வது சாத்தானுடைய வார்த்தைகளென்று ஏன்சொல்லப்
படாது? அவர்கள் சொல்லுகிற வசனங்கள் இயேசு நாதரின் வச
னத்திற்கு ஒத்திருந்தாலன்றி அதைத்தேவ வசன மென்று கூறுவது
ஞாயமாகுமா? இயேசுநாதர் தமது ஆயுள்காலத்திலே எல்லாருமறிய
"இஸ்ரவேலரேயன்றி மற்றவர்களுக்கு நான் அநுப்பிக்கப்படவில்
லையே" என்று சந்தேகமறத் தெளிவாய்ச் சொன்ன சொல்லுக்கு
மாறுகச் சாத்தான் புகுந்த சீசர்கள் சொல்லுகிற சொல்லை வேதவாக்
கியமென்று நம்பலாமா? இயேசுநாதர்தமது முந்தின சொல்லுக்கு
மாருக "நான்பரமண்டலம் பூமண்டல மிரண்டிற்கும் சகல
"அதிகாரத்துவம் பெற்றிருக்கிறேன். ஆகையால் நீங்கள்
"உலகத்தா ரெல்லாருக்கும் ஞானஸ்நானத்தைக் கொடுங்



கள்" என்று சொல்லுவாரா? எப்பொழுது அந்த அதிகாரத்தைப்
பெற்ருர்? பிதா, குமாரன் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம்
கொடுக்கும் படி அவர் பகிரங்கமாகப் பிரசங்கிக்கிற காலத்தில் சொ
ல்லவில்லையே. உண்மையாலே வெகுமறைவாய்ப் பேசினாரே. அவர்
தம்மை நல்லவர் என்று ஒருவன் சொல்லவும் பொருந்த வில்லையே,
அப்படிப்பட்டவர் பிதா, குமாரன், என்பதோடு ஒருபரிசுத்த ஆவி
யையும் சேர்த்து ஞானஸ்நானம் கொடுக்கச் சொல்லுவாரா? அவர்
கற்பனைகளைக் கைக்கொள்வதே பரலோகஇராச்சியம் பெறுதற்கு
ஏற்றகிரியை என்று தானே பகிரங்கமாய்ச் சொன்னார். இதோ
பாருங்கள்;—மத்தே 23-ம் அதிகாரம் "35-நீதிமானாகிய பீடத்
"திற்கும் ஆபேலின் இரத்தமுதல் நீங்கள் தேவாலயத்திற்
"கும் நடுவே கொலைசெய்த பரகியாவின் குமாரனாகிய சக
"ரியாவின் இரத்தம் வரைக்கும், பூமியில், சிந்தப்பட்ட
"நியதியான இரத்தமெல்லாம் உங்கள்மேல் வரும் படிக்கு
"(அப்படி செய்வீர்கள்) 36 - அவையெல்லாம் இந்தச்
"சந்ததியின் மேலே வருமென்று மெய்யாய் உங்களுக்குச்
"சொல்லுகிறேன். 37 - ஆ! எருசலேம், பட்டணத்
"தாரே! எருசலேம் பட்டணத்தாரே! உங்களிடத்தில்
"அனுப் பப்பட்டவர்மேல் கல்லெறிந்து தீர்க்கத் தரிசிக
"ளைக் கொலைசெய்கிறவர்களே! கோழி தன்குஞ்சுகளைச்
"சிறகுகளின் கீழேக் கூட்டிச்சேர்த்துக் கொள்ளும் வித
"மாய் அநேகந்தரம் உங்களைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள
"விரும்பினேன் வரமாட்டோ மென்கிறீர்கள், 38 - ஆகை
"யால் உங்கள் வாசஸ்தலம் பாழாக்கப்படும் 39 - அல்லா
"மலும் பராபரனுடைய நாமத்தினாலே; வருகிறவர்
"ஸ்தோத் தரிக்கப் படக் கடவர், என்று நீங்கள் சொல்லு
"மளவும் இதுமுதல் என்னைக்காணு திருப்பீர்கள் என்று
"உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயேசு நாதர் பிர
மாணம் செய்ததாகக் கூறுகிறபடியினாலே இயேசு நாதர் இஸ்ர
வேலரைச் சபித்துக்கை விட்டு அவர்களை நீங்கிவிட்டதாக நன்றாய்க்
காணப்படுகின்றது, இஸ்ரவேலர்கள் பராபரனாலே வரப்பட்டவர்;
ஸ்தோத்தரிக்கப்படக் கடவர் என்று எல்லாசபிகளையும் ஒப்புக்

கொண்ட காலத்திலன்றோ? இயேசுவானவர் அந்த இஸ்ரவேலர்
களிடத்திற்கு வரவேண்டியவர்? அப்படி இஸ்ரவேலர் சொல்லாத
காலமாகிய, அந்தக்காலத்திலே எப்படி இயேசு வானவர் அவர்களு
க்குப் பிரசன்னமாவர்? எப்படி இஸ்ர வேலராகிய எல்லாரையும்
மனம் திரும்பும்படி ஞானஸ்நானம் கொடுக்கும்படி உத்திர விடு
வார்? இதனாலே மத்தே 28- அதிகாரத்தில் மேல் கூறிய வசனங்
கள் அதிருப்திகரமான தென்பது தெரியப் படுகின்றது. இதுவேயு
மன்றி; மத்தே 26- ம் அதிகாரம் " 37-பேதுருவையும், சேபே
" தேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக் கொண்டுபோ
" ய்த்துக் கமடையுவும், மிகவும் வியாகூலப் படவும்,
" தொடங்கி 40 - பின்பு அவர் சிஷரிடத்தில் வந்து அவர்
" கள் நித்திரை பண்ணக் கண்டு பேதுருவை நோக்கி
" இப்படி நீங்கள் ஒரு மணிநேரமாகிலும் என்னோடே
" கூட விழித்திருக்கத்திராணி யில்லையே? 41-, நீங்கள்
" குற்றம் செய் வதற்கானகாரணத்தில் பிரவேசியாதபடிக்
" குவிழித்திருந்து செபம் பண்ணுங்கள். 43 - சீசர்களோ
" மிகுந்த நித்திரை மயக்கம் உள்ளவர்களானபடியால்
" அவர்திரும் பிவந்தபோதும் அவர்கள் மறுபடியும் நித்
" திரை பண்ணக் கண்டார். 44 - அவர் மறுபடியும் அவர்
" களை விட்டுப் போய் மூன்றாந்தரம் அந்த விண்ணப்ப
" வார்த்தைகளைத் தானே செபம் பண்ணிப் பின்பு தம்
" முடைய சிஷர்களிடத்தில் வந்து 45 - நீங்கள் பின்
" னும் நித்திரைபண்ணி இளைப்பாறுகிறீர்களா? இதோ
" மனிதனுடைய குமாரன் பாவிகளின் கைகளில் ஒப்புக்
" கொடுக்கப்படுகிற நேரம் சமீபித்து விட்டது. 46 -
" அதோ என்னைக் காட்டிக் கொடுக்கிறவன் சமீபமாய்
" வருகிறான் எழுந்திருங்கள் போவோம் என்றார்."
என்று இயேசு நாதர் கூறினதாகக் கூறு கின்றது; இதனாலே
இயேசுநாதர் தமது சிஷரில் மிகவும் பிரதானமான சிஷர்களில்
மூவரைத் தம்மோடுகூட வொலிவமலைக்கு அழைத்துப்போய் சீசர்
கள் பாபமான காரியத்தில் பிரவேசிக்காதபடிக்குக் கடைசியாய்ச்
செபம் பண்ணும்படிக்கும் தமக்கு நேரிடுகிற அபாயமான காரியங்க



ளைச்சொல்லித் தாமே மிகத் துக்கப்பட்டவரா யிருக்கிறதைக் குறித்
துச்சொல்லி அவர்களைத் தூங்காதபடிக்கும் எத்தனையோ தடவைச்
சொல்லியும் அந்தச் சீசர்கள் பெருமானுருடைய வார்த்தைகளை
அசட்டைசெய்து தாம் பாவமான காரியத்தில் பிரவேசிக்காதபடிக்
குச் செபம் பண்ணுதிருந்ததாக நன்றாய்ப் புலப்படுகின்றது. ஆகவே,
சிஷர்கள் பாபமானகாரியத்தைச் செய்யத்தலைப்பட்டார்களாயினர்,
என்பது தெளிவாயிற்று; ஐயோ, கிறிஸ்துவர்களே! இயேசுநாதர்
தமக்கு நேரிடப்போகிற ஆற்றொணுவியசனமாகிய காரியத்தைக்
குறித்துத் தாமே துக்கிக்கும்பொழுது இந்தச் சிஷர்களெனும் கொ
லைபாதகர்கள் என்னென்று துயின்றார்களினி? கடைசியாய்த் தமது
குருவாகிய இயேசுநாதர் செய்யச்சொன்ன செபத்தை எப்படித்
தான் செய்யாது தூங்கினார்களோ? அவர்களை எப்படித்தான் தூக்கம்
பிடித்ததோ? அவர்களைப் பிடித்தது தூக்கமோ? சாத்தானோ? எமது
நேயர்களே காணவேண்டியது. அந்தச் சீசர்களுக்கு மனக்கவலைத்
தானில்லையோ? மனக்கவலையில்லாத போதன்றோ தூக்கம்பிடிக்க
வேண்டும்? அவர்கள் இயேசுநாதர்மீது பூரண பக்தியில்லாதவர்
என்று இந்தக் காரணங்களால் நன்கு புலப்படவில்லையா? மேற்படி
மத்தே 26 - ம் அதிகாரம் " 38 பின்பு அவர்களை நோக்கி என்
" ஆத்துமாமரண பரியந்தம் மிகுந்த துக்கப்பட்டிருக்
" கின்றது. நீங்கள் இங்கேதரித்து என்னோடுகூட விழித்
" திருங்கள்" என்று இயேசுநாதர் மேற்படி சீசர்களாகிய பேதுரு
முதலியவர்களுக்குச் சொன்னதாகவும் காணப்படுகின்றது அந்தச்
சீசர்கள் மஹா உன்னதமானவராகிய இயேசுவின் கடைசி வார்த்
தையை முற்றும் அசட்டைசெய்து விட்டபடியினாலா, தூங்கிவிட்
டார்கள்? ஐயோ; எப்படிப்பட்ட அஞ்ஞானியானாலும், விரோதி
யானாலும், படுபாதகனானாலும், அப்படிப்பட்ட நேரத்தில் தூங்கு
வானோ? ஒருவனுக்கு இலகுவான மனக்கவலையிருந்தால், ஒரு நாளெல்
லாம், தூக்கம் பிடிக்காமல் இருப்பானென்பது மறையுமா? மஹா
உன்னதமானவரின் தூதனென்று நினைக்கவுமில்லை. ஆனால் அவரைத்
தேவனின் குமாரனென்று நினைத்தவர்கள், அந்தச் சீசர் என்றும்
நேயர்கள் சொல்லுகிறீர்கள். அப்படி நினைத்திருந்தால் அப்படிப்
பட்ட குமாரனுக்குச் சகித்தற்கு அரிதாகிய துன்பம், வருமென்று
இருக்கிற அந்த நேரத்தில் எப்படி தூக்கம்பிடிக்குமோ? ஆனால்
அவர்கள் தூங்கினதினாலே சாத்தான் அவர்களைப் பிடித்துக்கொண்

டானென்றே பரிஷ்காரமாய்ச் சொல்லலாம். இப்படியாகச் சாத்தான் பிடித்துக்கொண்டவர்களின் வார்த்தையை வேத வாக்கியமென்று எப்படி நம்புவீர்கள்? இந்தக் காரணத்தினாலேயும் மத்தேயு 28-ம் அதிகாரம் 18, 19 வசனங்கள் அதிருப்திகரமான தென்று நன்று புலப்படுகின்றதன்றோ? இம்மட்டாகவா? மாற்கு 14-ம் அதிகாரமோ வெனில் "27 - அப்பொழுது இயேசுவானவர் "அவர்களைநோக்கி மேய்ப்பானவனை அடிப்பேன். அப் "பொழுது ஆடுகள் சிதற அடிக்கப்படுமென்று எழுதி "யிருக்கிறபடியால் நீங்கள் எல்லாரும் இந்த இராத்திரி "யிலே என்னைக்குறித்து வழுவுவீர்கள் 29 அதற்கு பே "துரு எல்லாரும் உம்மைக்குறித்து வழுவினாலும் நான் "அப்படி செய்யமாட்டேன் என்றான் 30 - அவனுடனே "இயேசுவானவர் இந்த இராத்திரியிலே சேவல் இரண் "டாந்தரம் கூவுமுன்னே நீ மூன்றுதரம் என்னை மறுத "லிப்பாய் என்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேன் "என்றார் 31 அதற்கு அவன் நான் உம்மோடே சாக "வேண்டுவதாயிருந்தாலும் உம்மை மறுதலிக்கமாட்டேன் "என்று அதிக உறுதியாய்ச் சொன்னான் மற்றவர்கள் எல் "லாரும் அப்படியே சொன்னார்கள்," என்று கூறுகின்றதை நீங்கள் கவனித்தால் சீசர்களின் நிலைமை கேடுற்றதென்று நீங்கள் ஏன் உணரமாட்டீர்கள்? ஐயோ இயேசுநாதர், முன்னைய தீர்க்கதரிசிகளின் வார்த்தையைக்கல்லடும், தமது தீர்க்கதரிசனத்தைக் கொண்டும் சொல்லும் தேவவசனத்தைச் சீசர்கள் நம்பாவிட்டால் வேறு யாவர் தாம் நம்புவார்கள்? நீவீர்கள் இன்றிரவையில் என்னை விட்டும் வழுவுவீர்கள், என்று முன்னைய வேதவாக்கியத்தினாலே சீசர்களைநோக்கி இயேசுநாதர் சொன்னதற்கு உண்மையான சீசர்களாயிருந்தால், பெருமானே நாங்கள் உம்மைவிட்டு வழுகாமலிருக்கும்படி எங்களுக்கு நல்லருள் புரியவேண்டும் இல்லாவிட்டால் நாங்கள் கைசேதவாளராய்ப் போகக்கடவோம். ஆண்டவரே காப்பாற்ற வேண்டுமென்று இயேசுநாதரைப் பிரார்த்திப்பாரேயன்றி இயேசுநாதரின் தீர்க்கதரிசனமாகிய தேவவாக்கியத்தையும் முன்னைய தீர்க்கதரிசிகளின் வேதவாக்கியத்தையும் பொய்யாக்கும் சக்தி வகித்தவர்களைப்போல இயேசுநாதரைப்பார்த்து, நாங்கள்



ஒருபோதும் உம்மைவிட்டு வழுகமாட்டோம். உம்மோடுகூட சாகுவதாயிருந்தாலும் சாகுவோமென்று மிகவும் உறுதியாய்க் கூறுவார்களா? அப்படி கூறுவது மதிகேடன்றோ? இயேசு நாதரின் வேத வாக்கியத்தைச் செயிக்கும் சக்தி சீஷர்கள் தமக்கு இருக்கிறதென்று நினைத்தார்களா? அல்லது இயேசுநாதர் பொய்சொல்லுகிறாரென்பதைக் காண்பித்தார்களா? இயேசுநாதருடன் வாதாடி செயிக்கலாமென அப்படி கூறினார்களென்போமா? அல்லது அவர்சொல்லியபடி சீசர்கள் இயேசுநாதரைவிட்டு வழுவாமலிருந்தார்களா? இப்படிப்பட்ட சீசர்களை அஞ்ஞானியென்போமா? அவிசுவாசிகளென்போமா? இதோ மாற்கு 14-ம் அதிகாரம் "50 - உடனே சீசர் "எல்லாரும் அவனைவிட்டு ஓடிப்போனார்கள். 51 - ஒரு "வாலிபன் ஒரு வஸ்திரத்தை மாத்திரம் தன்மேல் போர்த் "துக்கொண்டு அவருக்குப் பின்சென்றான். அவனைச் "சேவகர்கள் பிடித்தார்கள் 52-அப்பொழுது அவன் தன் "வஸ்திரத்தை விட்டு நிருவாணமாய் அவர்களை விட்டு "ஓடிப்போனான் 53 இயேசு வானவரை அவர்கள் பிர "தான ஆசாரியினிடத்திற்குக் கொண்டு போனார்கள். "அங்கே ஆசாரியரெல்லாரும், மூப்பரும் வேத பாரகரும் "கூடிவந்தார்கள். 54 பேதுரு தூரமாக அவருக்குப்பின் "சென்று பிரதான ஆசாரியனுடைய மாளிகையின் பிர "காரத்தில் வந்து அங்கே ஊழியக்காரருடனே நெருப் "பின் அருகே உட்கார்ந்து அனல்காய்ந்து கொண்டிருந் "தான். 55 - அத்தருணத்திலே பிரதான ஆசாரியரும் "மற்ற பெரிய சங்கத்தார் எல்லாரும் இயேசுவானவரைக் "கொலைசெய்யும் பொருட்டாய் அவருக்கு விரோதமாய்ச் "சாட்சிகளைத் தேடினார்கள். 70 - சற்று நேரத்திற்குப் "பின்பு அங்கே நின்றவர்கள் மறுபடியும் பேதுருவை "நோக்கி நீ மெய்யாய் அவர்களில் ஒருவனாயிருக்கிறாய் "நீ கலிலேயாநாட்டான் தான் உன்பேச்சு அதைக் காண் "பிக்கின்றது, என்றார்கள் 71 - அதற்கு அவன் நீங்கள் "சொல்லுகிற மனிதனை நான் அறியமாட்டேனென்று "சொல்லிச் சபிக்கவும் ஆணையிடவும் தொடங்கினான் - 72

" உடனே சேவல் இரண்டாந்தரம் கூவிற்று" என்று கூறு
கின்றது. இதனாலே சீசர்கள் எல்லாரும் இயேசு நாதரை விட்டு
ஓடிப்போனார்கள் என்றும் அந்தச் சீசரில் ஒருவன் அரையில் கட்டி
யிருந்த துணிபோனதைக்கூடப் பாராமல் நிருவாணமாய் ஓடினு
னென்றும், ஐயோ கன்மலை என்று பேர்வாங்கிய முக்கிய சீசன்
பேதுருவோ வெனின், ஒரு இரவிலே பெருமானாரை மூன்று
தரம் மறுத்ததேயுமன்றி அவரைச் சபிக்கவும், ஆணையிடவும், தலைப்
பட்டானென்றும் நன்று புலப்படுகின்றது. இயேசுவானவர் சீசர்
களுக்குச் சாத்தான் புகுந்து பாபமான காரியங்களுக்கு ஏதுவாகாம
லிருக்கும்படி சபம் செய்யப் பலதரம் தூண்டியும் கேட்காது நித்
திரைசெய்த காரணத்தினாலேயே சீசர்கள் பாபமான இப்படிப்
பட்ட காரியங்களுக்கு ஆளாய்க் கொடிய பாபிகளானார்கள். அந்த
இயேசுநாதர் சபம் செய்யுமாறு தூண்டினதற்கு சீசர்கள் உடன்பட்
டிருந்தால், இயேசுநாதர், சீசரைநோக்கி இன்று என்னை விட்டு
வழுவுவீர்கள் என்று சொன்னதற்கு எதிர்மறுத்து அப்படி நாங்கள்
வழுவ மாட்டோமென்பனவாக உறுதியாய்ச்சொல்லியிருக்க மாட்
டார்கள். இவ்வளவெல்லாம், எமது நண்பர்கள் உணர்வார்களா
யின் சீசர்களின் அவிசுவாசத்தன்மையும் மடமைத் தன்மையும்,
பேதமைத் தன்மையும், அசத்தியத் தன்மையும், தகுதியற்றத் தன்
மையும், நன்கு புலப்படமாட்டாமலிருக்க மாட்டாதென நம்புகின்
றோம். ஆகவே இப்படிப்பட்ட அயோக்கியரான சீசர்களுக்கு
இயேசு நாதர் மரித்தெழுந்து பிரசன்னமாய்த் தமது தேவவசன
மாகிய வேதத்திற்கு மாறாக, வேறு போதனை (அதாவது நான்
இஸ்ரவேலர் குடும்பத்தாருக்கே யல்லாமல் இதர குடும்பத்தாருக்கு
அனுப்பப்படவில்லையே என்ற வேத வசனத்திற்கு மாறாக; பர
லோக இராச்சியங்களுக்கும், பூலோகத்திற்கும் சகலத் தத்துவமும்
எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் உலகத்தாரெல்லா
ரையும் சீஷராகும்படி பிதா, குமாரன் பரிசுத்த ஆவியினால் ஞானஸ்
நானம் கொடுங்கள் என்று ஒருபோதும் சொல்லியிருக்க மாட்டா
ரென்றும், சீசர், அப்படி சொல்லுவது சீர்ந்தாருடைய மாய்
கையாகவாவது அல்லது அவர்களின் அசத்தியத் தன்மையினாலுண்
டான கட்டுக் கதையாகவாவது இருக்குமென்பதில் சந்தேகமே
யில்லை. இந்தக்காரணங்களாலே மத்தே 28-ம் அதிகாரம் 18, 19-
வசனங்கள் நம்புவதற்கு அருகமானதாக இல்லையென்பது நேயர்களு
க்கு நன்று விளங்கவேண்டும். இதுவுமன்றி;—மத்தே 16-ம் அதிகா



ரம். "21 இயேசுவானவர் தாம் எருசலேமுக்குப் போய்
" பெரியோர்களாலும், பிரதான ஆசாரியராலும், வேத
" பாரகராலும், மிகுந்த பாடுபடவும், கொலை செய்யப்
" படவும், மூன்றாம் நாளிலே எழுந்திருக்கவும் வேண்டு
" மென்று தம்முடைய சீசர்களுக்குக் காண்பிக்கத் தொ
" டங்கினார். 22-அப்பொழுது பேதுரு அவரைத் தனியே
" அழைத்து ஆண்டவனே உம்மிடத்தில் இரக்கம் உண்
" டாவதாக அப்படி உமக்கு வராதிருப்பதாக என்று
" அவருடனே கண்டிப்பாய்ச் சொன்னான் 23 - இயேசு
" வானவர் திரும்பி பேதுருவினிடத்தில் ஆ! சாத்தானே
" நீ என்முன் இராமல்போ நீ பாரபரனுக்குப் பிரியமா
" னவைகளைச் சிந்தியாமல், மனிதர்களுக்குப் பிரியமான
" வைகளைச் சிந்திக்கிறபடியினாலே எனக்குத் துன்பமா
" யிருக்கிறாய் என்றுசொல்லி 24-பின்பு தம்முடைய சீஷர்
" களைநோக்கி என்னைப் பின்பற்றி நடக்க ஒருவன் விரும்
" பினால் தன்னைத்தான் வெறுத்துத் தன்சிலுவையை எடு
" த்துக்கொண்டு என்னைப் பின்பற்றக் கடவன் 25-என்
" னத்தினா லென்றால் தன்சீவனை இரட்சிக்க விரும்புகிற
" வன் அதை இழந்து போவான் என்னிமித்தம் தன்
" சீவனை இழந்துபோகிறவன் அதைக் கண்டடைவான்"
என்று இயேசுநாதர் கண்டிப்பாய்க் கட்டளை செய்திருக்கிறதாக
நன்றாய்ப் புலப்படுகின்றது. நேயர்களே; பேதுருவை இயேசு
நாதர் சாத்தான் என்று கண்டிப்பாய்ச் சொல்லி இயேசுநாதர்
தம் நிமித்தம் சீவனை இழக்கிறவனே இயேசுவைப்பின் பற்றி
னவனாகுவான் என்று அவர் சொல்லிய தேவவாக்கியத்தைப்
பேதுரு முதலிய சீஷர்கள் கைக்கொண்டார்களா? இல்லை. சீஷர்
கள் இயேசுநாதரின் உயிருக்காக ஒரு துணியைத்தான் விட்டார்க
ளென்று சொல்லலாம். ஐயோ இயேசுநாதரின் நிமித்தம் உயி
ரைக் கொடுக்கிறவனே அவரைப் பின்பற்றினவன் என்று இயேசு
சொன்னார். ஆனால் சீசர்கள் இயேசுவின் உயிர்நிமித்தமாக தம
துதிரேகத்திலிருக்கிற அணுக்களையாவது சொரிக்கவில்லை. என்று
லும் இயேசுநாதரைச் சபித்தார்கள். [illegible] ஆணையிட்டு மறுத்

தார்கள். இப்படியாகச் செய்தவர்கள், இயேசுவைப்பின் பற்றி
னவர்களென்றாவது; இயேசுவின் சீசர்களென்றாவது; இயேசுநா
தர் உயிர்த் தெழுந்தபின் அவர்களுக்குப் பிரசன்னமாகி உல
கத்தாருக் கெல்லாம் ஞானஸ் நானம் கொடுக்கும்படி அப்படிப்
பட்ட வரைத் தமது பிரதிநிதியாக நியமிப்பாரென்றாவது நீவீர்
கள் நம்புவீர்களா? இதோமத்தே 10-ம் அதிகாரம் “32- அப்
“படியிருக்க மனிதர்களுக்கு முன்பாக என்னை அறிக்
“கைப் பண்ணுகிறவன் எவனோ அவனை நானும் பரமண்
“டலங்களிலிருக்கிற என்பிதா முன்பாக அறிக்கைப்பண்
“ணுவேன் 33- மனிதர்களுக்கு முன்பாக என்னைமறுத
“லிக்கிறவன் எவனோ அவனை நானும் பரமண்டலங்க
“ளிலிருக்கிற என் பிதாவுக்கு முன்பாக மறுதலிப்
“பேன்” என்று இயேசு நாதர் திட்டமாய்க் கூறியிருக்கிறதாகக்
காணப் படுகின்றது; இதனாலே இயேசுநாதரைச் சிலுவையில்
அறையும்படி காட்டிக் கொடுத்தவனும் மறுதலித்துப் பகைவர்
களின் முன்பாகத் திட்டினவனும், பகைவர்கையில் அவர் அகப்
படக்கண்டு ஓட்டம், பிடித்தவனும், இயேசுநாதரினாலே, அவரது
பிதாவினிடத்து மறுதலிக்கப்பட வேண்டியவர் களாயிருக்க, எப்படி
அவர்கள் சீசர்களும் உலகத்தாருக்கு ஞானஸ் நானம் செய்யும்
வல்லமையுடையவர் களுமாகு வாரோ? ஐயோஎமது நேயர்களே
இவைகளை அறியவேண்டிய கடமையுள்ளவர்களா குவார்கள். இதோ
லூக்கா 17-ம் அதிகாரமோ வெனின்; “22 பின்னும் சீசருடனே
“அவர் சொன்னது மனிதக் குமாரனுடைய நாள்களில்
“ஒன்றைக் காணும் படிக்கு நீங்கள் ஆசைப்படும் கா
“லம் வரும் அதைக் காணாமலிருப்பீர்கள். 23- அப்
“பொழுது சிலர் உங்களை நோக்கி, இதோஇங்கே இருக்
“கிறார் என்றும் அதோ அங்கே இருக்கிறார் என்றும்
“சொல்லும், காலத்திலே நீங்கள் புலப்படாமலும் பின்
“செல்லாமலும் இருங்கள் 24- மின்னனது வானத்தின்
“ஒருபக்கத்திலிருந்து மற்றொரு பக்கம் வரைக்கும் பிர
“காசிக்கிறதுபோல் மனிதனுடைய குமாரன் தன்னு
“டைய நாள்களிலே இருப்பார். 25- அதற்குமுன்பு
“அவர் அநேகபாடுகளை அநுபவித்து இந்தச் சந்ததியி



“னாலே தள்ளப்பட வேண்டியதா யிருக்கிறது” என்று
இயேசுநாதர் சொன்னதாகக் கூறுகின்றது. இதனாலே இயேசுநா
தருடைய காலத்தின் நாள்களில் ஒரு நாளையாவது இயேசுநாத
ருக்குப்பின் அவருடைய சிஷர்கள் பெறவே மாட்டார்களென்
றும், இயேசுநாதருக்குப் பின் சீசர்கள் அவரைக் குறித்து மிக
மனக் கவலைபட்டு ஆவல்கொண் டிருப்பதை நோக்கிச் சிலர்,
இதோ இயேசு இருக்கிறார், அதோஇயேசு இருக்கிறாரென்று சீ
சர்களுக்குச் சொல்லு வார்களென்றும் அப்படி சொல்லப் படு
வது முற்றிலும் பொய்யான வர்த்தையாகையால் எங்கேஇருக்கி
றார் இயேசு? என்று நீவீர்கள் அப்படி சொல்லுகிற பொய்யர்க
ளுக்குப் பின்னே போக வேண்டாமென்றும், இயேசுநாதர் சீசர்
களுக்குத் தீர்க்கதரிசனம் அறிவித்திருக்கிறதாக நன்கு புலப்படு
கின்றதே. மேலும் இயேசுநாதர் வருகிறகாலத்திலே, அவர் வானத்
தின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம்வரையில் மின்னலானது எப்
படி பிரகாசமாயிருக்குமோ அப்படியாக யாவருக்கும் நன்றாய்த்
தோற்று கிறவராயிருப்பாரேயன்றிச் சிலருக்குத் தெரிந்தும் சில
ருக்குமறைந்தும் இருக்கமாட்டாரென்றும் பரிஷ்காரமாய் அறி
வித்திருக்கின்றாரன்றோ? அப்படியிருக்க இயேசுநாதர் மரித்த
பின்விட்டு சீசர்களுக்கு மாத்திரம் (சிலபாமரர் உள்பட) காணப்
பட்டா ரென்றும் அப்படி காணப் பட்டு சுவிசேசம் அதாவது
உலகத்தாருக் கெல்லாம்ஞானஸ் நானம் கொடுக்கும்படி சிஷர்களு
க்கு உத்திரவிட்டாரென்றும் சொல்லுகிறமத்தே 28-ம் அதிகாரம்
18, 19-வசனங்கள் எப்படி நம்பப்படுமோ? இதுவேயுமன்றி இயேசு
நாதர் இஸ்ரவேலர்களாகிய அந்தச் சந்ததிகளாலே அநேக பாடு
களைப் படவேண்டியதோவெனின் தாம் வெளிச்சமாக எல்லாருக்
கும் வெளிப்படுவதற்கு முன்னாகவே யிருக்குமென்றும் தெள்ளத்
தெளியக் கூறுகின்றார். ஆகவே, இயேசுநாதர் சிலுவையில் அறை
யப்பட்டுப் பிறகு தாம் வெளியாகிறகாலத்தில்; ஒருவருக்கும் மறைக்
கப்படாமல் வெளியாக்கப் படுவாரென்பது நிட்சயப் படுகின்றது.
இதோபாருங்கள்; லூக்கா 17-ம் அதிகாரம் “26-நோவாவின்
“நாள்களிலே நடந்ததுபோல மனிதனுடைய நாள்களி
“லும் நடக்கும் 27- நோவா பேழைக்குள் பிரவேசித்த
“நாள்வரைக்கும் சனங்கள் போசனபானம் பண்ணியும்
“பெண் கொண்டும், பெண்கொடுத்தும் வந்தார்கள். அந்

"நாளிலே சலப்பிரளயம்வந்து எல்லாரையும் அழித்தது
"28 - லோத்துடைய நாள்களில் நடந்தது போலவும் நட
"க்கும்; சனங்கள் போசனம் பண்ணியும், பொருள்களைக்
"கொண்டும், விற்றும் செடிகளை நட்டியும் வீடுகளைக் கட்
"டியும் வந்தார்கள். 29 - லோத்தென்பவன் சோதோம்
"ஊரைவிட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து
"அக்கினியும் கந்தகமும்பெய்து எல்லாரையும் அழித்தது
"30-மனி தனுடைய குமாரன் வெளிப்படும் நாளில் அப்
"படியே இருக்கும்" என்று பரிகாசமாய்க் கூறுகின்றதே.
அவ்வாறெல்லாம் இயேசுமரித்தெழுந்து சீசர்களுக்குக் காணப்பட்ட
நாள்களில் நடந்தனவா? சீசர்களுக்குக் கண்டிப்பாக, என்னுடைய
நாள்களில் ஒன்றையும் நீங்கள் எத்தமாட்டீர்கள் என்று பரிகாசமாய்ச் சொல்லியிருக்கப் பரமயோக்கியர்களான அந்தச் சீஷர்கள்
எப்படி இயேசு இறந்தபின்னுக அவருடைய காள்களைச், சந்தித்தார்கள்? அங்ஙனம் சீஷர்கள் சொல்லுவதானது, இயேசு நாதரவர்களின், தீர்க்கதரிசனமான வேத வாக்கியங்களுக்கு மாறுபடுமன்றோ? வேதவாக்கியங்களைச் சீஷர் உணராமையிருலன்றோ?
அதற்குப் பொருத்தாததாகக் கட்டுக்கதையைக் கட்டிவிட்டாரென்னுங்கு புலப்படுகின்றதே. இத்தக்காரணங்களினுலெல்லாம் மத்தேயு 28-ம் அதிகாரம் 18, 19 - வசனங்களும் அது போன்ற மற்றவைகளும் பொய்க் கதையானவைகளென எமது நேயர்கள் கவனிக்கக் கடவார்களென்று நம்புகின்றேம். ஆகையால் இயேசுநாதர் இஸ்ரவேலருக் கேயன்றி மற்றய சாதியார்களுக்கு இரட்சகராக அனுப்பப்பட்டவரல்லர் என்றும், நம் நேயர்களாகிய இந்துதேசத்தார்களும், காஞனியராகிய, இதர குடும்பத்தார்களும், அவரைப் பின்பற்றுவது முறையல்ல வென்றும் காணுவார்களாக. ஆமென்.

## "வேதப்பிராமாணம்"

இது;—பராபரனுனவர் இஸ்ரவேலர்களுக்கென்று, மோசேயின் மூலமாய்க் கட்டளையிட்ட பிரமாணங்களை அவர்கள் மறந்து வேறுவிதமாக நடக்க ஆரம்பித்த காரணம் பற்றிப் பராபரனுனவர் அந்தச் சாதியார்களுக்கு அந்தக் கட்டளைகளையே கட்டளைகளாக



அறிவிக்கும்படி இயேசுநாதர் மூலமாய் அறிவிக்கப் பட்டதெனும் முறைமையைக் கூறுகின்றது.

எமது கிறிஸ்துவ நேயர்களே தயைகூர்ந்து கவனிப்பீர்களாயின் நீவிர்கள் பாக்கியவான்களே.

மோசேயானவர் மதித்தற்குரிய ஒரு தீர்க்கதரிசி யென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது.

மோசேயோ வெனின்; இஸ்ரவேல் குடும்பத்தாரும் அந்த இஸ்ரவேலருக்குத் தீர்க்கதரிசியாய்ப் பராபரனுலே முதன்மையாக அனுப்பப் பட்டவருமாக இருந்தார். இஸ்ரவேல் குடும்பத்தாரால் அநுசரிக்கப்பட வேண்டியதாகப் பராபரனுல் மோசே மூலமாய் அநேக சட்டதிட்டங்கள் கற்பிக்கப்பட்டன அந்தச் சட்டதிட்டங்கள் இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு நித்திய உடன்படிக்கையானவைகளென்று சொல்லப்பட்டிருக்கின்றது. இஸ்ரவேல் எனப்படுபவர் யாவரோவெனின்? ஈசாக்கின் இரண்டாவது குமாரராகிய யாகோபு என்பவர் பராபரனுடனேயும் மனிதர்களுடனேயும் சமர்புரிந்து ஜயித்த படியினுலே பராபரனுல் அவர் இஸ்ரவேல் என்று பெயரிடப்பட்டு அதுமுதல் அவர் இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்டா ரென்பது எமது நேயர்கள் மறக்கற்பாலதன்று. மேல் கூறிய ஈசாக்கோ வென்றல்; ஆபிரகாமின் இரண்டாவது குமாரர் எனப்படுகின்றுர். அவரின் இரண்டாவது குமாரராகிய யாகோபுவே இஸ்ரவேல் எனப்படுகின்றுர். இந்த இஸ்ரவேலின் சந்ததிகளே, இதுகாறும் இஸ்ரவேலர் என்று அழைக்கப்படுகின்றுர்கள். அந்தச் சந்ததிகள் பன்னிருகோத்திரத்தார்களாக வகுக்கப்பட்டார்கள்; அது;—

இஸ்ரவேல் எனப்படும் யாகோபு என்பவர் தமது முதன்மனைவியாகிய, லேயாள் என்பவளாலே ரூபேன், சிமேயோன், லேவி, யூதா, ஈசகேர், சேபுலோன் என்பவர்களையும் தீனுள் என்ற ஒரு பெண்ணையும் பெற்றுர். (இந்தப் பெண் சந்தானமின்றி யிறந்தாள்) தமது இரண்டாவது மனையாளும் மேல்கூறிய லேயாளின் சகோதரியுமான, ராக்கேல் என்பவளது அடிமைப் பெண்ணுகிய பில்காளினுலே, தாண், நப்தலி, என்பவர்களையும், தமது முதல் மனையாளாகிய, லேயாள் என்பவளது அடிமைப் பெண்ணுகிய சில்ப்பாள் என்பவளாலே, காத்து, ஆசார், என்பவர்களையும் மேல்கூறிய ராக்

கேலினாலே, யோசேப்பு, பென்யமீன், என்பவர்களையும் பெற்றார். இப்பன்னிருவரும் அவர்களின் சந்ததிகளுமே இதுகாறும் இஸ்ரவேலர்களென்று அழைக்கப்படுகின்றார்கள்; இந்தக் கோத்திரத்தார் சொற்பகாலத்திலே எண்ணரிய சேனைகளாகப் பெருகி பராபரனுக்கு மிகவும் அருவருப்பான காரியங்களைச்செய்து வந்தபடியினாலே அவர்கள் திருந்தும்படியாக அவர்களின் சகோதரரில் ஒருவரானமோசே என்பவரை அந்தச் சாதியாருக்கு முதன்மையான தீர்க்கதரிசியாய். அனுப்பி வரம்பின்றிய அரிய மகத்துவம் படைத்த தமது சத்தியை அந்தச் சனங்கள் கண்களால் காணவும் காதுகளால்கேட்கவும் செய்ததுமன்றி, எஜிப்து தேசத்தில் அவர்கள் அடிமைகளாக்கப்பட்டுக் கிடந்த சிறையை அவர்கள்தாமே வியக்கு மாறுமீட்பித்து வேண்டிய நல்லதேசங்களை அவர்களுக்குக்கொடுத்துப் பராபரனாகிய கர்த்தர் அவர்களைத் தமது சனமாக இருக்குமாறு அவர்களுக்கு அவர்கள் சந்ததியிலே நித்திய கட்டளையாகச் சிலகட்டளைகளைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்குக் கற்பித்து, அவர்களைப் பராபரனாகிய கர்த்தர் புகழ்ப்படுத்தினார். அந்தமதிகேடர்களாகிய இஸ்ரவேலர்களோ வெனின்; மோசேயின் காலத்திலே மாத்திரம் ஒருவாறு ஒழுங்கடைந்து வந்தாராயினும் பிறகு தமது பழைய நிலைமையிலேயே திரும்பிப் பராபரனுக்கு அருவருப்பான விக்கிரகாராதனைக்காரர்களாய்த் தங்களுக்கருளும் தீர்க்கதரிசிகளைக் கல்லாலெறிந்து கொலைசெய்பவர்களாயு மிருந்தார்கள். ஆயினும் மகாதயை பொருந்திய பராபரனானவர் அந்தச் சந்ததியார் செய்துவந்த பல அக்கிரமங்களைக் கண்டும் அவர்களுக்கு அடுத்தடுத்துத் தீர்க்கதரிசிகளை அனுப்பித்துக்கொண்டே வந்தார். அந்த அக்கிரமகாரர்களோ வெனின்; பராபரனது வார்த்தைகளுக்குச் செவிசாய்த்தார்களில்லை. கடைசியாய்ப் பராபரன் அந்தச்சனங்களின் பேரில் மோசேயை ஒத்த *பிரபலமான* ஒருதீர்க்கதரிசியை அனுப்பினார். அந்தத்தீர்க்கதரிசியோ வெனின்; — மோசேயினும் பிரபலமான அற்புதங்களை அந்தச்சனங்கள் கண்ணாரக்காணவும், செவியாரக்கேட்கவுமாகச்செய்து காண்பித்தும் அவர்கள் வழிப்பட்டார்களில்லை. அந்தத் தீர்க்கதரிசியே இயேசு எனப்படுகின்றார். இயேசுநாதர் தாம் அந்த இஸ்ரவேலர்களுக்குக் கடைசியான தீர்க்கதரிசி என்பதைக்குறித்துப் பரிஷ்காரமாய்ச் சொல்லுகிறார். அது, இதோ! மத்தேயு 21-ம். அதிகாரம் "33-வேறு உவமையைக் கேளுங்கள். ஒருவீட்டு "எசமான் உண்டு அவன் ஒரு திராட்சத்தோட்டத்தை



" உண்டாக்கி, அதைச்சுற்றி வேலி அடைத்து அதில்
" ஆலையைநாட்டிக் கொபுரத்தையுங்கட்டிப் பின்பு அதைத்
" தோட்டக்காரர் வசமாய்விட்டு புறத்தேசத்திற்குப்போ
" னான். 34 - கனிகாலம் சமீபமான பொழுது கனிகளை
" வாங்கிக்கொண்டு வரும்படிக்குத் தன் ஊழியக்காரரைத்
" தோட்டக்காரர் இடத்திற்கு அனுப்பினான். 35 - தோட்
" டக்காரர்களோ, அவன் ஊழியக்காரரைப் பிடித்து ஒரு
" வனை அடித்து ஒருவனை வெட்டி மற்றொருவன்மேல்
" கல்லெறிந்து கொன்றார்கள். 36 - மறுபடியும் எசமான்
" முந்தினவர்களிலும் அதிகமான வேறு ஊழியக்காரரை
" அனுப்பினான். அவர்களையும் அப்படியே செய்தார்கள்.
" 37 - கடைசியிலே அவன் என்னுடைய குமாரர்களுக்கு
" அஞ்சுவார்களென்று எண்ணித் தன்குமாரனை அவர்க
" ளிடத்திற்கு அனுப்பினான். தோட்டக்காரரோ குமார
" னைக் கண்டபொழுது இவன் சுதந்தரவாளி இவனைக்
" கொன்று இவனுடைய சுதந்தரத்தைக் கட்டிக்கொள்
" வோம் வாருங்கள் என்று தங்களுக்குள்ளே சொல்லிக்
" கொண்டு 39 - அவனைப்பிடித்துத் திராட்சத்தோட்டத்
" திற்குப் புறம்பே தள்ளிக்கொலைசெய்தார்கள். 40 - ஆகை
" யால் திராட்சத்தோட்டத்திற்கு எசமான் வரும்போது
" அந்தத் தோட்டக்காரரை என்னசெய்வான் என்று கேட்
" டார்கள். 41 - அதற்கு அவர்கள் சொன்னது; அவன்
" அந்தப் பொல்லாதவர்களைக் கடினமாய் அழித்து தகு
" தியான காலங்களில் தனக்குக் கனிகளைக் கொடுக்கும்
" வேறே தோட்டக்காரர் வசமாய்த் திராட்சத்தோட்டத்
" தைவிடுவான் என்றார்கள். 42 - இயேசுவானவர் அவர்
" களுக்குச் சொன்னதாவது வீடுகட்டுகிறவர்கள் ஆகாதெ
" ன்று தள்ளின கல்லே மூலைக்குத்தலையான கல்லாயிற்று;
" அது பராபரனாலே ஆயிற்று. அது நம்முடைய கண்
" களுக்கு ஆச்சரியமா யிருக்கின்றதென்று வேதத்திலே

"நீங்கள் ஒருக்காலும் வாசித்ததில்லையா? 43 - அப்படி
"யிருக்கப் பராபரனுடைய இராச்சியம் உங்களிலிருந்து
"நீக்கப்பட்டு அதின் கனிகளைத்தருகிற சனங்களுக்குக்
"கொடுக்கப்படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்"
என்று இயேசுநாதர் கூறினதாகக் காணுவீர்கள். அதனாலே இஸ்ர
வேலருக்கு இயேசுவானவர் கடைசியான தீர்க்கதரிசியென்றும்
இஸ்ரவேலர்களுடைய மேன்மை பொருந்திய தேசம் இஸ்ரவேலர்
கள் அல்லாத வேறுசனங்களுக்கு ஒப்புக்கொடுக்கப்படுமென்றும்
நன்றாய் விளங்கப்படுகின்றது. ஆனால் வீடுகட்டுகிறவர்கள் வேண்
டாமென்று தள்ளினகல்லே அவ்வீட்டுக்கு மூலைக்கல்லாயிற்று என்
பதின் கருத்தும் மற்ற விவரங்களும் பின்னால் கூறப்படும் நிற்க.

நேயர்காள்! இஸ்ரவேலரின் பேரில் அநுப்பப்பட்டுவந்த எல்
லாத் தீர்க்கதரிசிகளும் இஸ்ரவேலர்களின் பூர்வீக சரித்திரங்களை
யும் மோசேயின் வேதக்கட்டளைகளையுமே அவர்களுக்குப்போதித்து
வந்தார்கள்; அது;—

இஸ்ரவேலர்களின் பூர்வீகப் பிதாவாயினோர் எகிப்து தேசத்
திலே அடிமைகளாகச் சிறைபட்டிருந்த காலத்திலே அவர்கள் அநு
பவித்துவந்த சகித்தற்கரிய கொடுமைகளிலிருந்து அவர்கள் மீட்
கப்பட்ட விவரங்களைப் பலதடவைகளாகக்கேட்பதினாலே அவர்
களின் இருதயம் தயையுள்ள பராபரனிடத்தில் அன்புகூர்ந்து மனம்
திரும்புதற்கு ஏதுவாயிருக்கு மாதலாலும் இஸ்ரவேலர்களுக்கு
மோசேயின் கட்டளைகளே நித்திய உடன்படிக்கையான கட்டளை
களென்று மோசேயின் வேதத்திலே கூறக்கிடக்கின்றதேயு மன்றி
அடிக்கடி வேதக்கட்டளைகள் மாறுபடுவதினாலே பல விவகாரபே
தங்களும் மனக்குழப்பங்களும் விளைக்கு மாதலாலும் இஸ்ரவேலர்
களுக்கென்று அநுப்பப்பட்ட எல்லாத் தீர்க்கதரிசிகளும் மோசே
யின் கட்டளைகளையே அச்சனங்களுக்குப் பிரசங்கிக்குமாறு பரா
பரனாலே கட்டளைபெறப் பட்டார்களென்பது மறுக்கப்படாததன்று.
இதோ 5-ம் மோசே 5-ம் அதிகாரம் "1 - மோசே இஸ்ர
"வேலை எல்லாம் அழைப்பித்து அவர்களுக்குச் சொன்
"னதாவது இஸ்ரவேலே நான் இன்று உங்கள் காதுகள்
"கேட்கச்சொல்லுகிற கட்டளைகளையும் நியாயங்களையும்
"கேள். நீங்கள் அவைகளின்படியேசெய்யும்படிக்கு அவை



"களைக் கற்றுக் கைக்கொள்ளக் கடவீர்கள். உம்முடைய
"பராபரனாகிய கர்த்தர் ஓரேபிலே நம்மோடே உடன்
"படிக்கை பண்ணினார். 3 - இந்த உடன்படிக்கையைக்
"கர்த்தர் நம்முடைய பிதாக்களோடல்ல. இன்று உயிரோ
"டிருக்கிற நம்மோடெல்லாம் பண்ணினார். 4 - முக முக
"மாகக் கர்த்தர் பர்வதத்திலே அக்கினியின் நடுவிலிருந்து
"உங்களோடே பேசினார். 5-கர்த்தருடைய வார்த்தையை
"உங்களுக்கு அறிவிக்கும்படிக்கு அக்காலத்திலே நான்
"கர்த்தருக்கும் உங்களுக்கும் நடுவாக நின்றேன். ஏனெ
"னில் பருவதத்தில் ஏறாமல் அக்கினிக்குப் பயந்தீர்கள்
"அவர்சொன்னதாவது 6-உன்னை அடிமை வீடாகிய எகி
"ப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் பரா
"பரனாகிய கர்த்தர் நாமே 7 - நமக்கு முன்பாக உனக்கு
"வேறு தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம். 8 - உயர
"வானத்திலும் கீழே பூமியிலும் பூமியின்கீழ்த் தண்ணீ
"ரிலும் உண்டானவைகளுக்கு ஒத்திருக்கிற ஒரு சுரூ
"பத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தை என்கிலும்
"நீ உனக்கு உண்டாக்கவேண்டாம், 23 - பர்வதம் அக்
"கினியாய் எரியும்போது அந்தகாரத்தின் நடுவிலிருந்து
"உண்டாகிறசத்தத்தை நீங்கள்கேட்டபொழுதோ வெளி
"ல் கோத்திரங்களின் தலைவர்களும் மூப்பர்களுமாகிய நீங்
"கள் எல்லோரும் என்னண்டையில் சேர்ந்து சொன்ன
"தாவது 24 - இதோ எங்கள் பராபரனாகிய கர்த்தர் எங்
"களுக்குத் தம்முடைய மகிமையையும் தம்முடைய மகத்
"துவத்தையும் காண்பித்தார். அக்கினியின் நடுவிலிருந்து
"உண்டான அவருடைய சப்தத்தையும் கேட்டோம். பரா
"பரன் மனிதனோடே பேசியும் இவன் உயிரோடிருக்கி
"றதை இன்னாளிலே கண்டோம். 25 - இப்பொழுதும்
"நாங்கள் சாவானேன்? இந்தப்பெரிய அக்கினி எங்களைப்
"பட்சிக்குமே. நாங்கள் அப்புறம் எங்கள் பராபரனாகிய
"கர்த்தரின் சத்தத்தைக் கேட்டுக்கொண்டே யிருந்தால்

"சாவோம் 26 - ஏனெனில், நாங்கள் கேட்டதைப்போல்
"அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற ஜீவனுள்ள பரா
"பரனுடைய சத்தத்தைக் கேட்கிறதற்கும் உயிரோடிருக்
"கிறதற்கும் மாமிசம் எல்லாம் எம்மாத்திரம்? 27 - நீர்
"கிட்டப்போய் எங்கள் பராபரனாகிய கர்த்தர் உமக்குச்
"சொல்லுகிறதை எல்லாம்கேட்டு நீரே எங்கள் பராபர
"னாகிய கர்த்தர் சொல்லுகிற வார்த்தை யெல்லாம் எங்
"களோடே சொல்லும். நாங்கள்கேட்டு அதின்படியே
"செய்வோம் என்றீர்கள். 28 - இதை நீங்கள் என்னோடே
"சொல்லுகையில் கர்த்தர் உங்கள் வார்த்தைகளின் சத்
"தத்தைக்கேட்டு என்னோடே சொன்னதாவது இந்தச்
"சனம் உன்னோடே சொன்ன வார்த்தையின் சத்தத்தைக்
"கேட்டோம். அவர்கள் சொன்னதெல்லாம் நல்லது. 29 -
"அவர்களும் அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும்
"நன்றாயிருக்கும்படிக்கு அவர்கள் சகலநாளும் நமக்குப்
"பயப்படுகிறதற்கும் நம்முடைய கற்பனைகளை யெல்லாம்
"கைக்கொள்ளுகிறதற்குமான இப்படிப்பட்ட இருதயம்
"அவர்களுக்கு இருந்தால் நலமே 30 - நீபோய் உங்
"கள் கூடாரங்களுக்குத் திரும்பிப்போங்களென்று அவர்
"களுக்குச் சொல். 31 - நீயோவென்றால் இங்கே நம்
"மோடே தரித்திரு நீ அவர்களுக்குப் போதிக்கவும் நாம்
"அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிற தேசத்தில்
"அவர்கள் செய்யவும் வேண்டிய சகலகற்பனைகளையும் சட்
"டங்களையும் நியாயங்களையும் உனக்குச் சொல்லுவோ
"மென்றார். 32 - ஆகையால் உங்கள் பராபரனாகிய கர்த்
"தர் உங்களுக்குக் கற்பித்தபடியே செய்யச் சாவ
"தானமா யிருங்கள். வலது இடது புறமாக விலகீர்க
"ளாக 33. நீங்கள் சுதந்தரிக்கும் தேசத்திலே பிழைத்
"துச் சுகித்து நீடித்து இருக்கும்படிக்கு உங்கள் பரா
"பரனாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த எல்லாவழி



"யிலும் நடக்கக் கடவீர்களாக" என்று பரிஷ்காரமாகக்
கூறுகின்றது.

இதனாலே பராபரனாகிய கர்த்தர் இஸ்ரவேலர்களுக்கு மோசே
யைத் தீர்க்கதரிசியாக அனுப்பி அவர்மூலமாய்த் தமது கட்டளை
களைத் தெரிவித்ததேயு மன்றிக் கர்த்தர்தாமே அந்தக்காலத்திய
இஸ்ரவேலர்கள் காணும்படியாயும் கேட்கும்படியாயும் தோற்றமாகி
அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்குத் தலைமுறைத் தலைமுறையாகச்
சாட்சி சொல்லும்படிக்கு அன்புகாட்டினாரென்றும் மோசே இஸ்ர
வேலர்களுடைய தீர்க்கதரிசியேயன்றி மற்ற சாதிகளுக்குத் தீர்க்க
தரிசி அன்றென்றும் பிறவும் நன்றாய்ப் புலப்படுகின்றதன்றோ?

5 - ம் மோசே 6 - ம் அதிகாரமோ வெனின், "14 - உன்
"பராபரனாகிய கர்த்தருடைய கோபம் உனக்கு விரோ
"தமாக மூண்டு உன்னைப் பூமியில் வைக்காமல் அழித்
"துப்போடாதபடிக்கு உங்களைச் சுற்றிலும் இருக்கிற சன
"சதனங்களின் தேவர்களாகிய ஒரு அன்னிய தேவர்க
"ளைப் பின்பற்றா திருப்பீர்களாக. 17 - உங்கள் பராபர
"னாகிய கர்த்தர் உங்களுக்குக் கற்பித்த அவருடைய கற்
"பனைகளையும் அவருடையசாட்சிபங்களையும் அவருடைய
"கட்டளைகளையுமே கைக்கொள்வீர்களாக. 21 - நீ உன்கு
"மாரனோடே சொல்லவேண்டியது. நாங்கள் எகிப்தில்
"பார்வோனுக்கு அடிமைகளாக இருந்தோம். கர்த்தரோ
"வெனில் பலத்த கையினாலே எங்களை எகிப்திலிருந்து
"புறப்படப் பண்ணினார். 22 - அதேதெனில் கர்த்தர்
"எங்கள் கண்ணுகளுக்கு முன்பாக எகிப்திலேபார்வோன்
"மேலும் அவனுடைய வீட்டைத்தின் மேலும் அடை
"யாளங்களையும் கொடிதான பெரிய அற்புதங்களையும் கட்
"டளையிட்டு 23 - தாம் நம்முடைய பிதாக்களுக்கு ஆணை
"யிட்ட தேசத்திற்கு எங்களைக் கூட்டிக்கொண்டுபோய்
"அதை நமக்குக் கொடுக்கும்படிக்கு எங்களை அவ்வி
"டத்திலிருந்து புறப்படப்பண்ணினார். 24 - இப்பொழுதும்
"நாம் நம்முடைய பராபரனாகிய கர்த்தருக்குப் பயப்ப

“டுகிறதற்கும் சகலநாளும் நாம் நன்றாயிருக்கிற தற்கும்
“இந்நாளில் இருக்கிறதுபோல நம்மை அவர் உயிரோ
“டேகாக்கிற தற்குமாய் இந்த எல்லாக் சட்டளைகளின்
“படியேயும் செய்யக் கர்த்தர் நமக்குக் கற்பித்தார்”
என்று கூறுகின்றது. இதனாலும் எம்மால் மேலேகூறப்பட்ட விஷ
யங்களெல்லாம் உண்மை யென்பதைக் காணுவீர்கள். இவ்வாறான
வேதவாக்கியங்களைக் கணக்கற்றதுபோலக் காணலாம். இதோயோ
சுவா 1-ம் அதிகாரம், “7-நம்முடைய ஊழியக்காரனாகியமோ
“சே உனக்குக் கற்பித்த நியாயப் பிரமாணத்தின்படி யெல்
“லாம் செய்யக்கவனமாயிருக்க மாத்திரம் மிகவும் பலத்
“துத் திடமனதாயிரு, நீ போகிற இடத்திலெல்லாம் புத்
“திமானாய் நடந்துகொள்ளும் படிககு வலது இடது புறத்
“திற்கு விலகாதிருப்பாயாக 8 - இந்த நியாயப்பிரமா
“ணத்தின் புத்தகம் உன்வாயைவிட்டுப் பிரியாதிருப்ப
“தாக.” என்று கூறுகின்றது. இதனாலே மோசேயின் காலத்
திற்குப் பிறகு இஸ்ரவேலர்களிடத்து அறுபப்பட்ட பராபரனுடைய
ஊழியக்காரரானயோசுவா என்பவர், அந்தஇஸ்ரவேலர்கள்மோசே
யின் நியாயப் பிரமாணங்களில் ஒன்றையும் கடவாதிருக்கும்படிக்
கும் மோசேயின் வேதபுத்தகத்தைப் பாராயணம் செய்யும்படிக்
கும் பராபரனாலே கட்டளையிடப் படுகின்றாரென்பதை அவர்களுக்
குக் கற்பிக்கின்றா ரென்பது பரிஷ்காரமாகின்றதன்றோ? எரே
மியா 31-ம் அதிகாரம், “33-இந்நாள்களுக்குப் பிற்பாடே
“வெனில் நாம் இஸ்ரவேலர் வீட்டாரோடு பண்ணப்
“போகிற உடன்படிக்கையாவது நாம் நம்முடைய நியா
“யப் பிரமாணத்தை அவர்கள் உள்ளத்தில் கொடுத்து
“இருதயத்தில் எழுதி அவர்களுக்குப் பராபரனாக இருப்
“போம். 34 - இனி ஒருவனும் தனக்கு அடுத்தவனையும்
“ஒருவனும் தன்சகோதரனையும் கர்த்தரை அறியென்று
“போதிப்பதுமில்லை, ஏனென்றால் அவர்களில் சிறியவன்
“துவக்கி பெரியவன் மட்டும் எல்லாரும் நம்மை அறி
“வார்களென்று கர்த்தர் சொல்லுகிறார், ஏனென்றால், நாம்
“அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து அவர்கள் பாவங்



“களை அப்புறம் இனி நினையா திருப்போம்” என்று கூறு
கின்றது. இதனாலே மோசேயின் வேதப்பிரமாணங்க ளெல்லாம்
இஸ்ரவேலர்களின் உள்ளங்களில் எழுதப்பட்டு அது அவர்களைவிட்டு
மாறாது, அவர்களின் இரத்தத்தில் சம்பந்தமுடையதாய் என்றும்
விளங்கும்படி அவர்களிடத்துப் புதிய உடன்படிக்கையை அந்தக்கா
லத்திலே பராபரனாகிய கர்த்தர் செய்து முடித்தா ரென்றும்,
அந்தக் காரணம் பற்றியே அவர்களில் ஒருவருக் கொருவர் கர்த்
தரை அறியும்படி போதிக்க வேண்டுவதில்லை என்றும் பிறவுமா
கக் கூறினதாய்ப் பரிஷ்காரப் படுகின்றது. ஆகவே இஸ்ரவேலர்
களெல்லாரும் வேதத்தை மனப்பாடம் செய்துவைக்க வேண்டிய
கடமை யுடையவ ரென்பது புலப்படுகின்றது.

இதோ மத்தேயு 5-ம் அதிகாரம் “17 - வேதப்பிர மாண
“த்தை யாகிலும் தீர்க்கதரிசனங்களை யாகிலும் தள்ளிவிடு
“வதற்கு நான் வந்ததாக நினையாதிருங்கள், அவைக
“ளைத்தள்ளி விடுவதற்காக வல்ல. நிறை வேற்றுவதற்
“குவந்தேன். 18- வானமும் பூமியும் ஒழிந்து போனா
“லும் வேதமுழுவதும் நிறைவேறுவதன்றி அதில் ஒரு
“சிறிய எழுத்தாகிலும் ஒரு எழுத்தினுடைய உறுப்பாகி
“லும் ஒழிந்து போவதில்லை என்று மெய்யாய் உங்களுக்
“குச் சொல்லுகிறேன். 19 - ஆகையால் இக்கற்பனைகளி
“ல்மிகவும் சிறிய கற்பனையையாகிலும் தள்ளி அவ்வண்
“ணமாய் மனிதருக்கு உபதேசிக்கிறவன் எவனோ அவன்
“பரலோக இராச்சியத்தில் மிகவும் சிறியவன் என்று எண்
“ணப்படுவான் அவைகளின்படி செய்து உபதேசிக்கிறவ
“னே, பரலோக இராச்சியத்திலே பெரியவனென்று எண்
“ணப்படுவான் 20 - ஆதலால் வேதப்பாரகர்களும்பரிசேய
“ருமானவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகப்பட
“டிராவிட்டால் பரலோகஇராச்சியத்தில் பிரவேசிக்கமாட்
“டீர்களென்று உங்களுக்குச் சொல்கிறேன்” என்று இயேசு
நாதர் மிகவற்புறுத்தித் தமது சீசர்களுக்குக் கட்டளை செய்திருக்
கிறார். என்பது பரிஷ்காரப்படுகின்றது. ஆகவேகிறிஸ்து மயன்

டித சிரோமணி களாகிய எமது நேயர்களே! இஸ்ரவேலர்களைக் கொண்டு ஒழுகி நடக்கவேண்டிய தாகிய மோசேயின் வேதப் பிரமாணங்களில் சிறிய ஒரு கட்டளையையாவது முன்னைய தீர்க்கதரிசிகளின் ஒரு தீர்க்கதரிசனத்தையாவது மறுத்து வேறு கூறுதற்கு இயேசுநாதர் சற்றும் அருகரல்லர் என்றும் மோசேயின் வேதப் பிரமாணங்களையும் இஸ்ரவேலர்களால் கொலையுண்டும் கற்களால் அடியுண்டும் போய்த் தீர்க்கதரிசிகளையும் அவர்களது தீர்க்கதரிசனங்களையும் பலப்படுத்திக் காட்டும் சாட்சியாராக இயேசுவானவர் இஸ்ரவேலர்களுக்கு வெளிப்படுத்தபடவேயன்றி அவர் சுவாதீனம் படைத்த ஒருதீர்க்கதரிசியல்லரென்றும் நீங்கள் நம்பவேண்டியவர்களா கின்றீர்கள். அல்லாமலும் மோசேயின் வேதப்பிரமாணங்களில் ஒருசிறிய கட்டளையைமாற்றி வேறுகட்டளையை அந்த இஸ்ரவேலர்களுக்குக் கொடுக்க அசக்தராயிருப்பவராகிய அந்த இயேசுவினாலே வேறுவிசேஷமான காரியம் என்ன உண்டாகுமென்று நினைக்கிறீர்கள்? இயேசுநாதர் விசேஷ அற்புதங்களுடையவராக இஸ்ரவேலர்களிடத்தில் அனுப்பப்பட்டதெல்லாம் மோசேயின் வேதப்பிரமாணங்களை நிலைநாட்டியும், அந்தப் பிரமாணங்களை நிலைநாட்டவந்து தமக்கு முன்னால் இஸ்ரவேலர்கள் கைகளினாலே உயிரிழந்து போனத் தீர்க்கதரிசிகளையும், அவர்களது தீர்க்கதரிசனங்களையும் உண்மை படுத்தியும் இஸ்ரவேலர்களின் மனங்களில், கர்த்தரின் நன்றியறிவைக் குடிபடுத்தி அவர்கள் பாவனினின்றும் விடுபடுமாறு மனம் திரும்பும்படிக்கும் பரலோக இராச்சியத்தைச் சுதந்தரிக்கும்படிக்கும் போதிக்கவேண்டிக் கடைசியாய் அந்த இஸ்ரவேலர்களிடத்தில் ஒரு அடையாளமாக அனுப்பப்பட்டவரேயன்றி வேறுவித காரணம்பற்றி யனுப்பப்பட்டவரன்று. ஆதலினாலே அவரும் ஏனைய தீர்க்கதரிசிகள்போல அந்தப் பாதகர்களாகிய இஸ்ரவேலர்களாலே நீங்களும் சொல்லுகிறபடி கொலைசெய்யப்பட்டிருக்கிறார். நேயர்காள்! மோசேயோ வெனில் இஸ்ரவேல் குடும்பத்தாருக்கு மாத்திரம் அனுப்பப்பட்டவரே யன்றி அந்நிய குடும்பத்தாருக்கு தீர்க்கதரிசியாய் அனுப்பப்படவில்லை. அதுவன்றி அவரது வேதப்பிரமாணங்களும் இஸ்ரவேலர் அல்லாதவருக்கு உரித்தன்றென்பதும் சொல்லவேண்டுவதில்லை. அதில் சொல்லப்பட்ட கற்பனைகளெல்லாம் இஸ்ரவேலர்களுக்குச் செய்த உபகாரார்த்தமான வைகளாயிருக்கின்றதென்பதும் உங்களுக்குச் சொல்லவேண்டுவதில்லையன்றோ? இதன்விவரங்கள் முன்னரும் கூறியிருக்கின்றோம்; நிற்க.



இயேசுநாதர் தான்இஸ்ரவேலருக்கு அனுப்பப்பட்டாரென்பேமாயினும் மோசே, அப்படி இஸ்ரவேலர்களுக்கு மாத்திரம் அனுப்பப்பட்டவர் என்பதற்கு வேதபிரமாணம் எங்ஙனம் என்று எமது நேயர்களில் சிலர் கேட்பார்களாயின்;

5-ம் மோசே 6-ம் அதிகாரம் "14-உன்பராபரனாகிய கர்த்தருடைய கோபம் உனக்கு விரோதமாகமூண்டு உன்னைப் பூமியில் வைக்காமல் அழிக்கப் போடாதபடிக்கு "உங்களைச் சுற்றிலும் இருக்கிற சனசமூகங்களின் தேவர்களாகிய ஒரு அந்நிய தேவர்களைப் பின்பற்றாதிருப்பீர்களாக" என்று கூறுவதினாலே இஸ்ரவேல் குடும்பத்தாரைச் சுற்றிலும் அநேக சாதிகளிருந்தாரென்றும் அவர்களுக்கு மோசே சுவிசேஷம் பிரசங்கிக்க உத்தரவு பெறவில்லை என்றும் நன்றாய்க் காணப்படவில்லையோ என்றுகடாய் விடுக; இஸ்ரவேலர்களுக்கு மோசேயின் மூலமாய் இடப்பட்டகட்டளைகள் இன்னதென்பது 5-ம் மோசேயினாலே பரிஷ்காரப் படுகின்றது, ஆதலின் அவைகளெல்லாம் இங்கு விவரிக்கவேண்டுவதில்லை என்று நிறுத்தினோம். உய்த்துணர்க.

எமது நேயர்களாகிய கிறிஸ்தவ பண்டிதர்களே! பராபரனாகிய கர்த்தரின்வார்த்தையோ வெனில் சாமானியமானதும் எல்லாராலும் கேட்கப்படக் கூடியதுமானதன்று; அப்படியிருப்பதை இஸ்ரவேலர்களாகிய பேதைகள் உணராமல் மோசேயோடு, ஓமோசே! நீர்பராபரனாலே வார்த்தைகள் சொல்லப்படுகின்றதென்று சொல்லுகிறீரே. அப்படி சொல்லப்படும் வார்த்தையைநாங்களும் கேட்போமே என்றார்கள் போலும். அதுபற்றி; இஸ்ரவேலர்கள் எல்லாரும் கேட்கத் தக்கதாக ஒருபோது கர்த்தர் வார்த்தையாடினார். அதைக் கேட்ட இஸ்ரவேலர்கள் எங்கள் சதை எம்மாத்திரம்? இனிபராபரனுடைய சப்தத்தை நாங்கள் கேட்போமானால் சாவவேசாவோம். இனிமோசேயே, நீர் எங்களுக்குக் கர்த்தரால் தெரிவிக்க வேண்டியவைகளைக் கர்த்தரிடத்திலிருந்து கேட்டு எங்களுக்கு சொல்லுவீராக. நாங்கள் அதை நம்பி அந்தப்படிசெய்து வருவோம், என்று மோசேயிடத்தில் வாக்களித்திருக்கிறவிவரம் வேதத்தினாலே கேட்டிருக்கின்றீர்கள். ஆகவே; தமக்கும் நமக்கும் இடையின்று தமது வல்லமையைச் சுமக்குமாறு சக்தியைக் கொடு

த்துச் சிலரைத் தீர்க்கதரிசிகளாய் அனுப்பி நம்மை எல்லாம் ஆதரிக்கிறகர்த்தரே, எல்லாப் புகழ்ச்சிக்கும் உரியவர்.

எமது நேயர்காள்! அருள் நிறைந்தகர்த்தராகிய பராபரன் மோசேயோடு சொல்லிய கட்டளைகளில் சிலவற்றைக் கேட்பீர்களாக:—

(1) கர்த்தரானவர் ஒருவரே. அவரை முழுமனத்தினாலும் முழு ஆத்துமாவினாலும் முழுப்பலத்தினாலும் நினைக்காமலிருக்கவேண்டாம்.

(2) கர்த்தரைப் படைக்கப்பட்ட ஒருவஸ்துவைப் போலாவது படைக்கப்பட்ட ஒரு வஸ்துவை அவரைப் போலாவது பாவிக்கவும் நினைக்கவும் சொல்லவும் வேண்டாம்.

(3) கர்த்தருக்குச் செலுத்த வேண்டிய வந்தனங்களை அவரல்லாதவைகளுக்குச் செலுத்தவேண்டாம்.

(4) ஓய்வு நாள்களைப் பரிசுத்தமாக்காமலிருக்க வேண்டாம்.

(5) தாய்தந்தைமார்களைக் கனம் செய்யாமலிருக்க வேண்டாம்.

(6) கொலை செய்ய வேண்டாம்.

(7) விவசாரம் பண்ண வேண்டாம்.

(8) களவு செய்ய வேண்டாம்.

(9) பொய் சாட்சி சொல்ல வேண்டாம்.

(10) துரோகம் செய்ய வேண்டாம்.

(11) வட்டிவாங்க வேண்டாம்.

(12) புசிக்கக் கூடாதவைகளைப் புசிக்கவேண்டாம்.

(13) சுன்னத்து செய்யாதிருக்க வேண்டாம்.

(14) லாகிரிவஸ்துக்களை அருந்த வேண்டாம்.

(15) கண்ணுக்கு பதிலாக கண்ணும்பல்லுக்கு பதிலாகப் பல்லும் கைகளுக்குக் கைகளும் வாங்கப்படாதிருக்க வேண்டாம்.

(16) பெண்சாதியைத் தள்ளுதல் சீட்டைக் கொடுத்துத் தள்ளுதலை மறுக்க வேண்டாம், என்பனவும் பிறவுமே.



விசயம் இவ்வாறிருக்க, இயேசு நாதரோ வெனின் மோசேயின் வேதப்பிரமாணங்களைக் கொஞ்சமும் இரக்கமின்றிப் பலப்படுத்துபவராய்க் காணப்படுகின்றாரேயன்றி சற்றேனும் சாதகம் செய்பவராக காணப்படவில்லை என்பது உற்று நோக்கும் எமது நேயர்களுக்கு விளங்காமற் போகா. இதோ "வேதப்பிரமாணங்களை நான் தள்ளிவிடுவதற்காகவரவில்லை. அதை நிறைவேற்றுகிற தற்காக வந்தேன்" என்று இயேசு நாதர் சொல்லிய மேலான வசனத்திற்கு ஒன்று நூறுக்காத்து நின்றாரென்பது ஏற்படுகின்றதே தவிர; அவர் மோசேயின் கட்டளைகளில் ஒன்றையாவது இலகுபடுத்தினாரென்பது காணமாட்டீர்கள் "நன்றாய் உங்கள் இருதயங்களைப் பரிசுத்தப்படுத்தி நோக்குவீர்களாயின்பராபரனையும் தெரிசிக்கலாம்" என்று இயேசு நாதர் கூறுகின்றார். ஆதலின் நன்றாய்மனத் தூய்மை செய்து பொறுமையின்றி நோக்குவீர்களாக; இதோ! கொலைசெய்தவன் எவனோ அவன் நியாயத் தீர்ப்புக்கு உட்படுவானென்பது மோசேயின் கட்டளை எனல் பரிஷ்காரம். இந்தக் கட்டளையை முற்றும் காப்பதற்காக "சகோதரனை வீணாய்க் கோபித்துக் கொள்ளுகிறவன் எவனோ அவன் நியாயத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்" என்று இயேசு நாதர் கூறியிருக்கிறார் என்பது மறுக்கற்பாலதன்று; எமது நேயர்களே, மோசே கொலைசெய்தவன் நியாயத்தீர்ப்புக்கு உட்படுவான் என்று சொன்னாரேயன்றிக் கோபித்தவன் நியாயத் தீர்ப்புக்கு உட்படுவான் என்று சொல்லவில்லை. இயேசுவோ வென்றால், கொலை செய்தற்கேதுவாகிய கோபம் செய்தலை மறுத்துவிட்டால் கொலைகுற்றம் எங்ஙனம் உண்டாகும்? என்று நினைத்து அப்படிப்பட்ட கொலைகள் நிகழாமை காத்தாரென்பது பரிஷ்காரப் படுகின்றது. ஆகவே இயேசு நாதர் மோசேயின் கட்டளையை மாற்றினாரல்லர். ஆனால் அதைப் பலமாய்க் காப்பாற்றினாரென்பது உங்களுக்கு மறக்கவேண்டாம்.

இதோ "விவசாரம் பண்ணாதிருப்பாயாக" என்பதுமோசேயின் வேதக்கட்டளை என்பது பரிஷ்காரம். இந்தக் கட்டளையை முற்றும் காப்பதற்காக "ஒரு ஸ்திரீயை இச்சிப்போடே பார்க்கிறவன் எவனோ அவன்தான் இருதயத்தில் அவளோடே விவசாரம் செய்தாயிற்று; ஆகையால் உன்

"வலதுகண் உன்னைக் கெடுக்கிறதற்கு ஏதுவானால் அதைப் "பிடுங்கி எறிந்து போடு" என்று இயேசு நாதர் கூறியிருக்கின்றார் என்பது மறுக்கப்பாலதன்று. எமது நேயர்களே மோசே விவசாரம் செய்தால் குற்றமென்று கூறினாரேயன்றி இச்சித்துப் பார்த்த வன்விவசாரம் செய்தவனென்று சொல்லவில்லை. இயேசு வேதவெளியில் விவசாரம் செய்தற்கு முதல் காரணமாய பார்த்தலும் அதினாலாய இச்சித்தலுமாகிய குணங்களை நீக்கும் பொருட்டுப் பெண்களைக் கோசாவாக இருக்கும்படிக் கட்டளைச் செய்து விட்டால் விவசாரம் கூடாதென்னும் கருத்தினராய் அங்ஙனம் கற்பித்தாரென்பது பரிஷ்காரப்படுகின்றது. ஆகவே இயேசுநாதர் மோசேயின் கட்டளையை மாற்றினாரல்லர். ஆனால் அதைப் பலமாய்க் காப்பாற்றுவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி என்பது மறைய வேண்டாம்.

இதோ! "பொய்யாணையிட வேண்டாம். உன் ஆணையைக் கர்த்தருக்குச் செலுத்து" என்பது மோசேயின் வேதப் பிரமாணமென்பது வெளியாகுமாயிருக்கின்றது; இக்கட்டளையை முற்றும் காப்பாற்றுவான் வேண்டி "எவ்விதத்திலும் சத்தியம் பண்ணக்கூடாது. உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்லக்கடவீர்கள். இவைகளுக்கு மேற்பட்டது தீமையினால் உண்டாயிருக்கின்றது" என்று இயேசு நாதர் கூறியிருக்கின்றாரென்பதும் நீவிர்கள் மறக்கமாட்டீர்களன்றோ. நேயர்காள்! மோசே கடவுளைக் கொண்டு சத்தியம் பண்ணவேண்டுமென்றாரே யன்றி எவ்விதத்திலும் பண்ணக் கூடாதென்று விலக்கவில்லை. இயேசுவோவெனில்; மனிதர் உன்னதமான பராபரனது நாமத்தை அடிக்கடி இழுத்து இலேசாய் வழங்கி விடுவார்களோவென் றுள்ளமருண்டு அப்படி இலகுவாகப் பராபரனது நாமத்தை வழங்கப்படுதற்கு ஏதுவாகாதபடி பயப்படுத்தினாரென்பது நன்கு விளங்குகின்றது. ஆகவே இயேசு மோசேயின் பிரமாணத்தைப் பலமாய்க் காப்பாற்றினாரே யல்லது மோசேயின் வேதப்பிரமாணத்தை மாற்றிக் கூறினாரல ரென்பது உங்களுக்கு மறையாதன்றோ?

இதோ! "கண்ணுக்குப் பதிலாகக் கண்ணையும் பல்லுக் "குப் பதிலாகப் பல்லையும் வாங்கவேண்டும்" என்பது மோ



சேயின் வேதப் பிரமாணமென்பதை மறக்க வேண்டாம்; இயேசுவோவெனில் பொல்லாதவனோடு எதிர்நிற்கக் கூடாது. "ஒரு "வன் உன்னுடைய வலது கன்னத்தில் அடித்தால் மறு "கன்னத்தையும் அவனுக்குத் திருப்பிக்காட்டு. உன்னுடன் "வழக்காடி உன்னுடைய அங்கியை எடுத்துக் கொள் "ளவேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் வஸ்திரத்தை "விட்டுவிடு. ஒருவன் உன்னை ஒரு காதவழி வரும்படி "யாகப் பலவந்தம் பண்ணினால், அவனோடே இருகாத "வழிமட்டும் நடந்துபோ" என்று கூறுகின்றாரென்பது உங்களுக்கு நன்றாய்த் தெரியும். நேயர்காள்? மோசேயானவர், குற்றம் செய்தவன், அவன் செய்த குற்றத்திற்குத் தக்கவாறு சிட்சிக்கப்பட வேண்டுமென்று கற்பித்தாரேயன்றி ஒருக்கண்ணைப் பிடுங்கினவனுக்கு மறுகண்ணையும் பிடுங்கும்படித் திருப்பிக் கொடு வென்று சொல்லவில்லை; இயேசுவானவர் அப்படிப்பட்ட குற்றங்கள் நடப்பதற்கு ஏதுவான, பொல்லாதவர்களை நெருங்கவேண்டாமென்றும் அங்ஙனம் நெருங்கினாலும் அப்பொல்லாங்குகளைச் செய்பவர்களுங்கூட வெட்கப்படும்படிக்கான சாத்வீகக் குணத்தன்மையைக் காண்பித்துக் குற்றத்திற்கு ஏதுவாகாமல் துர்ச்செய்கைகளை நிவாரணம் செய்தாரென்பது பரிஷ்காரப் படுகின்றது. ஆகவே மோசேயின் கட்டளையை மாற்றினாரென்பதன்று. அதைப் பலப்படுத்தினாரென்பது உங்களுக்குத் தோன்றுமலிரா.

இதோ "நீ பிறனில் அன்பு வைத்து உன் சத்துருவை "பகைக்கக் கடவாய்" என்பது மோசேயின் வேதப்பிரமாணம். இப்பிரமாணத்தை முற்றும் காப்பான் வேண்டி "பரமண்டலங் "களிலிருக்கிற உங்கள் பிதா பொல்லாதவர்கள் மேலும் "நல்லவர்கள் மேலும் தமது சூரியனை உதிக்கவும் மழை "யைப் பெய்யவும் பண்ணுகிறார். அப்படியே நீங்கள் "அவருக்குப் புத்திரராயிருக்கும்படிக்கு உங்கள் சத்து "ருக்களில் அன்பு கூர்ந்து உங்களைச் சபிக்கிறவர்களை "ஆசீர்வதித்து உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை "செய்து உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் சபம் பண்ணு "த்துன்பப் படுத்துகிறவர்களுக்காகவும்

“ங்கள்! பரமண்டலங்களிலிருக்கிற உங்கள் பிதா பூர
“ணசற்குணராயிருக்கிறதைப்போல் நீங்களும் பூரண
“சற்குணராயிருக்கக் கடவீர்களாக” என்று இயேசு நாதர்
கூறியிருக்கின்றாரன்றோ? நேயர்காள்! மோசேயானவர் சத்துருக்க
ளைப்பகைக்கச் சொல்லுரேயன்றி அவர்களை வாழ்த்தவும் அன்பு
வைக்கவும் சொல்லவில்லையே. இயேசு நாதர் சத்துருத்துவ
மைக்கு ஏதுவாகிய பொருமை அகங்காரம் காமமாகியமலங்களை
நீக்குமாறு நன்னிய நியைக் கூறினரென்பது காணப்படுகின்றதே
யன்றி மோசேயின் வேதப்பிரமாணத்தை மாற்றிக் கூறினரென்
பதன்று. அதைப்பலப்படுத்தி நிலைப்படுத்தினரென்பதே பரிஷ்
காரமாய்க் காணப்படுகின்றது.

இதோ யாவனாகிலும் தன்மனைவியைத் தள்ளிவிட்டால் தள்
ளுதல் சீட்டை அவளுக்குக் கொடுக்கக் கடவனென்பது மோசேயின்
வேதப்பிரமாண மென்பது வெளியே. இயேசு வோவென்றால்
“எவனாகிலும் தன்மனைவி வேசித்தனம் இல்லாமலிருக்
“கையில் அவளைத் தள்ளிவிட்டால் அவன் அவளை விவ்
“சாரம் செய்யப் பண்ணுகிறவனா யிருப்பானென்று எவ
“னாகிலும் தள்ளிவிட்டவளை விவாகம் பண்ணினால் விவ
“சாரம் செய்கிறவனா யிருப்பானென்றும் நான் உங்க
“ளுக்குச் சொல்லுகிறேன்” என்று கூறுகின்றார். நேயர்
காள்! மோசேயானவர் பெண்சாதியைத் தள்ளுவதானால் அவ
ளுக்குத் தள்ளுதல் சீட்டுக் கொடுக்க வேண்டு மென்றுரேயன்றி
விவசாரம்செய்த பெண்சாதியோ தள்ளப்பட வேண்டுமென்று சொ
ல்லவில்லை. ஆகவே அவ்வேதக் கட்டளையையே முற்றிலும் காரப்
பான் வேண்டி பெண்சாதிமார்கள் உங்கள் கணவருக்கு அதிக
இரக்கமில்லாமல் உங்கள் அக்கிரமத்தினாலே ஒருவேளை அநியாய
மாய்த் தள்ளுதலாகிய செயல்களைச்செய்தற்கு நீங்கள் ஏதுவாயா
தபடி உங்களைக் கண்டித்து, இரக்கமுள்ளவர்களாய்ப் பெண் சாதி
மார்கள் விஷயத்தில் நீங்கள் நடக்கும்படி உங்களுக்குக் கட்டளை
யிட்டாரே யல்லது, மோசேயின் வேதப்பிரமாணத்தை மாற்றிக்
கூறினரென்று காணப்படவில்லை. ஆதலால் எமது அன்பர்களா
கிய கிறிஸ்தவ பண்டிதர்களே, இயேசுநாதரோ அவ்வாறாக மோ
சேயின் வேதப்பிரமாணங்களில் ஒரு அட்சரமும் தெருவனு



மல் மேலும் பலப்படுத்தின ரென்பதை நீவீர்கள் நன்குணர்வீர்க
ளாயின் மோசேயின் மன இரக்கத்தைவிட இயேசுநாதர் மன இர
க்கமுள்ளவரென்று காணமாட்டீர்கள். விசயம் இவ்வா றிருக்க,
எமது கிறிஸ்துவ பண்டிதர்கள் மோசேயின் வேதப் பிரமாணங்
களுக்கும் இயேசு நாதரின் மனக்கிடக்கைக்கும் முற்று மாறாக,
“ஒருவன் தன்பெண்சாதி விவசாரம் செய்தாளென்று
“ருஜுபடுத்தப் படுவதற்கு முன்னர்த் தள்ளுதல் சீட்டை
“அவளுக்குக் கொடுக்கக் கூடா” தென்று சட்டம் நியமித்
துக் கொண்ட விசயமோ வெனின், மிகவும் மனக் கவலைக்கும்
நரகவேதனைக்கும் இடம் பாடான தென்று வேதப் பிரமாண
மேதிட்டமாய் அறிவிக்கின்றதே. ஒருவேளை நீவீர்கள் மோசேயின்
அந்த வேதப்பிரமாணம் கிறிஸ்து வினாலே மாற்றப்பட்டு வேறு
விதி கூறப்பட்டிருக்கின்ற தென்பீர்களோ? அல்லது நாம் முன்
சொன்னபடியே; அதாவது; மோசேயின் வேதப் பிரமாணங்
கள் அதிகப்பலப்படும் படியாகவே, இயேசுநாதர் மனிதர்களை நோ
க்கி, நீவீர்கள் இரக்க மில்லாதவர்களாய் உங்களது பெண்சாதிமார்
களை, உங்கள் அக்கிரம செயலினாலே அநியாயமாய்த் தள்ளுதல்
செய்யும், சுபாபத்திற்கு நீவீர்கள் ஏதுவாகாமல் உங்கள் பெண்சாதி
மார்கள் விவசாரம் செய்தார்களென்று நீவீர்கள் கண்டால் தவிர
அவர்களுக்குத் தள்ளுதல் சீட்டைக் கொடுக்க வேண்டாம் என்று
கூறினரென்று நீவீர் கூறியபிரகாரமே யாமும் கருதிச் சட்டம்
நியமனம் செய்தோ மென்பீர்களோ? இவ்விரண்டில் எதிலாவது
துணிந்து நிற்பீர்களேல் நாம்மிகச் சந்தோஷ முடையோமாக விடை
தருகின்றோம்:

இதோ நேயர்காள்! நீவீர்கள் உங்கள் முந்தின சொல்லின்
கண் நிலை நின்றீர்களாயின், நீவீர்கள் அதற்குச் சான்றாகமத்தே
5-ம் அதிகாரம் “31. அல்லாமலும் யாவனாகிலும் தன்ம
“னைவியைத் தள்ளி விட்டால் தள்ளுதல் சீட்டு அவளுக்
“குக் கொக்கக் கடவனென்று சொல்லப்பட்டது. 32.
“அப்படியிருந்தும், எவனாகிலும் தன்மனைவி வேசித்தனம்
“இல்லாம லிருக்கையில் அவளைத் தள்ளி விட்டால் அ
“வன் அவளை விவசாரம் செய்யப்பண்ணுகிற வனாயிருப்
“பான் என்றும் எவனாகிலும் தள்ளிவிடப் பட்டவளை

"விவாகம் பண்ணினால் விவசாரம் செய்கிறவனாயிருப் பா
"னென்றும் நான்உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று இயே
சுநாதர் கூறியிருப்பதைக் கொண்டு வருவீர்கள் போலும். நன்று
சொன்னீர்கள். இதோமத்தேயு 5-ம் அதிகாரம் "17 - வேதப்பி
"ரமாணத்தை யாகிலும் தீர்க்க தரிசனங்களையாகிலும்
"தள்ளி விடுவதற்கு நான்வந்ததாக நினையாதிருங்கள்.
"அவைகளைத் தள்ளி விடுவதற்கல்ல, நிறைவேற்று வதற்
"குவந்தேன் 18-வானமும் பூமியும் ஒழிந்து போனாலும்
"வேதமுழுவதும் நிறைவேறு வதன்றி அதில் ஒரு சிறி
"யஎழுத்தாகிலும் ஓர் எழுத்தினுடைய உறுப்பாகிலும்
"ஒழிந்து போவதில்லை என்றுமெய்யாக உங்களுக்குச்
"சொல்லுகிறேன்" என்று கூறினதாகக் கூறுகின்றதை நீங்கள்
மறைக்கவேண்டாம். ஆகலின் நேயர்களே! இயேசுநாதர் தாமே
கூறினதாக ஒன்றுக்கொன்று எதிரிடையாகச் சொல்லப்படும் இ
ரண்டுவாக்கியங்களில் எதைநம்பு வீர்கள்?

"உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று பிரமாணமின்றிக்
கூறிய 32-ம் வசனத்தையா? அல்லது "மெய்யாக உங்களுக்குச்
"சொல்லுகிறேன்" என்று பிரமாணத்தோடு சொன்ன 18-ம் வச
னத்தையா? எதை நம்புவீர்கள்? ஆணையிட்ட வாக்கியமானது ஆணை
யிடாதவாக்கியத்தைவிட நம்புதற்கு அருகமானதென்பது எதிர் வா
தமின்றி உங்களால் நம்பப்படுமென்பதில் எமக்கு ஐயமில்லை; மே
லும்யாக்கோபு 2-ம் அதிகாரம் "10- எப்படி எனில் ஒருவன்
"வேத நால்முழுவதையும் கைக்கொண்டாலும் ஒரேபி
"ரமாணத்திற்குத் தப்பி நடந்தால் எல்லாப் பிரமாணங்க
"ளுக்கும் விரோதமாய்க் குற்றவாளியா யிருப்பான். 11-
"என்னத்தினாலென்றால், விவசாரம் பண்ணாதிருப்பாயாக
"என்று சொன்னவர், கொலை செய்யாதிருப்பாயாக என்
"றும் சொன்னார். ஆதலால் நீ விவசாரம் பண்ணாதிருந்
"தாலும் கொலை செய்தாயானால் வேதநாலை மீறி நடந்
"திருப்பாயே" என்று கூறுகின்றது. இதனாலே மோசேயின்
வேதப் பிரமாணத்தி லொன்றை யாதாயினும் மீறி நடக்கக் கூடா



தென்று இயேசுநாதர் சொன்ன கட்டளை பலப்படுத்தப் படுகின்ற
தன்றோ?

இதோகலாத்தியர் 3-ம் அதிகாரமோவெனின் "24 - இவ்
"விதமாய் நாம் விசுவாசத்தினாலே நீதிமான்கள் ஆவதற்கு
"ஞாயப்பிரமாணம் நம்மைக் கிறிஸ்துவி னிடத்திற்கு வழி
"நடத்துகிற உபாத்தியாயிருந்ததே" என்று கூறுகின்றது.
இதனாலும் ஞாயப்பிரமாணத்தின் படியே நடப்பவன் எவனோ
அவனே கிறிஸ்து வினிடத்தில் சேர்வான் மற்றவன் சேரமாட்டான்
என்று பரிஷ்காரப்படவில்லையா? லூக்காவேதம் 16-ம் அதிகாரம்
"17 - வானமும் பூமியும் ஒழிந்து போகிறது எளிதாயி
"ருந்தாலும் வேதப் பிரமாணத்தில் ஒரு எழுத்தின் உறு
"ப்பும் கெட்டுப் போகாது" என்று கூறுகின்றதே. இவ்
வாறாகச் சொன்ன இயேசுநாதர் உடனே அவ்வார்த்தையைமாற்
றிக் கூறுவதற்கு நியாயம் பெறு வீர்களா?

நேயர்களே! விவசாரம் செய்யாமலிருக்க அவளைத் தள்ளக்
கூடாதென்று ஒரு கட்டளைசெய்யவேண்டியது அவசியமல்லவே.
விவசாரம் செய்ததாக காணப்பட்டவளை எவன்தான் தள்ளாமல்
வைத்துக் கொண்டிருப்பானோ? அவள் தள்ளப்படுவது எப்படி?
அவள்தானே சிட்சைக் குட்படவேண்டியவளாயிருக் கின்றாளே.
அப்படியிருக்க ஒருதேவக்குமாரனெனப்படும் ஒரு மஹான் இப்ப
டியாக வாயில் வந்தவைகளை வேதக்கட்டளை என்றும் தேவ வாக்
யமென்றும் சொல்ல முன்வருவாரா? அப்படி அவர் சொன்னார்
என்று நாகரீகமுள்ள இக்காலத்தில் நீவீர்கள் எப்படி அதைக்கார
ணமாகக் கூறமுன்வருவீர்கள்? ஐயோ இதுவேத ஆபாசமோ?
மதிக்கேடோ? என்னென்று சொல்லுவோம்? விவசாரம் செய்தா
கவிட்டுத்தான் தள்ளவேண்டுமோமோ? விவசாரம் செய்தவள் கொல்
லப்படவேண்டுமே? அப்படியாக வேண்டுவது மோசேயின் வேத
ப்பிரமாணமன்றோ? இதோ 5-ம் மோசே 22-ம் அதிகாரம்
"22 - புருசன் கிழானபெண் சாதியோடே சயனிக்கிற
"ஒருவன் கண்டுபிடிக்கப் பட்டால் பெண்சாதியோடே
"சயனித்த மனிதனும் பெண்சாதியும் இருவரும் சாகக்
"கடவர்கள்" என்று கூறக் கேட்கவில்லையோ? பார்க்கவில்லை

யோ? ஏதோ! நேயர்காள் இவ்வன மெல்லாம் நீவீர்கள் நடு
நிலைமையான மனதினராய் ஆராய்ந்தபிறகு மோசேயின் வேதப்
பிரமாணம் மாற்றப்படத் தக்கதன்று என வுணர்வீர்கள். ஆகவே
நீவீர்கள் நிமித்த மின்றித்தள்ளுதல் சீட்டுக் கொடுக்கலாமென்று
தலை சாய்ப்பீர்க ளென்பதில் எமக்குச் சந்தேகமில்லை. நிற்க;
நேயர்களே! நாம் சொன்னபடியே மோசேயின் கட்டளையைப் பலப்
படுத்துமாறு இயேசு நாதர்பெண்களை விபசாரக் குற்றமின்றித்
தள்ளக் கூடாதென்றார் என்பீர்களோ? நன்று கூறுவீராயினீர். அ
ப்படியாயின்; தள்ளுதல் சீட்டைக் கொடுக்கிற இந்த விவஹாரத்
தில்மாத்திரம் அன்று ஒருவன் மற்றொருவனை ஒரு கன்னத்தில்
அடித்தால் அடித்தவனுக்கு மற்றொருகன்னத்தையும் திருப்பி காட்
டவேண்டுமேயன்றி அடித்தவனைக் குற்றவாளியென்று குற்றம் சுமத்
தக் கூடாதென்றும் பெண்டுகளை இச்சிப்பாக நோக்குகிறவன் விப
சாரக்குற்றத்திற்கு உட்படுத்த வேண்டுமென்றும் *ஆண்பிள்ளைகளா
லே இச்சிப்பானோக்கம் பெறக்கூடிய ஒவ்வொரு பெண்பிள்ளைக
ளும், ஆண்பிள்ளைகளுக்கு மறைவாய் இருக்கவேண்டுமென்றும், உள்
ளதை உள்ளதென்றும் இல்லதை இல்லதென்றும் சொல்லவேண்டு
மேயன்றி ஆணையிடக்கூடா தென்றுமாகக் கிறிஸ்துவ பண்டிதர்கள்
சட்டம் நிர்ணயித்திருக்கின்றார்களா? இல்லையே; அப்படியிருக்க
பெண்பிள்ளைகளைத் தள்ளுதல் சீட்டுக்கொடுக்கிற விசயத்தில்மாத்தி
ரம் இயேசுநாதரின் கருத்தென யாம் கூறியமுறைமையைப் பின்
பற்றுதல் நியாயமாகுமா? ஐயோ, பெரிய ஒரு கூட்டத்தைப் பரா
பரனது நியாயப்பிரமாணத்திலிருந்து விலகிநடக்கும்படி செய்தவர்
கள் எப்படிப்பட்ட சண்டாளரோ? நியாயத் தீர்ப்புக்காலத்தில்
அந்தச்சண்டாளருக்கு இயேசுநாதர் எப்படிப்பட்ட தீர்ப்புக்குத்த
மதுபரம பிதாவிடத்தில்வேண்டி நிற்பாரோ? கிறிஸ்துவநேயர்
களே,! ஆதலால் நீவீர்கள்மோசேயின் கட்டளைகளைக் கொண்
டு அந்தப்படிநடக்கப் பிரயத்தனப் படுவீர்களாயின் பாக்கியவான்
களேயாவீர்கள். ஆனால்மோ சேயின்வேதப்பிரமாணமோ வெனில்,
இஸ்ரவேலர்களுக்கு மாத்திரம் சுதந்தரமுள்ள தென்பது நாம்
எடுத்துக் கூறியவேத ஆதாரங்களினாலே உங்களுக்குப் புலப்பட்
டிருக்குமாகலின், எமதுகிறிஸ்துவ நேயர்களில், இஸ்ரவேலர் அல்
லாதவேறு குடும்பத்தார்கள், உடனே அந்தப்பிரமாணங்களை விட்
டுவிலகிக் கொள்வார்களென்றும் நம்புகின்றோம். ஆகவே இயேசு
நாதர் மோசேயின் வேதப்பிரமாணங்களையும் தீர்க்கதரிசிகளாக



இஸ்ரவேலர்களிடத்தில் அனுப்பப்பட்டு அவர்களால்கல்லாலெறியுண்
டும், கொலையுண்டும் போனவர்களெல்லோரும் உண்மையானத்
தீர்க்கதரிசிகளே யென்பதையும் மெய்ப்படுத்த வந்தவரே என்றும்
விசுவாசித்த வர்கள்பாக்கியவான்களே. இஸ்ரவேலர்கள் நிறைவேற்ற வேண்
டியது மோசேயின் நியாயப்பிரமாணம் என்பதைக் கண்டறிந்தவர்
களும் பாக்கியவான்களே. ஆமென்

## "சுன்னத்து"

இது சுன்னத்து செய்தல் எல்லோருக்கும் இன்றியமையாத
கடமை என்பதைக் கூறுகின்றது.

எமதுநண்பர்களாகிய கிறிஸ்துவபண்டிதர்களே! சுன்னத்தென்
னும் விருத்தசேதனம் செய்தல், எல்லா ஆண்பிள்ளைகளுக்கும்
இன்றியமையாத கடமையென்பது உங்களுக்கு நன்றாய்த் தெரிந்
தவிசயமன்றோ? சுன்னத்தென்ப தாவெனின்? ஆண்உறுப்பின்
நுனித்தோல், கருக்குள்ள கத்தியினாலே அறுக்கப்படுவதெனப் படுகி
றது; அதுபராபரனுடைய சனமாயிருப்பதற்குச் செய்யப்பட்ட நித்
திய உடம்படிக்கையின் அறிகுறியாக அப்படிப்பட்ட சனங்களின்
மாம்சத்திலே பிரசன்னமா யிருக்கவேண்டிய தென்பது பராபர
னாகிய கர்த்தருடைய கட்டளை எனப்படும்.

ஆகவே, பராபரனது சனமாயிருக்கின்றோம் என்று சொல்லும்
ஒவ்வொரு ஆண்பிள்ளைகளின் நுனித்தோல்கள் விருத்தசேதனம்
செய்யப்பட்டிருக்கவேணு மென்பது எல்லாகிறிஸ்துவராலும் எதிர்
வாதமின்றி ஒப்புக் கொள்ளப்படவேண்டு மென்பது வெளியாங்க
மாயிற்று; இந்தப்பிரமாணமானது இஸ்ரவேலருக்கு மாத்திரம்
உரைக்கப்பட்டதன்று; பூர்வத்தாராகிய ஆபிரகாமுக்கே உரைக்கப்
பட்டு பொதுத்தன்மையான பெரிய உத்திரவென்றேகருதப் படுகின்
றது. அதுபற்றியே தேவக்குமாரனென்று நீவீர்கள் சொல்லுகிற
இயேசு நாதருங்கூட விருத்தசேதனம் செய்யப்பட்டார்.

எமது நண்பர்களே! சுன்னத்தின் விசயமாக வேதத்திலே வந்
திருக்கிற தேவக்கட்டளைகளை உங்களது விலையேறப்பெற்ற அருமை
யானமனங்களுக்குச் சுருக்கமாய் இங்கு விவரிக்கின்றோம். தயை
செய்து சற்று நோக்குவீர்களாயின், நீவீர்கள் பாக்கியவான்களே,

ஆமென். இதோ 1-ம் மோசே 17-ம் அதிகாரம்: 4 - இதோ நாம்
"உன்னோடே பண்ணுகிற நம்முடைய உடன் படிக்கையா
"வது; நீ திரள் சாதிகளுக்குத் தகப்பனாய் 5-இனி உன்பேர்
"ஆபிராமெனப்படாததாக' நாம் உன்னைத் திரளான சா
"திகளுக்குத் தகப்பனாகவைத்த படியினாலே உன்பேர்
"ஆபிரகாம் என்று இருக்கக் கடவது 6-உன்னை மிகுயுதிம்
"மிகுதியாய்ப் பலுகப்பண்ணி உன்னைச் சாதிகளாக்குவோ
"ம். உன்சந்ததிகளில் இராசாக்கள் பிறப்பார்கள். 7 - நாம்
"உனக்கும் உனக்குப்பிற்பாடு உன் வித்துக்கும் பராபர
"னாக இருக்கத்தக்கதாக, நாம் நமக்கும் உனக்கும் உனக்
"குப் பிற்பாடு தலைமுறை தலைமுறையா யிருக்கப்போகிற
"உன் வித்துக்கும் நடுவே நம்முடைய உடன்படிக்கையை
"நித்தியஉடன் படிக்கையாகத் திடப்படுத்துவோம். 8 -
"உனக்கும் உனக்குப் பிற்பாடு உன் வித்துக்கும் நீபரதே
"சியாய்த் தங்கிவருகிறகானான் தேசத்தை யெல்லாம் நித்
"தியஉம்பிளிக்கையாகக் கொடுத்து அவர்களுக்குப்பரா
"பரனாக இருப்போம் என்றார். 9 - பின்னையும் பராப
"ரன் ஆபிரகாமோடு சொன்னதாவது, இப்பொழுது,
"நீயும் உனக்குப்பிற்பாடு தலைமுறை தலைமுறையாகஇருக்
"கப்போகிற உன் வித்தாரும் நம்முடைய உடன்படிக்கை
"யைக் கைக்கொள்வீர்களாக. 10 - நமக்கும் உங்களுக்கும்
"உனக்குப் பிற்பாடு உன் வித்துக்கும் நடுவே உண்டாகி
"றதும் நீங்கள் கைக்கொள்ளவேண்டியதுமான நம்முடை
"ய உடன் படிக்கையாவது; உங்களில் ஆணாய்ப் பிறந்த
"தெல்லாம் சுன்னத்துப் பண்ணப்படவேண்டியது. 11 -
"உங்கள் நுனித்தோலின்மாம்சத்தைச் சுன்னத்துப்பண்
"ணக் கடவீர். அது நமக்கும் உங்களுக்கும் இருக்கிற
"உடன்படிக்கையின் அடையாளமாயிருக்கும் உங்களில்
"தலைமுறை தலைமுறையாக ஆணாய்ப் பிறக்கிறவைகளெல்
"லாம் எட்டு நாள்பிள்ளையில் சுன்னத்துப் பண்ணப்ப
"டவேண்டியது. வீட்டுப்பிள்ளையும் உன்னுடைய வித்தல்



"லாத எந்த அன்னியனிடத்திலும் பணத்தினாலே கொள்
"ளப்பட்ட பிள்ளையும் அப்படித்தானே. 13 - உன்வீட்
"டுபிள்ளை உன்பணத்தினாலே கொள்ளப்பட்டவனும் அவ
"சியமாய்ச் சுன்னத்துப் பண்ணப்படவேண்டும். இப்படி
"நம்முடைய உடன்படிக்கை உங்களுடையமாமிச சத்தி
"லே நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது. 14 -
"நுனித் தோலின் மாம்சம் சுன்னத்துப்பண்ணப் படா
"திருக்கிற நுனித்தோலுள்ள ஆண்பிள்ளையிருந்தால் அந்
"த ஆத்துமா நம்முடைய உடன்படிக்கையை முறித்தபடி
"யினாலே, தன்சனத்தி லிராதபடிக்கு அறுப்புண்டு போ
"வான் என்றார். 23 - அப்பொழுது ஆபிரகாம் தன்குமா
"ரனாகிய இஸ்மவேலையும் தன்வீட்டிலே பிறந்தயாவரை
"யும் தான்பணத்தினாலே கொண்டயாவரையும் ஆபிரகா
"மாகிய தன்வீட்டு மனிதரிலுள்ள ஆண்பிள்ளைகளை எல்
"லாம் சேர்த்துப் பராபரன் தன்னோடே சொன்னபடி
"அவர்கள் நுனித்தோலின் மாம் சத்தை அந்நாளிலே
"தானே சுன்னத்துப்பண்ணினான். 24 - ஆபிரகாமுடை
"ய நுனித்தோலின் மாம்சம் சுன்னத்தடைகிற பொழுது
"அவன் தொண்ணூற்றொன்பது வயதாயிருந்தான். 25 -
"அவனுடையகுமாரன் இஸ்மவேலோ வெனின்; அவனு
"டைய நுனித்தோலின்மாம்சம் சுன்னத்துப் பண்ணப்
"படுகிற பொழுது பதின்மூன்று வயதாயிருந்தான். 26 -
"அந்நாளிலே தானே ஆபிரகாமும் அவன் குமாரன் இஸ்
"மவேலும் சுன்னத்தடைந்தார்" என்று பரிஷ்காரமாகக்
கூறுகின்றது. இதனாலே, எமது கிறிஸ்தவநேயர்கள், சுன்னத்துச் செய்யவேண்டிய கட்டளையானது மிகப்பலமான தென்றும் சுன்னத்துச் செய்யப்படாத ஒரு ஆத்துமா உயிர்வாழப் படாதென்றும் அப்படிப்பட்டவர்கள் பராபரனது சனமாக மாட்டார்களென்றும் ஆணாய்ப்பிறந்த ஒவ்வொருவரும் கட்டாயம் நுனித்தோலின் மாமிசத்தைச் சுன்னத்துப் பண்ணவேண்டு மென்றும் நன்றாய்த்தெரியப்படு கின்றதன்றோ? நேயர்காள்! இத்தவித

மாய்ச் சுன்னத்துப்பண்ண வேண்டுமென்கிற விதியானது ஒருவ
ராலும் மாற்றப்படாது - மறுஜென்மம் அற்றுப்போகிற வரையிலும்
இருக்கவேண்டு மென்று வெள்ளிடமலைபோன்று விளங்கிய விஷயந்
தானே. அப்படியிருக்க நீவிர்கள் சுன்னத்துச் செய்யப்படாது உயிர்
வாழலாமா? நாமும் கிறிஸ்துவ வேதசம்பந்திகளென்று வாய்
கூசாமல் சொல்ல முன்வரலாமா? ஐயோ, இப்படிப்பட்ட பலத்
தகாரியங்களை எல்லாம் கைசோரவிட்டு வேறு என்னதான் கொண்டு
நாங்கள் கிறிஸ்துவர்கள் என்று நாணமின்றி முன்வருகின்றீர்களோ?
ஐயோ! பாவிகாள்! இதோ 2-ம் மோசே 12-ம் அதிகாரம்
“43 - கர்த்தர் மோசேயோடும் ஆரோனோடும் சொன்ன
“தாவது பஸ்காவின் கட்டளை யேதெனில் அந்நியபுத்தி
“ரன் ஒருவனும் அதிலே புசிக்கவேண்டாம். ஆனால்
“பணத்தினாலே கொள்ளப்பட்ட அடிமை யெல்லாம்
“நீ அவனைச் சுன்னத்துப் பண்ணின பிற்பாடு அதிலே
“புசிப்பானாக, 45 - அந்நியனும் கூலியாளும் அதிலே
“புசிக்க வேண்டாம். 47 - இஸ்ரவேல் ஜனமெல்லாம்
“அதை ஆசரிக்கக்கடவது. 48 - அந்நியன் ஒருவன் உன்
“னிடத்திலே தங்கிக் கர்த்தருக்குப் பஸ்காவை ஆசரிக்க
“வேண்டுமென்று இருந்தானேயாகில் அவனிடத்திலிருக்
“கிற ஆணெல்லாம் சுன்னத்தடையவேண்டும். பிற்பாடு
“அவன் அதை ஆசரிக்கிறதற்குச் சேர்ந்து தேசத்திலே
“பிறந்தவனைப்போல இருப்பானாக. ஆனால் சுன்னத்தில்
“லாத ஒருவனும் அதில் புசிக்கவேண்டாம்” என்று எவ்
வளவு தெளிவாய்ச் சுன்னத்துச் செய்யப்பட வேண்டுமென்கிற
பலவத்தமான உத்திரவை எடுத்துக்காட்டுகின்றது? நேயர்காள் பஸ்
காவைச் சுன்னத்துச்செய்யாத ஒருவனும் அதில் புசிக்கக்கூடாதென்
றாம் சூரியனைக்காணும் வெளிச்சமாகக் காணப்பட்டிருக்க நீவிர்கள்
சுன்னத்தடையாமல் எப்படி பஸ்காவை ஆசரிக்கின்றீர்கள்? எவ்வாறு
அதில் புசிக்கின்றீர்கள்? அந்தோ நேயர்காள்! சித்தசுவாதீனம் உங்க
ளுக்கில்லையா? உலகவிஷயத்தில் எவ்வளவோ நாகரீக மடைந்திருக்
கின்றீர்களே. கண்மூடி விழிக்கிறதற்கு முன்னே இந்த உலகத்தை
விட்டுப்பிரிந்து விடக்கூடிய நீவிர்கள் நிலையற்ற உலககாரியத்தைக்
கைக்கொண்டு நித்திய ஜீவனடைய வேண்டிய மதசம்பந்த விஷய



த்தில் தூங்குகின்றீர்களா? நீங்கள் நித்திய ஜீவன் அடையவேண்டிய
விஷயத்தை யாரிடத்தில் ஒப்புவித்து விட்டீர்கள்? உங்களுடைய
அற்பகால க்ஷேமத்திற்காக வேண்டிய அருவருப்பாகிய உலகபொ
ருளை நீங்கள் யாரிடத்திலாவது ஒப்புக்கொடுத்துவிட்டுத் தெருத்தெ
ருவாய்ச்சுற்றி யலைவீர்களா? மாட்டீர்களே, அப்படியிருக்க நித்திய
ஜீவனை அடைந்து அளப்பரிய பெருங்க்ஷேமத்தை யடைந்து உயிர்
வாழ்தற்கு ஏதுவாகிய வேத ஆராய்ச்சி செய்வதை யார்வசம் ஒப்பு
வித்து யார்சொல்லை நம்பி கண்ணை மூடிக்கொண் டிருக்கின்றீர்கள்?
அப்படியிருப்பது மதிகேடன்றோ? உங்களின் நடவடிக்கையானது
“பயித்தியம், நீங்கிற்றுப் பனைமரங்கொண்டுவா பல்லு
“தேய்க்க” என்றவன் கதையை நிகர்க்கின்றதே. ஐயோ! நேயர்
காள்! இதோ யோசுவா 5-ம் அதிகார மொழியில் “2 - அக்
“காலத்திலே கர்த்தர் யோசுவாவோடே, நீ உனக்குக்கருக்
“கான கத்திகளை உண்டாக்கித்திரும்ப இரண்டாம் விசை
“இஸ்ரவேல் புத்திரரைச் சுன்னத்துப் பண்ணென்றார். 3-
“அப்போது யோசுவா தனக்குக்கருக்கான கத்திகளை உண்
“டாக்கி இஸ்ரவேல் புத்திரரை ஆரலோத்து மேட்டிலே
“சுன்னத்துப் பண்ணினான்” என்று கூறுகின்றதே. இதனாலே
சுன்னத்துசெய்யவேண்டியது மிகவும் பலவத்தமான வேதகட்டளை
யாயிற்று என்பது உங்களுக்குத் தோன்றவில்லையா? ஒருகாரியம்
இரண்டு தரமாக அதாவது சுன்னத்துச் செய்யப்பட்டிருக்கிற நுனித்
தோல்கள் எல்லாம் மறுபடியும் செய்யப்பட வேண்டுமென்று பரா
பரனாகிய கர்த்தர் உத்திர விட்டிருப்பதினாலே ஒருவிதத்தாலும்
ஆண்பிறவிகளைச் சுன்னத்துச் செய்தல் விட்டொழியா தென்பது
எப்படிப்பட்ட மடையனாயிருந்தாலும் அறியாம லிருக்கமாட்டானே.
அப்படியிருக்க எமது கிறிஸ்துவ நேயர்களுக்கு மாத்திரம் அது
மனதிற்குத் தோன்றாமல்போனது அவர்கள் மனதில் சாத்தான்
புகுந்துகொண்ட காரணம்பற்றியே என்று பரிஷ்காரப் படுகின்ற
தன்றோ? இதோ ஏசாயா 52 - அதிகாரம் “1-எழும்பு எழும்பு
“சீயோனே உன்பெலத்தைத் தரித்துக்கொள் பரிசுத்த
“பட்டணமாகிய எருசலேமே உன் அலங்கார வஸ்திரங்க
“ளைத் தரித்துக்கொள். ஏனெனில் சுன்னத்தில்லாதவனும்
“அசுத்தனும் இனி உனக்குள் வருவதில்லை” என்று கூறின

தாகக் கூறுகின்றதே. இதுவுமே நமக்கிலேயுள்ள தங்களுடைய கோயர்
கள் எருசலேம் எனப்பட்ட பிரேதமானது சுன்னத்தில்லாத தவர்
களான அசுத்தக்காரர்களின் அதிகாரவாய்ப்பைக்கடந்து சுன்னத்
துள்ளவர்களாகிய பரிசுத்தவான்களின் அதிகாரத்தில் அமர்ந்திருக்
கின்றதை ஏன் காணமாட்டார்கள்? கன்றுயும் காதுமானர்கள். இந்த
வேத அத்தாட்சியிலுமே பரிசுத்தவான்களும் சுன்னத்துடையவர்
களே என்றும் அவர்களே பராபரனது நித்திய உடன்படிக்கை
யாக மாம்ச சம்பந்தமாய்ச் சாட்சிபகர்ந்து வருகின்றவர்களென
றும் எமது கிறிஸ்தவ நேயர்கள் கண்டுணர்வார்களாக. இதோ.
எசேக்கியேல் 32-ம் அதிகாரமோ "24 - அங்கே ஏலாமும்
"அவனுடைய பிரேதக்குழியைச் சுற்றிலும் அவனுடைய
"எல்லா ஜனங்களும் கிடக்கிறார்கள். அவர்கள் எல்லா
"ரும் பட்டயத்தால் வெட்டுண்டு விழுந்து சுன்னத்
"தில்லாதவர்களாய்ப் பூமியின் பாதாளத்துக்குள் இறங்கி
"னார்கள். ஜீவனுள்ளோருடைய தேசத்திலே தங்களால்
"கெடியுண்டாக்கின அவர்கள் குழியில் இறங்கினவர்க
"ளோடேகூடத் தங்கள் அவமானத்தைச் சுமந்துகொண்
"டிருக்கிறார்கள். 30 - அங்கே வடக்குத்திசை அதிபதி
"கள் அனைவரும் எல்லா சீதோனியரும் கிடக்கிறார்கள்.
"இவர்கள் தங்கள் கெடியினாலும் தங்கள் பராக்கிரமத்
"தாலும் வெட்கப்பட்டு வெட்டுண்டவர்களிடத்தில் இறங்
"கிப் பட்டயத்தால் வெட்டுண்டவர்களோடே சுன்னத்
"தில்லாதவர்களாய்க்கிடந்து குழியில் இறங்கினவர்களிடத்
"தில் தங்கள் அவமானத்தைச் சுமந்துகொண்டிருக்கிறார்
"கள். 32 - ஏனெனில் நம்முடைய கெடியைச் ஜீவனுள்
"ளோருடைய தேசத்தில் உண்டுபண்ணுகிறேன். பார
"வோனும் அவனுடைய எல்லா ஜனமுமாய்ப் பட்ட
"யத்தால் வெட்டுண்டவர்களிடத்தில் சுன்னத்தில்லாதவர்
"களின் நடுவே கிடத்தப்படுவார்கள் என்கிறதைக் கர்த்
"தராகிய ஆண்டவர் உரைக்கின்றாரென்று சொல்லுகின்
"றார்" என, சுன்னத் தில்லாதவர்களின் நிலைமையையும் கதியை
யும் குறித்துத் தெளிவாகக் கூறுகின்றதே. அந்தோ, நேயர்காள்!



இந்த வேதவாக்கியங்களெல்லாவற்றாலும் சுன்னத்துச் செய்
யப்படவேண்டியது மிகவும் அவசியமானதென்று காணப்படவில்
லையா? இன்னும் எசேக்கியேல் 31-ம் அதிகாரம் "18 - இப்
"படிக்கொத்த மகிமையிலும் மகத்துவத்திலும் ஏதே
"னின் விருட்சங்களில் எதுக்கு நீ ஒப்பானவன்? ஏதே
"னின் விருட்சங்களோடேகூட நீயும் பூமியின் பாதா
"ளத்துக்குள் இறக்கப்பட்டுப் பட்டயத்தாலே வெட்
"டுண்டவர்களோடேகூட சுன்னத்தில்லாதவர்களின் நடு
"விலே கிடப்பாய்" என்று கூறுகின்றது. ஆகவே சுன்னத்
தின் விசேஷம் இன்னும் உங்களுக்குப் புலப்பட்டிருக்க மாட்டா
தென்று நாம் நினைக்கவில்லை.

இன்னும் எசேக்கியேல் 44-ம் அதிகாரம் "9 - கர்த்தரா
"கிய ஆண்டவர் சொல்லுகிறதாவது, இஸ்ரவேல் புத்தி
"ரரின் நடுவில் இருக்கிற சகல அந்நிய புத்திரரிலும் சுன்
"னத்தில்லாத இருதயமும் சுன்னத்தில்லாத மாம்சமும்
"உள்ள அந்நியபுத்திரன் ஒருவனும் நம்முடைய பரிசுத்த
"ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பதில்லை" என்று பராபரனா
கிய கர்த்தர் நன்றாய்ப் பலப்படுத்திக்கூறினதானது வெளிதாய்
ஆராய்வின்றிச் சுன்னத்தானது மிகவும் அவசியமான காரியமென்
பதை ஒவ்வொருவனும் பிரயாசையின்றித் தெரியும்படி கிடக்கின்ற
தன்றோ? நேயர்காள்! பராபரனானவர் சுன்னத்தில்லாதவன் தமது
பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதில்லை என்று கூறினதாக நீங்
கள் காணுவீர்களாயின் பரலோக இராச்சியத்தில் நீவீர்கள் பிரவே
சிப்பதே இல்லை என்பதை உணர்வீர்கள். நீங்கள் பரலோக இராச்
சியத்தில் புகுவதற்குச் சுன்னத்தில்லாதவர்களாய் யாரை ஆதரவு
வைத்துக்கொண்டிருக்கின்றீர்கள்? இயேசு நாதரையா ஆதரவுவைத்
துக்கொண்டிருக்கின்றீர்கள்? இயேசும் (விருத்தசேதனம்) சுன்னத்
தடையாமலிருக்கவில்லையே. அவர் எப்படி சுன்னத்தில்லாத உங்க
ளைச் சுமப்பாரோ? பேதைகாள்! உண்மையைக் கடைப்பிடியுங்கள்.
அப்போது நீவீர்கள் பாக்கியவான்கள். நேயர்களே! பரலோக இரா
ச்சியத்துக்கு விரோதியானவன் சாத்தானென்பது நீவீர்கள் உணரா
ததொன்றல்ல. அவனே பரலோக இராச்சியத்தைச் சேராதபடி

மனுபுத்திரர்களைக் கெடுக்கிறவன். ஆகவே அவனுக்குச் செவிசாய்த்துப் பரலோக இராஜ்யத்தை இழக்காதிருங்கள்; எமது நேயர்களே, இவ்வளவெல்லாம் நீவிர்கள் கேட்டபிறகு, உங்கள் அப்போஸ்தலர்கள் இயேசுநாதர் இறந்தபிறகு அல்லது அவர் வானத்தில் உயர்த்தப்பட்டபிறகு அப்போஸ்தலருக்குப் பரிசுத்த ஆவிசம்பவித்து அந்த அப்போஸ்தலர்கள் சுன்னத்தை மறுத்து வேறுவிதி கூறினார். அதுபற்றி நாங்கள் அந்தப்படி செய்துவருகின்றோம் என்று ஒருவேளை தட்டுக்கெட்டால் தலையைத் தடவுக என்றவர் கதையாகச்சொல்லுவீர்களோ? இப்படி சொல்லுவது ஒன்றேயன்றி வேறுவிதியே இல்லை என்பது உங்களுக்கு நன்றாய்த் தெரிந்ததே; நன்றுகூ; உங்கள் அப்போஸ்தலர்கள் எப்படி இந்தச் சுன்னத்துச் செய்யவேண்டிய காரியத்தை மறுத்தார்களென்பதைச் சற்றுக்கவனித்துக்கேட்டு அது உங்களுக்கே அழகாயிருக்கிறதா? என்பதைப்பாருங்கள். இதோ அப்போஸ்தலர் 15 - அதிகாரம் "25 - நாங்கள் "தெரிந்துகொண்ட சிலமனிதரை நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும்விட எத்தனமா யிருந்தவர்களுமாய் 26 - எங்களுக்குப் பிரியமானவர்களுமாய் இருக்கிற பருனபாவோடும் பவுலோடுங்கூட உங்களிடத்திற்கு அனுப்பவேண்டுமென்று ஒருமனப்பட்டு யோசனை பண்ணிக்கொண்டு 27 - அங்கப்படியே யூதாவையும் சீலாவையும் அனுப்புகிறோம். அவர்களும் இவைகளை வாக்கினாலே உங்களுக்கு அறிவிப்பார்கள். 28 - எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும் இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும் வேசித்தனத்திற்கும் நீங்கள் விலகியிருக்கவேண்டும்; இதுவே அல்லாமல் வேறு அதிகமானபாரம் ஒன்றும் உங்கள்மேல் போடாமல் இருக்கும்படிக்கு 29 - பரிசுத்த ஆவியும் நாங்களும் சித்தமா யிருக்கிறோம்" என்று கூறுகின்றது; இவையினாலே நாங்கள் விருத்தசேதனம் செய்யவில்லை என்பீர்கள். நேயர்களே அப்போஸ்தலர்கள் இந்த நியமிப்பை நிலைநாட்டினதற்குக் காரணத்தைக்கேளுங்கள். அதுவோ வெனின்:—



இயேசுநாதர் இஸ்ரவேலர்களுக்குச் சுவிசேஷத்தை விவரித்துக்காட்டியும் அவர்கள் தம்மால் அவருக்கு முந்தின தீர்க்கதரிசிகளை எவ்வாறுகச் செய்தார்களோ அவ்வாறுகவேசெய்ய எத்தனித்தபோதே அந்தப்பெருமானுரினது சீஷர்களாகிய பரமயோக்கியரான இந்த அப்போஸ்தலர்களும், இயேசுநாதரைவிட்டு ஓடிப்போனார்களன்றோ? அந்தக்காலத்திலே பராபரனுனவர் அந்நாயகரைப் பாவிகளாகிய அந்தயூதர்கள் கையில் ஒப்புக்கொடுக்காது வானத்தின்கண் உயர்த்திக் காப்பாற்றுவானுயினுர். பிறகு; இயேசுநாதரைக்கையிழந்த சீஷர்களாகிய அப்போஸ்தலர்கள் ஒன்றுகூடித்தாங்கள் இயேசுநாதருக்குச் செய்ததீங்கை நினைத்துக் கைசேதப்பட்டு அவரது பிரசங்கத்தைப் புதுப்பிப்பான் வேண்டி ஒருசபை நியமித்துக்கொண்டு தங்களுக்குப் பரிசுத்தஆவி இறங்கி விஷயங்களைப் பராபரனுலே அறிவிக்கிறதாகப் பசாசுக்கு உட்பட்டு, அப்பசுஆவியினுலே மயக்கங்கொண்டு, வாயில்வந்ததெல்லாம் புலம்ப ஆரம்பித்துக்கொண்டிருக்குங்காலத்திலே, யூதேயாவிலிருந்து, சிலவேதபாரகர்கள் அந்நியநாடுகளுக்குள் பிரவேசித்து, மோசேயின் வேதப்பிரமாணங்களுக்கே சனங்கள் ஒழுகவேண்டுமென்றும் கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கும் சொப்பனங்காணுகிறவர்களுக்கும் வழிப்பட்டு நரகம்புகவேண்டாமென்றும் பிரசங்கிப்பான் முன்வந்தார்கள். அவர்களோவெனின்; விருத்தசேதனம் செய்யப்படவேண்டும் விவசாரம் செய்யக்கூடாது களவுசெய்யலாகாது, வட்டிவாங்கப்படாது, பொய்ப்பிரமாணம் செய்யலாகாது, செத்தவஸ்துக்கள் தின்னலாகாது, பன்றிமுதலிய அசுத்தமிருகப்பட்சணஞ் செய்யலாகாது, என்பனவாகிய மோசேயின்வேதப்பிரமாணங்களைப் பிரசங்கிக்கலானுர்கள். இதற்கு விரோதமாய் அப்போஸ்தலருடைய சீஷர்களாகிய பவுல், பருனபா என்பவர்கள் பிரசங்கிக்க லானுர்கள்; இந்தக் காரணத்தினுலே, யூதேயா தேசத்தாராகிய வேதபாரகர்களுக்கும், பவுல், பருனபாவென்கிற கிறிஸ்தவ பண்டிதர்களுக்கு மிடையில் மிகுந்த தர்க்கமுண்டாய் யூதேயா தேசத்தாரும்பவுலின்வகையறுக்களும் ஒருமனப்பட்டு விருத்தசேதனம் செய்ய வேண்டுவதில்லையா? என்கிற ஒருவிஷயத்தைமாத்திரம் முதலாகத் தெரிந்துகொள்வோமென்று நிர்ணயித்து, அக்காரியத்தைப்பற்றி அப்போஸ்தலர்களிடத்தில் கேட்கச்சொன்னுர்கள். மேல்கூறிய பவுல், பருனபா என்பவர்கள் பெனீக்கே, சமாரியா நாடுகளின் வழியாய்ப்போய் எருசலேமிலே யுள்ள தங்கள் குருக்களாகிய அப்போஸ்தலருக்கும், மூப்பருக்கும் புறதேசத்

தார் வசப்பட்டிருக்கிற சமாசாரத்தையும் தமக்கிடையில் நேரிட்ட வாக்குவாதத்தையும் அறிவித்து அப்போஸ்தலர்களையும் மூப்பர்களையும் சபையாரையும் சந்தோஷப்படுத்தித் தங்களுக்கு விரோதமாயிருக்கிறவர்களின் விவாவதம் உண்மையானாலும் எதிரிக்குச் சகுனம் தடையாக மூக்கையுடைத்துக் கொண்டான் சிலமா யிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். பிறகு, பரிசேயரின் வகுப்பிலே விசுவாசிகள் சிலர் எழுந்து அந்நியர்களும் விருத்தசேதனம் அடையவேண்டுமென்று மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறிக்கும் உத்திரவனுப்ப வேணுமென்று கேட்டுக் கொண்டார்கள். அந்தப் பரமயோக்கியர்களும் பரமவிசுவாசிகளுமான அப்போஸ்தலர்கள் விருத்தசேதனம் செய்யப்படவேண்டுமா? என்கிற விஷயத்தில் ஆலோசிக்க வேண்டுமென்று சபைகூட்டினார்கள். ஐயோ! அந்தவிஷயத்திற்கு ஆலோசனைகூட வேண்டுமாமே. குபோதிகளாயினும் பிறவிச் செவிடர்களாயினும் அந்த விருத்தசேதனம் செய்கிற விஷயத்தில் என்ன மயக்கங்காண்பார்கள்? ஆராயப்புகுந்தார்களோ அப்போஸ்தலர்கள்? என்று கடாவுவார்களே, ஆராய்ந்தார்களம்மா? அதிலே சில அபோஸ்தலரும் மூப்பரும் சபையாரும் விருத்தசேதனம் செய்யப்படவேண்டுமென்றும் பல அபோஸ்தலர்களும் மூப்பரும் சபையோரும் விருத்தசேதனம் செய்யக்கூடாதென்றுமாகத் தர்க்கம்நேர்ந்தகாலத்திலே, பேதுருவென்கிற முக்கிய அப்போஸ்தலர் எழுந்து! சனங்களே! சகோதரர்களே! புறதேசத்தார் மனம் திரும்பும்படி சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படிக்கும் என்னால் அவர்கள் மனம் திரும்பும்படிக்கும் கர்த்தராகிய பராபரன் உங்களில் ஒருவனாகிய என்னைத் தெரிந்தெடுத்தாரே. இந்த உண்மைப்படியே, பவுல், பருனபா, என்பவர்களுக்கும் கர்த்தர் பரிசுத்த ஆவியிலே தெரியப்படுத்திய உண்மையாகிய விருத்தசேதனம் செய்யவேண்டியதில்லை என்கிற சுவிசேஷத்தை ஏன்மறைக்கவேண்டும்? பூர்வகாலத்தார் கழுத்துகளில் சுமத்தப்பட்ட நுகத்தடியாகிய அநேக வேதக்கட்டளைகளை நம்மைவிட்டு நீக்கியிருக்கிறதான விஷயங்களை நீங்கள் காணவில்லையா? என்றான். ஐயோ இவர், ஒரு இரவையில் இயேசுநாதரை இரண்டாம் சேவல்கூவுகிறதற்குமுன் மூன்றுதரம் மறுத்துக்கூறி அவரை வாயில்வந்தபடி சபித்தவர். ஐயோ? இவருக்குக் கர்த்தர் பிரசன்னமாகி இயேசுநாதர்கூறிய சுவிசேஷங்களையும் பூர்வீகத்தாரால் சொல்லிவந்தவேதகட்டளைகளையும் மாற்றி இவர் நினைத்தபடி செய்யுமாறு உத்தர



விட்டாராமே, இதையும் ஏழைமதியுள்ள நம்நேயர்கள் நம்பி, தாமே பரலோக இராச்சியத்தை யிழந்து போகிறார்கள்; நிற்க — அந்தப்பேதுருபேசி முடிந்தபிறகு யாகோபு என்கிற சீஷர் எழுந்து அவருக்குத்தெரிந்த சில அஞ்ஞானங்களை வெளியிட்டு மனந்திரும்புகிற புறதேசத்தாரைக் கலகப்படுத்த வேண்டாம். அவர்கள் கலகப்படாதபடிக்கு, அவர்கள் பிரியம்போல நடக்கும்படி விடுங்கள். ஆனால் அவர்கள் அசுசிப்படுகிற விக்கிரக போசனங்களுக்கும் வேசித்தனத்திற்கும் நெருக்குண்டு செத்தவைகளுக்கும் இரத்தத்திற்கும் விலகும்படியே அவர்களுக்கு எழுதவேண்டுமென்று எண்ணுகிறேன். பூர்வகால முதற்கொண்டு செப ஆலயங்களில் ஓய்வுநாள் தோறும் மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்பட்டுவருகிறபடியால் பட்டணங்கள்தோறும் அவைகளைப் பிரசித்தம் பண்ணுகிறவர்களும் உண்டே என்று கூறினார். ஐயோ விருத்தசேதனம் செய்யவேண்டுவதில்லை, என்று கூறினவர் மற்றுமொன்று காரியத்தை மாத்திரம் அவர்களுக்கு எழுதவேண்டியது என்று அவருடைய மனதுக்கு என்னென்று தோன்றிற்றோ? அந்த அப்போஸ்தலர் வேதப் பிரமாணங்களை முற்றும் உணராதவரென்று எண்ணப்படுகின்றார். மேலும் அவர் மோசேயின் வேதப்பிரமாணத்தின்பேரில் மிகவெறுப்பும் பொருமையும் கொண்டவராகக் காணப்படுகின்றார். ஐயோ! மோசேயின் வேதப்பிரமாணம் எல்லா செப ஆலயங்களிலும் வாசிக்கப்படுவது அவர் மனதை அறுக்கின்றதுபோலும். அப்படி வாசிக்கப்படுவதினாலே நாமும் அதற்குச்சாட்சியாக விருத்தசேதனம் செய்யவேண்டும். வட்டிவாங்கக்கூடாது, பன்றி தின்னக்கூடாது, பொய் சொல்லக்கூடா தென்பனவாகச் சொல்லுவோமாயின் மோசேயின் கட்டளைகளைத்தானே நாமும் சொல்லுகிறோமென்று புறதேசத்தார் நினைப்பார்களே. அப்பொழுது நமக்கென்ன பெருமையிருக்கிறது? என்று நினைத்து அங்ஙனம் கூறினாரென நன்றாய்த்தெரியவருகிறதே, அவருடைய கட்டளையிலே பொய்சொல்லலா மென்றும் பிறவெல்லாம் நடத்தலாமென்றும் தெரியக்கிடக்கின்றதே.

அது பற்றியே அப்போஸ்தலர்கள் பொய் சொல்ல அஞ்சினார்களில்லைபோலும். நிற்க; இந்தயாகோபு என்கிறசீசர் இவ்வாறுகச்சொன்ன உடனேமற்ற அப்போஸ்தலரும் மூப்பரும் சபையார்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து கனம்பொருந்திய பருசபா எனப்பட்டயூதாவையும் சீலாவையும் அந்தபவுல் பருனபா என்பவருடன் சாட்டிமூன் விருத்த சேதனம் விஷயமாய் விவாதம் உண்டான

அந்தியோகிய (அந்தாக்கியர்) எனப்பட்டதேசத்திற்கு அனுப்ப
வேண்டு மெனக்கருதி அப்பட்டணத்தாருக்குக் கடிதம் எழுதினுர்
கள். அதுமேல்கூறிய கடிதம். அதுவேஇது, அப்போஸ்தலர் 15-ம்
அதிகாரம் "24 - எங்களால் கட்டளைபெருத சிலர் எங்
"களிடத்திலிருந்து புறப்பட்டு நீங்கள் விருத்தசேதனம்
"அடையவேண்டு மென்றும் நியாயப் பிரமாணத்தைக்
"கைகொள்ளவேண்டு மென்றும் சொல்லி இப்படி பட்
"டவார்த்தைகளினுலே உங்களைக் கலக்கப்படுத்தி உங்கள்
"ஆத்துமாக்களைத் தள்ளாடப்பண்ணி இருக்கிறுர்கள் என்
"றுநாங்கள்கேள்வி பட்டபடியினுலே 25 - நாங்கள் தெ
"ரிந்து கொண்டசில மனுசர்களை நம்முடைய கர்த்தரா
"கிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிரா
"ணனையும் விடஎத்தனமாயிருந்தவர்களுமாய் 26.- எங்
"களுக்கும் பிரியமானவருமாய் இருக்கிற பருணபாவோ
"டும் பவுலோடும் கூடவுங்களிடத்திற்கு அனுப்பவேண்டு
"மென்று ஒருமனப்பட்டு யோசனை பண்ணிக்கொண்டு
"27 - அந்தப்படியே யூதாவையும் சீலாவையும் அனுப்பு
"கிறேம் அவர்களும் இவைகளை வாக்கினுலே உங்களுக்கு
"அறிவிப்பார்கள். 28 - விக்கிரகங்களுக்குப் படைத்தவை
"களுக்கும், இரத்தத்திற்கும் நெருக்குண்டுசெத்தத் திற்
"கும் வேசித்தனத்திற்கும் நீங்கள் விலகியிருக்கவேண்
"டும். இதுவே அல்லாமல் வேறு அதிகமான பாரம் ஒன்
"றும் உங்கள்மேல் போடாதபடிக்கு 29 - பரிசுத்த ஆவி
"யும் நாங்களும் சித்தமாயிருக்கின்றேம்" என்று பொட்
டிமக்களாகிய அப்போஸ்தலர்கள் எழுதினுர்கள். இந்தக்கடிதத்தை
யன்றே! எமதுநேயர்கள் விருத்தசேதனம் செய்யாமைக்குக் கார
ணமாகக் கூறவேண்டும்? இது உங்களுக்கே சமாதானமாகுமா?
இதோபாருங்கள், வேதப்பிரமாணங்களில் ஒன்றையாவது கடந்து
நடந்தவன் வேதப்பிரமாணம் எல்லாவற்றையும் கடந்து நடந்தவ
னேயாகுவன்; ஏனென்றுல் விவசாரம் செய்யவேண்டாமென்றவர்
தானேகொலை செய்யவேண்டா மென்றவர், கொலைசெய்ய வேண்
டாமென்ற வர்தானே பொய் சொல்லாயாகவென்றுர், அவர் தா



னேவட்டிவாங்க வேண்டாமென்றுர், அவர் தானேவிருத்தசேத
னம் செய்யவேண்டுமென்றுர், அவர் தானே பொய்யாணை விடா
யாகவென்றுர், அவர்தானே நெருக்குண்டு செத்தவைகளைத் தின்ன
வேண்டாமென்றுர், அவர்தானே இரத்தத்தைப் புசியாயாக வென்
றுர்; ஐயோ அப்போஸ்தலர்கள் மார்க்கத்தைக் கெடுத்தவர்களென்
று ஏன் சொல்லமாட்டீர்கள்? அவர்கள் வாக்கியங்கள் உங்களுக்குப்
பொருத்தினதாறு? இப்படி அப்போஸ்தலர்கள், இயேசுநாதரின்
உத்தரவை மறந்துச் சாத்தானுடைய வழியில் நடப்பார்களென்று
தீர்க்கதரிசனத்தினுலே அறிந்தபிறகுதான், இயேசுநாதர் "நான்
"இவரைப் பரலோக இராச்சியத்தில் மறுத்துவிடுவேன்.
"அவர்களை என்னுடைய சீசர்களுமல்லவென்றும் சாத்தா
"னே என்முன்னுல் நிற்காதே என்றும் சொல்லுவேன்"
என்றும் சொல்லிருர் போதும். பேயர்களே! வேதப்பிர மாணங்
களுக்குமாருகத் தீர்க்கதரிசியானுலும் சொல்லுவர்களேல் அதைநம்
பவேண்டாம். அந்தத் தீர்க்கதிரிசிகள் உங்களுக்கு அற்புதங்களைக்
காட்டினுலும், அந்த அற்புதமோவெனின்; உங்களை உங்கள்விசுவா
சத்திலிருந்து சோதனை செய்வதற்காகப் பராபரன் அப்படி செய்
வாரென்று நீங்கள் வாசிக்கவில்லையா? ஐயோஅப்படியாகவாவது
அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகளுமல்லவே. அவர்க ளெல்லாரும்
இயேசுநாதரால் சபிக்கப்பட்டவரன்றே? அந்தவிவரம் முன்னரேக்
கூறினேம். நிற்க. இதோ 5-ம் மோசே 13-ம் அதிகாரமோ
வெனில் "1 - உன்நடுவே ஒருதீர்க்கதரிசி, அல்லது சொப்
"பனக்காரன் எழும்பி 2- நீ அறியாதிருக்கிற வேறே
"தேவர்களை நாம்பின்பற்றிப்போய் அவைகளைச் சேவிப்
"போம் வாருங்களென்று சொல்லி உனக்கு ஒரு அடை
"யாளத்தையும் அற்புதத்தையும் காண்பித்தாலும், அவன்
"உன்னேடே சொன்ன அடையாளமும் அற்புதமும்
"வந்தாலும் 3 - அந்தத் தீர்க்கதரிசி அல்லது சொப்
"பனக்காரன் சொல்லுகிறவைகளைக் கேளாயாக; ஏனெ
"னில் உங்கள்பராபரனுகிய கர்த்தரை நீங்கள் உங்கள்முழு
"இருதயத்தாலும் உங்கள்முழு ஆத்துமாவினுலும் சிநே
"கிக்கிறவர்களோ வென்று அறிய உங்கள் பராபரனுகிய
"கர்த்தர் உங்களைச்சோதிக்கிறுர். 4 - நீங்கள் உங்கள் பர

"பராபரனாகிய கர்த்தரையே பின்பற்றி அவருக்கு பயந்து
"அவர் கற்பனைகளைக் கைக்கொண்டு அவர் சத்தத்தைக்
"கேட்டு அவரைச் சேவித்து அவரை ஒட்டிக்கொள்வீர்
"களாக" என்று பராபரன் மோசேயோடு கூறினதாக நன்கு
விளங்குகின்றதன்றோ? இதனாலே வேதப்பிரமாணங்களுக்கு மாறு
கக் கூறுகிற எப்படிப்பட்டவனின் வாக்கியங்களுக்கும் செவிகொடுக்
கக் கூடாதென்றும் அவன் அற்புதங்களை நம்பக் கூடாதென்றும்
ஏற்படவில்லையா?

இப்படியிருக்க ஆபிரகாமோடே செய்யப்பட்டும் மார்க்கத்
தில் முதன்மையாக எல்லாத் தீர்க்கதரிசிகளாலும் சொல்லப்பட்
டும் செய்யப்பட்டும் வருகின்ற சுன்னத்துச் செய்தல் முதலிய
முக்கிய காரியங்களை வேண்டாமென மறுப்பவர்கள் கண்டிப்பா
ய்க் கொலை குற்றத்திற்கு அருகராகவில்லையா? அப்படி கொலை
செய்யப்படவேண்டிய குற்றவாளிகளின் வார்த்தையை நம்பி பர
லோக இராச்சியகாரிய விசயத்தில் தலையிடலாமா? இதோ எரே
மியா 23-ம் அதிகாரம் "21 - தீர்க்கதரிசிகளை நாம் அனு
"ப்பா திருந்தும் அவர்கள் ஓடினார்கள். அவர்களோ
"டே நாம் பேசாதிருந்தும் அவர்கள் தீர்க்கதரிசனம்
"சொன்னார்கள். 22 - அவர்கள் நமது ஆலோசனையிலே
"நிலைத்திருந்தார்களே யாகில் அப்போது அவர்கள் நம்
"முடைய வார்த்தைகளை சனத்துக்குக் கேட்கப்பண்ணி
"இவர்களைத் தங்கள் பொல்லாத வழிகளையும் தங்கள் செய்
"கைகளின் பொல்லாப்பையும் விட்டுத்திரும்புவார்கள்.
"25 - சொப்பனங் கண்டேன் சொப்பனங் கண்டேனெ
"ன்று நம்முடைய நாமத்தைச் சொல்லிப் பொய்யாய்த்
"தீர்க்கதரிசனம் உரைக்கிற தீர்க்கதரிசிகள் சொல்லுகி
"றதைக் கேட்டோம். 28 சொப்பனமுள்ள தீர்க்கதரிசி
"சொப்பனத்தை விவரிப்பானாக. நம்முடைய வார்த்தை
"யுள்ளவனோ நம்முடைய வார்த்தையை உண்மையாகச்
"சொல்லுவானாக. 29 - நம்முடைய வார்த்தை அக்கினி
"யைப் போலவும் கன்மலையை நொறுக்கும் சம்மட்டி
"யைப் போலவும் இருக்கவில்லையோ என்று கர்த்தர்



"சொல்லுகிறார். 32 - இதோ பொய்ச் சொப்பனங்களைத்
"தீர்க்கதரிசனமாகச் சொல்லி அவைகளை விவரித்து
"நமது சனத்தைத் தங்கள் பொய்களினாலும் தங்கள்
"கேளிக்கைகளினாலும் மோசம் போக்கிறவர்களுக்கு நாம்
"விரோதமானவரென்று கர்த்தர் சொல்லுகிறார். நாம்
"அவர்களை அனுப்பினது மில்லை; அவர்களுக்குக் கற்
"பித்ததுமில்லை; அவர்கள் இந்தச் சனத்துக்கு ஒரு பிர
"யோசனமாயிருக்கிறது மில்லை என்று கர்த்தர் சொல்
"லுகிறார்" என்று வெகுதெளிவாய்க் கூறுகின்றதே. இதனா
லும் பொய்ச் சொப்பனக்காரன் பராபரனது உத்தரவுபடி சொல்
லமாட்டாதவன் என்பது ஏற்படவில்லையோ? சொப்பனங் கண்ட
தாகத்தானே அப்போஸ்தலர்கள் சொல்லுகிறார். அல்ல துபரி
சுத்த ஆவி தமக்குச் சொல்லுகிறதென்று சொல்லுகிறார்கள். அந்த
ஆவிபரிசுத்த ஆவியோ அசுத்த ஆவியோ நீவீர்கள் எப்படி அறி
வீர்கள்?

ஆனால் பராபரனது கற்பனைக்குமாறாகச் சொல்லுவதினாலே
அசுத்த ஆவியென்று பிரமாணமிட்டுச் சொல்லுதற்கு வேதப்பிரமா
ணங்களே சாட்சியாயிருக்கின்றனவென்பது பரீஷ்காரமே. இதோ
கொலோசியர், 2-அதிகாரம் "8 - கிறிஸ்துவின்படியல்ல, மனி
"தருடைய பாரம்பரை நியாயத்தின்படியேயும், உலகத்
"தினுள்ள சிறுமையான வழிபாடுகள்படியேயு மானவீணு
"மாய் வஞ்சனையுமாய் இருக்கிற கல்வியினாலே ஒருவ
"னும் உங்களைக்கொள்ளை இடாதபடிக்குப் பாருங்கள்"
என்று கூறுகின்றது. ஆகவே வேதப்பிரமாணத்தின்படியே நடக்
கவேண்டியதென்று காணப்படுகின்றதன்றோ? இதோ மத்தேயு 7-ம்
அதிகாரம் "15-ஆட்டைப்போல் உருவமும்பீறுகிற ஓநாய்
"களைப்போல மனதும் உடையவர்களாய் உங்களிடத்திற்
"குவருகிற கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு நீங்கள் இடங்
"கொடாமல் எச்சரிக்கையா யிருங்கள் 16 - அவர்களு
"டைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள், முட்செடி
"களில் திராட்சப்பழங்களையும் முட்பூண்டுகளில் அத்
"திப்பழங்களையும் பறிக்கிறார்களா? 17 - அப்படியே நல்

" லமரங்களெல்லாம் நல்ல கனிகளைக்கொடுக்கும் கெட்
" டமரம் பொல்லாதக்கனிகளைக் கொடுக்கும் 18 - நல்லம
" ரம் பொல்லாதகனிகளையும் கெட்டமரம் நல்ல கனிகளை
" யும் கொடுக்கமாட்டாது " என்று இயேசுநாதர்தாமே கூறின
தாகக் கூறுகின்றதே. மோசேயின் வேதப்பிரமாணங்களுக்கு மாறு
கச்சொல்லுகிறவர்கள், பார்வைக்கு நல்ல உபதேசம் செய்கிறவர்க
ளைபோல் காண்பித்து நரகவேதனைக்கு ஆளாகுமாறு, வேதக்கட்
டளைகளை மாற்றிக் கூறுகிறபடியினாலே அவர்களுக்கு ஆடும், ஓநாயும்
உவமையாயிற்று. ஐயோ நல்லமரம் கெட்டகனியைக்கொடுக்காது
அப்படியே பொல்லாதமரம் நல்ல கனியைக்கொடுக்காதென்பதை
உங்களுக்கு பெருமானுர் உவமை காண்பித்ததெல்லாம் கெட்ட
சுபாவம் படைத்த தமது சீஷர்களினாலே நல்ல உபதேசம் பெற
மாட்டார்கள். அவர்களால் பெறப்படுவது, பொல்லாத தாகவே
இருக்குமென்பதைக் கூறினரென்பது உங்களுக்கு ஏன்மறையுமோ?

அந்தோ சீஷர்களை நன்னடத்தையுடையவரென்று நீங்கள் சொல்லுவீர்களா? அவர்கள் தத்தம் உயிரை இயேசுநாதரின் மஹா உன்னதமான உயிரைப்பார்க்கிலும் அருமையாக நினைத்தன்றோ அவர்கள் இயேசுநாதருக்குக் கொடுத்தபிரமாணத்தை உடனேமுறித்து அவரைவிட்டு ஓட்டம்பிடித்தார்கள்? ஐயோ ஆச்சரியமே! இப்படியாக, இயேசுவைக் காட்டிக்கொடுத்து ஓட்டம்பிடித்த கொடியமனிதரைப்போல் உலகத்தில் யாரைத்தான் சொல்லலாம். அந்தோ இயேசுநாதரைக் கொலைசெய்தவர்களைக்கூட இவரைப்பார்க்கிலும் கொடியவரென்று சொல்லமுடியாது; அவர்கள், இயேசுநாதரைப் பொய்யரென்று எண்ணினர்களே ஒழிய உண்மையில் அந்தப்பெருமானுரை மெய்யரென்று அறிந்தார்களில்லை; சீஷர்களோவெனில் இயேசுநாதருடன் கலந்தும் ஒருபாத்திரத்தில் உண்டும் ஒருவிரிப்பில் உறங்கியும் அவருடைய இரகசியம் பராபரம் எல்லாம் உணர்ந்தும், உயிரோடு உடலாய்க் கலந்திருந்தும் அவருக்கு ஆபத்துவருமென்பதையும் அவராலே நன்றாய்த்தெரிந்தும் அப்படிப்பட்டவேளையில் இயேசுநாதரின் மனவிருப்பத்திற்கு மாறாக சாத்தானாலே, கலையுண்டு சாத்தானுக்குச்செவிசாய்த்து, ஓட்டம்பிடித்தவனும், இயேசுவைத்திட்டினவனும், அவரைப் பகைவருக்கு ஒப்புக்கொடுத்தவனுமாகிய மனுஷன் கெட்டகனிகளைக்கொடுக்கும் மரத்திற்கு ஏன் ஒப்பாகான்? இயேசுவோவெனில் உவமையாகவே பேசுகிறவர் என்



கிற வேதவாக்கியங்களை நீங்கள் உணரவில்லையா? மத்தே 13 - ம் அதிகாரத்திலும் மாற்கு 4 - ம் அதிகாரத்திலும் காண்க. மத்தே 24 - ம் அதிகாரம்
"35 - வானங்களும் பூமியும் ஒழிந்து
" போம். என்வசனங்களோ ஒழியாதிருக்கும்" என்று கிறிஸ்துநாதர்சொல்லிய சம்பிரதாயமும் தீர்க்கதரிசனமுமாகிய இந்தவார்த்தை ஒருக்காலும் பொய்யாகுமா? இல்லை என்றால் வானமும் பூமியும் ஒழிந்தாலும் வேதகட்டளையின் ஒரு அட்சரமாவது ஒழியாதென்று சொன்ன இயேசுவின் வார்த்தை ஒழியுமா? ஒழியாதென்றால், எப்படி இயேசுவின் சீஷர்களென்கிற அப்போஸ்தலர்கள், வேதக்கட்டளைகளை மாற்றி வேறுவிதி கூறுவதை நீங்கள் வேதக்கட்டளை என்று எண்ணுவீர்கள்? எண்ணமாட்டோமென்பீர்களேல் உடனே உங்கள் மாம்சத்தின் நித்திய உடன்படிக்கையின் அறிகுறியாக இருக்கும்படி நுனித்தோல்களின் மாம்சத்தைச் சுன்னத்து செய்யுங்கள். மற்றுமுள்ள எல்லாகற்பனைகளையும் கைக்கொள்ளுங்கள். இயேசுவை விசுவாசிப்பதே சுன்னத்தென்றும் வேதகட்டளை என்றும் சொல்லுவதுமன்றி, அவர்சொன்ன கட்டளைகளை எல்லாம் புறம்பேதள்ளி நாம் அவரை விசுவாசிக்கின்றோம் என்று சொல்லுகிற பேதையே! உன்தகப்பன் உன்னை இன்னின்னவேலை செய்வாயானால் நீ எனக்கு உவப்பாயிருக்கிறகுமாரனுயிருப்பாய் என்று சொன்னால் அவரின்வாக்கியத்தின்படி ஒழுகினாலல்லவா நீ அவரை விசுவாசிக்கிறவனுவாய்? அவரின் வாக்கியங்களைப் புறம்பேதள்ளிவிட்டு நான் என்தந்தையை விசுவாசிக்கிறேன் அவர் எனக்கு எல்லாநன்மையையும் செய்வார் என்று நம்பலாமா? (196 A) அப்போஸ்தலரின் வாக்கியம், ஒருபோதும் நம்புதற்கு அருகமான தென்று நம்பவே கூடாதென்பதற்கு இயேசுநாதரின் ஒரு வேதவாக்கியத்தை உங்களுக்கு எடுத்துக்காட்டுகின்றேன். தயைசெய்து கவனியுங்கள்.

இதோ யோவான் 15 - ம் அதிகாரம் "1 - நான் மெய்
" யான திராட்சச்செடி, என்பிதா திராட்சத்தோட்டக்
" காரன் 2 - என்னில் கனிகொடாதிருக்கிறகொடி எதுவோ
" அதை அவர் எடுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிறகொ
" டி அதிக கனிகளைக்கொடுக்கும்படிக்கு அதைச் சுத்தம்
" பண்ணுகிறார். 3 - நான் உங்களுக்குச்சொன்ன உபதே

"சத்தினாலே நீங்கள் இப்பொழுது சுத்தமா யிருக்கிறீர் "கள். 4 - என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் "நிலைத்திருப்பேன்; கொடியானது திராட்சச்செடியிலே "நிலைத்திராவிட்டால், அது தன்னாலே கனிகொடுக்கமாட் "டாததுபோல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் "கனிகொடுக்கமாட்டீர்கள், 5 - நானே திராட்சச்செடி "நீங்கள் கொடிகள், என்னையன்றி உங்களால் ஒன்றும் "செய்யக்கூடாதபடியினாலே என்னிடத்தில் நிலைகொண் "டும் நான் நிலைகொள்ளப்பட்டும் இருக்கிறவன் மிகுந்த "கனிகளைக்கொடுப்பான். 6 - ஒருவன் என்னில் நிலைத்தி "ராவிட்டால் அவன் உலர்ந்துபோன கொடியைப்போல் "வெளியே போடப்படுவான்" என்று கூறுகின்றது. இதனாலே சீஷர்கள் உலர்ந்தகொடியைப்போன்று தள்ளப்பட்டவர்களென்று நீங்கள் ஏன் சொல்லமாட்டீர்கள்? இயேசுநாதர் சொன்னபடி சீஷர்கள், அவரில் நிலைத்திருந்தார்களா? நிலைத்திருக்கவில்லையே. ஐயோ! ஒரு இராவையில் இரண்டாந்தரம் சேவல்கூவுதற்கு முன்னே மூன்றுதரம், இயேசுநாதரை மறுத்துக்கூறி வாயில்வந்தபடி திட்டினவர் பேதுருவென்கிற தன்மையல்லவா? இயேசுநாதர் சொன்னபடி அவர், இயேசுநாதரில் தரித்திருந்தால், அவர் இயேசுநாதரை அப்படி மறுத்துக்கூறுவாரா? அப்படிப்பட்டவர் சுன்னத்தைமறுத்து வேறுவிதிக்கூறினால் நீவீர்கள் அவரைச்சார்ந்து நடக்கலாமா? இயேசுவாகிய திராட்சச்செடியிலே, சீஷர்களாகிய கொடிகள் நிலைத்திருந்தனவா? எல்லாம் ஒருங்கே செடியினின்று நீங்கிவிடவில்லையா? நீங்கள் தயவுசெய்து கவனித்துப் பொறுமையின்றி நடுமனத்தினராக நோக்கிடுவீர்களானால் அப்போஸ்தலர்கள் முற்றிலும் சாத்தானாலேமருட்டப் பட்டுப் போயினவர்களென்று நன்றாய் அறிவீர்கள். ஆகையால் நீவீர்கள் இப்பொழுது ஒழுகிவரு முறைகள் இயேசுவினாலே கட்டளையிடப் பட்டவைகளென்பதற்கு ஆதாரமாக முன்னையவேதக் கட்டளைகளில் சொல்லப்பட்ட வேதவாக்கியங்களைக் காண்பிக்காமலிருக்கிற வரையிலும் சாத்தானைப் பின்பற்றினவர்களாகவே எண்ணப்படுவீர்கள். ஆகவேமுன்னைய வேதவாக்கியங்களுக்கு மாறுகாரியங்கள் சொப்பனங் கண்டோம். அல்லதுபரிசுத்த ஆவியினாலே சொல்லப்பட்டோம், கிறிஸ்துநாதர்



எங்களுக்குப்பிரசன்னமாகிச் சொல்லினார் என்பனவாகக் கூறும் உங்கள்வார்த்தைகள் நம்பிக்கைக்கு ஒரு அணுத்துணையும் அருகமாகாது; அவையெல்லாம் சாத்தானாகிய ஆவியின்மகிமை என்றேசொல்லப்படும், இயேசுவின் சமுகத்திலேயேசீசர்கள் இருக்கும்போது அவர்களைச் சாத்தான்கலைத்துவிட்டான். அப்படிப்பட்ட சாத்தான் ஒழிந்துபோனானோ? இல்லையே, அப்படியிருக்க, வேதவாக்கியங்களுக்குமாறுகச் சொல்லுவதெல்லாம் சாத்தானின் வழிக்கேடான வாக்கியங்களென்றற்குயாதுதடை? ஆகவேஎமது கிறிஸ்துவநேயர்காள்! நீவீர்கள் மோசேயின்வேதப்பிரமாணங்களை அநுசரிக்கக் கடவீர்கள். அப்படி அநுசரிக்கக்கடமை பட்டவர்களோவெனின்; இஸ்ரவேல் குடும்பத்தார்மாத்திரமே: இப்பொழுதோவெனில்; இஸ்ரவேல்குடும் பத்தார் உட்படவனைய குடும்பத்தார்களாகியமனுசஜாதிகளும் ஜின்களாகிய ஒருவகைசாதியும் இரட்சிக் கப்படும்படியாக சர்வாதிகாரம் படைத்திராநிற்கும் ஒப்பற்ற இரட்சகரைக்கைக்கொள்ளக்கடவேமாக அப்படியாகக்கண்டு உடன்படுபவரே பாக்கியவான்கள். ஆமென்.

## விகற்பம்.

இது இந்நூலின் முறைபடக்கூறிய படலங்களுக்கு அமையாதனவற்றை ஒருங்கமைத்து எடுத்துக் கூறுகின்றது.

நேயன்மீர்! தீர்க்கதரிசிகளெனப்படுவோர், சாமானியமனிதர்களைப்போலார்கள். விசேஷத்துவத்தையும் மதித்தற்குரிய பெருமையும் பராபரனாலே நிரம்பவுமடைந்த சிறப்புயர்ந்த ஆதர்களென நாம், நம்முடையமுழு இருதயத்தினாலேயும் முழு ஆத்துமாவினாலேயும் நம்பவேண்டும் - ஆகவே நாம் அவர்களை, அணுத்துணையாயினும் மரியாதை குறைவான வார்த்தைகளாலே அவர்களை வழுக்கவும், நினைக்கவும் கூடாதென்பது நன்குபுலப்படுமன்றோ?

இதோ! அற்பகாலசுக சம்பந்தமான, கேவலம், இத்தவுலக காரியார்த்தமான, அதிகாரிகளாகிய அரசர்களையும், அவர்களது வேலைக்காரர்களையும் நாம், அவ்வவர்களுக் குத்தக்க மரியாதையின் வரம்பைக் காண்பிக்குமாறு அவர்களின் பெயருக்குமுன்னாகபின்னாக, "ஹிஸ்மாஜஸ்டீ" "ஹிஸ்ஹைனஸ்" "லார்ட்டுசிப்" "ஹானரபல்" "இஸ்கோயர்" "மிஸ்டர்" என்றவார்த்தைக

னோம் உபயோகிக்கவேண்டுமென்று ஏற்படுத்திக்கொண்டிருப்பது உங்களுடைய கன்னங்களுக்கு முன்னுசிதமையுமா? அப்படியிருக்க, நித்தியஜீவனுள்ளபரலோக இராச்சியகாரியாதி சாரிசனாக சர்வராயகருயியபாராபரனுலே அனுப்பப்பட்டதூதர்களான தீர்க்கதரிசிகளின் நாமங்களைநாம் நம்முடையவாயினுலே சொல்லும்போது அந்தப் பரிசுத்தமான நாமங்களுக்கு முன்னுகபின்னுக எப்படிப்பட்டமரியாதை குறிக்கும் வாக்கியங்களை நாமுபயோகிக்கவேண்டும் என்பதை நாம்கவனமின்றிக் கையிழந்தவர்களாக வாயில் வந்தபடி சொல்லமுன்வரலாமா? அப்படியாக, நாம் காணப்படுவோமாயின் ஜீவனில்லாத உலககாரிய விசயத்தில் நாமெவ்வளவு நாகரீகம் படைத்தோமோ அவ்வளவாக நித்திய ஜீவனுள்ளபரலோக இராச்சிய விசயத்தில் நாகரீகம்படைத் தேடுவோம் என்றியாவர் தான் சொல்லமுன் வரமாட்டார்? ஆகவே நேயர்காள்! சற்றுகவனியுங்கள். நீங்கள் தீர்க்கதரிசிகளின் நாமங்களை உபயோகிக்கும்போதும் அவர்களின் பரிசுத்த நாமங்களுக்கு முன்னுகப்பின்னுக என்னமரியாதை வார்த்தைகளை உபயோகிக்கின்றீர்கள்? ஆதாம், சொன்னுன், நோவாசெய்தான் ஆபிரகாம் வந்தான், இசாக்குபோனுன், மோசேஎழுதினுன், ஏசாயாஉண்டானன், என்பனவாகத்தானே சொல்லுகிறீர்கள்? ஐயோ! உங்கள் பிள்ளையாள்களென்று அல்லது தோட்டிகளென்று அந்தப்பரிசுத்தவான்களை நினைக்கின்றீர்கள்? மணியக்காரர் கணக்கர்களின் நாமங்களுக்குமுன்னுக "மிஸ்டர் நாயினைர்" "சோணுர்" "மிஸ்டர்ஆறோக்கியசாமி வந்தார்" என்கின்றீர்களே உங்களுக்கு அறிவில்லையா?

ஐயன்மீர்! உங்கள் மறைநூல் ஏற்பாடு புதிய ஏற்பாடு என்னும் வேதபுஸ்தகங்களிலே, இயேசுநாதருக்கு மாத்திரம் மரியாதைப்பன்மையொழித்து இயேசு சொன்னார், கிறிஸ்து நாதர்வந்தார், என்று தமிழ் விதிக்கேற்றபடிநாதர் என்றபதமும், ஆர் என்றமரியாதைவிகுதியும் கொடுத்துத்தமிழ் மொழிப்பெயர்த்தபாதிரியாருக்கு மற்றத் தீர்க்கதரிசிகளின் நாமங்களையும், அவ்வாறு எழுதி உங்கள் நாக்கையும், வாய்களையும் பேசவிட்டாமத்த அறிவில்லையோ? அல்லது அவருக்கு மயக்கமோ என்னகாரணமென்பீர்கள்? அல்லது வேதபாஷையாகியஹிப்ருபாஷையில் மரியாதைப் பன்மையில்லாமையாயிருந்ததுபோல, தமிழிலும் மொழி பெயர்த்தார் என்பீர்களென்றால். அங்ஙனமாயின் இயேசுநாதருக்கு மாத்திரம் ஹீப்ருபா



ஷையில் மரியாதைப்பன்மையில் எழுதப்பட்டு அந்தப்படி தமிழிலும் மொழிப்பெயர்த்தாரோ என்று கடாயினுல் என்னசொல்லுவீர்கள்? இதோபாருங்கள் ஒரு அரசனுல் அனுப்பிக்கப் பட்டதூதுவன்மரியாதிக்கப்பட்டால் அவனை அனுப்பின அரசன்தானேமரியாதிக்கப் பட்டதாகவல்லவாமுடியும்? அப்படி அந்தத்தூதுவன் மரியாதிக்கப்படாவிட்டால் அவனை அனுப்பின அரசனன்றே மரியாதிக்கப்படவில்லை என்பீர்கள்? விசயம் அவ்வாறுக, ஒப்பற்ற உன்னதத்திலிருக்கிற பராபரனுலே அனுப்பப்பட்டதூதர்களான தீர்க்கதரிசிகள் உங்களால் மரியாதிக்கப்பட்டால் அவரை அனுப்பிய பராபரனே, மரியாதிக்கப் படுகிறுரென்றும் அவர்கள் உங்களால், மரியாதிக்கப்படா விட்டால் அவரை அனுப்பினபரா பரன்மரியாதிக் கப்படவில்லை என்றும் முடியுமென்பது உங்களுக்குச் சொல்லாமலே தெரியவேண்டியது அவசியமே. அங்ஙனம் தெரிவீர்களானுல் உங்களால் தீர்க்கதரிசிகள் மரியாதிக்கப் படாமையினுலே பராபரனை நீங்கள் விசுவாசிக்கவில்லை என்பது பரிஷ்காரப்படும், படவே, நீங்கள் பரலோக இராச்சியத்தை அடைவதில்லை என்பதை நம்புவீர்கள். நேயர்காள்! பராபரனுலே அனுப்பப்பட்டதூதர்களாகிய எல்லாத்தீர்க்கதரிசிகளும், நம்முடையமுழு இருதயத்தாலும் விசுவாசிக்கப் படவேண்டியவர்களாயின்றுர்களே; அப்படிநேசித்த பொருதன்றே? நாம் நம்முடையமுழு இருதயத்தாலும் பராபரனை நேசித்தவர்களாகின்றேம்? நாம் தீர்க்கதரிசிகளில் சிலரைச் சிலரைக் கனத்தாழ்த்தி உயர்த்தியாச்சி னேசிக்கக்கூடாதென்பதும் ஞாபகத்தில் வைக்கவேண்டியதே. விசயம் இப்படியிருக்க நீவீர்கள், எப்படி தீர்க்க தரிசிகளைக்கன ஹீனமாய்வந்தான் என்றும் போனுன் என்றும் வழங்குகின்றீர்களோ? ஆ! பாபிகாள்! அங்ஙனமாக வழங்காதீர்கள். அப்பொழுது நீவீர்கள் பாக்கியவான்களே. நேயர்காள்! தீர்க்க தரிசிகள் எப்படிநம்மால் கனப் பண்ணப் படவேண்டியவர்களென்றால்; அவர்கள், ஒருபோதும் பொய்ச் சொல்லார்கள், பராபரனும் அவர்கள் எதைக் கேட்டார்களோ அதைநமக்குச் சொல்கிறபரம விசுவாசிகள் தமது சுயநலம் ஒருபோதும் நினைக்கார்கள். பரிசுத்தமானவர்கள் தங்களை யுள்ளவர்கள் ஒரு இமைப் பொழுதாயினும் பராபரச் சிந்தனை நீங்கப் பிரிந்துள்ளவர்கள். காதவர்கள் தமது சனங்கள்போல் நீங்காதப் பிரிந்துள்ளவர்கள். பராபரனது ஞானசொரூபத்தையெப்பொழுதும் சேர்க்கருள்ள

வர்கள். பராபரனது ஞாயப்பிரமாணத்தையேயன்றிக் கேளாத செவியுள்ளவர்கள். பராபரனது துதியேயன்றிப் பேசாதநாவுள்ளவர்கள். பராபரனது கிரியைகளேயன்றிச் செய்யாதகைகளையுடையவர்கள். பராபரனது ஊழியத்திற்கேயன்றி நடவாதகால்களையுடையவர்கள். இவ்வண்ணமெல்லாம் நிரம்பியசுகுணங்களெல்லாம் உடையவர்களாகவே படைக்கப்பட்டிருந்தார்களென்றுதானே, நாம் விசுவாசிக்கவேண்டும்? மேலும் அவர்கள் பொதுவாக பெரியவர், சிறியவர்எல்லாருக்குமே, பொய்சொல்லக்கூடாதென்று விலக்குபவராயிருந்தார்கள். பொய்யே, உலகத்தில் பொல்லாங்கான அருவருப்புகளுக்கு வேறுவானதாகக் கண்டார்கள். அவர்களின்குணங்களைப்புகழ்ந்து சாதுரியமுள்ள எல்லாமனிதர்களுக்கும் ஒருவிசேஷ அற்புதமாகக் காணப்பட்டன. ஆகவே எமதுநேயர்கள் தீர்க்கதரிசிகளைக் கேவலமாய்ப் பேசுவதையும் நினைப்பதையும் இனி விட்டுவிடுவார்களென்று உண்மையாகவே நம்புகின்றோம்; இங்ஙனமாக விசுவாசிப்பதினாலே, விசுவாசிக்கப்பட்டவர் உண்மையில் பராபரன் ஒருவரே என்பது முடிபுமாயிற்று.

நிற்க; நேயர்காள்! இயேசுநாதரும் மற்றும் அவருக்கு முன்னேவந்துபோன தீர்க்கதரிசிகளும் உலகத்திலே சமாதானத்தை நிலைநாட்டவும் பராபரனுக்கு அருவருப்பான பொல்லாங்குகளை நிவாரணம் செய்யவும் பாவங்களை நிர்மூலம் செய்யவுமே பராபரனாலே அனுப்பப்பட்டார்கள் என்பதில் உங்களுக்கு ஏதாவது விவாதம் உண்டா? இல்லை, என்பீர்களன்றோ? நேயர்காள், யாம், இதுகாறும் கூறிவந்தவைகளை உண்மையாக்குமாறு பொதுவாக உங்களுக்கு ஒருவேதவாக்கியத்தைக் காண்பிக்கிறோம், இதோ மத்தேயு 9-ம் அதிகார மொழிவினில் "2 - அங்கே படுக்கையின்மேல் கிடந்த
"திமிர்வாதக்காரனை அவனிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்,
"இயேசுவானவர் அவர்களுடைய விசுவாசத்தைக்கண்டு
"திமிர்வாதக்காரனை நோக்கி மகனே திடமாயிரு உன்
"பாவங்கள் மன்னிக்கப்பட்டன என்றார், 3 - அங்கேயி
"ருந்த வேதபாரகரில் சிலர், இவன் தேவதூஷணம் சொல்
"லுகிறான் என்று எண்ணிக்கொண்டார்கள் 4 - இயேசு
"வானவர் அவர்களின் நினைவுகளை அறிந்து நீங்கள் உங்
"கள் இருதயங்களில் பொல்லாங்கானவைகளை நினைக்கிற



"தென்ன 5 - உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டனவென்று
"சொல்லுகிறதோ எழுந்திருந்து நடவென்று சொல்லுகி
"றதோ, எது எளிது? 6 - மனிதனுடைய குமாரன் பூமி
"யியில் பாவங்களை மன்னிக்கிறதற்கு அதிகாரமுடைய
"வன் என்பதை நீங்கள் அறியும்படிக்கு அவர் திமிர்வா
"தக்காரனை நோக்கி நீ எழுந்திருந்து உன் படுக்கையை
"எடுத்துக்கொண்டு உன் வீட்டுக்குப்போ என்றார் 7 - உட
"னே அவன் எழுந்து தன் வீட்டுக்குப்போனான் 8 - அதை
"க்கண்ட சனங்கள் ஆச்சரியப்பட்டு, மனிதருக்கு இப்ப
"டிப்பட்ட அதிகாரத்தைக் கொடுத்த பராபரனைப் புகழ்ந்
"தார்கள்" என்று கூறுகின்றது. இதற்கு, மாற்கு 2-ம் அதிகாரமும் லூக்கா 5-ம் அதிகாரமும் சான்றாயிருக்கின்றன. இவைகளிலே, இயேசுவானவர், பூமியில் பாவங்களை மன்னிக்க அதிகாரம் பெற்றவரென்றும் அவர்செய்த அற்புதத்தினால், அவரையல்ல மனிதனாகிய அவருக்கு இப்படிப்பட்டமகத்துவத்தைக் கொடுத்த பராபரனை அந்தச்சனங்கள் புகழ்ந்தார்களென்றும், இயேசுவை, மனிதனென்றே கண்டார்களென்றும் பரிஷ்காரமாய்த் தோற்றுகின்றதல்லவா? இயேசுவைப் பராபரப்பிள்ளை என்று நினைத்தால் அந்தச்சனங்கள் ஒரு வியப்பும் அடையவேண்டுவதில்லை. தேவப்பிள்ளை தேவனைப்போலுமன்றோ? தேவன் எப்படிப்பட்ட அற்புதத்தைக் காட்டினாலும், வானத்தை உயர்த்தியிருக்கின்ற காட்சியையும், சூரிய சந்திரன்களையுண்டாக்கி, இருக்கிற மகத்துவத்தையும் பூமியை விரித்திருக்கிற காரணத்தையும் கடலை அணைகளின் மீட்டுமிட்டு வரம்புபட நிறுவிய அற்புதத்தையும் இவ்வுலகமாகிய விசித்திர அருமையானவைகளையும் பார்க்கிலும் வேறுஎன்ன அற்புதம் காட்டப்போகிறார்! ஆதலினாலே பராபரன் என்னத்தைச் செய்தாலும் ஓ! பராபரன் செய்வதற்கென்ன ஆச்சரியம் என்று விடுவார்கள். ஆனால், நம்மைப் போன்ற மனிதனுக இருந்து அற்புதங்கள் காண்பித்தால், ஆ! ஆச்சரியமே, இந்த மனிதனுக்கு இப்படிப்பட்ட வல்லமையுண்டா? அப்படி கொடுத்த பராபரனே தோத்திரிக்கப்பட்டவர் என்று ஏன் சொல்லார்கள்? நேயர்களே, இப்படிப்பட்டமகத்தாகிய இயேசு நாதரையாராவது மறுத்துக்கூறுவாராயின் அவன் மன்னிக்கப்படாத பெரும் பாவியென்பதை சொல்லவேண்டுமா?

இதோமத்தே 10-ம் அதிகாரம் " 33 - மனிதரின் முன்பாக
" என்னைமறு தலிக்கிறவன் எவனோ அவனைநானும் என்
" பிதாவுக்குமுன் பாகமறுதலிப்பேன் " என்று இயேசுநாதர்
கூறினதாகக் கூறுகின்றது. இதற்கு, மாற்கு 8-ம் அதிகாரமும்
லூக்கா 6 - ம் அதிகாரமும் சான்றுகின்றன. இவைகளினாலே
இயேசு நாதரை மறுத்துக் கூறுகிற ஒவ்வொருவனும் இயேசு நாத
ரினாலே, அவரது பரமபிதாவினிடத்தில் அவசியம் மறுத்துக் கூறப்
படுவார்களென்பது மறுக்கப்படாத உண்மையல்லவா ? அந்த வேத
வாக்கியத்தைச் சந்தேகிப்பவன் இயேசுமார்க்கத் தானாகுவானோ ?
ஆகமாட்டானன்றோ ? விசயம் இப்படியிருக்க இயேசு நாதரை,
ஒரு இரவிலே இரண்டாம் சேவல் கூவுகிற தற்கு முன்னே, மூன்று
தரம் மறுத்துக் கூறியதுமன்றி, வாயில் வந்தபடிசபித்துச் சபித்
தவனாகியபேதுரு இயேசுவினாலே, இயேசுவினது பரமபிதாவிடத்
தில் கட்டாயம் மறுத்துக் கூறப்படு வானல்லவோ ? இயேசுநாதர்,
என்சீசர்கள் தவிர வேறுயாராவது மறுத்துக் கூறினால் தான்
அவனைநானும் மறுத்துக் கூறுவேன் என்று சொல்லவில்லையே ?
ஐயோ, அந்தச்சீசர் இயேசு நாதரின் தீர்க்கதரிசனத்தோடு மாறு
பட்டாரன்றோ ? இயேசு நாதர், பேதுருவைநோக்கி நீ என்னை
மறுத்துக் கூறுவாய் என்று சொல்ல அவன் இயேசுவைப்பொய்ய
னாக்குமாறு, நான் ஒரு போதும் உம்மைமறுக்க மாட்டேனென்று,
வாதாடினானன்றோ ? இப்படிபட்டவர்தான், இயேசுநாதருக்குப்
பிறகு பரிசுத்த ஆவியினாலே, இயேசுநாதரின் உத்தரவைமாற்றுக்
கூறும்படியான யோக்கியராயினாராமே ? நேயர்காள் ! நம்புவீர்களா
பேதுருவையும் அவன் சொப்பனத்தையும் ? நேயர்காள் ! இயேசு
நாதர் பாவங்களைமன்னிக்கிற சக்தியுடையவரென்று மேற் கூறிய
வேதவாக்கியத்தினாலே நன்றாய்த் தெரிந்தீர்களன்றோ ? இதோ
இயேசுநாதரே உலகத்தில் பாவத்தை உண்டாக்கினாரெனில் பாவி
கள் உளவாயின் அவர்களை என்னென்று சொல்லலாம். அவர்
கள்பித்தர் எனலாமா ? மன்னிக்கப்படாத பாபிகள் எனலாமா ?
என்னென்று சொல்லலாம், நீவிர்களே ஞாயந்திருங்கள்பார்ப்போம் ?
ஐயன்மீர், இதோமத்தே 10-ம் அதிகாரம் " 34 - பூமியின்மேல்
" சமாதானத்தை வரப்பண்ண வந்தேனென்று நினைக்கா
" திருங்கள், சமாதானத்தையல்ல, சண்டையைவரப்பண்
" ணவந்தேன் " என்று இயேசுநாதர் கூறினதாகக் கூறப்படு



கின்றதே. லூக்காவேதம் 12-ம் அதிகாரம் இதற்குச் சாட்சிக்
கூறுகின்றது. இதென்ன விபரீதம், இம்மட்டாகவா ? லூக்கா 12-
ம் அதிகாரம் " 49 - அக்கினியைப் பூமியின்மேல் போடவந்
" தேன், அது இப்பொழுதேபற்றி எரியும்படிவிரும் புகி
" றேன். 51 - நான் பூமிக்குச் சமாதானத்தைத்தரும்படிக்
" கே வந்தேனென்று நினைக்கிறீர்கள் ? அதை அல்லபிரி
" வினையைத் தரும்படிக்கு வந்தேன், என்று உங்களுக்
" குச் சொல்லுகிறேன் " என்று இயேசுநாதர் கூறினதாக கூறு
கின்றதே. ஐயோ, இயேசுநாதர் பூமியில் அக்கினியைப் போட்டு,
இப்பவே எரியவேணுமென்று இயேசு நாதர்விரும்பினால் அது ஏன்
எரியவில்லையோ ? இந்தவசனங்கள் எவ்வளவுதூரம் நம்பலாமென்
பதைக்கவனியுங்கள், இதோமத்தே 9-ம் அதிகாரம் " 12 - இயே
" சுவானவர் அதைக்கேட்டு அவர்களைநோக்கி சொஸ்த
" முள்ளவர்களுக்கு வயித்தியன் வேண்டுவதில்லை வியாதி
" உள்ளவர்களுக்கே அவன்வேண்டும் 13 - மேலும் பலியி
" னும் இரக்கத்தை விரும்புகிறேன் என்கிற (வாக்கியத்
" தின்கருத்தை) நீங்கள்போய்ப் படித்துக்கொள்ளுங்கள்
" அந்தப்படி . நான் நீதிமான்களையல்ல பாவிகளையே
" மனம் திரும்புதற்கு அழைக்க வந்தேன் " என்று இயேசு
நாதர் கூறினதாகத்தெரிகின்றது ; இதனாலே, இயேசுநாதர் காலத்
திலேயும் அதற்குமுன்னேயும், நீதிமான் களான பாவமன்னிப்பு
டையவர்கள் இருந்ததாகவும், அவர்களை இயேசுநாதர் அழைக்கவ
ரவில்லை, என்றும்நன்றாய்ப் புலப்படுகின்றதே. ஆகவே இயேசுநா
தர் தமது இரத்தத்தைப் பூமியில் சிந்தாவிட்டால், பாவமன்னிப்பு
புமறுசு ஜாதிகளுக்கே கிடைப்பதில்லை என்று கிறிஸ்துவநேயர்கள்
சொல்லுவது முற்றிலும், அபத்தமென்று நன்கு புலப்படவில்லையா !
நேயர்காள், இம்மட்டா ? பாபிகளானவர்கள், வேதக்கட்டளையை
மீறி நடப்பவர்களென்று தானேஏற்படு கின்றது ? கட்டளையைச்
சரிவர நடப்பிக்கவன்றோ இயேசு நாதர் அனுப்பப்பட்டார் ? அவர்
தமது இரத்தத்தைச் சிந்தினால் தான்பாபம் மன்னிக்கப்படு மென்று
வேதபுத்தகத்தில் ஒரு இடத்திலாவது காணப்படவில்லையே. பா
பிகளைமாத்திரந்தானே மனம் திரும்பும்படி அழைக்க வந்தார் ?
தமது இரத்தத்தைச்சிந்த வல்லவே ? " அழைக்க வந்தேன் " என்று

ரேயன்றி "இரத்தம் சிந்தவுமேன்" என்று சொல்லவில்லையே. இதோ யோவான் 15-ம் அதிகாரம் "22- நான் வந்து அவர்க "ளுக்குச் சொல்லாதிருந்தேனானால் அவர்களுக்குப் பா "வம் உண்டாயிருக்கமாட்டாது. இப்போது அவர்கள் "தங்கள் பாவத்திற்குப் போக்குச்சொல்ல இடமில்லை, "24- மற்றொருவன் செய்யாத கிரியைகளை நான் அவர்களுக் "குள்ளே செய்யாதிருந்தேனானால், அவர்களுக்குப்பாவம் "உண்டாயிருக்கமாட்டாது" என்று கூறுகின்றதே. இதனாலே இயேசுவானவர் பாவம்போக்குகிறதற்கு வந்தவராகக்காணோம். பாவத்தை உண்டாக்கின வராகவேகாணப்படுகிறார். ஐயோ! பாபத்தை உண்டாக்கவா பராபரனாலே வருவார்கள்? அதற்காகத்தான் சிலுவையில் அறையுண்டாரோ? இது எப்படிப்பட்ட அநாகரீகமான கட்டுக்கதை என்று சொல்லலாம்? உண்மை என்பதற்கு எவ்வளவும் ஹேது இல்லையே? இந்த வசனத்தைக் கூடவேத மென்று எண்ணுவது எவ்வளவு மதிக்கேடெனலாம்? இயேசு நாதர்பாபிகளை இரட்சிக்கிறதற்காகவல்ல பாபமில்லாதவர்களைப் பாபிகளாக்கவே வந்தா ரென்று அங்கீகரிக்கப்படுகின்றதே. இவ்வாறாக அவரைத் தோத்திரம் செய்ய எமது நேயர்கள் மனந்துணிவார்களா? "இயேசுவே, "நீரோவென்றால் சுத்தமான உலகத்தைப் பாபத்தினாலே "அசுத்தப்படுத்தின மஹானாயிருக்கிறீர், ஆதலால் நீர் "தோத்திரம் செய்யப்படுகிறீர்" என்று புகழுவீர்களா? மாட்டோமென்பீரேல் யோவான் எழுதிய இவ்வசனத்தைச் சாம்பலாக்கு வீர்களாக. அப்படி தோத்திரம் செய்வோம் என்பீர்களேல் உங்கள் சித்தம். ஐயோ, நேயர்களே, அப்படி தோத்திரம் செய்தால் சுவர்க்கம் பெறுவோமென, ஒருமனிதன் ஆகாயத்திலே எல்லாருடையகண்களுக்கு மெதிராக நடந்துவந்து நம்மகண்கள் காண பரலோக இராச்சியத்தைக்காண்பித்தானாயினும் அவனுடைய சொல்லை நம்பாமல், அவனை உண்மையாகச் சாத்தானென்றே சொல்லப் பின்னில்லேம். சாத்தானென்றே எங்கள் முழு இருதயத்திலும் நம்புவோம். ஆகவே இயேசு நாதர்பாவத்தை உண்டுபண்ண ஒருபோதும் வந்தவரல்லர். அவர்பாப நிவாரணஞ்செய்யவே வந்தார் என்றுபிரமாணம் செய்வோம். நீவீர்களோ, இயேசுநாதர் இரட்சிக்கிறவர் என்றுவாயில் மாத்திரம் சொல்லிவேதத்தில் அவ



ரைப்பாபம் உற்பத்திக்காரன் என்று எழுதிவைத்திருக்கிறீர்களன்றோ? ஆ! பாபமே!! பாபமே!!!

நேயர்களே! பாபிகள்மன்னிப் படையும் பொருட்டாகவே இயேசுநாதர் சிலுவையில் அறையுண்டாரென்று நீங்கள் நம்புகின்றீர்களென உலகப்பிரசித்தமாயிருக்கின்றதே, அதுஉண்மை விசயமா? ஆமென்றால், இயேசுநாதரைச் சிலுவையில் அறைவதற்கு உடந்தையாயிருந்த வர்கள்பாபிகளா? அல்லது நீதிமான்களா? பாபிகளென்றால், அப்படி அவரைச் சிலுவைக்கு ஒப்புவித்தபாபிகளின் பாவங்கள் மன்னிக்கப் பட்டாய் விட்டதா? அல்லது, பாபநிவாரணமாக இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்களெல்லாரும் நன்மை உண்டாகக் காரணமானவர்களா? ஆகவே அவர் நன்மையான காரியம் செய்தார்களா? உலகத்தாருடைய பாபங்கள் மன்னிக்கப்படும்படியாக அவர் சிலுவையில் அறையப்பட்டானபின் உலகத்தில் பாபிகள் உண்டா? இல்லையென்றால் வேதப்பிரமாணங்களும், பூசைகளும், பஸ்காக்களும், கோயில்களும், பாதரிமார்களும், பிரார்த்தனைகளும், சங்கீதங்களும், பிறவுமானமற்ற கிரியைகள் எதுபற்றியோ? யாம் அறியேம். ஒருவேளை, அவர் இரத்தம் சிந்தினதினாலே மாத்திரம் பாபம்மன்னிக்கப்படாது கற்பனைகளையும் கைக்கொண்டு இயேசுவையும் விசுவாசித்தால்தான் பாபம்மன்னிக்கப்படும் என்பீர்களோ? அப்படியாயின் மோசே முதலானவர்களெல்லாம் கற்பனைகளைக்கைக்கொண்டு தீர்க்கதரிசிகளை விசுவாசித்தால் பரலோக இராச்சியம் கிடைக்கும் என்றார்களேயன்றி தந்தமக்குரிய இரத்தம் சிந்தவேண்டுமென்று தமது கழுத்தைச் சிலுவைக்குத்தாமே ஒப்புக்கொடுக்க வில்லையே. இயேசுவுக்குமாத்திரம் மோசேமுதலியவர்கள் சொன்னபடிக்கான, கட்டளைகளையும் கைக்கொள்ளுவதுடன் தமது சீவனையும், கொடுத்தால்தான் இயேசுவின் சனங்கள் பாப மன்னிப்படைவார்களென்று பராபரன் கட்டளைசெய்தாரென்று முடியுமன்றோ? அப்படியாயின்மோசேமுதலாயினோர்களெல்லாரும், இயேசுநாதரைவிட சலாக்கியமுள்ளவரென்றன்றோ பராபரன் கருதினாரென்பது புலப்படுகின்றது. ஐயோ! நீவீர்கள் பலவிதத்தாலும் இயேசுநாதரைக் கனஹீனம் செய்கிறவர்களாகின்றீர்களேயன்றி, அவரைக் கனப்படுத்துகிறவர்களாகக் காணப்படவேயில்லை, என்பதை நன்குணர்வீர்களாக. நேயர்காள்! இயேசுநாதர் சிலுவையில் அறையப்படாதிருந்தால் அவ

ளை விசுவாசிக்கிறவர்களுக்குப் பாபநிவாரணமாகாதா? ஆகுமென்
ருல் பின்னை ஏன் அவர் சிலுவையில் அறையுண்ணவேண்டும்?
ஐயோ யோவான் 17-ம் அதிகாரம் "3 - "ஒன்றான
"மெய்த்தேவனாகிய உம்மையும் நீர் அனுப்பின இயேசு
"கிறிஸ்துவையும் அறிந்து கொள்கிறதே நித்திய ஜீவன்
"4- பூமியில் நான் உம்முடைய மகிமையை விளக்கினேன்.
"நான் செய்யும்படிக்கு நீர் கொடுத்த கிரியையை
"முடித்தேன்" என்று இயேசுநாதர் கூறினதாகக்கூறுகின்றதே.
அந்தோ! இதனாலே நித்தியஜீவனான பரலோக இராச்சியத்தைப்
பெறுதற்குப்பராபரனையும் அவரால் அனுப்பப்பட்ட இயேசுவையும்
விசுவாசிக்குதல் என்கிற கற்பனைகளைக் கைகொள்ளுதல் மாத்தி
ரமே போதுமாக இயேசுநாதர் கூறியிருக்கிறதாக நன்குவிளங்கு
கின்றது; அப்படியிருக்க அவர் சிலுவையிலும் அறையப்பட
வேண்டுவது பாப மன்னிப்படைய ஏதுவானதென்று எங்ஙா
னம் கண்டீர்களோ? அல்லாமலும் இயேசுவானவர் பராபரனாலே
கொடுத்த கிரியைகளை யெல்லாம் முடித்துவிட்டதாகக் காணப்படு
கின்றதே. அப்படியிருக்க, சிலுவையில் அறையுண்டு உயிர்த்துறந்து
மூன்றுநாள் பிணமாகக்கிடந்தும் மறுபடியும் உயிர்த்தெழுந்த கார
ணமியாது? மறந்துவிட்டுப்போன கிரியைகளைச்செய்யவா? அல்
லது சீஷர்களுக்குச்சொல்லிச் செய்விக்கவா? எதற்காகவந்தாரோ?
பேதைகளாகிய எமது நேயர்கள்தாமே சொல்லவேண்டும். அந்தோ
"நான்செய்யும்படி நீர்கொடுத்த கிரியையை முடித்தேன்"
என்று இறந்தகால வாய்ப்பாட்டாலே சொல்லி முடித்திருக்கிற
படியினாலே உயிரைவிடுதலாகிய கிரியையும் சிலுவையில் அறையப்
படவேண்டுமென்கிற கிரியையும் இயேசுநாதரைப் பொருத்ததல்
லவென்பது தெளியக்கிடக்கின்றது. ஆகையால் இயேசுநாதர் உயிரை
விட வேண்டுமென்பதும், சிலுவையில் அறையுண்டு இரத்தம் சிந்
தவேண்டு மென்பதும் உலகத்தார் பாப மன்னிப்படைவதற்காக
வேண்டிய கிரியைகளென்பதும் பொய்ப்படுகின்றதன்றோ? ஐயோ
இயேசுவானவர் இரத்தம் சிந்துதலும் உயிரை அவமரியாதையாக
விடுவதுந்தானோ பாவமன்னிப்புக்குக் காரணம்? இப்படியாக வேத
வாக்கியங்களுக்கும் உங்கள் புத்திக்குமாறானவைகளைக்கொண்டு
உங்களை நம்பும்படி பலாத்காரம் செய்கிற சாத்தானைவிட்டுக் காவல்
பெறும்படி பரமபிதாவாகிய கர்த்தரைப் பிரார்த்திக்கின்றோம்.



மேலும், ஐயோ, நேயர்காள்! யோவான் 17-ம் அதிகாரம் "8-
"அல்லாமலும் நீர் எனக்குக்கொடுத்த வசனங்களை நான்
"அவர்களுக்குக் கொடுத்தேன். அவர்கள் அவைகளை ஏற்
"றுக்கொண்டு என்னை உம்மிடத்திலிருந்து புறப்பட்டு
"வந்தவன் என்று மெய்யாய் அறிந்து என்னை நீர் அனுப்
"பினீர் என்று விசுவாசித்திருக்கிறார்கள். 9 - நான் அவர்
"களுக்காக வேண்டிக்கொள்கிறேன். உலகத்தாருக்காக
"அல்ல; நீர் எனக்குக் கொடுத்தவர்கள் உம்முடையவர்க
"ளானபடியால் அவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன்.
"11 நான் உலகத்தில் இனி இரேன். அவர்கள் உலகத்
"திலே இருப்பார்கள். நான் உம்மிடத்திற்கு வருகிறேன்.
"பரிசுத்தமுள்ள பிதாவே நீர் எனக்குக் கொடுத்தவர்கள்
"நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்
"முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" என்று இயே
சுநாதர் பராபரனை நோக்கி வேண்டிக்கொண்டதாக நன்குபுலப்படு
கின்றதே. நேயர்காள்! இயேசுநாதருக்கு எவ்வளவு மனுஷர்களைப்
பராபரன் ஒப்புக்கொடுத்தாரோ, அவ்வளவு மனுசருக்கும் பராபர
னாலே பெற்ற எல்லாவசனங்களையும் சொல்லிக்காண்பித்து விட்ட
தாகவும் அம்மனுஷர்க ளெல்லாரும் அவருடைய வசனங்களை அங்கீ
காரம்செய்து கொண்டதாகவும், இயேசுவானவர், பராபரனாலே
அனுப்பப்பட்டவர் என்பதை இயேசுநாதருக்கென்று ஒப்புவிக்கப்
பட்ட மனுஷர்கள் நன்றாய்த்தெரிந்து கொண்டார்களென்றும், அவர்
களுக்காகவே, பராபரனிடத்தில் தாம் வேண்டிக்கொள்கிறே னென்
றும் அவர்களல்லாத மற்ற உலகசனங்களுக்காகத் தாம் பராபரனை
வேண்டிக்கொள்ளவில்லை என்றும் தாம் இனி உலகத்தில் இருப்
பதில்லை உம்மிடத்திற்கு வருகிறேன் என்றும் இயேசுவினாலே சுவி
சேஷம் பெற்றவர்கள் உலகத்தில் இருப்பார்களென்றும் நன்றாய்ப்
பராபரனுக்கு முன்பாக இயேசுநாதர் விண்ணப்பம் செய்துவிட்ட
தாகத் தெளிவாய்ப் புலப்படுகின்றதன்றோ? அப்படியிருக்க எமது
நேயர்கள் என்னென்னவோ வாயில் வந்தபடி பிதற்றுகின்றார்
களே. ஐயோ, பாபம்; இயேசுவானவர் பராபரனைநோக்கி, நீர்
எனக்குக் கொடுத்தவர்களுக்கு நீர் சொன்னவாக்கியங்களைத் தெரி
வித்துவிட்டேன். அவர்கள் அவைகளை அங்கீகரித்துக்கொண்டார்

கள். நீர் என்னை அனுப்பினீர் என்றும் நான் உம்மிடத்திலிருந்து வந்தேன் என்றும் அவர்கள் நன்றாய்த்தெரிந்து கொண்டார்கள், நான் அவர்களுக்காக உம்மிடத்தில் வேண்டிக்கொள்கிறேன், என்று பரீஷ்காரமாய்ச் சொல்லிமுடித்தபிறகு நான் கிறிஸ்துவன் நீ கிறிஸ்துவன் என்று மற்றவர்கள் மண்டையை உடைத்து நிற்பது என்னமதிகேடோ? இயேசுவோ வெனின், உலகத்தாருக்காகப் பராபரனை வேண்டவில்லை. இயேசுநாதருக்கு முன்னாலே, அவரைப் பராபரனிடத்திலிருந்து வந்தவர் என்று யார் ஒப்பி அவருடைய வார்த்தைக்கு உட்பட்டாரோ அவருக்கு மாத்திரந்தானே பராபரனை வேண்டிக்கொண்டார். மற்றவர்களுக்கு வேண்டிக்கொள்ளவும் இல்லை. மற்றவர்கள் அவரைப் பராபரனாலே அனுப்பப்பட்டவர் என்று ஒப்பவுமில்லை. ஆனால் அவரைப் பொய்யரென்று சிலரும் தேவக்குமாரரென்று சிலருமே சொன்னார்கள். ஆகவே இயேசுநாதர் எப்படி உங்களுக்கு இரட்சகராவாரோ? யாம் அறியேம். இதோ, இயேசுநாதர் இனிநான் உலகத்திலிருக்கமாட்டேன் அவர்கள்மாத்திரம் உலகத்திலிருப்பார்கள் நான் உம்மிடத்திற்கு வருகிறேன் என்று கூறினதினாலே அவர் எப்படி உலகத்திலிருக்கிறவர்களைப்போல மரிப்பாரோ? அவர் மரித்தபின் அவர் உலகத்தாரைப் போலன்றோ ஆகிவிடுவார்? கிறிஸ்துவர்களே, நான் உம்மிடத்திற்கு வருகிறேன். இனி உலகத்தி லிருக்கமாட்டேன், என்றால், அவர் உலகத்தில் செய்யவேண்டியவைகளை எல்லாம் செய்தாக விட்டன்றோ அவர் தமது பராபரனைநோக்கி அப்படிசொல்லுவார். இந்த வேதவாக்கியத்தினாலே இயேசுநாதர் சிலுவையில் அறையப்படவில்லை என்றும் அவர் உலகத்தாருக்கு இரட்சகரல்லரென்றும் அவர்கடவுளிடத்திலிருந்து அனுப்பப்பட்டவரேயன்றித் தேவக்குமாரன் அன்றென்றும் இயேசுநாதர்யாருக்கு இரட்சகராக அனுப்பட்டாரோ அவர்கள் எல்லாரையும் இரட்சித்துக்காப்பாற்றித் தேற்றிவிட்டாரென்றும் இனிஅவர் தேற்றவேண்டியவர் ஒருவருமில்லை என்றும் நீவிர்கள் பரீஷ்காரமாய் உணர்தற்குப் போதுமான இடமிருக்கிறதாகக் காணுவீர்களாக. எமது நேயர்காள், இயேசுநாதர் மரிக்கவில்லை மரித்தவரைப்போல் தோற்றினார், என்பீர்களோ? இதோ லூக்கா 23-ம் அதிகாரம் "46-அல்லாமலும் இயேசுவானவர் பிதாவே உம்முடையகை



"களில் என்னுடைய ஆவியை ஒப்புக் கொடுக்கிறேன், "என்று மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டு அதின்பின் "ஜீவனை விட்டார்" என்றும், மத்தேயு 27-ம் அதிகாரம் "50-பின்பு இயேசுவானவர் மறுபடியும் மிகுந்த, சத்த "மிட்டு ஆவியை விட்டு விட்டார்" என்றும் கூறுகின்றன இதற்கு யோவானும் சான்றாகின்றார். இவைகளினாலே இயேசுவானவர் ஆவியை உலகத்திலேயே விட்டுவிட்டார் என்பது பரீஷ்காரப்படுகின்றது. இதுவேயுமன்றி எமது நேயர்காள்! இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டு உயிரிழந்தாரென்னும் சரித்திரம் எதுவரையினும் உண்மையானதென்று சற்றுக்கவனிப்பேமா?

நேயர்காள்! இயேசு நாதர், மஹாப்பாபிகளின்மனம் சென்றபடி யெல்லாம் செய்யும் படியாக, அவர்கள்கைகளுக்கு ஒருபோதும் ஒப்புக்கொடுக்கப் படவில்லை. ஆனால் அந்தப் பெருமானார், மஹா உன்னதமானவரின் சமுகத்திற்கு மிகவும் பரிசுத்தவானாக எழுந்தருளினார். அவரையூதர்கள் சிலுவையில் அறையவுமில்லை, அவருடைய சிறப்புப் பொருந்திய கன்னத்தில் ஒருவனும் அடிக்கவுமில்லை, அவர் ஒருவனாலும் ஏழனமாய் நகைக்கப் படவுமில்லை, அவருடையவுயிரை ஒருவனும் போக்கவுமில்லை, அவமரியாதையான நிலைமையில் அவர் ஒருபோதும் உயிர்த்துறக்கவுமில்லை, அவர் நரகலானவர்கள் புதைக்கப்படும் பிரேதக்குழியில் ஒருபோதும் ஒரு நிமிசமாவது கிடக்கவுமில்லை என்று நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். எமது கிறிஸ்துவ நேயர்கள், இயேசு நாதர் பாபிகளின் கைகளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு அப்பாபிகள் மனம் சென்றபடி யெல்லாம் செய்தார்களென்றும், அவர், சிலுவையில் அறையப்பட்டாரென்றும், அவரைப்பகைவர்கள் மிக ஏழனமாக நகைத்தார்களென்றும் அருமையான கன்னத்தில் அடிக்கப்பட்டாரென்றும், ஐயோமுட்களாலாகிய கிரீடம் சுமத்தப்பட்டாரென்றும் அவமரியாதையான நிலைமையில் உயிரை விட்டாரென்றும் நரகலானவர்களின் பிரேதக்குழியில் மூன்றுநாள் கிடந்தாரென்றும் பிறவுமான பழிபாவங்களுக்கு ஆளானாரென்றும் வெகு அவலிவாக அவருக்குத் தகுதியில்லாத பழிப்புகளை அவர்மீது சுமத்தி அவரை நிந்தித்து, அந்நிந்தனையையே விசுவாசமென்று நம்பும்

படி சாத்தான் செய்து விட்டானே, இதற்குப்புத்தி சாதுரியமுள்ள
எமது நேயர் உடன்படலாமா?

எமது கிறிஸ்தவ பண்டிதர்களே! மத்தேயு 10-ம் அதிகாரம்
“41 - தீர்க்கதரிசி என்கிற நாமத்தினிமித்தம் ஒரு தீர்
“க்கதரிசியை ஏற்றுக் கொள்கிறவன் தீர்க்கதரிசிக்கு
“ரிய பலனை அடைவான், நீதிமான் என்கிற நாமத்தி
“னிமித்தம், ஒருநீதிமானை ஏற்றுக் கொள்கிறவன் நீதி
“மானுக் குடையபலனை அடைவான்” என்று இயேசுநாதர்
கூறியிருக்கிற படியினாலே, ஒருவன், ஒருதீர்க்க தரிசியைத் தீர்க்
கதரிசி யென்று ஏற்றுக் கொள்ளும் காரணத்தினாலே அவனுக்
குவரும் துன்பங்களை பொறுத்துக் கொண்டானேயாகில், அவன்
தீர்க்கதரிசியின் பலனைப் பெறுவானென்பது நன்றாய்த் தோன்று
கின்றதன்றோ? அப்படியாகவே ஒரு தீர்க்க தரிசியானவர் தம்
மை அனுப்பினபராபரனின் காரியத்தினாலே வரும் துன்பங்களைப்பொ
றுத்துக் கொண்டாரேயாயின் அவருக்குவரக் கூடியபலனுக்கு ஒரு
எல்லையுண்டா? அவர் அடையும்பலனின் அளவையை அவரை அனுப்
பினவராலேயேயன்றி அளக்கலாகாதே. அப்படிப் பட்டபலனை அநு
பவிப்பதற்காக இயேசுவானவர் பாவிகளாலே துன்பங்களை அடைந்
தார் என்பீர்கள் போலும்; அந்நனமாகக் கூறுவார்களாயின்நன்று
கூறினீரென்பேம்; ஐயோ! இயேசுநாதர் பாவிகளாலே செய்யப்
பட்டதுன்பங்களைப் பொறுத்திருந்தாரென்று உங்கள் வேதம் சொல்
லவில்லையே. அவர் தேவதூஷணம் செய்தாரென்றன்றோ உங்கள்
வேதம் சொல்லுகின்றது; அப்படியிருக்க இயேசுநாதர் பராபரனி
மித்தமாகப்பாவிகளால் நேர்ந்த கஷ்டநஷ்டங்களைப் பொறுத்தினா
ரென்று எவ்வாறு எமதுநேயர்கள் சொல்வார்களோ? இதோமத்தேயு
27 - அதிகாரம் 46 - பின்பு ஒன்பதாம்மணி நேரத்திலே,
“இயேசுவானவர் ஏலி! ஏலி! லாமாச பக்தானி என்று
“மிகுந்த சத்தத்தோடே கூப்பிட்டார்; அதற்கு என்
“தேவனே! என்தேவனே! ஏன் என்னைக்கை விட்டீர் என
“அருத்தமாம்” என்று கூறுகின்றது. இதற்கு மாற்கு 15 -
அதிகாரமும் ஒத்துக் கிடக்கின்றது. இவைகளினாலே இயேசுநாதர்
பராபர விசுவாசமில்லாதவரென்றும், பராபரனை நிந்தித்தாரென்
றும், யாதொரு பொறுமையும் இல்லாதவரென்றும் நன்றாகத்தெ



ரியக் கிடக்கின்றது. ஐயோ கிறிஸ்தவர்களே பராபரன் முன்ன
மேயே இயேசு நாதரை நோக்கி ஓ! இயேசுவே நாம் உன்னைப்
பகைவர்களில், ஒப்புக்கொடுக்க மாட்டோம். நீ சிலுவையில் அறை
யப் படமாட்டாய் நாம் உன்னைக்கை விடவே மாட்டோம், நீபயப்
படாயாக என்று வாக்குறுதிசெய்திருந்து, பிறகு இயேசு வான
வர், தமக்குச் செய்யப்பட்ட வாக்குத்தத்தத்திற்கு விரோதமாகக்
கண்டால் அப்பொழுது இயேசுவானவர் பராபரனை நோக்கி, ஓபரா
பரனே நீர் ஏன் என்னைக்கை விட்டீர்? ஒருபாபமும் நான் உம
க்குச் செய்தேனில்லையே, அப்படியிருக்கத், திடும்பிரவேசமாய் நீர்
எனக்குச் செய்தவாக்குத்தத் தத்திற்கு முற்றுமாறாகநீர் என்னை இக்
தக்கொடிய, பாவிகளின் கைகளுக்கு ஒப்புவித்து இப்படிப்பட்ட துன்
பத்திற்கு ஏன் என்னை ஆளாக்கு வித்தீர்? என்னும் பொருட்
டாய் என்தேவனே என்கிறவாக்கியத்தையும் இரக்கக் குறிப்புக்
கு உரித்தாய் இரட்டிப்புப் படுத்தி “என் தேவனே என் தேவனே
“ஏன் என்னைக்கை விட்டீர்” என்றன்றோ? இயேசு நாதர் பெ
ருங் கூச்சலாகக் கடாவல்வேண்டும்? என்நேயர்காள் சற்று கவ
னியுங்கள், பராபரன் இயேசுநாதருக்கு அப்படியாக வாக்குத்தத்
தம் செய்திருக்கிறாரா? அப்படி செய்திருக்கின்றாரென்றால் ஏன்
அவர் இயேசுநாதரைக் கைவிட்டார்? அப்படிவாக்குத்தத்தம் செய்
யவில்லை என்றால், இயேசு நாதர் பராபரனை நோக்கி, ஏன் என்
னைக் கைவிட்டீர் என்று கடாவுவது நியாயமா? ஐயோ நேயர்
காள்! இயேசு நாதர், பராபரனாலே கைவிடப்பட்டால், அவர் எப்
படி இரட்சகராவார்? அவர்கைவிடப்படவில்லை யென்றால் அவர்
கைவிடப்பட்டதாகச் சொன்னது பரியாசமான வார்த்தையா? பரி
யாசமென்றால், பராபரனுடன் பரியாசம் செய்பவன் விசுவாசி என
ப்படுவானா? பரியாசம் நிந்தையன்றோ? தெய்வநிந்தனை செய்பவன்
பக்தனாவானென்பதும் நிந்தனை அல்ல வென்பீர்கள், அல்லது தம் பொய்யா?
மைப் பராபரன் கைவிட்டதாக இயேசு சொன்னதானது அநுப்பப்ப
பொய் சொல்பவன் தீர்க்கதரிசி அல்லது பராபரனாலே மெய்யே, என்
ட்டவனாவானா? இயேசுநாதர் சொன்ன அந்தவார்த்தை முடிந்துவி
பீர்களேல், பராபரனாலே கைவிடப் பட்டவராகவன்றோ “ஏலி ஏலி
னைபடுவார்? இந்தக்காரணங்களை எல்லாமுன்னிட்டு இயேசுவினாலேயா சொல்
“லாமாசபக்தானி” என்ற வார்த்தை அப்படி ஆரா
லப்பட்டதென்பதைநன்றாய்ஆராய வேண்டுமன்றோ?

யந்தால், ஒரு போதும் இயேசு நாதர், அந்தப் போலிவார்த்தை
யைச் சொல்லியிருக்க மாட்டாரென்பதே முடிபாகும். இதோ
நேயர்காள்! -இயேசு நாதர், மிகுந்த பாடுபடுவார் என்றும், சிலு
வையில் அறையப்படு வாரென்றும் பராபரனாலே அறிவிக்கப் படா
மலே அவருக்கு அப்படியான துன்பங்கள் நேர்ந்தாலும் அந்தப்
பெருமானார் தமக்கு நேர்ந்த துன்பங்களனைத்தையும் பேரின்பமா
கவே கொண்டு ஆநந்தம்படைத் தவராய் இவ்வாறான காரியம்
இன்னும் மேலு மேலுமாகத் தம்மைப் பின்பற்றிவரும்படியாகத்
தமது பராபரனை அதிகமதிகமாகப் பிரார்த்தித்துக் கொண்டிருப்பா
ரேயன்றி, அற்பவிசுவாசிகளே போன்று, மனங்கலங்கி என்தே
வனே என்தேவனே ஏன் என்னைக்கைவிட்டீர்? என்று ஆபாசமாக
ஒருபோதும் பெருங் கூச்சலாக வாய்விடமாட்டா ரென்று சத்
தியமாகச் சொல்லல் வேண்டும். நேயர்காள்! திடீம்பிர வேசமா
கவரும் துன்பங்களை இன்பமாகக் கொண்டு சகித்துப் பொறுமை
யாக அமர்ந்திருப்பதுவே சாமானியமனிதப்பண் பென்றும் திடீம்
பிரவேசமாய் நேருகிற ஆபத்துக்களைப் பொறுத்து, அவைகளைக்
கொண்டு சந்தோசப்படுவதுவே விசேசமனிதப் பண்பென்றும்,
முன்னையறிவினர்களாலே நன்று கூறப்பட்டிருக்கின்றன; விசயம்
இவ்வாறிருக்க சாமானிய மனிதர்களுக்கும் விசேசமனிதர்களுக்கும்
இரட்சகராகத்தேவ அருள் பெற்று வாராநின்ற மஹா உன்னத
மான பராபரனது ஊழியக்காரரான தீர்க்க தரிசிகளோ வென்
றால்; அவர்கள்மீது, திடீம் பிரவேசமாக வரும் எவ்வித ஆபத்துக்
களான துன்பங்களாயினும் அவர்களால் அது ஒரு அணுத்துணை
யாகவாவது நினைக் கப்படாது. அவைகளை எல்லாம் தமக்குரிய
ஆபரணங்களென்றும் அப்படிப்பட்ட காரியத்திற்கே தாம் வந்தவர்
களென்றும் பரிஷ்காரமாகச் சொல்லி இன்னுமப்படியாக வரக்
கூடிய காரியங்கள் எங்ஙன மிருக்கின்றனவோ வெனத்தேடியும்
போய் அவைகளை யெல்லாம் தமதுடைமைப் பொருளெனக் கொள்
வார்களென்பது சத்தியம். காரியம் இப்படியிருக்க, நேயர்களே!
இயேசுநாதரோ வெனில் "எருசலேமிலே பெரியோர் களா
"லும் பிரதான ஆசாரிகளாலும் வேதப்பாரகர் களாலும்
"மிகுந்தபாடு படவும் கொலை செய்யப்படவும் மூன்றாம்
"நாளிலே எழுந்திருக்கவும் வேண்டு" மென்று முன்ன
மேயே பராபரனாலே அறிவிக்க பட்டிருக்கிற தாகமத்தே வேதம்



"வேதம் 16-ம் அதிகாரம் பரிஷ்காரமாய்ச் சொல்லி
"யிருக்கிற படியினாலே அப்படி அறிவிக்க பட்டிருந்த
"இயேசுவானவர் விசுவாச மென்னும் பொருளின் வா
"சம் அணுத் துணையுமில்லாத ஒரு கேவலப்பாமரப்
"போலியினும் கடைப் பட்டவரைப் போல" என்தே
வனே என்தேவனே என்னை ஏன் கைவிட்டு விட்டீர்! என்று
ஆவேசம் போலவாய்விட்டலறி, உயிரை விடுவாரென்று நீவிர்
கள் நம்புகின்றீர்களா? அந்தோ! நேயர்காள்! அற்பவிசுவாசிகளே
யாயினும் தமக்குமுன்னமேயே அறிவிக்கப்பட்டுத் தம்மீது வந்த
டையும் துன்பங்களைக்கண்டால், தமது அற்பவிசுவாசத்தினாலேயே
அவர்கள், தமதுதேவனைநோக்கி "என்தேவனே நீர் எனக்கு
"முன்னாக அறிவித்தவாறாகவே நான் அதை அநுபவி
"க்கும் அதிட்டமுள்ளவனாக இருந்தேனே. அதுவே என
"துபாக்கியம் அதுவேயெனது தபோபலன் நான் இப்போது
"உம்முடைய முன் அறிவித்தல்படியே நான்அநுபவிக்கிற
"வை எல்லாம் எனக்குப் பேரின்பமே என்று எனது
"முழுமனதோடும் முழு ஆத்துமாவோடும் நான் நம்பு
"கின்றேன். நீரே உண்மையுள்ள தேவன், நீர் எனக்கு
"முன்னாக அறிவித்தபடி. எனக்குவந்த இந்த காரியங்களி
"னாலே எனது விசுவாசம் மேலும் பலப்பட்டது. ஆகவே
"நீர் என்னை ஒருபோதும் கைவிடவில்லை. என்னைக்
"கைவிடவும் மாட்டீர் என்று பிரமாணமாகச் சொல்லு
"கின்றேன்" என்று புகழ்கூறுவாரே யன்றி ஒருபோதும் "என்
"தேவனே என்தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்?"
என்று பெருங்கூச்சலாய் அங்கலித்து உயிரை விடமாட்டார்
களே. இப்படியிருக்க எல்லா முணர்ந்த இயேசுநாதர் தமது
தேவனை நோக்கி "ஏன் என்னைக் கைவிட்டீர்?" என்று
கூறி உயிரைவிட்டார் என்று பெரும்பாவமான வார்த்தையை
அவர்மீது சுமத்துகின்றீர்கள். ஐயோ நேயர்காள்! தேவபக்தி என்
பது ஒரு அணுத்துணையுமில்லாத பாமரர்களை நீங்கள் பார்க்கவில்
லையா? ஒருசாத்திரி அல்லது சோசியன் ஒருவனைப்பார்த்து அப்
பனே! உன் கிரகப்பலன், சித்திரை மாதம் எட்டாந்திகதி புதன்கிழ

மை உனக்குப் பெண்குழந்தை பிறக்கும் அதனால், உனக்கு எட்டுமா
தம் கடுங்காவல் தெண்டனை உண்டாகும், என்று சொல்லி, அத்
தப்படி அவனுக்குப் பெண்குழந்தை பிறந்து எட்டாம்நாள் அல்
லது அதற்குமேற்பட எப்பவாயினும் தண்டனை விதிக்குமாயின்
ஆ! சோசியர் நமக்கு முன்னமேயே சொன்னாரன்றோ? அவர்
எவ்வளவு கெட்டிக்காரரையா? அவர் சொன்னபடியே முடிந்ததே.
இது எமக்குபிள்ளைப்பிறந்த இரகபலன், சோசியர் சரியான உண்
மைக்காரரே என்று, சோசியனைப் புகழுகின்றனே யன்றிச்சோ
சிய தூசணம் செய்யாரென்பது உங்கள் சித்தத்திற்கு மறையுமா?
இவ்விஷயம் உங்களுக்குப் பிரத்தியட்சப் பிரமாணமாக ஒவ்வொ
ருவர் வீட்டிலும் எழுதிவைக்கப்பட்டிருக்கிற சாதகம் என்னும்
குறிப்பைப்பார்த்தால் நன்கு புலப்படுமன்றோ? நேயர்காள்! விஷ
யம் இவ்வாறிருக்க மஹா உன்னதமான இயேசுநாதரைக் குறித்
துக் கொஞ்சமும் கவனிக்காமல் அவர்மீது வாயில்வந்த தெல்லாம்
நாக்கூசாமல் சொல்ல முன்வந்தீர்களே. நன்றாய்க் கவனியுங்கள்.
இயேசுநாதரோ வெனில் நம்மை யொத்தவர்களினாலே மதிக்கவும்
நினைக்கவுங்கூடாத வுயரிய பெருமையும் பராபர பக்தியும் பூர
ணவிசுவாசமும் நாகரீகமும் பொறுமையும் பிறவுமாகிய சுகுண
லக்ஷணங்கள் நிரம்பிய மஹான்களில் ஒருவரும், தமது சீஷர்க
ளுக்கு "உன்னை ஒருவன் ஒரு கன்னத்தில் அடித்தால்,
"அவனுக்கு நீ உன்னுடைய மற்றொரு கன்னத்தையும்
"திருப்பிக்கொடு ஒருவன் உன்னை ஒருகாதவழி வரவே
"ண்டுமென்று கட்டாயம் செய்தால் நீ, அவனோடே
"இரண்டுகாத வழிநட" என்பனவாக எவ்வளவோ பொறு
மையைப்பற்றிக் கூறுபவராயு மிருந்தார், அப்படிப்பட்ட பொறு
மைக்கடலாகிய பெருமானரை, ஒருபேதையைப்போலவும், அறிவீ
னனைப்போலவும், ஒரு அணுத்துணையும் விசுவாசமில்லாத பெரும்
பாவியைப்போலவுமாக நீவீர் அவரை நினைத்தன்றோ "என்தே
"வனே, என்தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்" எனும்
அநாகரீகமான ஒரு போலிவாக்கியத்தைப் பலத்த கூச்சலோடு
சொல்லி உயிரைவிட்டாரென்று நம்புகின்றீர்கள்? ஐயோ! மேலே
சொல்லி வந்தகாரணம் பற்றி இயேசுநாதர் தமக்குவரும் இவ்வா
றான தீங்கைக்குறித்து முன்னமறிந்தவரா யிருப்பதுடன் (அவ்வா



று) என்னை ஏன் கைவிட்டீர். என்ற வாக்கியத்தைச் சொன்னா
ராயின் அது தேவதூஷணமாகவன்றோ முடியும்? ஒருவன், தன்
னைக்கைவிடாத நீதிமானாகிய சிநேகனைநோக்கி ஏன் என்னைக்கை
விட்டீர் என்று கேட்டால் அந்த நீதிமானாகிய அருமை சிநேக
னுக்கு நேரும்படியான மனக்கவலைக்கு ஓரெல்லைகூறலாகுமா?
அவன் மனம் பீதாரமலிருக்குமா? அவ்வசனம் அவனுக்கு அவதூ
றானவும் நிந்தனையானவுமாகவன்றோ இருக்கும்? ஆகவே பரிசுத்
தமான இயேசுவானவர், மஹாபரிசுத்தமும், மஹாநீதியுமானதம
து பராபரனை நோக்கி, அப்பராபரன், செய்யாதவும், நினைக்காத
வுமான ஒரு செயலைச்செய்ததாக நிராதாரமாகச் சொல்லுவது
அந்த பராபரனுக்கு எவ்வளவோ வெறுப்பையும் மனக்கவலை
யையும் உண்டாக்கு மென்பது உங்களுக்கு மறையாது. அப்படி
யாக இயேசுநாதர்படிறானவார்த்தையைக்கொண்டு தமது பரா
பரனை படிறுசொல்லுவாரா? அவ்வாறாகப்படிறு கூறுவராயின்
அவர் மஹாப்பாபியாவரன்றோ? அந்தோ! பாபமானவார்த்தை
யை அவர் சொன்னாரென நாம் சொல்லுவதைவிட்டு ஆயிரமாயி
ரந் தரமாக அகலவேண்டுவது நம்மனோர்கடமை, ஆயிர மாயிர
மாக நாம் அவ்வாறான வார்த்தைகளைவிட்டு அவரைத் தூய்மைசெய்
வோமாக. இங்ஙனமாக நாம் இயேசுநாதரைத் தூய்மைசெய்துவிட்
டுசிலுவையில் அறையுண்டு ஏலி ஏலிலாமா சபக்தானி என்று
பெருங்கூச்சலாகக்கூவி உயிரை இழந்தவன் யாவனென்று விசாரி
ப்போமாயின்;

இயேசுவைத்தீர்க்கதரிசி என்று சொல்லுவது முழுதும்பிசகே
என்றும் அவரைக்கொலைசெய்வதே மோசேயின் வேதப்பிரமாணங்
களைச்செவ்வே நடத்தினோ மென்பதற்கு இன்றியமையாத முக்கிய
நோன்பென்றும் பராபரனுக்கு அதுவே மிகப்பிரீதியான கிரியை
யென்றும் நம்பி இயேசுவைக் கொலைசெய்யத் தேடியவர்களின்
முதல்வனே இயேசுநாதரினது சாயலிலே தோன்றப்பட்டு அக்
கொடிய பாபிகளின் கைகளுக்கு ஒப்புவிக்கப்பட்டான். அப்பாபி
களோ அவனைத் தம்மினத்தவனென்று அறியாது, இயேசுவென்றே
நம்பி அவனைப்பலவாறு ஹிம்சிக்க ஆரம்பித்தார்கள். ஆயினும் அந்
தப்பாதகன், தான், இன்னானென்று தனது சனங்களுக்குத் தெரி
விக்க இயலாது போனதேயுமன்றி அவன் தன் வாயினாலேயே
கொலைக் குற்றத்திற்கு ஹேதுவாகிய தேவதூஷணமான வார்த்

தைகளையும் பேசினான். அதுபற்றி அவன் அக்காலத்திய நியாயா
திபதியினாலே சிலுவையில் அறைந்து கொலைசெய்யப்படும்படி தீர்
ப்பிடப்பட்டான். அந்தத்தீர்ப்புப் பிரகாரமாக அவன் சிலுவையில்
அறையுண்டு அவமானப்படுகின்ற வேளையில் அவன் ஒருவாறுதெ
ளிவடைந்து ஆ!- என்தேவனே நான் உமக்கு மாறானவனல்ல உமக்கு
வழிப்பட்டவனாகவே உமக்கு விரோதியாகிய இயேசுவைக்கொலை
செய்ய முயன்றேன். அப்படி இருக்க எனக்கு இவ்வாறுணத்துன்
பம் சேருவானேன் ? நீர் என்னைக்கைவிட்டீர் என்றும் பொருட்
டாக, ஏலி ஏலி லாமாசபக்தானி என்று பெருங்கூச்சலாகத் தேவ
தூஷணம்செய்து பங்கப்பட்டவனாக உயிரிழந்தானென்று நன்று
புலப்படுமன்றோ ? ஆதலால், பரிசுத்தமான இயேசுவைக்குறித்து
இப்படிப்பட்ட பாவிகளுக்குரிய குணந்தன்மையின் தூஷணவார்
த்தைகளைச் சொல்லுவதையும் நினைப்பதையும் மறந்து விடுவீர்க
ளாக; நேயர்காள்! இயேசுநாதரோ வெனின் ; தமது சீஷரைக்
குறித்து எத்தனையோ தரமாக, அவர்களின் அவிசுவாசத்தை விடும்
படி கண்டித்திருக்கின்றாரே. அவர்களை விசுவாசத்தின் பொருட்
டாக எவ்வளவோ போதித்து மிருக்கின்றாரே, நீங்கள்கேட்ட
தில்லையா ? இதோமாற்கு 4 - ம் அதிகாரம், "36 - ஆகலால்
"அவர்கள் சனங்களைவிட்டு அவர் படகிலிருந்தபடியே
"அவரைக்கொண்டு போனார்கள். வேறுபடகுகளும் அவ
"ரோடேகூடப்போயின. 37 - அப்பொழுது அவர்பின்பக்
"பக்கத்திலே ஒரு தலையணையைவைத்து நித்திரைபண்
"ணிக்கொண்டிருக்கையில் பலத்தசுழல்காற்று உண்டான
"தினாலே படகை மூடிக்கொள்ளத் தக்கதாக அலைகள்
"அதில் மோதின 38 - உடனே அவர்கள் அவரை எழுப்
"பி போதகரே நாங்கள் மடிந்துபோனால் உமக்குக்க
"வலையில்லையா என்றார்கள் 39 - அவர் எழுந்து காற்றுக்
"குக் கட்டளையிட்டுக் கடலையும்நோக்கி கோஷமாயிராதே
"அமைதலாயிரு என்றார். உடனே காற்று நின்றுபோக
"மிகுந்த அமைதல் உண்டாயிற்று 40 - பின்பு அவர் அவர்
"களைநோக்கி இப்படி ஏன்பயப்பட்டீர்கள் ? என்னத்தி
"னாலே உங்களுக்கு விசுவாசமில்லை என்றார்" என்று



கூறுகின்றது. இதனாலே இயேசுநாதர் எவ்வளவு விசுவாசம்பொ
ருந்தியவரென்று மதிப்பீர்கள் ? அவரது விசுவாசத்தின் எல்லைக்கோ
ளாவிருக்குமா ! இயேசுநாதரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டி
ருந்த சீஷர்கள், அவரிருக்கின்றாரே என்று விசுவாசிக்காமல் அவ
ரது நித்திரையை வீணே கெடுத்து விட்டகாரணம் பற்றிச் சீஷர்
களைநோக்கி என்னத்தினாலே உங்களுக்கு விசுவாசமில்லை ? என்று
கடாயினாரன்றோ ? இயேசுநாதரோ வெனின் ; அவர் தமக்கு ஒரு
இமைக்குநேரமாவது பராபரன் மறையாது, என்றும் பிரசன்னமா
கிக்கொண்டேயிருக்கும் போது, அவர் எப்படி பராபரனைநோக்கி என்
னை ஏன் கைவிட்டீர் ? என்று கடாவுவார் ? ஐயோ இயேசுநாதர்
அப்படியாகக் கூச்சலிட்டா ரென்பது ஒரு சித்தசுவயமுள்ள பா
மரனுக்கும் பொருந்தாதே. நேயர்காள், இன்னுங் கேளுங்கள் ;
மத்தே 14 - ம் அதிகாரம் "24 - அவ்வேளையிலே படவு கட
"லின் நடுவே சேர்ந்து எதிர் காற்றிருந்த தினாலே அலை
"களால் அலைவுபட்டது. 25 - அப்படி இருக்கிற பொ
"ழுது இரவின் நாலாம் சாமத்திலே இயேசுவானவர்
"கடலின்மேலே நடந்து அவர்களிடத்திற்குப் போனார்.
"26 - அவர் கடலின்மேலே நடக்கிறதைச் சீஷர்கண்டு கத்
"தளித்து ஆவேசம் உண்டாயிருக்கிற தென்று புலம்பி
"பயத்தினாலே கூப்பிட்டார்கள். 27 - உடனே இயேசு
"வானவர் திடன் கொள்ளுங்கள், நான்தான்பயப்படா
"திருங்கள் என்று அவர்களுடனே சொன்னார். 28 -
"பேதுரு அவருக்கு ஆண்டவரே நீரேயானால் சலத்தின்
"மேல் உம்மிடத்தில் வரும்படி எனக்குக் கட்டளையிடும்
"என்றான். 29 - அதற்கு அவர்வா என்றார் ; அப்பொ
"ழுது பேதுரு படவை விட்டு இறங்கி, இயேசுவினி
"டத் திற்கு வரும்படிக்குச் சலத்தின் மேலே நடந்து
"30 - காற்று பலத்திருக்கிறதைக் கண்டுபயம் அடைந்து
"அமிழத் தொடங்கி ஆண்டவரே என்னை இரட்சிக்க வே
"ண்டுமென்று கூப்பிட்டான். 31 - உடனே இயேசுவான
"வர்கையை நீட்டி அவனைப் பிடித்துக்கொண்டு அற்ப
"விசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்" என்று

கூறுகின்றது. இதனாலே பேதுரு என்கிற சீசன், கடலின் உரத்தினாலே கொஞ்சம் பயந்ததற்காக, அவனை அற்பவிசுவாசியே ஏன் பயந்தாய் என்று இயேசுநாதர் கண்டித்துக் கூறினாரென்பது நன்றாயுலப்படுகின்றதே. ஆகையால், பராபரனது ஞானசொரூபத்தினை சதா நோக்கிக்கொண்டிருக்கிற பூரணவிசுவாசமுள்ள இயேசுவானவர், தமதுபராபரனாலே முன்னாக அறிவிக்கப் பட்டதாக வந்தடுத்த ஹிம்சையைப் பொருந்தாமல் என்னை ஏன் கைவிட்டீர் என்று கூப்பிடுவாரா? அப்படி அவர் கூச்சலிட்டாரென்றால், பேதுருவைப் பார்க்கிலும், இயேசுவானவர் அற்ப விசுவாசி என்று சொல்லுதற்கு முற்றும் அருகமானவரே. இதுவுமன்றி மத்தேயு 17-ம் அதிகாரமோ வெனின் “ 15 - ஆண்டவரே
“ என் மகனுக்கு இரங்கும். அவன் சந்திர ரோகி
“ யாய்க் கொடிய வேதனை. படுகின்றான்; எப்படி எனில்
“ அடிக்கடி தீயிலேயும் அடிக்கடி சலத்திலேயும் விழுகி
“ றான் 16 - அவனை உம்முடைய சீசரிடத்தில் கொண்
“ டுவந்தேன். அவர்களுக்கு அவனைக் குணமாக்கத்திரா
“ ணியில்லை என்றான், 17 - அதற்கு இயேசுவானவர்
“ சொன்னது; ஆ! விசுவாசமில்லாத மாறுபாடுள்ளசந்த
“ தியாரே, எதுவரைக்கும் உங்களோடிருப்பேன்? எது
“ வரைக்கும் உங்களில் பொறுமையாயிருப்பேன்? அவ
“ னைஎன்னிடத்திற்குக் கொண்டுவாருங்கள் என்றார் 18-
“ அவனைக் கொண்டுவந்த பொழுது இயேசு வானவர்
“ அவனிலுள்ள பசாசை அதட்டினார்: உடனே அது அவ
“ னைவிட்டுப் போயிற்று. அந்தப் பிள்ளை அந்நேரமே,
“ சுகமடைந்தான் 19 - பின்பு சீசர்கள் மாத்திரம் இயேசு
“ வினிடத்தில் வந்து நாங்கள் அதைத் துரத்தும் படிக்கு
“ ஏன் எங்களுக்குத் திராணியில்லை என்றார்கள். 20 -
“ அதற்கு இயேசுவானவர் உங்கள் அவிசு வாசத்தினாலே
“ (திராணியில்லை) மேலும் ஒரு கடுகுவிதை அவ்வளவு
“ விசுவாசமாத்திரம் உங்களுக்கு உண்டானால் நீங்கள்
“ இந்தமலையை நோக்கி இவ்விடம் விட்டு அப்புறம் போ.



“ என்று சொல்ல அதுபோம்; அல்லாமலும் உங்களால்
“ கூடாத காரியம் ஒன்றும் இருப்பதில்லை என்று மெய்
“ யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் ” என்று கூறுகின்றது; இதனாலே கடுகளவு விசுவாசம், சீசர்களுக்கு இல்லை என்றும், அப்படி இருந்தால் அவர்களால் முடியாத தொன்றும் இல்லையென்றும் இயேசு நாதர் பிரமாணத்தின் பேரில் சொல்லியிருக்கிறதாகப் புலப்படுகின்றது. ஆகவே இயேசு நாதரோவெனின்; உலகங்களை எல்லாம் சேர ஒரு தட்டிலும் அவருடைய விசுவாசத்திலொரு அணுத்துணை ஒருதட்டிலும் வைத்தால், அவரது அணுத்துணையான விசுவாசத்தின் கனதியே மிகைக்கு மென்பது எதிர்வாத மின்றி எல்லாராலும் ஒப்புக் கொள்ளப் படும். அப்படியிருக்க பராபரனாலே பூரணவல்லமை நிரம்பவும் படைத்த இயேசு நாதரைச் (சற்றும் விசுவா சமில்லாத) பேதுருவைக் காண மோசமாக எண்ணி, அவர் சிலுவையிலிருந்து என்தேவனே என்னைஏன் கைவிட்டீர் என்று கூச்சலிட்டு உயிர்துறந் தாரென்று வெட்க மின்றிக் கூறும் படியான, ஒரு புத்தகத்தை வேதமென்று நம்புவது எவ்வாறான் மதிக்கேடா இருக்குமோ? ஐயோ! கடுகத்தனைவிசுவாச மிருந்தால் அப்படிப்பட்ட வரால் ஆகாதகாரியம் ஒன்றுமிராதென்று வாய் கூசாது பிரமாணமாகச் சொன்ன இயேசுவானவரா? பராபரனாலே தாம் முழுதும் கைவிடபட்டவராக இறந்தகால வாய்ப்பாடாக “ என்னை ஏன் கைவிட்டீர் ” என்று சொன்னார்?

ஓ! பேதைகளான கிறிஸ்துவ பண்டிதர்களே! ஓ! உங்களுக்கு ஞான மில்லையா? அவர் பராபரனாலே கைவிடப்பட்டவர்தானா? நம்புவீர்களா? அவர் பராபரனாலே கைவிடப்பட்டால், அவர் மன்னிப் பில்லாத பெரும் பாபி என்று ஏன் சொல்ல மாட்டீர்கள்? அடிக்கடி சீசர்களை அவிசுவாசிகளென்றும், விசுவாச மில்லாத மாறுபாடுள்ள சந்ததிகளென்றும் பழித்த இயேசு நாதர் ஏலி ஏலி லாமாசபக்தானி என்று பெருங் கூச்சலிட்டு உயிரை இழந்தார் என்கிறீர்கள்; அந்தோ! என்னபாபமான வார்த்தையை நெஞ்சு சுமஞ்சாமல் இயேசு நாதர் மீதில் சுமத்தினார்கள். ஏப்படிப்பட்ட புத்தியீனத் தினாலே அந்த அநாகரீக மானவார்த்தையை இயேசு நாதர் சொன்னாரென்று வேதபுத்தகத்தில் எழுதினார்களோ; நேயர்களே! இயேசு நாதரின் தகுதிக்குச் சற்று மருகமில்லாத போலி

வசனங்களன்றோ எந்நாளும் தெய்வஸ்தலங்களிலே ஓதப்பட்டு வருகின்றன? அந்தோ! நீவீர்கள் நியாயத் தீர்ப்புக் காலத்திலே என்னசெய்யப்படு வீர்களோ? மேலேசொன்ன காரணங்களையெல்லாம் நீவீர்கள் நன்குணர்ந்து பார்த்தால், இயேசுநாதர் ஒருபோதும், ஏலி ஏலிலாமாசபக்தானி என்று சொல்ல மாட்டாரென்றும் அப்படிச் சொன்னவன், இயேசு நாதருடைய பகைவனே என்றும் நம்புவீர்கள். ஆகவே நீங்கள் பாக்கிய வான்களே! நிற்க;

எமது நேயர்காள், இயேசுநாதர் தமது அரியவுயிரை இழந்த வராக அசுத்தவான்களைப் புதைக்கும் படியான பிரேதக்குழியில் மூன்று நாள்கிடத்தப்பட்டிருந்தாரென்பதற்கு நியாயம் இன்னதென்று ஏதாவது ஒருபோலி சமாதானமாவது உங்களால் சொல்லமுடியுமாகில். கொண்டு வாருங்கள். அசுத்த மானபிரேதக்குழியில் உயிரிழந்த வராக மூன்று நாள் ஏன் கிடந்தார்? என்னபாபம் பற்றியோ? ஆனால் இயேசு நாதர் எல்லாருடைய கண்களுக்குமுன்பாக உயிரிழந்து பிறகு அவர் எல்லாருடையகண் களுக்கு முன்பாக உயிரடைந்து வருவாராயின், அது ஒருபெருங்காரணமன்றோ? அது பற்றிச் சனங்கள் மனம் திரும்பிச் சீர்ப்படு வார்களென்றுகருதி அப்படி நடந்த தென்பீர்கள் போலும், நன்றாக; நேயர்காள், இயேசு நாதர் அவ்வாறாக எல்லாருடைய கண்களுக்கு முன்பாக மிகப்பழிக்கப்பட்டவராய்ச் சிலுவையில் உயிரிழந்து நரகலான அப்பிரேதக்குழியில் அடக்கப் பட்டாரென்று சொல்லுகிற பிரகாரமாக, அவர், எல்லாருடைய கண்களுக்கு முன்பாக உயிரடைந்துவரவில்லையே, சிலபேதைப் பெண்களுக்கும், மாறுபாடான சுபாபமுள்ள சீஷர்களுக்கு மாத்திரந்தானே அவர்காணப்பட்டதாக உங்கள் வேதம் சொல்லுகின்றது? அப்படியே, இயேசுநாதர் உயிரடைந்து சிலருக்குத்தோற்றப் பட்டதாக வைத்துக் கொண்டாலும் அப்படித் தோற்றப் பட்டவர் இயேசுநாத ரென்று, அக்காலத் தியவர்கள் நம்புவார்களா? இயேசு நாதர் எல்லாருடைய கண்களும் காணும் படியாக, எத்தனையோ பிரேதங்களைப் பிரேதக் குழியிலிருந்து எழும்பித் தத்தமக்குரிய வீடுகளுக்குப் போகும் படி செய்தார்; எத்தனையோ தீராத நோய்களைத் தீர்த்தருளினர். எத்தனையோ பிறவிக்குருடர்களைக் கண்விளங்கி நடந்து தத்தமக்குரிய வீடுகளுக்குப் போகும்படி உத்திரவிட்டார். எத்தனையோ பலங்கொண்ட அழுக்கான அசுத்த ஆவிகளைத் துரத்



திச் சுகப்படுத்தினர். இம்மட்டாகவா? அளப்பரிய ஆச்சரியமான அற்புதங்களை எல்லாம் எல்லாருடைய கண்களுக்கு முன்பாகச் செய்தும் அத்தனையுங் கண்ட அந்தயூதர்களாகிய பாதகர்கள் மனந்திரும்பினரிலர். ஆனால், அவர்கள் அந்த அற்புதங்களை யெல்லாம், அசுத்த ஆவியின் பலத்தினாலே இயேசு செய்கிறாரேயன்றி உண்மையில் பராபரனாலே நடத்தப் பட்டனவல்ல வென்றே எண்ணி இயேசுவைக் கொலை செய்யவே தேடினார்கள். அப்படிப் பட்ட லோபிகளாகிய இஸ்ரவேலர்களின் கண்களுக்கு முன்பாக இயேசுநாதர் சிலுவையில் அறையப் பட்டுச் சகித்தற்கரிய அவஸ்தையும் மரியாதை ஈனமும் செய்யப் பட்டதேயுமன்றி, எல்லாருடைய செவிகளும் கேட்க வழிப்போக்கர்கள் ஓ! இயேசுவே, நீதேவகுமாரனாயிருந்தால் உன்தகப்பனைக் கூப்பிட்டு, இந்தச் சிலுவையினின்று தப்பித்துக் கொள்வாய், எங்கேபார்ப் போம் என்ற சபதவார்த்தைகளைச் சொல்லித் திட்டினார்களன்றோ! அந்த நேரத்திலும் ஒன்றும் இயேசு நாதருக்குத் தேவ அருள் கிடைக்காமையினாலே அவர் என்தேவனே, என்தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்; என்று மிகுந்த சஞ்சலத்தோடே உயிர்துறந் தாரென்று கண்ட அந்தயூதர் களுக்கு முன்பாக, மூன்று நாளைக்குப் பிறகு இயேசுவானவர் உயிரடைந்து வருவாராயின், அவர்கள், அவரை இயேசுநாதர் வருகின்றா ரென்று சொல்லுவார்கள்? ஐயோ இயேசுவானவர் ஆவேசமாக வருகின்றாரென்று சொல்லுவார்களேயன்றி அற்புத மென்று எங்ஙனம் சொல்லுவார்? என்னென்று மனந்திரும்புவார்? இவ்வாறாக உணரும் தன்மையின்றி, இயேசு அவமானமாகச் சிலுவையில் உயிர்துறந்து மூன்றும் நாள் உயிரடைந்து வந்தால் இஸ்ரவேலர் மனம் திரும்புவாரென்று நினைப்பதும் சொல்லுவதும் மதிகேடன்றோ? அந்தோ! நேயர்காள்! இயேசுநாதருடன் இரண்டு பாபிகளானகள்வர்கள் சிலுவையில் அறையப்பட் டிருந்த தாகவும் அந்தக் கள்வர்கள்கூட இயேசு நாதரை நோக்கி நீர் மெய்யான தேவக் குமாரனாயிருந்தால், உம்மையும் எம்மையும் காரும், என்றார்கள் என்பதாகவும் உங்கள் வேதமே சொல்லுகின்றது. ஐயோ! உண்மையில் சிலுவையில் அறையப் பட்டிருந்தவர் இயேசு வேயானால், சந்தேக மின்றி அந்தக்கள்வர்களும் இயேசுவும், சிலுவையிலிருந்து நீங்கிவிடுவார்களென்பதில்யாதுதடை? நேயர்காள்! அப்படி அவர்கள் நீங்கியிருப்பார் களாயின் அந்தப் பாபிகளான இஸ்ரவேலர்கள் மனம் திரும்பிவிடுவார்களன்றோ; அவர்கள்

மனந்திரும்பத்தானே இயேசுவானவர் அனுப்பப் பட்டார்; எந்த சந்ததியில் அவர்கள் மனம் திரும்பும் நிலையினராயிருந்தாரோ அந்தச் சந்ததியிலன்றோ அற்புதங்கள் வெளியாகவேண்டும்? இயேசுவானவர், உண்மையில் பராபரனாலே அனுப்பப் பட்டவரன்றென்பதாக, அவர்கள் அடைந்திருந்த உறுதிக்குப் பலமாய் இயேசுவானவர், அவமரியாதை அடைந்து பராபர நிந்தையும் செய்தவராக உயிரை இழந்து பிரேதக் குழியும் புகுந்த பின்னிட்டு உயிரடைந்து வருவரேன்? அப்போது அவரை ஆவேசமென்று சொல்லுதற்கு யாது தான் தடையாகும்? அப்படி வருபவர் சிலுவையிலிருந்து வந்து விடக் கூடாதா? அற்புதம் காண்பிப்பது சந்தேக நிவாரணமாகவா; சந்தேகம் பலப்படவா; எதுபற்றி அற்புதம் காண்பிப்பதென்று எமது நேயர்களே சொல்ல வேண்டியது; நேயர்காள்! இயேசு வானவர் அடைந்த அவமானமும், துன்பமும், அவரை உண்மையாக நம்பியிருந்தவர்களின் மனங்களைக் கூடக்கெடுத்து விடுமன்றோ; சாத்தானும் அசுத்த ஆவிகளும் பலவாறாக, மனிதரைப்போல அவதாரம் படைத்து வரக்கூடிய நிலைமையை உடையனவே என்பது மறுக்கற்பாலதன்று; இயேசுவானவர் மனிதர்களுக்குச் சுவிசேஷப்பிரசங்கம் செய்யும் போதோவெனின், சாத்தானானவன், அவரது பிரசங்கங்களுக்கு இஸ்ரவேலரைச் செவி கொடாமலிருக்கும்படி செய்ததேயுமன்றி இயேசுநாதரின் சீஷர்களையும் கலைந்து இயேசுநாதரைப் பிரிந்து ஓடும்படி செய்து விட்டானென்பது நன்கு புலப்படுகின்றமையினாலே இயேசுநாதர் சிலுவையில் உயிர் துறந்த பின்னிட்டு மற்றிலும், அந்த இஸ்ரவேலர்களையும் சீஷர்களையும், கெடுத்து நாசமாக்கும் பொருட்டு அந்தச் சாத்தான்தானே, இயேசுவைப் போலுரு வெடுத்து நானே இயேசுவென்று கூறி, அவர் பிரசங்கித்தவைகளுக்கும் மோசேயின் வேதப் பிரமாணங்களுக்கும் விரோதமாக வேறுவிதங் கற்பித்து அதிலே சனங்களை நடக்கவழி கெட்டொழியப் போதித்துச் சீஷர்கள்மேல் ஆவேசமாகவும் தோன்றி அந்தச் சீஷர்கள் பிதற்றுவனவெல்லாம் நம்பும் படியாகச் சனங்களின் மனங்களைத் தனதாமாய் கையினாலே மருட்டிவைத்து விட்டானென்று கூறுவதற்குச் சந்தேகமென்ன? ஏன் சாத்தான் அந்தப்படி செய்யாது விடுவான்? அவனே சனங்களைச் சோதிப்பதற்காகப் பராபரனாலே படைக்கப் பட்டிருக்கின்றானென்பதை நீங்கள் பார்க்கவில்லையா? ஆகவே, எமது நேயர்காள், சிலுவையில் அறையுண்டவன்; இயேசு வல்ல



வென்றும் இயேசுவாயிருந்தால் சிலுவையில் அறையுண்டகாலத்தில் பேதைகளைப் போலவும் அவிசுவாசிகளைப் போலவும் தேவதூஷணமாக, என்தேவனே என்னை ஏன் கைவிட்டீர்? என்று சொல்லமாட்டாரென்றும் நீங்கள் அவசியம் நம்பவேண்டியது கடமையாயிருக்கின்றது.

இதோ இன்னும் ஒரு உறுதிப் பிரமாணம். இயேசுநாதர், அவ்வளவு இலகுவாய்த் தேவநிந்தனை செய்யமாட்டாரென்பதற்குச் சாட்சி காண்பிக்கிறேன்; தயைசெய்து நோக்குவீர்களாக;

இயேசுநாதர் பிறக்க ஆயிரத்தைந்நூறுவருடங்களுக்கு முன்னே, பராபரனுக்கு அன்பானயோபு என்னும் பெயரையுடைய ஒரு தாசர் இருந்தார்; அவர்மிகவும் ஆஸ்திவந்தரும்சந்ததிகள் உள்ளவருமாயிருந்தார். அக்காலத்திலே சாத்தானென்பவன் பராபரனது சந்நிதானத்தில் பிரசன்னமாயினான். அப்போது கருத்தர் அந்தச் சாத்தானை நோக்கி, ஓ! சாத்தானே என்தாசனான யோபை நாடுகின்றாயோ? என்றார். அவன், ஆம் அவனையா விசுவாசி என்று நம்புகிறீர். இதோ அவனுக்குண்டானவைகளை நீர் கெடுத்துவிட்டால் அவன் உம்மை உம்முடையமுகத்திற்கு முன்பாக உம்மை வெறுத்து விடுவான் என்றான். அப்போது பராபரன் இதோ அவனுக் குண்டானவைகளை உன்னுடையகைகளுக்கு ஒப்புவித்தேன் என்று பராபரன் சொன்னார். சாத்தான் யோபைச் சோதிக்கப் புகுந்து விட்டான்; பிறகு, யோபுவின் குமாரர்களும் குமாரத்திகளும், தங்கள் மூத்தசகோதரன் வீட்டிலே திராட்சப்பழ இரசம் புசித்துக் கொண்டிருக்கிற ஒரு நாளிலே ஒரு ஆள் யோபினிடத்திற்கு ஓடிவந்து, எருதுகளையும் கழுதைகளையும் சபேயர் வந்து அவைகளை ஓட்டிக் கொண்டு வேலையாள்களை வெட்டிப் போட்டுப் போய் விட்டார்கள் என்று சொன்னான். அப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் மற்றொருவன் ஓடிவந்து, ஐயோ, பராபரனது அக்கினியானது வானத்திலிருந்து விழுந்து ஆடுகளையும் வேலையாள்களையும் சுட்டெரித்து விட்டது, நான் மாத்திரம் தப்பினேன் என்றான். இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கையில் வேறொருவன் ஓடிவந்து ஐயா கல்தேயர்மூன்று கூட்டமாக வந்து எல்லா ஒட்டகங்களையும் ஓட்டிக்கொண்டு வேலையாள்களை எல்லாம் கொன்று போட்டார்கள். நான் தப்பிவந்தேன் என்றான், அப்

படியிருக் கையில் வேறொருவன் வந்து, உம்முடைய குமாரர்க
ளும் குமாரத்திகளும் உம்முடையமூத்த சகோதரன் வீட்டிலே
புசித்துத் திராச்சப்பழ இரசம் குடித்துக் கொண்டிருக்கையில்
பெருங் காற்றுவந்து வீசினதினாலே அந்த வீடுஇடிந்து விழ எல்
லாரும் மாண்டார்களென்றான். அப்போது யோபு என்பவர், பரா
பரன் கொடுத்தார். பராபரன் எடுத்தார் எல்லாம் பராபரனுக்
குடையதே என்று பராபரனைத் துதிசெய்து பொறுமையா யிரு
ந்தார் என்பதாக யோபு 1-ம் அதிகாரம் 1-முதல் 22-வரை
யில் காண்க. அப்பொழுது, சாத்தான் பராபரனைக் கண்டான்.
பராபரன் சாத்தானை நோக்கி, ஓ! சாத்தானே நீ நம்முடைய தா
சனான யோபை மறுபடியும் நாடுகிறாயோ? அவன் எனக்குப்பயந்த்
உத்தமனாயிருக்கிறான். நீ அவனை வீணாக நிர்மூலம் பண்ணும்படி
எம்மைத் தூண்டினாய், என்றார். சாத்தான் அதற்கு நீர் அவ
னின், பிறவாகிய வஸ்துகளைத் தொட்டீர். ஆனால் நீர், அவன்
எலும்பு சதைகளைத் தொடுவீரானால், அவன் உடனே உம்மை
மறுப்பவன் என்றான். அப்போது கர்த்தர் ஓ! சாத்தானே அவன்
உன்னுடையகை களிலிருக் கின்றான் என்றார். உடனே, சாத்தான்,
யோபினுடைய உள்ளங்கால் துவக்கி உச்சந்தலை வரையிலும் தன்
னுடைய கொடுமை பொருந்தியபுண் களாலே அடித்து வாதித்தான்.
அப்போதுயோபு, தாங்க முடியாமல் ஓட்டினாலே திரேகத்தைச்
சுறண்டிக் கொண்டு சாம்பலிலே உட்கார்ந்தான். அதைக்கண்ட
அவன் பெண்ஜாதி ஓ! இன்னும் உம்முடைய பராபரனை விசுவா
சிக்கிறீர் போலும், உடனே பராபரனைவிட்டு நீங்குவீராக என்றாள்
அவரோ வென்றால், ஓ! பயித் தியம்பிடித்தவளே பராபரன்
கையிலே நன்மையை வாங்கின நாம் தின்மையையும் வாங்கவேண்
டும் என்று நன்னியதிகளைச் சொன்னாரேயன்றி அவர் உதடுக
ளில் பாவமான சொல் வெளிவரவில்லை. இது யோபு 2-ம் அதி
காரம். இதற்குப்பிறகு நடந்தன வேதவெனின் யோபு திரேக
மெல்லாம் புழுக்களாகவே சொரிந்து மனுசனாலே சகிக்கக் கூடாத
பெரும் நோய் நேரிட்டுமிக்க அவஸ்தை யடைந்தான். ஆனால்
அவருக்கு உயிர்போய் விடுவது இலேசாக இருந்தது. இப்படிப்
பட்ட நிலைமையில் அவருடைய தேவபக்தியில் சிலவற்றை வேத
வாக்கியங்களாகவே எழுதுகின்றோம். இதோ யோபு 4-ம் அதி
காரம் "3 - இதோ நீர் அநேகருக்குப் புத்தி சொல்லி
"இளைத்த கைகளைத் திடப்படுத் தினீர். 4 - விழுகிற



"வனை உம்முடைய வார்த்தைகள் நிற்கப் பண்ணித் தள்
"ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத் தினீர்" என்று
தேமானியனாகிய எலிபா சென்பவன் அந்த யோபுவினுடைய வல்
லமையை அவன் முன்பாகக் கூறி அவனுக்கு நேர்ந்த துன்பங்க
ளினாலே. அவனை ஏழனம் பண்ணுபவனாகச் சொல்லுகிறதோ வெ
னின்; "5 - இப்போ தோவெனின் இது உம்முடைய
"மேல் வந்த படியினாலே ஆயாசப் படுகிறீர்; 6 - உம்மு
"டையதேவபக்தி உம்முடைய உறுதியும் உம்முடைய
"வழிகளின் உத்தமம் உம்முடைய நம்பிக்கையுமாய்
"இருக்கவேண்டியதல்லவோ? 7 - குற்றமில்லாமல் அழிந்
"தவன்யார்? செம்மைமார்க் கத்தார் அதம் பண்ணப்பட்
"டது எப்போது என்கிறதை நினைத்துக் கொள்ளுமே.
"8-நான் கண்டிருக்கிறபடி அநியாயத்தை உழுது வருத்தத்
"தை விதைத்தவர்கள் அதைத்தான் அறுக்கிறார்கள்"
என்றுசொன்னது வருகின்றது. இதனாலே, அந்த எலிபா சென்ப
வன் யோபு துன்பத்தைக் குறித்து, பாபம் செய்த படியினாலே,
இப்படிபட்ட அவஸ்தை உமக்கு வந்ததென் கிறானென்பது தெளியப்
படுகின்றது. இந்த யோபுக்குப் பராபரன் ஒன்றும் அறிவிக்க
வில்லை பராபரன் உன்னைச் சோதிப்பதற்காகச் சாத்தான் கையில்
ஒப்புவித்தேன் என்று சொல்லவும் இல்லை. இப்படியிருக்க அந்த
யோபு தனக்கு நேர்ந்த துன்பங்களைப் பராபரனுக்காகவே பொ
றுத் தாரேயன்றிப் பராபரநிந்தனை செய்யவேயில்லை; அதுபற்றி
அந்த எலிபா சென்பவன் அவரை நிந்திக்கிறானென்பது புலப்படு
கின்றது. விசயம், இப்படியிருக்க தேவக் குமாரன் என்று உங்க
ளால் சொல்லப் படுகிற ஒருவர், முன்னறிவிக்கப்பட்ட ஒரு விச
யம் அவருக்கு நேர்ந்தால் பராபரனை நிந்தித்துக் கூறுவாரா? வரு
மென்றது வந்தால் அது கைவிட்டதாகுமா? இதோ! யோபு 13-ம்
அதிகாரம் "15 - இதோ அவர் என்னைக் கொன்று போட்
"டாலும் அவர் மேல் நம்பிக்கையா யிருப்பேன். ஆனால்
"என்வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணு
"வேன். 16 - அவர் என் இரட்சிப்பு மாயிருப் பார்"
என்று கூறுகின்றது. இதனாலே மனிதனாலே சகித்தற் கரியதுன்
பத்திலே இருக்கிற யோபு எவ்வளவு பொறுமையாகப் பராபரனை

நம்பி ஒரு அனுத் துணையும் பராபரநிந்தனை செய்யவே செய்
யாமல் இருந்தார் என்பது நமது நேயர்களுக்கு நன்றுவிளங்கு
மன்றோ? நேயர்காள்! மனுஷனாலே சகிக்கக் கூடாத துன்பத்திலே
ஒரு மனிதனாகிய யோபு முன்னாக ஒன்றும் அறிவிக்கப் படாம
லிருக்க, தன்மீது பொருளைக் கொண்டும், பிள்ளைகளைக்கொண்டும்
தேகத்தைக் கொண்டும் வரப்பட்ட சகித் தற்குமுடியாத துன்
பங்களை எல்லாம் ஒரு அணுத் துணையுமருளாது சகித்தாரென்று
காணும் போது, தேவத்துவமையுள்ள ஒருவர் தமது உயிரைக் கொ
டுக்க நேரிடு மென்று முன்னமே அறிவிக்கப் பட்டிருக்கும் அப்
படி கொடுக்கும் காலத்திலே பராபரனை நோக்கி "ஏன் என்னைக்
கைவிட்டீர்?" என்று பராபரநிந்தனை செய்வாரென்று நம்புகி
றீர்களா? அப்படி அவர் செய்தால் அவர் உண்மையான தேவபக்தி
உடையவராவரா? இதோ யோபு 19-ம் அதிகாரம் "25-ஏனெ
"ன்றால் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்கிறதை
"யும் அவர் ஈறுங் கடைசியான வராய்த் தூளின்மேல்
"என்பதையும் நான் அறிந் திருக்கிறேன். 26-இந்த
"என்னுடைய தோல் முதலானவை அழுகிப் போன
"பிற்பாடு நான் என்மாம் சத்திலிருந்து பராபரனைப்பார்ப்
"பேன். 27-அவரை நான் எனக்கென்று பார்ப்பேன்.
"அந்நியகண்ணல்ல என்னுடைய கண்களே அவரைக் கா
"ணும்" என்று கூறுகின்றது. இதனாலே யோபுவின் பொறு
மையும் அவரது சொற்களின் உறுதியும் அவரைச் சொல்லுதற்
கரியவிசுவாசி என்று புலப்படுத்து கின்றதே. இயேசுவானவர்.
தேவத்தன்மையுள்ள ஒரு பெரியவிசுவாசி யென்பதில்யாது தடை?
அவர் சிலுவையில் அறையப்பட்ட நேரத்திலே யோபுவினால் பிரசங்
கிக்கப் பட்டவிதமான ஏதாவது ஒரு வார்த்தை சொன்னதாகக்
காணப்படுகின்றதா? இல்லையே, அப்படியிருக்கும் போது சிலுவை
யில் தேவதூஷணம் செய்து உயிரிழந்த ஒரு அஞ்ஞானியாகிய பாத
கனை இயேசுநாதர் என்று கூறுவது குற்றமாகாதா? இதோ யோபு
23-ம் அதிகாரம் "10-ஆனால், என்னிடத் திலிருக்கிற
"மார்க் கத்தை அறிவார், அவர் என்னைச் சோதிக்கை
"யில் பொன்னாக விளங்கிப் போவேன், 11-என் கால்
"கள் அவர் அடிகளைப் பற்றிப் பிடித்தன. அவருடைய



"நெறியை நான் சாயாமல் கைக்கொண்டேன். 12-
"அவருடைய உதடுகளின் கற்பனைகளை நான் விட்டுப்
"பின் வாங்கின தில்லை. 13-அவரோ வென்றால்
"ஒரே நிலையாயிருக் கின்றார். அவரைத் திருப்பப் போ
"கிற வர்யார்? அவருடைய சித்தம் வேண்டு மென்றி
"ருக்கிறதை அவர் செய்வார். 14-எனக்குக் குறித்
"திருக்கிறதை நிறை வேற்று வார் இதைப்போல் ஒத்த
"வைகள் இன்னும் அவரிடத்தில் வெகுவாக இருக்கின்
"றன" என்று கூறுகின்றது, இதனாலே, யோபென்பவர் தமக்கு
இப்போது சம்பவித் திருக்கிற கஷ்டநஷ்டங்களைப் பார்க்கிலும்
இன்னும் அதிகமாக வருவதை எல்லாம் பராபரனி மித்தமாகச்
சகிப்பாரென்றும் இவ்வாறு வருவதெல்லாம் தாம் பொன்னைப்
போலவிளங்கக் கூடிய தன்மையினதா கியதேவ, அருள் என்றுக
ருதியிருந் தாரென்றும் நன்றாய்த் தோன்றுகிற தன்றோ? ஆ!
யோபோ வெனின் ஏசுநாதரைப் போலல்லவே, அவர் ஒரு நீதி
மானாக அல்லது ஒரு தீர்க்கதரிசியாக இருந்தாரென்று தானே
காணப் படுகின்றார் அப்படிப் பட்டவர் தாம் முன்னாக ஒன்றும்
அறிவிக்கப் படாத நிலைமையினராயிருக் கையில் அவருக்கு நேர்ந்த
சம்பவங்களில் ஒரு சிறியபாக மாகவாவது சிலுவையில் இயேசு
நாதருக்கு நேர்ந்த விசயம் நிதானிக் கத்தக்கதாகுமா? வேதத்தி
னாலே அது உங்களுக்கு உண்மைப் படாதிருக் காதன்றோ? நேயர்
காள், மஹா உன்னதமான இயேசுவோ வென்றால்; உலகத்திலே
யிருக்கப் பட்டசகலதுன் பங்களையும் ஒன்றாகத் திரட்டித் தம்மீது
வைத்தாலும் அவ்வளவும் அவர் ஆநந்தமாகச் சுமந்து பராபரனைத்
தோத்திரம் செய்வாரேயன்றி ஒரு சிறிதும் கலங்கி ஏன் என்னைக்
கைவிட்டீர் என்று தெய்வநிந்தனை செய்வாரென்று நீங்கள் நினைக்
கலாமா? யோபு என்பவர் அநேக வருசங்களாகத் தமது தே
கத்திலே சொரிந்த புழுக்களை நோக்கி நீவீர்கள் எனது தாயும்
சகோதரிகளுமே என்று சொல்லி அப்புழுக்கள் தேகத்தினின்று
கீழே விழாது தமது சதைகளை அவைகளுக்கு உணவாகக் கொடுத்
துப் பராபரனைப் புகழ்ந்து அப்புழுக்களையும் உகந்து அப்படி பட்
டகொடிய துன்பத்தை யின்பமாகவே கொண்டு பராபரன் தமக்
குக் கொடுத்த தென்று பராபரனுக்காக உவந்திருந் தாரன்றோ?
இயேசுநாதர் சிலுவையில் மூன்று மணிநேரங் கூட இருக்கவில்

லேயே, அப்படியிருக்கும் போது அவர் சற்றும் பொறுமை செய்
யாது பராபரனிடத்தை செய்ததாகக் காணப்படுகின்றதே. இயேசு
நாதர் அவ்வாறுகப் பொறுமை இல்லாத அஞ்ஞானியா? எமது நே
யர்காள்! இதோ யோபு 17-ம் அதிகாரம் "14 - அழிவைப்
"பார்த்து நீஎன் தகப்பனென் கிறேன். பூச்சிகளைப் பார்
"த்து நீங்கள் என்தாயும் சகோதரியுமென்கிறேன். 15 -
"என்பார்த்துக் கொள்ளுதல் இப்போது எங்கே? நான்
"பார்த்துக் கொண்டதைக் காண்பவன்யார்?" என்று
கூறு கின்றது. இதனாலே யோபு என்பவர் தமது திரேகத்திலே
சொரிந்த புழுக்களைத் தாயென்றும் சகோதரி என்றும் எண்ணினு
ரென்பது நன்று புலப்படும். ஆகவேநேயர்காள், நீவீர்கள் இயேசு
நாதரா? யோபுவா? பொறுமைசாலி என்பதை நன்குய் ஆராய்ந்
துசிலுவையில் அறையப் பட்டவன் இயேசுவல்லவென்றும் அவர்
தீர்க்க விசுவாசி என்றும் யோபுவைப் பார்க்கிலும் எத்தனையோ
மடங்கு பராபரனுக்காகப் பொறுமை செய்பவ ரென்றும் மனச்
சாய்மை செய்து உய்வீர்களாக. இதோ எமது நேயர்காள்! மத்
தே 23-ம் அதிகாரம் "35 - நீதிமானுகிய ஆபேலின் இரத்
"தமுதல் நீங்கள் தேவாலயத் திற்கும் பீடத்திற்கும் நடு
"வேகொலைசெய்த பரகியாவின் குமாரனுன சகரியாவின்
"இரத்தம் வரைக்கும், பூமியிலே சிந்தப்பட்ட நீதியான
"இரத்தமெல்லாம் உங்கள்மேல் வரும்படிக்கு (அப்படி
"செய்வீர்கள்) 36-அவை எல்லாம் இந்தச் சந்ததியின்மேல்
"வருமென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்"
என்று இயேசுநாதர், இஸ்ரவேலர்களை நோக்கிச் சென்னதாகக்
கூறுகின்றது. இந்தவேத வசனத்தினுலே, இஸ்ரவேலர்கள் யூதர்
களெனப் பட்டவர்கள் மேலே தேவாலயத் திற்கும் பலிபீடத்திற்
கும் நடுவிலே சிந்தப்பட்ட இரத்தங்களில், இயேசுநாதருக்கு முன்
னுக வந்ததீர்க்க தரிசியான சகரியாவின் இரத்தம் வரையில்
உள்ள இரத்தப் பழிகளைத்தானே கேட்கப்படு மென்று வெள்ளி
தாய் ஏற்படுகிறது? நேயர்காள், இயேசுநாதரின் இரத்தமும் பூமி
யில் சிந்தப் பட்டிருந்தால் அந்த இரத்தம் நீதியான இரத்தமல்
லவோ? அந்த இரத்தத்தைப் பற்றிப்பராபரன் அவர்களைக் கேட்க
மாட்டாரோ? அதை ஏன் இயேசுநாதர் கூறவில்லையோ? ஐயோ!



நேயர்களே, இந்தவேத வசனமானது இயேசுநாரின் இரத்தம் பூமி
யில் சிந்தவில்லை என்பதற்குப் பலமான சட்சியா யிருக்கின்றதே.
இந்த வேதவசனத்தை நன்குயுணர்ந்தால், ஒருபோதும் இயேசு
நாதர் சிலுவையில் அறையப் படவில்லை என்று நீங்கள் நம்பலாம்.
இயேசுநாதர் சிலுவையில் அறையப்படு வாராயின், நீதிமானுகிய
ஆபேலின் இரத்தமுதல் இயேசுவின் இரத்தம் வரைக்கும் இந்தச்
சந்ததியில் கேட்கப்படும் என்றல்லவோ சொல்லி இருக்கவேண்டும்?
அப்படிச் சொல்லாது சகரியாவின் இரத்தம் வரைக்கும் கேட்கப்
படும் என்ற மையினுலே தீர்க்க தரிசிகளின் இரத்தம் சகரியா
வுக்குப் பிறகு பூமியில் சிந்தப் படவில்லை என்று பரிஷ்கார
மாய்த் தோற்றுகின்றது எமது நேயர்கள் ஒருவேளை, இயேசு
நாதரின் இரத்தம் உலகத்தை இரட்சிக்கும்படி சிந்திய படியினு
லே அதைப்பற்றி இயேசுநாதர் கூறவில்லை என்று சொல்ல முன்
வருவார்களோ? அப்படியாயின், உலகம் இரட்சிப்படைய சிந்திய
இரத்தம் நியாயமாகச் சிந்தப் பட்டதேயன்றி அநியாயமாகச் சிந்
தினதாகச் சொல்லக் கூடாதன்ரு? நீதியாகச் சிந்தப்பட்டால்
அது கேட்கப் படாது தானே? அப்போது அந்த இரத்தத்தைச்
சிந்து வதற்கு ஹேதுவாயிருந் தவர்களெல்லாரும் நன்மை செய்
தவர் களாகவன்ரு இருக்கவேண்டும்? அவ்வாறுக நீதியாய் இயே
சுநாதரின் இரத்தம் சிந்துவதற்காக அவர் சிலுவையில் அறையப்
பட்டகாலத்தில் அவர்ஏன், பராபரனை நோக்கி "ஏலிஏலிலாமா
சபக்தானி" என்று. பெருங் கூச்சலாகச் சப்தித்து உயிரைத்
துறந்தாரோ? அப்படிவாய் விட்டலறுவதுமடமையும் தேவபக்
தியின் மையுமாக முடியாதோ? ஆகவே எமது நேயர்கள் அப்ப
டிச் சொல்லு வார்களென்று நாம் ஒருகாலும் நினைக்க மாட்
டோம். எமது நேயர் நாம்சுருக்கமாக எழுதுபவைகளை எல்லாம்
மனங்களித்து எழுத்தெண்ணி வாசித்துப் பார்ப்பார் களேயாயின்
இயேசுநாதர் சிலுவையில் அறையப் பட்டாரென்றும் ஏலிஏலிலா
மா சபக்தானி என்று பெருங் கூச்சலாகக் கூவி உயிரை இழ
ந்தாரென்றும் மூன்றுநாள் அசுத்தமான பிரேதக் குழியினிடத்து
உயிர் நீங்கினவராகக் கிடந்தாரென்றும் பிறகு உயிர்த் தெழுந்து
சீசர்களுக்கும் சிலபேதைப் பெண்டுகளுக்கும் காணப்பட்டுத் தாம்
யாவரும் அறியும் படியாகச் சொன்னவேதக் கட்டளைகளை மாற்றி
வேறுவிதி கூறினுரென்றும் நம்புவதையும் சொல்லுவதையும் தீர்க்க
தரிசிகளை மரியாதை யீனமாகக் கூறு வதையும் பிறவுமானவேத

பொல்லாங்கு செய்வதையும் விட்டுப் பராபரனைக் காவல்கொள்ளுவார்களாக, அப்படி செய்வார்களேல் அவர்கள் பாக்கியவான்களே. ஆமன்.

## உலக இரட்சகர்.

இது, எல்லா உலகங்களுக்கும் இரட்சகராயிருப்பவருக்குரிய அதிகாரவரம்பினைத் தெளக் கூறுகின்றது.

நேயர்காள்! உலகத்திலே விளங்காநிற்கும் சகலமனுப் புத்திரர்களும் பராபரனது சேனைகளே என்பது எதிர்வாதமின்றி எல்லாராலும் ஒப்புக்கொள்ளற் பாலதே. அச்சேனைகளோ வெனின்; பல கோத்திரத்தினர்களும் பலபாஷையினர்களும் பலசுபாபத் தன்மையினர்களுமாகவே பிரிந்திருந்தார்கள். அவர்களோ, பராபரனுக்குத்தாம் சேனைகள் என்பதை யுணருமியல் பினராயிருந்தும் பராபரனுக்குத் தாம்செலுத்தவேண்டிய வந்தனத்தைச் செலுத்த மறந்தவர்களாகவே பெரும்பாலும் காணப்பட்டதேயுமன்றி, பராபரனுக்குப் பொல்லாங்கான காரியங்களையும் செய்துவந்தார்கள். அது பற்றிப்பராபரன் தாம் தெரிந்துகொண்ட மனுசர்களில் சிலருக்குத்தமது கிருபையினாலே தமது சப்தத்தைக் கேட்கப்பண்ணி இன்னின்னார் இன்னின்ன சாதியார்மீது இன்னின்ன கற்பனைகளைக் கொண்டு நம்முடைய வழியக்காரர்களாகச் செல்லக் கடவீர்களென்று கட்டளைபுரிந்தார். அப்படி கட்டளை பெறப்பட்டவர்களே தீர்க்கதரிசிகளெனப் படுகின்றார்கள். ஆனால், தீர்க்கதரிசிகள் சாதிகள் தோறும் வெவ்வேறான கட்டளைகளை அவ்வவர் சுபாபத்திற்கும் குணத்திற்கும் தக்கபடியே போதித் திருக்கின்றதாகத் தெரிகிறது. அது பராபரனது செயல். அவர்களோ, ஆதாம், சேது, நோவா, ஆபிரகாம், லோத்து, இஸ்மவேல், இசாக்கு, யாகோபு, யோசே, முதலாயினோர், பலகோத்திரத்தாருக்குப் பலவிகற்பமான கற்பனைகளைக் கொண்டு கட்டளை செய்தார்கள். ஆனால் கிறிஸ்து வேதமெனப் படும்பைபிள் புத்தகத்தில் குறிக்கப் பட்டிருக்கிற மோசே முதலாக, இயேசு வரையிலுமான சிலதீர்க்கதரிசிகளோ வெனின் இஸ்ரவேல் சந்ததியார்களுக்கு மாத்திரம் அனுப்பப்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். இதனாலே இஸ்ரவேல்



வம்முசத்தார்கள் மிகுந்த மூர்க்கமுள்ளவர்களென்றும், தேவபக்தி யில்லாதவர்களென்றும் நன்றியறிவில்லாத அயோக்கியர்களென்றும் காணப் படுகின்றார்கள், என்பது எமது கிறிஸ்துவ நேயர்களுக்கு நன்றாய்த் தெரியலாம். மகா அன்புள்ள பராபரனோ வெனின் தமதுசேனைகளைத் தீர்க்கதரிசிகளைக்கொண்டு, பலவாறாகத் தீர்க்கதரிசனமென்கிற அத்தாட்சிகளினாலே சன்னம் சன்னமாக மடமை என்கிற இருளினின்றும் சீர்படுத்தி, நாகரீகமென்கிற பிரகாசத்திலே கொண்டுவந்தார். ஆகவே, அவரது சேனைகளாகிய மனுப்புத்திரரெல்லாரும், இனிஒரே தன்மையான கற்பனைகளைக் கைக்கொண்டு ஒழுகும் சுபாபத்தினராய்ப் பரலோக இராச்சியத்தினது நிலைமையைத் தெரிந்துகொள்ள ஹேதுவாயினரென்பது வெளியாயிற்று. அதுபற்றிப் பராபரன் தமது சேனைகளில் பலவிகற்பமாய் நியமித்திருந்த ஆதிகற்பனைகளையெல்லா மாற்றி எல்லாசேனைகளும் இனிஒரேதன் மையான கற்பனையையேகைக்கொண்டு ஒழுகவேண்டுமென்றும் அவர்களெல்லாரும் ஒரே இரட்சகரைக்கொண்டு இரட்சிப்பு அடையவேண்டுமென்றும் தமது பேரன்பினாலே உத்திர வருளினார். அவ்வாறாகப் பராபரனுடியிருந்த இரட்சகரைக் குறித்து ஒவ்வொரு கோத்திரத்தின்பேரிலும் சாதிகளின் பேரிலுமாக அனுப்பப்பட்டுவந்த எல்லா ஒவ்வொரு தீர்க்கதரிசிகளாலும் அவ்வக்கோத்திரத்தார்களும் சாதியர்களும் அறிவிக்கப்பட்டே வந்தார்கள். அப்படியே, ஒவ்வொரு தீர்க்கதரிசிகளும் தமக்குப்பின் வருபவரைக்குறித்துச் சொல்லிவந்தார்கள். நிற்க. பராபரன் ஒருவரே கர்த்தராயிருப்பதினாலே கடைசியாய் ஒருவரே பராபரனது எல்லாசேனைகளுக்கும் பொதுவான இரட்சகராயிருக்க வேண்டுவதும் நியதியே. அது உலகத்திலே அரசு புரிந்துவரும் ஒரு அரசனை எடுத்துக்கொண்டால், அவ்வரசனது எல்லாசேனைகளுக்கும் பொதுவாக ஒருவனே சேனாதலைவனாக இருப்பது இயற்கையே என்பதினாலே எமது நேயர்களுக்கு நன்கு புலப்படுமன்றோ? எமது நேயர்காள்! இப்போது உலகத்திலே விளங்கிவரும் வேதங்கள் மாத்திரந்தான் பராபரனாலே அருளிச் செய்யப்பட்டவைகளென்பதன்று. அநேகம் இக்காலத்திலே காணப் படாது ஒழிந்துபோயின. ஆனால், உலகத்தின் எல்லா சேனைகளுக்கும் இரட்சகராய் அனுப்பப்பட்டவர் வசமாக ஒப்புக்கொடுக்கப்பட்ட வேதமே இப்போது சேனைகளாலும் அங்கீகாரம் செய்யப்பட வேண்டியதென்பது சத்தியம்.

அது சத்தியமென்றதற்கு உங்கள் வேதமே சாட்சி கூறுகின்றது;

இதோ! ஏசாயா 42-அதிகாரம் "இதோ நாம் தெரிந்து "கொண்டவரும் நமது ஆத்துமா பிரியமாய் இருப்பவ "ரும் நாம் ஆதரிக்கிறவருமாகிய நம்முடைய பணிவி "டைக்காரன் நம்முடைய ஆவியை அவர்மேல் வைக் "கிறோம். அவர் சாதிகளுக்கு நியாயத்தை வெளிப்ப "டுத்துவார். 2- அவர் கூப்பிடாமலும் சத்தத்தை உயர்த் "தாமலும் தம்முடைய சத்தத்தை வீதியிலே கேட்கப் "பண்ணாமலும் இருப்பார். 3- அவர் நெரிந்த நாணலை "முறிக்காமலும் மங்கியெரிகிற திரியை அவிக்காமலும் "நியாயத்தை உண்மையாக வெளிப்படுத்துவார் 4- "அவர் நியாயத்தைப் பூமியிலே நிலைப்படுத்துமட்டும் "இளக்கரிப்பதில்லை, பதறுவதுமில்லை; அவருடைய "உபதேசத்திற்குத் தீவுகள் காத்திருக்கும்" என்று கூறுகின்றதே. இதனாலே பராபரன் உலக இரட்சகராகவும், பூமியிலே பராபரனது சேனைகளாகிய மனுட புத்திரர்களுக்கெல்லாம் ஒரே நீதியைக் கற்பிக்கிறவருமாகிய தமது ஊழியக்காரன், ஒருவன் வருவான் என்று பராபரன், ஏசாயா என்னும், தீர்க்கதரிசியினாலே இஸ்ரவேலர்களுக்கு அறிவித்திருக்கிறார் என்பது நன்கு புலப்படுகின்றது; நீரும் எமது நேயர்கள், மேல்கூறிய வேதவாக்கியத்தை இயேசுநாதரைக் குறித்ததென்கிறீர்கள். அது முற்றிலும் மோசமான விசயம்; ஒருவருக்குச் சேரவேண்டிய பாத்தியத்தை அவரல்லாத மற்றொருவருக்குச் சேர்த்து விடுவதாகிய குற்றத்திற்கு அவர்கள் நியதியர் யிருக்கிறார்கள்; இதோ, இயேசுநாதரைக் கிறிஸ்துவர்கள், தேவக்குமாரன் என்கிறார்கள். இந்த வேதவசனமோவெனின், பராபரன், தமது ஊழியக்காரன், என்று சொல்லுகிறதாகக் கூறுகின்றது. மேலும் இயேசுவானவர், இஸ்ரவேல் சாதிக்குமாத்திரம் அனுப்பப்பட்டவர் என்பது எமது நேயர்கள் அறிவார்கள். இந்தவேத வசனமோவெனின் "சாதிகளுக்கு "நியாயத்தை வெளிப்படுத்துவார்" என்று கூறுகிறது. சாதிகளென்று பன்மையாகக் கூறிய படியினாலே அது எல்லாசாதிகளுக்கும், நியாயத்தை வெளிப்படுத்துகிறவரைப்பற்றியதே என்



பது நன்று புலப்படுகின்றது. இயேசுநாதரோ தமது சுவிசேசத்தை உலகத்திற்கு அல்ல, இஸ்ரவேல் சாதிக்கு மாத்திரம் போதித்து முடிப்பதற்கு முன்னமேயே, அந்த இஸ்ரவேலர்கள் இயேசுவை, மிக இளக்கரிக்கும்படி செய்து சிலுவையில் அறைந்து விட்டார்களென்று ஏற்படுகிறது. இந்த வேதவசனமோவெனின் "அவர் "நியாயத்தைப் பூமியிலே நிலைப் படுத்துமட்டும் இளக்கரிப் "பதில்லை" என்று கூறுகின்றது. இப்படியிருக்க இந்தவேத வசனம், இயேசுநாதரை எப்படி குறிக்கும்? இந்தவேத வசனத்திற்கு இயேசுநாதர் எப்படியாத் தியஸ்தராவர்? "பூமியில் நிலை "நிறுத்தப்படும்" என்றபடியினாலே உலக முழுவதற்கும், ஒரே நீதியைக் கற்பிக்கிறவரைக் குறித்து, அந்த வேதவசனம் சாட்சி கூறுவதாக உங்களுக்குப் புலப்படவில்லையா? இயேசுவானவர், இஸ்ரவேல் கோத்திரத்திற்குச் சொல்லப்பட்ட நீதியை மாத்திரமன்றோ போதித்தார்? அந்த நீதியை இஸ்ரவேல் குடும்பத்தாரன்றி மற்றவர் அநுசரிக்க முடியாதே? இஸ்ரவேலர்களுக்குப் பஸ்காசெய்யும்படி பராபரன் உத்திரவிட்டதானது அவர்கள் எகிப்தில் சிறைப்பட்டிருந்த காலத்திலே, அவர்களை மீட்கும்படி பராபரன் எகிப்திலே தமது வல்லமை பொருந்திய கையை நீட்டுகையில் இஸ்ரவேலர்கள் மீதியாகும் பொருட்டு அவர்களின் வாசல்களிலே இரத்த அடையாளம் இருக்கவேண்டுமென்று கற்பித்த ஒரே கற்பனையன்றோ? அது இஸ்ரவேலர்களல்லாத இதர குடும்பத்தாருக்கு எப்படி பொருந்தும்? உங்கள் வேதத்தை நன்றாய்க் கவனித்தீர்களாயின், இஸ்ரவேலர்களுக்குக் கற்பித்த கற்பனைகளெல்லாம், அந்தச்சாதியைக் குறித்து ஒருகாரணம் பற்றியதே என்றும், அது பொதுவான கற்பனை ஆகாதென்றும் நன்கு புலப்படும். அல்லாமலும், இயேசுநாதர், பேதுருவையும் சேபேதேயுவின் குமாரர் இருவரையும் கூட்டிக் கொண்டுபோய்த் துக்கமடையவும் மிகவும் வியாகூலப்படவும் தொடங்கிப் பின்பு அவர்களை நோக்கி என் ஆத்துமா மரணபரியந்தம் மிகுந்த துக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். அந்த வேதவசனமோவெனின்; "அவர் பதறுவதுமில்லை" என்று கூறுகின்றது. ஆகவே, பதறாத நிலைமையை உடையவரைப் பற்றியன்றோ. அந்த ஏசாயா வேதவாக்கியம் சாட்சி கூறுகின்றது? இந்தக் காரணங்களினாலே, உலக இரட்சகராக ஒருவரை அநுப்புவதாகப் பராபரன் ஏசாயா தீர்க்கதரிசியினாலே இஸ்ரவேலர்களுக்குத் தெரிவித்

இருக்கிறதாக நீங்கள் உணர்வீர்களாக. இதோ ஏசாயா 42-ம்
அதிகாரம், "6-நீ குருட்டுக் கண்களைத் திறக்கவும் கட்டு
"ண்டவர்களைக் காவலிலும், இருளில் உட்கார்ந்திருக்கிற
"வர்களைச் சிறைச்சாலையிலு மிருந்து புறப்படப் பண்
"ணவும் 7-கர்த்தராகிய நாம் உம்மை நீதியாய் அழை
"த்து உம்முடைய கையைப் பிடித்துக்கொண்டு உம்
"மைத் தற்காத்து உம்மைச் சனத்தின் உடன்படிக்கைக
"யாகவும் சாதிகளின் வெளிச்சமாகவும் வைக்கிறோம்"
என்று கூறுகின்றதே. இதனாலே உலக இரட்சகரானவர் பராபர
னாலே தற்காக்கப் பட்டவராகத் தாம்வந்த வேலையைப் பூர்த்தி
யாக்கி எல்லா சாதிகளுக்கும் இரட்சிப்பைக் கொடுக்கும் வெளிச்
சமாகவும், எல்லாசாதிகளும் உம்முடைய உத்தரவின்படி நடக்க
வேண்டு மென்கிற கட்டளையை உடையவராகவும் உம்மை நாம்
வைப்போம் என்று பராபரன் கூறுகிறதாக நன்கு புலப்படுகின்
றது. இந்த வேதவசனங்கள் இயேசுவைக் குறித்ததென்று எமது
நேயர்கள் சொல்லுகிறார்கள் இயேசு நாதருக்கு உரிய தன்றென்
பது வெளியரங்கமே; இயேசு வானவர், பராபரனாலே தற்காக்
கப் படவில்லை, அதுபற்றியே அவர் பகைவர்கையில் ஒப்புக் கொ
டுக்கப்பட்டாரென்று நீங்கள் சொல்லுகின்றீர்கள். மேலும் இயேசு
நாதர் சனத்தின் உடன்படிக்கை யானவர் என்று சொல்ல முடி
யவில்லை. அவர் இஸ்ரவேலருக்கு மாத்திரம் உத்தரவிடக் கூடிய
வரா யிருந்தாரென்பது வேதப்பிரமாண மென்பது வெளி. அப்ப
டியே இயேசுவானவர் எல்லா சாதிகளுக்கும் பிரசன்னப் பட
வில்லை. இஸ்ரவேலருக்கே யன்றி; அதுபற்றி இயேசுவைச் சாதி
களுக் கெல்லாம் வெளிச்சமென்று சொல்லுவது நியதியாகாதன்
றோ? இதோ ஏசாயா 49-ம் அதிகாரம் "6-யாக்கோபின்
"கோத்திரங்களை நிமிர்த்தவும் இஸ்ரவேலில் மீந்துவைக்
"கப் பட்டவர்களைத் திருப்பவும் நீர் நமக்கு ஊழியக்
"காரனாயிருக்கிறது கொஞ்சக் காரியமா யிருக்கிறது. நீர்
"பூமியின் கடைசி பரியந்தமும் நமது இரட்சிப்பா யிரு
"க்க உம்மைச் சாதிகளின் வெளிச்சமாகவும் வைத்தோ
"மென்கிறார்" என்று கூறுகின்றது. இதனாலே, ஒருவரை
நோக்கிப் பராபரன் உம்மை இஸ்ரவேலர்களுக்கு மாத்திரம் அல்ல



எல்லா சாதிகளையும் இரட்சிப்பவராக வைக்கிறோம், என்று கூறி
னதாக நன்கு புலப்படுகின்றது. எமது நேயர்கள், இந்தவேத
வாக்கியத்தை இயேசுவைக் குறித்த தென்று நம்புகிறார்கள். அது
அநாதாரமான நம்பிக்கை என்பதை எமது நேயர்கள் மறந்தார்
கள் போலும். அந்தோ. இயேசுநாதர் தாம், இஸ்ரவேலர்களுக்கு
மாத்திரம் அனுப்பப்பட்டவ ரென்று பரிஷ்காரமாய்ச் சொல்லி
விட்டாரென்பது முன்னர்க் கூறப்பட்டிருக்கிறது; அல்லாமலும்
இயேசுநாதர் தாமே கடைசியான தேற்றுகிறவரென்று சொல்லவு
மில்லை. ஆகவே. பூமியின் எல்லா சனங்களுக்கும் அவர் இரட்சக
ராகாரென்று தெளிவாய்ச் சொல்லலாம். இதோ யோவான் 15-ம்
அதிகாரம் "26-பிதாவினிடத்தி லிருந்து நான் உங்களு
"க்கு அனுப்பப் படுபவருமாய் பிதாவினிடத்தி லிருந்து
"புறப்படுகிறவருமாய் இருக்கிற சத்திய ஆவியாகிய தே
"ற்றுகிறவர் வரும்பொழுது அவர் என்னைக் குறித்துச்
"சாட்சி கொடுப்பார்" என்று இயேசுநாதர் கூறினதாகக்
கூறுகின்றது. இதனாலே இஸ்ரவேலர்கள் இயேசுநாதரினாலே தேற்
றப்பட்டா ரென்பது காணப்படவில்லை. அவர்கள் இயேசுநாத
ருக்குப் பின்னாலே வருபவராலே தேற்றப்படுவார்க ளென்பதுவே
நன்கு புலப்படுகின்றது. ஆகவே இயேசுநாதர் கடைசியாகிய இர
ட்சகரல்லர் என்பது வெளியாயிற்று. அவர் கடைசியாகிய இரட்
சகரா யிருந்தால், அவருக்குப்பின் ஒருவரும் தேற்றுகிறவராக வர
ல்வேண்டுவதில்லை யென்பது யோசிக்கவேண்டாத உண்மை. இதோ
ஏசாயா 52-ம் அதிகாரம் "1-எழும்பு எழும்பு சீயோனே,
"உன் பொன்னைத் தரித்துக்கொள், பரிசுத்தப் பட்டண
"மாகிய எருசலேமே உன் அலங்கார வஸ்திரங்களைத்
"தரித்துக்கொள். ஏனெனில் சுன்னத் தில்லாதவனும்
"அசுத்தனும் இனி உனக்குள் வருவதில்லை" என்று கர்த்
தர் கூறினதாகக் கூறுகின்றது. இதனாலே எருசலமானது கடைசி
யாய்ச் சுன்னத்துச் செய்யப்பட்டவர்கள் வசம் ஒப்புக்கொடுக்கப்
படுமென்பது நன்கு விளங்கவில்லையா? எமது நேயர் நன்றாய்க் கவ
னிக்காமலிருப்பதே அவர்களின் துரதிட்ட மென்பேம். நீவீர்கள்,
எருசலம் தற்போது யாருக்கு உரிமையானதாகவும் யாருடைய
அதிகார வரம்பின்கீழ் இருப்பதாகவும் காணுகின்றீர்கள்?

ஆகவே அந்த வேதவாக்கியம் இயேசுநாதரைக் குறித்ததெ
ன்று நீவீர்கள் நம்புவது மடமையன்றோ? இதனுலும் கடைசியான
இரட்சகர் இயேசுவல்ல வென்பது உறுதிப் படுகின்றது. மேலும்
ஏசாயா 52-ம் அதிகாரம் "13-இதோ நம்முடைய ஊழியக்
"காரன் ஞானமாய் நடந்துகொண்டு உயர்த்தப்பட்டு
"மேன்மையும் மகா உன்னதமுமா யிருப்பார். 15-அப்
"படி அநேகம் சாதிகள் மேலும் அவர் தெளிப்பார்.
"அவருக்காக இராசாக்கள் தங்கள் வாயை மூடுவார்கள்.
"ஏனெனில் எவர்களுக்கு விவரிக்கப் படாதிருந்ததோ
"அவர்கள் காண்பார்கள். எவர்களுக்கு கேள்வி படா
"திருந்ததோ அவர்கள் உணர்வார்கள்" என்று கூறுகின்றது
இதனுலே கடைசியாய் வரப்பட்ட ஊழியக்காரரோ வெனின்
அவர் பராபரனுலே கேட்பவைகள் அதற்குமுன் ஒருவராலும்
கேட்கப்படாதவைக ளென்றும் அவர் பராபரனுலே கேட்பவை
களெல்லாம் சாமான்யமாக எல்லாசேனைகளும் கேட்குமென்றும்
அவருடைய சொல்லுக்கு இராசாக்கள் மாறு கூறார்களென்றும்
தெளிவாய்க் காணப்படுகின்றது. நேயர்காள், நீவீர்கள், இந்தவே
தவசனத்தை இயேசுநாதருக்கென்று சொல்லுகிறீர்கள். அது மூற்
றிலு முரணுன சொல்லென்று உங்களுக்குக் காண்பிப்பேம். இதோ!
இயேசுநாதரோ வெனின், தாம் பராபரனுலே பெறப்படு பவைகளை
இஸ்ரவேலர்களுக்கு மாத்திரம் சொல்லு பவராயிருந் தாரென்
பது நீங்கள் மறந்தீர்களோ? இயேசுநாதர் உவமையினுலேயே பேசு
பவரா யிருந்ததைக்குறித்து அவர் உங்களாலே வினவப்பட்டபோது
அந்நியர்களுக்குப் பரம இரகசியம் விளங்காம லிருக்கும்படி அப்ப
டிப் பேசுகிறேன் என்று அவர் உங்களுக்குச் சொன்னுரென் பதை
நினையுங்கள். அப்பொழுது, நீவீர்கள், இயேசுநாதர் பகிரங்கமாகப்
பேசுபவ ரல்லர் என்றும் இந்த வேதவாக்கியம், அதற்கு மாருக
இருப்பதினுலே அவருக்குப் பொருந்தா தென்றும் நீவீர்கள் அறி
வீர்கள். அல்லாமலும் இயேசுநாதர் பேசினபொழுது, இராசாக்
கள் அவர் வார்த்தைக்கு இணங்காது அவரைப் பொய்யரென்று
கொலைசெய்யும்படி தீர்ப்பிட்டார்க ளென்பது உங்களுக்குத் தெரி
யாத விஷயமா? தெரியுமாயின் நீவீர்கள் அந்த வேதவாக்கியமா
னது இயேசுநாதருக்குப் பொருத்த முடையதன்று, கடைசியாய்
வருபவருக்கே அதுபொருத்தமுடைய தென்று நீவீர்கள் வெள்ளி



தாய் உணர்வீர்கள். இதோ எரேமியா 33-ம் அதிகாரம் "6-
"இதோநாம் அவர்களுக்கு ஆரோக்கியமும் குணமும்
"வரப்பண்ணி அவர்களைக் குணமாக்கி அவர்களுக்குப்
"பரிபூரணமான சமாதானத்தையும் உண்மையையும் வெ
"ளிப்படுத்துவேம் 7-நாம் யூதாவின் சிறையிருப்பையும்
"இஸ்ரவேலின் சிறையிருப்பையும் திருப்பி முந்தியதைப்
"போல அவர்களைக் கட்டுவித்து 8-அவர்கள் நமக்கு
"விரோதமாய்க் குற்றஞ் செய்தவர்களுடைய எல்லா அக்
"கிரமங்களுக்கும் அவர்களை நீங்கலாக்கிச் சுத்திகரித்து,
"அவர்களை நமக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்து, அவர்
"கள் நமக்கு விரோதமாய்த் துரோகம் பண்ணின அவ
"ர்களுடைய எல்லா அக்கிரமங்களையும் மன்னிப்போம்
"9-நாம் அவர்களுக்குச் செய்யும் நன்மையை எல்லாம்
"கேட்கப்போகிற பூமியின் எல்லா சாதிகளுக்கும் முன்
"பாக அதுநமக்கு மகிழ்ச் சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சி
"யாயும் மகிமையாயும் இருக்கும். நாம் அவர்களுக்கு அரு
"ளிச் செய்யும் எல்லா நன்மையினி மித்தமும் எல்லா
"சமாதானத்தினி மித்தமும் இவர்கள் திகைத்துத் திரி
"வார்கள்" என்று கூறுகின்றது. இதனுலே, ஆரோக்கியம்
இல்லாத இஸ்ரவேலர்களுக்கு அவையெல்லாம் வரப்பண்ணு வது
மன்றி, அவர்கள் கேள்விபடாத உண்மை விசயங்களை வெளிப்ப
டுத்தி, அவர்கள் பராபரனுக்குச் செய்த பொறுக்கத்தகாதபொல்
லாங்குகளையும் அக்கிரமங்களையும், துரோகங்களையும் ஒருங்கே
பொறுத்து அவர்களைச் சுத்திச்செய்து விடுவதாக வாக்களித் திருக்
கிறதாக நன்ருய்த் தெரிகிறது. இவ்வாருகப் பராபரன் அவர்க
ளுக்குச் செய்வதாக வாக்குத்தத்தம் உலக இரக்ஷகரின் பொருட்
டாகவேயன்றி இயேசுநாதரின் பொருட்டாகவா? நேயர்காள்,
என்ன சொல்லுகிறீர்கள்? அது இயேசுநாதரின் பொருட்டல்ல,
உலக இரட்சகரின் பொருட்டாகவே என்று உணர்வீர்களாக. அது
கீழ்வரும் வேதவசனங்களாலேயும் நன்குவிளங்கும். அன்றியும்
இஸ்ரவேலர்கள் செய்த பராபரத்துரோகம் இணைத்தென்பது,
இயேசுநாதரோ கூறுகின்றார். அதைக் காணுவீர்களானுல் நீங்கள்

ஆச்சரியப் படுவீர்கள். அல்லாமலும் இஸ்ரவேலர்கள் பராபரனு
க்கு இப்படிப்பட்ட துரோகங்களைச் செய்தார்களென்பது இயே
சுநாதரினாலே பிரசாதிகளுக்கு வெளிப்படுத்தப் படவில்லையல்
லோ? அவர்தமது வேதசப்தத்தை அந்நியசாதிகள் கேட்கக் கூடா
தென்று உவமையால் சொல்லியபடி சொல்லாமல் பராபரனு
லே கேட்டபடியே உலகத்தாருக் கெல்லாம் கேட்கும்படி பே
சும் சுதந்திரமுள்ள உலக இரட்சகர் வரப்போகிற படியினாலே
அவர், இஸ்ரவேலர்கள் பராபரனுக்குச் செய்த பொல்லாங்குகளை
யெல்லாம் வெளிப்படையாகச் சொல்லி அப்படியாகச் செய்த
வர்களாகிய கொடுமை பொருந்திய இஸ்ரவேலரை மன்னித்துவிட்ட
பராபரன் எப்படிப்பட்ட கிருபையாளர்? என்பதை உலகமெ
ல்லாம் அறியவெளிப்படுத்து வாராதலின் “ நாம் அவர்களுக்
“ குச் செய்யும் எல்லாம் கேட்கப் போகிற பூமியின்
“ எல்லா சாதிகளுக்கு முன்பாக அது நமக்கு மகிழ்ச்
“ சியுள்ள கீர்த்தியாயும் புகழ்ச்சியாயு மிருக்கும்.” என்று
பராபரன் கூறின தாகவன்றோ புலப்படுகின்றது? இதுவேயுமன்
றிப் பராபரன் அவர்களுக்கு நரகவேதனையின் மன்னிப்புக் கொ
டுத்தாராயினும் அவர்களுக்கு இராசாங்க மின்றி அவர்கள் செய்
தகுற்றத்திற்கு என்றும் ஞாபகமாயிருக்கும்படி அந்நிய இரா
சாங்கத்தில் குடியிருப்பார்களென்றும் பொருட்டாக, “ நாம்
“ அவர்களுக்கு அருளிச்செய்த எல்லா நன்மையி னிமித்
“ தமும், எல்லா சமாதானத்தி னிமித்தமும் இவர்கள்
“ திகைத்துத் திரிவார்கள்” என்று கூறினார். ஆகவே இவை
எல்லாம் நீவீர்கள் உணர்ந்தால், உலக இரட்சகராகுவார் இயேசு
நாதர் அல்லர் என்பது நன்குவிளங்கும். அல்லாமலும் இயேசு
நாதர் இஸ்ரவேலர்களை இரட்சிக்கப் பலவாறு முயன்றும் அவர்
கள், பொருந்தாமையினாலே அவர்களைச் சபித்து நீக்கிவிட்டா
ரென்பது உங்களுக்கு வெளியாகும்போது மேலே கூறியவேத
வாக்கியம் இயேசுநாதரைப் பொருந்தத் தன்று; இயேசுநாதருக்
குப் பிறகே வரப்போகிற உலக இரட்சகருக்கே அது பொரு
த்தமுடைய தென்று சந்தேகமற அறிவீர்கள். இதோ மத்தே
23-ம் அதிகாரம் “ 29 - வஞ்சகராகிய வேத பாரக
“ ரே, பரிசேயரே, ஐயோ உங்களுக்கு வேதனை வரும்,



“ என்னத்தினாலெனின், நீங்கள் தீர்க்கதரிசிகளுடைய
“ சமாதிகளைக் கட்டி நீதி மான்களின் கல்லறைகளைச் சிங்
“ காரித்து, 30 - எங்கள் பிதாக்களுடைய நாள்களில்
“ இருந்தோமானால் அவர்களோடே கூட நாங்கள் தீர்
“ க்கதரிசிகளுடைய இரத்தத்தைச் சிந்தமாட்டோம் என்
“ கிறீர்கள். 31 - ஆகையால் நீங்கள் தீர்க்கதரிசிகளைக்
“ கொலைசெய்தவர்களின் புத்திரர்களென்று உங்களைக்
“ குறித்து நீங்கள் தானே சாட்சி கொடுக்கிறீர்கள் 32 -
“ அப்படி இருக்க நீங்கள் உங்கள் பிதாக்களின் அக்கிரம
“ அளவை நிரப்புங்கள். 33 - சர்ப்பங்களே விரியன் பாம்
“ புகளின் குட்டிகளே நீங்கள்நரக ஆக்கினைக்கு எப்படி
“ தப்பிப் போவீர்கள்? 35 - நீதிமானாகிய ஆபேலின் இரத்
“ தமுதல் நீங்கள் தேவாலயத்திற்கும் பீடத்திற்கும் நடு
“ வே கொலைசெய்த பரகியாவின் குமாரரான சகரியாவின்
“ இரத்தம் வரைக்கும் பூமியிலே சிந்தப்பட்ட நீதியான
“ இரத்தமெல்லாம் உங்கள்மேல் வரும்படிக்கு (அப்படி
“ செய்வீர்கள்). 36 - அவையெல்லாம் இந்தச் சந்ததியின்
“ மேலேவருமென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகி
“ றேன் 37-ஆ! எருசலேம் பட்டணத்தாரே, எருசலேம்
“ பட்டணத்தாரே உங்களிடத்தில் அநுப்பப் பட்டவர்க
“ ளின்மேல் கல்லெறிந்து தீர்க்கதரிசிகளைக் கொலை செய்
“ கிறவர்களே கோழிதன் குஞ்சுகளைச் சிறகுகளின் கீழே
“ கூட்டிச் சேர்த்துக்கொள்ளும் விதமாய் அநேகந்தரம்
“ உங்களைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள விரும்பினேன் நீங்
“ களோ வரமாட்டோமென்கிறீர்கள் 38-ஆகையால் உங்
“ கள் வாசஸ்தலம் பாழாக்கப்படும் 39-அல்லாமலும் பரா
“ பரனுடைய நாமத்தினாலே வருகிறவர் தோத்திரிக்கப்
“ படக்கடவர் என்று நீங்கள் சொல்லுமளவும் இதுமுதல்
“ என்னைக் காணாதிருப்பீர்கள், என்று உங்களுக்குச் சொல்
“ லுகிறேன்” என்று இயேசுநாதர் வெளிப்படையாகக் கூறி
யிருக்கிறதாகத் தெரிகிறது. நேயர்காள், “ ஐயோ உங்களுக்கு,

“வேதனைவரும்” என்றும் “சர்ப்பங்களே விரியன் பாம்பு “களின் குட்டிகளே” என்றும் “நீங்கள் நரக ஆக்கினைக்கு “எப்படி தப்புவீர்கள்” என்பதினாலே தப்பமாட்டீர்களென்றும் இரத்தப் பழியெல்லாம் உங்கள் மேலேவரும் என்றும் உங்கள் வாசஸ்தலம் பாழாக்கப்படுமென்றும் இயேசுநாதர் அவர்களை சொல்லியிருப்பதானது சாபமல்லவா? ஆகவே இயேசுநாதர் அந்த இஸ்ரவேலர்களைச் சபித்தாரென்பது தெளிவாயிற்றே, அப்படியிருக்க இஸ்ரவேலர்களை அவர் இரட்சிப்பாரென்பது எப்படி? இயேசுநாதரின் பொருட்டாக இரட்சிக்கப் படுவாரென்பது ஆதாரமான வாதமல்லவா? இதோ இயேசுநாதர் சொல்லுகின்றாரே, “பராபரனாலே வருகிறவர் தோத்திரிக்கப்படக்கடவர் என்று சொல்லுகிறவரையில் இதுமுதல் என்னைக் காணமாட்டீர்கள்” என்று (சொல்லுகிறாரே) இதனாலே அவருக்குப் பிறகு வருபவரை அவர்கள் துதிக்கவேண்டியது என்று கட்டாயப் படுத்தினதாகத் தோன்றவில்லையா? ஆகவே இயேசுநாதருக்குப் பிறகுவருபவரே உலக இரட்சகரென்பதும், இயேசுநாதரின் பொருட்டு இஸ்ரவேலர்கள் இரட்சிக்கப்படமாட்டாரென்பதும் மேலேகூறிய எரேமியா 33-ம் அதிகாரத்தில் கூறியவேத வாக்கியங்கள் இயேசுநாதருக்கு உரியதல்ல, உலக இரட்சகராக வருபவருக்கே உரித்தென்பதும் ஒன்றெனப் புலப்படுகின்றதன்றோ? அல்லாமலும் இயேசுநாதர் சாபமிட்டப் பிரகாரமாக, ஆபேலின் இரத்தமுதல், சகரியாவின் இரத்தம் வரையிலுமாகச் சிந்தப்பட்ட எல்லா இரத்தத்திற்காகவும் எல்லா இஸ்ரவேலர்களும் குற்றவாளியாகிறதாகத் தோன்றுகின்றது. ஆனால் உலக இரட்சகரின் பொருட்டாக, மீதியாகிய இஸ்ரவேலர்கள், அப்படிப்பட்டபாவத்திற்கு அருகராகமாட்டார்களென்பதும் அந்த எரேமியாவினது வேதவாக்கியத்தினாலே நன்கு விளங்குகின்றது. அப்படிச் செய்வதற்கு இயேசுநாதருக்கு வல்லமை இல்லை என்பதூஉம் இயேசுநாதரின் அந்தவாக்கியத்தினாலேயே புலப்படுகின்றது. இவையெல்லாமுமன்றி இயேசுநாதர் உலக இரட்சகரின் வருகையைக் குறித்துப் பலவாறாகச் சொன்னவற்றில், இங்கு ஒரு உவமையைச்சொல்லுகின்றோம். இதோ மத்தேயு 21-ம் அதிகாரம், “33-வேறு உவமையைக் கே“ளுங்கள், ஒருவீட்டு எசமான் உண்டு, அவன் ஒரு திரா“ட்சத் தோட்டத்தையுண்டாக்கி அதைச் சுற்றிவேலி



“அடைத்து அதில் ஆலையைநாட்டி கோபுரத்தையும் கட்
“டிப் பின்பு அதைத் தோட்டக்காரர்வசம் விட்டுப் புறதே
“சத்திற்குப்போனான். கனிகாலம் சமீபமானபொழுது
“கனிகளை வாங்கிக்கொண்டு வரும்படிக்குத் தன் ஊழியக்
“காரரைத் தோட்டக்காரர்வசம் அனுப்பினான். 35-
“தோட்டக்காரர்களோ அவன் ஊழியக்காரர்களைப் பிடி
“த்து ஒருவனை அடித்து ஒருவனை வெட்டி மற்றொரு
“வனை மேல்கல்லெறிந்து கொன்றார்கள். 36-மறுபடி
“யும் எசமான், முந்தின வர்களிலும் அதிகமான வேறு
“ஊழியக்காரரை அனுப்பினான். அவர்களையும் அப்படி
“யே செய்தார்கள். 37-கடைசியாய் அவன், என்னுடைய
“குமாரனுக்கு அஞ்சுவார்களென்றெண்ணித் தன்குமா
“ரனை அவர்களிடத்தில் அனுப்பினான். 38-தோட்டக்
“காரர்களோ குமாரனைக் கண்டபொழுது இவன் சுதந்
“திரவாளி இவனைக் கொன்று இவனுடைய சுதந்திரத்
“தைக் கட்டிக் கொள்வோம் வாருங்களென்று தங்களுக்
“குள்ளே சொல்லிக் கொண்டு 39-அவனைப் பிடித்துத்
“திராட்சத் தோட்டத்திற்குப்புறம்பே தள்ளிக் கொலை
“செய்தார்கள், 40-ஆகையால் திராட்சத்தோட்டத்
“திற்கு எசமான் வரும்போது அந்தத் தோட்டக்கா
“ரரை என்ன செய்வான் என்று கேட்டார். 41-அதற்கு
“அவர்கள் சொன்னது: அவன் அந்தப் பொல்லாதவர்
“களைக் கடினமாய் அழித்துத் தகுதியான காலங்களில்
“தனக்குக் கனிகளைக் கொடுக்கும் வேறே தோட்டக் கா
“ரர் வசமாய்த் திராட்சத் தோட்டத்தை விடுவான் என்
“றார்கள், 42-இயேசுவானவர் அவர்களுக்குச் சொன்
“னது, வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்
“லே மூலைக்குத் தலையான கல்லாயிற்று. அதுபராபர
“னாலே ஆயிற்று, அது நம்முடைய கண்களுக்கு ஆச்ச
“ரியமாயிருக்கிறது என்று வேதத்திலே நீங்கள் ஒரு
“காலும் வாசிக்கவில்லையா? 43-அப்படி இருக்கப் பரா

"பரனுடைய இராச்சியம் உங்களிலிருந்து நீக்கப்பட்டு
"அதின் கனிகளைத் தருகிற சனங்களுக்குக் கொடுக்கப்
"படும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் 44 - அன்
"றியும் இந்தக் கல்லின்மேல் விழுகிறவன் நொறுக்கப்படு
"வான். இதுவோ, எவன்மேல் விழுமோ அவனை நொருக்
"கடிக்கும் என்றார்" என்று கூறுகின்றதே. நேயர்காள்!
இந்த உவமையில், எல்லாவற்றிற்கும் சர்வாதிகாரம் படைத்த பரா
பரனாலே இஸ்ரவேலர்களுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட தேசமே,
திராட்சத் தோட்டமென்றும், அந்தத் தேசத்தை ஒப்புக்கொண்
டவர்களாகிய இஸ்ரவேலர்களே, தோட்டக்காரர்களென்றும், இஸ்
ரவேலர்கள் தமது பராபரனுக்குச் செலுத்தவேண்டிய கிரியை
களே; தோட்டக்காரர்கள் செலுத்தவேண்டிய கனிகளென்றும்
இஸ்ரவேலர்கள், செய்யவேண்டிய கிரியைகளைச் செய்யாமையே,
கனிகொடாமை யென்றும், அவர்கள், பராபரனுக்கு ஏற்றகிரியைக
ளைச் செய்யும்படி அவர்களுக்கு உபதேசம் செய்யும் பொருட்டாக
அவர்களின் மேல் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளே கனிகளைப்பெற
வரும்படியாய் வந்த ஊழியக்காரர்களென்றும், இஸ்ரவேலர்
களுக்காகவென்று கடைசியாய் அனுப்பப்பட்ட இயேசுநாதரே
தோட்ட எசமானின் குமாரன் என்றும் குமாரனுக்கும் அடங்
காது முரட்டாட்டமாய் நடந்த இஸ்ரவேலர்களெனும் தோட்
டக்காரர்களைக் கடினமாக அழித்து அவர்களைத் தண்டித்துத்
தக்ககாலத்திலே கனிகளைக் கொடுக்கும்படியாக வேறுதோட்டக்
காரர்களைத் தம்து இஷ்டப்படி நியமித்து, மற்றும் ஆகவேண்டு
வனவெல்லாம் செய்யும் சர்வ சுதந்திரங்களையும் பராபரனாலே
பெறப்பட்ட அவனது பிரதிநிதியாய்க் கடைசியாய் வரும்உலக
இரட்சகரே தோட்டத்தின் எசமான் என்றும் இயேசுநாதர் கூறி
னதாக நன்குபுலப்படுகின்றது. கிறிஸ்துவ பண்டிதர்களே இயே
சுநாதர் இந்த உவமையைக் கூறிவந்து குமாரனையும் கொலைசெய்
தார்களானால் தோட்ட எசமான் வரும்போது அவர்களை என்ன
செய்வான்? என்று சீஷர்களையோ அல்லது அங்கு கூடியிருந்த
வேதபாரகர்களையோ வினவினாரன்றோ? அந்த வினவுக்கு பதிலாக
"தோட்டத்தின் எசமான்வந்து தோட்டக்காரர்களைக்
"கடினமாய்த் தண்டித்துத் தோட்டத்தைக் கனிகளைத்
தருகிறவேறு தோட்டக்காரர்கள்வசம் விடுவார்" என்று



அவர்கள் கூறினார்களே. இதனாலே குமாரன் எனப்படும் இயேசு
நாதருக்குப்பிறகு வேறு ஒருவர் சர்வாதிகாரமும் பொருந்தியவரா
கவருவாரென்றும் அவரே கடைசியானவர், அவருக்குப்பிறகு வேறு
ஒருவரும் வரவேண்டியவரில்லை என்றும் நன்றாய்ப்புலப்படுகின்ற
தென்பது நீவிர்கள் மறுக்கவே கூடாதெனல் தெளிவாயிற்று. நிற்க.
கிறிஸ்துவபண்டிதர்களே, இயேசுநாதர் சீஷர் அல்லது வேதபார
கர்களை நோக்கித் தோட்டத்தின் எசமானது குமாரனையும் கொலை
செய்தார்களாகையால் தோட்டத்தின் எசமான்வரும்போது அந்
தப்பொல்லாத தோட்டக்காரர்களை என்னசெய்வான்?" என்று
வினவியதற்கு மறுமொழியாக அந்தத்தோட்டக்காரர்களைக் கடின
மாய் அழித்துத்தோட்டத்தை அவர்கள்வசமிருந்து நீக்கித்தக்கா
லத்தில் கனிகளைத்தருகிற வேறுதோட்டக்காரர்கள்வசம் ஒப்புக்
கொடுப்பார் என்று அவர்கள் கூறினார்களன்றோ? அதைக்கேட்ட
இயேசுநாதர் அந்தவேதபாரகர்களுக்கு, சங்கீதம் 118-ம் அதிகாரத்
திலே "22-வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்
"லே கோடிக்குத் தலையான கல்லாயிற்று. 23 - அது கர்த்
"தராலாயிற்று. அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரிய
"மாயிருக்கிறது. 24 - இதுகர்த்தர் உண்டுபண்ணின நாள்,
"இதிலே களிகூர்ந்து மகிழக் கடவோம்" என்று இயேசுநா
தர்பிறக்க ஆயிரவருடங்களுக்கு முன்னதாகக் கூறப்பட்டுள்ள, வேத
வாக்கியங்களில் 24 - வது வசனம் நீங்கலாக, மற்ற 22 - 23 - வது
வசனங்களை எடுத்துக்காட்டி இப்படியாக வேதத்திலே நீங்கள் ஒருக்
காலும் வாசிக்கவில்லையா? என்று வினவினாரே? அதனால் எமது கிறி
ஸ்துவநேயர்கள் என்ன உணருகிறார்கள்.? வீடாவதென்ன? வீடுகட்டு
கிறவர்களா வதுயார்? அவர்கள் ஆகாதென்று தள்ளினகல்லென்பது
யாது? அது கோடிக்குத் தலையான கல்லாயிற்றென்பது எப்படி?
என்பனவற்றை அந்தத் திராட்சத் தோட்டத்தின் உவமானத்
தோடு பொருந்தும்படியாகச் சொல்ல எமது நேயர்கள் முன்
வருவார்களா? இந்த உவமானத்தைக் குறித்து அறியப்புகுவார்,
வேத ஆராய்ச்சி மிகுதியும் செய்தவர்களாகவே இருத்தல் வேண்டு
மென நாம் நம்புகின்றோம்.

இதோ! இஸ்ரவேலின் மூலபிதாவாகிய ஆப்ரகாம் என்பவர்
மிகச் செல்வக்களிப் பினராக இருந்த போதிலும் அவர் தமக்குச்
சந்ததியில்லாமையால் அதிசக் கவலையடைந் திருந்தார். அதைக்

கண்ட அவரது மனைவியாகிய சாருள், இதோபராபரன் எனது கற்
பத்தை யடைத்தார். என்னுடைய அடிமைப் பெண்ணுகிய ஆகாரை
உம்முடைய மடியின்மேல் கொடுக்கிறேன். அவள்கற்பத்தைப் பராப
ரன் திறந்து அவள் கற்பக்கனியினுல் என்வீடு கட்டப்படுவதாக என்று
சொல்லி அந்த ஆகாரைத் தமது புருஷனுராகிய ஆபரகாமுக்கு
மனைவியாகக் கொடுத்தார். அந்த ஆகாரோவெனின் கற்பவதியாகக்
கண்டசாருளோ பெண்டுகளுக்குரிய இயற்கை வசமாகப் பொருமை
கொண்டோ அல்லது வேறு காரணத்தாலோ அந்த ஆகாரைக் கொ
ண்டு பொல்லாங்கை ஆபரகாமுக்குப் போதித்தார். அதைக் கேட்ட
ஆபரகாமோவென்ருல் தமது மூத்தமனையாளின் மனதுக்கிசைந்து
அவர் ஆகாரைக் கொடுமையாகத் தண்டிக்க மனையாளுக்கே உத்
தரவிட்டபடியினுலே ஆகார், அத்தத்தண்டனை சகிக்கமுடியாது
தாம் கருப்பவதியா யிருப்பதையும் தாம் அநியாயமாய்த் தண்டிக்
கப்பட்டதையும் சிந்தித்து விசனமடைந்தவராகக் கானகத்தைநோ
க்கிச் செல்கையில் பராபரனது தூதர், ஆகாருக்குப் பிரசன்
னமாகி, ஓ! ஆகாரே, நீபயப்படாயாக, உன்கற்பத்திலே இருக்
கிற உன்குமாரனை ஒரு சாதியாக்குவோம். அவர் ஒருபெரிய சா
திக்குத் தகப்பனுயிருப்பார். அவருடைய வித்துக்களோ எண்ணத்
தொலையாது. கடற்கரைமணலைப்போலும், ஏராளமாகப் பல்கப்
பண்ணுவோம். அவர்தமது சகோதரருக்கு எதிரே வீடுகட்டுவார்,
அவருக்கு இஸ்மவேல் என்று பெயரிடுவாயாக. பராபரன் உன்
அங்கலாய்ப்பைக் கேட்டார். உன்னையும் உன்கற்பக் கனியையும்
பராபரன் ஆசீர்வதித்தார் என்று கூறிஆகாரைத் திரும்ப ஆபர
காமிடத்துக்கு அனுப்பிவிட்டுப் பராபரனது தூதர்மறைந்தார்.
பிறகு ஆகாரோ வென்ருல் இஸ்மவேலைப் பெற்றபதின் மூன்று
வருடங்களுக்குப்பின், சாருள் பெண்களுக்குரிய குறிகளெல்லா
மாறின முதிர்ந்த வயதிலே, கற்பந்தரித்து ஈசாக்கைப் பெற்ருர்.
அந்த ஈசாக்கோ வெலிஸ்யாக்கோபு என்ற, இஸ்ரவேலைப் பெற்
ருர். அந்த இஸ்ரவேலின் சந்ததிகளே இஸ்ரவேலர் என்று இது
காறும் அழைக்கப் படுகின்ருர்கள். இது மாத்திரமா, தமது முதிர்
வயதிலே ஈசாக்கைப் பெற்றபிறகு இஸ்மவேல் சேஷ்டைசெய்கிற
வனுயிருக்கிருன். ஆகையால் அவனையும் அவன்தாய் ஆகாரையும்
நம்வீட்டுக்குப் புறம்பே தள்ளிவிடவேண்டும். ஏனென்ருல் அந்த
அடிமைப் பெண்ணின் குமாரன் இஸ்மவேல் என்மகனேடு சுதந்



திரவாளு யிருக்கவேண்டியதில்லை, என்று சொன்ன படியினுலே,
ஆப்ரகாம் ஆகாருக்கு ஒருதுண்டு அப்பமும் ஒருதுருத்தித் தண்ணீ
ருமே கொடுத்து ஆகாரையும் இஸ்மவேலையும் வீட்டிலிருந்து நீக்கி
விட்டார். ஐயோ! அந்த ஆகார் தன் சிறுவயதான இஸ்மவேலென்கிற
குமாரனுடனே வீட்டைவிட்டுப் புறப்பட்டுப்போய்க் கானகம் வழி
யாய் நடந்து பேயேசேபாவின் வனாந்தரத்திலே வழிதப்பித் திரிந்
தார். பிறகு துருத்தியிலிருந்த தண்ணீர் ஒழிந்தபடியினுலே, சிறு
குமாரன் தண்ணீருக்கு அங்கலாய்த்துச் சப்தித்தார். அதைப் பொ
றுக்க சகிக்காமல் இனி குமாரன் தண்ணீர் தாகத்தினுலே சாகுவா
னென்று நம்பி அந்தப் பரிதாபத்தைக் காணக் கூடாதென்று பிள்ளை
யைக் கானகத்தின் ஒரு செடியிலே வைத்துவிட்டு அங்கிருந்து ஒரு
வில்லெய்யும் தூரம்போய் ஆகார் உட்கார்ந்து அழத்தொடங்கினுர்.
ஆனுல் பராபரன் குழந்தையின் சப்தத்தைக்கேட்டுத் தமது தூத
னுக்கு உத்தர விட்டார். உடனே பராபரனது தூதன் ஆகாரைக்
கூவி, ஓ! ஆகாரே பயப்படாதே, உனக்கு வேண்டுவதெல்லாம்
கொடுக்கப்படும். நீ எழு. உன்பிள்ளையை எடு, நட என்ருர். நாம்
அவனைப் பெரியசாதியாக்குவோம் என்ருர். உடனே ஆகார்
அந்தப்படி குமாரனை எடுத்துக்கொண்டு நடந்த உடனே பெரிய
தண்ணீர்த்துறவு காணப்பட்டது. தண்ணீர் குடித்துக்கொண்டு நட
ந்து ஒருவனாந்தரத்தில் குடியிருந்தார். அன்று முதல்பராபரன், அந்
தப் பிள்ளையுடன் கூடவே இருந்தார். அந்தப்பிள்ளை வனாந்தரத்
திலே வளர்ந்து வில்வித்தையில் தேறிப்பாரான் என்ற வனாந்தரத்
திலே குடியிருந்தான். பாரான் என்பது, இப்பொழுது மக்காவென
ப்பட்ட சிறப்பிற்சிறந்த ஸ்தலமிருக்கும் எல்லைபாகத்திற்குச் சொல்
லப்படும் என்பது பிரத்தியட்சமே. ஆகவே எமது நேயர்காள்!
இஸ்மவேல் கற்பமாயிருக்கும் காலத்திலே ஒரு தரமும், இஸ்ம
வேல் பதினுன்கு வயதுள்ளவரா யிருக்கும்போது ஒரு தரமுமாக
இருதரம் அவர்கள் வேண்டாமென்று சாருள், ஆபரகாம் இவர்
களாலே தள்ளப்பட்டிருக்கிருர்கள் என்பது வேதம். இதன் விவ
ரம் விருத்தியலில் வேத அத்தாட்சிகளுடன் கூறப்படும். விஷயம்
இவ்வாருக நீவீர்கள் அறிந்தபிறகு; இஸ்ரவேல் குடும்ப உற்பத்
திக்கு மூலமாகிய ஆபரகாம், சாருள், இவர்களே வீடுகட்டுகிற
வர்களென்றும், அவர்களால் ஆகாதென்று நீக்கப்பட்ட ஆகாரின்
சந்ததியே வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று நீக்கின கல்லென்
றும் வீடுகளின் மூலைகள் சேதப்படாது காக்கும் படியாகக்

கோடிக்கல் நாட்டுவது இக்காலத்திலேயும் பிரத்தியட்சப் பிர
மாணமாகக் காணப்படுமன்றோ? அவ்வண்ணமாக, விடேனப்படும்,
இஸ்ரவேல் குடும்பத்திற்குக் கேடென்னும் காகவேதனையாலாகும்
பழுது வாராது காப்பவராய்க் கடைசியாய் அந்தஆகாரின், கர்பக்க
னியாகிய இஸ்மவேலின் சந்ததியிலே வரப்போகிற உலக இரட்ச
கரையே கோடிக் கல்லென்றும் வேதத்திலே சொல்லப்பட்ட வுவ
மையின் கருத்தென்பது உங்களுக்கு நன்றாய்த் தெரியும். இது
வேயுமன்றி அந்தவேதத்திலே, "அதுபராபரனாலே ஆயிற்று.
"அது நம்முடைய கண்களுக்கு ஆச்சரிய மாயிருக்கிறது" என்று
கூறப்பட்ட வாக்கியங்களை நீவீர்கள் நோக்கும்போது மேல்சொல்
லியபடி வேதவாக்கியத் திருவாய உவமைக்கு உவமேயமாகக்
கூறப்பட்ட அபிப்பிராயம் சரியானதென்று நம்புவீர்கள். இதோ!
ஆபிரகாமின் மூத்தமனைவியாகிய சாராளின் குமாரனாகிய இசாக்
கின் வம்சத்திற்கு, ஆகாரின் குமாரனான இஸ்மவேலின் வம்சத்
தார் இரட்சகராக வருவது, அந்த வேதகருத்தாவுக்கு ஏன்றான்
ஆச்சரியமாக இருக்கமாட்டாது? அவர் உண்மையாகவன்றோ
ஆச்சரியப்பட்டார்? ஆனாலும், சாராளின் சந்ததிக்கு ஆகாரின் சந்
ததி, இரட்சகராகச் செய்தது, பராபரனாலேயே; ஆகவே, வாய்மூட
வேண்டும் என்றும் பொருட்டாக, அதுபராபரனாலே ஆயிற்று,
என்று முடித்தார் என்பது வெளியாயிருக்கிறது. இப்படியாக,
சாராளின் வம்சத்தாருக்கு ஆகாரின் வம்சத்திலே வருகிறவர்
இரட்சகராயிருக்கும்படி சாராளே செய்து கொண்டாரென்று
நாம்சொல்லலாம், என்னையென்றால், அந்தசாராள், ஆகாரை அவள்
கர்ப்பவதியாயிருக்கும் போது நிர்த்தரமாய்த்தள்ளி விட்டகாரணத்
தினாலே பராபரன், ஆகாரை ஆசீர்வதித்தாரன்றோ. அதுபற்றியே
பெண்களுக்குரிய சாபம் நீங்கியமலடியான முதிர்வயதாகிய சா
ராளுக்குக் குமாரனை உண்டுபண்ணி, அவளின் வம்சத்தை உயர்த்
தியுங் கூறி அந்த வம்சத்தைக் கடைசியாய் ஆகாரின் சந்ததி
யாலே இரட்சிக்கும்படி பராபரன் கற்பித்து விட்டார். இந்த
விஷயம் தீர்க்கதரிசனமாக இவ்வுலகுக்கு ஏறக்குறைய மூவாயி
ரம் வருஷங்களாகப் பராபரன் வெளியாக்கிவைத் திருக்கிறாரென்
றும் உணரவேண்டியதே. அல்லாமலும் அந்தவேதத்திலே, "இது
பராபரன் உண்டுபண்ணின நாள், இதிலே நாம்களிகூர்ந்து மகி
ழ்க்கடவோம்" என்றும் கூறியிருக்கின்றார். ஐயோ உண்மையே
அப்படியாக, எவற்றிற்கும் சர்வாதிகாரியாகிய பராபரன் செய்து



விட்ட அந்த உலக இரட்சகராகிய எஜமான்வருகிற அந்தக்கா
லம் பராபரனது அருள்விளங்கும் காலமன்றோ? அந்தக்காலத்தி
லே களிகூர்ந்து மகிழ்வதற்கு யாதுதான் தடையாகுமோ? எமது
நேயர்காள், இயேசுநாதர் அந்தத் திராட்சத் தோட்டத்தின் உவ
மானத்திற்குப் பிறகு அந்தவேத வாக்கியத்தைக் கூறி முடித்த
வுடனே "அப்படியிருக்கப் பராபரனது இராச்சியம் உங்
"கள் வசமிருந்து நீக்கப்பட்டு அதின் கனிகளைக் கொடுக்
"கிற சனங்களுக்குக் கொடுக்கப்படும் என்று உங்களுக்
"குச் சொல்லுகிறேன்" என்று பிரத்தியட்சமாகச் சொல்
லியும் முடித்திருக்கிறார். இதனாலேயும் உங்கள்தேசம் உங்களிட
மிருந்து நீக்கப்பட்டு அதன் கனிகளைக் கொடுக்கிற யோக்கியமான
அந்நியருக்கு ஒப்புக் கொடுக்கப்படும் என்ற வாக்கியத்தின் படியே
தேனும் பாலும் ஓடுகிறதான செழுமையும் புகழுமுடைய அந்தத்
தேசங்கள் இப்பொழுது இஸ்ரவேலர்களைவிட்டு நீக்கப்பட்டிருப்ப
தைக் காணவில்லையா? வேதம் பொய்யாகுமா? இதுவேயுமன்றி
"அந்தக்கல்லின்மேல் விழுகிறவன் நொறுக்கப்படுவான்" அந்தக்
கல்யார்மேல் விழுந்ததோ அவனை நருங்கடிக்கும் என்றும் இயேசு
நாதர் தீர்க்கதரிசனமாகச் சொல்லினாரன்றோ? அப்படியாகவே
அந்தக் கல்லென்னும் உலக இரட்சகர்மேல் விழுந்தவர்கள் ஒரு
வரும் மீதியாகாமல் அவர் வசமே பட்டு விட்டார்கள். அந்தக்கல்
லென்னும் உலக இரட்சகர், யார்மீதுசென்றாரோ அவர்களெல்லாம்
பிறகாட்டினார்கள். இதுவும் பிரத்தியட்சப் பிரமாணமாக எல்லாரு
டையகண்களுக்கு முன்பாகத் தோற்றக் கிடக்கின்ற உண்மையே.

எமது நேயர்களாகிய கிறிஸ்துவ பண்டிதர்களே, இயேசு நா
தர் கூறிய அந்த உவமானத்தினாலே, இயேசு நாதர் உலகத்திற்கு
இரட்சகராகா ரென்றும் இஸ்ரவேலர்கள் கூட இயேசு நாதரினா
லே இரட்சிக்கப்படாது சபிக்கப்பட்டிருக்கிறார்களென்றும், அந்த
சாபமோவெனின், உலகஇரட்சகரின் பொருட்டாக மன்னிக்கப்படு
மென்றும் இயேசு நாதருக்குப் பிறகு வருபவரே சர்வத்திற்கும்
சுதந்திரமுள்ள எஜமானாகிய உலக இரட்சகரென்றும், அவருக்குப்
பிறகு வரப்போகிறவர் ஒருவரும் இல்லையென்றும் அவரே கடைசி
யான தேற்றுகிறவரென்றும் அவரே உலகமெல்லாம் இரட்சிப்
படையும்படியான ஒப்பற்ற இரட்சகரென்றும் அப்படிப்பட்ட உலக
இரட்சகராகிய தேற்றுகிறவர் இஸ்மவேலின் சந்ததியிலே உள்ள

வர் என்றும் அவர்வந்த காலமே களிக்கூர்ந்து மகிழத்தக்க காலமென்றும் நீவீர்கள் மனதாரக்கொண்டு வாயாரப்புகழக் கடவீர்களாக.

எமது நேயர்காள்! இயேசுநாதர் கூறிய அந்த உவமையின் பிரகாரமாக, இயேசு நாதருக்குப்பிறகு வரவேண்டியவர் பராபரனாகவன்றோ இருக்கவேண்டும்? அப்படியிருக்க அவரது அதிகாரம் பெற்ற உலக இரட்சகரென்று எப்படி சொல்லுவீர்? என்று நீவீர்கள் ஒருவேளை கேட்பீர்களோ? அப்படியன்று, ஒரு தேசாதிபதிக்குச் சுதந்திரக்காரனாகிய அரசன் தனது தேசத்திலே என்ன காரியங்கள் தனது இஷ்டத்திற்குச் செய்யவேண்டுமோ, அவையெல்லாம் செய்யுமாறு அவனால், சர்வாதிகாரமும் பெற்றஅவனது பிரதிநிதியை அவனாகவே பாவிக்கவேண்டுமென்பது நீவீர்கள் அறியாததன்று. அங்ஙனமாகப் பராபரன்வந்தால் என்ன செய்யப்படுமோ அவை எல்லாம் செய்யும்படி. அவரது சர்வாதிகாரமும் படைத்த பிரதிநிதியைக்குறித்து இயேசு நாதர் அப்படிச் சொன்னாரென்று நன்குணரல்வேண்டும். பராபரன் தமது மகிமையிலிருந்து நீங்கி உலகத்திலே வருவது சாத்தியமல்ல, "அவரது சப்தத்தைக் கேட்க காதுகள் எம்மாத்திரம் என்ற வேதவாக்கியத்தை நீங்கள் உணரவில்லையா? அப்படியிருக்க அவர் எங்களோடு உலகத்திலே வாசஞ்செய்வாரானால் உயிர்களெம்மாத்திரம்? அது ஒரு விதத்தாலும் முடியாதென்பதைக்குறித்து விபரம் வேண்டுமென்று இவ்விடத்தில் நாம் நினைக்கவில்லை. ஆகையால் உய்த்துணர்க. ஆகவே; எமது நேயர்கள், தோட்டத்தின் எஜமான் தன்னுடைய குமாரனை அனுப்பினான் என்றபடியினாலே இயேசு நாதரைப் பராபரனது குமாரன் என்பேம் என்பார்களோ? அப்படியன்று, மேலேதோட்டத்தின் எஜமான் என்றபராபரனைப் பராபரனன்று, அவரது சர்வாதிகாரமும் பொருந்திய உலக இரட்சகரைப்பற்றிய உவமை என்று கூறினோமன்றோ? அப்படியாகத் தோட்டத்தின் எஜமான் கடைசியாய்த் தோட்டக்காரர்மீது தன்னுடைய குமாரனை அனுப்பினான் என்ற உவமையினாலே பராபரன் இயேசுநாதருக்குப் பிறகு உலகத்திலே "வேறு தீர்க்கதரிசியையாவது வேறுவகையாரான தேற்றுகிறவரையாவது அனுப்புவதில்லை; என்றாலும் பராபரனாலே சர்வாதிகாரமும் படைத்த அவரது பிரதிநிதியாகிய. உலக இரட்சகரையே அனுப்புவார் என்பதைத் தெளிவாய் அறிவிப்பான்



வேண்டி அந்த உவமானத்தின் வரலாற்று முறைமையின் தன்மையினாலே, தோட்டத்தின் எஜமானுக்கு முந்தி வரவேண்டியவன், குமாரனே என்னும் ஒழுக்கம்பற்றி அங்ஙனமாகக் கூறினாரேயன்றி மகவெனும் முறைமை பற்றியன்று என எமதுநேயர்கள் உணரக் கடவார்கள்.

நேயர்காள்! அந்த உவமையினால் குமாரனையும் கொலை செய்தார்களென்று சொல்லப்படுகிறபடியினாலே இயேசுநாதர் சிலுவையில் அறையப்பட்டது உண்மையென்று தோற்றுகிறதே என்பீர்களோ? அப்படியல்ல, அந்தயூதர்களான கொலைபாதகர்கள் இயேசுநாதரையே கொலைசெய்ய தேடினார்களென்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் பராபரனோ அந்தக்கொலைபாதகர்களின் கைகளுக்கு இயேசுநாதரை ஒப்புக்கொடுக்காது, அப்பாதகரில் கொடுமையானமனத்தினனாகிய ஒருவனை, இயேசுநாதரின் ரூபப்படும்படிசெய்து, அந்தமூதேவிகளான கூட்டத்திற்கு ஒப்புக்கொடுக்கலாயிற்று. ஆயினும் அந்தப்பாதகர்களின் எண்ணமோவெனின் இயேசுவையே கொலைசெய்கிறோமென்று இருந்தகாரணம்பற்றி அவர்கள் இயேசுவையே கொலைசெய்தவர்களாக எண்ணப்படவேண்டும். ஆதலின் இயேசுநாதர் அங்ஙனமாகக் கூறினாரென்று எமது நேயர்கள் உணரல்வேண்டுமேயன்றி உண்மையில் இயேசுவே சிலுவையில் அறையுண்டு அவமானப்பட்டாரென்று நினைக்கவேகூடாது என்றறிதல் வேண்டும். நிற்க, நேயர்களே, உவமையாகக்கூறப்படுவன வெல்லாம் அந்தந்த சந்தர்ப்பத்திற்குரிய பொருளை உணர்த்துமேயன்றி உவமையில்கிடந்த சொல்லின்பொருளை ஒருக்காலும் உணர்த்தவே மாட்டாதென்பது உவமையியலின் தாத்பரியம் என்பதை அவ்விலக்கணங்கற்றுணர்ந்த நிபுணர்களைக் கேட்டறிக; இதோ ஒருவன் மற்றவனைநோக்கி நீபனைமரத்தை யொத்திருக்கின்றாய் "என்றால், அவனில், கருக்கும், ஓலையும், பன்னாடையு மிருக்கின்றதாக நினைக்கலாகாது; அந்தவார்த்தையினாலே, அவன் அதிக உயரமுள்ளவன் என்றே நினைக்கவேண்டும். இதோ ஒருவன் மற்றவனைநோக்கி, நீ புலியை நிகர்த்தவனென்றால், அவன், மகாபராக்கிரமசாலி என்று எண்ணவேண்டுமேயன்றி, அவனுக்கு நகமும், வன்னமும், வாலுமிருப்பதாக எண்ணவேகூடாது. ஆகலின், எமது நேயர்கள் உவமானங்களை சந்தர்ப்பத்திற்கு இயைந்தவாறு பொருட்படுத்தி முடித்துக்கொள்ளவேண்டுமென்பதை யுணர்வார்களாக. நிற்க; எமது நேயர்களே, மேல்கூறிய உவமையில் "திராட்சத்தோட்டம்" சம்

பந்தப்பட்டவரையில் இயேசுநாதருக்குப் பிறகேவரும்பவர் உலகத்தி ற்கு சர்வாதிகாரம் பொருந்திய இரட்சகரென்றும் "விடுவிக்கிறவர் கள்" என்கிற வேதவாக்கிய உவமானம் சம்பந்தப்பட்டவரையில் அப்படியாக இயேசுநாதருக்குப்பிறகுவரும் உலக இரட்சகராகிய தேற்றுகிறவர், ஆபிரகாம் சாராள் என்பவர்களாலே வேண்டாமெ ன்று விலக்கப்பட்ட ஆகாரின்குமாரர் இஸ்மவேலின் சந்ததியிலே வருவாரென்றும் "அப்படியிருக்க பராபரனுடைய ராச்சியம் உங் களிலிருந்துநீங்கி" என்ற இயேசுநாதரின் தீர்க்கதரிசனமான வ சனம் சம்பந்தப்பட்டவரையில் அவர் இஸ்ரவேலின் தேசங்களை அவர் களிடமிருந்து நீக்கி விடுவாரென்றும் "இந்த நாள் பராபரனாலே உண்டானநாள்" என்ற வேதவாக்கியம் சம்பந்தப்பட்டவரையில் உலக இரட்சகர், இஸ்மவேலின் கோத்திரத்திலே வருவதினாலே ஒரு வரும் பொறுமைப்படக்கூடாதென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறதெ ன்றும் உணர்ந்து சந்தோஷிப்பதற்கு ஏதுவாயிருக்குமென நம்புகின் றோம்.

இதோ ஏசாயா 28-ம் அதிகாரம், "15- நாங்கள் மர "ணத்தோடே உடம்படிக்கையையும் நரகத்தோடே ஒப் "பந்தத்தையும் பண்ணினோம். வாதை பெருவெள்ளமாய்ப் "ப்புரண்டுவந்தாலும் எங்களை அணுகாது, ஏனெனில் "நாங்கள் பொய்யை எங்களுக்கு அடைக்கலமாக்கி மாயை "யின் மறைவிலேவந்து அடைந்தோம் என்கிறீர்களே, "26- ஆகையினாலே கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிற "தாவது. இதோ உத்தமம் விளங்கினதும் விலை ஏறப் "பெற்றதும் திட அஸ்திவாரப்பட்டதுமான கோடிக்கல் "லாகியகல்லை நாம் சீயோனிலே வைக்கிறோம், விசுவா "சிக்கிறவன் பதரான்" என்று கூறுகின்றது. இதனாலே கோடிக் கல் என்று முன்னர்சங்கீதத்திலே கூறப்பட்ட அந்தக்கல்லைப்பற் றிப்பராபரன் இயேசுபிறப்பதற்கு எழுநூறு வருடங்களுக்கு முன் னருள்ள இஸ்ரவேலர்களுக்கும் கூறப்பட்டிருக்கின்றதாக நீவிர்கள் ஒருக்காலும் வாசித்ததில்லையா? இந்தக்கல்லோவெனில் திட அஸ்தி வாரப்பட்டக் கல்லென்கிறபடியினாலே உலக இரட்சகருக்குப்பின் னுக வேறு ஒருவரும் தீர்க்கதரிசியாகவருவதில்லை என்பது பலப் படுகின்றதே. அந்தோ நேயர்காள், கர்த்தராகிய ஆண்டவர், இஸ்ர



வேலரை நரகத்தோடே உடன்படிக்கை செய்தவரென்றும் மாயை யின்மறைவிலே குடியிருப்பவரென்றும் பழித்துவிட்டு சீயோன் என்கிற எருசலேமுக்குக் கோடிக்கல்லாக இஸ்மவேலின் சந்ததி யைவைப்போமென்று நன்றாய்ச்சொல்லிவிட்டிருக்கிறதாக நீங்கள் சித்தப்படவேண்டுமே; இதோ தானியேல் 9-ம் அதிகாரம் "24- "மீறுதலைத்தவிர்க்கிறதற்கும் பாவங்களைத் தொலைக்கிறதற் "கும் அக்கிரமத்தை நிவிர்த்திபண்ணுகிறதற்கும் நித் "திய நீதியை வருவிக்கிறதற்கும், தரிசனையையும் தீர்க்க "தரிசனத்தையும் முத்திரிக்கிறதற்கும் பரிசுத்தத்திற்குப் "பரிசுத்தமானவரை அபிஷேகம்பண்ணுகிறதற்கும் உன் "சனத்தின்மேலும் உன்னுடைய பரிசுத்தப் பட்டணத் "தின்மேலும் எழுபது வாரங்கள் செல்லக்குறிக்கப்பட் "டிருக்கின்றன" என்று கூறுகின்றது. இந்த வேதவசனத்திலே எழுபது வாரங்கள் குறிக்கப்பட்டிருக்கிறது என்ற வசனத்திற்குமே சேயாவினது இறப்பின் குறியென்று, பிந்தின வசனத்தினாலே தோன்றுகிறது. அது எப்படியாயினும் ஆகுக; பராபரனது கட் டளைகளுக்கு இஸ்ரவேலர்கள் அடங்காமையென்னும், மீறுதலைத் தவிர்ப்பதற்கும் அவர்களுக்குமாறாத நியமிப்பான உடன்படிக்கை எனும் பாவத்தை அவர்களைவிட்டு அடியோடே தொலைப்பதற்கும் அவர்களின் பிரதிதினக் கிரியைகளெனும் அக்கிரமத்தொழிலை நிவ ர்த்திப்பதற்கும் அவர்கள்பேரில் மோசேயானவர் கற்பித்த கடமை யான கற்பனைகளைநீக்கிப்பிறகு மாறாத நித்தியநீதியாயிருக்கப் பட்ட ஒருகற்பனையை எல்லாருக்கும் பொதுவாக வருவிப்பதற் கும் இனிபராபரனது சப்தத்தை ஒருவரும் கேட்காதபடி தீர் க்கதரிசி என்னும் பட்டாபிஷேகத்தை முடிப்பதற்கும், அபிஷேகம் செய்யப்பட்டவர் ஒருவர் வருவாரென்பதை அது குறிக்கின்றது. ஆ! நேயர்களே! மேலே சொன்னபடிசெய்யும் சக்தி இயேசு நாதருக்கு இருக்கிறதாக நீங்கள் நம்பமாட்டீர்களன்றோ? ஏனென் றால், இயேசுநாதரும் அவருக்கு முந்தினவர்களான தீர்க்கதரிசி களும், இஸ்ரவேலின் மீறுதலை அடக்கினார்களில்லை என்றும் அவர் களின்பாவத்தை அவர்களைவிட்டுநீக்காது, அவர்கள் தலையின்மேரி லேயே போட்டுவிட்டார்களென்றும் அவர்களின் அக்கிரமத்திற்கு அவர்களெல்லாரும் தலைசாய்த்தார்களேயன்றி அவர்களை அடக்கி னார்களில்லை என்றும் இயேசுநாதரும் தீர்க்கதரிசனங்களை முடிக்

காது தமக்குப்பிறகுவருபவரே முடிவானவர் என்றும் பரிஷ்கா
ரப்படுத்தி இருக்கிறபடியினாலே இயேசுநாதர் தீர்க்கதரிசனத்தை
முத்திரிக்கிறவர் அல்லர் என்றும் நீவிர்கள் உணர்வீர்களாயின் அம்
தவேதவாக்கியத்தில் கூறப்பட்டவர், இஸ்மவேல் சந்ததியில், வரு
பவர் உலக இரட்சகர் என்றும், அது அவரது வர்ணனை என்
றும் நன்றாய்விளங்குகின்றதே? நேயர்காள்! யோவான் 16-ம்
அதிகாரமோ வெனின், "7 - நான் உங்களுக்குச் சத்தியத்
"தைச் சொல்லுகிறேன், நான்போகிறது உங்களுக்குப்
"பிரயோசனமாயிருக்கும், எப்படி எனில் நான்போகா
"திருந்தால் அந்தத்தேற்றுகிறவர் உங்களிடத்தில்வரார்.
"போவேனேயாகில், அவரை உங்களிடத்திற்கு அனுப்
"புவேன், 8 - அவர்வந்து பாவத்தையும் நீதியையும் நியா
"யத்தீர்ப்பையும் குறித்து உலகத்தாருக்கு மெய்யறிவைக்
"கொடுப்பார், 9 - அவர்கள் என்னிடத்தில் விசுவாசமா
"யிராதபடியினாலே பாவத்தைக்குறித்தும் 10 - நீங்கள்
"இனி என்னைக்காணாதபடிக்கு நான் என்பிதாவினிடத்
"திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும் இவ்
"வுலகத்தின் பிரபு நியாயத்தீர்ப்பு அடைந்தபடியினாலே
"நியாயத்தீர்ப்பைக் குறித்துமே அறிவைக் கொடுப்பார்
"12 - நான் இன்னும் அநேககாரியங்களை உங்களுக்குச்
"சொல்லவேண்டியிருக்கிறது. நீங்கள் அவைகளை இப்
"போது சகிக்கமாட்டீர்கள். 13 - சத்திய ஆவியானவர்
"வரும்போது சகலசத்தியத்திலும், உங்களை நடத்துவார்.
"அவர் தம்முடைய சுயமாய்ப்பேசாமல், தாம் கேள்வி
"படுபவைகள் எவைகளோ அவைகளைப்பேசி இனிவரும்
"காரியங்களையும் உங்களுக்கு அறிவிப்பார் 14 - அவர்
"என்னுடையதிலே எடுத்து உங்களுக்கு அறிவிப்பதால்
"அவர் என்னுடைய மகிமையை விளங்கப்பண்ணுவார்,
"15 - பிதாவினுடையவைகள்யாவும் என்னுடையவைகள்
"அதினாலே அவர் என்னுடையதில் இருந்து எடுத்து
"உங்களுக்கு அறிவிப்பார் என்று சொன்னேன்" என்று



இயேசுநாதர் கூறினதாகக் கூறுகின்றது. இயேசுநாதர் தாம் இந்த
உலகத்தைவிட்டு நீங்குவதானது உலகத்துக்குப் பிரயோசனமா
யிருக்குமென்று சத்தியம்செய்து கூறினபடியினாலே அவர் உல
கத்தினின்று போய்விட்டதைக் குறித்து மனக்கவலை அடைவத
ற்கு நியாயமிருக்கிறதா? நன்று யூகித்துப்பாருங்கள். அப்படியி
ருக்க எமது நேயர்கள் அவர் போனதைக் குறித்து நினைத்து
நினைத்து உருகுவானேன்? இயேசுநாதர் போகாதிருந்தால் நாம்
பிரயோசனத்தை அடையமாட்டோ மென்பது சத்தியமாகவில்
லையா? நேயர்காள்! இயேசுநாதரைப்பார்க்கிலும் அதிகப்பிரயோ
சனங்களை நமக்குக்கொடுப்பவரானவர் அவர்போகாவிட்டால் வர
மாட்டாரென்பது புலப்படவில்லையா? அப்படியே இயேசுநாதர் பிர
மாணம்செய்கிறாரே. ஆகலின் இயேசுநாதரினாலேயே உலகத்தார்
எல்லாப்பிரயோசனங்களையும் பெறமாட்டார்களென்பது தெளிவாய்
உங்களுக்குப் புலப்படாமலிராது. இதோ! இயேசுநாதரை அநுப்
பிவிட்டு வருபவராகிய உலக இரட்சகரோவெனின், பாவத்தையும்
நீதியையும் நியாயத்தீர்ப்பையும் குறித்து உலகத்தாருக்கெல்லாம்
மெய்யாகிய அறிவைக்கொடுப்பாரென்று இயேசுநாதர்தாமே கூறு
கின்றாரே. ஐயோ! இயேசுவானவர் அப்படிப்பட்டமெய்யாகிய அறி
வைக்கொடுக்கவில்லை என்றல்லவோ புலப்படுகின்றது? ஏனோ அவர்
மெய்யறிவை மறைத்துக்கொண்டார்? அவருக்கு எல்லாமெய்ய
றிவையும் ஜனங்களுக்குப் போதிக்கும் அதிகாரத்தைப் பராபரன்
கொடுக்கவில்லையோ? அப்படிக்கொடுத்திருந்தால் அவர் அவைகளைச்
ஜனங்களுக்கு மறைத்துக்கொண்டு போகமாட்டாரே? அங்ஙனம்
போவாராகில் உலகத்தின்பொருளை அவர்கவர்ந்துகொண்டு போயி
னாரென்றல்லவோ முடியும்? ஆகவே அவருக்கு அப்படிமெய்யான
எல்லா அறிவையும் சனங்களுக்குப் போதிக்கும் சக்தியைப் பரா
பரன் கொடுக்கவில்லை; அது நமது உலக இரட்சகரின் பொருட்
டாக நிறுத்திவைக்கப்பட்டதென்று வெள்ளிதாய்ப் புலப்படுகின்
றது. அல்லாமலும் இஸ்ரவேலர்கள் இயேசுவை விசுவாசிக்காதபடி
யினாலே அவர்களுக்குவரும் பாவத்தைக்குறித்தும் சீஷர்கள், இனி
இயேசுநாதரைக் காணாதபடி அவர் தமது பராபரனிடத்திற்குப்
போகிறபடியினாலே அதற்குரிய நியாயத்தைக்குறித்தும் (இவ்வுல
கத்தின் பிரபுவாகிய தேற்றுகிறவர்) தெளிவாகப்போதிக்கும் சுதந்
திரத்தைப் பராபரனாலே நியாயாதாரங்களோடு பெற்றிருக்கிறபடி
யினாலே அவர் சகலவிதமான நியாயங்களின் தீர்ப்பான அறிவை

உலகத்துக்குக் கொடுப்பார் என்று இயேசுநாதர்தாமே தெளிவாய்க்கூறியிருக்கிறதாகத் தோன்றுகின்றதே. அதனாலே இயேசுநாதர் எவ்வளவு பெற்றுவந்தாரோ அவ்வளவு நியாயங்களை மாத்திரமே அவர் வெளிப்படுத்தினார் என்றும் அந்த நியாயங்களுக்கு அதிகமானவைகளை அந்தக்காலத்தியவர்களின் மனங்கள் சுமக்காதென்றும் பூரணமான அறிவைக்கொடுப்பவர் இயேசுநாதருக்குப்பிறகு வருகிறவராகிய உலகத்தின் பிரபுவென்னும் உலக இரட்சகரென்றும் தெளியக்கிடக்கின்றன. இதுவேயுமன்றி, சத்திய ஆவியானவர் உங்களைச் "சகலசத்தியத்திலும் "நடத்துவார் என்று இயேசுநாதர் கூறினபடியினாலே அவர்தாம், அத்தகைய சத்தியத்திலே சனங்களை நடத்தினாரில்லர். அவருக்கு அப்படிநடத்தும் சக்தியில்லை என்று நன்றாய்த்தோற்றுகின்றது; மேலும் அந்தச்சத்திய ஆவியெனப்படும் உலக இரட்சகரோவெனின் தம்மால் ஒன்றும்பேசாமல் தம்முடைய பராபரனாலே கேள்விப்படுபவைகளையே பேசுவார் என்று இயேசுநாதர்தாமே கூறுகிறபடியினாலே அவர்தாம் அப்படிப்பட்டவரல்லர், தம்முடைய இச்சையின் பிரகாரமாகவும் பேசுவாரென்று ஏற்படுகின்றதுந்தவிர இயேசுநாதருக்குப்பிறகு வருபவர் பராபரனாலே கேள்விப்படுபவைகளையே பேசுவாராகையால் அவர் தீர்க்கதரிசனமேசொல்லுவாரென்பது புலப்படுகிறது. ஆகலின் இயேசுநாதர் தீர்க்கதரிசனத்தை முடித்திருக்கிறவர் அல்லர் என்றும் இனிவரப்போகிற காரியங்களையும் சத்திய ஆவியானவர் உலகத்திற்கு அறிவிப்பார் என்றும் இயேசுநாதர் கூறியபடியினாலே தாம் அப்படியாக வரப்போகிற காரியங்களை உலகத்தாருக்கு அறிவிக்கும் வல்லமையுடையவரல்லர் என்றும் புலப்படுகின்றன. இந்தக்காரணங்களினாலே இயேசுநாதர் தமக்குப்பிறகு வருபவரைக்குறித்துத் தெளிவாய் அறிவித்திருக்கின்றார் என்பது எதிர்வாதமின்றி எல்லாராலும் ஒப்புக்கொள்ளுதற்கு யோக்கியமாயிற்று.

எமது நேயர்காள்! யோவான் 14-ம் அதிகாரம் "18-
"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடுவதில்லை, உங்க
"ளிடத்தில்வருவேன், சிலகாலத்திற்குப்பிறகு உலகத்தார்
"என்னைக்காணமாட்டார்கள்" என்று கூறுகின்றதே. அப்படியிருக்க அந்தயோவான் 16-ம் அதிகாரம் "நீங்கள் என்னை இனிக்
"காணாதபடிக்கு நான் என்பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே,
"ஒய்" என்று அதற்கு மாறுபடக்கூறுவது நியாயமாகுமா? என்



பீர்களோ? அப்படி மாறுபடுவது உங்கள் வேதத்தின் இயற்கையே.
ஆயினும் இயேசுநாதர் உலகமுடிவின் காலத்திலே வருவாரென்
பது எம்மனோரின் வேதத்திற்குக் உடன்பாடே; அதற்குச் சான்
றுகமத்தேயு 24-ம் அதிகாரம் "35- வானமும் பூமியும் ஒழி
"ந்துபோம். என்வசனங்களோ ஒழியாதிருக்கும். 36-
"அவை சம்பவிக்கும் நாளையும் நாழிகையையும் என்பிதா
"ஒருவரேதவிர மற்றொருவனும் அறியமாட்டான். பர
"மண்டலங்களிலுள்ள தேவதூதர்களும் அதையறியார்
"கள். 37- நோவாவின் காலத்திலே நடந்ததுபோல மனி
"தனுடைய குமாரன் வருங்காலத்திலேயும் நடக்கும்"
என்று கூறுவதினாலே நாம்சொன்ன அபிப்பிராயமே சரியானதெ
ன்று எமது நேயர்கள் நன்கு உணர்வார்கள். நேயர்காள் நீவிர்
கள், மேலே இயேசுநாதரினாலே, கூறப்படும் சத்திய ஆவியான
வர் மனுஷர் அல்லர் என்றும் தீர்க்கதரிசிகள் எவ்வாறாக உலகத்
திலே பிரசன்னமாகிச் சுவிசேஷங்கள் பிரசங்கித்தார்களோ அவ்
வாறாகப் பிரசங்கிக்கிறவர் அல்லர் என்றும் அவர்மனுஷர்களின்
கண்களுக்குப் புலப்படுகிறவர் அல்லர் என்றும் இயேசுநாதரின்
சீஷர்கள் பக்தர்களின்மீது அவர்பிரவேசித்தால் அவர்கள் தீர்க்க
தரிசனம் உரைப்பார்கள் என்றும் பராபரன், பரிசுத்தஆவி, இயேசு
இம்மூவரும் ஒரேதன்மையுள்ளவர் என்றும், மூவரும் ஒருவரே
என்றும் சொல்லுகின்றீர்கள். ஆ! நேயர்களே நீவிர்கள் இப்படி
நம்புகிறதற்கும் சொல்லுகிறதற்கும் உங்கள் வேதத்தில், ஒருவித
ஆதாரமும் காணப்படவே இல்லை. ஆகையால் நீவிர்கள் அப்படி
நம்புவது முற்றிலும் மோசமேயாக முடிகின்றது. ஏனென்றால்,
"கண்ணுக்குத்தோன்றுகிற உருவாய் ஒருபுறாவைப்போலப்பரிசுத்த
"ஆவியானவர் அவர்மேல் இறங்கினார்" என்று லூக்கா 3-ம்
அதிகாரம் 22-வது வசனம் கூறுகின்றது. இதனாலே பரிசுத்த
ஆவியானவர் கண்ணுக்குத்தோன்றுகிற உருவமாயிருக்கிறாரென்று
வெளிப்படுகின்றது. ஆகையால், அந்தப்பரிசுத்த ஆவியானவர், புறா
வைப்போலாக அல்லது வேறுருபமாகவந்து, உண்மையான சுவி
சேஷத்தைப் பிரசங்கிக்கலாமன்றோ? அப்படி ஏன்வரப்போகாது?
மேலும் பரிசுத்தஆவியானவர் இயேசுநாதர்மீது இறங்கி அவரு
டனே இருந்தாரென்பது நீவிர்கள் மறுக்கமாட்டாத உண்மையே.
நேயர்காள்! மேலே இயேசுநாதர்கூறிய சத்தியஆவி அல்லது பரி

சுத்த ஆவியானவரோ வென்னின்; இயேசுநாதர் உலகத்திலே இருந்
தால் வரமாட்டாதவர் என்றும், இயேசுநாதர் பரமண்டலங்களுக்
குச்சென்ற பின்வருபவர் என்றும், அவர்வருவது சனங்களுக்குப்
பிரயோசனமாகையால் அவர் உலகத்திலே வரும்பொருட்டாகவே,
இயேசுநாதர் போயிருரென்றும் அந்தச்சத்திய ஆவியானவர்வந்து
தான் உலகத்தாரைச் சகலநியாயத்திலும் நடத்தவேண்டியவர் என்
றும் நன்று புலப்படுகின்றதே. ஆகவே நீயிர்சொல்லுகிற பரிசுத்த
ஆவியானவர்யாவர்? இயேசுநாதர்மீது இறங்கி அவருடனே இருந்
தாரே அந்தப்பரிசுத்த ஆவியானவரா? அல்லது இயேசுநாதர் தம
க்குப் பிறகுவருவதாகச்சொன்னரே அந்தப்பரிசுத்த ஆவியானவரா?
பரிசுத்த ஆவியானவர்பலருளரா? என்னசொல்லுகிறீர்களோ? இதோ
"நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது எந்தபாபமும் தூஷ
"ணமும் மனிதனுக்கு மன்னிக்கப்படும். தேவ ஆவியை
"(நிந்திக்கும்) தூஷணம் மாத்திரம் மனிதனுக்கு மன்னிக்
"கப்படாது. எவனாகிலும் மனிதனுடைய குமாரனுக்கு
"விரோதம்பேசினால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.
"எவனாகிலும் பரிசுத்த தேவ ஆவிக்கு விரோதம்பேசி
"ஞல் அது அவனுக்கு இம்மையிலும் மறுமையிலும் மன்
"னிக்கப்படுவதில்லை" என்று மத்தேயு 12-ம் அதிகாரம்
31, 32-வசனங்கள் கூறுகின்றனவே. ஆகலின் இந்த ஆவியானவர்,
மேலேசொன்ன ஆவியானவர்களில் ஒருவரா? அல்லது இவர்
வேருனவரா? ஆவியானவர்கள் எத்தனைதரத்தினராக இருக்
கின்றார்கள்? நீவிர் பராபரனும் இயேசுநாதரோடும் ஒன்றாய்
க்கிடக்கின்றதாகச்சொல்லும் ஆவியானவர்யாவர்? நீவிர்கள் விடை
யருள்வீர்களா? மூன்று ஆவியும் ஒன்றே என்பேம் என்பீர்களா
யின் "அநாசற்றும்" பொருந்தாது. இயேசுநாதர் பரமண்டலங்களுக்
குப்போனபிறகு வருகிற ஆவியானவர் இயேசுநாதர்மீது இறங்கி
த்தங்கின ஆவியாக ஒருபோதும் இருக்கமாட்டாரென்பது எதிர்
வாதமில்லாத உண்மையேயாருமாகலின்; நேயர்களே நீவிர்கள்,
எந்த ஆவியானதொன்றை நிச்சயித்து, இன்ன ஆவிதான் பராபர
னுடனேயும் இயேசுநாதருடனேயும் ஒத்துக்கிடக்குமாயி என்று
சொல்லுதற்கு நியாயாதாரங்களுடனே முன்வருவீர்களாயின் யாம்
மிகச் சந்தோஷப்படுவோம். ஐயோ! நேயர்களே, இயேசுநாத
ரிருலே வியந்து கூறப்பட்டவர், மனிதனல்லு, ஆவியேயென்றல்;



அது, இயேசுநாதர்சொன்னபடி, உலகத்தாரைச் சகலஉண்மையி
லும் நடத்தத்தக்கதாக ஓருருவங்கொண்டு, மனிதர்களோடே பேசி
த்து, மனிதர்களின் மனங்கள் ஒத்துக்கொள்ளத்தக்கதாகச்சுவிசேஷ
உண்மைகளில் இயேசுநாதர் அறிவிக்காதன வெல்லாமும் அறிவி
த்து எல்லாமனிதர்களும் காணும்படி, உலகத்தைவிட்டுப் பரமண்
டலத்திற்குப் போகவேண்டுமென்றே? அல்லது வேறு எங்கேயா
வது ஒழிந்துபடல்வேண்டுமென்றே? இங்ஙனமாக எதாவது நடத்தப்
பட்டனவா? அது ஒழிந்துபோகும் இடம் இதுவென்றுவது சுட்டிக்
காட்டினதுண்டா? இயேசுநாதர் தமக்குப்பின் வரப்போகிற ஆவி
யானவர், தமது சீஷர்கள்மீது பிரசன்னமாகியே பேசுவார் என்று
வது அவர் உருவப்படாதவர் என்றுவது சொன்னரா? இல்லையே,
அப்படியிருக்க அவ்வாறெல்லாம் நம்புவது மோசமன்றே? இதோ
மத்தேயு 20-ம் அதிகாரம் "23-அப்பொழுது அவர்
"சொன்னது என்பாத்திரத்தில் குடிப்பீர்கள். நான் பெ
"ற்றுக்கொள்ளும் ஸ்நானத்தையும் பெற்றுக்கொள்வீர்
"கள். அதுமெய்தான். ஆனாலும் என்பிதாவினாலே எவர்
"கள் குறிக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்கேயன்றி
"(மற்றொருவருக்கும்) என்வலது பாரிசத்திலேயும் என்
"இடது பாரிசத்திலேயும் உளுக்காந்திருக்கிற (கனத்தை)
"நான்கொடுக்கக்கூடாது" என்று இயேசுநாதர் கூறினதாகக்
கூறுகின்றது. இதனாலே, இயேசுநாதர், பராபரனைப்போல சக்
திவாய்ந்தவராகக் காணப்படவேமாட்டார் என்றும் அவரைப்போ
லப்பலர் இருக்கலாமென்றும் பராபரனுடைய உத்திரவு பெற்றவர்
கள் அவருடைய வலது இடதாகத்தங்கி இருக்கலாமென்றும் நன்
றுபுலப்படுகிறபடியினாலே, அவர் பராபரனுக்குச் சமமாகமாட்டார்
என்பது எமதுநேயர்கள் உணர்வார்கள். ஆகவே, இயேசுவைப்
பராபரனுக்கு ஒத்துக்கூறல் முறையன்றெனச் சொல்லுவார்கள்.
இதோமத்தேயு 24-ம் அதிகாரம் "36 அவை சம்பவிக்கும்
"நாளையும் நாழிகையையும், என்பிதா ஒருவரேதவிர மற்
"றொருவனும் அறியமாட்டான். பரமண்டலங்களிலுள்ள
"தேவதூதர்களும் அதை அறியார்கள்" என்று கூறுகின்
றது. இதனாலே உலகமுடிவை இயேசுநாதருமேயன்றிப் பரிசுத்த
ஆவி என்பவரும் அறியவில்லை என்பது நன்றுவெளியாகின்றது.
ஆகவே அவ்விருவரும் பராபரத்தன்மைக்கு ஒருபோதும் ஒத்துக்

கிடக்காரென்பது எமது நேயர்கள் அறிவார்கள். இதோமத்தே 11-ம் அதிகாரம் "11 - அல்லாமலும், ஸ்திரீகளிடத்தில் பிறந் "தவர்களில் யோவான் ஸ்நானனிலும் பெரியவன் ஒருவ "னும் எழும்பவில்லையென்று மெய்யாய் உங்களுக்குச்சொ "ல்லுகிறேன்" என்று கூறுகின்றது. இதனாலே இயேசுநாதர் ஸ்திரியிடத்தில் பிறந்தாரென்பதுபற்றி யோவான், இயேசுநாத ரிலும் பெரியவன் என்று அவரேபிரமாணம்செய்து கூறியிருக்கிற தாகத்தெரிகிறது. ஆகவே அப்படிப்பட்ட இயேசுவானவர் பராப ரனுக்கு எப்படி சமமாகுவார்? மத்தேயு 22 - ம் அதிகாரம் "37- "இயேசுவானவர் சொன்னது உன்தேவனாகிய பராபர "னில், உன்முழு இருதயத்தோடும் உன்முழு ஆத்துமா "வோடும், உன்முழுமனதோடும் அன்பு கூறுவாயாக என் "பது முதலாவது பிரதானமான கற்பனையாயிருக்கிறது" என்று கூறுகின்றது. இதனாலே, பராபரனையேயன்றி வேறுவஸ் துகளை அன்புகூறுவது பிரதானமாகக் காணப்படவில்லை. இப்படி யிருக்க, குமாரன், பரிசுத்தஆவி இவர்கள் எங்ஙனம் பராபரனோடு ஒத்து, மூன்றும் ஒன்றேயென்று நம்பப்படும்? ஐயோபாபம்! இவைகளேயுமன்றி எவ்வளவோ வேதவாக்கியங்கள் பராபரனது ஒப்பறும் தன்மையைக் குறித்து வேதத்தில் சொல்லப்பட்டிருக் கின்றன. அவையெல்லாம் சாத்தானாலே மறைப்பிக்கப்பட்டோ என் னகாரணத்தாலோ வேதத்திற்கு முற்றுமுரணான விசயங்களை, இக் காலத்திலே வேதவித்துவான்கள் கற்பித்து ஏழைகளைமருட்டி அநி யாயமாய் நரகத்திற்கு ஆளாகின்றார்கள். ஐயோ! எமது நேயர் களே! இயேசுநாதர் வெகுதெளிவாய் நான் போகுவது, உங்களுக் குப் பிரயோசனமாக இருக்கும், நான்போகாதிருந்தால் அந்தத் தேற்றுகிறவர் உங்களிடத்தில் வரமாட்டார். நான்போவேனே யானால் அவர் உங்களிடத்தில்வருவார். அவர்வந்து உங்களைச் சகல சத்தியத்திலும் நடத்துவார், அவர் உங்களுக்கு மெய்யறிவைக் கொடுப்பார், என்பனவாகக் கூறியிருக்கின்றாரே, அப்படியிருக்க, நீவிர் அந்தத்தேற்றுகிறவர் மனிதரல்ல, சீஷர்கள்மீது பிரவேசிக் கிற ஒரு ஆவி என்றும் சீஷர்கள்மீது அப்படி ஆவிவந்து சீஷர் கள் சகலசத்தியத்திலும் கிறிஸ்துவர்களை நடத்திவிட்டாரென்றும் சொல்லுகின்றீர்களன்றோ? அந்தோ என்ன சத்தியத்தில் சீஷர் கள் உங்களை நடத்தினார்களோ? ஐயோ! இயேசு நாதரைவிட



சீஷர்கள், அதிகச் சத்தியமானவரோ? இயேசு அறிவிக்காத மெய் யறிவை யெல்லாம் சீசர்கள் விளக்கினாரோ? இயேசு நாதர் அறி விக்காத நியாயங்களை யெல்லாம் சீசர்கள் அறிவித்தார்களோ? இயேசு நாதர் அறிவிக்காதபாபங்களை யெல்லாம் சீசர்கள் அறிவித் தார்களோ? அப்படிப்பட்ட மேன்மையாகிய அந்தச் சத்திய ஆவி யானவர் இயேசுவின்மீது ஏன் பிரவேசிக்கவில்லையோ! ஒருவேளை அந்தச் சத்திய ஆவியைச் சுமக்கும்சக்தி இயேசு நாதருக்கு இருக் கவில்லையோ? ஐயோ! சீசர்கள், இயேசுநாதரிலும் பெருமையுடை யவர்களென்று நீவிர்கள் சொல்லுவீர்களோ? இயேசுநாதர் அறிவி க்காதமெய்ஞ்ஞானங்களையெல்லாம் அவருக்குப் பிறகு சீசர்மீது இறங்கின பரிசுத்த ஆவியானவர் அறிவிப்பாராயின் சீசர் இயேசு நாதரினும் பெரியவர் என்பதில்யாதுதான் தடையாகுமோ? பே தைகாள்! எதிரிக்குசகுனத்தடையாகுமாறு மூக்கை அரிந்துகொ ண்டான் கானிதயாகவன்றோ உங்கள்காதை புலப்படுகின்றது. ஐயோபாபமே! இஸ்ரவேலரை மாத்திரம் இரட்சிக்கும்படி இயே சுநாதர்மீது ஒரு பரிசுத்த ஆவியானவர் புறாவின்வடிவமாகத் தங் கக் கண்டபடியினாலே யோவான், அந்த இயேசுவைத் தேவக்கு மாரன் என்றல்லவா சாட்சிபகர்ந்தார்? உலகத்தாருக் கெல்லாம் நியாயத்தையும், உலகத்தாரையெல்லாம் வெளிச்சத்திலும், உலகத் தாருக்கெல்லாம் மெய்யறிவையும், கொடுத்து நடத்தி இரட்சிக்கு மாறுவரும் தேற்றுகிறவராகிய பரிசுத்தஆவி ஒருவர் தமக்குப் பின்வருவாரென்று இயேசுவினாலே வியந்து கூறப்பட்ட அந்த ஆவியானவர், தங்கப்படும் சீஷர்களை என்னென்று சொல்லுவீர் கள்? அந்தச் சீஷர்களைப் பராபரத்தன்மை என்பீர்களா? அல்லது இயேசு நாதருக்குப் பாட்டனென்பீர்களா? பிதா, குமாரன், பரி சுத்தஆவி, மூன்றும் ஒன்றென்றீர்களே? அஞ்ஞானிகளே! பாட் டனிருக்கப் பிதாவுக்கும் குமாரனுக்கும் என்னத்துவ மிருக்குமெ ன்று கண்டீர்கள்? ஓ பேதைகாள்! இயேசு நாதர், ஒரு பெரிய வல்லமை பொருந்தியவராக வரும் உலக இரட்சகரைக் குறித்துச் சொன்னவேதவாக்கியங்களில் உங்களுக்கு ஏன்றான் பொறுமை உண் டாயிற்றோ? உண்மையைமறைத்து, "சத்திய ஆவியாகியதேற்று கிறவர்" என்ற பதத்திற்கு வேறுஅருத்தம் செய்து அது ஒரு ஆவி என்றும் அது சீஷர்கள்மீது அறப்பப்பட்டு அந்தப் பரம யோக்கியர்களான சீசர்கள், இயேசுநாதரிலும் மேல்போய்த் தீர்க் கதரிசனங்கள் உரைத்தார்களென்றும், இயேசுநாதரைக் காண

மெய்யாகிய அறிவுகளைச் சொன்னாரென்றும், சொல்லுகின்றீர்களே. "மகன் செத்தாலும் சாகட்டும் மருமகள் கொட்டம் அடங்கட்டும்" என்றமாமியாள் கதைக்குமன்றோ உங்கள்கதை ஒப்பாகின்றது? இயேசுவின்கனம் குறைந்தாலும் குறையட்டும் அயோக்கியர்களான சீசர்களை, இயேசு நாதரைக்காண உயர்த்தி உலக இரட்சகரென்று வருபவரை ஒழித்து விடலாம் என்கிறீர்களோ? நேயர்காள்! நீவீர்கள் சொல்லுகிறபடியே வைப்போம். இயேசுநாதர் விளக்காத மெய்யறிவை உங்களுக்குச் சீசர்கள் என்ன அதிகமாகவிளக்கினார்? தயைசெய்து சொல்லுவீர்களா? மோசேமுதலாக இயேசுநாதரிறுவாக உலகத்திலே இஸ்ரவேலரின் பொருட்டாக வந்த தீர்க்கதரிசிகளெல்லோரும் மெய்யறிவை விளக்கவில்லை. அன்றல் இஸ்ரவேலர்களின் பொருட்டு அவர்களுக்கு எவ்வளவு அறிவை வெளிப்படுத்தும் படிபராபரன் கட்டளையிட்டாரோ அவ்வளவை மாத்திரம் வெளிப்படுத்தினார்கள். அது பற்றியே இயேசுநாதர், இனிவரப்போகிறவர் எல்லாமனுஷ ஜாதிகளுக்கும் ஒரேதன்மையாக மெய்யறிவைக் கொடுப்பாரென்னும் பொருட்டாக "உலகத்துக்கு மெய்யறிவைக் கொடுப்பார்" என்று உலக இரட்சகரைப்பற்றிக் கூறினாரென்பது நீங்கள் உணரவேண்டிய உண்மை யென்பதை இதோ கூறுகின்றோம். கபடில்லையான மனதுடன் கவனிப்பீர்களாயின் நீவீர்கள் பாக்கியவான்களே. ஆமென்.

நேயர்காள்! உங்கள்வேதப் பிரமாணங்களிலே, இன்னின்னவைச்செய்க, இன்னின்னவைச்செய்யற்க, இன்னின்னவை உண்க, இன்னின்னவைஉண்ணற்க, என்பனகூறப்பட்டிருக்கின்றனவேயொழிய நீவீர்கள் இறந்துவிட்டபிறகு உங்கள்மீது நிகழுவனவற்றைக் குறித்தாவது, பரலோக நரகலோக இராச்சியங்களின் நிலைமையைக் குறித்தாவது உங்களுக்குயாதொரு அறிவையும் கொடுத்திருக்கிறதாக உங்கள்வேதங்களில் காணப்படவில்லையே. உயிருடையவைகள் தத்தம்உயிரை எப்படிவிடுகின்றன? அந்த உயிர்யாரால் கைப்பற்றப் படுகின்றது? உயிராவதென்ன? உயிர்கைப் பற்றப்படுகிற காலத்தில் என்ன சம்பவிக்கின்றது? உயிரைக்கைப் பற்றுபவரின் பெயரென்ன? சமாதியில்வைக்கப் பட்ட பிரேதத்திற்குச் சமாதியில் என்ன நடக்கின்றது; சமாதியில் வைக்கப்பட்ட ஆண் அல்லது பெண்ணை அங்குச் செய்யவேண்டியது என்ன? சமாதியில் வைக்கப் பட்டவனிடத்தில் யாராவது வருகிறார்களா? அப்படியா

225-



யின் அவர்களின் பெயரென்ன? உலகமுடிவிற்கு இடையில் இறந்துவிட்டவர்களின் நிலைமை எப்படி? பரலோக இராச்சியத்தில் ஆண் பெண்சம்பந்த முண்டா? பிள்ளைபெறுத லுண்மையா? உலகத்திலே கன்னிதாரிகளானவர்கள் பரலோகத்திலே புருசசம்பந்தம் அடைவார்களா? உலகத்திலே புருசசம்பந்த மடைந்தவர்கள் பரலோகத்திலே புருசசம்பந்தம் அநுபவிப்பார்களா?(அப்படியாகப் புருசர்களின் விசயத்திலும் விடையருள்க.) உலகத்திலேசெய்யப்பட்ட நன்மை தீமைகளைக்குறித்து மனுசராதிகள் எவ்விடத்தில் விசாரிக்கப்படுகின்றார்கள்? பராபரனை மனுசன்கள் கண்ணினாலே காண்பார்களா? காணக்கூடாதவர்கள்யாவர்? பரலோக இராச்சியத்திலே ஊண்தின்முதலிய சுகத்துக்கங்கள் உண்டா? சுவர்க்கவாதிகளின் வயதென்ன? எந்தவயதை உடையவர்களாக சுவர்க்கம் புகுவார்? சுவர்க்கம் புகுந்தபிறகு இறப்புப் பிறப்பென உண்டாகுமா? என்பனவாதிய நியாயப்பிரமாணங்களைச் சீசர்கள்மீது வந்தபரிசுத்த ஆவியானவர் அறிவித்தாரா? இல்லையென்றால் இயேசுநாதர் சொன்னபடி உலகத்தாருக்கு மெய்யறிவைக் கொடுத்ததாக ஏற்பட்டதன்றோ? மேலே கூறப்பட்டவைகளை யெல்லாம் விபரமாகச் சொன்னவரையன்றோ மெய்யறிவைக் கொடுக்கும் பரிசுத்த ஆவியென்று சொல்லவேண்டும்? நேயர்காள்! நாம் வினவியவைகளில் ஒன்றேனும் உங்கள் வேதத்தில் விவரிக்கப்பட்டிருப்பதாகப் புலப்படவில்லையே? ஆகவே சீசர்கள்மீது பரிசுத்த ஆவியானவர் பிரவேசித்து அவரால் சீசர்கள்பேசுவதே தீர்க்கதரிசனமான உண்மை அறிவென்று நீவீர்கள் சொல்லுகிறபடி உண்மைவிசயம் இருக்கவில்லை என்பது வேறுவிவரம்வேண்டாது நீவீர்கள் விளங்கக் கூடியதாயிற்று. மேல் கூறிய காரணங்களாலே இயேசுநாதர் கூறிய சத்திய ஆவியாகிய தேற்றுகிறவர் என்றது, உலக இரட்சகராக இஸ்மவேல் சந்ததியிலே வரப் பட்டவரென்பது வெள்ளிமலையேயன்ன விளங்குகின்ற உண்மை. எமது நேயர்களே! ஒருவன் உயிரோடெழுந்திருக்கும் மறுமை விசயத்தைக்குறித்து விசாரிப்பவனாக இயேசுவை நோக்கி, ஒருவள், ஏழுபுருஷருக்கு ஒருவனுக்குப்பின் ஒருவனுக்குப் பெண்சாதியாயிருந்தாள். அவள் அவ்வெழுவரில் ஒருவனுக்கேனும் கற்பவதியாகாமல் கடைசியாய் அவள் மரித்தாள். ஆகவே அவள் அந்த ஏழுபேரில் யாருக்குப் பெண்சாதியாயிருப்பாள் என்று கேட்டான். அதற்கு இயேசு வானவர், வேத எழுத்துக்களையும் பராபரனுடைய பலத்தையும் நீங்கள் அறியாமல் தப்

பாய் நினைத்திருக்கின்றீர்கள். மறுமையில் பெண்கொள்வதும், கொடுப்பதும் இராது. அவர்கள் பரலோகத்திலே பராபரனுடைய தூதரைப்போல இருக்கிறார்கள் என்று இயேசுநாதர் கூறினதாக மத்தே 22-ம் அதிகாரம் 29-30-இந்தவாக்கியங்கள் கூறுகின்றன. இதனாலே இயேசுநாதரிடத்துக் கேள்விகேட்டவன் மறுமையில் பெண்கொள்வது உண்டென்று மோசேயின் வேதப்பிரமாணப்படி நம்பி இருந்ததாகவும் இயேசுநாதரின் கருத்து அதற்குமாறாக இருக்கிறதாகவும் தோற்றுகின்றன. ஆனால் இயேசுநாதர் மறுமையில் புருஷன் பெண்சாதியாக இராமல் தேவதூதர்களைப்போல் மனிதர்கள் இருக்கிறார்களென்று திட்டமாய் அறிவித்திருக்கிறார் என்பது பரிஷ்காரப் படுகின்றது. அப்படி ஆண்பிள்ளைகளிருந்தால் பெண்டுகளோவெனின் என்னென்று இருக்கவேண்டும்? தேவதூதர்களுக்குப் பெண்களுண்மையாயின், அப்பெண்கள் அவர்களைப்போலிருக்கிறார்களென்பீர்கள். தேவதூதர்களில் பெண்கள் உண்டா? தேவதூதர்களின் இலக்கம், பரலோக இராச்சியம், சேர்ந்து தேவதூதர்களைப் போலானவரின் இலக்கத்தோடு சேர்ந்தால், முன்னையவிட தேவதூதர்களின் இலக்கம் அதிகமாகி விடுமன்றோ? அல்லாமலும், எல்லாரும் தேவதூதர்களானால் வேலை என்ன? அந்தவேலை முன்னைய தூதர்களாலே நடந்துவந்த வேலைகள்தானே? ஆனால், முன்னையைவிட இப்போது/வேலைமந்தியம் என்பீர்களோ? அப்படியானால், முன்னையவேலை அதிககஷ்டமாயிருந்ததென்றன்றோ ஏற்படும்? ஐயோ! நேயர்காள், இயேசுநாதரோவெனின்; அந்தப்பெண்ணைக் குறித்து விசாரித்தவனது கேள்விக்குத்தக்க மறுமொழி கொடுத்தவராகத் தெரியவில்லை. ஆனால் இயேசுநாதர் ஒருக்காலும் அப்படிச்சொல்லி இருப்பாரென்று நாம் எண்ணமாட்டோம். இயேசுநாதர் அப்படி அவனுக்கு மறுமொழி கொடுத்ததாகச் சொன்னவர் பொய்யைச் சொன்னாரெனநாம் சொல்லுவோம். இயேசுவே அப்படிச் சொன்னாரென்றால் இவ்வாறு மெய்யறிவிற்கு விரோதமாகத் தாம் சொல்லிவந்த காரணத்தினாலேயே இயேசுவானவர், உலகத்திற்கு மெய்யறிவைக் கொடுப்பவர் தமக்குப்பின்னே வருகிறாரென்று உங்களுக்குச் சொல்லியிருக்கிறார். ஆகவே நீவிர்களெல்லாரும் இயேசுநாதருக்குப் பிறகுவந்தவர் எவ்வாறு போதித்தாரோ அவைகளே மெய்யறிவென நம்பவேண்டியவர்கள். எனவே இயேசுநாதருக்குப் பின்வந்த பரிசுத்த ஆவியானவர் சீசர்களின்மீது பிரசன்னமாய் மெய்யறிவை விளக்கினாரென்று எமது நேயர்கள் சொல்கிற



படி மேல் கூறிய வினாக்களுக்கெல்லாம் விடைகள்மேல் கூறிய பரிசுத்த ஆவியினாலே கூறியிருப்பதை அவர்கள் வேதத்தில் கண்டிருப்பார்களன்றோ? அப்படி கண்டிருக்கிறார்களா? இல்லை என்றே ஒழிவார்களென்று நம்புகிறேம். அங்ஙனமாயின் எமது நேயர்கள், இயேசு நாதருக்குப் பிறகு வந்தவராகிய உலக இரட்சகர் யாவரோவென்றால்; இஸ்ரவேலர்களுக்குச் சொந்தமென்ற, பாலும் தேனும் ஓடுகிற இராச்சியம் யார் வசமிருக்கிறதோ வென்றும் எருசலேம் யார்வசமிருக்கிறதோ வென்றும் சுன்னத்துச் செய்பவர்யாவரோவென்றும் வேதபூமி யெனப்படும் பாலஸ்டைன் யார்வசமிருக்கிறதோ வென்றும், தீர்க்கதரிசனம் கடைசியாய் முத்திரித்தவர்யாவரோ வென்றும் இஸ்ரவேலருக்கென்றாவது மற்றவர்களுக்கென்றாவது நிபந்தனையின்றி எல்லாருக்கும் பொதுவாய்ச் சுவிசேஷம் யாவரால் பிரசங்கிக்கப் பட்டிருக்கிறதோ வென்றும் இயேசுநாதருக்குப் பிறகு கடைசியானத் தீர்க்கதரிசியாய் வந்தவர்யாவரோவென்றும் உற்றுநோக்கி அவ்வாறெல்லாம் பெறப்பட்டவராக இஸ்மவேல் சந்ததியிலே வந்திருக்கின்றாராவென்று அறிந்து, அவரால் இம்மைமறுமைகளின் விசயமானயாவத்து சங்கதிகளும் விவரமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றனவா? என்றும் உற்றுநோக்கி யாம் கூறியவாறு உண்மை கண்டீர்களாயின் அவரே உலகஇரட்சகரென்று அவரைக்கைக்கொண்டு மெய்யறிவைப் பெற்றுப் பரலோக இராச்சியத்திலே நித்திய சீவனுள்ளவர்களாய் எவ்வித சுகங்களையும் (துன்பமின்றி) நித்தியானந்த சுரூபிகளாக, அநுபவித்து அழிவின்றி வாழக்கடவீர்களாக. ஆமென்.

## "வித்து"

இது; ஆபிரகாமினது சந்ததியின் வரலாற்றுமுறைமை இனைத்தெனக் கூறுகின்றது.

எமது கிறிஸ்தவவேதப் பண்டிதர்களே? இங்குயாம் ஆபிரகாமினது சந்ததிகளின் முறைமையை உங்கள் வேதபுத்தகத்தில் கண்டபடியே கூறுகின்றேம் தயைசெய்து கவனியுங்கள்.

இதோ? தன்இயல்பினதாகிய பொருள் பலதொகுக்கப்பட்டிரா நின்ற ஒன்று, வித்தெனப்படும். அது; மனுசனுக்கேயுமன்றிப் பிறவற்றிற்கும் வழங்கப்படுதலின், வித்தென்பது பொதுப்பெயராம்.

யிற்று. எனவே, மரபைப்புத்திரரிதும், எல்லயபிரர்களிடமிருதும் ஆன் தன்மையினதாகிய பொருளிடத்திலேயே பயன்றிக் காணப்படாதென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளற்பாலதே. இங்ஙனமாக, மனுசருக்கெல்லாம் மூலமானவர், ஆதாமென்னும் பெயரினரென்பது வெளி.

ஆயினும், சான்றோர், ஒவ்வொருகாலத்திலே, ஒவ்வொருவரைப் பிரதானியாகக்கொண்டு, அவ்வவர் மூலமாகக் கோத்திர வேறுபாடுகளை நியமித்திருப்பதாகத் தெரிகிறது: எப்படி என்றால், இஸ்ரவேலர் எனப்படுவோர், யாக்கோபினது, ஆண்மக்களாகிய பன்னிருவர்களின் ஆண்சந்ததிகளாகிய மனிதர்களே என்று சொல்லப் படுவதுபோலென்க. எனவே, ஆபிரகாமின் வித்தாரோவெனின் அவரது ஆண்மக்களும் அம்மக்களின் ஆண்மக்களான மக்களாக வரப்படும், எல்லா ஆண்சந்ததிகளுமே என்பது, எதிர்வாதமின்றி, நீவிர்கள் அங்கீகாரம் செய்யவேண்டுமென்பது வெளியாயிற்று. இதனாலே இஸ்ரவேலர்களும், ஆபிரகாமினது வித்தெனப் படுவோர்களன்றோ? ஆயினும், அவர்கள் ஆபிரகாமினது முதல்பேறான இஸ்மவேலினது குமாரரின் வித்தல்லர், இரண்டாம் பேறான ஈசாக்கின் வித்தெனவே படுவார்களே. அன்றியும் ஈசாக்கின், முதல் பேறான ஏசாவின் வித்துமன்று. ஈசாக்கின் இரண்டாம் பேறான யாக்கோபென்கிற இஸ்ரவேலின் வித்துமெனவே படுவார்கள். இதுக. யாக்கோபென்கிற இஸ்ரவேலுக்கு, லேயாள், ராகேல், என்கிற இரண்டு மனைவியர் உளர். அவ்விருவரும், லாபான் என்பவனின் குமாரத்திகளே; லாபானென்பவனின், யாக்கோபு (இஸ்ரவேலின் தாயுடன் பிறந்தவன்) அவனுடைய இரண்டு குமாரத்திகளாகிய லேயாள் ராகேல், என்பவர்களுக்கு முறையே, சில்பாள், பில்காள், என்கிற இரண்டு அடிமைப்பெண்கள் அவர்களின் வேலைக்காகக் கொடுக்கப் பட்டார்கள். அநந்தரம், அவ்விரண்டு வேலைக்காரிகளையும் தமதுபுருஷனுடைய, யாக்கோபென்கிற இஸ்ரவேலினது மடியில் அந்த (லேயாள், ராகேல், என்கிறபெண்டுகள்) கொடுத்து விட்டார்கள். ஆகையால், சில்பாள், பில்காள், என்கிற இருவரும், இஸ்ரவேலுக்குப் பிள்ளைகளைப் பெற்றார்கள். எப்படியெனின்; இஸ்ரவேலுக்கு முதல்மனைவியாகிய லேயாள் ரூபேன், சிமேயோன், லேவி, யூதா, என்கிற நான்கு குமாரர்களைப் பெற்றாள். பிறகு, ராகேலென்கிற இரண்டாமனைவியின் வேலைக்காரி



யான, பில்காள், அந்த இஸ்ரவேலுக்கு, தாண், நப்தலி, என்கிற இரண்டு குமாரர்களைப் பெற்றாள். பிறகு லேயாளின் வேலைக்காரியாகிய சில்பாளோவெனின் காத்து, ஆசேர், என்கிற இரண்டு குமாரர்களைப் பெற்றாள். அதற்குப்பிறகு, லேயாளோ, இசக்கார், செபுலோன், என்கிறஇரண்டு ஆணையும், தீனாள் என்கிற ஒரு பெண்ணையும் பெற்றாள். கடைசியாக, ராகேலோவெனின். யோசேப்பு, பென்யமீன், என்கிற இரண்டு குமாரர்களைப் பெற்றாள். ஆக யாக்கோபென்கிற இஸ்ரவேலோவெனின் தமது பெண்சாதிகளாலும் அப் பெண்சாதிகளால் கொடுக்கப்பட்ட இரண்டு அடிமை பெண்களாலும் பன்னிரண்டு ஆண்பிள்ளைகளையும் ஒருபெண்ணையும் பெற்றாரென்பது நன்கு புலப்படுகின்றது. அப்பன்னிரு குமாரர்களின் சந்ததிகளே இதுகாறும் இஸ்ரவேலர் என்று அழைக்கப்படுகின்றார்களென்பது, கிறிஸ்துவபண்டிதர்களுக்கு மறையாது. ஆகவேமுதற்காலத்திலே தீர்க்கதரிசிகள் முதலாயினோராகிய சான்றோர்களெல்லாரும் தமக்குப் பெண்சாதிகளாலேயுமன்றி அவர்களால் கொடுக்கப்படும் அடிமை பெண்களாலேயும் பெறப்படும் பிள்ளைகளெல்லாம் ஒன்றுக்கொன்று பேதமின்றி ஒன்றாகவே கண்டாரென்பது எமது கிறிஸ்துவ பண்டிதர்கள் சிரஞ்சாய்த்து ஒத்துக்கொள்வார்களென்று யாம் நம்புகின்றேம். அப்படி வேறுபாடின்று ஒன்றுபடுத்துவது அக்காலத்தினரது இயற்கை எனப் புலப்படுகின்றது. அதுவே மெய்யறிவெனலாமே; வித்துவெளிப்படுவதற்கு, இடம் அவசியமாக வேண்டப்படும் இடம், எவ்வாறாயினுமென்னை? அதின் அதற்காக சான்றோர் கருத்தென நன்குளுலே ஒன்றும் குறையில்லை என்பது புலப்படுகின்றது. அதுபற்றியே யாக்கோபென்னும் இஸ்ரவேலுக்குத் தமது வேலைக்காரிகளால் பெறப்பட்ட பிள்ளைகளின் கோத்திரங்களுக்கும் பெண்சாதிகளால் பெறப்பட்ட பிள்ளைகளுக்கும் இடையில் பேதங்காணமல் தமதுபன்னிரண்டு குமாரர்களையும் ஒன்றாகக்கண்டு அக்கோத்திரங்களுக்கே, இஸ்ரவேலர் என்று கூறிவிட்டாரென்பது வேதப்பிரமாணமாயிற்று. விசயம் இவ்வாறிருக்க இக்காலத்தியசில பாமர சாதிகளோவெனின், அப்படியாக அக்காலத்திலே பெறப்பட்ட பிள்ளையைக்குறித்து அது அடிமை பெண்ணின்பிள்ளையன்றோ? வென இலேசாகப்பேசுகின்றார்கள். அவர்கள், அதுவேத விரோதமென்று உணரும் தன்மையில்லாதவரென எண்ணப்படுவதற்கு யாதடை? எமது கிறிஸ்துவ பண்டிதர்கள் அங்ஙனம் சொல்லுவதுவெ எமதுமூப்பார்களெனக்கூற யாம் ஏன்பின்போவோம்? நிற்க.

யர்களே! கிறிஸ்துவபண்டிதர்களே! உலகத்திலே பரவியிருக்
கிற மனுஷஜாதியிலே முதற்காலத்திலே பராபரனாலே ஆசீர்வ
திக்கப்பட்டிருந்தவர்கள் இஸ்ரவேலின் அத்தப்பன்னிருசந்ததிகளின்
சந்ததிகளே என்பது கிறிஸ்துவ வேதப்பிரமாண மெனலாமன்றோ?
அல்லாமலும் ஆபரகாமும் அவரது வித்தாரும் அப்படியே. இதோ!
1-ம் மோசே 12-ம் அதிகாரம் "1 - கர்த்தர் ஆபிராமோடே
"சொன்னது; நீ உன்தேசத்தையும் உன் இனத்தையும்
"உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு நாம்
"உனக்குக் காண்பிக்கப்போகிற தேசத்துக்குப்போ. 2-
"நாம் உன்னைத்திரட்சியான சாதியாக்கி, உன்னை ஆசீர்
"வதித்து, உன்பேரை மேன்மையாக்குவோம். நீ ஆசீர்வா
"தமாயிருப்பாய். 3-உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்
"வதிப்போம். உன்னைச்சபிக்கிறவனைச் சபிப்போம். உன்
"னில் பூமியின் வம்முசங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும்
"என்றார்" என்று கூறுகின்றது. இதனாலே ஆபரகாமும் அவ
ரது வித்தும் பராபரனாலே முடிவான ஆசீர்வாதம் பெற்றிருக்
கிறதாகவும் அவரை ஆசீர்வதிப்பவர்களும் ஆசீர்வதிக்கப்படுவதாக
வும் எவ்வளவு தெளிவா யேர்ப்படுகிறது? ஐயோ, எமது கிறிஸ்
துவநேயர்கள் ஆபரகாமை ஒரு அணுத்துணையும் ஆசீர்வதிக்கவில்
லையே; ஆனால், அவர்கள் தமது வீட்டு அடிமைகளைப்போல ஆப
ரகாம் சொன்னான், போனான் வந்தானென்று மதிப்புக்கேடாகக்
கூறுவதினாலே அவர்கள் ஆபரகாமை நிந்திக்கிறார்களென்றே சொல்
லுவோம். அவர்கள் அப்படிச்சொல்லாமலிருக்குமாறு கிறிஸ்துவபண்
டிதர்கள் அவர்களைச் சீர்திருத்தம் செய்யவில்லை என்று ஏற்படுகின்
றது. இதுவும் கிறிஸ்தவர்களுக்கு மெய்யறிவில்லை என்றதற்கு சான்
றாகின்றது. ஐயோ! கிறிஸ்துவபண்டிதர்களே! யாங்களோ இயே
சுநாதருக்கு ஐந்நூறு வருடங்களுக்குப்பிறகு, உலக இரட்சகராக
வந்த ஒருதீர்க்கதரிசியைப் பின்பற்றினோமாகவே எங்களுக்குமெய்
யறிவு இயேசுநாதர் கூறியபடிக் கொடுக்கப்பட்டது. ஆதலாலி
யே நாங்கள் ஆபரகாமை மாத்திரமா? அவர்வீட்டு அடிமைகளையும்
பெருமைபடுத்துபவராக ஆபரகாமையும் மற்றும் தீர்க்கதரிசிகளை
யும் என்றும் ஆசீர்வதித்து, அதனாலே பராபரனது ஆசீர்வாதத்தை
அடைகிறவர்களாக இருக்கின்றோமே. திரு. 1-ம் மோசே 13-ம்
அதிகாரம், "14 - லோத்து ஆபராமைவிட்டுப் பிரிந்தபிற்



"பாடு, கர்த்தர் ஆபராமுடனே சொன்னதாவது, நீ உன்
"கண்ணுகளை ஏறெடுத்து நீ இருக்கிற இடத்திலிருந்து
"வடக்கும் தெற்கும் கிழக்கும் மேற்கும் நோக்கிப்பார்,
"15 - ஏனெனில் நீ பார்க்கிறபூமி யெல்லாம் நாம் உனக்
"கும் உன்வித்துக்கும் என்றென்றும் இருக்கும்படி கொ
"டுத்து உன்வித்தைப் பூமியின் தூளைப்போலாக்குவோம்,
"ஒருவன் பூமியின் தூளை எண்ணக்கூடுமானால் உன்வித்
"தும் எண்ணப்படும்" என்று கூறுகின்றது. இதனாலேயும்
ஆபரகாமும், அவரது வித்தும் முடிவில்லாத ஆசீர்வாதத்தைப்பெற்
றிருக்கின்றார்களென்பதில் சந்தேகமுண்டோ? பராபரன் சொன்
னபடி அந்தத்தேசங்கள், இப்பொழுது யார்வசமிருக்கிறதோ அவர்
களே அந்த ஆபரகாமின் வித்தென்று சொல்லுவதற்கும் தடையி
ருது. நேயர்காள், ஆபரகாமின் சந்ததி என்று கூறவேண்டியவிட
த்து வித்தென்று கூறப்படுவதாக நீவீர்கள் ஞாபகத்தில் வைக்
கக்கடவீர்களாக; (அது வேதப்பிரமாணமே) நேயர்காள்! ஆபரகாம்
மிகுந்த ஐசுவரியமுள்ளவரும் ஒருபெரிய தகுதியுள்ள தீர்க்கதரிசி
யுமாக விருந்தார். ஆனால் அவர் சந்ததியில்லாததைக்குறித்து, அவர்
பெரிதும் வியாகூலமுள்ளவரானார், என்றாலும் அவருக்குப் பராப
ரன் சந்ததியைக்குறித்து வாக்குத்தத்தம் செய்திருந்த காரணம்
பற்றித் தமக்கு எப்படியும் சந்ததியுண்டாகுமென்பதில் நம்பிக்
கைவைத்திருந்தார். ஆனால் அவர் தமது பெண்சாதி அதிகமுதிர்ந்த
வயதாக ஆய்விட்டபடியினாலே அவர் எப்படி பிள்ளைப்பெறுவாரோ
என்று ஐயப்பட்டிருந்தார். சாராளோ தாம் இனிப்பிள்ளைப்பெறு
வதில்லை நாம் பெண்களுக்குறிய சுபாபம் இழந்துவிட்டோம். பரா
பரன் வாக்குத்தத்தம்செய்த ஆபரகாமின் சந்ததி நம்மில் இருந்து
வருவதில்லை என்று திட்டமாக நம்பினப்பிறகு சாராள் தமது புரு
ஷனை நோக்கி, "இதோ நான் பிள்ளைபெறாதபடிக்குக் கர்
"த்தர் என்கர்ப்பத்தை அடைத்தார், என் அடிமைப்பெ
"ண்ணோடுசேரும், ஒருவேளை என்வீடு அவளாலே கட்
"டப்படுமென்றாள்" என்பது வேதம். இதனாலே சாராள் தாம்
இனிக் கருப்பவதியாவதில்லை என்று முற்றிலும் நம்பினாரென்பது
புலப்படுகின்றது. "ஆபராம் சாறள் சொன்னதைக் கேட்டார்"
கேட்டுமென்ன? ஆபரகாம் பத்துவருஷம் கானான் தேசத்திலே

253



குடியிருந்தபிறகு "சாறாய் எகிப்துத்தேசத் தாளாயிருக்கிற
"தன் அடிமை பெண்ணாகிய் ஆகாரை அழைத்து அவ
"ளைத் தன்புருஷனாகிய ஆபிராமுக்குப் பெண்சாதியாகக்
"கொடுத்தாள்," என்பது வேதம். ஆகவே ஆகார் ஆபிராமுக்
குப் பெண்சாதியாய் விட்டார் என்பது பெறப்பட்டது. அதுபற்றி
ஆபிராம் ஆகாரோடு சேர்ந்தபொழுது அம்மாது கர்ப்பந்தரித்தாள்.
ஆனால்! அந்த ஆகாரோவெனின்; தாம் கருப்பந்தரித்ததைக் கண்
டபொழுது தமதுநாச்சியாராகிய சாறாயை அற்பமாய் எண்ணின
தாகவும், அதுபற்றி ஆகார் தமது நாச்சியாராலே கண்டிக்கப்பட்ட
போது ஆகார் தமதுநாச்சியாரைவிட்டு ஓடிப்போனதாகவும் வேதமல்
றுகின்றது. ஆனால் அடியில்வருகிற வேதவாக்கியங்களோ வெனின்,
"கர்த்தருடைய தூதர் அவளை வனாந்தரத்திலே சூருக்குப்
"போகிறவழி அருகே இருக்கிற நீரூற்றாகிய கிணற்றண்
"டையிலே கண்டுபிடித்து சாறாயின் அடிமைபெண்ணாகிய
"ஆகாரே எங்கே இருந்துவருகிறாய்? எங்கேபோகிறாய்?
"என்றார். அவள், என்னாச்சியாராகிய சாறாளைவிட்டு ஓடி
"ப்போகிறேன் என்றாள்; அப்பொழுது கர்த்தருடைய
"தூதர் அவளுடனே நீ உன் நாச்சியாரிடத்துக்குத் திரும்
"பிப்போய் அவள்கையின் கீழ் அடங்கி இரு என்றார். பின்
"னையும் கர்த்தருடைய தூதர் அவளுடனே உன்வித்தை
"மிகவும் பெறுகப்பண்ணுவோம் திரட்சியினாலே அது
"எண்ணத் தொலையாததா யிருக்கும் என்றார். அப்பு
"றம் கர்த்தருடைய தூதர் அவளுடனே சொன்னதா
"னது, இதோ கர்ப்பவதியா யிருக்கிறாய். நீ ஒருகுமார
"னைப்பெறுவாய் கர்த்தர் உன் அங்கலாய்ப்பைக் கேட்ட
"படியினாலே அவனுக்கு இஸ்மவேல் என்று பெயரிடுவா
"யாக அவன் துஷ்டமனிதனா யிருப்பான். இவன்கை
"எல்லாருக்கும் விரோதமாகவும் எல்லாருடையகை இவ
"னுக்கு விரோதமாகவும் இருக்கும், தன்சகோதரர் எல்
"லாருக்கும் எதிரே குடியிருப்பான்" என்று கூறுவதினாலே
ஆகார் தமது நாச்சியாரால் உண்மையிலேயே அநியாயமாக இம்
சையடைந்து ஓடிப்போகத் தலைப்பட்டாரென்பதும், அதுபற்றித்



தேவதூதர் அம்மாதினுக்குப் பிரசன்னமாகி, அவரின் மனந்திரும்
பும்படியாக நன்மாராயங் கூறினரென்பதும் புலப்படுகின்றன. மே
லும், தூதர், ஆகாரைநோக்கி, "உன் அங்கலாய்ப்பைக் கர்த்
"தர் கேட்டபடியினாலே அவனுக்கு இஸ்மவேல் என்று
"பெயரிடுவாயாக அவன் தன்சகோதரர் எல்லாருக்கும்
"எதிரே குடியிருப்பான்," என்று பெரும்பேறாகிய தருதிவார்
த்தையைக் கூறினபடியினாலே, ஆகார் குற்றவாதியல்ல வென்றும்
ஆகார் கர்ப்பவதியானதைக்கண்ட சாறாய்ப்பொறாமையினாலே ஆகா
ரைத் தண்டித்திருக்கிறா ரென்றும் ஆகார் அதனாலே மனமடி
தும்பித் தமது புருஷனாயகர் முதலிய எல்லாப்பாக்கியங்களையும்
வெறுத்து வனாந்தரம் செல்லும்படி நேர்ந்ததென்றும் உண்மையை
நோக்கும் பராபரன் அப்படிப்பட்ட அநியாயத்தைநோக்கி அநியா
யம் செய்யப்பட்ட காரணம்பற்றி அவருக்கு உன்னதமான தேவ
தரிசனம்கொடுத்து அம்மாதின் பதவியை உயர்த்தியதேயுமன்றி,
அம்மாதின் கர்ப்பக்கனியைக் குறித்தும் ஆசீர்வதித்தாரென்பது
புத்திசாதுரியமுள்ள ஒவ்வொருவருக்கும் விளங்காமற் போகாது.
இதுவேயுமன்றிச் சாறாய் தமதுவாக்கினாலே "இதோ நான்பி
"ள்ளை பெறாதபடிக்குக் கர்த்தர் என்கர்ப்பத்தை அடைத்
"தார். என் அடிமைப்பெண்ணோடுசேரும் ஒருவேளை என்
"வீடு அவளாலேகட்டப்படும்" என்றுசொன்னதாகக் காண
ப்படுகின்றது. ஆ! இதோ! மகா உன்னதமான கர்த்தர் ஆபிரகா
முடைய முதற்பேறானை, வித்தைச்சாறாளின் கர்ப்பத்தில் கொள்
வேர சித்தமில்லாமையினாலேயே சாறாளின் கர்ப்பத்தை அடைத்து
சாறாளின் வாக்குமனமும், ஒத்துத் தமதுபுருஷனை, அந்த ஆகா
ருக்குப் புருஷனாகும்படி செய்து முடித்தாரென்பது எமது கிறிஸ்
தவநேயர்கள் உணர்ந்தால் ஆகாரின் குமாரராகிய இஸ்மவேலே,
ஆபிரகாமின் ஒரேபேறாகிய முதற்குமாரர் என்பது எதிர்வாதமின்றி
ஒப்புவார்கள். "இதோ! ஆகார் ஆபிராமுக்கு ஒரு குமார
"னைப்பெற்றாள். அப்பொழுது, ஆப்ராம், ஆகார்பெற்ற
"தன்குமாரனுக்கு இஸ்மவேல் என்று பெயரிட்டான்,"
என்ற வேதவாக்கியத்தினாலே இஸ்மவேல், ஆபிராமின் குமாரரே
என்பது பெறப்பட்டது. நேயர்களே! ஆபிராமுக்கு ஆகார்பெண்சாதி
யாக்கப்படுவதற்கு முன்னரோவெனின்; ஆபிராமும், அவர்மனைவி
யாகிய சாறாளும், மிகுந்த ஐசுவரியவான்களாக வாழ்ந்துவருகையில்,

சந்ததியில்லாத மனக்குறையானது, அவர்க்கரிய பெரியதாயிருந்தது
அப்படியே யிருக்குமென்பது எழுதுநேயர்களுக்கு மறையாது. அந்
தவேட்கையினாலேயே ஆபரகாம் பராபரனைநோக்கி “கர்த்தராகிய
“ஆண்டவரே அடியேனுக்கு என்னதருவீர்? நான்பிள்ளை
“யில்லாதேபோகிறேனே. தமஸ்கு ஊரானாகிய இந்தஎலி
“யேசேர் என்வீட்டு விசாரிப்புக்குக்கர்த்தனா யிருப்பா
“னே என்றான், பின்னையும் ஆப்ராம் இதோதேவரீர்,
“எனக்கு வித்தைத்தந்ததில்லை, இதோ என்வீட்டில் பிற
“ந்தபிள்ளை எனக்குச் சுதந்திரவாளியா யிருப்பான்”
என்றுசஞ்சலமடைந்ததாக வேதம் அலறுகின்றது. இவ்வாறாக ஆப
ரகாமும், சாராளும், சந்ததியின் வேட்கையுடையவராக இருக்கிறகா
லத்திலே பிள்ளை உண்டாகுமென்று பராபரன் வாக்குத்தத்தம்செய்
தால் அந்த தேவவசனமானது அந்த ஆபரகாமுக்கு எவ்வளவும
னக்கிளர்ச்சியை உண்டாக்கும்? அதற்கு ஓரெல்லையிருக்குமா? இரா
தென்பது நேயர்களுக்கு மறையாதன்றோ? அந்தத்தேவவசனமோ
வெனின், மகாமேன்மையான ஆசீர்வாதத்துடனேயுமிருந்தாலோ
எப்படியிருக்கும்? நேயர்காள்! இதோ! “அப்பொழுது கர்த்
“தருடையவார்த்தை அவருக்கு உண்டாகி இவன் உனக்
“குச் சுதந்திரவாளியாகாமல் உன்கர்ப்பப்பிறப்பா யிருப்
“பவனே உனக்குச் சுதந்திரவாளியாக இருப்பான் என்று
“சொல்லி அவனை (ஆப்ராமை) வெளியே புறப்பட
“பண்ணி நீ வானத்தை அண்ணாந்துபார். நட்சத்திரங்
“களை எண்ண உனக்கு முடியுமானால் அவைகளை எண்
“ணென்று சொல்லி, பிற்பாடு அவனோடே உன்வித்து
“இவ்வண்ணமா யிருக்குமென்றார்” எனவே, ஆபரகாமின்
வித்தைக்குறித்துப் பராபரன் ஆசீர்வதித்தாரென்பது வேதமாயி
ற்று. இதுவேயுமன்றி, “அந்நாளிலே கர்த்தர் ஆப்ராமோடே
“உடன்படிக்கை பண்ணிச்சொன்னது எகிப்தின்நதி துவ
“க்கி ஐபிராத்தேநதியென்ற பெரியநதி மட்டுக்கும், இரு
“க்கிறதும், கேனியனும் கெனிசியனும் சத்மோனியனும்
“காதேனியனும் பெரிசியனும், ரெப்பாவியனும் எமோரி



“யனும் கிர்காசியனும் எபூசியனும் என்றவர்கள் இருக்
“கிறதான இந்தத்தேசத்தை உன்வித்துக்குக்கொடுத்தோம்
“என்றார்” என்று வேதம் சப்திக்கின்றது. நேயர்காள் இத்தகைய
பெரும்பேறு எல்லாம் படைக்கத்தக்க வித்தோவெனின், ஆபரகா
முக்குச் சாராளினாலே பெறப்படுமென்கிற நம்பிக்கை ஆபரகாமுக்கும்
சாராளுக்கும் இருந்திருக்கலாம். ஆனால் சாராள் பெண்களுக்குரிய
வழக்கக்குறியானது தம்மிலிருந்து அற ஒழிந்தபிறகு ஆபராகாமுக்
குப் பராபரன் வாக்குச்செய்த வித்தானது தம்மிலிருந்து தோன்று
வதில்லை என்னும் நம்பிக்கைநன்றாய்ப் பலப்பட்டபடியினாலே தான்
சாராள் “இதோ, நான்பிள்ளை பெறாதபடிக்குக் கர்த்தர் என்
“கர்ப்பத்தை அடைத்தார் என் அடிமை பெண்ணோடுசே
“ரும் ஒருவேளை என்வீடு அவளாலேகட்டப்படும்” என்று
கூறினாளென்பது மெய்யறிவாகின்றது. ஆகவே அந்தவித்தானது
ஆகாரினாலே வெளிப்படுமென்பது, ஆபரகாம், சாராள், இவர்களின்
கருத்தாயிருந்ததென்பதை எமது நேயர்கள் மறுக்கமாட்டார்கள்.
பிறகு ஆகார் கர்ப்பவதியாகி இஸ்மவேலைப்பெற்றாளென்றால், அப்
பிள்ளையே ஆபரகாமுக்கு முதற்பேறானதும், ஆசீர்வாதம் பெற்
றதுமென்று, ஆபரகாமும், சாராளும் நம்பி அப்பிள்ளையைத்தமது
உயிரினும் அருமையாகப்பாவித்து உவந்துவருவதினாலே அவ்வுவப்
பானது, இனி வேறுவித்தால் ஒருக்காலு மாறாதிருக்கு மென்பது
மெய்யுணர்வோருக்கு மறையாது. இதுவிஷயத்தில் நேயர்களுக்கு
ஏதாவது ஆட்சேபமிருக்குமா? இராது. அதுபற்றி இஸ்மவேலா
னவர், ஆபரகாம், சாராள், ஆகார் இவர்களின் அன்பைமாத்திரமா?
ஆபரகாமினது எல்லாசன தளங்களின் உயிர்களாலும் போர்த்தப்
பட்டு வளர்ந்துவந்தாரென்பது சொல்லவேண்டுவதில்லை. இவ்வா
றாக இஸ்மவேல், எல்லாரது மனங்களையும் கொள்ளைகொண்டுதாமே
பட்சித்துத் தாமேயன்றி வேறு ஒருவஸ்துவும் அம்மனங்களிடத்து
இல்லையாகத்தாமேயாய் நாளொருமேனி பொழுதொருவண்ணமா
கச் சீராட்டும் பாராட்டுமாய் அன்னோர் சிரமிசை வளர்க்கப்பட்டு
வருகையில், ஆபரகாமுக்குத் தொண்ணூற்றொன்பது வயதாயிற்று.
அப்பொழுது கர்த்தர் ஆபரகாமுக்குத் தரிசனையாகி, “நாம் சர்
“வத்துக்கும்வல்ல பராபரன், நீ நம்முடைய முகத்துக்கு
“முன்பாகநடந்துகொண்டு உத்தமனாயிரு. நாம் நமக்கும்
“உனக்கும் நடுவாக நம்முடைய உடன்படிக்கையை ஏற்ப

"டுத்தி உன்னை மிகுதியும் மிகுதியாய்ப் பெருகப்பண்ணு
"வோம் என்றார். அப்பொழுது ஆபராம் முகங்குப்புற
"விழுந்தான். பராபரன் அவனோடே பேசிச்சொன்னது;
"இதோ நாம் உன்னோடே பண்ணுகிற நம்முடைய உட
"ன்படிக்கையாவது, நீ திரள்சாதிகளுக்குத் தகப்பனுவாய்,
"இனி உன்பெயர் ஆபராம் எனப்படாததாக; நாம் உன்
"னைத்திரள்சாதிகளுக்குத் தகப்பனாய் வைத்தபடியினாலே
"உன்பெயர் ஆபரகாம் என்று இருக்கக்கடவது. உன்னை
"மிகுதியும் மிகுதியாகப் பலுகப்பண்ணி உன்னைச் சாதி
"களாக்குவோம். உன் சந்ததியில் இராசாக்கள் பிறப்பார்
"கள். நாம் உனக்கும் உனக்குப்பிற்பாடு உன் வித்துக்
"கும் பராபரனாக இருக்கத்தக்கதாக நாம் நமக்கும் உன
"க்கும் உனக்குப்பிற்பாடு தலைமுறை தலைமுறைகளாயிரு
"க்கப்போகிற உன்வித்துக்கும் நடுவே நம்முடைய உடன்
"படிக்கையை நித்தியஉடன்படிக்கையாகத் திடப்படுத்து
"வோம். உனக்கும் உனக்குப்பிற்பாடு உன்வித்துக்கும்
"நீ பரதேசியாய்த் தங்கிவருகிற கானான்தேசத்தையெல்
"லாம் நித்திய உம்பிளிக்கையாகக்கொடுத்து அவர்களுக்
"குப் பராபரனாயிருப்போம் என்றார் பின்னையும் பராபரன்
"ஆபராமோடே சொன்னதாவது; நமக்கும் உங்களுக்கும்
"உனக்குப்பிற்பாடு உன்வித்துக்கும் நடுவே உண்டாகிற
"தும் நீங்கள் கைகொள்ள வேண்டியதுமான நம்முடைய
"உடன்படிக்கையாவது, உங்களில் ஆணாய்ப் பிறந்ததெல்
"லாம், சுன்னத்துப் பண்ணப்பட வேண்டியது. உங்கள்
"நுனித்தோலின் மாமிசத்தை சுன்னத்துப் பண்ணக்கட
"வீர்கள். அது உங்களுக்கும் நமக்கும் இருக்கிற உடன்ப
"டிக்கையின் அடையாளமாயிருக்கும். உன்னுடைய வீட்
"டுப்பிள்ளையும் உன்வித்தல்லாத அந்நியனிடத்திலும் பண
"த்தினாலே கொள்ளப்பட்ட பிள்ளையும் அப்படித்தானே,
"இப்படி நம்முடைய உடன்படிக்கை உம்மாமிசத்திலே
"நித்திய உடன்படிக்கையாக இருக்கக்கடவது. நுனித்



"தோலின் மாம்சம் சுன்னத்துப் பண்ணப்படாதிருக்கிற
"நுனித்தோலுள்ள உன் ஆண்பிள்ளையிருந்தால் அந்த ஆத்
"துமா நம்முடைய உடன்படிக்கையை முறித்தபடியினா
"லே தன்சனத்திலிராதபடிக்கு அறுப்புண்டு போவான்
என்றார்" என்று 1-ம் மோசே 17-ம் அதிகாரம் கூறுகின்றது. இத
னாலே, அங்ஙனமாகக் கூறப்பட்டுள்ள எல்லா ஆசீர்வாதங்களுக்கு
முரியவித்தானது ஆகாரின்குமாரனான இஸ்மவேலைக்குறித்துள்ளதே
என்பது எமதுநேயர்கள் அறிந்தவிஷயமே. ஏனெனில், மேலேகூற
ப்பட்ட வேதவாக்கியங்கள் கூறப்படுங்காலத்தில் ஆபரகாமுக்கு இஸ்
மவேலே ஒழிய வேறுவித்தில்லை. அல்லாமலும், மேலேசொன்ன ஆசீ
ர்வாதங்களுக்குப்பிறகு, பராபரன், ஆபரகாமோடே சொன்னதா
வது; "உன் பெண்சாதி சாருயினுடைய பெயரைச்சாருய்
"என்று அழையாயாக, சாருள் என்பது அவளுடையபெய
"ராயிருக்கும், நாம் அவளை ஆசீர்வதித்து அவளாலே உன
"க்கொரு குமாரனையுந்தந்து, அவள் சாதிகளாய்ப் பல்க
"வும் அவளாலே சாதிகளின், இராசாக்கள், உண்டாக
"வும் அவளை ஆசீர்வதிப்போம் என்றார், அப்பொழுது
"ஆபரகாம்முகம் குப்புறவிழுந்து, நகைத்து, நூறுவயதா
"னவனுக்குப் பிள்ளைபிறக்குமோ? தொண்ணூறுவயதா
"ன சாருள்பெறுவாளோ? என்று தன் இருதயத்தில்
"சொல்லிக்கொண்டு, இஸ்மவேல் உமக்கு முன்பாகப்பி
"ழைப்பானாக என்று ஆபரகாம் பராபரனை விண்ணப்பம்
"பண்ணினான், அப்பொழுது பராபன், சொன்னது,
"உன்பெண்சாதி சாருள், உனக்கொரு குமாரனை பெறு
"வாள் அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிடுவாயாக, அவ
"னோடே நாம் நம்முடைய உடன்படிக்கையை அவனுக்
"குப்பிற்பாடு அவன்வித்துக்கு என்றென்றைக்கும் நித்திய
"உடன்படிக்கையாக ஏற்படுத்துவோம்" என்று, சாருளைக்
குறித்தும், ஈசாக்கைக்குறித்தும் வேறாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிற
தாகத் தெரிகிறது. ஆதலின், எமதுநேயர்கள், முன்னைய ஆசீர்வாதம்
இஸ்மவேலுக்குச் சொந்தமானதென்றும், பின்னைய ஆசீர்வாதம் சா
ருளின் குமாரர் ஈசாக்கின் சொந்தமென்றும் எதிர்வாதமின்றி உடன்

படுவார்கள்; அதற்குச் சான்றாகப் பராபரன் இஸ்மவேலைக்குறித்து ஆசீர்வதித்த காலத்திலே தருவதாகச் சொன்ன தேசங்களெல்லாம் தற்போது இஸ்மவேலின் சந்ததிகளான அரபியர்களின் கோத்திரத்திலேயே இருக்கின்றதைக் காணலாம். இதுவேயுமன்றிப் பராபரன் சாறாளைக் குறித்து ஆசீர்வதித்த காலத்திலே ஆபரகாம் முகம் குப்புறவிழுந்து, இனிநானும், சாறாளும் பெறப்போகின்றமோ? என்று இருதயத்தில் எண்ணினார் என்றதினாலே பராபரன் ஆசீர்வதித்த முந்தின ஆசீர்வாதமெல்லாம் இஸ்மவேலுக்கும் அவர் கோத்திரத்திற்கு மென்றெண்ணி இருந்தாரென்பதும் உண்மையே யென்பது யாமரற்றும் உடன்பாடுபற்றி, ஈசாக்கைக் குறித்து வேறுவித ஆசீர்வாதம் செய்தாரென்பது பரிஷ்காரப் படுகின்றது. அல்லாமலும் பராபரன் ஆபரகாமுடன், நித்திய உடன்படிக்கையின் குறியாக ஆணாய்ப் பிறந்தவர்களின் நுனித்தோல்களின் மாம்சம் சுன்னத்துப் பண்ணப்படவேண்டு மென்றபடி. அது இஸ்மவேலின் சந்ததியாகிய அரபியர் வம்சத்திலே காணப்படுகின்றதே யன்றி ஈசாக்கின் வம்சத்திலே காணப்படுகின்றதா? "சாறாயை, சாறாயி என்று அழையாயாக. சாறாள் என்பது அவள் பேராயிருக்கும் நாம் அவளை ஆசீர்வதித்து அவளாலே உனக்கொரு குமாரனையும் கொடுப்போம்" என்ற வசனத்தில், "குமாரனையும்" என்ற உம்மை, இரண்டாவதான குமாரன் என்பதை விளக்குகின்றது. இந்த காரணங்களாலும், பராபரனது முந்தின ஆசீர்வாதம் இஸ்மவேலைக் குறித்ததென்பது தெற்றெனப் படுமன்றோ? ஆகவே, ஆபரகாமினது முதல் பேறனவித்து இஸ்மவேலேயாம் என்று உணரக்கடவீர்களாக: நேயர்காள், இன்னும் நன்றாகக் கவனியுங்கள். பராபரன்சாறாள் பெறுவாள் என்று சொன்னவுடனே ஆபரகாம் முகம் குப்புறவிழுந்து "இஸ்மவேல் உமது முன்பாகப் பிழைப்பானாக" என்று விண்ணப்பம் செய்தார். அப்பொழுது பராபரன் சொன்னது "இஸ்மவேலுக்காக உன் விண்ணப்பத்
"தைக்கேட்டோம். இதோ நாம் அவனை மிகுதியும் மிகு
"தியுமாகப் பலுகவும் பெருகவும் பண்ணுவோம். பன்னி
"ரண்டு பிரபுக்களைப்பெறுவான். அவனைப் பெரியசாதியா
"க்குவோம் என்று பராபரன் கூறினதாகக்காணப்படுகின்
"றது. இதனாலே இஸ்மவேலின் ஆசீர்வாதமோ வெனின்
"பலதரமாகப்பராபரன் அவரை ஆசீர்வதித்திருக்கிறதாக



"நன்கு புலப்படுகின்றது அல்லாமலும் பராபரன் ஈசாக்
"கோடே செய்வதாக மேலே சொன்ன உடன்படிக்கை
"யோவெனின் நம்முடைய உடன்படிக்கையை நாம்மறு
"வருஷத்தில் இக்காலத்திலே சாறாள், உனக்குப் பெறப்
"போகிற ஈசாக்குடனே ஏற்படுத்துவோம் என்றார்"

இதனாலும் முந்திய ஆசீர்வாதமும் உடன்படிக்கையும் ஆபரகாமின் முதல்பேறான வித்தாகிய இஸ்மவேலின் பொருட்டதென்றும், பிந்திய ஆசீர்வாதமும் உடன்படிக்கையும் சாறாள்பெற்ற இரண்டாம் பேறாகிய ஈசாக்கின் பொருட்டதென்றும் சொல்லாமலே தெரிகின்றது. ஒருவேளை ஈசாக்குடன் மறுவருஷத்தில் செய்வதாகச் சொன்ன உடன்படிக்கையே, சுன்னத்துச் செய்யவேணு மென்று பராபரன் சொன்ன உடன்படிக்கை என்பார்களோ? அப்படி சொல்லார், ஏனென்றால், "சாறாள் உனக்குப் பெறப்போகிற
"ஈசாக்குடனே நம்முடைய உடன்படிக்கையை மறுவரு
"ஷத்திலே ஏற்படுத்துவோம் என்று கூறினபிறகு பரா
"பரன் அவனோடே பேசி முடித்தபிறகு அவர் ஆபரகா
"மை விட்டேறினார். அப்பொழுது ஆப்ரகாம் தன்கு
"மாரனாகிய இஸ்மவேலையும் தன்வீட்டிலே பிறந்தயா
"வரையும், பணத்தினாலேகொண்ட யாவரையும் ஆபர
"காம் தன் வீட்டிலே பிறந்த மனிதரிலுள்ள ஆண்பிள்
"ளைகளை எல்லாம் சேர்த்துப் பராபரன் தன்னோடே
"சொன்னபடி அவர்களின் நுனித்தோலின் மாம்சத்தை
"அந்நாளிலே தானே சுன்னத்துப் பண்ணினார்" என்று
கூறினதாகக் கூறுகின்றது. ஆகவே, பராபரன், ஆபரகாமுடன் மேல் கூறிய வார்த்தைகளைப் பேசி அவரைவிட்டு ஏறின அன்றையதினமே, ஆப்ரகாம் சுன்னத்துச் செய்ததாக நன்றாய்ப் புலப்படுகின்றது. அதுபற்றி எமது நேயர்கள் மேல் கூறிய ஆட்சேபம் செய்ய முன்வரார் என்று நன்றாய்ச் சொல்லுவோம், ஆகையால் எமது நேயர்கள் 1-ம் மோசே, 17-ம் அதிகாரம் 1-முதல் 14-வசனங்களில் கூறிய, ஆசீர்வாத மோவெனின் இஸ்மவேலுக்கும் அவர் சந்ததிகளுக்குமே உரியதென்றும் அது ஈசாக்குக்கும் அவர் சந்ததிகளுக்கும் உரியதல்லவென்றும் நன்றுணர்தல் வேண்டுமென்று அறிவாராக. நிற்க, ஆபரகாம் சுன்னத் நடைந்ததும் அந்த

நாளிலேயே யென்பதும் உண்மை, அப்பொழுது அவருக்கு 99-வயதும் இஸ்மவேலுக்கு 13-வயதும் என்று அறிவார்களாக. ஆபிரகாம் சுன்னத் தடைந்தபிறகு ஈசாக்குப்பிறந்த தாக 1-ம் மோசே 18-ம் அதிகாரம் கூறுகின்றது. நேயர்காள், இஸ்மவேலின் வித்தைப் பராபரன் ஈசாக்கின் வித்தைக்கான எத்தனையோமடங்கு அதிகமாக்கினார் என்பதற்கு இஸ்மவேல் பன்னிரண்டு பிரபுக்களைப் பெறுவார் என்று பராபரன் கூறினதே போதுமான சாட்சியமாகின்றது. ஈசாக்கோ இரண்டு குமாரர்களைத் தான்பெற்றார். ஆகவே, பன்னிரண்டில் இரண்டு மடங்குத்தான் ஈசாக்கின் சந்ததிகளாகிய இஸ்ரவேலர் என்றும், பன்னிரண்டு மடங்கு இஸ்மவேலின் சந்ததிகளான அரபியர்களென்றும் உணர்ந்து அடங்குவார்களாக.

பிற, விகற்பனவோ வெனின், நேயர்காள் பராபரன் சாறாளை ஆசீர்வதித்து அவருக்கு ஒரு சந்ததியைக் கொடுப்போமென்று சொன்னபடி சாறாள் கர்ப்பந்தரித்துத் தமது முதிர் வயதிலே ஒரு குமாரனைப் பெற்றதாக வேதம் கூறுகின்றது. இதோ 1-ம் மோசே, 21-ம் அதிகாரம். "1-கர்த்தரோ வென்றால் தாம்சொல்
" லியிருந்த படியே, சாறாளைநோக்கிப் பார்த்தார். கர்த்
" தர்தாம் உரைத்தபடியே சாறாளுக்குச் செய்தார் 2-
" சாறாள் கர்ப்பந்தரித்து, ஆபிரகாமுக்கு அவன் முதிர்
" வயதிலே பராபரன் அவனுக்குச் சொல்லியிருந்த கா
" லத் திட்டத்திலே ஒரு குமாரனைப் பெற்றாள். 3-அப்
" பொழுது ஆபிரகாம் தனக்குப் பிறந்தவனும் சாறாள்
" தனக்கு பெற்றவனுமான தன்குமாரனுக்கு ஈசாக்கு
" என்று பெயரிட்டான். 4-எட்டுநாள் குழந்தை
" யான தன்குமாரன் ஈசாக்கை ஆபிரகாம் பராபரன்
" தனக்குக் கற்பித்திருந்தபடியே சுன்னத்துப் பண்ணி
" னான். 5-ஆபிரகாமுக்கு அவன் குமாரனாகிய ஈசாக்
" குப் பிறந்தபொழுது அவன் நூறுவயதாயிருந்தான் 8-
" பிள்ளைவளர்ந்து முலைமறந்தது. ஈசாக் முலைமறந்தநா
" ளிலே ஆபிரகாம் பெரியவிருந்து பண்ணினான். 9-
" பிற்பாடு சாறாள் எகிப்து தேசத்தாளாகிய ஆகார், ஆபி



" ரகாமுக்குப் பெற்றகுமாரன் ஆகடியம் பண்ணுகிறவ
" னென்று கண்டு 10-ஆபிரகாமுடனே இந்த அடிமைப்
" பெண்ணையும் அவள் மகனையும் புறம்பேதள்ளும். ஏனெ
" னில் அந்த அடிமைப் பெண்ணின்மகன் என்குமார
" னாகிய ஈசாக்கோடே சுதந்திரவாளனாயிருப்பதில்லை
" என்றாள். 11-தன்குமாரனைக் குறித்துச் சொல்லப்
" பட்ட இந்த வார்த்தை ஆபிரகாமின் பார்வைக்கு மிக
" வும் ஆகாத தாயிருந்தது. 12-ஆனால் பராபரன் ஆபி
" ரகாமோடே சொன்னதாவது, அந்தப் பிள்ளையையும்,
" உன் அடிமைப் பெண்ணையும் குறித்துச் சொல்லப்பட்
" டது உன் பார்வைக்கு ஆகாததாயிருக்கவேண்டாம்.
" சாறாள் உன்னோடே சொன்னதெல்லாவற்றிலும் அவள்
" சொல்லைக்கேள். ஏனெனில் ஈசாக்கினிடத்தில் உன்
" வித்து விளங்கும். 13-அடிமைப் பெண்ணின் குமாரனை
" யும் அவன் உன் வித்தானபடியினாலே ஒரு சாதியாக்
" குவோமென்றார். 14-ஆபிரகாம் அதிகாலமே எழுந்
" திருந்து அப்பத்தையும் ஒரு துருத்தித் தண்ணீரை
" யும் எடுத்து ஆகாருக்குத் தோளின்மேல் தூக்கிவிட்டுப்
" பிள்ளையையும் கொடுத்து அவளை அனுப்பிவிட்டான்.
" அவள் புறப்பட்டுப் போய் பெயேர் சேபாவின் வனாந்
" தரத்திலே வழிதப்பித் திரிந்தாள்" என்று கூறுகின்றது.

ஆ! ஆ!! ஆ!!! இதை வாசிக்கிற எமது நேயர்கள் மிகுந்த துக்கத்தோடு இதைக்கவனிக்காமல் இராரென்று நம்புகின்றேம்; ஆச்சரியமே! ஆச்சரியம். அந்தோ! பிள்ளை இல்லாத காரணம் பற்றிப் பிள்ளையின்மீது அளப்பரிய ஆவல்கொண்டு பராபரனை அது விஷயமாய்ச் சதாவேண்டிக்கொண்டிருந்த ஆபிரகாம் வீட்டிற்குப் பிள்ளையாக மாத்திரமா? அல்லவே, பராபரனது சிறப்பித்தீர்ந்த ஆசீர்வாதங்களை எல்லாம் ஒருங்கேயடைந்து முதற்பேறாகப் பிறந்த இஸ்மவேல் என்கிற பிள்ளைமீது ஆபிரகாமும் அந்தச்சாறாளும், ஏனையோர்களும் கொண்டிருக்கும் பிரீதிக்கு ஓரெல்லை இராதென்பது இயற்கையாகவே எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. அப்படியிருக்க சாறாள் தமது முதிர்வயதிலே ஒரு குமாரனைப்பெற்று அக்குழந்

தை, பால் மறந்தவுடனே பதினான்கு வயதாயிருக்கிற சேஷ்டக்குமாரனும் பின்னென்று முதலாகப் பெயர்கொல்லுவேன்று எல்லாருடைய மனங்களையும் கவர்ந்துகொண்ட குமாரன் இஸ்மவேலையும் அவன் தாய் ஆகாரையும் ஆகாதென்று புறம்பே தள்ளும்படி சாராள் ஆபிரகாமுக்கு யாதொரு காரணமுமின்றிச் சொல்லுவது ஆபிரகாமுடைய பார்வைக்கு ஆகாததாகமாத்திரமா யிருக்கும்? சாராளைக் கொலை செய்யவுமன்றோ ஆபிரகாமுக்கு மனமுண்டாகும்? ஆனால் பராபரன் ஆபிரகாமை அடக்கி நீ சாராளின் சொல்லைக் கேள் என்று சொல்லினதாக வேதம் கூறுவது உண்மையே எனலாம். அது பராபரன், சாராளின் மனவன்மையினிமித்தம் எம்மட்டாக இருக்கின்ற தென்பதைத் தெரியுமாறு ஆபிரகாமை அடக்கி அவளைச் சாராளின் வார்த்தைக்குப் பொருந்தி அவள் சொல்லைக் கேள் என்று ஆக்கியாபித்தா ரென்பது நன்குவிளங்குகின்றது. அது பற்றியே பராபரன், ஆபிரகாமை நோக்கி, ஓ! ஆபிரகாமே, நீ உன் அரும்பேறான, இஸ்மவேலை இழந்து விடுவதாக நினைக்காதே. அவனில் உன் வித்துவிளங்கும் என்று மனந்தாங்கல்வேண்டுமென்பது கல்லாதவர்க்கு மறையாது: ஏனென்றால் பராபரன், இஸ்மவேலைக் குறித்து 1-ம் மோசே 17-ம் அதிகாரம் 1-முதல் 14-வரையிலும் உள்ள வசனங்களிலே வெளிப்படுத்திய ஆசீர்வாதமும் இதற்குச் சான்றாயிருக்கின்றன. அப்படியிருக்க மனசாட்சிக்கு விரோதமாக, சாராள் ஆகாரையும் இஸ்மவேலையும் புறம்பே தள்ளும்படி சொன்ன விஷயத்தில் ஆபிரகாம், அந்த வார்த்தையைப் பொருந்தாதிருக்கின்றவேளையில் பராபரன் ஆபிரகாமை, சாராளின் வார்த்தையைப் பொருந்தியிருக்கும்படி செய்ததும் தவிர, ஈசாக்கில் உன்வித்து விளங்கும் என்று சொல்லினதாகக் கூறுவது நியாயமாகக் காணப்படவில்லை, அய்யோ! ஈசாக்கின் சந்ததியில் உன்வித்து விளங்குமென்று பராபரன் சொன்னது உண்மையாயின் அப்படி விளங்கக் காணப்படவில்லையே? ஆபிரகாமோடு பராபரன் செய்த நித்திய உடன்படிக்கையின் அடையாளமாக மாம்சத்திலே விளங்கவேண்டுமென்ற சுன்னத்து இஸ்மவேலின் புத்திரர்களிடத்திலன்றோ விளங்குகின்றது? உன் வித்துக்குக் கொடுப்பேனென்று பராபரன் ஆபிரகாமுக்குச்சொன்ன தேசமெல்லாம் இஸ்மவேலின் சந்ததிகளிலன்றோ? விளங்குகின்றது? ஈசாக்கின் சந்ததிகளாகிய இஸ்ரவேல் புத்திரர்களிடத்தில் 1-ம் மோசே 17-ம் அதிகாரம் 1-முதல் 14-வசனங்களில் கூறப்பட்ட



ஆசீர்வாதங்களில் ஒன்றும் அந்தச் சந்ததியில் காணப்படவில்லையே? ஆகவே பராபரன் ஆபிரகாமோடு நீ சாராளின் சொல்லைக்கேள். உன் வித்து ஈசாக்கில் விளங்குமென்று சொன்னதாக வேதத்தில்சொல்லப்படுவது பிசகாயிருக்கும். ஆகவே பராபரன் ஆபிரகாமோடு, நீ சாராளின் சொல்லைக்கேள் உன்வித்து இஸ்மவேலில் விளங்கும் என்று சொல்லியிருக்கவேண்டுவதே நியதியாயிருக்கும் என்பது உண்மை. ஏனென்றால், சாராள் ஆபிரகாமுக்கு மிகவும் வெறுப்பான கொடுமை பொருந்திய வார்த்தையைச்சொல்லியும் பராபரக் கட்டளைக்காக ஆபிரகாம் தமது, மிகஅருமையான குமாரனை, இழப்பதற்கு மனம்பொருந்தியகாரணம்பற்றி அப்படி இழக்கச்சொல்லுகிற குமாரனிலேயே உன்வித்துவிளங்கும். நீ பயப்படாயாக என்னும்பொருட்டாக அப்படிசொல்லுவது மிகுதியும் நியதியேயாகின்றது. அல்லாமலும் ஆபிரகாமும் சாராளும் மிகுந்த முதிர்வயதிலேபெற்ற ஈசாக்கு என்கிற குமாரன் வளர்ந்து மனுஷனாகுந்தனையும், அவர்கள்தாம் இருப்போமென்பது உறுதிபயக்காத நிலைமையினராயிருக்கும்போது மனுஷனுடைய பதினான்குவயதெற்றிய குமாரனைஇழக்க மனம்பொருந்துமா? அப்படி இழந்துவிட வேண்டுமென்றுசொன்ன மனுஷியின் மனம் எப்படிப்பட்ட வன்மையா யிருக்கவேண்டும்? இந்த வன்னெஞ்சகாரணம்பற்றியே, ஈசாக்கின் புத்திரர்களுக்கு இஸ்மவேல் புத்திரராலே காருண்யம் உண்டாகும்படியாக இஸ்மவேல்புத்திரரிலே லோகஇரட்சகரை உண்டாக்கப் பராபரன் சித்தம்செய்து விட்டாரென பரிஷ்காரப்படுகின்றது. அதுபற்றியே ஈசாக்குப்பிறந்து ஏறக்குறைய மூன்னூறு வருடங்களிலேயே, தாவீதுக்குத் தீர்க்கதரிசனம் உண்டாய், அவர் "வீடுகட்டுகிறவர்கள் வேண்டா "மென்று புறம்பேதள்ளினகல்லு கோடிக்குத்தலையான "கல்லாயிற்று. அதுபராபரனாலே ஆயிற்று. அது நம்மு "டைய கண்களுக்கு ஆச்சரியமாயிருக்கின்றது. இந்தநாள் "பராபரன் உண்டாக்கினநாள். இந்நாளிலேநாம் களி "கூர்ந்து மகிழக்கடவோம்" என்றுகூறினர். ஐயோ நிர்த்தோஷியான ஆகாரையும் பராபரனாலே மதித்தற்கரிய ஆசீர்வாதம்செய்யப்பட்ட இஸ்மவேலையும் அநியாயமாகப் புறம்பேதள்ள வேண்டுமென்று சாராள் சொன்னபடி ஆபிரகாம் பொறுமைசெய்து தமது அரும்பேறான குமாரனைப் புறம்பே தள்ளினநிமித்தம் அந்த இஸ்மவேலின் சந்ததியை, சாராளின் குமாரனான ஈசாக்கின் சந்

தியையப்பார்க்கிலும் மேன்மையாக்கி ஆபிரகாமின்பேர் அந்த இஸ்மவேலின் சந்ததியிலே விளங்குவதோடு இஸ்மவேலின் சந்ததியிலேயே, அந்த ஈசாக்கின் சந்ததிகளும் இரட்சிப்பு அடையும்படியாக உலக இரட்சகரை அந்த இஸ்மவேலின் சந்ததியிலே உற்பத்திப்பண்ணும்படி சேர்க்கவேண்டியும் பொருட்டாக, அந்தவேதவாக்கியம் நன்று புலப்படக்கிடக்கின்றது. இந்த வேதவாக்கியமோசேயின் உலக இரட்சகர் பிறப்பதற்கு சுமார் இரண்டாயிர வருடங்களுக்கு முன்னரே கூறப்பட்டிருக்கின்றதாகத் தோன்றுகின்றது. இந்தக் காரணங்களாலே 1-ம் மோசே 21-ம் அதிகாரம் 12-ம் வாக்கியத்தில் "ஈசாக்கில் உன்வித்து விளங்கும்" என்று கூறினதாகக்கூறுவது பிசகென்பது உரைப்படுமன்றோ? நிற்க 1-ம் மோசே 21-ம் அதிகாரம் "15 - துருத்தியிலிருந்த தண்ணீர்
"போனபிற்பாடு அவள் பிள்ளையை ஒருசெடியின்கீழே விட்
"டுப்போய் 16 - எதிராக வில்லெய்யும் தூரத்திலே உட்
"க்காந்தாள், ஏனெனில், பிள்ளைசாகிறதை நான்பார்க்கமா
"ட்டேனென்றாள், அவள் எதிரே உட்காந்து தன்சத்த
"மெடுத்து அழுதாள். 17. ஆனால் பராபரன் பிள்ளையின்
"சத்தத்தைக்கேட்டார்; பராபரனுடைய தூதனானவர்வா
"னத்திலிருந்து ஆகாரைக்கூப்பிட்டு அவளுடனே ஆகா
"ரே உனக்கென்னவேண்டும், பயப்படாதே பராபரன்பிள்
"ளையிருக்கிற இடத்திலே அவனுடைய சத்தத்தைக்கேட்
"டார்; 18 - நீ எழுந்திருந்து பிள்ளையை எடுத்து அவனை
"உன்கையில் பிடித்துக்கொண்டுபோ; ஏனெனில் அவ
"னைப்பெரியசாதியாக்குவேனென்றார் 19 - பராபரன்
"அவளுடைய கண்களைத்திறந்தார்; அப்பொழுது அவள் ஒரு
"தண்ணீர் துரவைக்கண்டு போய்த்துருத்தியைத் தண்
"ணீரினால்நிரப்பிப் பிள்ளைக்குக் குடிக்கக் கொடுத்தாள்.
"20 - பராபரன் பிள்ளையோடே இருந்தார்" என்று கூறுகின்றது. நேயர்கள்! சாருள் சொன்னபடி இஸ்மவேல் ஆக்கியக்காரனாயிருந்தால் இஸ்மவேலின்பொருட்டாகப் பராபரனும் தேவதூதர்களும் என் காரணத்தினால் இஸ்மவேலின் வேலையாட்களைப்போல அவரைப் பின்பற்றவேண்டும்? சாருளின்படியே, இஸ்மவேல் அநியாயம் செய்யப்பட்ட படியிருந்தாலேயே, இஸ்மவே



லோடு, பராபரன் இருந்தாரென்பது தெளியப்படுகின்றது. மேலும், இஸ்மவேல், பெரியசாதியாவாரென்று, நன்மாராயமும் சொல்லப்பட்டாரென்பது பிரகாசமாகின்றதன்றோ? நிற்க. 1-ம் மோசே 21-ம் அதிகாரம் "21-அவன் பாரானென்ற வனாந்தரத்திலே குடியிருந்தான்" என்று கூறுகின்றது. நேயர்கள்! பாரானென்பது தற்போது, ஹிஜாஜ் என்று சொல்லப்படும் அறபியர்கள் வசிக்கிற தேசத்திற்குப்பெயர் என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயமே. ஆனதுபற்றி அறபியர்கள் அவரது வம்சமென்பது பெறப்பட்டது. நிற்க; எமது கிறிஸ்துவநேயர்கள் தமது ஒரேபேறான குமாரனாகிய ஈசாக்கைப் பராபரன் தமது நாமத்தினாலே பலியிடும்படியாக, ஆபிரகாமைச் சோதிக்கும்பொருட்டு (பராபரன்) உத்திரவிட்டதாகச் சொல்லுகின்றார்கள்; அப்படியாகவே, 1-ம் மோசே 22-ம் அதிகாரம் கூறுகின்றது. இதோ "2 - அப்பொழுது அவர்
"சொன்னதாவது, நீ சிநேகிக்கிறவனும் உனக்கு ஒரே
"பேறானவனுமாகிய உன்னுடையகுமாரன் ஈசாக்கை நீ
"இப்பொழுது அழைத்துக்கொண்டு மோரியதேசத்திற்
"குப்போய் அங்கே அவனைநாம் உனக்குச் சொல்லப்போ
"கிற மலைகளில் ஒன்றின்மேல் தகனப்பலியாகப் பலியிடு
"வென்றார். 9 - பராபரன் அவனுக்குச் சொல்லியிருந்த
"ஸ்தலத்துக்கு வந்தார்கள். அப்பொழுது ஆபரகாம் ஒரு
"பீடத்தைக்கட்டிக்கட்டைகளை அடுக்கித் தன்குமாரனாகிய
"ஈசாக்கைக்கட்டி அவனை அந்தப்பீடத்திலே கட்டைக
"ளின்மீதில் கிடத்தினான். அப்பொழுது கர்த்தருடைய
"தூதர் வானத்திலிருந்து அவனைக்கூப்பிட்டு, ஆபிரகாமே
"என்றார். அவன் இதோ அடியேன் என்றான் அப்
"பொழுது 12 - பிள்ளையாண்டான்மேல் உன்கையைப்
"போடாதே. அவனுக்கு ஒன்றும் செய்யாதே, ஏனெ
"னின் நீ பராபரனுக்குப் பயந்திருந்து நமக்காக உனக்
"கொரே பேறான உன்னுடைய குமாரனைப் பாராதே
"போனாயென்று இப்பொழுது அறிந்திருக்கின்றோம் என்
"றார். 13 - ஆபிரகாம் தன்கண்களை ஏறெடுத்துப் பார்

"தகிறபொழுது இதோ பின்னாகப் புதரிலே தன் கொம்
"புகளால் சிக்குண்டிருந்த ஒரு ஆட்டுக்கடாவைக் கண்
"டான். அப்பொழுது ஆபிரகாம்போய்க் கடாவைப்
"பிடித்து அதைத் தன்குமாரனுக்குப்பதிலாகத் தகனப்
"பலியிட்டார்" என்று கூறுகின்றது. ஆனால் இந்தவிஷயங்கள் எவ்வளவு உண்மையானவையோ என்று சற்று கவனிக்கவேண்டியது அவசியமாயிருக்கின்றது. இதோ, ஆபிரகாமுக்கு இஸ்மவேல் என்றும் ஈசாக்கு என்றும் இரண்டுகுமாரர்களுண்டென்பது வேதப்பிரமாணமே. அங்ஙனமாக ஈசாக்கை ஒரேபேறான குமாரன் என்று சொல்லுவதற்கு ஒருவிதத்தாலும் சாத்தியப்படாதன்றோ? இஸ்மவேல் ஈசாக்குப்பிறப்பதற்குப் பதின்மூன்று வருடங்களுக்கு முன்னாகப்பிறந்திருக்கின்றார் என்பதும் வேதசாட்சியமே; ஆனால் இஸ்மவேலை, ஆபிரகாம், வனாந்தரத்திற்கு அனுப்பிவிட்டபடியினாலே அவர், இருந்தாரென்றும் சொல்லமுடியாத நிலைமையிலிருந்த காரணம்பற்றி ஈசாக்கை ஒரேபேறான குமாரன் என்று சொல்லப்பட்டதென எமதுநேயர்கள் ஒருவேளைக் கூறுவார்களோ? அதுபொருந்தாது; பராபரன் இஸ்மவேலை, வனாந்தரத்திற்கு அனுப்புங்காலத்திலும், அவரை ஆசீர்வதித்து, நாம் அவனைப் பெரியசாதியாக்குவோமென்று கூறியிருக்கிறபடியினாலே இஸ்மவேல், இறந்தாரென்றும் இருந்தாரென்றும் சொல்லமுடியாத நிலைமையில் இருந்தாரென்று சொல்லுவதற்கு அணுத்துணையும் இடமே இருக்காதென எமதுநேயர்கள் உணர்வார்களாக. நிற்க; ஈசாக்கைத் தகனபலியிடும்படியாகப் பராபரன் ஆபிரகாமுக்குச்செய்த உத்தரவைமாற்றிவிட்டாரென்று வேதத்திலே நன்குவிளங்குகின்றதன்றோ? அப்படியிருக்க புதரிலே தன்கொம்புகளால் சிக்குண்டுகிடந்த ஒரு ஆட்டுக்கடாவைத் தம்மகனுக்குப் பதிலாகவென்று பிடித்து ஆபிரகாம் பலியிட்டதாக வேதம்கூறுவது நியாயமாகுமா? ஈசாக்கை பலியிட வேண்டாமென்று உத்தரவிடப்பட்டதேயன்றி, அவனுக்குப்பதிலாக அந்த ஆட்டுக்கடாவைப் பலியிடுவாயாக வென்று ஆபிரகாமுக்குத்தேவக்கட்டளை பிறக்கவில்லையே, அப்படியிருக்க, ஆட்டுக்கடாவானது ஈசாக்குக்குப்பதிலாகப் பலியிடுவது எங்ஙனம் நியாயமாகுமோ? ஆனால், ஆபிரகாம் விடுதல்பெற்று சந்தோஷார்த்தமாகச் செய்ததேயன்றிக் குமாரனுக்குப் பதிலாகவன்று என எமதுநேயர்கள் ஒரு



வேளைக்கூறுவார்களோ? நன்றுகூறினாரெனக்கொள்வோம்; ஆகவே ஆபிரகாம் தன்குமாரன் விடுதல்பெற்ற சந்தோஷத்தின் அறிகுறியாகச்செய்த அந்தச்செயலானது, அவருடையவித்தில் விளங்கிவருகின்றதா? ஈசாக்கில் உன்வித்துவிளங்கி வருமென்று பராபரன் சொன்னதாகக் கூறப்படுவதின் தாத்பரியம் என்ன? ஆபிரகாம் தமது பராபரனுக்காகச் செய்துவந்த ஒவ்வொருகாரியமும் அவரது வித்தில்விளங்கி வரல்வேண்டுமன்றோ? ஈசாக்கில் உன்வித்து விளங்கிவருமென்று பராபரன் சொல்லியிருப்பது உண்மையாயிருந்தால் அந்தப்படியே ஈசாக்கின் சந்ததிகளில் ஆபிரகாமினது ஒவ்வொரு செயலும் விளங்கிவருதற்கு யாதுதடை? அப்படி ஒன்றும் காணப்படவில்லை, அதுபற்றி ஈசாக்கில் உன்வித்து விளங்குமென்றல்ல, இஸ்மவேலில் உன்வித்து விளங்குமென்றே பராபரன் சொல்லியிருக்க வேண்டுமென்பது உண்மைப்படுகின்றது. மேலும் 1-ம் மோசே 22-ம் அதிகாரம் 2-முதல் 13-வரையிலும் சொல்லப்பட்ட பலியிடு விஷயங்கள் இஸ்மவேலைக்குறித்தே வந்தவைகளென்பது பிரத்தியட்சப்பிரமாணமாகின்றது. எப்படியெனில்; இஸ்மவேல் ஆபிரகாமுக்கு ஒரேபேறான குமாரனாய்ப்பதின்மூன்றுவருடங்களிருந்தாரென்பது வேதப்பிரமாணமே; அப்படிப்பட்டகாலத்திலே, இஸ்மவேலின்மீது, ஆபிரகாம், சாராள் முதலாயினோரொருங்கே அளவிறந்த அன்புள்ளவர்களாயிருந்ததைப் பராபரன்கண்டு ஆபிரகாமைச் சோதிக்கும் பொருட்டாக ஓ! ஆபிரகாமே எம்மீது அன்புள்ளவனாயிருப்பாயானால், உனக்கு ஒரேபேறான உன்குமாரனை எனக்காகப் பலியிடுவாயாக வென்றார். அதைக்கேட்ட ஆபிரகாம், இதோ உமது அடியேன் உமக்கு முன்பாக இருக்கிறேன் என்று ஒரு அணுத்துணையும் மனங்கூசாது உடனே இஸ்மவேலைப் பிடித்துக் கருக்கானகத்தியினால், அவரின் குரல்வளையைப்பிடித்துப் பராபரனாமத்தினாலே அறுத்துவிட்டார்; பிறகு அவருக்குக் கண்கள் திறக்கப்பட்டன. குமாரன் சேமமாக உயிருடனிருக்கவும் ஒரு ஆட்டுக்கடாய் அறுப்புண்டிருக்கவுமாகக்கண்டு பராபரனைத் தோத்திரஞ்செய்தாரென்றும் அதுமுதல் இதுகாறும் இஸ்மவேலின் சந்ததிகளாய்ப்பிறந்தவர்கள் தமது பிதாவால் எந்தமாசந்திகதியிலே அப்படிச்செய்யப்பட்டதோ அந்தமாசத்தேதியிலே ஒவ்வொரு ஆண்களும் தலைக்கு ஒரு ஆடு பராபரனாமத்தினாலே அறுத்துக் கொடுப்பது நித்தியகடனாகச் செய்துவருவதாகக் காணப்படுகின்றது. அல்லாமலும் அந்த இஸ்மவேலின் வம்சத்திலேவந்த உலக இரட்

சகரைப் பின்பற்றிய ஒவ்வொருசாதியாரும், அந்தக் கட்டளையை இதுகாறும் கைக்கொண்டு நடந்து வருகிறார்களென்பது சாட்சி வேண்டாத பிரத்தியட்சப் பிரமாணமாகத் தோன்றக் கிடக்கின்றது. அப்படியே ஆபிரகாமுக்கு இஸ்மவேல் பிறந்தபிறகு, சுன்னத்துச் செய்யவேண்டுமென்கிற ஒரு உடன்படிக்கையைப் பராபரன், ஆபிரகாமோடு செய்தபடியே, அந்த இஸ்மவேல் சந்ததிகளான அறபியர்களில் அந்தச்சுன்னத்துச் செய்தலும் நியமமான கட்டளையாயிருந்தது. அந்தவம்சத்தில்வந்த உலகஇரட்சகரும் அந்தவேலையைச் செய்யும்படி தம்மைப்பின்றுடர்ந்த ஒவ்வொரு சாதியாருக்கும் கட்டளையாகச் செய்துவிட்டாரென்பதும் பிரத்தியட்சமே. இந்தக் காரணங்களாலே எமது நேயர்காள்! ஈசாக்கில் உன்வித்து விளங்குமென்று ஆபிரகாமுக்குச் சொன்னதாகச் சொல்வதும் ஒரேபேறான உன்குமாரனான ஈசாக்கைப் பலியிடுவென்று ஆபிரகாமுக்குத் தேவ உத்திரவிடப் பட்டதாகச் சொல்லுவதும் வேதமாறுபாடென்பது உங்களுக்கு விளங்காமற் போகாதென்று நம்புகின்றோம்; ஆகவே இரண்டாம்பேறான ஈசாக்கை ஒரேபேறான குமாரனென்று சொன்னதாக வேதங் கூறுவதைக் கேட்க உங்கள் செவிகள் ஏன் கசப்படையா? ஈசாக்கின் சந்ததிகளான இஸ்ரவேலரில் அந்தவிதமாகக் கடாக்கள் பலியிடப்பட்டு வருகின்றனவா? ஈசாக்கின்மீது அந்தவிஷயம் நடந்திருந்தால் அவரின் சந்ததிகளான இஸ்ரவேலரிலன்றோ ஒவ்வொரு ஆண்பிள்ளைகள்மீதும் கடாய் அறுத்துக்கொடுக்க வேண்டுமென்பது விதியாகவேண்டும்? அப்படியாக இஸ்ரவேல் வம்சத்திலே காணப்படவில்லையே. எமது கிறிஸ்தவ நேயர்களே, இஸ்ரவேல் வம்சத்தில் இரட்சகராகவந்த இயேசுநாதர் தமது மூலப்பிதாவைப் பலியிடும்படி பராபரன் உத்திரவிட்டுப் பிறகு அந்த உத்திரவை வேறுவிதமாக நிவர்த்திசெய்த சந்தோஷத்தின் பொருட்டாகத் தம்மைப் பின்பற்றிய ஒவ்வொருவரும் வருஷந்தோறும் ஒவ்வொரு ஆடுபலியிடக் கடமைபட்டவர்களென்று உத்திரவிட்டிருக்கின்றாரா? இல்லையே. இந்தக் காரணங்களாலேயும் இஸ்மவேலே ஆபிரகாமுக்கு முதன்மையான வித்தென்றும் அவரையே பலியிடும்படி பராபரன் ஆபிரகாமுக்கு உத்திரவிட்டதென்றும் உங்களுக்கு நன்றுபுலப்படாதிராதென்று நம்புகின்றோம்.

இதுவுமன்றி, ஈசாக்கை ஆபிரகாமின் வித்தென்று சொல்லுவதற்கு நியாயம் பலமாக நிற்குமென்று நம்பப்படவில்லை. எப்படி



யெனின், இயேசுநாதர் யாருடையவித்தென்று சொல்லுவீர்கள்? அவரோ புருஷசம்பந்தமின்றி அடையாளமாகப் பிறந்திருக்கின்றாரென்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. ஆனால் ஸ்திரீசம்பந்தம் ஒன்றுண்டு, அதுபற்றி அவர் இஸ்ரவேலரில், ஒருவிதசம்பந்தமுள்ளவர் எனக்கூறலாமேயன்றி இஸ்ரவேலரின் வித்தென்று முற்றிலும் பலப்படக்கூற இடமில்லையன்றோ? அங்ஙனமாக ஈசாக்கோவெனின் ஆபிரகாமுக்குப் புருஷத்துவம் இல்லாமலும் சாறாள்பெண்களுக்குரிய வழக்கமில்லாமலுமான முதிர்ந்தவயதிலீசாக்கு பிறந்தபடியினாலே அவரையும் அடையாளப்புத்திரரென்றே சொல்லவேண்டுமன்றி அவரை ஆபிரகாமின் வித்தென்றாவது சாறாளின் குமாரனென்றாவது சொல்ல எவ்வளவும் இடம்படாதென்பது எமது நேயர்களுக்கு நன்குவிளங்காதிருக்காமலிரா. இதோ 1-ம் மோசே 17-ம் அதிகாரமோவெனின் "16-நாம்
"அவளை ஆசீர்வதித்து அவளாலே உனக்கொரு குமா
"ரனையுந்தந்து அவள் சாதிகளாய்ப் பலுகவும் அவளாலே
"சாதிகளின் இராசாக்கள் உண்டாகவும் அவளை ஆசீர்
"வதிப்போமென்றார். 17-அப்பொழுது ஆபிரகாம் முகம்
"குப்புறவிழுந்து நகைத்து, நூறுவயதானவனுக்குப் பிள்
"ளை பிறக்குமோ? தொண்ணூறுவயதானவள் பெறுவா
"ளோ? என்று தன்னிருதயத்தில் சொல்லிக்கொண்டு"
என்றுகூறுகின்றது. இதனாலே ஆபிரகாமுக்கு சாறாளினால் ஒரு குமாரனையும் கொடுப்போமென்று பராபரன் ஆபிரகாமுக்குத் தெரிவித்தபோது ஆபிரகாம் தன்னை நினைத்தும் தன்பெண்சாதியாகிய சாறாளின் நிலைமையை நினைத்தும் எப்படி பெறப்போகின்றோமோ என்று வியப்படைந்ததாகத் தோன்றுகின்றதன்றோ? ஆகவே பெறக்கூடாத நிலைமையில் பெறுவது அடையாளப் பேறுகுமேயன்றி சுபாவப் பேறாகாதென்பது உணரக்கிடக்கின்றது. இதோ 1-ம் மோசே 18-ம் அதிகாரமோவெனின் "11 - ஆபிரகாமும் சாறாளுமோ வே
"ளின் முதிர்ந்தவர்களும் வயது சென்றவர்களுமாய் இருந்
"தார்கள். ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு சாறாளுக்கு நின்
"றுபோயிற்று. 12-ஆகையால் சாறாள் தன் உள்ளத்திலே
"நகைத்து நான் கிழவியும் என் எசமான் முதிர்ந்தவய
"துள்ளவருமானபின்பு எனக்கின்பம் உண்டாயிருக்குமோ

"வென்றாள். 13 - அப்பொழுது கர்த்தர் ஆபிரகாமோ
"டே சொன்னதாவது, சாராள் நகைத்து நான் கிழவி
"யாயிருந்தும், பிள்ளைப்பெறுவது மெய்யோ வென்பா
"னேன்? 14 - கர்த்தரால் ஆகாத அதிசயமுண்டோ"

என்று கூறுகின்றது. இதனாலே சாராள் பெண்களுக்குரிய வழக்கம் நின்றவளென்றும் ஆபிரகாம் பிள்ளைபெறும் சக்தியற்றவரென்றும் நன்கு புலப்படுவதேயுமன்றி, சாராள்பெற்ற ஈசாக்கு கர்த்தருடைய வல்லமையினாலே, பிறந்தவரேயன்றி வித்தின் முறைபற்றிப் பிறந்தவரன்றென்றும் எமது புத்தி சாதுரியமுள்ள நேயர்களுக்கு விளங்காமலிரா. ஆகையால் ஆபிரகாமுக்கு வித்தின் முறையானபிள்ளை, இஸ்மவேலே என்பதும் பராபரன் ஆபிரகாமின் வித்து முறைமைபற்றி ஆசீர்வதித்ததாக வேதத்திலே கூறப்பட்ட குமாரன், ஆபிரகாமுக்கு இஸ்மவேலே என்றும் உணர்வார்களாக; இங்ஙனமாக எமது நேயர்கள், இனி ஈசாக்கை ஆபிரகாமின் முறைபற்றிய சந்ததியென்று கூறமாட்டார்கள். ஆனால் இஸ்மவேலே முறைமைபற்றிய சந்ததியென்று கூறுவார்கள். இவ்விஷயத்தில் அதிக விவரம் வேண்டுவது எமது நேயர்களுக்கு அவசியமாயிராதென்று இம்மட்டோடே முடிக்கின்றேம். ஆகவே எமது நேயர் உற்றுணர்ந்து உண்மையைக் கடைப்பிடித்து ஒழுகுவார்களாயின் அவர்கள் பாக்கியவான்களே.

## "முதற்பொருள்"

*இது உலகத்துக்குக் காரணமாகிய முதலையுணர்த்துகின்றது.

ஐயன்மீர்!

உண்மை யாதுவோ, எல்லா மனிதர்களும் தம்மது வரலாற்று முறைமை, எத்தன்மையினதென்று உணர்தல் பெரிதும் இன்றியமையாத கடமையினதென்றற்குச் சிரம்வணங்குவரேயன்றி மறுக்கற்பாலரலர்.

* "உலகம்" என்பது மனத்தினாலே அறியக்கிடக்கும் அகப்பொருளும் வெளிப்புலன்களாலே அறியக்கிடக்கும் புறப்பொருளும் ஒருங்கமைந்துள்ள ஒருபிண்டத்தின் பெயரென்ப; உலகியலறிந்த இலக்கு மெய்ப்புலவர். அது ஜங்கமமென்றும் ஸ்தாவரமென்றும் இருதாரமாக வகுக்கப்படுகின்றது.



தொன்று தொட்டுவழங்கு மனித சுபாவங்களுக்குரிய அகங்காரம், காமம், பொறாமை, யாதிய பல சம்பவங்களினாலே அங்ஙனம் விசாரிக்கப்புகுந்தார் பலர், தம்மது ஆராய்ச்சியில் ஒன்றுபடாது விகற்பிக்கப்பட்டாராயினரென்பது உலகமுகத்திலே பல வேறுபாடாக அநுட்டிக்கப்பட்டுவரும் கொள்கைகளினாலே வெளிதாயுணரக்கிடக்கின்றது.

நேயன்மீர்! உதாரணமாக, "பூதங்களை" எடுத்துக்கொள்வோமாயின்; அவைநித்தியமென்றும் அநித்தியமென்றும், நித்தியமுமன்று அநித்தியமுமன்றென்றும் நித்தியமும், அநித்தியமும் அதுவேயென்றும், நித்தியமுமன்று, நித்தியமல்லாமையுமன்றென்றும் அவற்றின் உண்மைத்தன்மையை நோக்கப்புக்கார் பலர் பலவாறு பேதப்பட்டுச் சாட்சிபகருவாராயினாரென்றால், உண்மை இன்னதென்று புலப்படாதாயிற்று. ஆகவே, விகற்பிக்கப்பட்ட இரண்டில் இரண்டும் உண்மையாதல் அரியதே. ஆதலின் இரண்டும் பொய்யாகவாவது அவற்றில் எதாவதொன்று மெய்யாகவாவது சிறப்பெய்து மென்பது பெறப்படும்; இங்ஙனமாக; நமது வரலாற்று முறைமையின் உண்மைத்தன்மையை ஆராயப்புக்கார் பலரும், விகற்பித்தாராய் முடிபெய்தினரென்பது உள்ளங்கை நெல்லிக்கனியேயாயிற்று.

அப்பிரமாணம் பற்றிப் பலவேறுபாடாகக் காணப்படுமதும், அத்தனையும் உண்மைக்கு முரணாகவாவது அவற்றிலொன்று மாத்திரம், உண்மையாகவாவது நிலைக்கு மென்றற்கு எமது புத்திச்சாதுரியமுள்ள நேயர்களில்; எவர்தா மறுக்கற்பாலர்?

ஆகவே, நாகரீகம்பயின்ற இக்காலத்திலே மதவிசாரணைசெய்து உய்யவேண்டுவதேயன்றிப் பெரிதுமின்றியமையாத காரியம்வேறெதைத்தான் எமது நேயர்கள் நோக்குவார்களோ யாமறியேம். ஐயன்மீர்! நாம் விசாரிக்கப்புகுவதில் முதன்மையாகும் பொருள் எதுவோவெனின் முதன்மைத் தன்மையுள்ள பொருளையே என்பேம். அதில் நம்மனோர்க்கும் விவாதமாயிராதென்று கூறயாம் பின்னில்லேம். ஏனெனின்? நம்மையே நாம், ஆராயப்புகுந்தால், நாமெல்லாம், காரியப்பொருளே யென்பதூஉம், நமக்கெல்லாம் ஒரு காரணப்பொருள் வேண்டுமென்பதூஉம் எல்லார்க்கும், ஒப்பமுடிகின்றமையின் காரணமாகிய அம்முதன்மைத் தன்மைப்பொருளையே, முதன்மையாக விசாரிக்க வேண்டுமென்பதாயிற்று.

நேயன்மீர்! அம்முதற்பொருளுக்குரிய நாமத்தை அப்பொருளினாலேயே யன்றி அறிதலியலா தென்பதுவெளி. ஆகவே அந்நாமம் வேதத்திலே அம்முதற் பொருளினாலே ஓதப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் அந்நாமம், அப்பொருளுக்கேயன்றி வேறுபொருளுக்கு ஒருசிறிதும் ஓதப்படல் பெரிதும் பாபமாக எண்ணப்படல் வேண்டுமென்பது நன்னிறி நுழைந்தார்க்கு மறையாது; இத்தகைய ஒரு இயற்பெயர் அம்முதற்பொருளுக்கென்று சொந்தமாக்கப்பட்டதாகத் தமிழ்ப்பாடையில் காணப்படவில்லை. ஆகவே அப்பொருளுக்குத் தமிழ்ப்பாடையில் இயற்பெயர்கூற இயலாமையின் அப்பாடையில் கண்டபடி "கடவுள்" "பராபரன்" "கருத்தா" என்பனவாகிய பலபொருளுக்குரிய ஒரு பெயரினாலேயே யாமும் ஓதுவாம், அதுபற்றி யெம்மை இகழற்க. ஆனால் சிற்சில இடங்களில் எமது வேதபாடையில் கண்டபடி, அதற்குரிய இயற்பெயராலேயும் ஓதுவாம் காண்க.

ஐயன்மீர்! உலகத்துக்கு அம்முதற்பொருள் காரணத் தன்மையினதென்பது, எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததேயாயினும், இக்காலத்திலே நிரீச்சுரவாதிகளும் உளராதலின் அவர்பொருட்டாகவே சற்று ஒருவாறு விசாரிப்பாம்.

இதோ! ஜங்கமம், ஸ்தாவரம், எனப்படும் உலகம், இல்லாமையினின்று அதாவது; ஒரு ஜங்கமம் அல்லது ஒரு ஸ்தாவரம் ஆகிய ஒருபொருளை யெடுத்துக்கொள்வோமாயின்; அந்தவஸ்து; இல்லாமையாகவிருந்து ஒருகாலத்திலே அது உண்டானதாகவே புலப்படுகின்றது. ஆகவே அது இல்லாமையா யிருந்தகாலத்திலே அது ஒருவஸ்தென்பது அது தனக்காவது பிறருக்காவது, தெரியாதென்பது மறுக்கப்பாலதன்று. அங்ஙனமாக, நாமதேயமுதலிய குறிகுணங்கள் அறவேயிழவுண்டு சூனியமாய் ஒருவாறு நினைவுமில்லாது கிடந்து எதிர்பார்க்கப்படாத விதமாய், ஒரு உருதோற்றுகின்றதை நாம் கண்ணுறக்காண்கின்றோம். அந்த உருவோ அது தோன்றியகாலத்திலே, அது ஒருவிதத்தத்துவத்திற்கும் அருகமல்லதாய், பிறர்துணையின்றிப் பிழைத்தலரிதாய்க் கிடந்துபடுகின்றதையும் காண்கின்றோம். ஆகவே அது தன்னைத்தானே உண்டாக்கிக்கொள்ளும் திறமுள்ளதென ஒருசிறிதும் நம்ப ஏதுவில்லையென்பது பிரத்தியட்சப் பிரமாணமாகின்றது. அல்லாமலும் இல்லாமையாய்ப் பின்னர் உண்டாகும் வஸ்து தானே தன்னை உண்



டாக்கிக்கொண்ட தென்பது பதர்வாக்கியமாய் முடிபெய்துமேயன்றி வேறுபயன் பயவாது. இல்லாதவஸ்துவுக்குப் படைக்கும் தத்துவம் ஞானம் நாட்டமுதலியன இல்லாமையாகவே முடிபெய்துமென்பதுவெளி. ஆதலின் இல்லாமை இல்லாமையே யன்றி வேறொன்றையும் பயவாதென்பது பிரமாணமாயிற்று. இதுபற்றி உலகம் இல்லாமையினின்று உண்டானமையினாலே அது உண்டாதற்குக் காரணமாயிருப்ப தொருவஸ்து அவசியம் இருத்தல்வேண்டும் என்பது பெறப்பட்டது. ஆனால் பஞ்சபூதியங்களின் இயற்கைசம்பவத்தினாலே இவ்வுலகம் இங்ஙனமாக நடைபெறுகின்றதென்பாரும் உளர். அது பொருந்தாது. மண், நெருப்பு, காற்று, ஜலம், ஆகாயம், என்பனவே பஞ்சபூதியங்களென்று வழங்கப்படுகின்றன. இவற்றின் சுபாபங்களோ ஒன்றுக்கொன்று எதிரிடையானவைகளென்பது எவருக்கும் மறையாது. இதோ! நெருப்பின் சுபாபம் சூடு, ஜலத்தின் சுபாபம், குளிர்ச்சி, மண்ணின்சுபாபம், வரட்சி, காற்றின்சுபாபம் வரட்சியின்மை, ஆகவே, இந்நான்கும் ஒன்றுக்கொன்று முற்றிலும் எதிரிடையானவைகளாகின்றன என்பது மறையாது. ஆதவே, குளிர்ச்சி, எந்தஇடத்தில் எந்தநேரத்தில் தங்கிநிற்குமோ அந்தநேரத்தில் அந்த இடத்தில் சூடு தங்குதற்கு அருகமல்லதென்பதூஉம், சூடு எந்தநேரத்தில் எந்த இடத்தில் தங்கிநிற்கின்றதோ அந்தநேரத்தில் அந்த இடத்தில் குளிர் தங்கிநிற்காதென்பதூஉம் எதிர்வாதமற்ற உண்மை. இங்ஙனமாகவே வரட்சி, எந்த நேரத்தில் எந்த இடத்தில் தங்கிநிற்கின்றதோ அந்தநேரத்தில் அந்த இடத்தில் குளிர், சூடு, வரட்சி யின்மைதங்கி நிற்காவென்பதூஉம், பிறவும் பிரமாணமாகின்றன. ஆகாயமோ இந்நான்கும் தங்கி நிற்றற்கு அகலிடங்கொடுத்து நிற்கும் இயல்பினதாயிருக்கின்றது. நேயன்மீர்! இத்தகைய சுபாபமுள்ள ஐந்துவஸ்துக்கள் ஒன்றையொன்று வெல்லுந்திறமின்றிப் பிழைபடுதல் மாத்திரமன்று ஒன்றோடொன்று கலந்துநிற்குமாயின், ஒன்று மற்றொன்றால் அழிவுபடுமென்பதூஉம் தெற்றென விளங்குகின்றது. இத்தகைய வஸ்துக்களின் சுபாபத்தினாலே, நாம் கண்ணாரக்காணக்கூடிய ஆச்சரியப்படத்தக்க வஸ்துக்கள் உண்டாகுமென்று எந்தபுத்திச் சாதுரியமுள்ளவன் நம்பமாட்டுவன்? அந்தோ, நான்குபேதப்பட்ட சுபாபத்தையும் ஒன்றையொன்று வெல்லும் திறனற்றுக்கிடக்கும்போலித் தன்மையுள்ள, பஞ்சபூதியங்களி னியற்கையினாலே என்ன சம்பவிக்கக்கூடும்? என்பதைப் புத்திமான்கள் கவனித்தால் அவைகளும்

வல்லமையுடைய ஞானத்தின் காரியமென்றே விளங்கப்படுகின்றன.

நேயன்மீர்! அந்தப் பஞ்சபூதியத்தின் இயற்கையினாலே ஏதாவது உண்டாக்கப்பட்டால் அது ஒரேதன்மையுள்ளதாக இருக்க வேண்டுமேயன்றிப் பலதரத்தினதாக உண்டாதற்கு ஏதுவில்லை. ஒருவிதையை நட்டினால் சூடு, வரட்சியின்மை, குளிர், ஆகாயம் இந்தச் சுபாபங்களினாலே நட்டப்பட்ட விதைக்குரியமரம் அல்லது செடி முளைக்கின்றதேயன்றி வேறுவஸ்துவாகவில்லை. ஆகையினாலே மேற்கண்ட பஞ்சபூதியங்கள், நட்டப்பட்ட விதையின் சுபாபத்திற்கு ஒத்திருக்கின்றனவேயன்றித் தமது சுபாபங்களுக்கேற்ப அவைகளை வேறொன்றாய்ச் செய்துவிடவில்லை என்பது நன்றாய் விளங்குகின்றது. அல்லாமலும் பலவிகற்பமான விதைகளை, அல்லது அவைகளுக்குரிய, மரம், செடி, பூண்டு, புல், எனப்படும் வகைகளையும், மனு, சாத்தான், ஊருவன, பறப்பன, நடப்பன, நீந்துவனவாகிய பல தரப்பிராணிகளையும் பிரவாகு மனைத்தையும் பஞ்சபூதியங்கள் உண்டாக்கின வென்றால் அந்தப்பஞ்சபூதியங்கள் பூரணஞானவான்களாகவும் சர்வ வல்லமைசாலிகளாகவும் உண்டாக்கப்படுபவைகளுக்குத் தேவையானவைகளைத் தகுமையும் கொடுத்தாளும் இரக்கமாகிய வெல்லாக்குணத்தன்மைகளையுடையவைகளாகவு மிருத்தல் வேண்டுமென்பது மறுக்கப்படாத உண்மையாகின்றது.

அங்ஙனம் எல்லாம் அவைகளுக்குளதென்பது மெய்யுணர்வாகாது. இதோ! பூரணஞானமும், சர்வசத்தியும், பிரவுமாகிய குணங்கள் ஆகாயத்துக் குளவென்றால் அத்தகைய குணங்கள் இதர நெருப்பு, காற்று, ஜலம், மண்ணிவைகளுக்கு இல்லையென்பதுவே போதிரும். ஆதலின் அவைகள் சர்வஞான முதலியவெல்லாக் குணத் தன்மையினவல்ல வென்பதாயிற்று; ஆகவே சர்வஞான முதலிய தற்றவைகள் எத்தகைய வல்லமை பொருந்திய பெரும்பரிபாலனம் செய்தற்கு அருகமல்லவைகளென்பது மறுக்கப்படாத மெய்யுணர்வாயிற்று; அல்லதூஉம் பஞ்சபூதியங்கள் ஐந்தென்றும், பூரணஞானமுதலிய எல்லாக் குணங்களையும் வகிக்கின்றனவென்றால், ஒன்றையொன்று வெல்லும் திறமற்றிருக்கவேண்டு மென்பது பெறப்படும், பெறவே, பூரணஞானம், சர்வத்துவம், முதலிய எல்லாக் குணங்களும் அவைகள் அடைந்திருக்கவில்லை என்பது நிரம்பவும் பொருத்தமாயிற்று. நேயன்மீர்! சர்வத்துவம், சர்வத்தி



யானமாகிய எல்லாக் குணங்களும் அமைந்துள்ளது ஒன்றே நிரம்பவும் போதுமென்பதூஉம் அங்ஙனமாயபல வீணேயா மென்பதூஉம் எதிர்வாதமற்ற உண்மை யென்பதை நீவிர்கள் மேல்கூறிய காரணங்களினாலே நன்குணர்வீர்களன்றோ; இதுவேயுமன்றிப் பஞ்சபூதியங்கள் உலகத்தை உண்டாக்கின்றனவென்றால் அவை நித்திய பொருளாயிருத்தல் வேண்டுமென்பதாயிற்று. ஏனென்றால் அநித்தியம் அநித்தியத்தை யுண்டாக்காதென்னும் மெய்மை தோன்றுதற்காக. எனவே நேயன்மீர்! சூடு, குளிர், வரட்சி, வரட்சியின்மை எனப்படும் பொருள்கள், ஒரு இடத்தில் சார்ந்தேயன்றித்தத்தம் குணங்களை தோற்றுவித்தற்கு, ஒரு சிறிதும் கூடாதவைகளா யிருக்கின்றன வென்பது உணரற்பாலதே. ஆகலின் அநித்திய பொருள்களுக்கு முன்னே ஒரு நித்தியப் பொருளாகிய இடம் அல்லது ஆகாயம் வேண்டியதாகும். ஆகவே அந்த ஸ்தானத்திற்குப் பின்னிட்டதாக அந்தச் சூடு முதலியவைகள் உண்டாக வேண்டியதாயிருக்கின்றன. அதுபற்றி அவைகளுக்கு முதலில் இல்லாமை யென்பதொன்றுண்டாயிற்று. உண்டாகவே இல்லாமையினின்று அவைகளை வேறொன்று உண்டாக்கியேயன்றி உண்டாகாவென்பது வெள்ளிதிற்புலப்படுகின்றது. இதனாலும் அவைகள் உண்டாக்கும் திறமுடையவைகளல்லவென்பது மெய்யாகின்றது. ஆகாயமோ நித்தியமானதென்றும் அதுவே எல்லாவற்றையும் உண்டாக்கின்றதென்றும் அப்படி உண்டாக்குதற்கு பூரணஞானம் தத்துவமாகிய குணத்தன்மைகள் வேண்டு மென்பதில்லை யென்றும் கூறுவாரும் சிலருளர். அதற்குச் சான்றாக ஒரு விதை, அல்லது ஒருமரம் அல்லது செடிபோலொத்தவைகள் தாம் தம்மை யுணரும் சத்தியும், தாம் இன்னவிதமாய் முளைத்தெழுந்து இன்னவிதமாகப் பூத்துக் காய்த்துப்பழுத்து. இன்னவிதமாகக் கசந்து துவர்த்துப், புளித்து இனித்து, இன்னவிதமாகக் காய்ந்து, வாடி, விடுவோ மென்றுணராமலிருக்க முளைத்தெழுந்து, பூத்துக்காய்த்துப், பழுத்துத், தளிர்த்துச், செழித்து, இனித்துப், புளித்துத்துவர்த்துக் கசந்து, காய்ந்து விடுகின்றனவோ அப்படியேயுலகம் பலதரத்தினதாக உண்டாயழிந்து போகின்றதூஉம், புதிதாய் உண்டாகின்றதூஉமாக இருக்கின்றதென்று சாட்சி கூறுகிறார். இதோ! போலி நேயன்மீர்! நீவிர்கள், ஞானவான்களாகவும் தத்துவமுள்ளவர்களாகவும், பார்வை கேள்வி காத்தல், அருளலாதிய எல்லாக்குணங்களும் உள்ளவர்களாக இருப்பதேபோல உலகத்தில் வேறுள்ள வஸ்

துவையாவது காணமட்டார்களென்பதில் முரணுருவீரல்லீர். ஆகவே நீவீர்கள் அநுபவத்திலே காணவில்லையா? உங்கள் மனைவிகளோடொருபடுக்கையிலாகுங்காலத்திலே, உங்கள் இன்பத்துளிகளில் எது உங்கள் மனைவிகளின் கெர்ப்பத்திலே பாய்ந்ததென்றுவது எப்பொழுது பாய்ந்ததென்றுவது அது என்னவிதமாகச் செய்பக்குவளறையில் உருவம்பெற்று வருகின்றதென்றுவது அது மகவா? மகளா? வென்றுவது அது எலும்பும் நரம்பும் தசையுமாக உருவப்பட்ட விதங்களாவது நீவீர்கள் அறிய இயலவில்லையே, அந்த உரு வெளியாகுந்தினையும் நீவீரும் உங்கள்மனைவிமார்களும் பகும் கண்டதுமன்றி அந்தஉரு உண்டாதற்கும் அது சேமமாய் வெளியாதற்கும் அது வெளியானல் அது மனிதப் பக்குவமாய் வாழும்பொருட்டு எவ்வளவோ ஆவலும் மனக்கவலையும் எடுத்துக் கொள்ளுகின்றீர்கள். ஆனல் உங்களுக்கு அவைகளை உங்கள்கருத்துக் கிசையச்செய்து கொள்ளுதற்கு ஒரு சிறிதும் இயலாமலாய் விடுகின்றீர்கள், அந்தக் காலத்திலே பெரிதும் கலக்கப்படுகின்றீர்கள் வைத்தியனைத் தேடியோடுகின்றீர்கள். நீங்கள் உண்டாக்கிக் கொண்ட உங்கள் கண்மணிகளானவர்களைக் காப்பாற்றிக்கொள்ள முடியவில்லை. அங்ஙனம் முடிந்தால் உங்கள் அருமைமக்களைக் கைவிடுவீர்களா? உங்கள் விரோதிகளை இலகுவில் விடுவீர்களா? நன்றாய்க் கவனித்துப் பாருங்கள்; உலகத்திலுள்ள வைகளெல்லாம் பெரிதும், ஞானமும், சிந்தனையும் வல்லமையும் பார்வையும், கேள்வியும் வார்த்தையும் பிறவுமாகிய எல்லாச் சுகுணங்களும் அமையப்பெற்ற உள்ளன் நிலைமை இப்படிப்பட்டதாயிருந்தால் உயிரற்றதும் கடாதிகளும் அசைவற்றவைகளும் ஞானம், தத்துவம், முதலியவைகளற்ற பிரப்பொருள்களும் பொருளென்றும் பொருளல்லவென்றும் கல்விமான்கள் விவதாரப் பட்டுள்ள ஆகாயமும் ஆகிய இவைகளெல்லாம் தம்மால்தாமே உண்டாகுமென்று கூறுவது பெரிதுமடைமையாகுமன்றோ? இங்ஙன மெல்லாமுமன்றி, காரணமின்றிக் காரியமும், காரியமின்றிக் காரணமும் பிளவுபட்டிருத்தல் ஒருவிதத்தாலும் பொருந்த முடைத்தல்ல வாதலின் கடவுள் சிருட்டிக்குக் காரணமும் சிருட்டிக் கடவுளுக்குக் காரியமுமாய்க் கடவுளின்றிச் சிருட்டியும், சிருட்டியின்றிக் கடவுளும் பிரிந்துபடாது ஒன்றுபடக் கிடக்கின்றன வென்றும், அதற்கு உதாரணமாகச் சூரியனையும் அதன் பிரகாசத்தையும் எடுத்துக்கொண்டு சூரியன் பிரகாசத்துக்குக் காரணமும், பிரகாசம் சூரியனுக்குக் காரியமுமாய் ஒன்றைவிட்டொன்று



பிளவுபடாது இரண்டும் ஒன்று படபிளவின்றி நிற்றலைக் காண்பிப்பாருமுளர். இவர் சுவத்துவக்காரணம் அசுவத்துவக்காரணம் எனக் காரணம், இரண்டு வகைப்படுமென்பதை யுணர்ந்திலர். சூரியனாகிய காரணமும் பிரகாசமாகிய காரியமும் அது போன்றபிறவும் அசுவத்துவக்காரண காரியமென்றும், கடவுளாகிய காரணமும், உலகமாகிய காரியமும், சுவத்துவக் காரணக்காரிய மென்றும் உணர்வாராயின் அவரது கொள்கையை உடனே விட்டொழிவா ரென்பது உண்மை. சுவத்துவக்காரணம் அசுவத்துவக்காரணமாகிய இவ்விருபாலர்க்கிடை நாட்டமும், தத்துவமும், ஞானமுமாகிய பிரிவுமில்லாதது அசுவத்துவக்காரணமென்பதூஉம் அவைகளுடையது சுவத்துவக்காரணமென்பதூஉமே வேற்றுமையறிக.

சுவத்துவக்காரணத்திற்கு உதாரணமாக ஒரு குயவனை எடுத்துக் கொள்வோமாயின் அவன் ஒரு பாண்டத்தை வனையக்கருதினனேல் அவன்தான் சமைக்கும் உருவம் இன்ன தன்மையின தாயிருத்தல் வேண்டுமென்று முதலிலே ஒரு உருவத்தை அறிகின்றான். பின்னர் அவ்வுருவத்தை வெளிப்படுத்துதற்கு வேண்டிய மண் தண்ணீர் கருவி முதலியவைகளைத் தனக்கு உபகரணங்களாகக் கொள்ளும் தத்துவத்தினனாய் அப்பாண்டத்தைத் தான்வனைய எண்ணிய காலத்திலே வெளிப்படுத்துகின்றான். இதுவாகக் கடவுள் தான் சிருட்டிக்கக்கருதிய பொருளை உபகரணம் வேண்டாது அதனை வெளிப்படுத்த தான் சிந்தித்த காலத்திலே வெளிப்படுத்துகின்றான். இதுவே இவ்விருபாலர்க்கிடை வேற்றுமை. இது ஒருவாறு உதாரணமாதலின் குயவற்கும், கடவுளுக்கும், நெருங்கிய ஒரு பாத்தியம் உளதென்று உழற்க. எனவே கடவுளும் உலகமும் பிளவுபடாதொன்று பட்டவைகளென்று கூறிய பேதைகளின் வாக்கியம் போலி யென்றொழிக்க. இங்ஙனமெல்லாம் புத்திச் சாதுரியமுள்ள எமது நண்பர்களுக்குப் பெரிதும் பயன்படவு மென்று விரித்திலம் உய்த்துணர்க.

ஆகவே, எமது நேயர்களுக்கு, உலகத்திற்குக் காரணமான சுவத்துவமுடைய ஒரு முதல் உளதென்பது பரிஷ்காரமாய் வெளியாயிற்று. சிற்க.

உலகமெனப்படும் ஸ்தாவர ஜங்கமங்கள், ஒவ்வொன்றும், மனத்தோற்றமேயன்றி அஃதொரு பொருளல்லவென்றும், பொருளே

யாயினும் அதற்கொரு நிர்ணயத் தன்மையில்லையென்றும் அதற்கொரு நிர்ணயத் தன்மையுளதாயினும் வஸ்துவிற் கானலை ஜலமென்றும் போலேயன்றி உண்மையில்லது ஜலமில்லாததைப் போலென்றும் பலர் பலவாறு பேசப்படுவாருமுளர். அது பற்றி மெய்ச்சுகணர்ந்த வேதாந்திகள், உலகமாகிய ஸ்தாவர ஜங்கமங்கள் ஒவ்வொன்றும், தனித்தனியாகத் தத்தமக்கொரு மாஹியத்துள வாகவே சிருட்டிக்கப்பட்டிருக்கின்றனவென்று மெய்ப்பிக்கின்றார்கள். அதை "ஹகீகதுல் அஷ்யாயி ஸாபிதுன்" என்பர் வேதபாடையார். அவ்வனையெல்லாம் விரிப்பின் பல்குமென்றஞ்சி விரித்திலம்.

நேயன்மீர்! உலகத்திற்குக் காரணமான ஒரு முதலுக்கும், ஒரு மாஹியத்துள தாகவே யிருக்கிற தென்பதூஉம் மெய்யுணர்ந்தார் கருத்து.

அந்த மாஹியத்தோவெனின்; ஒருபோது பொருந்திலேனும் இன்மையென்ப துண்மைப்படுவது, என்றும் உண்மைத் தன்மையின் நியமையா நியதியினதாய சுவத்துவமுடைய தெனப்படும்: இதனை வேதபாடையார் "வாஜிபுல் உஜூது" என்பர். எனவே காரியப் பொருளாகிய உலகத்தின் மாஹியத்தோவெனின், பெரும் பொழுதிலேயும் இன்மையென்ப துண்மையாய், எஞ்ஞான்றும் உண்மைத்தன்மைக்கு அருக மில்லதாய் அழிவுபடுவதாய் நின்றுபடும் வியதியினதாகிய அசுவத்துவமுடைய தெனப்படும். இதனை "மும்கினுல் உஜூது" என்பர். இங்ஙனே இவ்விருபாகமும் விடைவேற்றுமையவாம்: மாஹியத் தெனப்படுவது, இலக்கணம், குணம், நாமம் என்பன இன்றியமையாத் தன்மையினதென்றும் பொருட்டு. இவ்வாறன இலக்கணைப் பொருத்தமுடையதோர் சொல், ஆரியம், திராவிடமாகிய பாஷைகளில் காணாமையால் வேதபாடையிற் கண்டபடி "மாஹியத்து" என்று கூறினும், உய்த்துணர்க.

பண்டைய ஆரியர், இல்லாமைத் தன்மையையுணர்த்தும் "வஸி" என்றுமறைச் சொற்பகுதியும், உண்மைத் தன்மையுணர்த்தும் "இஷ்டி" என்னும், விதிச்சொல் விகுதியும் புணர்த்து "இல்லாமையாயிப் பின்னர் உண்மையாய்த் தோன்றினது" என்னும் பொருட்டாய் உலகத்தைச் "சிருஷ்டி" என்று கூறுவாருமுளர். வேதபாடையோர் இல்லாமையைத் தனக்கு முதல்காலமுடையதென்னும் பொருட்டாய், அதனை "ஹாதிஸ்" என்பர்.



இனிமமது நேயர்கள், உலகத்திற்குக் காரணமான ஒரு முதலின் மாஹியத்திற் குரிய இலக்கணமாதியவைகளை விசாரிக்கப் பெரிதும் அவாவினராகுவர்: அதுபற்றி ஒருவாறு கூறுவாம்.

1-வது, இலக்கணத் தன்மையைக்குறித்து; அது, ஐந்து வகைப்படும்.

(1) அந்த மாஹியத்து: இன்மையென்பதைத் தனக்கு முதலாய்க் கொள்ளுவதினாலே, அதனை இன்மையினின்று உண்மையாய்ச் சிறப்பிப்பான் வேண்டி வெளியே கொண்டுவர வேறொரு முதலின்றி யமையாதாகவே, அத்தகையது எவற்றிற்கும் காரணமாய்ச் சிறப்பெய்தலமையாது. ஆதலின், அது இன்மை முதலாத முதலாயிருத்தல் வேண்டுமென்பதூஉம் (இதனை வேதபாடையார் "அஜலி" என்பர்).

II. அந்த மாஹியத்து இன்மையென்பதைத் தனக்கு இறுவாய்க் கொள்ளுவதினாலே அது, அழிவுபடுமென்பது வெளி. ஆகவே, அழிந்துபடுந்தன்மையுள்ள ஒன்று தன்சேனைகள் கடைப்போந்தனையும் செய்தக்க நீதியா நீதியாகிய இருவகைப்பயனுக்குப் பயன்கோடலாகிய கிரியைகளைச்செய்தற்கு, அருகமில்லதாயொழிவுபடுமாதலின், அது இன்மையிறுவாத இறுவாந்தன்மையினதாயிருத்தல் வேண்டுமென்பதூஉம் (இதனை வேதபாடையார் "அபதீ" என்பர்.)

III. அந்தமாஹியத்து, தன்னை நிகரும் பிறதொன்றை யுடையதாயிருந்தால், சமநிலைத்துவமுடைய இரண்டு ஒன்றையொன்று மீப்போகாதென்பது வெளி. ஆகவே, அவ்விரண்டும் சர்வத்துவமுடைய தெனப்படா. ஆதலின் அது, நிகரற்ற ஒன்றாயிருக்குந்தன்மையினதா யிருத்தல் வேண்டுமென்பதூஉம் (இதனை வேதபாடையார், "வஹ்தானிய்யா" என்பர்.)

IV. அந்தமாஹியத்து, தனது தோன்றுகைக்குத் துணைகொண்டுநின்ற தென்றால், அது, துணைநின்றபொருளை வணங்குதற்கு அருகமாய்த்தான் வணங்கப்படுதற்கு உரிமையில்லதாய்ப் பிறவும் பயந்து ஒழியுமாதலின், அது தன்னால் தானாயிருத்தற்றன்மையினதாயிருத்தல் வேண்டுமென்பதூஉம் (இதனைவேதபாடையார் "கியாமுஹு-பினப்ஸிஹி" என்பர்.)

V. அந்தமாஹியத்து, சிருட்டிகளின் வியற்கையாகிய, உசும்புதல், ஒடுங்குதல், தங்குதல், கலக்குதல், நிலைமாறுதல், விகாரப்படுதல், வகுக்கப்படுதல், அளக்கப்படுதல், வலயிடம், முன்பின், மேல்கீழ் எனும் திசைப்படுதல், உருவப்படுதலாதிய தன்மைகளுக்கு ஒரு சிறிதும் கீழுருமாயின் இறைமைத்துவத்திற்குரிய எல்லாத்தூய்மைத் தன்மைகளும் இழவுபடுமாதலின், ஒருவிதத்திலும் சிருட்டிகளுக்கு நிகராது எல்லாவிதத்திலும், அவைகளுக்கு விகாரமாயிருக்குந்தன்மையினதா யிருத்தல் வேண்டுமென்பதூஉம் (இதனை வேதபாடையார், "முகாலிபதுன் லில்ஹவாதிதி" என்பர்.) இலக்கணமென்பது மெய்யுணர்ந்த தூய்மையோரது கருத்து. இவ்வாறுகூறிய இத்திலக்கணங்களின் விஸ்தாரங்களை விரிப்பின் இஃதொரு அகலக்கிரந்தமாய் முடியுமென்றஞ்சி விரித்திலம்; விரிவேண்டினோர் எமது "அல்முல்ஹுல விளக்கம்" என்னும் கிரந்தத்தில் காண்க.

நேயர்காள்! காரியத்தன்மையினதான உலகலக்கணங்களோ மேற்கூறிய இலக்கணங்களின் எதிரிடைத்தன்மையின தென்று கருதுவீர்களாக.

(2) வஜூ. குணத்தன்மையைக் குறித்து, அது எவ்வகைப்படும்.

I. குணாசம்பந்தமான ஸிபாத்துடையதாயின் செயற்கையுணர்வினதேயன்றி, இயற்கை யுணர்வின தென்பபடாது நம்பாலாரின் குணத்தையொத்து ஆதிவுபடுமாகலின் குணாசம்பந்தமின்றி இயல்பினையே வெளிக்காட்டுந்தன்மை யின்றியமையாததா யிருத்தல் வேண்டு மென்பதூஉம் (இதனை வேதபாடையார் "ஹயாத்து" என்பர்) இது குணாசம்பந்தியன்று.

ஹயாத்தென்பபடுவது குணாச்சடசம்பந்தப்படுத்தி அவ்விருபாலர்க்கிடைநிற்கும் நியதியினை தெனப்படும். இத்தகைய இலக்கணப் பொருத்தமுடைய நேர்சொல் ஆரியம், திராவிடமாகிய பாஷைகளில் காணுமையினுமே வேதபாடையில் கண்டபடி "ஹயாத்து" என்றுகூறினும், 'நஃபு' என்பது, ஜீவன், உயிர், ஆத்மா, பிராணன் என்பனவாகக் கூறப்படுவனவற்றிற்கு ஒப்பமுடிந்ததோர் சொல்.

நேயர்காள்! ஹயாத்தென்பது ஜீவச்சடத்துடன் சம்பந்தப்படுத்திநிற்கும் நியதியாதலே, அந்த முதற்பொருளின்மாஹி



யத்திற்குரிய ஹயாத்தோ அத்தன்மை யினதென்றுகருதற்க. ஆனால் மனுஷசுபாபத்திற்குரிய அறிவிற்கு ஒருவாறு புலப்படுமாறு ஜீவத்தன்மை அந்தமாஹியத்திற்கு உளதென்று தோற்றுவிப்பான், அங்ஙனம் "ஹயாத்து" என்றுகூறுவாருமினர் மெய்க்கண்டுணர்ந்த பெரியோரென்றுணர்க.

II. அந்தமாஹியத்து, அறியப்படும் வஸ்துக்களின் உருவத்தின்சாய்கை புத்தியினிடத்து வயப்படுதலேயுமன்றி உபகருவிகளினுல் பிளவுண்டு காலம், திரையின்மை, அறியப்படு பொருளாதியன வேண்டிப் பூரணப்படாது இழவுபடும் நம்போல்வாரதறிவு ஸுலி அறிவைப்போலாது அறியப்படுபவைகளின்றி அறிவே அறியப்படுபவைகளாய் அறிவும் அறியப்படுபவைகளும் பிளவின்றியொன்றாய் அகம்புறம் என்பனவாதிய திரையற்று அறியப்படுபவைகள் யாவும் முன்னிலைத்தன்மையினதா யறியுங்குணத்தன்மை இன்றியமையாததா யிருத்தல் வேண்டுமென்பதூஉம் (இதனை வேதபாடையார் "இல்மஹு-ஜஓரி" என்பர்.)

III. அந்தமாஹியத்து, ஒருசிறிதும் உவக்கப்படாது எல்லா விதத்திலும் வெறுப்புறதற்கு ஹேதுவாய் எதிரிடையுள்ளதாய் ஒரு விதத்திலும் திருந்தப்படாது எல்லாவிதத்திலும் திருத்தம் வேண்டி விதத்திலும் திருந்தப்படாது எல்லாவிதத்திலும் திருத்தம் வேண்டி வரம்புபட்டு நிலையும் நம்பாலாரது சிந்தனைபோலாது ஒருவிதத்திலும் வெறுப்புறுதற்கு ஹேதுவாய் எதிரிடையில்லதாய்ச் சிருட்டிப்பொருள்களின் (முசவ்வஜுத்துகளின்), தோற்றம், உசும்புதல், ஒடுங்குதலாதிய விடயங்கள்யாவும் இன்னின்ன விதியினவாமென்று ஒரு சிறிதும் திருத்தம்வேண்டாது எல்லாவிதத்திலும் திருந்தப்பட்டுள்ள தனது ஆணையின் வரம்புபடாநிறூஉம் சிந்தனை எனுங்குணத் தன்மை இன்றியமையாததா யிருத்தல் வேண்டுமென்பதூஉம் (இதனை வேதபாடையார் "இறதா" வென்பர்.)

IV. அந்தமாஹியத்து, இருதாவழிச்சென்று சிறிதும் முடித்தற்கு இயலாது பெரிது மிடர்ப்படுதலேயுமன்றி, ஒருசிறிய செய்கைசெய்யினும், இலகுபிரயாசை யென்பதின்றியமையாத நம்பாலாரது "தத்துவம்" போலாது "இறதா" வழிச்சென்று, அதற்கு ஒரு அணுத்துணையும் விகாரமின்றி இலகுபிரயாசை யென்பதற எவற்றையும் முடிக்கும் சக்தி, அல்லது தத்துவம் எனும் குணத்தன்மையின்றியமையாததாயிருத்தல் வேண்டுமென்பதூஉம் (இதனை வேதபாடையார் "குதறத்து" என்பர்.)

V. அந்தமாஹியத்து, எழுத்து, ஒலி, ஓசையை விலக்குதற்குரிய நிரையின்மை, காலம், திசைமுதலிய விடயங்களின்றிக் கேட்கலாற்றும் நம்பாலாரது, "ஹற்ஸாதுலி" கேள்விபோலாது எழுத்து, ஓசை முதலியவைகளேயுமன்றிச் சித்தனை பூசாட்டமாகிய வியதிவேண்டாது, கேட்குங்கேள்வி எனுங்குணத் தன்மையின்றியமையாதிருத்தல் வேண்டுமென்பதூஉம் (இதனை வேதபாடையார் "ஸம்அஹுஸஜதி" என்பர்.)

vi. அந்த மாஹியத்து, உருதோற்றம், காலம், தலம், எதிர்வு, நாரமின்மை, அவ்வையின்மை, நிரையின்மை ஈறும் வரம்புபடுமியதியோடு அகம் புறம் எனும் பேதம்வேண்டி ஒருவாறு நோக்குதலென்னும் நம்பாலாரது பஸறுலி, காட்சிபோன்று பிழைக்குமாதலின் உருதோற்ற முதலியன வேண்டாது முகவ்வஜூத்துகளின் ஒவ்வொரு அணுப்பிரமாணங்களையும் அகம் புறம் என்னும் பேதமின்றிக் காணுங் காட்சியெனும் குணத்தன்மையின்றியமையாதிருத்தல் வேண்டு மென்பதூஉம் (இதனைவேத பாடையார், "பஸறுஹு ஸஜதி" என்பர்)

vii. அந்த மாஹியத்து, அனுத்திரர்களாக ஒலிக் கூட்டங்கள் திரண்டு ஓசை, யெழுத்து எனுமியதியோடு செவிப்புலன்களுக்கு வயப்படும் நம்பாலாரது சப்தம் போன்று இருக்குமாதலின், செவிப் புலன்களுக்கு வயப்பாடின்றி, பொருண்மையமாய் அக்ஷரயோசையற்றவாக்கிய மென்னும் குணத்தன்மை யின்றியமையா திருத்தல் வேண்டு மென்பதூஉம் (இதனை வேதபாடையார் "கலாம்" என்பர்)

viii. அந்த மாஹியத்து, முதற் காரணம் துணைக்காரணமாகியபல காரணங்களாலே புடைப் பெயர்வோடு வரம்பு படப்புரியும் நம்பாலாரது கிரியைபோன்று குறைவுபடு மாதலின், குறி, குணம், நாமம், முதற்காரணம், துணைக்காரணமாகிய ஒரு விதபமுமதுவுமின்றிச் சொல்லற்று இல்லாமையாய்க் கிடந்தனவற்றை, இல்லாமையினின்று, மாஹியத் துள்ளனவாய்ப் புடைப்பெயர்வாகிய கிரியைகளின்றிச் சிருட்டிக்குஞ் சிருட்டித்துவமெனும் குணத்தன்மை யின்றியமையாதிருத்தல் வேண்டு மென்பதூஉம் (இதனை வேதபாடையார் தக்குவீன் என்பர்) மலம் போக்கிய மஹமான்கள் கண்டுணர்ந்த உண்மை.

262



இங்ஙனமாகக் கூறப்பட்டுள்ள குணத்தன்மைகளின் உன்னதத் தன்மைகளை விரிப்பின் இஃதொரு வேதாகமத்து அகலக்கிரந்தமாய் விரியுமாதலின் நுண்ணிதினுணர்வார்க்கு இது போதுமென்று விடுத்தாம். உய்த்துணர்க.

(3) வது நாமத்தைப்பற்றி; அது மூன்றுவகையினதாய்க் காணப்படுகின்றது.

(1) அந்த மாஹியத்து, தன்னுற்றானே தனக்கியன்ற பெயரெனும், இயற்பெயரின்றியமையாததாயிருத்தல் வேண்டுமென்பதூஉம்,

ii. அந்த மாஹியத்து, தனக்கு இன்றியமையாக் குணநாமத்தினதாயிருத்தல் வேண்டுமென்பதூஉம்,

(iii). அந்த மாஹியத்து, கொடைப்பெயர், அருட்பெயர், பெருமைப்பெயர், அளிக்கும் பெயர், படைக்கும் பெயர், துடைக்கும் பெயர், வளர்க்கும் பெயர், தலைமைப்பெயர் இறைமைப்பெயர் ஆகிய உன்னத காரணப்பெயர்களுடையதாயிருத்தல் வேண்டுமென்பதூஉம் பெறப்படுகின்றது.

ஆகவே நேயன்மீர்! அந்த மாஹியத்திற்குரிய இயற்பெயரோ அந்த மெய்ப்பொருள் வேதத்தினாலே நம்பாலார்க்கு அறிவித்தாலன்றி யறியப்படாதென்பது எதிர்வாதமற்ற உண்மை. அத்தகைய பெயரோ "அல்லாஹ்" எனப்படும். இதனாலே அந்தமுதற்பொருட்குரிய மாஹியத்தே யறியப்படுமன்றி அஃதல்லா வேறுபொருள் அறியப்படாதென்பது வேதாந்தம். ஆதலின் "அல்லாஹ்" என்பதே அந்த மாஹியத்தாய், அந்த மாஹியத்தே "அல்லாஹ்" ஆய், அது, இது, எனும் பிளவின்றி இரண்டும் ஒன்றாய், ஒன்றுக்கு மற்றொன்று பொருளாய் நிற்குநீர்மையின தென்பது பெறப்பட்டது. என்றாலும் நேயன்மீர்! அந்த முதற்பொருள் தனக்குரிய குணநாமலக்கணங்களை, வேதத்தினாலும் நம்பாலார்க்கு நன்கு விளக்காநின்றது. அது வேதத்தினாலே புலப்படற்பாலதேயாம். இவ்வினமெல்லாம் விரிப்பின் வரம்பின்றிப் பல்குமாதலின், நுண்ணறிவினோர்க்கு ஒருவாறு நிரம்புமென்று இம்மட்டாக விடுக்கின்றோம். உய்த்துணர்வீர்களாக.

ஆகவே நேயன்மீர்! நாம் விசாரிக்கப் புகுந்த முதற்பொருள், இத்தகைய வரம்புபடாத வுன்னதத் தன்மையின வெல்லாம் நிரம்

பலவும் பெற்றுச் சிறப்பிற்சிறந்தோர்ப் பொருளாய் விளங்கு நீர்மையினதென்று மெய்யாகவே நாம் உணர்வோமாயின், அதற்கு ஸ்திரீயையாவது, குமாரனையாவது கற்பித்து அப்பொருளின் உன்னதத் தன்மைக்குப் பழுதுவருத்துவோமா? ஐயோ! நாய், நரி, பேய், பன்றி முதலிய அநந்த ஜங்கமங்களின் அவதாரங்களை அப்பொருளுக்குக் கற்பித்து அதன் நிர்விகாரத் தன்மையை இழுக்குறச் செய்வோமா? அந்தோ, உயரவானத்திலாவது அதன் இனத்திலாவது, இழக்கே பூமியிலாவது அதன் இலித்திலாவது உள்ள எந்த சாயலையாவது அல்லது எந்த சாயலுக்காவது அந்த அரும் பொருளை நிகரக்கூறி அப்பொருளின் ஒப்பறுந் தனிமைக்குப் பங்கம் வருத்துவோமா? அ! ஆ!! பரிசுத்த ஆவி, இயேசு, பிரமா, விஷ்ணு, மஹாதேவன், ஆகிய இருட்டிப்பொருள், அதாவது ஜங்கமங்களும் அப்பொருள்தானென்றும், அவைகளுக்கும் அம்மெய்ப்பொருட்கும் பேதமில்லையென்றும், நாக்கூசாது கூறிமுதற்பொருளாகிய அம்மெய்ப்பொருளின் தனித்தன்மைக்கு ஊறுவிளைவருத்துவோமா? ஐயன்மீர்! நமது பிதாக்கள், பன்றியாய்ப் பிறந்தாரென்றாவது, பன்றியின் சாயலுக்கு அவர்களின் சாயலை ஒப்பாகக் காட்டியாவது தகுதியல்லாத் ஒரு பொருளும் நமது பிதாக்களும் ஒன்றேயென்றாவது அசுத்த பிரசங்கிகள் நமது குமாரர், குமாரத்தி, மனைவியென்றாவது நிறீஇ ஒருவன் ஒரு புத்தக மெழுதியிருப்போமாயின் அவனைச் சும்மாவிடுவோமா? அங்ஙனம் எழுதிய புத்தகங்களை வாசித்து நறுமணம் புகைத்துச் சர்க்கரை, பழம், புஷ்பம், வழங்கி மகிழ்ச்சி கொண்டாடுவோமா? கொண்டாட மாட்டோமே. அங்ஙனமாக ஐயா! கடவுள் பன்றியாக அவதாரம் செய்தாரென்றாவது சிலுவையில் அறையுண்டு குய்யோ முறையொன்று கூச்சலிட்டு உயிர்துறந்தாரென்றாவது ஆவியான ஆவேசமாகக் கர்ப்போ வின்றேஜ்பிதெல்லாம் பிரசன்னமாயிப் பிறந்திருந்த ரென்றாவது, காமவிகாரம், இருட்டு, சென அலங்கோலமாகிய ஆபாசப்பட்டு நின்றாரென்றாவது, எழுதப்பட்டுள்ள புத்தகங்களை வேதாகமம் என்று வாசித்து அச்செய்கைகளை நெருஞ்சுவத் தூபங்களோடு, சர்க்கரை, பழம், புஷ்பங்கள் வழங்கி வருவோமா? காரிகம் படைத்த இக்காலத்தில் அக்கொடிய வழக்கங்கள் அற்றும் சேர்த்தியுமாகப் பிரகாசிக்குமா?

ஐயன்மீர்! த. ஆறுமுகம் வைத்தூர்பிள்ளை, என்பவர், எதிரிக்கு அசௌகரியத்த மென்று, மூக்கை அரிந்து முன்னவினன்றன் கணு





யோடொப்ப எவ்வளவுந்தாலும் வாட்டுமென்று "விக்கிரக ஆராதனம் முக்கியமானது" என்ற நாமத்திலொரு நூலெழுதி விட்டிருக்கிறார். நமதுநேயர்கள் மீதுற்ற அன்புகாரணம் பற்றி "விக்கிர காராதனைச் சூறாவளி" என்றொருவியாசம் எழுதுகின்றோம். அதில், அறிவின்மிக்க நேயர்கள் போதுமாகும் வரையில் நன்னியதியைப் பெற்றுய்வார்களென நம்பமாட்டுவேம். இங்க.

எமது நேயர்காள்! நமது முதற்பொருளாகிய பெரும்பொருளை அதற்குரிய இன்றியமையாத குணநாமலக்கணங்களொருங்கே நிரம்பக்கூறி ஜெபிப்பானொருவன் அரும் பொருளாகவே யிருப்பனன்றோ? அது பற்றி, அங்ஙனமெல்லாம் ஒருவாறு நிரம்பக்கூறி ஜெபித்தானெனும்படி அப்பொருள் தனது அன்பினாலே ஒரு ஜெபச்சொல்லை நம்பாலார்க் கெல்லாம் கொடுத்திருக்கின்றார். அதை ஆகமச் சுருக்கத்துடன் இதோ எழுதுகின்றேம். நன்று கவனிப்பீர்களாக.

ஐயன்மீர்! சர்வதயாபரக் கர்த்தாவோ வெனின்; தன்னுடைய சேனைகளாகிய நம்பாலார் சகல பொல்லாங்கான கிரியைகளையும் புறம்பே யொதுக்கிச் சகல நன்மைகளையுமடையும்படி, தேவர்கள், ஆவிகளாகிய அரூபதேகிகளை நம்மிடத்து அனுப்பித்தனது வல்லமையை யாகிய அரூபதேகிகளை நமக்குக் காண்பித்து, ஒழுகவேண்டுவன இன்னின்னவையெனப் போதிக்குமாறியற்றுமாயின் அவைகளைக் கண்ணுற்ற நாமெல்லாம், சத்தியமாக அம்மகத்துவங்களைத் தனையும் தேவதூதிகளான அரூபதேகிகளின் தத்துவங்களென்றெண்ணித் தெய்வப் பக்தர்களாகாது, அரூபதேகிகளின் பக்தர்களாகவே முடிபெய்துவம், அல்லது, அது கர்த்தாவினது வல்லமையோ, அரூபதேகிகளின் வல்லமையோ, என்று ஆசங்கித்து வெறுத்தொழிகுவம். ஆகவே நம்பாலார் அங்ஙனமாகச் சிரமடைவு இழவுபட்டொழிவரேயன்றி வேறுபயன் பயவாவே, மனிதசுபாபலக்கணமென்பதுபற்றி; நமது சகோதரர்களில் பராபரன் தாளுடையவர்களுக்குத் தனது சப்தத்தின் பொருளைக் கேட்கச் செய்தும் மனிதர்களாலே முடியாதன வெல்லா முடிப்பிக்கும் வல்லமையைக் கொடுத்தும், தனது நாமத்தினாலே அனுப்பப்பட்ட தனது தூதரை நம்மிடத்து அனுப்பினால், நாம் நமது சகோதரர்களின் சக்தியைமுற்ற உணர்ந்தவர்களாகலின், ஓ! நமது சகோதரனுக்கு இத்தகைய வல்லமை கொடுத்தவரே புகழ்க்குரியார், என்று நாக்கூசாது கூறி நன்முடி

பெய்துவோம், அல்லது தேவனாசனைசெய்தவர்களாக முடிபெய்துவோம். அதுபற்றி இருதரக் கூலியையும் பெறுகிறதியாகுமென்பது நன்னிதியுணர்ந்தார்க்கு நன்கு விளங்கற்பாலது. இதனாலே தேவர்கள், ஆவிகள், ஆகிய அருபதேகிகள் கர்த்தரது தூதர்களாக நம்மீது அனுப்பிக்கப்படாரென்பதுபெறப்பட்டது. ஆகவே அங்ஙனமாக நம்பாலார்மாட்டு அனுப்பிக்கப்பட்டார், ஆதாம் அல்லது ஆதம், நூஹ் அல்லது நோவா, லூத்து அல்லது லோத்து, இப்ராஹீம் அல்லது ஆப்ரகாம், இஸ்மாயீல், அல்லது இஸ்ரவேல், மூசா அல்லது மோசே, ஜகரியா, ஈசா அல்லது இயேசு, முகம்மது, சலவாத்துல்லாஹி அலைஹிம் இவர்களே. நேயர்காள்! இவர்களில் ஆதம்முதலாக முகம்மது இறுவாக நபிகளாக அனுப்பப்பட்டாரின்தொகை இலக்கக்கணக்காயினவென்று கொள்ளப்படுகின்றது. நிற்க.

[illegible]றாக நம்பாலார்மீது அனுப்பப்பட்டநபிகள் ஒவ்வொருவ[illegible]வர் பாஷையில் அம்மெய்ப்பொருளின் எல்லாதத்துவங்களை[illegible] ஒருவாறு நிரம்பக்கூறி ஜெபித்தானெனும்படியாக ஒரு ஜெ[illegible]லோகத்தை யருளியிருக்கலாம். அங்ஙனமாகவே எங்கள் நபிகள்பிரான் அவர்களால் எங்களுக்கு வேதபாஷையில் ஒரு ஜெபசுலோகம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அது இத்தன்மையினதென்பது நன்குவிளங்குமாறு கூறுகின்றாம். நன்னிதியுணர்வீர்களாக. அதுவருமாறு:—

“ ஹிஜாசு தேசத்திலே, எங்கள் நபிகள்பிரான் உள
“ ளத்திலே விளங்காநிற்கும், கர்த்தாவினிடத்திலே,
“ பெறப்படும் சுவிசேஷப்பிரசங்க ஆரம்பத்திலே, பிரம
“ பிய சம்பத்திலே, கல்த்திலே, தனத்திலே, அறபியா
“ னுடை சுலோகத்திலே, உயரியமக்களாயினோர் பலர், ஒருங்
“ குதிரண்டு, பூர்வத்திலேயமைந்துள்ள நமது மார்க்கத்தி
“ லே கேட்டிராதன வெல்லாம் நமது சனத்திலே தோன்
“ றிய இத்தவாலிபர் பிரசங்கித்து, சனங்களைத் தம்வயப்
“ படப் புரியாநிற்குங் காரணத்திலே, பலவாறு இரத்த
“ த்துளிகள் பிரவாகப்பட நேருமே, அங்ஙனம் படாது
“ காப்பது பெரியோர்கடனே; ஆகலின் அந்நபியை விளி



“ த்து அவரது கற்பனைகளில், நாம் ஒருதொகையைச்
“ சார்ந்து நடப்பேமென்றும் நமது கற்பனைகளில் ஒரு
“ தொகையை அவர்சார்ந்து நடக்கவேண்டுமென்றுங்கூறி
“ ஒரு வழிப்படுத்துவதே நீதியெனும் வரம்பெய்தி ஓர்
“ அவையகத்திலே நபிகள்பிரான் அவர்களைப் பிரசன்ன
“ மாகும்படி வேண்டினார்கள். அங்ஙனமே, பெருமானார்
“ உத்தயமாகவே; அக்குடும்பத்திலே யியற்கையாயுள்ளவங்
“ கனைப சாரத்திலே அனுந்துணையும், பழுதின்றியுப
“ சரித்துத் தமது உள்ளக்கிடக்கையை வெளியிற்கூறக்
“ கேட்டு உயரியசற்குணத்தாரெனும் நபிகள்பிரான் ஆந
“ ந்த புன்முறுவலெய்தி அங்ஙனமேயாகுக; ஆயினும்
“ பெரியீர் கூறியபடி யான் ஒருதொகையான கற்பனையை
“ உங்களின் அரியபுயங்களிலே சுமத்தற்குச் சிறிதும் விரு
“ ம்பிலன் ஏகேகற்பனையே யொழிய;
“ என்றாலும், எனது பெரியோராகிய நீவிர் விதிக்
“ கும் கற்பனைகள் எத்துணையானதாயினுமென்னை அத்
“ தனையும் யான்சுமந்துதீரப் பின்னில்லேன் என்று மது
“ ரம்பழுத்த மென்மொழி கூறக்கேட்ட பெரியோரனை
“ வரும், உளமகிழ்ந்து, உடல்பூரித்து, மயிர்சிலிர்ப்ப, ஆ!
“ இவ்வாலிபர், அகங்காரம், பொறாமை, காமமாகிய மலங்
“ கள் கழிந்தோர்ந்து தவத்தாலும், ஒழுக்கத்தாலும், நாக
“ ரீகத்தாலும், வணக்கத்தாலும், சிறப்பிற்சிறந்த ஓரால
“ லோகஸ்தரென நன்குபுலப்படுகின்றார் என உண்மை
“ கூறி, நபிகள் பெருமானைநோக்கி, எங்கள் கண்மணி!
“ நீவிர்கற்பிக்கும் ஒரேகற்பனையைமாத்திரம் சுமக்குமியா
“ ங்கள், உம்மீது பலகற்பனைகளைச் சுமத்தல் எங்ஙனம்
“ நீயதியாகும்? ஆகாதெனவே, தாமும் எங்கள்மீது சில
“ பலகற்பனைகளைச் சுமத்தல் வேண்டுமென்று விரும்பினார்
“ கள்; அதுகேட்டு, ஐயன்மீர்! உங்களுக்குயான் ஒரே
“ கற்பனை உபதேசிக்க ஏவப்பட்டேனேயன்றி நீவிர்விரு
“ ம்புமாறு யானே சிலகற்பிக்குமாறியன்றேனல்லேன்.

“ஆனால் அவ்வொரே கற்பனையை அங்கீகாரஞ் செய்தீராயின், அதன்பயனாகச் சில கற்பனைகளை நீவிராகவே கைக்கொள்ள உடன்படுவீர்கள்” என்று எம்பெருமான் கூறக்கேட்ட, குறைஷிகளின் தலைவர்களான வேதபாடைவித்துவ சிரோமணிகள் அனைவரும், எம்பிரானுடைய உன்னதவசனங்களை நன்காராய்ந்து, “போதகீர்! நீவிரோது மவ்வொரே கற்பனையை, எங்களுக்குத் தருவீராக” என்று வேண்டினார்கள். அது செவிக்கொண்ட நபிகள்பிரான், அக்குறைஷியங்குலக்கட்டிளைஞர் நடுவிலே, “ஓர் காரணக்குரிய வுதயஞ்செய்தாலன்ன எழுந்துநின்று சாஷ்டாங்கம் செய்யப்படும் சுதந்திரத்தன்மைக்கு உரியான் அல்லாவேயன்றி வேறில்லை என்னும் பொருணிறைந்த லாஇலாஹ இல்லல்லாஹு என்ற வேதப்பாடைசுலோகத்தைத் தமது திரணங்களொடும்படி வீசினார்கள். அக்கிரணங்களோ, குறைஷி குலவித்துவான்களின் அகக்கண்களாகிய மனங்களிலே சென்று தாக்கியவுடனே, ஓ, சொல்லிலானாத பேரொலியாச், “ஆச்சரியமே! ஆச்சரியமே!! ஆச்சரியமே!!!” என்று கூச்சலிட்டு “ஓ! முகம்மதே! என்ன சொன்னீர்? என்ன சொன்னீர்? வானலோகங்களும், அவற்றினிலங்களும் பூலோகங்களும் அவற்றினிலங்களுமாகிய அளப்பரிய ஸ்தாவர ஜங்கமங்களைத்தையும் இல்லாமையினின்று ஒன்றுக்கொன்று ஒருசிறிதும் ஒவ்வாத பலவிகாரரூபங்களாய் ஒப்பற்ற வினங்களாய் பலவேறுபாடான, குணத்தன்மையினவாய், ஒன்றுக்கொன்று ஒவ்வாது பகைப்பட்டு நிற்குமல்லித்தினவாய பெரிதாய்ச்சிறிதாய், ஊருதல், நடத்தல், பறத்தல், நீந்தல், வளர்தல், அசைவுற்று நிற்றல் அசைவற்று நிற்றலாகியதரத்தினவாய், அகப்புறக்கருவிகளா லறியப்படுவதும் படாதுமாய், படைத்து அவ்வித்தன்மைக் கியன்றவாறு உணவளித்து, சூடு, குளிர் எனப்படுவதாலும் பிறப் பகைப்பொருளினாலும் துன்பு



றாது ஒன்றை மற்றொன்றினின்று காத்து, வேண்டப்படுவன வெல்லாம் வேண்டும்பொருட்டு, காலந்தருணம், சந்தர்ப்பமாகிய போதெல்லாம் கொடுத்துதவி சிட்சாரட்சை ஆதிய பிறவெல்லாமும் செய்தாளும் வல்லனாம் சிந்தனை தத்துவம் கேள்வி காட்சியாகிய குணங்களும் பிறவெல்லா மான்மியங்களும் உடையது ஒன்றேயென்றும் அதுவே அல்லாஹ் என்றுமன்றோ சொல்லுகின்றீர். அந்தோ! இவ்வாறான சிறப்பிற்றீர்ந்த பெருங்காரியம் எல்லாம், ஒருபொருளினாலே யெங்ஙனமியலும்? எங்ஙனமுடியும்? இது ஒருவாற்றாலும் பொருந்தா மொழி” என்று கூறியகன்று விட்டார்கள்.”

நேயன்மீர்! இத்தேசத்திலே, இக்காலத்திலும் பலதெய்வங்களைச்சாதித்தெய்வமென்றும், சனத்தெய்வமென்றும், குலத்தெய்வமென்றும் குருத்தெய்வமென்றும் திண்ணைத்தெய்வமென்றும், தேசத்திற்கொருதெய்வமென்றும், தெய்வக்குமாரத்தெய்வமென்றும், சிருட்டித்தெய்வமென்றும், காக்குந்தெய்வமென்றும், அழிக்கும் தெய்வமென்றும், தெய்வத்துக்குப் பற்றிடமான தெய்வமென்றும் கொண்டாடிக் கூத்தாடி வருதலே அந்த குறைஷிகளின் கூற்றுக்குப் பெரிதும் சான்றாகின்றது. இக்கொடிய வழக்கங்கள் இந்நாகரீகம் படைத்த காலத்திலும் ஒழிந்த பாடில்லை. நாட்டுக் கோட்டையொழிந்தாலொழியு மெனலாம். நிற்க.

எமது அன்புள்ள நேயர்களே! சற்று கவனிப்பீர்களாக. எமது பெருமானார் “வணங்குதற்கு உரிமைபூண்ட பொருள் ஒன்றே” யென்று கூறினார் களேயன்றிக் குறைஷிகள் விவரித்துக் கூறிய தொன்றுங் கூறினாரில்லையே. ஆனால் “இலாஹ்” என்கிற வேதபாடைச் சொல்லுக்கு, அப்பாடை நிபுணர்களாகிய குறைஷிகள் அத்தனைப் பொருளும் பயின்றார்களென்பதும், அக்காலத்தாராகிய குறைஷிக்குலப் பத்தராகியோர், பல கடவுண் மார்களின்றி இப்பெரிய உலகம் ஆளப்படுதற்கு ஒருசிறிது முடியாதென்னும் கருத்தினராகப் பல கடவுண்மார்கள்

வேண்டுமென்பதாகும், அங்ஙனமே பல கடவுண்மார்களை வணங்கி வந்தார்களென்பதூஉம் அவர்களால் வணங்கப்படுங்கடவுண்மார்கள் புராணத்துமாறிய குணங்களின் தன்மை யிழக்கப் பட்டவர்களாகவே உளம்பற்றினாராய் இருந்தார்களென்பதூஉம், பிறவும் பெறப்படுகின்றன. நேயன்மீர்! அதுபற்றியே, தன்னை சுதந்திரமாயே வணங்கப்படுதலின் பொருட்டன்றிப் பிறவற்றிற்குக் கொடுத்துவரும் கொடியவழக்கங்களை யொழித்து உய்யும்படியாகவும் தன்னை எல்லாக் குணகாமலங்களையுங்கோர்க்கூடி ஜெபித்தாரென்னும்படியாகவுமே அந்தஜெபசுலோகத்தை ஒரு தானுயகருத்தாகக் கற்பித்ததாக நன்குபுலப்படுகின்றது. நேயர்காள்! அவ்வாறான தத்துவங்களமைந்துள்ள சுலோகத்தை நுங்கள் வேதத்திற்கண்டு கேட்டிருக்கின்றீர்களா? இல்லை. அது இயேசுநாதர், சுவிசேசம் பிரசங்கிக்க ஆரம்பித்து முடிவுபெற்றதோ ஏறக்குறைய மூன்றுவருடமே; ஆயினும் அம்மூன்று வருடகாலத்திலே இயேசுநாதர் ஒருவராதும் விசுவாசிக்கப்படாது, வீணே சிலுவையில் அறையுண்டு உயிர்த்துறந்தாரென்பது நுங்கள் வேதப்பிரமாணம். அந்தோ! அந்நாயகர் கொலைப்பாதகர்களால், சிலுவையில் அறையுண்டு ஜெலக்காரர்களாக்குழுத்திற்கு தொங்கவிட்டுக் கிடந்ததாகச் சொல்லுமெப்படி அந்தக்காலத்திலே, தொங்கவிட்டுக்கிடக்கும் இயேசுவைப்பார்த்து ஐயோவென்று இரங்கப்பட்டவர் ஒருவருமில்லை. வழியிற் கடந்து போகும் அவ்வியோர்முதல் எளியோர்வரை எல்லாரும், இயேசுவின் பிரேதத்தைநிந்தித்து, அடா! பரிசுத்த ஆலயத்தையிடித்துவிட்டு மூன்றுநாளில் கட்டுகின்றவனே, இப்போது இறங்கிவா பார்ப்போம்; கடவுளின் குமாரனென்றாயே அடாய், அப்படியானால் உயிர்த்துவாப்பார்ப்போமென்றும், இதுவன்றிப் பிறவும் சொல்லிப்பழித்துவிட்டுப் போவார்களென்பதும் வேதம்.

நேயன்மீர்! ஒருகொடியபாதகனுயிருந்து கழுமரத்தில் தொங்கவிட்டுக் கிடந்தாலும், பார்க்கிறவர்கள், ஐயோபாபம் யார்பெற்றமகனோ? என்றும், ஆண்டவனென்றும் பெருமூச்செறியாநிற்பார்களே. அந்தக்காலத்திய ஜனங்களோ அப்படிசெய்ததாகக் காணப்பட

271



வில்லை, இதனாலே அக்காலத்தினர் அந்த இயேசுவின்மேல் வைத்திருந்த வெறுப்பும் பகையுமோ மிகவும் கொடியதென்று காணப்படுகின்றது. இவ்வாறான கொடியபகையின் கடலகடுவே இயேசுநாதர் செய்த சுவிசேஷமோ கடல்வாய்ப்பட்ட மணற்கட்டியேயன்னைக்கரைந்துபோயிற்று என்பதற்கு என்னதடை.

நேயன்மீர்! இத்தகைய காரணத்தினாலே பெருமானார் கடவுளால் தத்துவம் பெற்றுவந்து செய்த சுவிசேசங்கள், ஒன்றும் ஒரு விசுவாசியினாலாவது போற்றப்படாதும், மனனஞ் செய்யப்படாதும் வாழாயிழவுண்டனவென்பதற்கு வேறுசாட்சி வேண்டியதில்லை., இதனாலே இயேசுநாதர் கொண்டுவந்த ஜெபசுலோகம் எமது நேயர்களுக்குக் கிடைக்கவில்லை. அல்லாமலும் அவர்களுக்குக் கடவுளனுப்பின தெய்வசப்தங்களான சுலோகங்கள் வீணேயொழிந்து போய்க் கடைசியாய் மத்தேயு, மார்க்கு, லூக்கா, யோவான் என்பவர்களாலெழுதப்பட்ட சரித்திர விதமாய் முடிவுபெற்றன என்பது நேயர்களுக்கு மறையவேண்டாம்.

நேயர்காள்! நாம் விசாரிப்பான் வேண்டியெடுத்துக் கொண்ட முதற்பொருட்கு, இன்றியமையாது வேண்டிய இலட்சணம், சகுணம், நாமம் இனைத் தெனயாம் எடுத்தாண்ட சுலோகங்களின் உள்ளுறை பொருள்களை இங்ஙனம் விரிப்பின்யாம் எண்ணித் துணிந்ததனால் ஈண்டுமுடியாது பல்கும், அதுபற்றி நுண்ணிதினுணர் வார்க்கு நன்கு முடியுமென்னும் ஒரு தலைத்துணி பெய்திவிடுத்தாம்; ஆகலின், நன்கு கவனித்து, ஒரு தனைய பெருமானை எண்ணித் துணியாது வாயில் வந்தனவெல்லாம் பிதற்றி வீணே நிரயம் புகத் துணிந்தாரை நீங்கிக்கொள்வீர்களாயின் நீவீர்கள் பாக்கியவான்களே. ஆமீன்.

முற்றிற்று.

☞ சுங்கம் என்பது களவு என்றும் மீன் என்பது நட்சேத்திரமென்றும் கொள்க.

# கிறிஸ்துமத தீபிகை

## திருத்த அட்டவணை.

| பக்கம். | வரி. | திருத்தம். | பக்கம். | வரி. | திருத்தம். |
|---|---|---|---|---|---|
| ௬ | 11 | பிரத்தியக்ஷப்பிர | ௬௭ | 20 | வுத்தரவின் (இவ்வனமே, பிறவருவனவுங் கொள்க) |
| ௯ | 9 | வியரிகம் 'பால | | | |
| ௧௧ | 3 | பரீஷ்காரமாய்க்கா | | | |
| ,, | 15 | வம்சத்தைக்குறி | ௭௨ | 30 | வார்த்தை |
| ௧௨ | 9 | குறித்துப்பேச | ௭௩ | 32 | ஏசாயா |
| ,, | 11 | இர்தக்காக | ௭௪ | 23 | கூறுவானுயினேர் |
| ௧௪ | 3 | கூறியபடி | ௭௭ | 30 | நேயர்காள் |
| ,, | 14 | என்பவனை | ௮௦ | 1 | கண்டவன் |
| ௧௫ | 4 | பெருமைபடு | ௮௫ | 8 | (ரபி) |
| ௧௬ | 8 | அந்தப்பிள்ளை | ௮௭ | 11 | இஸ்ரவேலர் |
| ,, | 16 | ஒருவனுக்குப்பெண் | ,, | 24 | ஷேலகலை |
| ,, | 26 | சாட்சிகூற | ௮௯ | 4 | புறப்பட்டு |
| ௨௧ | 20 | என்பதற்குச்சான்றுக | ௯௪ | 23 | என்னும் |
| ௨௩ | 12 | கேட்க | ௯௯ | 24 | விட்டார்கள் |
| ௨௪ | 17 | மின்றிப்பெற | ௧௦௩ | 11 | பாராபரனுக்கு |
| ௨௫ | 8 | விவரம் | ௧௦௪ | 21 | கடமையுள்ளவர் |
| ௨௭ | 20 | நண்பர்கள் | ,, | 29 | செல்லாமலும் |
| ,, | 34 | அவருக்கு | ௧௦௮ | 16 | கேடர்களாகிய |
| ௨௯ | 11 | இருந்தான் | ௧௦௯ | 2 | கோபுரத்தையும் |
| ௩௨ | 30 | அவனுக்குத்தெரி | ௧௧௩ | 9 | தீர்க்கதரிசி |
| ,, | 32 | சொல்வார்களோ | ௧௧௪ | 16 | அறுப்பபட்டு |
| ௩௩ | 4 | உலகப்பிரசித்த | ,, | 22 | இந்நாள்களுக்கு |
| ௩௯ | 17 | லூக்காகூறி | ௧௧௫ | 28 | மாட்டார் |
| ,, | 28 | வேதப்பிரமாண | ௧௧௯ | 2 | ஒழுகி |
| ௪௪ | 26 | என்பது | ,, | 16 | அறுப்பப் பட்ட |
| ௫௧ | 26 | படிசொன்ன | ௧௨௦ | 2 | சாதர் |
| ௫௨ | 27 | சாட்சிசொன்ன | ௧௨௧ | 12 | ஒருங்குவிலை |
| ௫௪ | 3 | தீர்க்கதரிசி (இவ்வனமேபிறவருவனவுங்கொள்க) | ௧௨௨ | 17 | விருப்பாளென்றும் |
| | | | ௧௨௩ | 29 | கொடுக்க |
| | | | ௧௨௪ | 17 | கூறிய |
| ௬௧ | 3 | ட்ஸ்லிப்பில்லாதபயங் | ௧௨௮ | 6 | மிகுதியும் |
| ,, | 24 | அத்தியாவசிய | ,, | 28 | மாயிருக்கும் |

# திருத்த அட்டவணை.

| பக்கம். | வரி. | திருத்தம். | பக்கம். | வரி. | திருத்தம். |
|---|---|---|---|---|---|
| ௧௩௬ | 30 | என்றார் | ௧௮௬ | 3 | பிரசாதி |
| ௧௪௨ | 28 | உறங்கியும் | ௧௮௮ | 1 | விரியன் |
| ௧௪௬ | 7 | உபயோகிக்க | ,, | 17 | மாட்டாரென்பதும் |
| ,, | 20 | பரிசுத்த | ,, | 29 | இவையெல்லா |
| ௧௪௬ | 30 | காப்பாற்ற | ௧௯0 | 2 | சனங்களுக்கு |
| ௧௪௭ | 2 | மொழிபெயர் | ௧௯௬ | 1 | களி கூர்ந்து |
| ,, | 21 | தீர்க்கதரிசி | ௨0௮ | 2 | மருமகள் |
| ௧௪௮ | 6 | படைக்கப்பட்ட | ௨௧௪ | 24 | டிதர்கள் |
| ௧௫௧ | 5 | தரும்படி | ,, | 28 | கூறியபடி |
| ௧௫௨ | 4 | உண்டாயிருக்க | ,, | 34 | பிரித்து |
| ,, | 6 | கிரியைகளை | ௨௧௫ | 13 | ராது |
| ௧௫௪ | 18 | கிடந்தமறு | ,, | 24 | தேரிய |
| ௧௫௬ | 3 | என்றும் | ,, | 26 | நம்பினபிறகு |
| ,, | 6 | மதிக்கேடோ | ௨௧௬ | 21 | பெருக |
| ௧௫௮ | 1 | சாதுரியமுள்ள | ௨௧௮ | 24 | னென்று |
| ௧௬0 | 4 | பராபரனுலே | ௨௨௨ | 30 | பெருக |
| ௧௬௩ | 11 | எவ்வளவோ | ௨௨௬ | 20 | யிருக்கின்றது |
| ௧௬௬ | 7 | ஹிம்சையை | ௨௩௪ | 32 | இருதாரமாக |
| ௧௬௭ | 17 | கேடாயிரு | ௨௩௭ | 26 | ஒன்றை |
| ,, | ,, | கடுகத்தனை | ௨௩௯ | 10 | குலைங்கயோத்தோ |
| ௧௭0 | 13 | கேயர்காள் | ,, | 27 | வரண்டு |
| ௧௭௧ | 11 | ஒரு | ௨௪௧ | 2 | சுவீயத்துவ |
| ௧௭௨ | 30 | யடைந்தார் | ,, | ,, | அசுவயத்துவ (இவ்வண்மே பிறவுருவனவும் கொள்க) |
| ௧௭௮ | 4 | குரிய | ௨௪௭ | 11 | மென்பதாஉம் |
| ௧௭௯ | 34 | இப்போது எல்லாச் சேனைகளாலும் | ௨௪௯ | 17 | யொதுக்கி |
| ௧௮௩ | 13 | தேற்றகிறவர் | ௨௫௧ | ,, | மூறாவல் |
| ,, | 28 | கூறுகின்றது | ௨௫௩ | 2 | பொருட்டு |
| ௧௮௪ | 29 | வீர்கள் | ,, | 8 | இவ்வாறுனசிற |
| ௧௮௫ | 27 | யன்றிச்சொன்ன இயேசு | ௨௫௪ | 23 | வா, பார் |

இங்ஙனமேயுமன்றி, இரட்டிவேண்டுவன இரட்டாமலும், வேண்டாதன இரட்டியும், சொல்களிழுக்கியும் இங்ஙமறைகாயேயன்னி சில அளாவி நிற்கவும் பெறும்; ஆதலின் நோக்குறிதயை கூர்ந்து அமைத்துக்கொள்ள வேண்டுகின்றேம்.

கிரந்தகருத்தா.